செ. அலெக்ஸேயெவ்

ருஷ்ய வரலாற்றுக் கதைகள்

செ. அலெக்ஸேயெவ்

ருஷ்ய வரலாற்றுக் கதைகள்

ஸ்டெப்பான் ராஸின்

மாபெரும் பீட்டர்

சுவோரொவ்

புகழ்மிக்க வீரம்

உழைப்பின் செங்கொடி

ஜாராட்சிக்குப் பிறகு

விளதீமிர் இலியீச் லெனின்

மாபெரும் தேசபக்தப் போர்

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன், எம். ஏ.
ஓவியர்: எல். கோல்ட்பெர்க்
தயாரிப்புக் கலைஞர்கள்: வி. சிஸ்தியாக்கோவ், எல். ஷ்காஞேவ்

С. Алексеев
СТО РАССКАЗОВ ИЗ РУССКОЙ ИСТОРИИ
на тамильском языке

S. Alexeyev
RUSSIAN HISTORY IN TALES
In Tamil

Перевод сделан по книге:
С. Алексеев «Сто рассказов из русской истории»,
Издательство «Советская Россия», М. 1972

© தமிழ் மொழிபெயர்ப்பு, ராதுகா பதிப்பகம், 1984

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

A $\frac{4803010102-267}{031(01)-84}$ 331–83

உள்ளடக்கம்

ஸ்டெப்பான் ராஸின்
13
மாபெரும் பீட்டர்
45
சுவோரொவ்
91
புகழ்மிக்க வீரம்
139
உழைப்பின் செங்கொடி
211
ஜாராட்சிக்குப் பிறகு
245
விளதிமிர் இலியீச் லெனின்
307
மாபெரும் தேசபக்தப் போர்
357

ஆசிரியரிடமிருந்து

அன்புள்ள வாசகரே,

உங்கள் முன்னுலிருக்கும் புத்தகம் நான் பிறந்து வளர்ந்த ருஷ்யாவின் சென்ற காலத்தைப் பற்றிய தாகும். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய தாய்நாட்டை நேசிப்பதைப் போல என் சொந்த நாட்டை நான் மிக அதிகமாக நேசிக்கிறேன்.

ருஷ்ய வரலாற்றில் கொந்தளிப்பு மிக்க சம்பவங்கள் ஏராளமாக நடந்திருக்கின்றன. எதிரிகள் பல தடவை அதன் மீது படையெடுத்து அதன் வளமான பூமியையும் சுதந்திரத்தையும் ஆக்கிரமித்ததுண்டு. ருஷ்ய மக்கள் தங்களுடைய தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காக பல அரிய வீரச் செயல்களைச் செய்திருக்கிருர்கள்.

ஜார்களும் நிலப்பிரபுக்களும் இந்த நாட்டைப் பன்னெடுங்காலமாக ஆட்சி செய்தனர்.

ருஷ்யாவின் உழைக்கும் மக்கள் தங்களை ஒடுக்குபவர்களை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்து போராடியதுண்டு—ஒரு தடவையல்ல, பல தடவைகள். அவர்கள் தங்களுடைய கனவை நனவாக்க, முன்னைக் காட்டிலும் சிறப்பான வாழ்க்கை, சமூக நீதி, ஒளி மயமான எதிர்காலத்தை அடைவதற்காக இந்தப் போராட்டத்தில் மாபெரும் வீரச் செயல்களைச் செய்தனர்.

ருஷ்ய மக்களின் புகழ்செறிந்த, யாருக்கும் அஞ்சாத, புரட்சிகரமான கடந்த காலத்தைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் புத்தகமே ருஷ்ய வரலாற்றுக் கதைகள்.

புத்தகத்தின் அறிமுகக் கதைகள் நம்மைப் பதினேழாம் நூற்றுண்டுக்கு அழைத்துச் செல்கின்றன.

1670. ருஷ்யாவில் கலவரம். குழப்பமான நிலைமை.

"ராஸின், ராஸின் வருகிறார்!"

"ஸ்டெப்பான் டிமபேயெவிச் ராஸின்!"

1670ம் வருடத்தின் கோடைக் காலத்தில் ருஷ்ய அரசின் எல்லைக்குள்ளேயிருக்கின்ற பல நகரங்களிலும் கிராமங்களிலும் இந்தக் குரல் ஒலித்தது, முழங்கியது. உடைமைகளை இழந்து, அபகரிக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டு ருஷ்யாவில் வாழ்ந்த மக்கள் தங்களை ஒடுக்கியவர்களுக்கு எதிராக ஆயுதந் தாங்கிப் போராடினார்கள். ஜாரின் சர்வாதிகாரத்தையும், ருஷ்யாவிலிருந்த நிலப்பிரபுத்துவக் காட்டுமிராண்டித் தனத்தையும் பண்ணையடிமைக் கொடுமைகளையும் எதிர்த்து முழு அளவு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. மதிநுட்பமும் தீர்மானமான முடிவும் கொண்டவர் என்று மக்களால் புகழப்பட்ட ஸ்டெப்பான் டிமபேயெவிச் ராஸின் இந்தக் கலகத்துக்குத் தலைமையேற்றார்.

"ராஸின் வருகிறார்! ராஸின்!"

அரசாங்கத்தின் தலைநகரமான மாஸ்கோவை நோக்கி விவசாயப் படைகள் முன்னேறிச் சென்றன.

பழைய போயார் ருஷ்யா பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது.

இப்புத்தகத்தின் முதல் பகுதி ஸ்டெப்பான் ராஸின் நடத்திய விவசாயிகள் யுத்தத்திலிருந்து சில சம்பவங்களை வாசகருக்குத் தெரிவிக்கிறது.

இரண்டாவது பகுதி ஜார் முதலாம் பீட்டரின் ஆட்சிக் காலத்தைப் பற்றியது; அவர் வரலாற்றில் மாபெரும் பீட்டர் என்று புகழ் பெற்றார்.

முதலாம் பீட்டர் தனிச்சிறப்புமிக்கவர்; சீர்திருத்தவாதியாகப் புகழ்பெற்ற ஜார் சக்கரவர்த்தி. அவர் போயார், பிரபுக்களின் ஜாராக இருந்தார் என்றாலும் ருஷ்ய அரசை மாற்றியமைப்பதிலும் வளர்த்துச் சென்றதிலும் அவருடைய பங்கு அதிகமே.

பால்டிக் கடலில் ஒரு துறைமுகத்தைப் பெறுவதற்காக ருஷ்யா நடத்திய போராட்டத்தோடு மாபெரும் பீட்டரின் பெயர் இணைந்திருக்கிறது. ருஷ்யர்கள் சிறந்த கடலோடிகள் என்று நெடுங்காலமாகவே புகழ் பெற்றிருந்தார்கள். அவர்கள் கடலில் நெடுந்தூரம் பிரயாணம் செய்து அங்கேயுள்ள மக்களோடு வர்த்தகம் செய்தார்கள். ஆனால் கடலில் ருஷ்யாவின் வழியை மறைப்பதற்கு எதிரிகள் எல்லா முயற்சிகளையும் செய்தார்கள். பால்டிக் கடலின் கீழ்த்திசைப் பகுதிகளில் ஸ்வீடிஷ்காரர்கள் ருஷ்யர்களைக் கடுமையாக நெருக்கிக் கொண்டிருந்தனர். இங்கே மிகவும் உக்கிரமான போராட்டம் நடைபெற்றது.

இந்தக் காலத்தில் ஸ்வீடன் மிகவும் பலமான அரசாக இருந்தது. அவர்களுடைய இராணுவம் உலகத்திலேயே சிறந்தனவற்றில் ஒன்றாகக் கருதப்பட்டது. அதிகமான பீரங்கிகளைக் கொண்ட மாபெரும் கடற்படையும் அவர்களிடம் இருந்தது.

1700ம் வருடத்தில் ஸ்வீடனோடு யுத்தம் ஏற்பட்டது. வடக்குப் போர் என்று சொல்லப்படும் இந்த யுத்தம் 21 வருடங்கள் நடைபெற்றது. கடைசியில் ருஷ்யாவுக்கு முழு வெற்றி கிடைத்தது.

இப்புத்தகத்தின் இரண்டாம் பகுதியில் வடக்குப் போரில் நடைபெற்ற சம்பவங்களும் முதலாம் பீட்டர் காலத்தில் ருஷ்ய வாழ்க்கையின் பின்னணி ஓவியங்களும் அடங்கியிருக்கின்றன.

மூன்றாவது பகுதியில் சுவோரொவைப் பற்றியும் அவருடைய துருப்புக்கள், படைவீரர்களைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது.

ருஷ்யாவின் படைவீரர்கள் உலகத்தின் சிறந்த படைவீரர்களில் வைத்து எண்ணப்படக் கூடியவர்களாகப் புகழ் பெற்றிருக்கிறார்கள். போரில் தீவிரம், யுத்தத்தின் போது ஏற்படுகின்ற வாழ்க்கை நெருக்கடிகளைத் தாங்கிக் கொள்ளும் மன உறுதி, தோல்வியடைந்த படையினரிடம் இரக்கம்—இவை

அவர்களுடைய குணங்களில் சில. மாபெரும் ருஷ்யத் தளபதியான அலெக்சாந்தர் வஸீலியெவிச் சுவோரொவும் அவருடைய தலைமையின் கீழ் போர் புரிந்த படைவீரர்களும் ருஷ்ய இராணுவ வீரத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

சுவோரொவ் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்.

''எதிரியைத் தாக்கும்பொழுது எண்ணிக்கை முக்கியமல்ல—திறமையே அவசியம்'', ''உன்னுடைய உயிருக்கே ஆபத்து என்றாலும் நண்பனுக்குக் கடைசிவரை உதவி செய்'', ''வீரர்கள் எப்பொழுதும் போர்க்களத்தின் முன்னணியிலேயே இருப்பார்கள்; கோழைகள் எப்பொழுதும் பின்னணியிலேயே சாகிறார்கள்'', ''பயிற்சி கடுமையாக இருந்தால் போர் செய்வது சுலபமாக இருக்கும்''—இந்தப் பொன்மொழிகள் சுவோரொவினால் சொல்லப்பட்டவை.

சுவோரொவ் எழுபது ஆண்டுகள் வாழ்ந்தார்; அவற்றில் ஐம்பது ஆண்டுகளை இராணுவ வாழ்க்கையில் கழித்தார். அவர் ஒரு சாதாரணப் படைவீரராக வாழ்க்கையைத் தொடங்கி பீல்டுமார்ஷலாகவும் தலைமைத் தளபதியாகவும் பதவி வகித்தவர்.

1812ம் வருடத்தில் ஆபத்தான மேகங்கள் ருஷ்யாவைச் சூழ்ந்திருந்தன. பிரெஞ்சுச் சக்கரவர்த்தியான நெப்போலியனின் படைகள் ருஷ்யாவின் எல்லைகளில் திரண்டு நின்றன. ருஷ்யப் படை பின்வாங்கியது. சந்தர்ப்பங்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக மாஸ்கோவைக்கூட எதிரியிடம் விட்டுவிடுமாறு நேர்ந்தது.

ஆனால் இறுதி வெற்றி நம்முடையது என்ற நம்பிக்கை ஒரு போதும் மறையவில்லை. கடைசியில் நெப்போலியனுடைய படைகள் நொறுக்கப்பட்டன; அந்தப் படைகளில் எஞ்சியவை எத்தகைய வெற்றியும் இல்லாமல் ருஷ்யப் பிரதேசங்களிலிருந்து வெளியேறின.

நெப்போலியனின் தாக்குதலுக்கு எதிராக இராணுவம் நடத்திய போராட்டத்தை ருஷ்ய மக்கள் ஆதரித்தனர். பதுங்கியிருந்து எதிரியைத் தாக்குகின்ற போர் பெரிய அளவில் பின்பற்றப்பட்டது. அது சுதந்திரத்துக்காக மக்கள் நடத்திய தேசபக்தப் போர்.

*1812*ம் வருடத்தில் நடைபெற்ற தேசபக்தப் போரைப் பற்றி ''புகழ்மிக்க வீரம்'' என்ற பகுதியில் நீங்கள் படிக்கலாம்.

இதனை அடுத்து வருகின்ற ''உழைப்பின் செங்கொடி'' ''ஜாராட்சிக்குப் பிறகு'' என்ற இரண்டு பகுதிகளில் ஜார் காலத்திய ருஷ்யாவில் தொழிலாளர்கள் வாழ்க்கையையும் போராட்டங்களையும், *1917*ம் வருடத்தில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் புரட்சியைப் பற்றியும் நாட்டிலுள்ள உழைக்கும் மக்களுக்கு அந்தப் புரட்சியினால் ஏற்பட்ட நன்மைகளையும் வாசகர் தெரிந்து கொள்ளலாம்.

*1917*ம் வருடப் புரட்சியில் ருஷ்யாவின் சமூக, ஆன்மிக வாழ்க்கை முழுவதையும் மொத்தமாகப் புனரமைக்கின்ற பெரும் பணி தொடங்கியது. சமூக அமைப்பு, வாழ்க்கையைப் பற்றிய பழைய கருத்துக்கள், உடைமை, உழைப்பு மற்றும் மனிதர்களுக்கிடையே உறவுகள் ஆகிய அனைத்துமே அந்த சகாப்தத்தில் மாற்றத்துக்குள்ளாகிக் கொண்டிருந்தன. உலகத்தின் வரலாற்று மேடையில் சோஷலிஸ்ட் சமூகம் என்ற புதிய நிகழ்வு தோன்றியது; சோவியத் மக்கள் என்ற பெயரோடு ஒரு புதிய மக்கள் சமூகம் தோன்றியது. முன்பு ஜார் ருஷ்யா என்று கூறப்பட்ட நாடு இப்பொழுது சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளின் யூனியன் என்ற பெயரைப் பெற்றது.

ருஷ்யாவின் உழைக்கும் மக்களின், ருஷ்யப் புரட்சியின் தலைவராக இருந்தவர் விளதீமிர் இலியீச் லெனின். அவர் தன்னுடைய போதனை

களின் மூலமாக வெற்றியை நோக்கிச் செல்லும் பாதையைக் காட்டினர். அவர் தலைமையில் புரட்சி நடைபெற்றது. புதிய சோவியத் அரசு அவரைத் தன்னுடைய முதல் தலைவராக வரித்துக் கொண்டது.

இந்தப் புத்தகத்தின் அடுத்த பகுதியில் விளதீமிர் இலியீச் லெனினைப் பற்றிய கதைகள் எழுதப் படடிருக்கின்றன.

1941-1945ம் வருடங்களில் நடைபெற்ற மாபெரும் தேசபக்தப் போரைப் பற்றிய கதைகளோடு இந்தப் புத்தகம் முடிவடைகிறது.

1941 ஜூன் மாதம் 22ந் தேதி. கோடைக் காலம். பகலும் இரவும் சமமான நாள். காலை நேரம். பொழுது புலர்ந்திருக்கிறது. அந்த நேரத்தில் யுத்த அறிவிப்பு ஒன்றுமேயில்லாமல், சோவியத் யூனியனுக்கும் ஜெர்மனிக்கும் இடையே ஒருவருக்கொருவர் ஆக்கிரமிப்புச் செய்வதில்லை என்று செய்யப்பட்டிருந்த ஒப்பந்தத்தை மீறி, ஜெர்மனி தன்னுடைய இயந்திரப் படைகளை சோவியத் யூனியனுக்குள் அனுப்பியது.

ஆக்கிரமிப்பாளர்கள் எங்கள் நாட்டில் துன்பத்தையும் வேதனையையும் மரணத்தையும் அடிமைத்தனத்தையும் ஏற்படுத்தினர்கள். தாய்நாட்டை விடுவிப்பதற்காக சோவியத் மக்கள் மாபெரும் தேசபக்தப் போருக்குக் கிளர்ந்தெழுந்தார்கள்.

நாஜிகளை எதிர்த்து நடைபெற்ற கடுமையான, உயிருக்கு ஆபத்தான போராட்டம் சுமார் நான்கு வருடங்கள் நீடித்தது. அதிகமான வலிமை உடையவர்களுக்கிடையே நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், சோவியத் யூனியனும் ஹிட்லருக்கு எதிரான கூட்டணியை அமைத்திருந்த மற்ற நாடுகளும் கூட்டாக வெற்றியடைந்தன. நாஜிசம் நசுக்கப்பட்டது, அழிக்கப்பட்டது; ஹிட்லரின் ஜெர்மனி நிபந்தனையில்லாமல் சரணடைந்தது.

இந்தப் புத்தகத்தின் கடைசிப் பகுதி மாபெரும் தேசபக்தப் போரின் நிகழ்ச்சிகளை வாசகருக்கு எடுத்துக் கூறுகிறது.

இந்தப் புத்தகத்தை அதிகமான தயக்கத்தோடு தான் எழுதினேன் என்பதை ஒத்துக்கொள்வது அவசியம். இப்பொழுது அந்நிய நாட்டைச் சேர்ந்த வாசகராகிய உங்களோடு எனக்கு ஏற்படுகின்ற இந்தச் சந்திப்பை அதற்குச் சிறிதும் குறையாத கவலையோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

எனது ருஷ்ய நாட்டின் வரலாற்றைப் பற்றி அடக்கமான வகையில் எழுதப்பட்டிருக்கும் இந்த அறிமுகம் நமது பண்பாடுகளை ஒன்றுசேர்ப்பதற்கும் நாம் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கும் சிறு அளவிலாவது உதவி புரிந்தால் அது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

இந்தப் புத்தகத்தைப் படிக்கப்போகும் வாசகராகிய உங்களுக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸெர்கேய் அலெக்ஸேயெவ்

ஸ்டெப்பான் ராஸின்

குதிரை வீரன்

குதிரைகளின் மீது சவாரி செய்து கொண்டு வந்த வீரர்கள் விவசாயிகளின் வயல்களைக் கடந்து ஒரு சிறு குன்றின் மீது ஏறினர்கள். அங்கே ஒரு விசித்திரமான காட்சியைப் பார்த்தார்கள். ஒரு விவசாயி நிலத்தை உழுது கொண்டிருந்தான். அவனுடைய ஏரில் குதிரைக்குப் பதிலாக அவனுடைய தாயார், மனைவி, இளம் மகன் ஆகிய மூன்று பேர்கள் பூட்டப்பட்டிருந்தார்கள்.

அந்த மூவரும் ஏரைக் கஷ்டப்பட்டு இழுத்தார்கள்; பிறகு நிறுத்தினர்கள்; பிறகு மறுபடியும் இழுத்தார்கள்.

குதிரை வீரர்கள் அந்த விவசாயியின் அருகே வந்தார்கள். அவர்களுடைய தலைவர் அவனைக் கோபமாக உற்றுப் பார்த்தார்.

''கால்நடைகளுக்குப் பதிலாக மனிதர்களை ஏரில் பூட்டியிருக்கிருயே? என்ன காரியம் இது?'' என்று அதட்டினர்.

அந்த விவசாயி தன்னிடம் பேசுவது யார் என்று பார்த்தான். அவனுக்கு முன்னல் ஆஜானுபாகுவான ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் சிகப்புப் பட்டை தைக்கப்பட்டிருந்த தொப்பியும் பச்சை நிற மொராக்கோ தோலில் தைக்கப்பட்ட காலணிகளும் அணிந்திருந்தார். அவர் பளபளப்பான சட்டை அணிந்திருப்பது வெளியே தெரிந்தது. அதன் மீது நாகரிகமான கஃப்தான் அணிந்திருந்தார். அவர் பின்னப்பட்ட சவுக்கைக் கையில் வைத்திருந்தார்.

''இவர் போயாராகத்தான் இருக்க வேண்டும்; அல்லது கவர்னராகக் கூட இருக்கலாம்'' என்று அந்த விவசாயி நினைத்தான்.

''நாங்கள் அனுதைகள், ஐயா! அனுதைகள். எங்களிடம் குதிரை இல்லை. கடன் பாக்கிக்காகக் குதிரையைப் பறித்துக் கொண்டு போய் விட்டார்கள்.''

அந்தக் குதிரை வீரர் முகம் இருண்டது. அவர் குதிரையிலிருந்து கீழே இறங்கி விவசாயியை நோக்கித் திரும்பினர்.

அந்த விவசாயி பின்புறமாக நகர்ந்து போய், பயத்தினல் தடுமாறிக் கீழே விழுந்தான். உடனே பதறியெழுந்து வேகமாக ஓடினன்.

கஃப்தான் — முழங்கால்வரை தொங்கும் பட்டு அல்லது பருத்தி உடை; நீண்ட கைகள் இருக்கும். இடையில் ஒரு நாடாவைக் கட்டிக்கொள்வார்கள்

போயார் — ருஷ்யாவில் பதினன்கு-பதினேழாம் நூற்றுண்டுகளில் மிக உயர்ந்த அரசுப் பதவிகளை வகித்த பிரபுக்கள்

''ஓடாதே! நில்! எங்கே ஓடப் போகிறாய்?'' என்று அவர் அவனை நோக்கிக் கேலியாக, கணீரென்ற குரலில் கேட்டார்.

அந்த விவசாயி பயத்தோடு மறுபடியும் முன்னால் வந்தான்.

''இந்தக் குதிரையை எடுத்துக் கொள்'' என்று அவர் சொல்லிவிட்டுக் கடிவாளத்தை அவனை நோக்கி நீட்டினார்.

அந்த விவசாயி திகைத்துப் போய் ஒன்றும் பேச முடியாமல் நின்றான். அவனுடைய மனைவியும் தாயாரும் தாங்கள் இருந்த இடத்திலேயே சிலையாகிவிட்டதைப் போல நின்றார்கள். அவர்கள் எல்லோரும் இது உண்மையா என்று கேட்பதைப் போல அங்கே நடப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவன் மகன் தன்னுடைய வாயை அகலமாகப் பிளந்து கொண்டு நின்றான்.

அது வாட்டசாட்டமான குதிரை; அதன் உடலில் அழகான புள்ளிகள் இருந்தன; ஒரு இளவரசனுக்கு ஏற்ற குதிரையாகத் தோன்றியது.

''ஐயா! கேலி செய்கிறார்கள் போலிருக்கிறது'' என்று விவசாயி முடிவு செய்தான். அவன் அந்த இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருந்தான்.

''இதை எடுத்துக் கொள். இல்லையென்றால் என்னுடைய முடிவை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும்'' என்று அவர் கோபமாகச் சொன்னார். இப்படிச் சொல்லிவிட்டு அவர் அந்த வயலின் குறுக்கே வேகமாக நடந்து சென்றார்.

அவரோடு வந்திருந்த குதிரை வீரர்கள் அவரை வேகமாகப் பின்தொடர்ந்து சென்றார்கள். ஒரே ஒரு குதிரை வீரன் மட்டும் கண நேரம் அங்கே தாமதித்தான். அவன் தற்செயலாகத் தன்னுடைய புகையிலைப் பையைக் கீழே போட்டு விட்டதுதான் அதற்குக் காரணம்.

''கடவுள்தான் அனுப்பியிருக்கிறார். இந்தக் குதிரையை அனுப்பியது கடவுளாகத்தான் இருக்கும்'' என்று அந்த விவசாயி முணுமுணுத்தான். அவனைப் பார்த்தால் இடி விழுந்தவனைப் போலத் தோன்றியது.

அவன் குதிரையை நோக்கித் திரும்பினான். உடனே அவனுக்கு பயம் ஏற்பட்டது. இது ஒரு மாய வித்தையாக இருந்தால்..? அவன் குதிரையைத் தொட்டுப் பார்ப்பதற்காகக் கையை நீட்டினான். குதிரை பின்புறமாக அவனை எட்டி உதைத்தது. அந்த விவசாயி வலித்த இடத்தை அழுத்தித் தடவினான்.

''இது உண்மையான குதிரைதான்'' என்று அவன் மகிழ்ச்சியோடு கத்தினான். அந்த இளைஞனின் காலடியில்

அவன் விழுந்தான். ''நீங்கள் எல்லோரும் யார்? எங்கேயிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''நாங்கள் ஊர் சுற்றிகள். சுதந்திரப் பருந்துகள். வசந்த காலக் காற்று'' என்று அந்த இளைஞன் மர்மமான வகையில் கண்களைச் சிமிட்டிக் கொண்டு பதிலளித்தான்.

''நான் யாருக்கு நன்றி சொல்ல வேண்டும்? தொப்பி அணிந்திருந்தவர் யார்?''

''ராஸின். ஸ்டெப்பான் டிமபேயெவிச் ராஸின்''—அந்தக் குதிரை வீரன் வேகமாக மறைந்து விட்டான்; அவன் வார்த்தைகள் காற்றிலே மிதந்து வந்தன.

படகில் வந்த துருப்புகள்

''ராஸின்! ராஸின் வருகிறார்!''

''ஸ்டெப்பான் டிமபேயெவிச்!''

1670ம் வருடம். ருஷ்யா குழப்பத்தில் சிக்கித் தவிக்கிறது. போயார்களும் ஜாரிஸ்ட் கையாட்களும் ஊழியர்களும் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். சுதந்திரத்தை இழந்து ஒடுக்கப்பட்ட மக்கள் கொதித்தெழுந்து கலகம் செய்தார்கள். விவசாயிகள், கஸாக்குகள், பஷ்கீரியர்கள், டாட்டார்கள், மார்த்விளியர்கள். நூற்றுக்கணக்கானவர்கள். ஆயிரக்கணக்கானவர்கள்.

டோன் பிராந்தியத்தைச் சேர்ந்த கஸாக்குகளின் துணிவு மிக்க ஆட்டமான் ஸ்டெப்பான் டிமபேயெவிச் ராஸின் விவசாயிகளின் படைகளுக்குத் தலைமை தாங்கினார்.

''ஸ்டெப்பான் ராஸின் வாழ்க!''

கலகக்காரர்களின் படைகள் ட்ஸாரிட்ஸின் இருந்த திசையை நோக்கிப் புறப்பட்டன. அந்த நகரம் வோல்கா நதியின் செங்குத்தான கரை மீதிருந்தது. அந்த நகரத்துக்குச் சற்று தூரத்திலிருந்த மலையின் மீது அவர்கள் முகாம் அமைத்துக் கொண்டார்கள்.

''நாம் எதற்காகத் தாமதிக்க வேண்டும்? இப்பொழுதே ட்ஸாரிட்ஸினைப் பிடிப்போம்'' என்று கஸாக்குகள் பேசிக் கொண்டார்கள்.

அந்த நகரத்தில் வசித்தவர்கள் இரவு நேரத்தின் இருளில் ராஸினை இரகசியமாகச் சந்தித்தார்கள்.

''தந்தையே! நீங்கள் முன்னேறுவதற்கும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் இது சரியான நேரம். ட்ஸாரிட்ஸின் மக்கள் உங்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். துப்பாக்கிப் படையின் சில பிரிவுகள் மட்டுமே ஊரில்

ஆட்டமான் — கஸாக் மக்களது குலத்தலைவரின் பட்டம்

இருக்கின்றன. எனினும் அவர்களால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. நாங்கள் கோட்டைக் கதவைத் திறந்து விடுகிறோம்'' என்றார்கள்.

''தலைவர் அவர்களே! நகரத்தைப் பிடிப்போம். ட்ஸாரிட்ஸின்னைப் பிடிப்போம்'' என்று அவருடைய ஆலோசகர்கள் வற்புறுத்தினார்கள்.

எனினும் ராஸின் அவசரப்படவில்லை. துப்பாக்கிப் படையின் பெரிய பிரிவு ஒன்று வோல்கா நதியில் படகுகளில் ட்ஸாரிட்ஸின்னை நோக்கி வந்து கொண்டிருப்பது அவருக்குத் தெரியும். அந்தப் படையினர் போதுமான அளவுக்கும் அதிகமான பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் கைத்துப்பாக்கிகளையும் வெடிமருந்தையும் வைத்திருந்தனர். அவர்கள் சிறந்த பயிற்சி பெற்றவர்கள்; லோபாட்டின் என்ற சிறந்த தளபதி அவர்களுக்குத் தலைமை தாங்கினார். ''நம்மைக் காட்டிலும் அதிகமான பலத்தைக் கொண்ட இந்தப் படையோடு நாம் எப்படி மோத முடியும்?'' என்று ராஸின் சிந்தனை செய்தார். ''நாம் ஊருக்குள் போய் ஒளிந்து கொள்ள முடியாது. அங்கே நாம் அதிக நாட்கள் தாக்குப் பிடிக்கலாம்; ஆனால் கஸாக்குகளுக்கே உரிய முறையில் எதிரியைத் தாக்கி முறியடிக்க வேண்டும்.''

லோபாட்டினுடைய படகுகள் ட்ஸாரிட்ஸின்னை மென்மேலும் நெருங்கி வந்து கொண்டிருந்தன.

''தலைவர் அவர்களே! கோட்டையைப் பிடிப்போம். உத்தரவு கொடுங்கள்'' என்று கஸாக்குகள் முழங்கினார்கள்.

தலைவர் சிறிதும் அவசரப்படவில்லை.

லோபாட்டின் ஒவ்வொரு நாளும் வேவுபார்க்க ஆட்களை அனுப்பினார். கஸாக்குகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலை அவர்கள் கொண்டு வந்தார்கள்.

''அவர்கள் மலையிலேயே தங்கியிருக்கிறார்கள்; நகரத்தைப் பிடிக்கவில்லை.''

''என்ன முட்டாள்தனம், அவர்களுடைய தளபதிக்கு அனுபவம் கிடையாதோ'' என்று லோபாட்டின் ஏளனமாகச் சிரித்தார்.

''தந்தை அவர்களே! ட்ஸாரிட்ஸின்னைப் பிடிக்க உத்தரவு கொடுங்கள்'' என்று கலகக்காரர்கள் ஆட்டமானிடம் கெஞ்சினார்கள்.

ராஸின் ஒன்றுமே காதில் விழாததைப் போல அமைதியாக இருந்தார்.

இந்த நேரத்தில் லோபாட்டினுடைய படகுகள் கஸாக்குகள் முகாமிட்டிருந்த மலைக்கு நேராக வந்து கொண்டிருந்தன. அவர்கள் படகுகளை நோக்கிச் சுட்டனர்.

''சுடுங்கள்! சுட்டுத் தள்ளுங்கள்'' என்று ஏளனமாகப் பேசினார் லோபாட்டின். ''அதுதான் முக்கியம். வெற்றியை நோக்கிச் சுட்டுக் கொண்டே முன்னேறுவது யார் என்பது தான் முக்கியமானது''.

அவர்கள் ஆபத்தான கரையிலிருந்து ஒதுங்கித் தள்ளிப் போனார்கள். ட்ஸாரிட்ஸின் நகரம் கண்ணுக்குத் தெரிந்தது. இதோ அருகில் வந்துவிட்டது. அவர்களுக்கு வணக்கம் தெரிவிப்பதைப் போல கோட்டையிலிருந்து பீரங்கி வெடித்தது.

லோபாட்டின் திருப்தியோடு காணப்பட்டார்; தம் கைகளை உற்சாகமாக ஆட்டினார்.

திடீரென்று... அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது? ட்ஸாரிட்ஸின் கோட்டைச் சுவர்களிலிருந்து பீரங்கிகள் நெருப்பைக் கக்கின. ஒன்று, இரண்டு... பத்து. துருப்புகள் வந்து கொண்டிருந்த படகுகள் மீது பீரங்கி குண்டுகள் விழுந்தன. படகுகள் காகிதக் கப்பல்களைப் போலத் தண்ணீரில் மூழ்கின.

அந்த நகரத்தின் உயரமான மதிற் சுவரின் மீது ஒரு ஆஜானுபாகுவான கஸாக் ஆட்டமானின் உடையணிந்து கொண்டு நிற்பதை யாரோ பார்த்தார்கள்.

''ராஸின்! ராஸின் ட்ஸாரிட்ஸின்னில் இருக்கிறான்!''

''கொள்ளைக்காரர்கள் நகரத்தைக் கைப்பற்றி விட்டார்கள்!''

''படகுகளை நிறுத்துங்கள், திரும்புங்கள்!''

அந்த நேரத்தில், எங்கிருந்தோ உத்தரவு வந்ததைப் போல வோல்கா நதியின் இடது, வலது கரைகளிலிருந்து கஸாக்குகள் மிதவைகளில் ஏறி வந்து அந்தப் படகுகளைச் சூழ்ந்து கொண்டார்கள். தேன்கூட்டில் தேனீக்கள் மொய்ப்பதைப் போல, ராஸினுடைய படைகள் படகுகளின் மீது மொய்த்தன.

''தாக்குங்கள்! ஒழியுங்கள்!''

துருப்புகள் வந்த படகுகள் சரணடைந்தன.

''சூழ்ச்சி மிக்கவர் நமது ஆட்டமான், சூழ்ச்சி மிக்கவர்'' என்று வெற்றிக்குப் பிறகு ராஸினுடைய படையினர் பேசிக் கொண்டனர். ''துப்பாக்கிப் படையின் தளபதியை அவர் எப்படி ஏமாற்றினார் தெரியுமா? ட்ஸாரிட்ஸின்னைப் பிடிப்பதற்குத் தக்க தருணம் வரட்டும் என்று கடைசி நேரம் வரை அவர் காத்துக் கொண்டிருந்தார்.''

''எதிரிக்கு ஒரு தலைதான்; ஆனால் நம்முடைய தலைவருக்கு இரண்டு தலைகள்'' என்று ராஸினுடைய ஆட்கள் அதற்குப் பிறகு நெடுங்காலம் வரையிலும் வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அவள் மறுப்புக் கூற மாட்டாள்

ட்ரூபா-நாஷ்செக்கின் என்ற போயார் தன்னுடைய பண்ணையடிமையை அடித்துச் சித்திரவதை செய்து கொண்டிருந்தார். அந்தப் பரிதாபத்துக்குரிய மனிதனுடைய கைகளையும் கால்களையும் சேர்த்துக் கட்டியிருந்தார்கள். பிறகு அவனை ஒரு நீண்ட பலகையோடு சேர்த்துக் கட்டியிருந்தார்கள். போயார் அங்கே கையில் சவுக்கோடு நின்று கொண்டு அவனுடைய திறந்த முதுகில் சுளீர், சுளீரென்று அடித்துக் கொண்டிருந்தார்.

''வாங்கிக் கொள்! இதையும் நன்றாக வாங்கிக் கொள்! அழுக்குப் பிடித்த விவசாயியே. இன்னொன்று கொடுக்கிறேன் வாங்கிக் கொள்! அடிமைப் பயலே! இனி போயார் வருகிற பொழுது தொப்பியைக் கழற்றுவாயா?''

ட்ரூபா-நாஷ்செக்கின் சவுக்காலடித்த வேகத்தில் அந்த விவசாயியின் முதுகுத் தோல் உரிந்து முதுகு கூழாகி விட்டது. அவர் சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொண்டார். அவன் முதுகுக் காயங்களின் மீது உப்புத் தண்ணீர் தெளிக்கப்பட்டது. அவர் மறுபடியும் சவுக்கால் அடித்தார்.

''ஐயா! லிவோன்ட்டி மினயிச்'' என்று அந்த விவசாயி கெஞ்சினான். ''ஐயா! உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். என்னைக் கொன்றுவிடாதீர்கள். நான் வேண்டுமென்றே தொப்பியைக் கழற்றாமல் இருக்கவில்லை. நீங்கள் வருவதை நான் கவனிக்கவில்லை.''

அவனுடைய அழுகைக்கும் வேண்டுகோளுக்கும் அந்த போயார் செவி சாய்க்கவில்லை. அவனைத் தொடர்ந்து சவுக்கால் அடித்துக் கொண்டிருந்தார்.

அந்த விவசாயியின் உடலில் கடைசியாக மிச்சமிருந்த பலமும் தணிந்து கொண்டிருந்தது. அவன் தன்னுடைய சக்தியைத் திரட்டிக் கொண்டு சொன்னான்.

''ஐயா! ராஸின் சீக்கிரமாக வந்துவிடுவார். உங்கள் கொடுமைக்கு முடிவு ஏற்படும்.''

திடீரென்று ஒரு சத்தம் கேட்டது....

''ராஸின்! ராஸின் வருகிறார்!'' எங்கிருந்தோ வந்த சத்தம் அந்த போயார் வீடு முழுவதும் கேட்டது. ட்ரூபா-நாஷ்செக்கினுடைய முகம் பயத்தினால் சுருங்கியது. சவுக்கைக் கீழே எறிந்துவிட்டு அந்த விவசாயியை விட்டு வேகமாகப் போனார். தன்னுடைய கஃப்தானின் முனைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு கதவை நோக்கி ஓடித் தப்பினார்.

ராஸினின் கஸாக்குகள் போயாரின் பண்ணைக்குள் நுழைந்து அவருடைய கையாட்களைக் கொன்றனர். ஆனால் அவர்களுடைய எஜமானர் மறைந்துவிட்டார்.

ராஸின் எல்லா விவசாயிகளையும் ஒரு மைதானத்தில் கூட்டினார். அவர்கள் இனி சுதந்திரமானவர்கள் என்று அறிவித்தார். தங்களுக்கிடையே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்குமாறு கூறினார்.

''ஒரக்கண் குர்யான்! அவன்தான்! அவன்தான்!'' என்று அங்கேயிருந்த விவசாயிகள் பெருஞ் சத்தம் போட்டார்கள். ''எங்கள் மத்தியில் அவன்தான் அதிகமான அறிவுள்ளவன்; அவன்தான் மிகவும் நேர்மையானவன்.''

''அவனே உங்களுக்குத் தலைவனாக இருக்கட்டும்'' என்று ராஸின் அறிவித்தார். ''அவன் எங்கே? இங்கே வந்து நிற்கச் சொல்லுங்கள்'' என்றார்.

''அவன் வீட்டிலே படுத்திருக்கிறான். போயார் அவனைச் செம்மையாக அடித்து விட்டார்.''

ராஸின் அங்கேயிருந்து புறப்பட்டார். ஒரக்கண் குர்யான் வீட்டுக்குப் போனார். வீட்டுக்குள்ளே நுழைந்தார். சவுக்கடிக்கு ஆளான குர்யான் ஒரு நீண்ட பலகையின் மீது படுத்திருந்தான். அவனால் அசையக் கூட முடியவில்லை. அவன் முதுகு பாதி தெரிந்தது; அது முதுகு அல்ல—பார்க்கச் சகிக்க முடியாத இரத்தச் சேறாக இருந்தது.

''குர்யான்'' என்று ஆட்டமான் அவனைக் கூப்பிட்டார்.

அந்த விவசாயி சிறிது புரண்டான். அவன் கண்கள் ஒரு கீற்றளவுக்குத் திறந்தன.

''இனி காத்திருக்க வேண்டாம். நீங்கள் வந்து விட்டீர்கள்'' என்று அந்த விவசாயி முணுமுணுத்தான். அவன் முகத்தில் புன்சிரிப்புத் தோன்றி விட்டு வந்த வேகத்தில் மறைந்தது. குர்யான் இறந்து விட்டான்.

விவசாயிகளும் கஸாக்குகளும் கூடியிருந்த மைதானத்துக்கு ராஸின் திரும்பினார்.

''அந்த போயார் எங்கே?'' என்று கர்ச்சித்தார்.

''ஆட்டமான் அவர்களே! அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.''

''அந்த போயார் எங்கே?'' என்று அந்த பதிலைக் கேட்காதவர் போல ராஸின் மறுபடியும் கேட்டார்.

கஸாக்குகள் மறுபடியும் போயாரைத் தேடிச் சென்றார்கள். சீக்கிரத்தில் போயாரைக் கண்டுபிடித்தார்கள். குளியல் அறையில் அடுப்புக்குள் அவர் தன்னை மறைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். ட்ரூபா-நாஷ்செக்கினை ராஸினிடம் இழுத்துக் கொண்டு வந்தார்கள்.

''அவனைக் கயிற்றிலே கட்டுங்கள், தூக்கிலே மாட்டுங்கள்'' என்று கூட்டத்தில் இருந்தவர்கள் கத்தினார்கள்.

''அவனை மரத்துக்கு இழுத்துக் கொண்டு போங்கள்'' என்று ராஸின் உத்தரவிட்டார்.

''உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என்னைக் கொன்று விடாதீர்கள்'' ட்ரூபா-நாஷ்செக்கின் பரிதாபமாகக் கெஞ்சினார். ''தயவு செய்து என்னைக் கொன்று விடாதீர்கள்'' என்று பலமான பெண் குரலில், ஓங்கிக் கேட்கும்படியாகக் கத்தினார். ராஸின் ஏளனமாக உறுமினார்.

''ஆட்டமான் அவர்களே! அவனை ஒழிதது் கட்டுங்கள், ஒழித்துப் போடுங்கள். தாமதம் செய்ய வேண்டாம்'' என்று விவசாயிகள் துடித்தார்கள்.

ஒரு சிறுமி திடீரென்று ராஸினுக்கு அருகில் வந்தாள். சின்னஞ்சிறு பெண். அவள் ராஸினை நிமிர்ந்து பார்த்தாள்.

''மாமா! அவருக்குக் கருணை காட்டுங்கள்'' என்றாள். அங்கேயிருந்த விவசாயிகள் ஒன்றும் பேசவில்லை. அவர்கள் அந்தச் சிறுமியை கவனமாகப் பார்த்தார்கள். இவள் எங்கேயிருந்து வந்தாள்?

''ஒருவேளை கடவுளுக்குப் பிடிக்காத காரியத்தை நாம் செய்யப் போகிறோமோ, என்னவோ'' என்று யாரோ சொன்னார்கள். ''ஒரு சிறு குழந்தை கூட மறுப்புச் சொல்வதென்றால் அது நல்ல காரியமாக இருக்குமா?''

ராஸின் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலோடு எல்லோரும் அவரைப் பார்த்தார்கள். ராஸின் அந்தச் சிறுமியைப் பார்த்தார்; பிறகு விவசாயிகளைப் பார்த்தார். பிறகு தூரத்திலே தெரிந்த வானத்தைப் பார்த்தார்.

''இந்தச் சிறுமி வளர்ந்து பெரியவளான பிறகு புரிந்து கொள்வாள். அதன் பிறகு மறுப்புக் கூற மாட்டாள்'' என்றார். ''அவனைத் தூக்கிலே போடுங்கள்'' என்று கஸாக்குகளுக்கு உத்தரவிட்டார்.

கா—ப்—பா—ற்—று—ங்—க—ள்!!!

ராஸின் வோல்கா நதியின் கரையில் உட்கார்ந்திருந்தார். மாலைப் பொழுது வேகமாக மறைந்து கொண்டிருந்தது. அவர் தன்னுடைய வாளின் கைப்பிடியின் மீது முகத்தைச் சாய்த்து வைத்துக் கொண்டு சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

''இனி அடுத்தபடியாக எங்கே போக வேண்டும்? தெற்கில், வோல்கா நதியின் வழியாக, அஸ்த்ரகானுக்கும் காஸ்

பியன் கடலுக்கும் போவதா? அல்லது வடக்கில் சராடோவ், சமாரா, காஸான், அதற்குப் பிறகு மாஸ்கோவுக்கும் போவதா?

''மாஸ்கோ, மாஸ்கோ. நகரங்களில் சிறந்த நகரம் அதுவே. நாம் போக வேண்டிய இடம் அதுதான். நாம் அங்கே போய் போயார்களை விரட்டியடிக்க வேண்டும். அது தான் சொர்க்க புரி. அதைப் பிடிக்கின்ற அளவுக்கு இப்போது நம்மிடம் பலம் இல்லை. நம்மிடம் பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடிமருந்து ஆகியவை குறைவாகவே இருக்கிறன. விவசாயிகள் இன்னும் யுத்தத்துக்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை. அவர்களுடைய உடைகள் கிழிந்து போயிருக்கின்றன. நாம் முதலில் தெற்கேதான் போக வேண்டும்'' என்று ஸ்டெப்பான் டிமபேயெவிச் சிந்தித்தார். ''உணவுப் பொருள்களையும் உடைகளையும் சேகரிக்க வேண்டும். துருப்புகளை யுத்தம் செய்யத் தகுதியுடையவர்களாக ஆக்க வேண்டும். அதற்குப் பிறகு...'' இங்கே ராஸின் ஆழமாக மூச்சை இழுத்து விட்டார். ''எல்லா போயார்களையும் குரல்வளையைப் பிடித்து நெறிக்கலாம்.''

இந்தச் சிந்தனைகளில் மூழ்கிப் போய் ராஸின் வோல்கா நதிக்கரையில் உட்கார்ந்திருந்தார். நதியிலிருந்து திடீரென்று ஒரு சத்தம் கேட்டது. முதலில் அது லேசாகத்தான் கேட்டது. அது தன்னுடைய கற்பனையாக இருக்கும் என்று ராஸின் நினைத்தார். ஆனால் பிறகு அந்தச் சத்தம் பலமாக, மென்மேலும் பலமாகக் கேட்டது.

''காப்பாற்றுங்கள்!''

இரவு எல்லாவற்றையும் மூடியிருந்தது. எங்கு பார்த்தாலும் கறுப்பாகவே இருந்தது. ஒன்றுமே தெரியவில்லை. ஆனால் நதியின் வேகத்தோடு யாரோ போராடிக் கொண்டிருக்கிறார், யாரோ தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கிறார் என்பது மட்டும் தெளிவாயிற்று.

ராஸின் நதியை நோக்கி ஓடினார். உடைகளைக் கழற்றுவதற்குத் தாமதிக்காமல் அப்படியே தண்ணீரில் குதித்தார்.

அவர் குரல் வந்த திசையை நோக்கி, மாறி மாறிக் கைகளை வீசிக் கொண்டு நீந்தினார்.

''இதோ வந்து விட்டேன்—மூழ்கிவிடாதே!''

அங்கே எந்தச் சலனமும் இல்லை.

''தாமதம் செய்து விட்டேன். அதிகத் தாமதம் செய்து விட்டேன்'' என்று ராஸின் வருத்தமடைந்தார். ''யாரோ ஒரு அப்பாவி. பாவம். ஒரு பயனுமில்லாமல் செத்துவிட்டான்.'' அவர் இன்னும் சுமார் பத்து கஜ தூரம் நீந்தி

விட்டுத் திரும்ப ஆரம்பித்தார். அவர் திரும்பிய சமயத்தில் ஒரு மனிதனின் பறட்டையான தாடியைப் பார்த்தார். தண்ணீருக்கு மேல் ஒரு கை நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

''காப்பாற்றுங்கள்!'' என்று அந்த தாடிக்காரன் கத்தினன். உடனே மறுபடியும் தண்ணீருக்குள் மூழ்கினன்.

''இந்தத் தடவை உன்னை விட மாட்டேன்'' என்று ராஸின் உணர்ச்சி வசப்பட்டுக் கூறினர். அவர் தண்ணீருக்குள் மூழ்கி அந்த மனிதனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தார். அவனைக் கரைக்குத் தூக்கிக் கொண்டு வந்து மணலின் மீது படுக்க வைத்தார். அவன் நெஞ்சில் தன்னுடைய முழங்காலை வைத்து அழுத்தி அவன் குடித்திருந்த தண்ணீரை வாய் வழியாக வெளியே வரச் செய்தார்.

''உன்னல் முடிந்தவரை குடித்து விட்டாய் போலும்'' என்று சொல்லி விட்டு ஸ்டெப்பான் டிமபேயெவிச் சிரித்தார்.

தண்ணீரிலிருந்து காப்பாற்றப்பட்டவன் சற்று நேரம் கழித்துக் கண்களைத் திறந்தான். எதிரே நின்று கொண்டிருந்த ஆட்டமானைப் பார்த்தான்:

''கஸாக் நண்பா! உனக்கு நன்றி'' என்றுன்.

அந்த அறிமுகமில்லாத முகத்தை ராஸின் நன்குகப் பார்த்தார். நோய் வாய்ப்பட்ட விவசாயி. வெளிறிய முகம். முரட்டுத் துணியில் தைக்கப்பட்ட மேல் சட்டை அணிந்திருந்தான். அது கிழிந்து போயிருந்தது. அவன் கால்சட்டையும் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது.

''நீ யார்?'' என்று ராஸின் அவனைக் கேட்டார்.

''நான் தப்பி வந்தவன். ராஸினைப் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறேன். நீ அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிருயா?''

அந்த விவசாயி முணுமுணுத்தபடியே மயக்கமடைந்தான்.

இந்த சமயத்தில் ''ராஸின்! ஆட்டமான்! ஸ்டெப்பான் டிமபேயெவிச்!'' என்று கரையிலிருந்து சத்தங்கள் கேட்டன.

அவர்கள் ராஸினைத் தேடிக் கொண்டு வருகிருர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ராஸின் இருளுக்குள் மறைந்தார்.

கஸாக்குகள் அந்த விவசாயியைப் பார்த்தார்கள். அவன் உடலில் மூச்சு வருகிறதா என்று அவர்கள் குனிந்து பார்த்தார்கள்.

''மூச்சு வருகிறது!''

அவர்களில் இரண்டு பேர் நதியிலிருந்து காப்பாற்றப்பட்ட மனிதனைத் தூக்கிக் கொண்டு முகாமுக்குப் போனர்

கள். மற்றவர்கள் வோல்கா நதியின் கரையோரமாக ராஸினைத் தேடிச் சென்றார்கள்.

''ராஸின்! ஆட்டமான்!''

மறுநாள் காலையில் ராஸினைக் காப்டன்கள் சந்தித்து, முந்திய நாள் மாலையில் தப்பியோடி வந்த விவசாயி ஒருவனை கஸாக்குகளில் ஒருவர் காப்பாற்றியதாகத் தகவல் தெரிவித்தார்கள். அந்த கஸாக் வீரன் யார் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. படைவீரர்களில் ஒருவர் கூட அப்படிக் காப்பாற்றியதாக ஒத்துக் கொள்ளவில்லை.

''எல்லோரிடமும் விசாரித்தீர்களா? யாராவது விட்டுப் போயிருக்கிறதா?'' என்று ஸ்டெப்பான் டிமபேயெவிச் சிரித்துக் கொண்டே கேட்டார்.

யாயிக்—கோட்டை நகரம்

யாயிக் நதி. காஸ்பியன் கடல். யாயிக்—கற்கோட்டையினால் சூழப்பட்ட சிறிய நகரம்.

அந்த நகரத்தின் மாடங்கள் மிகவும் உயரமானவை. அதன் கோட்டைச் சுவரின் அகலமே பல மீட்டர்கள் இருக்கும். கோட்டைக் கதவுகள் ஓக் மரத்தில் செய்யப்பட்டிருந்தன. அதை நகரம் என்று சொல்வதைக் காட்டிலும் யாராலும் பிடிக்க முடியாத கோட்டை என்று சொல்வதே பொருத்தமானது.

''இதைப் பிடித்தால் என்னுடைய கஸாக்குகள் இங்கே தங்கி இளைப்பாறலாம்'' என்று ராஸின் நினைத்தார். ''ஆனால் இந்த நகரத்தைப் பிடிப்பது சுலபமான காரியம் அல்ல. என்னுடைய ஆட்களில் பாதிப்பேராவது அந்த முயற்சியில் சாக வேண்டியிருக்கும்.''

ஸ்டெப்பியைக் கடந்து யாயிக் நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த முப்பது சந்நியாசிகள், யாத்ரிகர்களை அவருடைய ஆட்கள் பிடித்து வைத்திருப்பதாக ராஸினுக்குத் தகவல் கிடைத்தது.

''அவர்கள் புனிதமான துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர்கள். அவர்கள் அமைதியானவர்கள். அவர்களை விட்டுவிடுங்கள். அவர்கள் பயணத்தைத் தொடரட்டும்'' என்று சொல்ல நினைத்தார் ராஸின். ஆனால் திடீரென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

''அவர்களை இங்கே கூட்டிக் கொண்டு வா.''

துறவிகள் அங்கே கொண்டு வரப்பட்டனர்.

''உங்கள் உடைகளைக் கழற்றுங்கள்!''

அவர் தமது கஸாக்குகளைக் கூப்பிட்டார்.

''இந்த உடைகளை அணிந்து கொள்ளுங்கள்'' என்றார்.

இரண்டு கோஷ்டியினரும் தங்களுடைய உடைகளை மாற்றிக் கொண்டனர்.

யாயிக் கோட்டையில் நிச்சயமில்லாத நிலைமை ஏற்பட்டிருந்தது. ராஸின் ஸ்டெப்பியில் பக்கத்தில் எங்கேயோ முகாம் செய்திருக்கிறார் என்பது துருப்புகளுக்குத் தெரியும்; அவர்களுடைய தளபதிக்கும் தெரியும். எந்த நேரத்திலும் ராஸின் வந்துவிடலாம் என்று அவர்கள் பயந்து கொண்டிருந்தார்கள்.

தளபதி கோட்டைக் காவலை இரண்டு மடங்கு அதிகப்படுத்தினார். தக்க அனுமதிச் சீட்டுகள் இல்லாமல் யாரும் கோட்டைக்குள் நுழையக்கூடாது, அதை விட்டு வெளியேறவும் கூடாதென்று தளபதி கண்டிப்பான உத்தரவு போட்டிருந்தார். இரவு நேரத்தில் எல்லாக் கதவுகளும் சாத்தப்பட்டு இறுக்கமாகத் தாளிடப்பட்டு வந்தன.

மேற்குத் திசையில் சூரியன் மறைந்து கொண்டிருந்தது. கோட்டைக் காவலர்கள் காவல் காத்துக் கொண்டு நின்றார்கள். அவர்கள் ஸ்டெப்பியைக் கவனமாக ஊடுருவிப் பார்த்தபடி இருந்தார்கள். ஒரு கோஷ்டி நகரத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதை அவர்கள் திடீரென்று பார்த்தார்கள். அவர்கள் மறுபடியும் பார்த்தார்கள். வந்து கொண்டிருப்பவர்கள் துறவிகள்.

யாத்ரிகர்கள் கோட்டைக் கதவை நெருங்கினார்கள்:

''கதவைத் திறங்கள்.''

காவலர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டது:

''நீங்கள் எங்கே போகிறீர்கள்?''

''யாயிக் மாதாகோவிலுக்குப் போகிறோம். அங்கேயுள்ள புனிதவடிவங்களை வணங்குவதற்காக வந்திருக்கிறோம்.''

''ஸ்டெப்பியிலேயே இரவைக் கழியுங்கள். அந்நியர்களை உள்ளே அனுமதிப்பதில்லை.''

''ஓஹோ! உங்களுக்குக் கடவுள் பக்தி கிடையாதாக்கும்'' என்று துறவிகள் முணுமுணுத்தார்கள். ''கடவுள் இதை நினைவில் வைத்திருப்பார்.''

காவலர்கள் தளபதியிடம் சொல்வதற்காக உள்ளே போனார்கள்.

''எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்?''

''முப்பது.''

''அவர்களை மட்டும் உள்ளே விடுங்கள். மற்றவர்கள் யாரும் நுழைந்துவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.''

இதற்குள் நன்ருக இருட்டிவிட்டது. காவலர்கள் திரும்பி வந்து கோட்டைக் கதவுகளைத் திறந்தார்கள். தாடியோ டிருந்த ஒரு காவலன் ஒவ்வொருவராக யாத்ரிகர்களை உள்ளே விட்டு எண்ணுவதற்குத் தொடங்கினன்.

''ஒன்று, இரண்டு... இருபது... முப்பது. நிறுத்து!'' என்றன்.

''தாடிக்காரா! உனக்கு எண்ணத் தெரியாதா?'' என்று ஒரு குரல் கேட்டது. ''இன்னும் இருபது பேர் வரவில்லையே.''

''நிஜமாகவா?'' என்று காவலன் திகைத்துக் கேட்டான். நாற்பது, ஐம்பது பேர்கள் உள்ளே வந்துவிட்டார்கள். அதன் பிறகு சில விவசாயிகளும் வந்தார்கள். ஒரு குதிரை மூக்கை நீட்டிக் கொண்டு உள்ளே நுழைந்தது. ஒரு குதிரை வீரன் உள்ளே வந்தான். அவனுக்குப் பிறகு இரண்டாவது, மூன்றுவது.

''நிறுத்து, நிறுத்து!'' என்று காவலன் கத்தினன்.

பிறகு என்ன நடந்தது? வாட்ட சாட்டமான ஒருவன் அந்தக் காவலனை நோக்கி ஓடி வந்தான். கையிலே தயாராகக் கொண்டுவந்த துணியைக் காவலன் வாயிலே திணித்துக் கட்டினன்.

இதற்குள் அங்கே என்ன நடக்கிறதென்பது கோட்டை யில் எல்லோருக்கும் தெரிந்து விட்டது. அவர்கள் அபாய மணியை ஒலித்தார்கள். ஆனல் அதற்குள் காரியம் முடிந்து விட்டது.

யாயிக் கோட்டையை யுத்தம் செய்யாமல் ராஸின் இப் படிக் கைப்பற்றினர். தெருக்களில் துப்பாக்கிச் சண்டை சிறு அளவில் நடைபெற்றது உண்மைதான். ஆனல் அது முக்கியமல்ல. அது ஒரு போயார் நகரம். ஆனல் ராஸின் கைகளில் இப்படி சுலபமாகச் சிக்கிவிட்டது.

இரண்டு கைகள்

தப்பியோடிய விவசாயிகள் குழு ஒன்று ராஸினைச் சந்திப் பதற்காக வோல்கா நதிக்கரையின் ஓரமாக வந்து கொண் டிருந்தது.

அவர்கள் இரவில் பிரயாணம் செய்தார்கள். பகலில் காடுகளிலும் புதர் மறைவிலும் தூங்கி ஓய்வெடுத்துக் கொண்டார்கள். அவர்கள் மக்கள் நடமாட்டமுள்ள பாதை கள், மக்களின் குடியேற்றங்கள் ஆகியவற்றிலிருந்து ஒதுங்கித் தள்ளி நடந்தார்கள். அவர்கள் இப்படி ஒரு மாதம் நடந்து போனர்கள்.

அந்த விவசாயிகள் குழுவிலேயே வயது முதிர்ந்தவரான அம்மைத் தழும்பு மிட்யாய் மற்றவர்களிடம் ஒரு விஷயத்தைத் திரும்பத் திரும்பச் சொன்னார்.

''ஆட்டமான் ஸ்டெப்பான் டிமபேயெவிச்சைப் பார்த்தாலே நமக்கு நடுக்கம் ஏற்படும். சண்டை போடத் தெரியாதவர்களை அவருக்குப் பிடிக்காது. வாளைப் பிடிக்கத் தெரியுமா என்று கேட்பார்—தெரியும் என்று பதில் சொல்ல வேண்டும். ஈட்டியைக் குறி பார்த்து வீசத் தெரியுமா என்று கேட்டால் தெரியும் என்று பதில் சொல்ல வேண்டும்.''

விவசாயிகள் ராஸினுக்கு முன்னால் நின்றார்கள்.

''ஆட்டமான் அவர்களே! எங்களைக் கஸாக்குகள் படையில் சேர்த்துக் கொள்ளுங்கள்.''

''உங்களுக்கு வாளைப் பிடிக்கத் தெரியுமா?''

''நன்றாகத் தெரியும்.''

''ஈட்டியை வீசத் தெரியுமா?''

''நன்றாகத் தெரியும்.''

''சோதிக்கட்டுமா?'' என்றார் ராஸின். ஒரு குதிரையைக் கொண்டு வருமாறு உத்தரவிட்டார். ''தாடிக்காரனே! இந்தக் குதிரையின் மீது சவாரி செய்'' என்று மிட்யாயிடம் கூறினார். ''வாளைக் கையிலே பிடி'' என்றார்.

அவர் இப்படி சோதிப்பாரென்று மிட்யாய் எதிர்பார்க்கவில்லை. ''ஆபத்தில் சிக்கிக் கொண்டுவிட்டேன். ஆட்டமானிடம் பொய் சொன்னதற்காக என்னைக் கொல்லப் போகிறார்கள்.'' அவன் மழுப்பிப் பேச ஆரம்பித்தான்.

''ஹூம். நாங்கள் நடந்தே இன்னும் சிறப்பாகச் சண்டை போடுவோம்.''

''கஸாக் நடந்து சண்டை போடுவதா? சீக்கிரமாகக் குதிரை மீது ஏறி உட்கார்.''

''நாங்கள் நடந்துவந்தது களைப்பாக இருக்கிறது.''

''களைப்பு என்ற வார்த்தையே போர் வீரனுக்குத் தெரியாது.''

இனி பேசிப் பயனில்லை என்று மிட்யாய் நினைத்தான். கஸாக்குகள் அவனை அப்படியே தூக்கிக் குதிரையின் மீது உட்கார்த்தினார்கள். அந்த விவசாயி வாளைப் பிடித்தான்.

கஸாக்குகள் சமிக்கை கொடுத்ததும் அந்தக் குதிரை வயலுக்குக் குறுக்கே வேகமாக ஓடியது. சேணத்தில் உட்கார்ந்து மிட்யாய்க்குப் பழக்கம் கிடையாது. மேலும் அன்று தான் தன்னுடைய வாழ்க்கையில் முதன் முறையாக வாளைப் பிடித்திருக்கிறான். அவன் தன் கரத்தை உயர்த்தி அந்த வாளை அசைத்தான். அந்த நேரத்தில் வாள் அவன் கைகளிலிருந்து நழுவி விழுந்தது.

''வாள் பிடிவாதமானது; மனம் போல நடந்து கொள்வது; உண்மையில் அது முரண்டு செய்வதுதான்'' என்று கஸாக்குகள் பேசிக் கொண்டார்கள்.

''அவனுக்கு வாள் எதற்கு? அவன் எதிரியைத் தன்னுடைய மரக்கட்டைச் செருப்பினாலேயே அடித்து விரட்டுவான்'' என்று ஸ்டெப்பான் டிமபேயெவிச் இன்னும் பலமாகச் சொல்லிச் சிரித்தார்.

இதைக் கேட்ட பொழுது விவசாயிக்கு ஆத்திரமேற்பட்டது. தைரியமாக ராஸினுக்கு அருகே போய் நின்றான்.

''ஆட்டமான் அவர்களே! வீணாக ஏன் சிரிக்கிறீர்கள்? நீங்கள் ஏரைப் பிடியுங்கள். நாங்களும் கொஞ்சம் சிரிக்கிறோம்'' என்றான்.

ராஸினுடைய மதிநுட்பத்தைச் சிரிப்பு அமுக்கிவிட்டது.

''தயார். நான் ஏரைப் பிடிக்கிறேன்'' என்றான்.

அங்கே ஒரு ஏர் கொண்டுவரப்பட்டது. அதில் ஒரு குதிரையைப் பூட்டினார்கள். ஆனால் கஸாக்குகள் எல்லோரையும் போலவே ராஸின் தன்னுடைய வாழ்க்கை முழுவதிலும் ஏரைப் பிடித்ததில்லை. அது மிகச் சாதாரணமான வேலை என்றுதான் அவர் நினைத்தார். ஆனால் உழுவதற்கு ஆரம்பித்த பொழுது அது எவ்வளவு கஷ்டமான வேலை என்பது அவருக்குப் புரிந்தது.

''உங்கள் உழுசால் வளைந்து போகிறதே'' என்று மிட்யாய் கத்தினான்.

''பூமியின் மேலாக மட்டுமே உழுகிறீர்களே. ஆழமாக, இன்னும் ஆழமாக பூமிக்குள் ஏரைச் செலுத்துங்கள்'' என்று விவசாயிகள் அவரைத் தூண்டினார்கள்.

ஆட்டமான் தன்னுடைய முழு பலத்தையும் ஏரின் மீது செலுத்தினார்; அப்படிச் செய்தபொழுது ஏர்முனை முறிந்தது.

''ஏர் பிடிவாதமானது; மனம் போல நடந்து கொள்வது; உண்மையில் அது முரண்டு செய்வது தான்'' என்று சொல்லி விவசாயிகள் சிரித்தார்கள்.

''கஸாக்குக்கு ஏர் எதற்காக? அவன் தன்னுடைய வாளைக் கொண்டே பூமியை உழுதுவிட முடியும்'' என்று மிட்யாய் கேலி செய்தான்.

ராஸின் விவசாயிகளைப் பார்த்தார். உடனே பலமாகச் சிரித்தார்.

''தாடிக்காரனே! நீ சரியான ஆளப்பா!'' என்று சொல்லி மிட்யாயின் முதுகில் தட்டிக் கொடுத்தார். ''நீ கற்றுக் கொடுத்த பாடத்துக்கு நன்றி.'' ''ஹோ'' என்று கஸாக்குகளைப் பார்த்துக் கூப்பிட்டார். ''விவசாயிகளை அவமதிக்

காதீர்கள். அவர்களுக்குக் குதிரைகளேயும் அவசியமான எல்லாப் பொருள்களேயும் கொடுங்கள். அவர்கள் கஸாக்குகளுக்குச் சமமானவர்கள்'' என்ருர்.

பிறகு சிறிது நேரம் சிந்தித்து விட்டுச் சொன்னுர்: ''விவசாயியும் போர் வீரனும் ஒரே மனிதனுடைய இரண்டு கைகளேப் போன்றவர்கள்.''

ஒரு அர்ஷினில் மூன்றில் ஒரு பங்கு

நகரங்களேப் பிடிக்கும் பொழுது வர்த்தகர்களே அவமதிக்கக் கூடாது; அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யக் கூடாதென்று ராஸின் தன்னுடைய படையினருக்குக் கண்டிப்பான உத்தரவு போட்டிருந்தார். வர்த்தகர்கள் இல்லேயென்ருல் உப்போ, ஆணியோ கிடைக்காது என்பதை ராஸின் புரிந்து கொண்டிருந்தார்.

''ஆட்டமான் அவர்களே! அவர்கள் எங்களே அவமதிக்காமலிருந்தால் நாங்கள் அவர்களேத் தொடக்கூட மாட்டோம்'' என்று அவர்கள் சொன்னுர்கள்.

''உங்களே அவமதிக்க தைரியம் யாருக்கு வரும்?'' என்று ஸ்டெப்பான் டிமபேயெவிச் உறுமினுர். ''ஆனுல் எடையிலோ அளவிலோ வர்த்தகர்கள் உங்களே ஏமாற்றினுல், நான் அவர்களே கவனித்துக் கொள்கிறேன். இது நான் உங்களிடம் சொல்லும் உறுதிமொழி; ஸ்டெப்பான் ராஸின் கொடுக்கும் உறுதிமொழி.''

ராஸினுடைய படைவீரர்கள் அஸ்ட்ரகானுக்குள் நுழைந்தனர். அந்த நகரத்திலிருந்த வர்த்தகர்கள் தங்கள் கடைகளேத் திறந்து தங்களிடமிருக்கும் பொருள்களே வரிசையாகப் பரப்பி வைத்தார்கள். ராஸின் அந்த வரிசைகளுக்கிடையே நடந்து போனுர். ஒரு ஜோடி பூட்சுகளே வாங்கினுர். அவை சிகப்பு நிறத்தோலில் செய்யப்பட்ட சிறிய பூட்சுகள். தன் மகள் பராஷாவுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதற்காக அவற்றை வாங்கினுர். ஸ்டெப்பான் டிமபேயெவிச் தன்னுடைய முகாமுக்குத் திரும்பினுர். அவர் முகம் மலர்ந்திருந்தது. வர்த்தகம் சுறுசுறுப்பாகவும் சுமுகமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒக்கயோமவ் என்ற வியாபாரியின் கடைக்கு முன்பாக ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. அவர் ஸாடின், பட்டுத் துணிகளே விற்பனே செய்தார். கஸாக்குகள் தங்களுடைய விடுமுறை உடைகளுக்காக சிகப்பு, பச்சை, மஞ்சள் நிறத் துணிகளே வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

அர்ஷின் — நீட்டளவை அளவு கோல்; 28 அங்குலங்களுக்குச் சமம்

இந்தத் துணிகளை அளந்து நறுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்த வியாபாரி தன் மனதில் பின்வருமாறு நினைத்தான்: ''நான் வியாபாரி இல்லையா? எனக்கு மட்டும் கெட்டிக்காரத்தனம் கிடையாதா? இவர்களைக் கொஞ்சம் ஏமாற்றினால் என்ன?'' அவன் சிலுவைக் குறியிட்டுக் கொண்டான். துணி வாங்கிய ஒவ்வொரு நபருக்கும் ஒரு அர்ஷினில் மூன்றில் ஒரு பங்கு குறைத்துக் கொடுத்தான்.

அந்த நாளில் பாதி முடிந்த பிறகு கஸாக்குகளில் ஒருவன் அந்த வியாபாரி செய்யும் மோசடியைக் கண்டுபிடித்தான். மற்ற கஸாக்குகள் தாங்கள் வாங்கிய பட்டுத்துணிகளை அளந்து பார்த்தார்கள். முதலில் ஒருவன், பிறகு இரண்டாவது, பிறகு ஐந்தாவது, பிறகு பத்தாவது நபர் ஒரு அர்ஷினில் மூன்றில் ஒரு பங்கு நீளம் குறைவான துணி தங்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தார்கள்.

''பிடி அந்தப் போக்கிரியை!''

''மோசக்காரனே, உன்னைச் சும்மா விட மாட்டோம்.''

துணி வாங்கிய நபர்கள் வியாபாரியைச் சூழ்ந்து கொண்டார்கள். அவனைக் கடையிலிருந்து தரதரவென்று இழுத்துக் கொண்டு போனார்கள். அங்கேயே விசாரணை மன்றம் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அங்கே காவல் செய்து கொண்டிருந்த ஒரு காப்டன் ராஸினிடம் செய்தியைத் தெரிவித்தார்.

''மக்கள் கோபமாகப் புறப்பட்டு ஒரு வியாபாரியைக் குறைத்து விட்டார்கள்.''

''குறைத்து விட்டார்களா—அப்படி என்றால் என்ன அர்த்தம்?'' என்று ராஸின் கோபமாகக் கேட்டார்.

''ஒரு அர்ஷினில் மூன்றில் ஒரு பங்கு குறைத்து விட்டார்கள்.''

''மறுபடியும் சொல். ஒரு அர்ஷினில் மூன்றில் ஒரு பங்கு என்றால் என்ன அர்த்தம்?''

''தலையிலிருந்து தோள் வரை வெட்டி விட்டார்கள்.''

''எலிகள்'' என்று திட்டினார் ராஸின். ''இந்தக் குற்றம் செய்தவர்களை உடனே இங்கே கொண்டுவா.''

அதில் சம்பந்தப்பட்ட கஸாக்குகள் ராஸினுக்கு முன்னால் கொண்டு வரப்பட்டார்கள்.

ராஸின் அவர்களைப் பார்த்து வெறியோடு கத்தினார்:

''ஒரு அர்ஷினில் மூன்றில் ஒரு பங்கு துணியைக் குறைத்து விற்பனை செய்து விட்டான் என்பதற்காக நீங்கள் ஒரு வியாபாரியின் உயிரைப் பறித்து விட்டீர்களே. கிழிசல் துணிக்காகக் கொலை செய்யலாமா?''

''ஆட்டமான் அவர்களே! ஆத்திரப்படாதீர்கள். நன்ருகச் சிந்தியுங்கள்'' என்று கஸாக்குகள் பதில் சொன்னுர்கள். ''ஒரு அர்ஷின் விவகாரத்துக்காக நாங்கள் இப்படிச் செய்து விட்டதாக நீங்கள் உண்மையிலேயே நினைக்கிறீர்களா? ஒரு திருடனின் தலையை வெட்டுவது நல்லது தானே. நம் எல்லோருக்கும், நமது பேரக்குழந்தைகளுக்கும், கொள்ளுப் பேரக்குழந்தைகளுக்கும் இது உதாரணமாக இருந்தால், அதுவே போதும். ஆட்டமான் அவர்களே! எங்கள் மீது கோபப்படாதீர்கள்.''

ராஸின் அமைதியடைந்தார்.

''சரி! நீங்கள் போகலாம்'' என்று சொல்லிவிட்டு அவர் தனக்குள் சிந்தித்தார். ''வியாபாரிகள் சமூகத்துக்கு அவசியமானவர்கள். வர்த்தகம் இல்லாமல் முன்னேற்றம் கிடையாது. ஆனுல் ஒக்கயோமவைப் போன்ற வியாபாரிகளால் தீமைதான் ஏற்படும். ஒரு வேளை என்னுடைய ஆட்கள் செய்தது சரிதான்.''

ஒரு கஸாக்கின் சபதம்

குஸ், பிரிஸேவ்கா என்ற பெயர்களை உடைய இரு இளம் கஸாக்குகள் பலமாக வாய்ச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களிடையே மக்களுக்குச் சேவை செய்வதில் அதிகமான தீவிரமுடையவர் யார் என்பதைப் பற்றியே அவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

''நான்தான்'' என்று குஸ் கத்தினுன்.

''இல்லை, நான்தான்'' என்று பிரிஸேவ்கா மறுத்தான்.

''என்னுடைய உயிரைக் கொடுப்பதற்கும் நான் தயங்க மாட்டேன்'' என்று குஸ் மார் தட்டினுன்.

''என்னை எவ்வளவு சித்திரவதை செய்தாலும் நான் சிறு சத்தம் கூடப் போட மாட்டேன்'' என்று சபதம் செய்தான் பிரிஸேவ்கா.

நிரூபணம் வேண்டுமா?

''இங்கேயே என் விரலை வெட்டித்தருகிறேன்.''

''பூ! விரல்தானே. நான் என்னுடைய கையை வெட்டிக் கொடுக்கத் தயார்.''

இரண்டு கஸாக்குகளும் பலமாகச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். இருவருமே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை.

இந்த சமயத்தில் ராஸின் முகாமைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். இரண்டு வீரர்கள் போட்ட சத்தமும்

அவர்களுக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருந்த விவாதமும் அவர் காதில் விழுந்தது. அவர் அங்கே சிறிது நேரம் சிரித்தபடியே நின்ருர்.

சண்டை போட்டுக் கொண்டிருந்தவர்கள் ஆட்டமானைப் பார்த்ததும் அமைதியாக இருந்தார்கள்.

ஸ்டெப்பான் டிமபேயெவிச் அந்த இளம் வீரர்களை உற்றுப் பார்த்தார்.

''அட வாய்ச் சவடால் பேர்வழிகளா? வாழ்க்கை, சித்திரவதை, விரல், கை—எதற்கும் தயாரா? உங்களை சோதித்துப் பார்க்கட்டுமா?''

''ஆட்டமான் அவர்களே! உத்தரவு கொடுங்கள். நாங்கள் தயார் என்று கஸாக்குகள் என்ற முறையில் சபதம் செய்கிருேம்.''

''உங்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?''

''ஸ்டெப்பான் டிமபேயெவிச் அவர்களே! எங்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.''

''அப்படியா? சரி. நான் சொல்வதைக் கேளுங்கள். யார் முதலில் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்கிருர்களோ அந்த நபர்தான் மக்கள் சேவையில் அதிகமான தீவிரமுடையவர்.''

அந்த இரு கஸாக்குகளும் கலக்கமடைந்தார்கள். அவர் இப்படிச் சொல்வாரென்று அவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆனுல் ஆட்டமான் உத்தரவு போட்டுவிட்டார். இனி அவர்கள் என்ன செய்ய முடியும்? தாங்கள் செய்த சபதத்தை அவர்கள் திரும்பப் பெற முடியாது. கஸாக் சொன்னது சொன்னது தான்.

கஸாக் வீரர்களை எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளுமாறு செய்வது ராஸினுக்கு சாதாரண விஷயமாக இருக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் அவருக்கு மிகவும் தேவைப்பட்டார்கள், ஏனென்ருல் அவருடைய வீரர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. விவசாய வீரனுக்கு அந்தத் திறமை சுலபமாக வரவில்லை.

இரண்டு கஸாக்குகளும் மதகுருவைத் தேடி மாதா கோவிலுக்கு வேகமாக ஓடினுர்கள்.

''நீண்ட முடிக்காரரே! எங்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் அ, ஆவிலிருந்து தொடங்கினுர்கள். அப்பா! எவ்வளவு கஷ்டம்! எப்படிப் பாடுபட்டார்கள், தெரியுமா?

எந்தப் பாடத்தையும் மெதுவாகவே கற்றுக் கொள்ள முடிகிறது—அதிலிருக்கின்ற கஷ்டமே அதுதான். முதல் வாரம் முடிந்தது. இரண்டாவது வாரமும் முடிந்தது.

''எனக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது'' என்று குஸ் குழந்தையைப் போல அழுதான்.

''அரசாங்கத் துருப்புகளின் குண்டுபட்டுச் சாவது இதை காட்டிலும் எவ்வளவோ மேல்'' என்று பிரிஸேவ்கா புலம்பினன்.

இன்னொரு வாரம் முடிந்தது.

''என் தலை வெடிக்கப் போகிறது. இது என்னைக் கொன்று விடும்'' என்று வேதனைப்பட்டான் குஸ்.

''இந்த நரக வேதனையை நாம் ஏன் சகித்துக் கொண்டிருக்க வேண்டும்?'' என்று துடித்தான் பிரிஸேவ்கா.

அவர்கள் அழுது புலம்பினர்கள்; தங்கள் விதியை நொந்து கொண்டார்கள். ஆம், கஸாக் வீரர்கள்தான் அப்படி நடந்து கொண்டார்கள். அவர்கள் அழுது புலம்பிய போதிலும் கல்வி கற்பதைத் தொடர்ந்தார்கள். கஸாக் தன்னுடைய சபதத்தை நிறைவேற்ருமல் இருக்க முடியுமா?

இரண்டு மாதங்கள் மெதுவாக நகர்ந்தன.

''போதும். நீங்கள் போகலாம்'' என்று மதகுரு முடிவாகச் சொன்னர்.

அவர்கள் காற்றிலே பறந்து போவதைப் போல ராஸினை நோக்கி வேகமாக ஓடினர்கள்.

''ஆட்டமான் அவர்களே! நீங்கள் விரும்பிய அறிவை நாங்கள் பெற்று விட்டோம்'' என்ருர்கள்.

''உண்மையாகவா?'' என்று ராஸின் சந்தேகத்தோடு கேட்டார்.

''சந்தேகம் இருந்தால் சோதித்துப் பாருங்கள்.''

ராஸின் அவர்களிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்தார். அதில் ஏதோ எழுதப்பட்டிருந்தது.

''இதைப் படியுங்கள்'' என்ருர்.

குஸ் அதை வாங்கிப் படித்தான். அவன் சுலபமாகப் படிக்கவில்லை; தட்டுத் தடுமாறிப் படித்தான் என்பது உண்மை. ஆனல் எல்லாவற்றையும் சரியாக எழுத்துக் கூட்டிப் படித்தான். அவன் படித்ததில் தவறுகள் இல்லை. எல்லாம் சரியாக இருந்தது.

''சபாஷ், கஸாக்!'' என்று பாராட்டினர் ராஸின்.

அவர் இன்னொரு காகிதத்தை எடுத்து பிரிஸேவ்காவிடம் நீட்டினர். அதில் ஒன்றும் எழுதப்படாமல் வெள்ளையாக இருந்தது.

''எங்கே எழுதிக் காட்டு. பார்ப்போம்'' என்ருர்.

பிரிஸேவ்கா எழுதினன். அவன் வேகமாக எழுதவில்லை என்பது உண்மை தான். ஆனல் எழுத்துக்களைக் குழப்பவில்லை. எல்லாவற்றையும் சரியாக எழுதியிருந்தான்.

''சபாஷ், கஸாக்'' என்று வியந்து பாராட்டினார் ராஸின்.

இரண்டு கஸாக்குகளையும் ஸ்டெப்பான் டிமபேயெவிச் தன்னுடைய அலுவல்களை கவனிப்பதற்காக வைத்துக் கொண்டார். முக்கியமான காகிதங்களையும் கடிதங்களையும் எழுதும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார். அவர்களிருவரும் மிகவும் திறமையான உதவியாளர்களாக அவரிடம் பணியாற்றினார்கள்.

அந்த இரண்டு கஸாக்குகளையும் ராஸின் அடிக்கடி பாராட்டுவதுண்டு. கஸாக்குகளின் புகழுக்கு அவர்கள் களங்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதை நினைத்து அவர் பெருமைப்பட்டார்.

அவர் பாராட்டும் பொழுது குஸ்ஸூம் பிரிஸேவ்காவும் கூச்சமடைவதுண்டு.

''நாம் மக்களுக்காகத் தானே இதைச் செய்தோம்'' என்று நினைத்துக் கொள்வார்கள்.

ராஸின்கா

ஸிம்பீர்ஸ்க் நகரத்துக்கு அருகே நடைபெற்ற யுத்தத்தின் போது ராஸினுக்குத் தலையில் பலமான காயம் ஏற்பட்டது.

நம்பிக்கையான கஸாக்குகள் அவர் பிறந்த டோன் நதி பாய்கின்ற பிரதேசத்துக்கு அவரைத் தூக்கிச் சென்றார்கள். வோல்கா நதிக்கும் டோன் நதிக்கும் இடையில் ஒரு சிறு பண்ணையில் அவர்கள ஒரு இரவைக் கழித்தார்கள்.

அங்கே தங்கிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு சிறு பையன் ராஸினிடம் வந்து ஒரு ஆப்பிள் பழத்தைக் கொடுத்தான்.

''ஸ்டெப்பான் டிமபேயெவிச்! இந்த ராஸின்காவைச் சாப்பிடுங்கள்'' என்றான்.

''இதன் பெயரென்ன?''

''இந்தப் பழங்களுக்கு ராஸின்கா என்று பெயர்'' என்று அந்தச் சிறுவன் விளக்கினான்.

ராஸின் ஆச்சரியமடைந்து புருவங்களை மேலே உயர்த்தினார். ஆட்டமான் சிந்தனையில் மூழ்கினார்...

1667ம் வருடத்தில் தான் ராஸினும் அவருடைய கஸாக் படைவீரர்களும் முதன் முதலாக வோல்கா நதியைக் கடந்தார்கள். அந்த சமயத்தில் அவர் இதே பண்ணையில் ஒரு இரவைக் கழித்தார்.

மறுநாள் காலையில் அந்தக் குடும்பத்தின் தலைவரான ஒரு முதியவர் ஆப்பிள் செடிகளை நட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர் செடிகளை நடுகின்ற முறையைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது ஸ்டெப்பான் டிமபேயெவிச்சுக்கும் ஆர்வமேற்பட்டது.

''நான் உதவி செய்யலாமா?''

''மிக்க நன்றி'' என்று அந்தக் கிழவர் பதிலளித்தார்.

ராஸின் ஒரு குழியைத் தோண்டி அதில் ஒரு சிறு ஆப்பிள் செடியை நட்டார். அது மிகவும் சிறு செடியாக இருந்தது. இன்னும் இலைகள் கூட ஏற்படவில்லை.

''ஸ்டெப்பான்! மூன்று வருடங்களுக்குப் பிறகு நீங்கள் இங்கே வர வேண்டும். இதன் பழங்களை, ராஸின்காவைச் சுவைத்துப் பார்க்க வேண்டும்'' என்று அந்தக் கிழவர் ஆட்டமானுக்கு அழைப்புக் கொடுத்தார்.

மூன்று வருடங்களல்ல—நான்கு வருடங்கள் முடிந்தன. ''பல நல்ல விஷயங்களை வைத்துக் கொண்டு காலம் நமக்காகக் காத்திருக்குக்கிறதே'' என்று ராஸின் நினைத்தார்.

''அந்தப் பெரியவர் இருக்கிறாரா?'' என்று ராஸின் சிறுவனைக் கேட்டார்.

''சென்ற வசந்தகாலத்தில், மரங்களும் செடிகளும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த சமயத்தில் அவர் இறந்து விட்டார். ஸ்டெப்பான் டிமபேயெவிச்! அவர் சாகும் பொழுது உங்கள் பெயரைச் சொன்னார். அந்த ஆப்பிள் மரத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார். அந்த மரத்தை நன்றாகப் பராமரிக்க வேண்டும் என்று எங்களையும் எங்களுக்குப் பிறகு வரக் கூடிய ஒவ்வொருவரையும் கேட்டுக் கொண்டார்.''

காலையில் ராஸின் அந்த மரத்தைப் போய்ப் பார்த்தார். அது இளமையான, வலுவான மரமாக வளர்ந்திருந்தது. அதன் கிளைகளில் ஏராளமான பழங்கள் தொங்கின. அடிமரத்திலிருந்து பெரிய கிளைகள் பிரிந்து சென்றன. அவற்றில் பளபளப்பான, வாசனையான, பருமனை ஆப்பிள் பழங்கள் தொங்கின. ஒவ்வொரு ஆப்பிள் பழமும் ஒரு கஸாக்கியின் கை முஷ்டியைப் போல இரண்டு மடங்கு பெரியதாக இருந்தது.

''ராஸின்கா'' என்று ஸ்டெப்பான் டிமபேயெவிச் தனக்குள் சொல்லிக் கொண்டார். அந்த முதியவருடைய உடல் புதைக்கப்பட்ட இடத்திற்குத் தன்னைத் தூக்கிக் கொண்டு போகுமாறு சொன்னார். அங்கே போனதும் அவருக்கு அஞ்சலி செலுத்தினார். பிறகு பிரயாணத்தைத் தொடருமாறு தன்னுடைய ஆட்களுக்கு உத்தரவிட்டார்.

அந்தப் பயணம் முழுவதும் ராஸின் ஆப்பிள் தோட்டங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

''இந்த மரங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. இந்த அதிசய மரங்களை டோன் பிராந்தியம் முழுவதிலும்,வோல்கா நதிக்கரை பூராவும், உலக முழுவதும் நடுவோம். நாம் போயார்களை விரட்டுவோம். பழத்தோட்டங்களை ஏற்படுத்துவோம். வசந்த காலத்தில் பூமி முழுவதுமே வெள்ளை நெருப்பாக ஜொலிக்கும். இலையுதிர் காலத்தின் போது, பழங்களின் கனத்தைத் தாங்க முடியாமல் மரக் கிளைகள் பூமியை நோக்கித் தாழ்ந்து வளையும். இதே முறையில் நாம் வாழ்க்கையை மறுபடியும் தொடங்குவோம். ஏர்களைக் கொண்டு உழுது மறுபடியும் மண்ணைத் திருப்பிப் போடுவோம். மறுபடியும் உழுது பயிரிடுவோம். களைகளைப் பிடுங்குவோம். எங்கும் ரை, கோதுமை தானியக் கதிர்கள் தென்படும். சாதாரண மக்களிடம் ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவோம்.''

தன்னுடைய கனவு நனவாவதைப் பார்க்கும் வரை ராஸின் உயிரோடிருக்கவில்லை. ஜார் சக்கரவர்த்தியையும் போயார்களையும் விரட்டியடிக்க வேண்டும் என்று கலகக்காரர்கள் போட்ட திட்டம் வெற்றியடையவில்லை. டோன் பிராந்தியத்தை அடைந்ததும் பணக்கார கஸாக்குகள் ராஸினைப் பிடித்துக் கொண்டார்கள். அவர் உடலில் இரும்புச் சட்டங்களை மாட்டி மாஸ்கோவுக்குக் கொண்டு போய் செஞ்சதுக்கத்தில் சிரச் சேதம் செய்தார்கள்.

கொலையாளியின் கோடரி அவருடைய தலைக்கு மேல் இருந்தது. கோடரி மேலே தூக்கப்பட்டது; வேகமாகக் கீழே விழுந்தது...

ஸ்டெப்பான் டிமபேயெவிச் ராஸின் கொல்லப்பட்டார். அவர் அழிந்து விட்டார். அவரைப் பற்றிய நினைவுகள் இன்னும் அழியாதிருக்கின்றன. அவர் புகழ் ஓங்கட்டும்! எக்காலமும் பெருகட்டும், நிலைக்கட்டும்.

1

1. ருஷ்ய விவசாயிகள் (17ம் நூற்றாண்டில் செதுக்கப் பட்ட ஓவியம்). 2. கருக்கரிவாளும் ஏர்முனையும்— இவைதான் அன்று விவசாயிகள் உபயோகித்த கருவி கள். 3, 4. விவசாயிகள் காட்டை அழித்து நிலமாக மாற்றுவதும் அந்த நிலத்தை உழுவதும் (17ம் நூற் றாண்டில் விவசாயிகள் மரங்களில் செதுக்கிய ஓவியங்கள்).

2

3

4



5. ஜார் அலெக்ஸேய் மிஹாய்லொவிச் ரொமானொவ். அவருடைய ஆட்சிக் காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் ஸ்டெப்பான் ராஸின் தலைமையில் கலகம் செய்தனர்.

6





5

7

8

6, 7. கலகக்காரர்கள் மரச் சட்டங்களில் இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டார்கள். கால்களுக்கு கனமான இரும்புக் காப்புகளும் கழுத்துக்கு வளையமும் போடப்பட்டன. 8. யாரிடம் முறையிடுவது? 17ம் நூற்றாண்டில் இவான் இவானொவ் என்ற பண்ணையடிமை தன்னுடைய எஜமானரைப் பற்றி கவர்னரிடம் புகார் செய்தான். ''அவர் காரணமில்லாமல் முடிவே இல்லாதபடி என்னை அடித்துச் சித்திரவதை செய்கிறார்; நான் ஒரு தவறும் செய்யாதிருக்கும் பொழுது என்னை இரும்புச் சங்கிலியால் கட்டுகிறார்...''

9

10

11

9. ருஷ்ய தேசப் படம். இடது மேல் மூலையில்: மாஸ்கோ நகரத்தின் வரை படம் (1614). 10, 11. ஜாருக்கு உதவியாக இருந்த போயார்களும் வணிகர்களும் — ருஷ்ய அரசையும் மக்களையும் இவர்களே ஆட்சி செய்தார்கள்.

12

13



14

12. ஸ்டெப்பான் ராஸின். 13. கையால் எழுதப் பட்டிருக்கும் அரிச்சுவடிப் புத்தகம். சொத் துடையவர்கள் மட்டுமே அன்று கல்வி கற்க முடியும். 14. கலகத்தில் சேருமாறு ஸ்டெப்பான் ராஸின் மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் (செப் டெம்பர், 1670).



15

16

15. அஸ்ட்ரகான் நகரம், ஸ்டெப்பான் ராஸின் கைப்பற்றிய நகரங்களில் ஒன்று (செதுக்கப்பட்ட வர்ண ஓவியம்). 16. வாள், யுத்தக் கோடரி, நாட்டுத் துப்பாக்கி—ஜார் துருப்புகளின் ஆயுதங்கள். 17. ராஸின் தலைமையில் கலகம் செய்த விவசாயிகளுக்கு எதிராக ஜார் படைகளை அனுப்புகிறார் (அக்காலத்து ஓவியம்).

17



18

19

20





22

20



21

18. ஸ்டெப்பாஸின் ராஸின் (வஸீலி ஸுரிக்கோவ் வரைந்த ஓவியம்). 19. இரும்புக் குண்டு, கோடரி, வெட்டரிவாள்—ராஸினுடைய விவசாயப் படையினரின் ஆயுதங்கள். 20. ஸ்டெப்பான் ராஸின் உபயோகித்த தோணிகள் (அக்காலத்து ஓவியம்). 21. பஷ்கீரியன். வோல்கா பிராந்தியத்தில் பல இனங்கள் ராஸின் தலைமையேற்ற கலகத்தில் தீவிரமாகப் பங்கெடுத்தன (செதுக்கப்பட்ட வர்ண ஓவியம்). 22. ராஸின் படைகளுக்கும் ஜாரின் துருப்புக்களுக்கும் அஸ்டரகானில் 1670ல் நடைபெற்ற சண்டை (செதுக்கப்பட்ட ஓவியம்).

23

24



A
RELATION
Concerning the Particulars of the
REBELLION
Lately raiſed in
MUSCOVY
BY
Stenko Razin;
Its Riſe, Progreſs, and Stop; together with the manner of taking that REBEL, the Sentence of Death paſſed upon him, and the Execution of the ſame.

Publiſhed by Authority.

In the SAVOY:
Printed by Tho. Newcomb. 1672.



25

23. ஸ்டெப்பான் ராஸினும் அவருடைய சகோதரன் புரோலும் சிரச்சேதம் செய்வதற்குக் கொண்டு செல்லப் படுதல் (அக்காலத்துச் சித்திரம்). 24. ஸ்டெப்பான் ராஸின் தலைமை யில் நடைபெற்ற கலகத்தைப் பற்றி 1672ல் வெளியிடப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மேலட்டை. 25. ஸ்டெப்பான் ராஸின் மீது ஜார் விதித்த தண்டனையின் பிரதி.

மாபெரும் பீட்டர்

பீரங்கிப் படையின் காப்டன்

ருஷ்யப் படை நார்வாவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

''டம்-டம்-டம், டம்-டம்-டம்!'' அந்தப் படைப்பிரிவின் முரசிலிருந்து வந்த சத்தத்துக்குத் தகுந்தாற் போல படை வீரர்கள் அணிவகுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள்.

துருப்புகள் பழங்கால ருஷ்ய நகரங்களான நோவ்கரோட், ப்ஸ்கோவ் ஆகியவற்றைக் கடந்து போய்க்கொண்டிருந்தன. படைவீரர்கள் முரசின் சத்தத்துக்குத் தகுந்தவாறு அணிவகுப்பு இசைக்கு ஏற்றபடி கம்பீரமாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

இலையுதிர்காலம். பூமி காய்ந்து போயிருந்தது. ஆனால் திடீரென்று மழை பொழிய ஆரம்பித்தது. மரங்களிலிருந்த இலைகள் சுத்தமாகக் கழுவி விடப்பட்டன. பாதைகளில் தண்ணீர் தேங்கி சேருயிற்று. குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. மழைத் தண்ணீர் தேங்கியிருந்த பாதைகளில் படைவீரர்கள் தொடர்ந்து அணிவகுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முழங்கால்கள் வரை சேறு அப்பியிருந்தது.

அந்தப் பாதையில் போவது கஷ்டமாக இருந்தது. போகும் வழியில் ஒரு சிறு நீரோடையின் மீதிருந்த மரப் பாலத்தில் பீரங்கி சிக்கிக் கொண்டது. அதன் உருளைகளில் ஒன்று உளுத்துப் போன மரப் பலகையில் தட்டி அச்சு வரை கீழே அமுங்கிவிட்டது.

படைவீரர்கள் பீரங்கியை இழுக்குமாறு குதிரைகளை அதட்டினுர்கள்; சவுக்கால் அடித்தார்கள். பல நாட்களாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்ததன் விளைவாகக் குதிரைகள் களைத்துப் போயிருந்தன. உண்மையைச் சொல்வதென்ருல், குதிரைகள் எலும்பும் தோலுமாக இருந்தன. அவை தங்களுடைய முழு பலத்தோடும் பீரங்கியை இழுத்துப் பார்த்தன—ஆனுல் பலன் இல்லை. பீரங்கி சிறிதுகூட அசையவில்லை. படைவீரர்கள் அந்த இடத்தில் கூட்டம் போட்டனர். தங்களுடைய தோளைக் கொடுத்து பீரங்கியைத் தள்ளிவிட முயற்சி செய்தனர்.

''முன்னே தள்ளுங்கள்'' என்று ஒருவர் சத்தம் போட்டார்.

''பின்னல் இழுங்கள்'' என்று வேறொருவர் உத்தரவு கொடுத்தார்.

படைவீரர்கள் கூடி நின்று விவாதித்துக் கொண்டிருந்தனர்; ஆனல் பீரங்கி இருந்த இடத்திலேயே இருந்தது. சார்ஜென்ட் பீரங்கியைச் சுற்றிச் சுற்றி வந்தார். அடுத்தாற் போல என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை.

படைவீரர்கள் திடீரென்று விலகிக் கொண்டார்கள். மிகச் சிறப்பான அலங்கார வேலை செய்யப்பட்டிருந்த மூடிய கோச் வண்டி ஒன்று அந்தப் பாதையில் வேகமாக வந்து கொண்டிருந்தது.

அந்த வண்டியில் பூட்டப்பட்டிருந்த பளபளப்பான குதிரைகள் பாலத்தை நோக்கி வேகமாக ஓடி வந்து நின்றன. அந்தக் கோச் வண்டியிலிருந்து ஒரு அதிகாரி வெளியே இறங்கினர். அவர் பீரங்கிப் படைப் பிரிவின் காப்டன் என்பதைப் படைவீரர்கள் கவனித்தனர். அவர் நல்ல உயரமாக இருந்தார். ஏழு அடி உயரம் இருக்கும். அவர் முகம் உருண்டையாகவும் கண்கள் பெரிதாகவும் இருந்தன. அவருடைய மேலுதட்டில் பசையினல் ஒட்டப்பட்டது போல கறுப்பு நிறத்தில் மீசை இருந்தது.

அவரைக் கண்டதும் அங்கேயிருந்த படைவீரர்கள் பயத்தால் விறைப்பாக நின்றனர்; அப்படியே வெகு நேரம் உறைந்து நின்றனர்.

''சகோதரர்களே! நிலைமை மோசமாக இருக்கிறதே'' என்றார் அந்த காப்டன்.

''ஆமாம். அப்படித்தான் இருக்கிறது, பீரங்கிப் படைக் காப்டன் அவர்களே!'' என்று அங்கேயிருந்த வீரர்கள் பதிலளித்தார்கள். ''நம்மை விரட்டப் போகிறர்'' என்று அவர்கள் எல்லோரும் நினைத்தார்கள்.

அதுதான் நடந்தது. காப்டன் பீரங்கியின் அருகே வந்து பார்த்தார்; பாலத்தை நன்ருக உற்றுப் பார்த்தார்.

''உங்களுடைய அதிகாரி யார்?'' என்று கேட்டார்.

''நான்தான் அதிகாரி, ஐயா!'' என்று ஒரு சார்ஜென்ட் தயங்கியபடியே முன்வந்தார்.

''நம்முடைய இராணுவ தளவாடத்தை நீ பத்திரமாக வைத்துக் கொள்கின்ற முறை இதுதானே!'' என்று அந்தக் காப்டன் சார்ஜென்டிடம் சீறி விழுந்தார்.

''அப்படியில்லை... நாங்கள் என்ன செய்வோம்...'' என்று அந்த சார்ஜென்ட் தட்டுத் தடுமாறி பதில் சொன்னர்.

ஆனால் அந்தக் காப்டன் அவருடைய பதிலைக் கேட்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை. உடனே திரும்பி அந்த சார்ஜென்டின் கழுத்தில் ஓங்கிக் குத்தினார். பிறகு மறுபடியும் பீரங்கியின் அருகில் சென்று பார்த்தார். சிகப்புப் பட்டைகள் அலங்காரமாகத் தைக்கப்பட்டிருந்த தன்னுடைய கஃப்தானைக் கழற்றினார். குனிந்து பீரங்கிச் சக்கரங்களுக்கு நடுவே தன் உடலை நுழைத்தார், சக்கரத்துக்கு அடியில் தன்னுடைய அகன்ற தோளைக் கொடுத்து அதை மேலே உயர்த்தினார். இதைக் கண்ட படைவீரர்கள் ஆச்சரியத்தில் சிட்டியடித்தனர். அவர்கள் ஓடி வந்து பீரங்கியைச் சுற்றி நின்று கொண்டார்கள். பீரங்கி நகர்ந்தது. அந்தக் குழியிலிருந்து சக்கரம் மேலே வந்தது; இப்பொழுது உறுதியான மரக்கட்டை மீது ஏறிநின்றது.

காப்டன் தன்னுடைய தோள்களை நிமிர்த்தி லேசாகச் சிரித்தார். ''நண்பர்களே! உங்களுக்கு நன்றி'' என்று படைவீரர்களைப் பார்த்துச் சொன்னார். சார்ஜென்டின் தோளில் தட்டி விட்டுத் தன்னுடைய கோச் வண்டியில் போய் உட்கார்ந்தார். உடனே வண்டி வேகமாகப் புறப்பட்டது.

அந்தக் காப்டனின் உருவம் வெகு தூரத்துக்கு அப்பால் மறைகின்ற வரையிலும் படைவீரர்கள் வாயைப் பிளந்தபடி அவரைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

''எவ்வளவு சமயோசிதம்!'' என்று சார்ஜென்ட் வியந்து கூறினார்.

ஒரு தளபதியும் அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவும் அந்தப் படைவீரர்கள் போய்க் கொண்டிருந்த பாதையில் வந்தார்கள். சிறிது நேரத்துக்குப் பிறகு அந்தக் குழு படைவீரர்களை நெருங்கியது.

''ஜாருடைய கோச் வண்டி உங்களைக் கடந்து போய்விட்டதா?'' என்று தளபதி அவரிடம் கேட்டார்.

''மேன்மை தங்கிய தளபதி அவர்களே! ஜாருடைய கோச் வண்டி இங்கே வரவில்லை'' என்று படைவீரர்கள் பதிலளித்தார்கள். ''பீரங்கிப் படையைச் சேர்ந்த ஒரு காப்டனைத்தான் நாங்கள் பார்த்தோம்.''

''பீரங்கிப் படைக் காப்டனா?'' என்று தளபதி மறுபடியும் கேட்டார்.

''ஆமாம். அவர்தான் வந்தார்'' என்று படைவீரர்கள் பதில் சொன்னார்கள்.

''முட்டாள்கள்! காப்டன் என்று சொல்கிறீர்களே! அவர்தான் ஜார் பீட்டர் அலெக்ஸேயெவிச்!'' என்றார்.

நார்வா இல்லையென்றால் நாம் கடல் மீது போக முடியாது

வாட்ட சாட்டமாகக் கொழுத்திருந்த குதிரைகள் வேக மாகப் போய்க்கொண்டிருந்தன. ஜாரின் கோச் வண்டி பல வெர்ஸ்டாக்கள் தூரம் நெடுகப் போய்க் கொண்டிருந்த துருப்புகளைக் கடந்து போயிற்று. சேற்றில் சிக்கிய வண்டி களைக் கடந்து போய்க் கொண்டிருந்தது.

கோச்சில் ஜாருக்குப் பக்கத்தில் ஒரு நபர் உட்கார்ந் திருந்தார். பீட்டரைப் போல உயரமானவர்; ஆனால் தோள் மட்டும் இன்னும் அகலமாக இருந்தது. அவர் பெயர் அலெக் ஸாந்தர் மென்ஷிகோவ்.

பீட்டருக்குத் தம்முடைய குழந்தைப் பருவத்திலிருந்தே மென்ஷிகோவைத் தெரியும். அப்பொழுது மென்ஷிகோவ் ஒரு ரொட்டிக் கடையில் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் நகரத்திலுள்ள தெருத்தெருவாகப் போய் பிரோஷ் கியை விற்பனை செய்வான். அதற்காக நகரத்திலுள்ள சந் தைக்கும் போவதுண்டு.

''சூடான ரொட்டி, சூடான பிரோஷ்கி'' என்று வயிறு வலிக்க பலமான குரலில் கத்துவான்.

ஒரு சமயம் பிரியோபிரஷேன்ஸ்கயே கிராமத்துக்குப் பக்கத்தில் உள்ள யாவுஸா நதியில் அலெக்ஸாஷ்கா மென் ஷிகோவ் மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் தலையை உயர்த்திப் பார்த்தபொழுது இன்னொரு சிறுவன் அங்கே வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அந்தச் சிறுவன் யார் என்பது உடைகளைப் பார்த்தவுடனேயே அவனுக்குப் புரிந்து விட்டது. அந்தச் சிறுவன் சக்கரவர்த்தியின் மகனை இளம் ஜார்.

''ஒரு வேடிக்கை காட்டட்டுமா?'' என்று அலெக்ஸாஷ்கா பீட்டரிடம் கேட்டான்.

''ஓ! தாராளமாக.''

மென்ஷிகோவ் ஒரு ஊசியை எடுத்தான். அதில் நூல் கோர்க்கப்பட்டிருந்தது. அந்த ஊசியைத் தன்னுடைய தாடையில் குத்தினான். மிகவும் சாமர்த்தியமாக சிறிதும் இரத்தம் சிந்தாமல் அந்த ஊசியை வெளியே இழுத் தான்.

இதைப் பார்த்த பீட்டர் ஆச்சரியமடைந்தார்.

அந்த சந்திப்புக்குப் பிறகு பத்து வருடங்கள் முடிந்து விட்டன. இப்பொழுது மென்ஷிகோவை அடையாளம் கண்டு பிடிப்பது கஷ்டம். ஏனென்றால் இந்த இடைக்காலத்தில் அவ்

வெர்ஸ்டா—நீட்டளவை அளவு கோல்; 0.66 மைலுக்குச் சமம்

பிரோஷ்கி — உள்ளே மாமிசம் இருக்கும் ரொட்டி

வளவு மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. அவர்தான் ஜாருக்கு மிக நெருக்கமான நண்பர்; அந்தரங்க நண்பர். பழைய அலெக்ஸாஷ்காவை இப்பொழுது ''அலெக்ஸாந்தர் டனீலவிச்'' என்று மரியாதையாகச் சொன்னுர்கள்.

''வேகமாக ஓடுங்கள்'' என்று கோச்சின் முன்னுலிருந்த பெட்டியில் உட்கார்ந்திருந்த படைவீரன் குதிரைகளை அதட்டினுன்.

குதிரைகள் தலை தெறிக்க ஓடின. சேறும் சகதியும் எல்லாத் திசைகளிலும் வாரியடிக்கப்பட்டது. சமதளமற்ற பாதையில் கோச் வண்டி வேகமாக ஓடியது.

அந்தப் படைவீரனின் அகன்ற முதுகைப் பார்த்துக் கொண்டு பீட்டர் அமைதியாக உட்கார்ந்திருந்தார். சிறு வயதில் தான் ஈடுபட்ட விளையாட்டுக்களையும் சிறுவர்களைத் துருப்புகளாகக் கற்பனை செய்து கொண்டு நடத்திய போர் விளையாட்டுக்களையும் பற்றி அவர் நினைத்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது பீட்டர் மாஸ்கோவின் புறநகர்ப் பகுதியான பிரியோபிரஷேன்ஸ்கயேவில் வசித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் போர் விளையாட்டுக்கள்தான் மிகவும் பிடிக்கும். அவரோடு சேர்ந்து விளையாடுவதற்காக சிறுவர்களைக் கொண்ட ஒரு கூட்டமே இருந்தது. அவர்கள் விளையாடுவதற்குத் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் இருந்தன. உண்மையான வெடிமருந்துதான் அவர்களிடம் இல்லை. அவர்கள் பீரங்கியில் பீட்ரூட்டைப் போட்டுச் சுடுவார்கள். பீட்டர் தன்னுடைய துருப்புகளை வரிசையாக நிற்குமாறு சொல்லுவார். பிறகு அவர்களை இரண்டு கோஷ்டிகளாகப் பிரிப்பார். பிறகு போர் ஆரம்பமாகும். அது முடிந்த பிறகு சேதக் கணக்குப் பார்ப்பார்கள். ஒரு சிறுவனுக்குக் கை ஒடிந்திருக்கும்; இன்னொருவனுக்குப் பக்கவாட்டில் அடி விழுந்திருக்கும்; மூன்றுவது சிறுவனுக்குத் தலையில் காயம் பட்டிருக்கும்...

அவ்வப்பொழுது போயார்கள் மாஸ்கோவிலிருந்து வருவார்கள். போர் விளையாட்டுக்களுக்காகப் பீட்டரைக் கடிந்து கொள்வார்கள். ஆனுல் பீட்டர் தன்னுடைய பீரங்கியை அவர்களை நோக்கித் திருப்புவார்—'டும்!' ஊற வைத்த பீட்ரூட் அவர்களுடைய தொந்திகளிலும் தாடிவளர்ந்திருக்கும் முகங்களிலும் போய்த் தாக்கும். போயார்கள் தங்களுடைய சித்திரப் பின்னல் வேலைப்பாடுடைய உடைகளின் முனைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நாலாதிசைகளிலும் சிதறியோடுவார்கள். பீட்டர் தன்னுடைய வாளை உருவிக் கொண்டு எக்காளம் செய்வார்.

''வெற்றி! வெற்றி! எதிரி புறமுதுகு காட்டி ஓடுகிருன்!''

அந்தச் சிறுவர் சேனை இன்று வளர்ந்து விட்டது. பிரியோபிரஷேன்ஸ்கி, ஸெம்யோனவ்ஸ்கி என்ற பெயர்களைக் கொண்ட இரு பெரிய படைப் பிரிவுகளாக இருக்கிறது. ஜார் அவர்களைத் தன்னுடைய தனிக் காவலர்கள் என்று அழைத்தார். இந்தப் படைப்பிரிவுகள் மற்ற துருப்புகளோடு நார்வாவுக்கு அணிவகுத்துச் சென்றன. கடக்க முடியாத சேற்றையும் சகதியையும் கூட அவர்கள் ஒன்முகக் கடந்து சென்ருர்கள். ''என்னுடைய பழைய நண்பர்கள் எப்படிப் போர் புரியப் போகிருர்களோ!'' என்று பீட்டர் சிந்தித்தார். ''நாம் இப்பொழுது போயார்களோடு போர் புரியவில்லையே.''

''ஐயா!'' மென்ஷிகோவ் குரல் அவருடைய சிந்தனையைக் கலைத்தது. ''ஐயா! அதோ! நார்வா தெரிகிறது.''

பீட்டர் அந்தத் திசையில் நோக்கிஞர். இடது புறத்தில், நரோவா நதியின் செங்குத்தான கரையின் மீது ஒரு கோட்டை தென்பட்டது. அதைச் சுற்றிலும் கற்களால் எழுப்பப்பட்ட மதிற்சுவர் இருந்தது. நதி முடிகின்ற இடத்தில் இன்னெரு கற்கோட்டை—கோட்டைக்குள்ளே இருக்கும் கோட்டை—தெரிந்தது. அந்தக் கோட்டையின் பிரதான ஸ்தூபி வானத்தில் ஓங்கி உயர்ந்து நின்றது. அந்த ஸ்தூபிக்கு 'நீண்ட ஜெர்மன்' என்று பெயர்.

நார்வாவுக்கு எதிரே அந்த நதியின் வலது கரையில் இன்னெரு கோட்டை இருந்தது. அதற்கு இவான்—கோரோட் என்று பெயரிடப்பட்டிருந்தது. அதைச் சுற்றி யாரும் எளிதில் ஏற முடியாத மதிற் சுவர் இருந்தது.

''ஐயா! இவ்வளவு பலமான கோட்டையைப் பிடிப்பது சுலபமான காரியமல்ல'' என்ருர் மென்ஷிகோவ்.

''ஆம். சுலபமான காரியமல்ல; ஆனுல் அவசியமான காரியம்.'' என்று பீட்டர் பதிலளித்தார். ''நார்வா இல்லாமல் நாம் வாழ முடியாது. நார்வா இல்லையென்ருல் நாம் கடல்மீது போக முடியாது.''

யூரால் இரும்பும் கருமான் கற்பனையும்

நார்வாவில் ருஷ்யர்கள் தோற்கடிக்கப் பட்டார்கள். நாட்டில் யுத்தத்துக்குத் தேவையான தயாரிப்புகள் சரியான படி செய்யப்படவில்லை என்பது தெரிந்தது. போதுமான ஆயுதங்கள் இல்லை; இராணுவ உடைகளும் போதவில்லை;

துருப்புகளுக்குச் சரியான பயிற்சியும் கொடுக்கப்படவில்லை.

குளிர்காலம். உறைபனி. காற்று. சிறப்பாக சித்திரவேலை செய்யப்பட்ட சறுக்கு வண்டியொன்று பனியில் போய்க் கொண்டிருந்தது. வண்டியை ஓட்டியவர் குழிகளிலும் மேடுகளிலும் வண்டியை விரட்டிக் கொண்டு போனார். குதிரைகளின் குளம்புகளிலிருந்து பனித்துகள் தெறித்தது. பீட்டர் துலாவை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தார். நிக்கிடா டெமிடோவின் ஆயுதப் பட்டறைக்குப் போய்க் கொண்டிருந்தார்.

பீட்டருக்கு டெமிடோவை நெடுங்காலமாகத் தெரியும். டெமிடோவ் சாதாரணக் கருமானாக இருந்த காலத்திலிருந்து தெரியும். எப்பொழுதாவது பீட்டருக்குத் துலாவில் ஏதேனும் வேலையிருந்தால் அவர் டெமிடோவின் பட்டறைக்குப் போவார். ''டெமிடோவ்! எனக்குக் கருமான் வேலையைக் கற்றுக் கொடு'' என்பார்.

டெமிடோவ் மேலங்கியை மாட்டிக் கொண்டு உலையிலிருந்து பழுக்கச் சிவந்திருக்கும் இரும்பைக் குறட்டினால் எடுப்பார். அந்த உலோகத்தை ஒரு சிறு சுத்தியலால் அடிப்பார். உலோகத்தை எப்படி வளைக்க வேண்டும் என்று பீட்டருக்குச் செய்து காட்டுவார். பீட்டர் சுத்தியலைக் கையில் எடுத்துக் கொண்டு டெமிடோவ் சொல்லிக் கொடுத்த விஷயங்களை நினைவுபடுத்திக் கொள்வார். டங்! நெருப்புப் பொறிகள் பறக்கும்.

''இங்கே பார்த்து அடி'' என்பார் டெமிடோவ்.

ஜார் ஏதேனும் தவறு செய்து விட்டால் போதும். உடனே நிக்கிதா கோபமாகக் கத்துவார். ''கவனமாக அடி, மட்டிப் பயலே.''

உடனே அவர் சொல்லுவார்:

''மேன்மை தங்கிய சக்கரவர்த்தி அவர்களே! தயவு செய்து கோபமடையாதீர்கள். எந்தத் தொழிலையும் கற்றுக் கொள்வதற்கு முன்னால் நன்றாகத் திட்டு வாங்க வேண்டும். பயிற்சியில் பாதி திட்டுவதுதான்'' என்றார்.

''அதற்கென்ன'' என்று பீட்டர் பதிலளித்தார்.

இப்பொழுது ஜார் மறுபடியும் துலாவுக்கு வந்தார். ''இதில் ஏதோ முக்கியமான விஷயம் இருக்க வேண்டும். வேடிக்கை பார்ப்பதற்காக ஜார் வர மாட்டார்'' என்று டெமிடோவ் சிந்தித்தார்.

அவர் நினைத்தது முற்றிலும் சரி.

''நிக்கிடா டெமிடோவிச்! நார்வாவில் நடந்ததென்ன என்று தெரியுமா?'' என்று பீட்டர் கேட்டார்.

டெமிடோவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

வீணக எதுவும் சொன்னல் ஜாருக்கு ஆத்திரம் உண்டாகி விடலாம். நார்வாவைப் பற்றித்தான் எல்லா இடங்களிலும் பேசிக் கொண்டிருக்கிறர்களே. எனவே யார்தான் நார்வாவைப் பற்றிக் கேள்விப்படவில்லே. கடைசியில் ஸ்வீடிஷ்காரர்கள் நம்மைத் தோற்கடித்துவிட்டார்கள். டெமிடோவ் என்ன பதில் சொல்லலாம் என்று சிந்தித்துக் கொண்டு மௌனமாக இருந்தார்.

''சொல். சமாளிக்கப் பார்க்காதே'' என்றர் பீட்டர்.

''நான் அதைப் பற்றிக் கேள்விப்பட்டேன்'' டெமிடோவ் சிரமப்பட்டுப் பேசினர்.

''எல்லாவற்றையும் நானே சொல்லி விடுகிறேன்'' என்றர் பீட்டர். ''நமக்கு பீரங்கிகள் வேண்டும், நிக்கிதா டெமிடோவிச்! உனக்குப் புரிகிறதா? பீரங்கிகள் வேண்டும்.'

''ஐயா! இதைப் புரிந்து கொள்வது கஷ்டமா?''

''உண்மையைச் சொல்ல வேண்டுமென்றல் நமக்கு பீரங்கிகள் அதிகமாக வேண்டும்.''

''பீட்டர் அலெக்ஸேயெவிச், எனக்குப் புரிகிறது. ஆனல் துலாவில் உள்ள நமது தொழிற்சாலேகள் ஏழையாக அல்லவா இருக்கின்றன. நம்மிடம் இரும்பு இல்லே. கைவசம் எரிபொருள் இல்லே. இங்கே இருப்பவை தொழிற்சாலேகள் அல்ல; காலியான பட்டறைகள்தான் இருக்கின்றன.''

பீட்டரும் டெமிடோவும் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். சிற்பவேலேப்பாடு செய்யப்பட்ட ஒரு நாற்காலியில் பீட்டர் உட்கார்ந்து கொண்டு சன்னல் வழியாகத் தொழிற்சாலேயின் முற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். விவசாயிகள் கிழிந்து போன உடைகளே அணிந்து கொண்டு, தேய்ந்து போன மரக்கட்டைச் செருப்புகளே மாட்டிக் கொண்டு ஒரு மரக்கட்டையை இழுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

''துலாவின் சுதந்திரமான, சொகுசான, சுலபமான வாழ்க்கை எனக்கு முன்னல் நடக்கிறது. நாங்கள் விறகுக்காகப் பிச்சையெடுக்கிறேம்'' டெமிடோவ் சொன்னர். அவர் பீட்டரை நோக்கிக் குனிந்தார்; தணிவான குரலில் இரகசியமாகப் பேசுவதைப் போலப் பேசினர். ''மேன்மை தங்கிய சக்கரவர்த்தி அவர்களே! நான் ஒன்று சொல்லட்டுமா...''

பீட்டர் ஒரு கண நேரம் மௌனமாக இருந்தார். பிறகு டெமிடோவைப் பார்த்தார். ''சொல். தயங்காமல் சொல்.''

''என்னுடைய ஆட்கள் இரும்பைத் தேடி யூரால் பிராந்தியம் முழுவதும் சுற்றினர்கள்... நானும் அவர்களோடு

போயிருந்தேன்'' என்றார் டெமிடோவ். ''அங்கே இரும்பு கிடைக்கிறது. முடிவில்லாத கடலைப் போன்ற காடுகள் அங்கே இருக்கின்றன. எங்கே முடிகின்றன என்று சொல்ல முடியாத அளவுக்கு அவை ஏராளமாக இருக்கின்றன. அங்கே உங் களுடைய தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும். பீரங்கிகள், ஆயுதங்கள், வெடி குண்டுகள் ஆகியவை அங்கேயிருந்து உங்களுக்குக் கிடைக்கும். இன்னும் வேறு பொருள்கள் என்ன வேண்டுமோ அவை உடனே கிடைக்கும்.''

''யூரால் பிராந்தியமா?'' என்று பீட்டர் கேட்டார்.

''ஆம். அதைப் பற்றித்தான் நாம் பேசிக் கொண்டிருக் கிறோம்'' என்று டெமிடோவ் வலியுறுத்திச் சொன்னார்.

''நானும் யூராலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அது வெகு தூரத்தில் இருக்கிறது, டெமிடோவ். பூமியின் கடைசிக் கோடியில் இருக்கிறது. அங்கே தொழிற் சாலைகளைக் கட்டுவதற்கு மட்டுமே எவ்வளவு காலமாகும் என்பதை நினைத்துப் பார்.''

''அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்று டெமி டோவ் உறுதியாகச் சொன்னார். ''நாம் சாலைகளைப் போடு வோம். அங்கேயிருக்கின்ற நதிகளும் போக்குவரத்துக்குப் பயன்படும். தூரத்தைப் பற்றி எதற்காகக் கவலைப்பட வேண் டும்? நேரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? ஏன்? என்ன அவசரம்? நாளைக்கே எல்லாம் முடிந்துவிடப் போகிறதா? சற்றுப் பொறுத்திருங்கள். இரண்டு வருடங்களில் யூரால் இரும்பும் யூரால் பீரங்கிகளும் தயாரிக்கலாம். எல்லாம் சரியாக நடைபெறும்.''

பீட்டர் டெமிடோவை உற்றுப் பார்த்தார். யூரால் பிராந்தியத்தைப் பற்றி நிக்கிடா நெடுங்காலமாகவே சிந்தித்திருக்க வேண்டும் என்பது அவருக்குப் புரிந்தது. பீட் டர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று டெமிடோவ் அவருடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''சரி நிக்கிடா டெமிடோவிச்!'' என்று வெகு நேரத் துக்குப் பிறகு பீட்டர் சொன்னார். ''நீ சொல்கிறபடியே செய்வோம். நான் அரசு ஆணையை எழுதுகிறேன். நீ யூரால் பிராந்தியத்துக்கு உடனே போக வேண்டும். உனக்குத் தேவையான பணத்தைக் கருவூலத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தேவையான ஆட்களைச் சேர்த்துக் கொள்... கடவுள் உனக்கு உதவுவார். ஆனால் ஒன்றை மட்டும் நினை வில் வைத்துக் கொள். இதுதான் இப்பொழுது நமக்கு மிக முக்கியமான வேலை. இன்னொன்று, இதில் ஏதேனும் குறை ஏற்பட்டால் உன்னைச் சும்மா விட மாட்டேன்.''

ஒரு மாத காலத்தில் சிறந்த சுரங்கத் தொழிலாளிகளை

யும் துப்பாக்கி செய்வதில் நல்ல அனுபவமுடையவர்களை யும் சேர்த்துக் கொண்டு டெமிடோவ் யூராலுக்குப் புறப் பட்டார்.

பீட்டர் இதே சமயத்தில் பிரியான்ஸ்க், லிபெட்ஸ்க், இன்னும் பல நகரங்களுக்கு ஆட்களை அனுப்பி வைத்தார். ருஷ்யா முழுவதிலும் பல்வேறு இடங்களில் இரும்பைத் தோண்டியெடுக்குமாறும் தொழிற்சாலைகளைக் கட்டுமாறும் பீட்டர் உத்தரவிட்டார்.

மாதாகோவில் மணிகள்

''டனீலிச்! மாதாகோவில் மணிகளைக் கழற்றி உபயோகப் படுத்தலாம் என்று நினைக்கிறேன்'' என்று பீட்டர் மென் ஷிகோவிடம் ஒரு நாள் சொன்னார்.

அவர் இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார்.

''ஏன் இப்படி என்னைப் பார்க்கிறாய்?'' என்று பீட்டர் அவரிடம் ஆத்திரமாகக் கேட்டார். ''நமக்குச் செம்பு அவசியமாக இருக்கிறது. இரும்பு வேண்டும். மாதாகோவில் மணிகளை உருக்கி பீரங்கிகளைத் தயாரிப்போம். பீரங்கிகளைச் செய்வோம். உனக்குப் புரிகிறதா?''

''ஆம், மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி அவர்களே! அது சரி சரி '' என்று மென்ஷிகோவ் ஒத்துக் கொண்டார். ஆனால் ஜார் விளையாட்டாகப் பேசுகிறாரா அல்லது உண்மை யாகவே அப்படி நினைக்கிறாரா என்பது அவருக்குத் தெரிய வில்லை.

பீட்டர் விளையாட்டாகச் சொல்லவில்லை. சக்கரவர்த்தி யின் உத்தரவுகளை நிறைவேற்றுவதற்காகத் துருப்புகள் நாட் டின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டன.

படைவீரர்கள் லபாஸ்னியா என்ற பெரிய கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள். உஸ்பென்ஸ்கி மாதாகோவில் அங்கு தான் இருந்தது. பொழுது சாய்ந்து இருட்டிவிட்ட நேரத் தில், மாலைப் பிரார்த்தனைக்காக மணி அடித்துக் கொண் டிருக்கும் பொழுது படைவீரர்கள் அந்த கிராமத்துக்குள் நுழைந்தார்கள். மாதாகோவில் மணிகளிலிருந்து வந்த ஓசை ஒன்று சேர்ந்து மாலைக் காற்றில் இனிமையாக ஒலித்தது. எத்தனை மணிகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சார் ஜென்ட் தன்னுடைய விரல்களை நீட்டி எண்ணினார். மொத் தம் எட்டு மணிகள்.

பனியில் விறைத்துப் போயிருந்த குதிரைகளிலிருந்து படைவீரர்கள் கீழே இறங்கி ஓய்வெடுத்தார்கள். சார்ஜென்ட்

மதகுருவின் வீட்டுக்குப் போனார். எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டிருந்த மதகுரு கோபத்தில் முகத்தைச் சுளித்தார்; அவருடைய நெற்றியில் சுருக்கங்கள் வரிவரியாகப் படர்ந்தன. எனினும் அவர் சார்ஜென்டை அன்போடு வரவேற்றார்.

''வரவேண்டும்! வரவேண்டும், படைவீரரே! உங்களுடைய ஆட்கள் எல்லோரையும் கூப்பிடுங்கள். பிரயாணத்தாலும் பனியாலும் நீங்கள் களைத்துப் போயிருப்பீர்கள்'' என்றார்.

படைவீரர்கள் மதகுருவின் வீட்டுக்குள் மிகவும் பணிவாக நுழைந்தார்கள். தங்கள் காலணிகளில் ஒட்டியிருந்த பனியை நன்றாகத் துடைத்துவிட்டு, சிலுவைக் குறியிட்டு விட்டு உள்ளே நுழைந்தார்கள்.

மதகுரு வீரர்களுக்கு நல்ல விருந்து கொடுத்தார். ஒயினையும் தாராளமாகவே ஊற்றினார்.

''படைவீரர்களே! நன்றாகச் சாப்பிடுங்கள்; நன்றாகக் குடியுங்கள்'' என்று அன்போடு கேட்டுக் கொணடார்.

படைவீரர்கள் சற்று அதிகமாகவே குடித்துவிட்டுச் சிறிது நேரத்தில் தூங்கிவிட்டார்கள். மறுநாள் காலையில் சார்ஜென்ட் வெளியே போனார். மணிக்கூண்டைப் பார்த்தார். அதில் ஒரே ஒரு மணி மட்டுமே தொங்கிக் கொண்டிருந்தது.

சார்ஜென்ட் மதகுருவிடம் ஓடினார்.

''மணிகள் எங்கே? அவற்றை என்ன செய்தீர்கள்?'' என்று கோபமாகக் கேட்டார்.

மதகுரு தன்னுடைய கைகளை விரித்தார்.

''எங்கள் பகுதி ஏழ்மையானது. இந்த வட்டாரம் முழுவதிலுமே ஒரே ஒரு மணி மட்டும் தான் உண்டு'' என்றார்.

''ஒன்று மட்டும்தானா? அது எப்படி?'' என்று சார்ஜென்ட் ஆத்திரத்தோடு கத்தினார். ''நான் நேற்று எட்டு மணிகளை எண்ணினேன். அவை அனைத்தும் சேர்ந்து ஒலிப்பதைக் கூடக் கேட்டேனே.''

''படைவீரனே! நீ என்ன உளறுகிறாய்?'' என்று மதகுரு மறுபடியும் கைகளை ஆட்டினார். ''ஏதாவது கனவு கண்டாயா? நேற்று நன்றாகக் குடித்தாய். அந்த மயக்கத்தில் எட்டு மணிகள் இருப்பதாகக் கனவு கண்டிருந்திருப்பாய்.''

நேற்று மதகுரு தங்களனைவருக்கும் விருந்தளித்து ஒயினை ஊற்றிக் கொடுத்தது ஏன் என்று இப்பொழுது சார்ஜென்டுக்குப் புரிந்தது. அவர் தன்னுடைய படைவீரர்களோடு மாதாகோவிலை நன்றாகச் சோதனை போட்டார், பாதாள அறை ஒவ்வொன்றிலும் உற்றுப் பார்த்தார். ஆனால் பல

னில்லை. மணிகள் எங்கோ தண்ணீரில் மறைந்து விட்ட மாதிரித் தோன்றியது.

இந்த சம்பவத்தைப் பற்றி மாஸ்கோவுக்குப் புகார் செய்யப் போவதாக சார்ஜென்ட் பயமுறுத்தினர்.

''செய். தாராளமாகச் செய்'' என்றுர் மதகுரு.

எனினும் சார்ஜென்ட் புகார் செய்ய வேண்டாமென்று முடிவு செய்தார். அந்த சம்பவத்துக்குத் தன்னையும் பொறுப் பாக்குவார்கள் என்று அவருக்குத் தெரியும். அந்த கிராமத் திலேயே தங்கி விசாரணை நடத்துவதென்று முடிவு செய்தார்.

படைவீரர்கள் முதலில் ஒரு வாரம் தங்கினுர்கள். பிறகு இன்னொரு வாரம் தங்கினுர்கள். அவர்கள் தெருக்களைச் சுற்றினுர்கள்; வீடுகளுக்குள் நுழைந்து சோதனை போட்டார் கள். ஆனுல் துரதிர்ஷ்டவசமாக யாருக்குமே அந்த மணிகளைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. ''சில மணிகள் இருந்தன; ஆனுல் இப்பொழுது அவை எங்கே இருக்கின்றன என்று எங்களுக்குத் தெரியாது'' என்று எல்லோரும் ஒரே மாதிரி யாகச் சொன்னுர்கள்.

அவர்கள் அங்கே தங்கியிருந்த பொழுது ஒரு சிறுவன் சார்ஜென்டோடு ஒட்டிக் கொண்டான். அவன் பெயர் பெட்கா. அவன் படைவீரர்களையும் ஆயுதங்களையும் ஆர்வத் தோடு பார்த்துக் கொண்டிருந்தான். யுத்தத்தைப் பற்றி சதா கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான். அவன் புத்திசாலி யான சிறுவன். சார்ஜென்டிடமிருந்து ஒரு தோட்டாவைத் திருடுவதற்கு எப்பொழுதும் முயற்சி செய்து கொண்டிருந் தான்.

''தொந்தரவு செய்யாதே'' என்று சார்ஜென்ட் அவனைக் கோபித்துக் கொண்டார். ''மதகுரு மணிகளை எங்கே ஒளித்து வைத்திருக்கிருர் என்பதைக் கண்டுபிடித்துச் சொல். உனக்குப் பரிசாக ஒரு தோட்டாவைக் கொடுக்கிறேன்.''

''எனக்கே கொடுத்துவிடுவீர்களா? உண்மையாகவா?''

''ஆமாம். அப்படித்தான்.''

இரண்டு நாட்களாக பெட்காவை எங்கும் பார்க்க முடிய வில்லை. மூன்ருவது நாளன்று அவன் சார்ஜென்டை நோக்கி வேகமாக ஓடி வந்தான். அவருடைய காதுக்குள் இரகசிய மாக ஏதோ சொன்னுன்.

''நான் கண்டுபிடித்துவிட்டேன்.''

''உண்மையாகவா?'' என்று சார்ஜென்ட் சந்தேகத் தோடு கேட்டார்.

''கடவுள் சத்தியமாகக் கண்டுபிடித்து விட்டேன். தோட்டாவைக் கொடுங்கள்.''

''அதெல்லாம் முடியாது. முதலில் இடத்தைக் காட்டு.''

பெட்கா சார்ஜென்டை கிராமத்துக்கு வெளியே கூட்டிக் கொண்டு வந்தான். வீட்டில் தயாரிக்கப்பட்ட சறுக்குக் கட்டைகளை அணிந்து கொண்டு ஆற்றின் கரையோரத்தில் வேகமாகச் சறுக்கிக் கொண்டு போனான். அவனை ஒட்டிப் போவதற்கு சார்ஜென்ட் மிகவும் சிரமப்பட்டார். பெட்கா சறுக்குக் கட்டைகளில் சுலபமாகச் சென்றான். ஆனால் சார்ஜென்ட் தடுமாறினார்; இடுப்பு வரையிலும் பனிக்குள் விழுந்துவிட்டார்.

''போகலாம். புறப்படுங்கள். அது ஒன்றும் அதிக தூரத்தில் இல்லை'' என்று பெட்கா அவரைத் தூண்டினான்.

அவர்கள் கிராமத்திலிருந்து மூன்று வெர்ஸ்டா தூரமுள்ள ஒரு இடத்துக்கு வந்துவிட்டார்கள். அங்கிருந்து செங்குத்தான கரையின் வழியாக உறைந்து போயிருந்த ஆற்றுக்குள் இறங்கினார்கள்.

''இங்கேதான்'' என்றான் பெட்கா.

சார்ஜென்ட் சுற்றிலும் பார்த்தார். பனிக்கட்டியில் ஒரு குழி தெரிந்தது. அதற்குப் பக்கத்தில் இன்னொரு குழி; அதற்கு அப்பால் இன்னொரு குழியிருந்தது. ஒவ்வொரு குழியிலிருந்தும் பனி மூடிய சங்கிலி தெரிந்தது. மதகுரு மணிகளை எங்கே புதைத்தார் என்பது சார்ஜென்டுக்கு இப்பொழுது தெரிந்தது. பனிக்குக் கீழேயிருக்கும் தண்ணீரில் அவை புதைக்கப்பட்டிருக்கின்றன. இதைக் கண்டுபிடித்தவுடன் சார்ஜென்ட் மகிழ்ச்சியடைந்தார். பெட்காவிடம் தோட்டாவைக் கொடுத்தார். கிராமத்தை நோக்கி வேகமாகத் திரும்பினார். உடனே புறப்படுவதற்குக் குதிரைகளைப் பூட்டுமாறு படைவீரர்களுக்கு உத்தரவு கொடுத்தார். பிறகு மதகுருவைப் பார்க்கப் போனார்.

''தந்தையே! என்னை மன்னித்து விடுங்கள். நான் குடிமயக்கத்திலிருந்த பொழுதுதான் அந்த மணிகளைப் பற்றிக் கற்பனை செய்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நாங்கள் லபாஸ்னியாவிலிருந்து இன்று புறப்படுகிறோம். தயவு செய்து எங்கள் மீது கோபம் கொள்ள வேண்டாம். கடவுளிடம் எங்களுக்காகத் தோத்திரம் செய்யுங்கள்.''

''உங்கள் பயணம் இனிமையாக இருக்கட்டும்'' என்று மதகுரு சிரித்துக் கொண்டே சொன்னார். ''போர்வீரனே! உனக்கு என் ஆசீர்வாதங்கள். நான் உங்களுக்காகத் தோத்திரம் செய்வேன்.''

மறுநாளே மதகுரு அந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களைக் கூட்டினார்.

''நல்ல வேளை. சோதனை முடிந்தது. ஆபத்து நம்மைக் கடந்து விட்டது.''

அவர்கள் மணிகளைத் தோண்டி எடுப்பதற்காக ஆற்றுக்குப் போனார்கள். குழிகளில் குனிந்து பார்த்த பொழுது அங்கே ஒன்றுமில்லை.

''தெய்வ நிந்தனை நடந்துவிட்டது'' என்று மதகுரு ஆத்திரத்தோடு கத்தினார். ''அந்தக் கொடியவர்கள் மணிகளையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். நம்முடைய மணிகள் போய்விட்டன. ஐயோ!''

ஆற்றிலிருந்து காற்று வேகமாக வீசியது. மதகுருவின் புனித மேலங்கி அந்தக் காற்றிலே படபடத்தது; விவசாயிகளின் தாடிகள் காற்றிலே சிலிர்த்தன. செங்குத்தான கரைகள் முழுவதும் பனித்துகள் சிதறி விழுந்தது.

புல்லும் வைக்கோலும்

ஸ்வீடிஷ் துருப்புகளோடு யுத்தம் செய்வதற்குப் பயிற்சியில்லாத ருஷ்யப் படைகளை அனுப்பியது தவறானது என்பதை நார்வா அனுபவத்திலிருந்து ருஷ்யர்கள் அறிந்து கொண்டார்கள். நாட்டில் நிரந்தரமான படையை ஏற்படுத்த வேண்டுமென்று பீட்டர் முடிவு செய்தார். யுத்தம் செய்யாத பொழுது ஆயுதங்களைச் சரிவரக் கையாளுவது எப்படி என்பதைப் படைவீரர்கள் கற்றுக்கொள்ளலாம்; கட்டுப்பாட்டுக்கும் ஒழுங்குக்கும் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு நாள் பீட்டர் படைவீரர்களின் குடியிருப்புகளைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். அப்பொழுது படைவீரர்கள் வரிசையாக அணிவகுத்து இராணுவ நடை பழகிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர்களுக்குப் பக்கத்தில் ஒரு இளம் அதிகாரி உத்தரவுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். பீட்டர் உத்தரவுகளை நின்று கேட்டார். அவை ஒரு வகையில் புதுவிதமாக இருந்தன.

''புல், வைக்கோல்!'' என்றார் அதிகாரி. ''புல், வைக்கோல்!''

''இது என்ன புதுமை?'' என்று பீட்டர் நினைத்தார். குதிரையை நிறுத்திக் கொண்டு நன்றாகப் பார்த்தார். அங்கேயிருந்த படைவீரர்களின் கால்களில் ஏதோ கட்டப்பட்டிருந்தன. இடது காலில் புல்லும். வலது காலில் வைக்கோலும். கட்டப்பட்டிருந்ததைப் பார்த்தார்.

அங்கே பீட்டர் நின்று கொண்டிருப்பதைப் பார்த்ததும் அதிகாரி உத்தரவு கொடுத்தார்.

''நில்!''

படைவீரர்கள் நின்றார்கள். அந்த அதிகாரி பீட்டரை நோக்கி ஓடிவந்தார்.

''காப்டன் அவர்களே! அதிகாரி வியாசெம்ஸ்கியின் படைப்பிரிவு கவாத்துப் பயிற்சி செய்து கொண்டிருக்கிறது.''

''தளர்வாக நில்!'' என்று பீட்டர் படைப் பிரிவுக்கு உத்தரவு கொடுத்தார்.

வியாசெம்ஸ்கியின் பணிவு பீட்டருக்கு திருப்தியைக் கொடுத்தது. அவர் முதலில் ''புல், வைக்கோல்'' விவகாரத்தைப் பற்றி ஆத்திரமடைவதற்குத் தயாராக இருந்தார். ஆனால் இப்பொழுது அவருடைய மனம் மாறியிருந்தது. அவர் வியாசெம்ஸ்கியிடம் கேட்டார்.

''படைவீரர்கள் தங்கள் கால்களில் இந்தக் குப்பையைக் கட்டிக் கொள்ளுமாறு ஏன் செய்தாய்?''

''இவை குப்பையல்ல, காப்டன் அவர்களே!'' என்று பதிலளித்தார் அந்த அதிகாரி.

''நீ என்ன சொல்கிறாய்? இவை குப்பையல்ல என்றால் என்ன அர்த்தம்?'' என்று பீட்டர் கோபத்தோடு கேட்டார். ''நீ நம் படைவீரர்களைக் கேவலப்படுத்துகிறாய். உனக்கு ராணுவ விதிகள் தெரியாதா?''

வியாசெம்ஸ்கி தன்னுடைய முறை சரியானதே என்ற கருத்தில் உறுதியோடிருந்தார்.

''அப்படி நினைக்க முடியாது'' என்றார். ''சில விஷயங்களை சுலபமாகப் புரியவைப்பதற்காகத்தான் இப்படிச் செய்கிறேன். காப்டன்! இங்கே அறியாமை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எது இடது கால், எது வலது கால் என்பதை இவர்களால் சொல்ல முடிவதில்லை. ஆனால் புல், வைக்கோல் என்றால் இவர்களுக்குப் புரிகிறது. கிராமத்திலிருந்து வந்திருப்பவர்களாதலால் இரண்டுக்கும் வித்தியாசம் தெரியும்.''

ஜார் இந்த நுட்பத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து சிரித்தார்.

சிறிது காலத்துக்குப் பிறகு பீட்டர் ஒரு அணிவகுப்பைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். கடைசிப் பிரிவில் வந்தவர்கள் மிகவும் சிறந்த முறையில் கவாத்துப் பயிற்சிகளைச் செய்தார்கள்.

''அந்தப் பிரிவின் அதிகாரி யார்?'' என்று பீட்டர் அருகில் நின்று கொண்டிருந்த தளபதியிடம் கேட்டார்.

''அந்த அதிகாரியின் பெயர் வியாசெம்ஸ்கி'' என்று தளபதி பதிலளித்தார்.

போயார்களின் தாடிகள்

புயிஞேஸவ், குர்ஞேஸவ் என்ற பெயர்களைக் கொண்ட இரு போயார்கள் மாஸ்கோவில் வசித்து வந்தார்கள். அவர்களுடைய வம்ச பரம்பரையை நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே அவர்களால் சொல்ல முடியும்; நகரத்திலிருந்த அவர்களுடைய மாளிகைகளில் ஏராளமான விலையுயர்ந்த பொருள்கள் இருந்தன. ஒவ்வொருவரும் ஆயிரக் கணக்கான பண்ணையடிமைகளை வைத்திருந்தார்கள்.

எனினும் இரண்டு போயார்களுமே தங்களுடைய தாடிகளைப் பற்றி மிகவும் அதிகமாகப் பெருமைப்பட்டார்கள். அவர்களுடைய தாடிகள் அடர்த்துச் செழித்து நன்ருக வளர்ந்திருந்தன. புயிஞேஸவின் தாடி அகலமாக, சதுர வடிவத்தில் இருந்தது. இதற்கு மாருக குர்ஞேஸவின் தாடி நீளமாக, குதிரை வாலைப் போல அமைந்திருந்தது.

எல்லோரும் தாடிகளை மழித்து விட வேண்டும் என்று ஜார் திடீரென்று உத்தரவு போட்டார். பீட்டர் பழைய ருஷ்யாவின் வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டிருந்தார். மக்கள் தாடிகளை மழித்துவிட வேண்டும், அந்நிய பாணிகளில் உடையணிய வேண்டும், காபி பானமருந்த வேண்டும், சுருட்டுப் புகைக்க வேண்டும்—இவை அவருடைய உத்தரவுகளில் சிலவாகும்.

புதிய உத்தரவைப் பற்றித் தெரிந்து கொண்டதும் புயிஞேஸவும் குர்ஞேஸவும் பெருமூச்சு விட்டுப் புலம்பிஞர்கள். தங்களுடைய தாடிகளை வெட்டுவதில்லை என்று முடிவு செய்தார்கள். ஆஞல் ஜாரின் பார்வையிலிருந்து தப்புவதற்காக, உடம்பு குணமில்லாதது போல நடிப்பதென்று முடிவு செய்தார்கள்.

ஆஞல் ஜார் இந்த இரண்டு போயார்களையும் நினைவில் வைத்திருந்தார். தன்னை வந்து சந்திக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்.

யார் முதலில் போவதென்று அவர்களிருவரும் விவாதித்தார்கள்.

''நீ முதலில் போ'' என்ருர் புயிஞேஸவ்.

''இல்லை. நீதான் போக வேண்டும்'' என்ருர் குர்ஞேஸவ்.

கடைசியில் அவர்களிருவரும் பகடை உருட்டிஞர்கள். புயிஞேஸவ் தோற்றுவிட்டார். அவர் ஜாரைப் பார்க்கப் போஞர். அங்கே அவர் காலடியில் விழுந்தார்.

''மாட்சிமை பொருந்திய சக்கரவர்த்தி அவர்களே! என்னுடைய கிழட்டுப் பருவத்தில் என்னைக் கேவலப்படுத்தாதீர்கள்.''

இப்படிச் சொல்லிக் கொண்டு அவர் மண்டியிட்டுத் தரையில் நகர்ந்தார். ஜாரின் அருகே போனதும் அவர் கையைத் தொட்டு முத்தமிடுவதற்கு முயற்சி செய்தார்.

''எழுந்து நில்!'' என்று பீட்டர் உத்தரவிட்டார். ''உன்னுடைய மூளை தலையில் இருக்கிறது; தாடியில் இல்லை'' என்று கேலியாகச் சொன்னார்.

ஆனால் புயினோஸவ் கைகளையும் கால்களையும் தரையில் ஊன்றியபடியே மண்டியிட்டவாறு பேசினார். தன்னுடைய வேண்டுகோளைத் தொடர்ந்து வற்புறுத்தினார்.

''சக்கரவர்த்தி அவர்களே! என்னைக் கேவலப்படுத்தாதீர்கள்'' என்று மன்றாடினார்.

பீட்டர் ஆத்திரம் அடைந்தார். தன்னுடைய பணியாட்களைக் கூப்பிட்டார். புயினோஸவின் தாடியைத் தாமதமின்றி மழித்துவிடுமாறு உத்தரவிட்டார்.

புயினோஸவ் கண்ணீர் வடித்தபடியே குர்னோஸவிடம் திரும்பினார். சுத்தமாக மழிக்கப்பட்ட தன்னுடைய முகவாயில் கையை வைத்து ஏதோ புரியாதபடி உளறிப் பேசிக் கொண்டிருந்தார்.

ஜாரைப் பார்ப்பதற்கு குர்னோஸவுக்குப் பயமாக இருந்தது. மென்ஷிகோவிடம் போய் ஆலோசனை கேட்பது; எப்படியாவது எனக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தார்.

''அலெக்ஸாந்தர் டனீலிச்! எனக்கு உதவி செய்யுங்கள். எனக்கு ஆதரவாக ஜாரிடம் ஒரு வார்த்தை சொல்லுங்கள்'' என்றார்.

சக்கரவர்த்தி பீட்டரிடம் இதைப் பற்றி எப்படிப் பேசுவதென்று மென்ஷிகோவ் வெகு நேரம் சிந்தித்தார். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவராக அவரிடம் போனார்.

''சக்கரவர்த்தி அவர்களே! போயார்கள் தாடி வைத்திருப்பதென்றால் வரிகட்ட வேண்டுமென்று உத்தரவு போட்டால் என்ன? அரசாங்க கஜானாவுக்கு அதனால் நன்மைதானே'' என்றார்.

அரசாங்க கஜானாவில் பண இருப்புக் குறைவு என்பது பீட்டருக்குத் தெரியும். அவர் இதைப் பற்றிச் சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு ஒத்துக் கொண்டார்.

குர்னோஸவுக்கு அடக்க முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. உடனே ஓடிப் போய் பணத்தைக் கட்டினார். ''முழுப் பணமும் கட்டப்பட்டு விட்டது'' என்ற வார்த்தைகள் பொறிக்கப்

பட்ட செப்புப் பதக்கத்தை வாங்கிக் கொண்டார். சிலுவையைப் போல அந்தப் பதக்கத்தைக் கழுத்தில் மாட்டிக் கொண்டார். யாராவது அவரை வழியில் நிறுத்தி இன்னும் ஏன் தாடி வைத்துக் கொண்டிருக்கிருய் என்று கேட்டால், அவர் தாடியை மேலே தூக்கிப் பதக்கத்தை எடுத்துக் காட்டுவார். குர்ஞேஸவ் இப்பொழுது அதிக கர்வமாகவும் ஆணவத்தோடும் நடந்து கொண்டார். கர்வபங்கம் விரைவில் ஏற்பட்டது. சரியாக ஒரு வருடம் முடிந்தவுடன் வரிவசூலிப்பவர் அவருடைய மாளிகைக்கு வந்து வரி கட்ட வேண்டும் என்று நினைவுபடுத்திஞர்.

''நீ எதைப் பற்றிப் பேசுகிருய்?'' என்று குர்ஞேஸவ் கோபமாகக் கேட்டார். ''நான் முன்பே கட்டிவிட்டேன்'' என்று சொல்லியபடியே தன்னுடைய பதக்கத்தை எடுத்துக் காட்டிஞர்.

''ஓ! அந்தப் பதக்கம்தானே? அது ஒரு வருடத்துக்குத் தான். மறுபடியும் வரி கட்டி புதிய பதக்கத்தை வாங்கிக் கொள்ள வேண்டும்'' என்ருர் வரி வசூலிப்பவர்.

குர்ஞேஸவ் என்ன செய்ய முடியும்? அவர் மறுபடியும் வரி கட்டிவிட்டுப் புதுப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இன்ஞெரு வருடம் முடிந்ததும் இது போல மறுபடியும் நடைபெற்றது. குர்ஞேஸவ் இப்பொழுது சிந்திக்க ஆரம்பித்தார். இதுவரை தாடியிஞல் தனக்கு ஏற்பட்டிருக்கும் செலவைக் கணக்கிட்டார். இனி ஏற்படப்போகும் செலவை மதிப்பிட்டார். தாடிக்காகக் கட்டும் வரிப் பணமே தன்னுடைய செல்வம் முழுவதையும் சீக்கிரமாக அழித்துவிடும் என்று தெரியவந்தது. பிறகு தாடிதான் மிஞ்சும்; வேறு ஒன்றும் இருக்காது.

வரி வசூலிப்பவர் மூன்ருவது தடவை அவருடைய மாளிகைக்கு வந்தபொழுது அங்கே குர்ஞேஸவ் தாடி இல்லாமல் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். குர்ஞேஸவ் நெருப்புப் பொறி பறக்கும் கண்களோடு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மறுநாள் மென்ஷிகோவ் ஜாரிடம் இந்த நிகழ்ச்சியை வர்ணித்தார். பீட்டர் பலமாகச் சிரித்தார்.

''முட்டாள்கள்! அவர்களுக்கு வேண்டியதுதான். இந்தப் புதிய வாழ்க்கைக்கு அவர்கள் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுடைய புத்திசாலித்தனமான யோசனையிஞல் நமக்கு நிறையப் பணம் கிடைத்திருக்கிறது. ஒரு படைப்பிரிவு முழுவதுக்குமே உடைகள் கொடுப்பதற்குத் தேவையான பணத்தைக் குர்ஞேஸவின் தாடியே கொடுத்திருக்கிறது.''

வெளி நாட்டில் இளம் போயர்கள் எதைக் கற்றுக் கொண்டார்கள்?

புயிஜோஸவ், குர்ஜோஸவ் ஆகியோரது உள்ளங்களில் இத்தகைய அவமதிப்புக்கள் பசுமையாக இருக்கும் பொழுதே, திடீரென்று புதிய அவமதிப்புக்கள் வந்தன. போயார்களின் ஆண் மக்களில் அறிவிற் சிறந்த ஐம்பது பேர்களைப் பிடித்து வெளிநாட்டில் படிப்பதற்காக அனுப்ப வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. புயிஜோஸவும் குர்ஜோஸவும் தங்களுடைய பையன்களைப் பிரிந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

போயார்களின் மாளிகைகளில் அழுகையும் புலம்பலும் கேட்டன. தாதிகள் வேகமாக ஓடினார்கள். எங்கும் ஒரே பரபரப்பு. பிரிவுகள் ஆனந்தமாக இருக்கவில்லை, வேதனையாக இருந்தன. ஆம், பிரிவு அவர்களுக்கு மரணத்தைப் போலக் கொடியதாக இருந்தது.

புயிஜோஸவின் மனைவிக்குத் தன்னுடைய உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''என்னுடைய ஒரே மகன். அவனை எங்கோ வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டுமாம்; ஜெர்மானியர்களின் பிடியில் அவன் அகப்பட வேண்டுமா? நான் இதை ஒத்துக் கொள்ள மாட்டேன்'' என்று கத்தினாள். ''நான் அவனை அனுப்ப மாட்டேன்.''

''வாயை மூடு'' என்று புயிஜோஸவ் தன் மனைவியைத் திட்டினார். ''ஜார் இப்படி உத்தரவு போட்டிருக்கிறார். நீ என்ன செய்யப் போகிறாய்? சைபீரியாவுக்குப் போகிறாயா? அல்லது தூக்குமேடை ஏறுகிறாயா?''

குர்ஜோஸவ் மாளிகையிலும் இதே மாதிரியான கலவரம் ஏற்பட்டிருந்தது. வேறு வழியில்லாமல் குர்ஜோஸவும் தன்னுடைய மனைவியை அதட்டினார்.

''பேனாக் கத்தியைக் கொண்டு மரத்தை வெட்ட முடியுமா? ஜாரிடமிருந்து நீ தப்ப முடியுமா? என்ன செய்வது. பொறுமையாக இரு'' என்றார்.

ஒரு வருடத்துக்குப் பிறகு இளம் போயார்கள் இருவரும் ஊருக்குத் திரும்பினார்கள். சக்கரவர்த்தியை அரண்மனையில் சந்திக்குமாறு அவர்களுக்கு ஆணையிடப்பட்டது. அரசாங்க வேலைக்குரிய நியமன உத்தரவை சக்கரவர்த்தியிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

''புயிஜோஸவ்! வேறு நாட்டுக்குப் போய் வசிப்பது எப்படி இருந்தது? சொல்'' என்று பீட்டர் கேட்டார்.

''மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி அவர்களே! அது மிக நன்றாக இருந்தது'' என்று இளம் புயினேஸவ் பதிலளித்தான். ''அங்கேயுள்ள மக்கள் அன்பாக, நட்பாக, விருந்தோம்புதலோடு இருந்தார்கள். இங்கே நம் நாட்டில் விவசாயிகள் ஒருவருடைய கழுத்தை மற்றொருவர் நெறிப்பதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறார்களே! அப்படி அங்கே எதுவுமில்லை.''

''வேறு என்ன கற்றுக் கொண்டாய்?''

''சக்கரவர்த்தி அவர்களே! நிறையக் கற்றுக் கொண்டேன். அப்பா என்று சொல்வதற்குப் பதிலாக 'வடேர்' என்றும் அம்மாவுக்குப் பதிலாக 'முட்டேர்' என்றும் கற்றுக் கொண்டேன்.''

''இதைத் தவிர என்ன கற்றுக் கொண்டாய்?''

''இரண்டு தடவை குனிந்து வணங்குவது, மூன்று தடவை வணங்குவது ஆகியவற்றை முறைப்படி செய்யக் கற்றுக் கொண்டேன். நடனமாடுவதற்கும், நாகரிகமான விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கும் கற்றுக் கொண்டேன்.''

''அடேயப்பா! நிறையக் கற்றுக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறதே'' என்றார் பீட்டர். ''நீ என்ன கற்றுக் கொண்டாய்?'' பீட்டர் இளம் குர்னேஸவ் பக்கமாகத் திரும்பிக் கேட்டார்.

''எப்படிச் சொல்வது, ஐயா! நீங்கள் கேள்வி கேளுங்கள்.''

''சரி. குர்னேஸவ்! அரணமைத்தல் என்றால் என்ன?''

''ஐயா! அரணமைத்தல் என்பது இராணுவ விஞ்ஞானத்தில் ஒரு பிரிவு. எதிரியிடமிருந்து தன்னுடைய படைகளைத் தற்காத்துக் கொள்வது அதன் நோக்கம்.''

''சரியாகச் சொன்னாய்'' என்று பீட்டர் பாராட்டினார். ''நீர்வழிப் பயணப் படம் என்றால் என்ன?''

''ஐயா! நீர்வழிப் பயணப் படம் என்பது கடல் அல்லது நதியைப் பற்றிய விளக்க வர்ணனை. மணற்கரையையும் தாழ்வான பகுதிகளையும், நீர்ச் சுழல், நீருக்கடியில் ஆழத்தில் அளவுக்கருவிகள் மூலம் எடுக்கப்பட்ட குறிப்புகள் முதலியவை இதில் அடங்கும். ஒரு கப்பலின் பயணத்துக்குத் தடையேற்படுத்தக் கூடிய எல்லாத் தகவல்களையும் அது எடுத்துக் காட்டும்.''

''சபாஷ். வேறு என்ன கற்றுக் கொண்டாய்?''

''பல விஷயங்களையும் தெரிந்து கொண்டேன், ஐயா!'' என்று இளம் குர்னேஸவ் பதிலளித்தான். ''உதாரணமாக, கப்பல் கட்டுவது, தாதுப் பொருளைத் தோண்டியெடுப்பது எப்படி, அங்கே மக்களுக்கு எப்படி வைத்தியம் செய்கிறார்

கள் என்பவற்றைப் பற்றித் தெரிந்து கொண்டேன். அந்த ஜெர்மானியர்களும் டச்சுக்காரர்களும் கெட்டிக்காரர்கள். அவர்களிடம் அறிவும் திறமையும் இருக்கிறது. ஆனல் அதற்காக நம் நாட்டு மக்களைப் பற்றி இழிவாக, குறைவாக நினைக்க வேண்டியது அவசியமல்ல என்று கருதுகிறேன். நம்முடைய நாடு ஒன்றும் மோசமல்ல; நம்முடைய மக்களும் அவர்களைப் போல திறமை உடையவர்கள் தான். எதிலும் நாம் அவர்களுக்குக் குறைந்தவர்களல்ல.''

''நீ கெட்டிக்காரன்'' என்று பீட்டர் வியந்து பாராட்டினர். ''என்னுடைய ஆசைகளை நீ நிறைவேற்றிவிட்டாய். என் இதயம் பூரிக்கிறது'' என்று சொல்லிவிட்டு பீட்டர் இளம் குர்னேஸவை முத்தமிட்டார். பிறகு புயினேஸவ் பக்கம் திரும்பினர். ''வெளிநாட்டுக்குப் போகும் சமயத்திலேயே நீ முட்டாளாக இருந்திருக்க வேண்டும். அங்கே போன பிறகும் நீ மாறவில்லை என்று தெரிகிறது. இங்கே நிற்காதே, போ'' என்றார்.

ஆகவே புயினேஸவ் வாழ்க்கையில் முன்னேற்றமடையவில்லை. ஆனல் குர்னேஸவ் வெகு சீக்கிரத்திலேயே அரசாங்க வட்டாரங்களில் முக்கியமான இடத்தைப் பெற்றார்.

அ, ஆ, இ, ஈ...

பீட்டர் காலத்திய ருஷ்யாவில் வெகு சிலருக்கு மட்டுமே எழுதப் படிக்கத் தெரியும். சில கிராமங்களில், மாதாகோவில்களில் அந்தப் பகுதியைச் சேர்ந்த குழந்தைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டது. எங்காவது ஒரு பணக்காரருடைய வீட்டில் அதற்கென்றே தனியாக ஒரு ஆசிரியரை வேலைக்கு அமர்த்திக் கொண்டார்கள். அங்கே கல்வி கற்பதற்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் இவ்வளவே.

பீட்டர் காலத்தில் பள்ளிக்கூட அமைப்பு முறையை வளர்ப்பதற்கு ஓரளவு முயற்சி செய்யப்பட்டது. இந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் அரிச்சுவடி, கணிதம், பூகோளம் ஆகியவை கற்றுக் கொடுக்கப்பட்டன.

மாஸ்கோவுக்கும் துலாவுக்கும் இடையிலிருந்த ஸெர்ப்புகோவ் என்ற நகரத்தில் இத்தகைய பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கென்று ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆசிரியர் பள்ளிக்கூடத்துக்குச் சென்றார். மாணவர்கள் வருவார்கள் என்று காத்திருந்தார். ஒரு நாள், இரண்டு

நாட்கள், மூன்று நாட்கள் முடிந்தன. மாணவர்கள் வரு வார்கள் என்ற அறிகுறியே இல்லை. அதற்குப் பிறகு அவர் என்ன விஷயம் என்று தெரிந்து கொள்வதற்காக அந்த நகரத்திலிருந்த வீடுகளுக்குச் சென்றார். ஒரு வீட்டுக்குள் நுழைந்து அந்தக் குடும்பத் தலைவரைப் பார்க்க வேண்டும் என்றார். அவர் ஒரு வர்த்தகர்.

''உங்கள் பையன் பள்ளிக்கூடத்துக்கு வரவில்லையே. ஏன்?'' என்று கேட்டார்.

''அவனுக்குப் படிப்பு அவசியமில்லை'' என்று பதிலளித்தார் அந்த வர்த்தகர். ''நாங்கள் படிப்பு இல்லாமலேயே முன்னுக்கு வந்துவிட்டோம். அவனும் அப்படியே வளரட்டும். அறிவு தொல்லைகளைத்தான் கொடுக்கும்.''

ஆசிரியர் இரண்டாவதாக ஒரு செருப்புத் தொழிலாளியின் வீட்டுக்குப் போனார்.

''எங்களிடம் படிப்பதற்குத் தேவையான அறிவு இருப்பதாக நீங்கள் உண்மையாகவே நினைக்கிறீர்களா?'' என்று அந்த செருப்புத் தொழிலாளி கேட்டான். ''செருப்புத் தைப்பதுதான் எங்களுடைய தொழில். பொய்களைக் கேட்டுக் கொண்டு காலத்தை வீணுக்குவது அவசியமா?''

அதன் பிறகு ஆசிரியர் அந்த நகரத்தின் மேயரைச் சந்தித்தார். தனக்கு ஏற்பட்டிருக்கும் சிரமங்களை எடுத்துக் கூறினார். ஆனால் அந்த மேயர் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்வதைப் போல தலையை ஆட்டினார்.

''நான் என்ன செய்ய முடியும்? அது பெற்றோர்களைப் பொறுத்த விஷயம். சிலர் கல்வி அவசியம் என்று நினைக்கிறார்கள். மற்றவர்கள் அது அவசியமில்லை என்று நினைக்கிறார்கள்'' என்றார்.

ஆசிரியர் மேயரை உற்றுப் பார்த்தார். அவரிடமிருந்து தனக்கு எத்தகைய உதவியும் கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டார். பிறகு கோபமாகப் பேசினார்.

''இதுதான் நிலைமை என்றால் நான் ஜாருக்கே நேரடியாக எழுதிவிடுகிறேன்'' என்றார்.

இப்பொழுது மேயர் ஆசிரியரைப் பார்த்தார். ஆசிரியரின் முகத்தில் உறுதி தென்பட்டது. அந்த ஆசிரியர் சொன்னதைச் செய்யக் கூடியவர் என்பதை மேயர் புரிந்து கொண்டார்.

''சரி, சரி'' என்றார் மேயர். ''அவசரப்பட வேண்டாம். பள்ளிக்கூடத்துக்குத் திரும்பிப் போங்கள்.''

ஆசிரியர் பள்ளிக்கூடத்துக்குத் திரும்பிக் காத்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்துக்குப் பிறகு வெளியே காலடிச்

சத்தம் கேட்டது. அவர் சன்னல் வழியாக வெளியே பார்த்தார். ஆயுதங்களைத் தாங்கிய படைவீரர்கள் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு வாரம் இப்படி நடந்தது. பிறகு நிலைமை சீர்திருந்தியது. பெற்றோர்கள் இந்த நிலைமையை ஏற்றுக் கொண்டு சமாதானமடைந்திருக்க வேண்டும். அதற்குப்பிறகு குழந்தைகள் தாங்களாகவே பள்ளிக்கூடத்துக்கு வர ஆரம்பித்தார்கள்.

ஆசிரியர் குழந்தைகளுக்கு அரிச்சுவடி சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார்.

''அ'' என்றார் ஆசிரியர்.

''அ'' என்று வகுப்பிலிருந்த குழந்தைகள் ஒரே குரலில் சொன்னார்கள்.

''ஆ'' என்றார் ஆசிரியர்.

''ஆ'' என்று குழந்தைகள் திருப்பிச் சொன்னார்கள்.

''இ...''

அதன் பிறகு அவர்களுக்கு கணிதம் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

''ஒன்றும் ஒன்றும் இரண்டு'' என்றார் ஆசிரியர்.

''ஒன்றும் ஒன்றும் இரண்டு'' என்று மாணவர்கள் திருப்பிச் சொன்னார்கள்.

அதற்குப் பிறகு அவர் குழந்தைகளுக்கு எழுதுவதற்கும் கூட்டல் செய்யவும் கற்றுக் கொடுத்தார். காஸ்பியன் கடல், கருங்கடல், பால்டிக் கடல் முதலியன எங்கே இருக்கின்றன என்று சொல்லிக் கொடுத்தார். அவர்கள் ஏராளமான புதிய விவரங்களைத் தெரிந்து கொண்டார்கள்.

பீட்டர் துலாவுக்குப் போகும் பொழுது ஸெர்ப்புகோவ் வழியாகப் போக நேர்ந்தது. அவர் இரவு நேரத்தில் அந்த நகரத்தில் தங்கினார். மறுநாள் காலையில் பள்ளிக்கூடத்தைப் போய்ப் பார்க்க விரும்பினார். அந்த நகரத்திலிருந்த பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப விருப்பமில்லாதிருந்ததைப் பற்றி அவர் கேள்விப்பட்டிருந்தார். அது உண்மையா என்று பார்க்க விரும்பினார். பீட்டர் வகுப்புக்குள் நுழைந்தார். அங்கே வகுப்பு முழுவதிலும் குழந்தைகள் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தார். அவருக்கே இது ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு அதிகமான குழந்தைகளை எப்படித் திரட்டினீர்கள் என்று ஆசிரியரைக் கேட்டார்.

ஆசிரியர் நடந்த விவரங்களை முழுமையாகச் சொன்னார்.

''இது உண்மையாகவே பெரிய விஷயம்'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் பீட்டர். ''அந்த மேயர் செய்தது

சரிதான். அது தான் சரியான முறை. மற்ற பகுதிகளிலும் இந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்று உத்தரவு போடலாம் என்று நினைக்கிறேன். நம் மக்கள் உறுதியில்லாத வர்கள்; அவர்களுக்கு எது நல்லது என்பதைக்கூட அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அரசாங்க விவகாரங்களைப் பற்றி அவர்கள் சிறிதும் அக்கரை காட்டுவதில்லை. எல்லோரும் படிக்க வேண்டும் என்று நாம் ஓயாது சொல்கிறோம். ஆனால் அவர்கள் சிறிதும் அக்கறை காட்டுவதில்லை. படித்தவர்கள் போதுமான அளவுக்கு இல்லையென்றால் அது ருஷ்யாவுக்கு ஆபத்தாக முடியும்'' என்றார்.

ருஷ்யாவின் முதல் பத்திரிகை

''நமக்கென்று சொந்தமாக ஒரு பத்திரிகை வேண்டும். இனியும் அப்படிப்பட்ட பத்திரிகை இல்லாமல் இருக்கக் கூடாது'' என்று பீட்டர் தன்னுடைய நண்பர்களிடம் அடிக்கடி சொல்வதுண்டு. ''வர்த்தகர், போயார், நகரவாசி — எல்லோருக்குமே அது பயனுள்ளதாக இருக்கும்.''

ஒரு சமயத்தில் பீட்டர் அரசவையிலிருந்து மறைந்து விட்டார். மாலைப் பொழுதான பிறகும் கூட அவர் வரவில்லை. அவருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று பலர் அஞ்சிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். உண்மை என்னவென்றால் அதே சமயத்தில் பீட்டர் ஃபியோடர் போலி கார்ப்பவ் என்ற அச்சுத் தொழிலாளியின் உதவியோடு ருஷ்ய மொழிப் பத்திரிகையின் முதல் வெளியீட்டுக்குச் செய்திகளைப் பொறுக்கியெடுத்துக் கொண்டிருந்தார்.

போலிகார்ப்பவ் நல்ல உயரமானவர்; ஒல்லியான உடல். அவருடைய மூக்குக் கண்ணாடி மூக்கின் நுனியில் தான் எப் போதும் இருக்கும். அவர் ஜாருக்கு முன்பாகப் பணிவோடு நின்று கொண்டிருந்தார். அவர் ஒரு போர்வீரரைப் போல நின்று கொண்டு செய்திகளை வாசித்துக் கொண் டிருந்தார்.

''ஐயா! யூராலில் உள்ள வெர்க்கோடுர்ஸ்க்கிலிருந்து இந்தச் செய்தி வந்திருக்கிறது. அங்கே அதிகமான பீரங்கி கள் தயாரிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கிறது.''

''அதைப் போடுவோம்'' என்றார் பீட்டர். ''நார்வாவில் ஒரு சண்டையில் தோற்றுவிட்டால் அது ஒன்றும் அவ்வளவு பெரிய ஆபத்து அல்ல என்று எல்லோருக்கும் தெரிய வேண்

டும். நாம் முயற்சி செய்தால் இன்னும் எவ்வளவோ செய்ய முடியும்.''

''இன்னொரு செய்தி, ஐயா!'' என்றார் போலிகார்ப்பவ் தொடர்ந்து வாசித்தார். ''மாதாகோவில் மணிகளை உருக்கிய தன் மூலம் கிடைத்த இரும்பைக் கொண்டு மாஸ்கோவில் நானூறு பீரங்கிகள் செய்யப்பட்டன என்று தெரிவிக்கிறது.''

''அதையும் போட்டுவிடுங்கள்'' என்றார் பீட்டர். ''மணிகளை எடுத்துக் கொண்டு போய் என்ன செய்கிறோம் என்பதை மக்கள் தெரிந்து கொள்ளட்டும்.''

''டெமிடோவின் நெவ்யான்ஸ்கி தொழிற் சாலையிலிருந்து இந்தச் செய்தி வந்திருக்கிறது. தொழிற்சாலையில் வேலை செய்யும் விவசாயிகள் கலகம் செய்தார்களென்றும் அங்கே போயார்களுக்கும் வர்த்தகர்களுக்கும் நிம்மதி இல்லையென்றும் எழுதப்பட்டிருக்கிறது''.

''அதைப் போட வேண்டாம்'' என்றார் பீட்டர். ''நம்முடைய துருப்புகளை அனுப்பி அந்த விவசாயிகளைக் கடுமையாக தண்டிக்கச் சொல்வோம். இதை வெளியிடுவதைக் காட்டிலும் அதுதான் நல்லது.''

''ஐயா! இது கஸானிலிருந்து வந்திருக்கும் செய்தி. அங்கே பூமிக்கடியில் ஏராளமான செம்பும் எண்ணெயும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.''

''அதையும் போடுங்கள். ருஷ்யா இயற்கைச் செல்வங்கள் அதிகமாக உள்ள நாடு; அந்தச் செல்வங்களின் அளவு என்ன என்று கூட இது வரை கணக்கிடப்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரியட்டும்.''

பீட்டர் உட்கார்ந்து கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு அந்தக் காகிதங்களைக் கையிலெடுத்தார். பத்திரிகையில் சேர்க்கப்பட வேண்டிய செய்திகளுக்கு முன்பாக சிகப்பு நிறத்தில் குறுக்குக் கோடு போட்டார். மற்றவைகளைத் தனியே வைத்தார்.

போலிகார்ப்பவ் மேலும் மேலும் செய்திகளை வாசித்துக் கொண்டிருந்தார். இந்தியாவின் அரசர் மாஸ்கோவிலிருக்கும் ஜாருக்கு ஒரு யானையை அன்பளிப்பாக அனுப்பியிருக்கிறார்; ஒரு மாதத்தில் மட்டும் மாஸ்கோவில் 386 குழந்தைகள் பிறந்தது பதிவு செய்யப்பட்டிருக்கிறது — இன்னும் இதைப் போன்ற பல செய்திகளையும் வாசித்தார்.

''சரி. பள்ளிக் கூடங்களைப் பற்றிச் செய்திகளைப் போடு அதைப் பற்றிப் பாராட்டி எழுது. அப்பொழுதுதான் அவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பற்றி எல்லோரும் தெரிந்து கொள்வார்கள்'' என்றார் பீட்டர்.

இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு அந்தப் பத்திரிகை அச்சிடப்பட்டது. அதற்கு வேடமோஸ்தி (''பதிவுக் குறிப்பு'') என்று பெயர் சூட்டப்பட்டது. அது சிறிய பத்திரிகை தான். பொடி எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்தது. ஓரங்களில் இடம் விடப்படவில்லை. அதைப் படிப்பது கஷ்டமாக இருந்தது. அதைப் பழுப்பு நிறத் தாளில் அச்சிட்டிருந் தார்கள். மொத்தமாகப் பார்க்கும் பொழுது அது ஒன்றும் பெரிய சாதனையல்ல. ஆனால் பீட்டருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால் அதுதான் ருஷ்யாவில் வெளியிடப்படும் முதல் பத்திரிகை. அவர் பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டு அரசவைக்குள் ஓடி வந்தார். தன் கண்ணில் பட்டவர்களிடமெல்லாம் அதைக் காட்டினார்.

''இங்கே பாருங்கள். நம்முடைய சொந்தப் பத்திரிகை. ருஷ்யாவில் வெளியிடப்படும் முதல் பத்திரிகை.''

இளவரசர் கோலோவின் பீட்டருக்கு எதிரே வந்தார். அவர் எல்லா விஷயங்களையும் அறிந்தவர்; வெளி நாடுகளுக்குப் போனவர்; பல மொழிகளைக் கற்றவர் என்று பாராட்டப்படுபவர்.

கோலோவின் பத்திரிகையை வாங்கிப் பார்த்தார். உதட்டைப் பிதுக்கிக் கொண்டு பேசினார்.

''ஐயா! இதைப் பத்திரிகை என்று சொல்கிறீர்கள்? ஹாம்பர்க் என்ற ஜெர்மானிய நகரத்துக்கு நான் போயிருந் தேன். அங்கேதான் உண்மையான பத்திரிகைகளைப் பார்க்க முடியும்'' என்றார்.

பீட்டரின் முகம் வாடிவிட்டது. அவருக்குக் கோபமும் சிடுசிடுப்பும் ஏற்பட்டது.

''நீ சரியான ஆள். ஒரு ஆண் கழுதையைப் போன்ற கெட்டிக்காரன். உனக்கு இளவரசன் பட்டம் ஒரு கேடு. 'ஹாம்பர்க் என்ற ஜெர்மானிய நகரம்' என்று நீ சொல்வதில் ஆச்சரியம் ஏது? அவர்கள் பத்திரிகை உயர்வானது என்று எனக்கு உன்னைக் காட்டிலும் நன்றாகத் தெரியும். ஆனால் அது நம்முடையது அல்லவே. அவர்கள் முதலில் பத்திரிகை வெளியிட்ட பொழுது இப்படித்தான் சாதாரணமாக வெளியிட்டிருப்பார்கள். அது நிச்சயம். நமக்கு அனுபவம் வேண்டும். அதற்குச் சிறிது அவகாசம் தேவை. ஆரம்பத்தில் சாதாரணமானவற்றைக் கொண்டு திருப்தியடைவோம். அதன் பிறகு சிறப்பானவற்றைச் செய்வோம்'' என்றார்.

டனீலா

டனீலா அறிவுள்ள விவசாயி என்பது அவனைச் சுற்றி பல மைல் தூரத்துக்குப் பிரசித்தமாக இருந்தது. உலகத்தின் எல்லாப் பிரச்சினைகளையும் பற்றி அவன் தனக்கென்று சொந்தக் கருத்துக்கள் வைத்திருந்தான்.

நார்வா தோல்விக்குப் பிறகு அந்த கிராமத்தில் ஸ்வீடிஷ் காரர்களையும் அரசர் கார்லேயும் ஜார் பீட்டரையும் பொதுவாக இராணுவ விவகாரங்களையும் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

''ஸ்வீடிஷ்காரர்கள் அதிகமான பலமுடையவர்கள்'' என்று விவசாயிகள் கூறினர்கள். ''அவர்களோடு நாம் சண்டை போட முடியாது. அதோடு நமக்குக் கடல் எதற்காக? அது இல்லாமல் இவ்வளவு காலம் இருந்து விட்டோம். இப்பொழுதும் அது நமக்குத் தேவையில்லை.''

''நீங்கள் சொல்வது அத்தனையும் தவறு'' என்றார் டனீலா. ''ஸ்வீடிஷ்காரர்கள் ஒன்றும் அதிகமான பலத்தைக் கொண்டவர்களல்ல. நாம்தான் பலவீனமாக இருக்கிறோம். கடலைப் பற்றிய விஷயத்தில், நீங்கள் புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள். கடல் வழி இல்லா விட்டால் ருஷ்யாவுக்கு முன்னேற்றம் கிடையாது. அதனால் நமக்கு அதிகமான பலன்கள் உண்டு. நாம் மீன் பிடிக்க, வர்த்தகம் செய்ய அது அவசியம்.''

மாதாகோவில் மணிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டபொழுது, சில நாட்கள் வரை கிராமப் பகுதிகளில் பரபரப்பாக இருந்தது.

''உலகம் அழியப் போகிறது'' என்று அந்த கிராமத்தின் மதகுரு தலை முடியைப் பிய்த்துக் கொண்டு கத்தினர்.

பெண்கள் சிலுவைக் குறிபோட்டுக் கொண்டு அழுதார்கள். விவசாயிகள் முகங்களில் அதிகமான கவலைக்குறிகள் தென்பட்டன. எல்லோருமே அழிவுவரப் போகிறதென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் மற்ற விஷயங்களைப் போலவே இதைப் பற்றியும் டனீலாவுக்குச் சொந்தக் கருத்து இருந்தது.

''அது சரிதான்'' என்றார். ''நம்மைக் காட்டிலும் அரசாங்கத்துக்கு இந்த மணிகள் தேவைப்படுகின்றன. இதற்காகக் கடவுள் நம்மை தண்டிக்க மாட்டார்.''

அவர் கடவுளை நிந்தனை செய்வதாக மதகுரு கருதினர். அன்று முதல் அவரைப் பற்றிக் கறுவிக் கொண்டிருந்தார்.

இதற்கிடையில் பீட்டர் புது வரிகளை அறிவித்தார். விவசாயிகள் அழுது கொண்டே தங்களுடைய கடைசி உடைமைகளையும் வரிவசூலிப்பவரிடம் கொடுத்தார்கள். தங்கள் வயிற்றை மேலும் இறுக்கிக் கொண்டார்கள்.

''இதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?'' என்று டனீலாவைக் கேட்டார்கள். ''புதிய உத்தரவு தெரியுமல்லவா? இன்னும் இவற்றை ஆதரிக்கத் தயாராக இருக்கிறீர்களா?''

''இல்லை'' என்றார் டனீலா. ''ஜாருக்கும் எனக்கும் இதைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டு'' என்றார்.

''அடி சக்கை!'' என்று விவசாயிகள் டனீலாவை ஏளனம் செய்தார்கள். ''ஜாரும் அவருமாம். அவருக்கு ஒரு நண்பர் கிடைத்து விட்டார். ஜார் இவருடைய முகத்தைக் கூடப் பார்க்கப் போவதில்லை.''

''ஜார் என்ன செய்வார் என்பது முக்கியமல்ல. நமக்கு எது பிடித்திருக்கிறதோ, அதைப் பற்றி நினைப்பது தவறல்லவே'' என்று டனீலா பதிலளித்தார். ''பீட்டர் நாட்டுக்குப் புகழ் சேர்த்திருக்கிறார். அதற்காக நாம் அவருக்கு நன்றி கூறுவோம். ஆனால் விவசாயியின் கடைசி ரொட்டியை அவனிடமிருந்து பறிப்பதற்காக அவர் என்றைக்காவது ஒரு நாள் பதில் சொல்ல வேண்டியிருக்கும்'' என்றார்.

டனீலா சொல்வதை ஏற்றுக் கொள்வது போல விவசாயிகள் தலையை அசைத்தார்கள். எனினும் அங்கே ஒரு விவசாயி திடீரென்று கேட்டான்:

''நீங்கள் இதை ஜாரிடம் சொன்னால் என்ன?''

''நான் அவரிடம் சொல்வேன்'' என்றார் டனீலா.

டனீலா ஜாரிடம் இதைச் சொன்னார். அந்த சம்பவம் உடனடியாக நடைபெறவில்லை. அது பின்வரும் முறையில் நடைபெற்றது.

டனீலாவின் பேச்சுக்களைப் பற்றி யாரோ அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டார்கள். ஒரு வேளை மதகுரு சொல்லியிருக்கலாம். அல்லது வேறு யாரோ சொல்லியிருக்கலாம். ஒரு நாள் படைவீரர்கள் கிராமத்துக்குள் வந்தார்கள். டனீலாவைக் கட்டி மாஸ்கோவுக்கு இழுத்துக் கொண்டு போனார்கள்; அதிகாரிகளிடம், இளவரசர் ரமொடானொவ்ஸ்கியிடமே கொண்டு போனார்கள்.

அவர்கள் டனீலாவின் கைகளை முறுக்கினார்கள். சித்திரவதைக் கருவியில் வைத்து அவரைச் சித்திரவதை செய்யத் தொடங்கினார்கள்.

''ஜாரைப் பற்றி இப்படியெல்லாம் பேசுவதற்கு உனக்கு சொல்லிக் கொடுத்தது யார்?'' என்று இளவரசர் ரமொடானொவ்ஸ்கி டனீலாவைக் கேட்டார்.

''நான் எந்தக் காலத்திலோ சொன்னேன். அந்தப் பேச்சு காற்ருேடு போச்சு'' என்ருர் டனீலா.

''என்ன தைரியம்!'' என்று கோபமாகக் கத்திஞர் ரமொடாஞெவ்ஸ்கி. ''இப்படி பதில் சொன்னதற்கு உன்னை உயிரோடு பொசுக்க வேண்டும், மக்களைத் தூண்டும் போக்கிரியே!'' என்ருர்.

''உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்'' என்ருர் டனீலா. ''சாவு எப்படி வந்தாலென்ன? எல்லாம் ஒன்றுதான். போயார்களுக்காக உழைத்துச் சாவதைக் காட்டிலும் நெருப்பிலே பொசுங்கிச் சாவது மேலானது.''

இளவரசர் ரமொடாஞெவ்ஸ்கிக்குக் கடுமையான கோபமேற்பட்டது. பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கையிலே எடுத்தார். டனீலாவின் உடலில் ஓங்கி ஓங்கி அடித்தார். டனீலாவுக்கு மயக்கம் வந்தது. காற்றிலே புர்ச் மரம் சாய்வதைப் போலக் குனிந்தார்.

இந்த சமயத்தில் பீட்டர் உள்ளே நுழைந்தார்.

''இவன் யார்? சித்திரவதைக் கருவியின் மீது எதற்காக வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''அவன் ஒரு கலகக்காரன்'' என்று இளவரசர் ரமொடாஞெவ்ஸ்கி பதிலளித்தார். ''அரசாங்க அதிகாரிகளைப் பற்றிப் பொய்யான வதந்திகளைப் பரப்பியிருக்கிருன்.''

பீட்டர் டனீலாவை நெருங்கிஞர். டனீலாவின் கண்கள் ஒரு கீற்று மட்டுமே திறந்திருந்தன; அவருக்கு முன்ஞல் ஜார் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். தன்னுடைய உடலில் எஞ்சியிருந்த பலத்தைத் திரட்டிக் கொண்டு டனீலா பேசிஞர்.

''ஐயா! நீங்கள் மாபெரும் காரியங்களை மேற்கொண்டிருக்கிறீர்கள். ஆஞல் சாதாரண மனிதன் தன்னுடைய கடைசிப் பிடியில் ஊசலாடிக் கொண்டிருக்கிருன். நெடுஞ்சாலைக் கொள்ளைக்காரனைப் போல நீங்கள் மக்களிடமிருந்து எல்லாவற்றையும் கசக்கிப் பிழிந்து விட்டீர்கள். ஐயா! ஒன்றை மட்டும் மறக்க வேண்டாம். இத்தகைய நடவடிக்கைகளைப் பற்றி மக்கள் நல்ல வார்த்தைகளைச் சொல்ல மாட்டார்கள்.''

டனீலாவின் கண்கள் மறுபடியும் மூடிக் கொண்டன; தலை அவருடைய மார்பின் மீது விழுந்தது. ஆஞல் பீட்டர் தனக்குள் ஏதோ ஒன்று வெடித்து விட்டதைப் போல நடந்து கொண்டார்.

''அவனைத் தூக்கிலே போடுங்கள்!'' என்று தன்னை விஷப்பூச்சி கடித்துவிட்டதைப் போலச் சீறிஞர். உடனே தரையை ஓங்கி மிதித்தார். அந்த இடத்தை விட்டு வெளியேறிஞர்.

கடல் மீது கட்டப்பட்ட நகரம்

மாபெரும் பீட்டர் ஸ்வீடிஷ்காரர்களுக்கு எதிராக ஒரு புது யுத்தத்தை சீக்கிரமாகத் தொடங்கினர். இந்த யுத்தத்தில் ருஷ்யத் துருப்புகள் ஆரம்ப வெற்றிகளுக்குப் பிறகு நேவா நதியின் முகத்துவாரத்திலுள்ள பின்லாந்து வளைகுடாவை அடைந்தன.

நேவா நதியின் கரைகள் பாலைவனமாக இருந்தன. அங்கே காடுகளும் சதுப்பு நிலமும் புதர்க்காடுகளும் இருந்தன. அதற்குள் போவது மிகவும் கஷ்டமானதாகும். அங்கே முகாம் அமைப்பதற்கு நல்ல இடம் இல்லை. எனினும் அது ஒரு முக்கியமான இடம்; அது கடலுக்கு எதிரே அமைந்திருந்தது.

சில நாட்களுக்குப் பிறகு பீட்டர் மென்ஷிகோவைக் கூட்டிக்கொண்டு ஒரு படகில் கடலை நோக்கிச் சென்றார். நேவா நதி கடலோடு சேருகின்ற இடத்தில் ஒரு தீவு இருந்தது. பீட்டர் படகை விட்டுக் கீழே இறங்கி அந்த தீவைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். அது நீளமான தீவு; உள்ளங்கையைப் போல சமதளமாக இருந்தது. அங்கங்கே புதர்கள் குடுமியைப் போலத் தரையிலிருந்து நீட்டிக் கொண்டிருந்தன. காலை எங்கே வைத்தாலும் பாசியும் ஈரமும் ஒட்டிக் கொண்டது.

''ஐயா! இது என்ன இவ்வளவு மோசமான இடமாக இருக்கிறதே'' என்றார் மென்ஷிகோவ்.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்? இது எல்லா இடங்களையும் போலத்தானே இருக்கிறது'' என்று பீட்டர் பதிலளித்தார். ''மேலும் முக்கியமான அம்சம் என்னவென்றால், இங்கே கடல் இருக்கிறது.''

அவர்கள் மேலும் நடந்து சென்றார்கள். திடீரென்று மென்ஷிகோவ் சதுப்பு நிலத்தில் தன்னுடைய முழங்கால் வரைக்கும் அமுங்கிவிட்டார். அவர் கைகளை ஊன்றிக் கால்களை வெளியே இழுத்தார்; மிகவும் கஷ்டப்பட்டுத் தவழ்ந்து ஈரமில்லாத பூமிக்கு வந்து சேர்ந்தார். அவர் உடல் முழுவதும் சகதி அப்பியிருந்தது. அவர் குனிந்து தன்னுடைய கால்களைப் பார்த்தபொழுது, ஒரு காலில் மட்டுமே காலணி இருப்பதைப் பார்த்தார்.

''பிரமாதம், அலெக்ஸாஷ்கா! மிக அருமையான காட்சி'' என்று சொல்லிச் சிரித்தார் பீட்டர்.

''சனியன் பிடித்த இடம்'' என்று மென்ஷிகோவ் கோபமாகச் சொன்னார். ''ஐயா! நாம் திரும்பிவிடலாம். இந்த

சதுப்பு நிலத்தைக் கடப்பதற்கு எந்த வழியும் கிடையாது'' என்றார்.

''எதற்காகப் பின்வாங்க வேண்டும்? நீங்கள் முன்னால் நடங்கள், டனீலிச்! நாம் இங்கே ஆட்சி செய்ய வந்திருக்கிறோமே தவிர, விருந்தினர்களாக வரவில்லை.'' பீட்டர் இப்படிச் சொல்லிவிட்டுக் கடலை நோக்கி நடந்தார்.

மென்ஷிகோவ் உற்சாகமில்லாமல் நடந்தார்.

''இதைப் பார்த்தீர்களா?'' பீட்டர் மென்ஷிகோவைப் திரும்பிப் பார்த்தபடியே பேசினார். ''இங்கே உயிருள்ளது ஒன்றுமில்லை என்று சொன்னீர்களே. இதைப் பாருங்கள். இதை உயிர் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்?''

பீட்டர் ஒரு மேட்டை நோக்கிச் சென்று அங்கே கவனமாக ஒரு புதரை விலக்கினார். அங்கே ஒரு பறவைக் கூடு இருப்பதை மென்ஷிகோவ் பார்த்தார். அதில் உட்கார்ந்திருந்த பறவை தன் அமைதியைக் குலைக்க வந்திருப்பவர்களை ஆச்சரியத்தோடு பார்த்தது. ஆனால் அது பறந்து போகவில்லை.

''ஏ பறவையே! உனக்கு பயமில்லையா?'' என்று மென்ஷிகோவ் கேட்டார்.

அந்தப் பறவை திடீரென்று சிறகுகளை அசைத்துக் கொண்டு காற்றிலே பறந்து, அந்தப் புதருக்கு மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

கடைசியில் பீட்டரும் மென்ஷிகோவும் கடலுக்கு வந்து சேர்ந்தார்கள். கடல் பெரியதாக, இருள் கவிந்ததாக இருந்தது. கடலலைகள் ஒட்டகத்தின் திமிலைப் போலப் பெரிதாக இருந்தன. அவை வேகமாக வந்து கரையில் மோதிக் கூழாங்கற்களில் சிதறின.

பீட்டர் அங்கே நின்று தன்னுடைய மார்புத் தோள் தசைகளை வளைத்தார். கடற்காற்றை ஆழமாக மூச்சிழுத்து வெளியே விட்டார். கடற்காற்று அவருடைய கஃப்தான் முனைகளைத் தூக்கியது; வெளிப்புறத்திலிருக்கும் பச்சைத் துணியையும், பிறகு உள்ளேயிருக்கும் சிகப்புத் துணியையும் வெளிக் காட்டியது. பீட்டர் வெகு தூரத்துக்கு அப்பால் பார்த்துக் கொண்டிருந்தார். அங்கே, மேற்குத் திசையில் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் அந்நியக் கடற்கரைகள், அயல் நாடுகள் இருக்கின்றன.

மென்ஷிகோவ் ஒரு பாறையின் மீது உட்கார்ந்து காலணிகளை மாற்றிக் கொண்டிருந்தார்.

''டனீலிச்!'' என்று திடீரென்று பீட்டர் கூப்பிட்டார்.

பீட்டர் மெதுவாகக் கூப்பிட்டிருக்க வேண்டும். அல்லது அவர் குரல் தன் காதில் விழாதது போல மென்ஷிகோவ் நடித்திருக்க வேண்டும். காரணம் எதுவாக இருந்தாலும் அவரிடமிருந்து பதில் இல்லை.

''டனீலிச்!'' பீட்டர் மறுபடியும் கூப்பிட்டார்.

மென்ஷிகோவ் தன்னுடைய செவிகளைக் கூர்மைப் படுத்திக் கொண்டு உற்றுக் கேட்டார்.

''இங்கே, இந்தக் கடற்பகுதியில்'' பீட்டர் கையை அகலமாக விரித்துக் காட்டினார், ''இந்தக் கடற் பகுதியில் நாம் ஒரு நகரத்தைக் கட்ட வேண்டும்'' என்றார்.

மென்ஷிகோவ் தன் கையில் பிடித்திருந்த காலணியைப் பொத்தென்று கீழே போட்டார்.

''நகரமா?'' என்று கேட்டார். ''இங்கேயா? இந்தச் சதுப்பு நிலத்தில் ஒரு நகரத்தைக் கட்ட வேண்டுமா?''

''ஆம். அப்படித்தான்'' என்று சொல்லியபடியே பீட்டர் கரையோரமாக நடந்தார்.

மென்ஷிகோவ் ஒரு கையில் காலணியைப் பிடித்தபடியே பின்னேக்கிச் சென்று கொண்டிருக்கும் பீட்டரின் உருவத் தைப் பார்த்தபடியே வியப்பில் மூழ்கினார்.

நேவா நதியின் முகத்துவாரத்தில் நகரத்தைக் கட்டும் வேலைக்காக ஆட்களைத் திரட்டும் வேலை ருஷ்யா முழுவதி லும் ஆரம்பமாயிற்று. கொத்தனார்கள், தச்சர்கள், ஆசாரி கள் திரட்டப்பட்டார்கள். இவர்களைத் தவிர ஆயிரக் கணக் கான விவசாயிகளும் அங்கே கட்டாயப்படுத்திக் கொண்டு வரப்பட்டார்கள்.

அவர்களில் நிக்கிடா என்ற சிறுவனும் அவன் தகப்பனார் ஸிலான்டி டிமோவும் இருந்தனர். அவர்கள் வசிப்பதற்காக டிமோவுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் சேர்த்து நிலச் சரிவில் ஒரு ஈரமான மனை ஒதுக்கப்பட்டது. அங்கே நிக் கிடா தன் தகப்பனாரோடு ஒரு ஒதுக்கிடத்தில் தங்கியிருந் தான்.

காலை நேரம். நான்கு மணி. தொழிலாளர் முகாமில் வைக்கப்பட்டிருக்கும் பீரங்கி முழங்குகிறது. தொழிலாளர் கள் தூக்கத்திலிருந்து எழுகின்றனர். நிக்கிடாவின் தகப்பனார் புறப்பட்டுவிட்டார். அவர்கள் சதுப்பு நிலத்தில் கால்வாய் கள் தோண்டுவது, மரங்களை வெட்டுவது, மரக் கட்டைகளை இழுத்துக் கொண்டு வருவது போன்ற வேலைகளை நாள் முழு வதும் செய்கிறார்கள்.

நிக்கிடா மட்டும் நாள் முழுவதும் தனியாகவே இருந் தான். அவன் ஒரு விசித்திரமான சிறுவன். அங்கே அதிகமான படைவீரர்களும் எண்ணற்ற தொழிலாளர்களும் இருப்பதைப்

பார்க்க அவனுக்கு உற்சாகமாக இருந்தது. பக்கத்திலிருந்த கடல் அவனைக் கவர்ந்தது. இவ்வளவு தண்ணீரை அவன் ஒரு போதும் பார்த்ததில்லை. அது அவனுக்கு பயமாகவும் இருந்தது. அவன் துறைமுகத்துக்கு ஓடிப் போய் அங்கே நின்று கொண்டிருக்கும் கப்பல்களை ஆச்சரியத்தோடு பார்ப்பான். அங்கே உருவாகிக் கொண்டிருந்த புதிய நகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் அவன் சுற்றித் திரிவான். அவர்கள் காடுகளை அழிப்பதையும் அந்த இடங்களில் வீடுகளைக் கட்டுவதையும் அவன் பார்த்துக் கொண்டிருப்பான்.

அவன் எப்பொழுதும் அங்கே சுற்றிக் கொண்டிருப்பது தொழிலாளர்களுக்கும் பழகிவிட்டது. அவனைப் பார்க்கும் பொழுது அவர்கள் தங்களுடைய வீடுகளையும் குடும்பங்களையும் நினைத்துக் கொண்டார்கள். எனவே அவர்கள் அவன் மீது அதிகமான அன்பு காட்டினார்கள். ''நிக்கிடா! குடிக்கத் தண்ணீர் கொண்டுவா!'' என்று அவர்கள் சொல்வார்கள். உடனே அவன் ஓடோடிச் சென்று தண்ணீர் கொண்டு வருவான். ''நிக்கிடா! படைவீரர்களிடமிருந்து நீ எப்படிப் புகையிலையைத் திருடினாய் என்று சொல்'' என்பார்கள். அந்த இரகசியத்தை அவர்களிடம் சொல்வான்.

இலையுதிர் காலம் வரையிலும் நிக்கிடாவின் வாழ்க்கை குதூகலமாக இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு மழை பெய்ய ஆரம்பித்தது. இப்பொழுது நிக்கிடாவுக்கு உற்சாகமில்லை. அவன் அந்த ஒதுக்கிடத்திலேயே, முழங்காலளவு தண்ணீரில் நாள் முழுவதும் உட்கார்ந்திருக்க நேர்ந்தது. நிக்கிடாவுக்கு அது அலுத்துவிட்டது.

ஸிலான்டி மரக்கட்டையில் ஒரு பொம்மையைச் செய்து மகனிடம் கொடுத்தான். ஒரு படைவீரன் தன்னுடைய ஆயுதத்தோடு நிற்பதைப் போன்று அந்தப் பொம்மை இருந்தது.

நிக்கிடாவுக்கு இப்போது ஒரே மகிழ்ச்சியாக இருந்தது.

''நில்!'' என்று அவன் உத்தரவு கொடுப்பான்.

அந்தப் படைவீரன் தன்னுடைய கண் இமையைக்கூட அசைக்காமல் நின்று கொண்டிருப்பான்.

''கீழே படு!'' என்று உத்தரவு கொடுப்பான். இரகசியமாக அந்த பொம்மையை ஒரு தட்டுத் தட்டிவிடுவான். அது கீழே படுத்துக் கொள்ளும்.

அந்த பொம்மை வீரனோடு விளையாடி அலுத்துப் போனவுடன் அவன் குடிசைக்குள்ளே நிற்கும் தண்ணீரை வெளியே இறைப்பான். வாய்க்கால் வெட்டித் தண்ணீரைத் தெருவுக்குள் திருப்பிவிடுவான். சிறிது நேரம் கழித்த பிறகு குடிசைக்குத் திரும்பினால் அங்கே மறுபடியும் பழைய மட்டத்

துக்குத் தண்ணீர் நிற்கும். அதைப் பார்க்கும் பொழுது அவனுக்கு அழுகையாக வரும்.

பசி அந்த நகரத்துக்குள் பதுங்கிப் பதுங்கி நுழைந்தது. இலையுதிர் காலத்தை எதிர்பார்த்து உணவுப் பொருள்களை சேமித்து வைக்கவில்லை; பாதைகள் கடக்க முடியாதபடி மாறின. நோய்கள் பரவின. ஈக்களைப் போல மக்கள் மடிந்து கொண்டிருந்தனர்.

நிக்கிடாவும் நோய்க்கு ஆளானான். ஒருநாள் அவன் தகப்பனார் வேலையிலிருந்து திரும்பிய பொழுது நிக்கிடா காய்ச்சலோடு படுத்திருப்பதைப் பார்த்தார். அதிகமான நாவறட்சியோடு அவன் அந்த இடத்தில் துடித்துக் கொண்டிருந்தான்.

அந்த மாலைப் பொழுது முழுவதும் ஸிலான்டி தன் மகனுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான். காலையில் அவன் வேலைக்குப் போகவில்லை. அன்று பிற்பகலில் ஒரு அதிகாரியும் சில படைவீரர்களும் அந்தக் குடிசைக்குள் தடதடவென்று நுழைந்தனர்.

''உனக்கு சட்டம் தெரியுமல்லவா?'' என்று அதிகாரி கோபத்தோடு கேட்டார்.

''ஐயா! என் பையன் ஆபத்தான நிலையில் இருக்கிறான். என் மகன் செத்துக் கொண்டிருக்கிறானே...''

அந்த அதிகாரி அவன் சொல்வதைக் கேட்பதற்குக்கூட முயற்சிக்கவில்லை. அவர் உத்தரவு கொடுத்தார். படைவீரர்கள் ஸிலான்டியின் கைகளைச் சேர்த்துக் கட்டி வேலை செய்யுமிடத்துக்கு அவனை இழுத்துச் சென்றார்கள். அன்றிரவில் அவன் குடிசைக்குத் திரும்பியபொழுது நிக்கிட்டாவின் உடல் குளிர்ந்து போயிருந்தது.

''நிக்கிடா, நிக்கிடா!'' என்று கத்திக் கொண்டே ஸிலான்டி மகனுடைய உடலைக் குலுக்கினான்.

நிக்கிடா அசையாமல் கிடந்தான். ஆயுதத்தை வைத்துக் கொண்டு நிற்கின்ற படைவீரனின் பொம்மை புழுதியில் கிடந்தது. நிக்கிடா செத்துப் போய் வெகு நேரமாகிவிட்டது.

நிக்கிடாவைப் புதைக்க சவப்பெட்டி தயாரிக்கப்படவில்லை. எல்லோரையும் போல அவனும் ஒரு பொந்துக்குள் புதைக்கப்பட்டான்.

தன் மகனுடைய மரணத்துக்குப் பிறகு ஸிலான்டி அதிக நாட்கள் உயிரோடிருக்கவில்லை. அந்த வருடத்தில் பனிக்காலம் ஆரம்பமான பொழுது அவன் உடலைச் சுடுகாட்டுக்கு எடுத்துக் கொண்டு போனார்கள். அந்த சமயத்தில் இன்னும் பலர் மரணமடைந்தார்கள். அங்கேயிருந்த சேற்றி

லும் சதுப்பிலும் பல விவசாயிகளின் எலும்புகள் புதைக்கப் பட்டன.

நிக்கிட்டாவின் தகப்பனார் கட்ட உதவிய நகரம்தான் பீட்டர்ஸ்பர்க்.

சில வருடங்களுக்குப் பிறகு அது ருஷ்ய அரசின் தலை நகரமாயிற்று.

ருஷ்யாவின் புகழுக்காக

*1704*ம் வருடத்தில் ருஷ்யத் துருப்புகள் இரண்டாம் தடவையாக நார்வா நகரத்தை நெருங்கின. உக்கிரமான போர் நடைபெற்றது. ருஷ்யர்களுக்கு முழு வெற்றி கிடைத் தது.

பீட்டரும் மென்ஷிகோவும் குதிரைகளின் மேல் உட் கார்ந்து கோட்டையிலிருந்து வெளியே போய்க் கொண் டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னல், சற்று தூரத்தில் ருஷ்ய நாட்டுத் தளபதிகள் ஒரு கோஷ்டியாக வந்து கொண் டிருந்தார்கள். பீட்டர் தன்னுடைய தோள்களைக் சுறுக்கிக் குனிந்து சேணத்தின் மீது உட்கார்ந்திருந்தார். குதிரையின் தோள்பட்டையின் மீது மாட்டப்பட்டிருந்த துருப்பிடித்த அலங்காரச் சங்கிலியைச் சோர்வு நிரம்பிய கண்களோடு பார்த்துக் கொண்டிருந்தார். மென்ஷிகோவ் அடிக்கொளு வில் கால்களை வைத்து நின்று கொண்டு தலையை இங்கு மங்கும் அசைத்து வழியில் நின்று கொண்டிருக்கும் படை வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உற்சாகமாக நன்றி தெரி வித்துக் கொண்டு வந்தார்.

அவர்கள் மௌனமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

''ஐயா!'' என்று மென்ஷிகோவ் திடீரென்று கூப்பிட் டார். ''பீட்டர் அலெக்ஸேயெவிச்! அங்கே பாருங்கள்!'' என்று நரோவா நதியை நோக்கிக் கையை நீட்டினார்.

பீட்டர் அவர் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தார். நதியின் கரையில் ஒரு பீரங்கி வண்டி நிறுத்தப்பட்டிருந்தது. அதன் குழாய் வானத்தை நோக்கி நீட்டிக் கொண்டிருந் தது. படைவீரர்கள் அதைச் சுற்றிக் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். ஒரு சார்ஜென்ட் கையில் ஒரு அகப் பையை வைத்துக் கொண்டு பீரங்கி வண்டியின் மீது ஏறி நின்று கொண்டிருந்தார். அவர் பீரங்கிக் குழாயின் வாயில் அகப்பையை நீட்டி எதையோ அள்ளியெடுத்து படைவீரர் கள் வைத்துக் கொண்டிருந்த குவளைகளில் ஊற்றிக் கொண் டிருந்தார்.

''ஐயா! நன்றாகப் பாருங்கள்!'' என்றார் மென்ஷிகோவ். ''அவர்கள் எப்படிக் குடிக்கிறார்கள் பார்த்தீர்களா? இந்தக் கற்பனை அவர்களுக்கு எப்படி வந்தது? பீரங்கி வாயில் ஒயினை ஊற்றி அள்ளிக் குடிக்கிறார்கள். பலே! அங்கேயிருப்பது நமது பீரங்கிப் படை, நமது இராணுவத்தின் கழுகுகள், நமது வீரர்கள்!'' என்று பாராட்டினார்.

பீட்டர் சிரித்தார். அவர் தன்னுடைய குதிரையை நிறுத்தினார். படைவீரர்களின் பேச்சுச் சத்தம் அவர்களுடைய காதுகளில் விழுந்தது.

''நாம் யாருடைய நலனுக்காகப் பருகுகிறோம்?'' என்று சார்ஜென்ட் படைவீரர்களைப் பார்த்துக் கேட்டார். அவர்களுடைய பதிலுக்காக ஆர்வத்தோடு காத்துக் கொண்டிருந்தார்.

''ஜார் பீட்டருடைய நலனுக்காக!'' என்று எல்லோரும் சொன்னார்கள்.

''நார்வாவுக்காக!''

''புகழ் மிக்க செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரத்துக்காக!''

பீட்டரும் மென்ஷிகோவும் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தச் சத்தம் அவர்களுடைய காதுகளில் இன்னும் கேட்டுக் கொண்டிருந்தது.

''பீரங்கிப் படைக்காக!''

''உயிரைக் கொடுத்த நமது சகோதரர்களுக்காக!''

''டனீலிச்'' என்றார் பீட்டர். ''நாம் கடற்கரைக்குப் போவோம்.''

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அவர்கள் கடற்கரையில் நின்று கொண்டிருந்தார்கள். கடலலைகள் பீட்டர் அணிந்திருந்த பெரிய காலணிகளை நனைத்துக் கொண்டிருந்தன. அவர் மார்பில் தம் கைகளைக் கட்டிக் கொண்டு தூரத்தில் பார்வையைச் செலுத்தியபடி நின்று கொண்டிருந்தார். மென்ஷிகோவ் அவரிடமிருந்து சற்று விலகி நின்று கொண்டிருந்தார்.

''டனீலிச்! முன்பு நோவ்கரோடில் நமக்கிடையே நடைபெற்ற உரையாடல் உங்களுக்கு நினைவிருக்கிறதா?'' என்று பீட்டர் கேட்டார்.

''நினைவிருக்கிறது''.

''நார்வா நினைவிருக்கிறதா?''

''நன்றாக.''

''இன்று நம்முடைய சாதனையை கவனித்தீர்களா? நாம் இங்கே அடிக்கடி வந்ததும், ருஷ்ய மக்களின் இரத்தத்தையும் வியர்வையையும் இங்கே அர்ப்பணித்ததும் வீணாகவில்லை பார்த்தீர்களா?''

''உண்மைதான், ஐயா! அது வீண் போகவில்லை.''

''மாதாகோவில் மணிகளும் தான். அவற்றை நாம் எடுத்துக்கொண்டது நியாயம் தான் என்று நிரூபிக்கப்பட்டு விட்டதல்லவா. தொழிற் சாலைகளைக் கட்டினோம்; பள்ளிக் கூடங்களைக் கட்டினோம்...''

''ஆம், ஐயா! நீங்கள் சொல்வது சரி'' என்று ஆமோதித்தார் மென்ஷிகோவ்.

''அப்படியானால் நாம் சிறிது மதுவருந்துவது பாவகாரியமல்லவே, டனீலிச்! பாவமல்லவே!''

''நீங்கள் சொல்வது முற்றிலும் .சரி.''

''யாருடைய நலனுக்காகப் பருகுவது?''

''மாட்சிமை மிக்க சக்கரவர்த்தி பீட்டர் அலெக்ஸேயெவிச்சின் நலனுக்காக!'' என்றார் மென்ஷிகோவ்.

''முட்டாள்!'' பீட்டர் அவர் பேச்சில் குறுக்கிட்டு நிறுத்தினார். ''கடலுக்காக, ருஷ்யாவின் புகழுக்காக நாம் மது வருந்துவோம்'' என்றார்.

1



2

1. ஜார் முதலாம் பீட்டர் (அக்காலத்தில் செதுக்கப்பட்ட ஓவியம்). 2. பிரியோபிரஷேன்ஸ்கி படைப் பிரிவு அஸோவ் கடலிலிருந்து திரும்புதல். 3. பீட்டரின் இராணுவத்திலிருந்த துப்பாக்கி வீரர்கள். 4. வெடிகுண்டு எறியும் வீரர். 5. குதிரைப்படை வீரர். 6. கனமில்லாத நாட்டுத்துப்பாக்கியை வைத்திருக்கும் வீரர். 7. பிரியோபிரஷேன்ஸ்கி படைப்பிரிவைச் சேர்ந்த கர்னலின் இராணுவ உடை. 8. பீட்டர் காலத்தைச் சேர்ந்த பீரங்கிகள்.

3



4

5

6

7



8

9



10



11

12

14

13

9. ''ஐரோப்பாவை நோக்கிச் சன்னல் திறக்கப்படுகிறது.'' மாபெரும் பீட்டர் ஸ்வீடிஷ்காரர்களுக்கு எதிராகக் கடல்யுத்தத்தில் முதல் வெற்றியை அடைகிறார். மே 7, 1703. 10. நார்வா கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றுதல். ஆகஸ்ட் 9, 1704 (18ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட ஓவியம்). 11. துலா நகரம் —முதலாம் பீட்டர் இங்கேதான் முதல் ஆயுதத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார். 12. ''தாடி அனுமதிச் சீட்டு''—தாடி வைத்துக் கொள்ள அனுமதிக்கும் வரியைக் கட்டியதற்கு ரசீது. போயார்கள் தங்களுடைய தாடிகளை அகற்றி, ஐரோப்பிய நாகரிகத்தைப் பின்பற்ற வேண்டுமென்று பீட்டர் கட்டாயப்படுத்தினார். 13. ருஷ்ய மாதா கோவில்களிலிருந்து கொண்டு வரப்பட்ட மணிகள். 14. பீட்டரின் தொழிற் சாலைகளில் தவறு செய்யும் தொழிலாளர்களை தண்டிக்கப் பயன்பட்ட இரும்புக் கழுத்து வளையம்.

15

15. அலெக்ஸாந்தர் மென்ஷிகோவ், முதலாம் பீட்டரின் உடன்துணைவர். இவர் மிகச் சாதாரண நிலைமையிலிருந்து மிகவும் உயர்ந்த அரசாங்கப் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டார்.

16. முதலாம் பீட்டர் காலத்தில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரம் (அக்காலத்தில் செதுக்கப்பட்ட ஓவியம்). 17. ''மாபெரும் பீட்டர்''—வாலென்டின் செரோவ் வரைந்த ஓவியம். வடக்கே தலைநகரத்தைக் கட்டும் பணிகளை அவர் மேற்பார்வையிடுகிறார்.

17

16

18. மாஸ்கோவிலுள்ள ஸுக்காரெவ் ஸ்தூபி—இந்தக் கட்டிடத்தில் கடற் படையினர், பீரங்கிப் படையினர், பொறியியல் நிபுணர்களுக்குப் பயிற்சி தருகின்ற நிலையம் இருந்தது (18ம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட ஓவியம்).

18



КНИГА
УСТАВЪ
ВОІНСКІИ
о должности генераловъ, фелтъ маршаловъ, и всего генералитета, и протчіхъ чіновъ, которые при войскѣ надлежатъ быть, и о иныхъ воінскіхъ дѣлахъ, и поведеніяхъ, что каждому чініть должно.
НАПЕЧАТАСЯ ПОВЕЛѢНІЕМЪ
ЦАРСКАГО ВЕЛІЧЕСТВА.
ВЪ САНКТЪПІТЕРБУРХѢ
Лѣта Господня 1716,
Іулія въ 19 день.

19



4 Августъ
Дщерью Его Пруского Велічества, но обаче сіе еще нетоварно подлінно, Графъ Старемберегъ Цесарской посланнікъ, не давно пріѣхалъ сюды изъ Лондона чрезъ брабандію.

Печатано въ Санктъпитерсбурхѣ 1720, Августа въ 31 день.

97

САНКТЪПІТЕРБУРХЪ 1

ВѢДОМОСТИ.
ИЗЪ КОПЕНГАГЕНА отъ 3 Августа.
Король отъѣхалъ третьего дня на время въ Аландъ, прежде своего отъѣзду, Его Велічество, подарілъ Мілорду Картерету Англінскому Послу шпагу съ алмазами, цѣною въ три тысячи ефімковъ; также Его Велічество, пожаловалъ свой портретъ съ Алмазами Генералу Маіору Леуенору, за веліие и вѣрные его службы, которые онъ
52 показалъ

20

21

22

23

19. ''இராணுவக் கையேடு'', 1716. 20. ருஷ்யாவின் முதல் செய்தித்தாளான **வேடமோஸ்தி** (''பதிவேடு''), ஆகஸ்ட் 31, 1720. 21. மாக்னிட்ஸ்கியின் ''கணித நூல்'', 1703—முதன் முதலில் வெளியிடப்பட்ட ருஷ்ய பாடபுத்தகங்களில் ஒன்று. 22. 1697ம் வருடத்தில் கப்பற் கலை பயில்வதற்காக இத்தாலிக்கு அனுப்பப்பட்ட ருஷ்ய மாணவர்களும் ஆசிரியர் காப்டன் மார்டிஞேவிச்சும். 23. பீட்டரின் திருத்தங்களோடு உள்ள அரிச்சுவடிப் புத்தகம்.

சுவோரொவ்

கடிதமும் முகவரியும்

சுவோரொவ் சக்கரவர்த்தியின் விருப்பத்துக்குக் கீழ்ப் படியாததனுல் இராணுவத்திலிருந்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பீல்டு மார்ஷல் சுவோரொவ் கோஞ்சான்ஸ்கொயே என்ற கிராமத்தில் வசித்து வந்தார். அவர் அந்த கிராமத்திலிருந்த குழந்தைகளோடு சேர்ந்து விளையாடினுர். அந்த கிராமத்திலிருந்த மாதாகோவிலின் மணிகளை ஒலிப்பதில் உதவி செய்தார். புனித நாட்களின் போது மாதாகோவில் இசைக்குழுவோடு சேர்ந்து பாடினுர்.

இந்த சமயத்தில் ருஷ்ய இராணுவம் ஒரு புதிய போரில் ஈடுபட்டது. சுவோரொவ் போன்று அனுபவமும் ஆற்றலும் உடையவர்கள் ருஷ்யாவில் ஒருவரும் இல்லை. வெகு சீக்கிரத்தில் கோஞ்சான்ஸ்கொயே கிராமம் பிரபலமடைந்தது.

மூன்று குதிரைகள் பூட்டிய வண்டியில் ஒரு இளம் அதிகாரி சுவோரொவைப் பார்ப்பதற்காக வந்தார். சக்கரவர்த்தி முதலாம் பாவெல் அவர்கள் கொடுத்தனுப்பிய கடிதத்தை அவர் எடுத்துக் கொண்டு வந்தார். அந்தக் கடிதம் வைக்கப்பட்டிருந்த உரையின் மீது ஐந்து அரசாங்க முத்திரைகள் பதிக்கப்பட்டிருந்தன.

சுவோரொவ் அந்த உரையின் மீது எழுதியிருந்த முகவரியை உரக்கப் படித்தார்.

''அலெக்ஸாந்தர் சுவோரொவ் பிரபுவிடம் நேரில் கொடுக்கப்பட.''

அவர் அதைத் தன்னுடைய கைகளில் சிறிது நேரம் வைத்துக்கொண்டிருந்து விட்டு அதிகாரியிடமே திருப்பிக் கொடுத்தார்.

''இது எனக்கு அனுப்பப்பட்டதல்ல'' என்ருர், ''எனக்கு அல்ல.''

''உங்களுக்கு அல்லவா? ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று அதிகாரி ஆச்சரியத்தோடு கேட்டார். ''இதை உங்களிடம் நேரில் கொடுக்குமாறு எனக்கு உத்தரவு''.

''எனக்கு அனுப்பப்பட்ட கடிதம் அல்ல; எனக்கு அல்ல'' என்று சுவோரொவ் மறுபடியும் சொன்னுர். ''எனக்கு நேரமாகிறது. குழந்தைகள் எனக்காகக் காத்துக் கொண்

டிருப்பார்கள். காளான்களும் பழங்களும் பொறுக்குவதற்கு வருவதாகச் சொல்லியிருக்கிறேன்.''

இப்படிச் சொல்லிவிட்டு சுவோரொவ் புறப்படத் தயாரானுர்.

அதிகாரி அந்த உரையைத் திரும்பவும் பார்த்தார். எல்லாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி சரியாக இருந்தது.'' அலெக்ஸாந்தர் சுவோரொவ்,'' ''பிரபு'' என்ற இரண்டு வார்த்தைகளுமே இருந்தன.

''மேன்மை தங்கிய அலெக்ஸாந்தர் வஸீலியெவிச்! அவர்களே...'' என்ருர் அதிகாரி.

''என்ன வேண்டும்?'' வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்த சுவோரொவ் சற்று நின்ருர்.

''கடிதம்...''

''நான்தான் அப்பொழுது சொன்னேனே. இது எனக்கு அனுப்பப்பட்ட கடிதம் அல்ல'' என்ருர் சுவோரொவ். ''வேறு யாரோ ஒரு சுவோரொவுக்கு அனுப்பப்பட்ட கடிதம் என்று தோன்றுகிறது.''

அந்த தூதர் தன்னுடைய காரியத்தை நிறைவேற்ருமல் திரும்பிப் போக நேர்ந்தது.

சில நாட்களுக்குப் பிறகு அந்த இளம் அதிகாரி மறுபடியும் கோஞ்சான்ஸ்கொயே கிராமத்துக்கு வந்தார். ஐந்து முத்திரைகளைத் தாங்கிய சக்கரவர்த்தியின் கடிதத்தை அவர் மறுபடியும் எடுத்துக் கொண்டு வந்தார்.

சுவோரொவ் அந்த உரையின் மீது எழுதப்பட்டிருந்த முகவரியை உரக்கப் படித்தார்:

''ருஷ்ய பீல்டு மார்ஷல் அலெக்ஸாந்தர் சுவோரொவுக்கு.''

''இது எனக்கு வந்த கடிதமே'' என்று சொல்லிக் கொண்டு சுவோரொவ் உரையைப் பிரித்தார்.

சண்டை போடுவோம்! கணக்கு வேண்டாம்

சுவோரொவ் முதன்முதலில் யுத்தத்தில் ஈடுபட்டபொழுது அவர் மிகவும் இளமையான அதிகாரியாக இருந்தார். அப்பொழுது ருஷ்யா பிரஷ்யாவோடு யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது. இரண்டு இராணுவங்களையும் சேர்ந்த துருபுகள் நீண்ட போர்முகத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இரு இராணுவங்களும் தீவிரமான யுத்தத்துக்காகத் தயாரிப்புச் செய்து கொண்டிருந்தன. ஆனல் தற்பொழுது தகவல்

களைச் சேகரிப்பதற்காக சிறு தாக்குதல்களோடு மட்டும் திருப்தியடைந்து கொண்டிருந்தன.

சுவோரொவ் ஒரு கஸாக் பிரிவுக்குத் தலைமை தாங்கினுர். எதிரிகளை கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்குமாறு அவருக்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருந்தது.

சுவோரொவின் படைப்பிரிவு இருந்த இடத்திலிருந்து சுமார் நாற்பது வெர்ஸ்டா தூரத்தில் லான்ட்ஸ்பெர்க் என்ற பிரஷ்ய நகரம் இருந்தது. அது சிறிய நகரம் என்ற போதிலும் முக்கியமான சாலைகளின் மீது அமைந்திருந்த காரணத்தால் அதற்குத் தனி முக்கியத்துவம் இருந்தது. பிரஷ்ய ஹுஸ்ஸார்களின் படைப்பிரிவு அந்த நகரத்தைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. அவர்களிடம் ஏராளமான ஆயுதங்கள் இருந்தன.

சுவோரொவ் தம்முடைய கஸாக்குகளோடு எதிரிகளைப் பற்றித் தகவல் சேகரிப்பதற்காகப் பல இடங்களுக்குப் போனுர்; அந்த வட்டாரம் முழுவதையுமே சுற்றினுர். ஆனுல் பலனில்லை. ஒரு பிரஷ்யப் படைவீரனைக் கூட அவர்களால் பார்க்க முடியவில்லை.

எதிரியை லேசாகக் கூடப் பார்க்க முடியவில்லை என்ருல் இது என்ன யுத்தம்?

இந்த சமயத்தில் அந்த இளம் அதிகாரி துணிகரமான ஒரு காரியத்தைச் செய்வதற்கு முடிவு செய்தார். வருவது வரட்டும்; லான்ட்ஸ்பெர்கைக் கைப்பற்றுவது என்று முடிவு செய்தார். அவர் இளைஞர்; அகம்பாவம் உடையவர்.

அவர் நள்ளிரவில் கஸாக்குகளை உறக்கத்திலிருந்து எழுப்பினுர். உடனே குதிரைகளின் மீது புறப்பட வேண்டும் என்ருர்.

''நாம் எங்கே போகிருேம்?'' என்று கஸாக் லெப்டினென்ட் அதிகமான கவலையோடு கேட்டார்.

''முன்னேறுவோம்!'' சுவோரொவிடமிருந்து அவருக்குக் கிடைத்த பதில் இதுதான்.

சுவோரொவின் கஸாக் படைப்பிரிவு நாற்பது வெர்ஸ்டா தூரம் முழுவதையும் காலை உதயமாவதற்குள் கடந்தது. அந்தப் பிரஷ்ய நகரத்துக்கு நேர் எதிரேயிருந்த ஆழமான ஆற்றின் கரைக்கு வந்துசேர்ந்தது.

சுவோரொவ் சுற்று முற்றிலும் பார்த்தார். அங்கே நதியின் மீது பாலம் இல்லை. பிரஷ்யர்கள் தற்காப்பு நடவடிக்கையாக இந்தப் பாலத்தை எரித்துவிட்டார்கள். ஒரு திடீர்த் தாக்குதலில் சிக்கிக்கொள்வதற்கு அவர்கள் விரும்பவில்லை.

சுவோரொவ் ஆற்றங்கரையில் சிந்தித்தபடியே நின்று கொண்டிருந்தார். திடீரென்று அவர் உத்தரவு கொடுத்தார்.

''தண்ணீருக்குள் குதியுங்கள்! என்னைத் தொடர்ந்து நீந்துங்கள்!'' இப்படிச் சொன்ன பிறகு அவர் ஆற்றில் குதித்து முதலில் நீந்திப் போக ஆரம்பித்தார்.

கஸாக்குகள் மறுகரையில் எதிரி நகரத்தின் கோட்டைச் சுவர்களுக்கு அருகே தண்ணீரிலிருந்து வெளியே வந்தார்கள்.

''நகரத்தைப் பிடிக்க வேண்டும். முன்னேறுங்கள்!'' என்று முழங்கினர் சுவோரொவ்.

''அங்கே பிரஷ்ய ஹுஸ்ஸார்கள் நிற்கிறார்கள்'' என்று கஸாக் லெப்டினென்ட் மறுப்புக் கூறினர்.

''ஆண்டவனுக்கு நன்றி, அதுதான் நமக்கு வேண்டும்'' என்றார் சுவோரொவ். ''அவர்களை நாம் தேடிக் கொண்டிருந்தோமல்லவா? அப்படித்தானே.''

சுவோரொவ் எதற்கும் தயங்கப் போவதில்லை என்பதை அந்தக் கட்டத்தில் கஸாக் லெப்டினென்ட் உணர்ந்தார்.

''அலெக்ஸாந்தர் வஸீலியெவிச்! அவர்கள் எத்தனை பேர் அங்கே இருக்கிறார்கள் என்பதையாவது நாம் தெரிந்து கொண்டால் என்ன?'' என்றார் அந்த லெப்டினென்ட்.

''எதற்காக?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டார் சுவோரொவ். ''நாம் சண்டை போடுவதற்காகத் தானே அங்கு வந்திருக்கிறோம்—கணக்குப் போட அல்லவே?''

கஸாக்குகள் நகரத்துக்குள் நுழைந்து எதிரிகளைப் பூண்டோடு ஒழித்தார்கள்.

துணிவு

துருக்கியர்களை எதிர்த்து யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுவோரொவ் இதற்குள் இராணுவத்தின் தளகர்த்தராக உயர்ந்து விட்டார்.

போக்ஷானி என்ற இடத்துக்கு அருகே நடைபெற்ற யுத்தத்தில் துருக்கியர்கள் தங்கள் துருப்புகளை நன்கு அமைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் படையின் பின்புறத்தில் சதுப்பு நிலங்கள்தான் இருந்தன.

அவர்களுடைய பீரங்கிகள் மிகவும் நல்ல இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. எதிரி பின்புறத்தில் வந்து தாக்க முடியாது. அவர்களுடைய பக்க அணிகள் யாரும் தாக்க முடியாதபடி பலமாக இருந்தன. துருக்கியர்களிடம் நம்பிக்கை அதிகமாக இருந்தது.



எனினும் சுவோரொவ் சதுப்பு நிலத்தைக் கண்டு அஞ்சவில்லை. அவருடைய வீரம் நிறைந்த துருப்புகள் சதுப்பு நிலத்திற்குள் நுழைந்து முன்னேறினார்கள். தெளிவான நீல வானத்தில் இடி இடிப்பதைப் போல துருக்கியர்களின் பீரங்கிப் படைகளைப் பின்னாலிருந்து தாக்கினார்கள். அவர்கள் துருக்கியர்களின் பீரங்கிகளைக் கைப்பற்றுவதில் வெற்றியடைந்தார்கள்.

சுவோரொவின் போர் நடவடிக்கை துணிகரமானது, ஆனால் ஆபத்தானதென்று துருக்கியர்கள், ஆஸ்திரியர்கள், ருஷ்யர்கள் எல்லோருமே கருதினார்கள்.

அவர்கள் சதுப்பு நிலத்தில் இறங்கி அதைக் கடந்து வந்தது பாராட்டுக்குரியதே. ஆனால், அவர்கள் அதில் சிக்கிக் கொண்டிருந்தால்...

''அவர்கள் துணிவு என்று சொல்லட்டும். அல்லது வேறு எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்? யுத்தத்தில் ஈடுபட்ட பிறகு துணிவாக இருப்பது குற்றமா?'' என்று கேட்டார் சுவோரொவ்.

அந்த சதுப்பு நிலத்தைக் கடந்து முன்னேறுமாறு தன்னுடைய துருப்புகளுக்கு ஆணையிடுவதற்கு முன்பாக, அந்த சதுப்பு நிலப் பகுதி முழுவதையும் நன்கு ஆராய்ந்து படைவீரர்கள் போவதற்கு ஆபத்தில்லாத பாதையைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அனுபவமுள்ள சில வீரர்களிடம் சுவோரொவ் ஒப்படைத்திருந்தது வெகு சிலருக்கே தெரியும். சுவோரொவ் தன்னுடைய படைவீரர்களின் உயிர்களை மதித்து அவர்களைக் காப்பாற்றும் நோக்கத்தைப் பின்பற்றினார்.

இந்த நிகழ்ச்சிக்கு ஒரு மாதத்துக்குப் பிறகு, துருக்கியர்களோடு ஏற்பட்ட இன்னொரு சண்டையின் போது, கர்னல் இல்லோவாய்ஸ்கி என்ற பெயருடைய ஒரு நபர் சுவோரொவின் துணிகரமான நடவடிக்கையைப் பின்பற்றுவதென்று முடிவு செய்தார்.

சந்தர்ப்பங்கள் அதே மாதிரியாகவே இருந்தன—துருக்கியர்களின் பீரங்கிகள் மறுபடியும் அத்தகைய இடத்திலும் அவர்களுக்குப் பின்புறத்தில் சதுப்பு நிலமும் இருந்தது.

''சுவோரொவ் வெற்றியடைந்தார். நான் மட்டும் அவருக்குக் குறைந்தவனா? இப்பொழுது நானும் வெற்றிபெறுவேன்'' என்றார் இல்லோவாய்ஸ்கி.

துரதிர்ஷ்டவசமாக இந்தத் தடவை அவர் வெற்றி அடையவில்லை. இல்லோவாய்ஸ்கி பழக்கமில்லாத பாதையில் துருப்புகளை அழைத்துச் சென்றார். படைவீரர்கள் சதுப்பு நிலத்தில் சிக்கிக் கொண்டார்கள். சிறிது சிறிதாக அவர்கள்

மூழ்க ஆரம்பித்தார்கள். அங்கே பரபரப்பு ஏற்பட்டது; கூச்சலும் குழப்பமும் அமைதியைக் குலைத்தன.

அங்கே என்ன நடந்துகொண்டிருக்கிறதென்று துருக்கியகள் புரிந்து கொண்டார்கள். அவர்கள் பீரங்கிகளை சதுப்பு நிலங்களை நோக்கித் திருப்பி ருஷ்யத் துருப்புகளை அழித்தார்கள்.

அங்கே ஏராளமானவர்கள் இறந்து போனார்கள். ஆனால் இல்லோவாய்ஸ்கி தப்பினர்.

இந்த சம்பவத்தைப் பற்றித் தகவலறிந்ததும் சுவோரொவ் ஆத்திரமடைந்தார். அவர் இல்லோவாய்ஸ்கியைத் திட்டினர்; தன்னுடைய தொண்டை கரகரத்துப் போகும் வரை சத்தம் போட்டார்.

''நான் உங்களைப் போலவே துணிகரமான நடவடிக்கையைச் செய்ய விரும்பினேன்'' என்று இல்லோவாய்ஸ்கி தன்னை தற்காத்துப் பேசினர்.

''துணிவு!'' என்று சுவோரொவ் கர்ச்சனை செய்தார். ''துணிவு இருந்தது. ஆனல் திறமை வேண்டாமா?''

படைவீரர்களின் உயிர்கள் வீணுக அழிவதற்குக் காரணமாக இருந்ததற்காக சுவோரொவ் அந்தக் கர்னலைப் பதவியிலிருந்து கீழே இறக்கினர்; அவர் சாதாரணப் படைவீரனுக்கப்பட்டு சரக்குப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

''அவரை நம்பிப் படைவீரர்களின் உயிர்களை ஒப்படைக்க முடியாது'' என்றார் சுவோரொவ். ''அங்கே அவர் குதிரைகளை கவனித்துக் கொண்டால் போதும். அது அவ்வளவு ஆபத்தான காரியம் அல்ல''.

இஸ்மாயில் கோட்டை

துருக்கியர்களுக்குச் சொந்தமான இஸ்மாயில் என்ற கோட்டை யாராலும் கைப்பற்ற முடியாதது என்று கருதப்பட்டது. அகன்ற டான்யூப் நதியின் கரையில் அந்தக் கோட்டை அமைந்திருந்தது; அங்கே நாற்பதாயிரம் படைவீரர்களும் இரு நூறு பீரங்கிகளும் இருந்தன. மேலும் அந்தக் கோட்டையைச் சுற்றி ஆழமான அகழியும் உயர்ந்த மதிற்சுவர்களும் இருந்தன. இஸ்மாயிலின் வெளிச்சுவர் மட்டும் ஆறு வெர்ஸ்டா சுற்றளவைக் கொண்டிருந்தது.

இந்தத் துருக்கியர்களின் கோட்டையை ருஷ்யத் தளபதிகளால் கைப்பற்ற முடியவில்லை.

சுவோரொவ் அங்கே வரப் போகிறார் என்று பேசப் பட்டது. அந்தப் பேச்சு உண்மையாயிற்று; ஒருநாள் அவர் அங்கு வந்தார். தளபதிகள் கலந்து ஆலோசித்தனர்.

''இது சம்பந்தமாக என்ன செய்வது?'' என்று கேட்டார்.

அப்பொழுது இலையுதிர்காலம் முடிந்து கொண்டிருந்தது; எனவே நிலைமை சிக்கலாக இருந்தது.

''நாம் திரும்பிப் போவது தான் நல்லது'' என்று அவருடைய தளபதிகள் ஆலோசனை சொல்லத் தொடங்கினார்கள். ''நமது குளிர்கால இருப்பிடங்களுக்கு நாம் போய்விட வேண்டும்.''

''குளிர்கால இருப்பிடங்களுக்கா?'' என்று சுவோரொவ் அவர்களை ஏளனம் செய்தார். ''வீட்டுக்குத் திரும்புவதைப் பற்றி நினைக்காதீர்கள். ருஷ்யப் படைவீரன் வீட்டுக்குத் திரும்புகின்ற பாதை இஸ்மாயில் வழியாகத்தான் இருக்கும். இந்த இடத்தைவிட்டுப் போவதற்கு ருஷ்யப் படைவீரனுக்கு வேறு பாதை எதுவும் கிடையாது.''

இந்த முடிவுக்குப் பிறகு இஸ்மாயிலைச் சுற்றி ஒரு தனி வகையான வாழ்க்கை ஆரம்பமாயிற்று. இஸ்மாயில் கோட்டையைச் சுற்றிலும் இருக்கின்ற மதிற்சுவர்களைப் போன்ற சுவர்களை அங்கே கட்டுமாறு சுவோரொவ் உத்தரவிட்டார். படைவீரர்களுக்கு அவர் நேரடியாகப் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார்: துப்பாக்கி ஈட்டிகளைக் கொண்டு எப்படித் தாக்குவது என்ற பயிற்சி பகலில் நடைபெற்றது. துருக்கியர்களுக்குத் தெரியாமல் கோட்டைச் சுவரில் எப்படி ஏறுவது என்று இரவில் பயிற்சி கொடுத்தார். மதிற்சுவரில் ஏறுங்கள் என்று உத்தரவிடுவார். படைவீரர்கள் மதிற்சுவரை நெருங்கும் பொழுது ''நில்லுங்கள்! பின்னால் போய் மறுபடியும் செய்யுங்கள். ஆட்டு மந்தைகளைப் போல ஓடிவரக் கூடாது'' என்று உத்தரவிடுவார்.

படைவீரர்கள் ஒத்திகை பார்த்தார்கள். முதலில் முன்பும் பிறகு பின்பும் பிறகு முதலிலிருந்து மறுபடியும் பயிற்சிகளைச் செய்தார்கள். தனித்தனி நபர்களாகப் பிரிந்து மதிற்சுவரை நெருங்குவது எப்படி என்பதை அவர்கள் கற்றுக் கொண்ட பிறகு அவர்கள் மதிற்சுவரில் எப்படி ஏற வேண்டும் என்பதை அவர் சொல்லிக் கொடுத்தார்.

''இங்கே எல்லோரும் சேர்ந்து இயங்க வேண்டும், ஒரே சமயத்தில் எல்லோரும் சுவரின் மீது ஏற வேண்டும். எண்ணிக்கை இப்பொழுது முக்கியம். ஒரே சமயத்தில் எல்லோரும் கோட்டையைப் பிடிக்கிறீர்கள்.''

சுவோரொவ் தன்னுடைய படை வீரர்களுக்கு இவ்வாறு சில நாட்களுக்குப் பயிற்சி கொடுத்தார். பிறகு தன்னிடம்

சரணடைந்துவிடுமாறு துருக்கிய தளபதியிடம் தெரிவிக்குமாறு ஒரு தூதனை அனுப்பினர். அந்த தளபதி இறுமாப்போடு பதிலளித்தார்:

''ருஷ்யர்கள் இஸ்மாயில் கோட்டையைக் கைப்பற்றும் பொழுது கிழக்கே சூரியன் அஸ்தமிக்கும்.''

சுவோரொவ் இஸ்மாயில் கோட்டையைப் பிடிக்குமாறு தன்னுடைய படைவீரர்களுக்கு உத்தரவிட்டார். அவர்கள் சுவோரொவ் கற்பித்திருந்த போர்முறைகளை அப்படியே நிறைவேற்றினர்கள். அவர்கள் அகழியைக் கடந்தார்கள். நூலேணிகளைப் பயன்படுத்தி கோட்டைச் சுவரின் மீது ஏறினர்கள்.

துருக்கியர்கள் வீரத்தோடு சண்டை போட்டார்கள்; ஆனால் அவர்களால் ருஷ்யர்களைத் தடுக்க முடியவில்லை. சுவோரொவின் துருப்புகள் இஸ்மாயில் கோட்டைக்குள் நுழைந்து துருக்கிய இராணுவம் முழுவதையும் கைதிகளாகப் பிடித்தார்கள்.

அந்தக் கோட்டையிலிருந்து ஒரே ஒரு துருக்கியப் படைவீரன் மட்டும் தப்பினன். அவன் உடல் முழுவதும் நடுங்கிக் கொண்டே துருக்கியின் தலைநகரத்தை நோக்கி ஓடினன். அங்கே சென்று ருஷ்யப் படைவீரர்களின் புதிய சாதனையையும் தளபதி சுவோரொவின் வெற்றியையும் தெரிவித்தான்.

வீரப் பதக்கம்

ரிம்னிக் நதிக் கரையில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. குஸ்மா ஷாப்கின் இளம் படைவீரன். அனுபவம் இல்லாதவன். சண்டை தீவிரமாக நடைபெறுவதைக் கண்டு பயந்து போய் அவன் பகல் முழுவதும் புதர்களுக்குள் ஒளிந்து கொண்டான்.

சுவோரொவ் அதைப் பார்த்துவிட்டார் என்பது ஷாப்கினுக்குத் தெரியாது.

துருக்கியர்களின் மீது வெற்றியடைந்ததைக் கொண்டாடுவதற்காக சுவோரொவின் படைவீரர்களுக்குப் பதக்கங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. அதிகாரிகள் தங்கள் படைகளையும் பிரிவுகளையும் அணிவகுத்து நிற்குமாறு உத்தரவிட்டார்கள். சுவோரொவ் துருப்புகளுக்கு முன்பு வந்தார்; பதக்கங்களை வழங்கினர்.

ஷாப்கின் மற்ற படைவீரர்களோடு சேர்ந்து நின்று கொண்டிருந்தான். இது எப்பொழுது முடியும் என்று மன

துக்குள்ளாக நினைத்துக் கொண்டு அவசரப்பட்டுக் கொண்டிருந்தான். தன்னுடைய நடத்தையை நினைத்து அவன் வெட்கப்பட்டான். திடீரென்று... அவன் உடல் நடுங்கியது. அவனால் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

''எறிகுண்டு வீரர் ஷாப்கின், முன்புறமும் மத்தியும்!'' என்றார் சுவோரொவ்.

அவனுடைய கால்கள் பூமியில் வேரூன்றிவிட்டது போல ஷாப்கின் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அவன் ஒரு அங்குலம் கூட அசையவில்லை.

''எறிகுண்டு வீரர் ஷாப்கின், முன்புறமும் மத்தியும்!'' என்று சுவோரொவ் மறுபடியும் சொன்னார்.

''போ! போ!'' என்று அருகிலிருந்த படைவீரர்கள் அவனைத் தள்ளினார்கள்.

ஷாப்கின் வெட்கித் தலைகுனிந்தபடியே முன்னே சென்றான். ஒரு நொடியில் சுவோரொவ் அவன் மார்பில் பதக்கத்தை மாட்டினார்.

மாலை நேரத்தில் படைவீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கோப்பை ஒயின் கொடுக்கப்பட்டது. அவர்கள் தங்களுடைய கூடாரங்களுக்கு அருகே உட்கார்ந்து கொண்டு சண்டையைப் பற்றிய எல்லா விவரங்களையும் நினைவுபடுத்திப் பேசிக் கொண்டிருந்தார்கள். வீரப் பதக்கங்கள் யாராருக்கு எதற்காகக் கொடுக்கப்பட்டன என்று பேசிக் கொண்டிருந்தார்கள். பள்ளத்தில் பதுங்கியிருந்து சண்டை போட்ட துருக்கியர்களை வெளியேற்றுவதற்கு ஒரு நல்ல யோசனை சொன்னதற்காக ஒருவருக்குப் பதக்கம் கொடுக்கப்பட்டது. துருக்கியப் படைகளின் கொடியைக் கைப்பற்றியதற்காக இன்னொருவருக்குப் பதக்கம். பத்து துருக்கியர்கள் ஒன்று சேர்ந்து தாக்கிய நேரத்திலும் அச்சமடைந்து ஓடிப்போகாதிருந்ததற்காகவும், அதிகமான காயங்கள் ஏற்பட்டிருந்தும் எதிரிகளிடம் கைதியாகச் சிக்கிவிடாதிருந்ததற்காகவும் மூன்றாவது நபருக்குப் பதக்கம்.

''நீ என்ன செய்தாய்? உனக்குப் பதக்கம் கொடுத்தது ஏன்?'' என்று படைவீரர்கள் ஷாப்கினைக் கேட்டார்கள்.

அவன் பதில் சொல்லவில்லை; மௌனமாக இருந்தான்.

ஷாப்கின் பதக்கத்தை அணிந்து கொண்டான்; ஆனால் அவன் மனதில் நிம்மதி இல்லை. அவனுக்குச் சங்கடமான உணர்ச்சி ஏற்பட்டது; நண்பர்களிடமிருந்து ஒதுங்கிப் போனான். பல நாட்கள் யாருடனும் பேசாமலிருந்தான்.

''உனக்கு என்ன கோளாறு? பதக்கம் உன்னுடைய நாக்கை அழுத்துகிறதா? வாயை மூடிவிட்டதா?'' என்று படைவீரர்கள் அவனிடம் வேடிக்கையாகக் கேட்டார்கள்.

ஒரு வாரம் முடிந்தது. ஷாப்கினுடைய மனச்சாட்சி அவனை உள்ளே அரித்துக் கொண்டிருந்தது. அவனால் இனியும் அதைத் தாங்க முடியாத நிலை ஏற்பட்டது. அவன் சுவோரொவைச் சந்திப்பதற்குப் போனான். அவருடைய கூடாரத்துக்குள் நுழைந்தான்; பதக்கத்தை அவர் முன்னால் வைத்தான்.

''என்ன இது? பதக்கத்தைத் திருப்பிக் கொடுக்கிறாயா?'' என்று சுவோரொவ் ஆச்சரியத்தோடு கேட்டார்.

ஷாப்கின் அவமானத்தால் தலையைக் கீழே குனிந்தான். அவன் சுவோரொவிடம் மனதிலிருந்ததைக் கொட்டினான்; எல்லாவற்றையும் ஒத்துக் கொண்டான்.

''முடிந்தது. இனிமேல் எனக்கு நிம்மதி இருக்கும்'' என்று நினைத்தான்.

சுவோரொவ் கடகடவென்றுசிரித்தார். அங்கே பரிதாபமாக நின்று கொண்டிருநத வீரனை அருகே இழுத்து அணைத்துக் கொண்டார்.

''நல்ல காரியம் செய்தாய்'' என்றார் சுவோரொவ். ''நீ சொல்லாமலே எனக்கு எல்லாம் தெரியும். நான் உன்னைச் சோதிக்க விரும்பினேன். நீ நல்ல படைவீரன். நல்ல படைவீரன். நான் சொன்னது காதிலே விழுந்ததா? ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்: வீரர்கள் அவதரிப்பதில்லை. அந்த வீரத்தை உனக்குள் நீதான் வளர்த்துக்கொள்ள வேண்டும். நீ போகலாம். பதக்கம் இப்பொழுது என்னிடம் இருக்கட்டும். ஆனால் அது உன்னுடையது. இதை மறவாதே. வீரத்தோடு போர் புரிந்து அதை அணிவதற்குரிய தகுதியை நீ ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.''

சுவோரொவ் எல்லாவற்றையும் தெளிவாகப் புரிந்து கொண்டவர்.

அதன் பிறகு நடந்த அடுத்த சண்டையில் துருக்கியர்களின் கோட்டைக் காவலை உடைத்து முதலில் உள்ளே நுழைந்தான் ஷாப்கின். அதன் மூலம் பதக்கத்தையும் நியாயமான புகழையும் அடைந்தான்.

பாலமும் படையெடுப்பும்

ருஷ்யர்கள் இத்தாலியில் யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். சுவோரொவுக்கு எதிராக பிரெஞ்சு தளகர்த்தர்கள் போர் நடவடிக்கைகளைத் தயாரித்தார்கள். பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய இராணுவ நிலைகளை மிகவும் கவனமாக—சுவோரொவை ஒழித்துவிட வேண்டும் என்ற நோக்கத்

தோடு — தேர்ந்தெடுத்திருந்தார்கள். அவர்கள் அட்டா நதிவரையிலும் பின்வாங்கிச் சென்று அதற்கு அப்பாலுள்ள பகுதிக்குப் போய் விட்டார்கள்; நதியின் மீதிருந்த பாலங்களை எரித்து விட்டார்கள். ''இங்கே, இந்தக் குறுக்கிடத்தில் சுவோரொவை நாங்கள் ஒழிப்போம்'' என்று முடிவு செய்தார்கள்.

பிரெஞ்சுத் தளபதிகள் சுவோரொவை ஏமாற்றுகின்ற நோக்கத்தோடு சில நடவடிக்கைகளைச் செய்தார்கள். அவர்கள் இன்னும் வெகுதூரம் பின்வாங்கிப் போகப் போகிறார்கள் என்று சுவோரொவை நம்ப வைப்பதற்கு முயற்சி செய்தார்கள். அவர்கள் பகல் முழுவதும் நதிக்கு அப்பால் துருப்புகளை அனுப்பினார்கள்; ஆனால் மாலை வந்ததும் துருப்புகளை ரகசியமாகத் திரும்பக் கொண்டு வந்து புதர்களிலும் கணவாய்களிலும் அவர்களை மறைத்து வைத்தார்கள்.

சுவோரொவ் நதியின் கரைக்கு முன்னேறி அங்கேயே தங்கியிருந்தார். நதியின் மீது பாலங்களைக் கட்ட உத்தரவிட்டார். படைவீரர்கள் சட்டைக் கைகளைச் சுருட்டிவிட்டு கோடாரிகளைத் தூக்கி வேலை செய்ய ஆரம்பித்தார்கள். இரண்டு இடங்களில் பாலங்கள் கட்டுகின்ற வேலை ஆரம்பமாயிற்று. யார் முதலில் பாலத்தைக் கட்டி முடிப்பது என்ற போட்டி படைவீரர்களுக்கிடையே ஆரம்பமாயிற்று.

பிரெஞ்சு வேவுப் பிரிவினர் பாலங்கள் கட்டப்படுவதை கவனித்தார்கள். அதைப் பற்றி தங்கள் தளபதிகளுக்கு மணிக்கு ஒரு தடவை தகவல் அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

பிரெஞ்சு தளபதிகளுக்கு அதிகமான மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்கள் போட்ட திட்டப்படியே எல்லாம் நடந்து கொண்டிருந்தது. அவர்கள் சுவோரொவை ஏமாற்றிவிட்டார்கள்.

பிரெஞ்சுக்காரர்கள் உண்மையிலேயே சாமர்த்தியசாலிகள். ஆனால் சுவோரொவ் அவர்களைக் காட்டிலும் அதிகம் சாமர்த்தியம் உடையவர் என்பது பின்னால் தெரிந்தது.

பாலங்கள் கட்டும் வேலை முடிவடைகின்ற கட்டத்தில் அவர் திடீரென்று நள்ளிரவில் தன்னுடைய துருப்புகளைக் கூட்டிக்கொண்டு அட்டா நதியின் கீழ்க்கரையின் ஓரமாகப் புறப்பட்டார்.

''தளபதி அவர்களே! பாலங்களைக் கட்ட ஏன் உத்தரவிட்டீர்கள்?'' என்று பாலம் கட்டும் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் அதிருப்தியோடு கேட்டார்கள்.

''உஸ்'' என்று சுவோரொவ் உதடுகளின் மீது விரலை வைத்தார். ''பாலங்களைத் தொடர்ந்து கட்டுங்கள். கோடாரி

கள் இன்னும் அதிகமாகச் சத்தத்தைக் கிளப்பட்டும்'' என்ருர்.

கோடரிகள் மரங்களை வெட்டிப் பாலம் அமைக்கின்ற சத்தம் நதி மீது பரவியது. ஆனல் அதே சமயத்தில் பீல்டு மார்ஷல் தன்னுடைய இராணுவத்தோடு கீழ்க்கரை வழியாகப் புறப்பட்டு நதியைக் கடந்தார். எதிரி இருக்கின்ற கரைக்குப் போவதற்குப் பாலங்களைப் பயன்படுத்தவில்லை.

பிரெஞ்சுத் தளபதிகள் அமைதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். பாலங்கள் இன்னும் கட்டி முடிக்கப் படவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். நதியிலிருந்து வந்த கோடரிகளின் சத்தம் அவர்களுக்கு நிம்மதியைக் கொடுத்தது. அவர்கள் கவலைப்படும்படியாக ஒன்றுமில்லை.

திடீரென்று அவர்களுக்குப் பின்னல் சுவோரொவ் தோன்றினர். படைவீரர்கள் துப்பாக்கி ஈட்டிகளை மூடியிருந்த உறைகளைக் கழற்றவே, அவை இருளில் பளபளவென்று பிரகாசித்தன.

''ஹுர்ரே! வீரர்களே! என்னைப் பின் தொடருங்கள்!''

அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தளபதிகள் பார்த்தார்கள். ஆனல் அப்பொழுது காலம் கடந்து விட்டது. அவர்கள் ருஷ்யர்களை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் தயக்கத்தில் நடுங்கினர்கள்; உடனே ஓட்டம் பிடித்தார்கள். சுவோரொவிடம் சிக்கிய அதிகாரிகளின் எண்ணிக்கை மட்டுமே இருநூறுக்கு மேல் இருக்கும்.

கடைசியில் பாலங்களைக் கட்டும் வேலை முடிந்தது. பாலங்கள் உபயோகமாகவே இருந்தன. ஏனென்ருல் படைவீரர்கள் மட்டுமல்லாமல், வண்டிகளும் பீரங்கிகளும் சேர்ந்ததே இராணுவமாகும்.

வீரர்களும் கோழைகளும்

துரீன் கோட்டையைப் பிடிப்பதற்கு முந்திய இரவு நேரத்தின் போது சுவோரொவ் மேஜர் புரோனின், காப்டன் ஸபேலின் என்ற இரண்டு அதிகாரிகளைக் கூட்டிக் கொண்டு எதிரியின் நிலைகளைப் பார்த்து வருவதற்குப் போனர். அந்த நகரத்துக்குப் போகும் பாதைகளை நேரில் பார்க்க வேண்டுமென்று பீல்டு மார்ஷல் விரும்பினர். அந்தப் பகுதிகளைப் படம் வரைந்து குறித்துக் கொள்வதற்காகக் காகிதம் எடுத்துக் கொண்டுவருமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவு கொடுத்தார்.

அமைதியான இரவு. வானத்தில் சந்திரனும் நட்சத்திரங்களும் தெளிவாகப் பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருந்தன. அந்த இடம் குட்டையான புதர்க்காடுகளும் உயரமான பாப்லார் மரங்களும் நிறைந்து மனதைக் கவர்ந்தது.

சுவோரொவ் வழியில் தெரிந்த அழகான காட்சிகளை ரசித்துக் கொண்டே போனார்.

அவர்கள் நகரத்துக்குப் போகின்ற பாதைகளுக்கு அருகில் வந்துவிட்டார்கள். அங்கேயிருந்த சிறு குன்றுக்கு அருகே நின்றார்கள்.

அதிகாரிகள் குதிரைகளிலிருந்து கீழே இறங்கினார்கள்; காகிதங்களைக் கைகளில் எடுத்தார்கள். மேஜர் புரோனின் துணிச்சல் மிகுந்தவர். அவர் மேலும் மேலும் நகரத்துக்கு அருகே போனார். காப்டன் ஸபேலின் அதற்கு முற்றிலும் எதிரிடையானவர். அவர் சுவோரொவுக்குப் பின்புறத்தில் போனார்.

இருபது நிமிடங்கள் கழிந்தன. திடீரென்று பீரங்கி பயங்கரமாக வெடித்தது. பிரெஞ்சுப் படைகள் ருஷ்யர்களைப் பார்த்திருக்க வேண்டும்; அல்லது பாதுகாப்புக்காகப் பாதையை நோக்கிச் சுடுவதென்று முடிவு செய்திருக்க வேண்டும். எப்படியிருந்த போதினும் பீரங்கி குண்டுகள் அந்தக் குன்றின் மீதே விழுந்தன; சுவோரொவின் காலடியில் விழுந்து பீல்டு மார்ஷல் நின்று கொண்டிருந்த இடத்துக்கு அருகில் குழிகளைத் தோண்டின.

சுவோரொவ் தன்னுடைய குதிரையின் மீது அமைதியாக உட்கார்ந்திருந்தார். அவர் சிறிது கூட அசையவில்லை. தன்னோடு வந்த அதிகாரிகள் எங்கேயிருக்கிறார்களென்று பார்த்தார். மேஜர் புரோனின் பீரங்கி குண்டுக்கு அஞ்சாமல் அந்த வட்டாரத்தைப் படம் வரைந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். ஆனால் ஸபேலினை எங்கும் காணோம். அவர் பார்வையிலிருந்தே மறைந்து விட்டார்.

பீரங்கி தொடர்ந்து வெடிப்பதைப் பார்த்த ருஷ்யத் துருப்புகளுக்கு சுவோரொவைப் பற்றிக் கவலை ஏற்பட்டது. தூரீனை நோக்கி ஒரு கஸாக் பிரிவு வேகமாக வந்தது.

''தளபதி அவர்களே!'' என்று கஸாக் லெப்டினென்ட் கத்தினார். ''தள்ளிப் போங்கள்! அங்கே நிற்காதீர்கள். இது மிக ஆபத்தான இடம்.''

''இல்லை! இது மிக அழகான இடம்'' என்றார் சுவோரொவ். ''இங்கே பாருங்கள்'' அவர் அங்கேயிருந்த உயரமான பாப்லார் மரங்களைச் சுட்டிக் காட்டினார். ''இதைக் காட்டிலும் நல்ல இடம் நமக்கு வேண்டுமா? நாளைக்கு நம் தாக்குதலை இந்த இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.''

பீரங்கி வெடித்து ஓய்ந்தது. சுவோரொவ் முகாமுக்குத் திரும்பத் தயாரானார். அவர் புரோனின், ஸபேலின் என்று அந்த அதிகாரிகளைக் கூப்பிட்டார்.

புரோனின் திரும்பினார். அவர் கையிலிருந்த காகிதத்தில் கணவாய்கள், குன்றுகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான எல்லாத் தகவல்களும் குறிக்கப்பட்டிருந்தன. ஆனால் ஸபேலினை இன்னும் காணவில்லை. படைவீரர்கள் காப்டனைத் தேட ஆரம்பித்தார்கள். கடைசியில் சுவோரொவுக்குப் பின்புறத்தில் இருநூறு மீட்டர் தூரத்தில் ஸபேலினுடைய உடலைப் பார்த்தார்கள். எதிரி குண்டு அவர் தலையைப் பிளந்திருந்தது. அவருக்குப் பக்கத்தில் ஒரு காகிதம் எதுவும் குறிக்கப்படாமல் கிடந்தது.

சுவோரொவ் புரோனினையும் பிறகு ஸபேலினையும் பார்த்தார்.

''வீரர்கள் எப்பொழுதும் போர்க்களத்தின் முன்னணியிலேயே இருப்பார்கள்; கோழைகள் எப்பொழுதும் பின்னணியிலேயே சாகிறார்கள்'' என்றார்.

சூப்பும் காஷாவும்

சுவோரொவின் படை விரைந்து செல்லும் நடைப் பயணத்தின் கடைசிக் கட்டத்தில் போய்க் கொண்டிருந்தது. ஒரு நீரோடையின் அருகிலிருந்த காட்டில் அவர்கள் கூடாரம் அமைத்துத் தங்கினர். படைவீரர்கள் உணவு தயாரிப்பதற்காக அடுப்பு மூட்டினர்; சூப்பும் காஷாவும் தயாராகிக் கொண்டிருந்தது.

உணவு தயாராகியவுடனே அவர்களனைவரும் பசியோடு உணவைச் சாப்பிட ஆரம்பித்தனர். ஆனால் தளபதிகள் தங்கள் கூடாரங்களுக்கு முன்பாக உலாத்திக் கொண்டிருந்தார்கள்.

தங்களுடைய விசேஷ சமையற்காரனை லுஷ்காவை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பயணத்தில் அவன் எப்படியோ பின்தங்கிவிட்டான்; அவன் எப்பொழுது வந்து சேருவான் என்று தளபதிகள் கவலையோடு காத்துக் கொண்டிருந்தார்கள்.

''சரி. இனிமேலும் காத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை'' என்றார் சுவோரொவ். ''தளபதிகளே! வாருங்கள். படைவீரர்களோடு சேர்ந்து உணவருந்துவோம்'' என்று அழைத்தார்.

காஷா — பொங்கலைப் போன்ற உணவுவகை

''இல்லே. அந்த உணவு நமக்கு சரிப்படாது. நாங்கள் காத்திருக்கிறோம். லுஷ்கா சீக்கிரம் வந்து விடுவான்'' என்று தளபதிகள் எல்லோருமே சொன்னார்கள்.

சாதாரணப் படைவீரன் சாப்பிடுகின்ற உணவைக் கண்டு இந்தத் தளபதிகள் மூக்கைச் சுளிப்பார்கள் என்பது சுவோரொவுக்குத் தெரியும்.

''சரி. உங்கள் இஷ்டம்'' என்ருர்.

பக்கத்தில் தெரிந்த அடுப்பு வெளிச்சத்தை நோக்கி அவர் வேகமாகப் போனர்.

அந்த நெருப்பைச் சுற்றிலும் படைவீரர்கள் நெருக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். சுவோரொவைப் பார்த்ததும் அவர்கள் இன்னும் அதிகமாக நெருங்கி உட்கார்ந்து கொண்டு அவருக்கு மிகவும் நல்லதொரு இடத்தை ஒதுக்கிக் கொடுத்தார்கள். அவரிடம் ஒரு சட்டியும் கரண்டியும் கொடுத்தார்கள்.

சுவோரொவ் வசதியாக உட்கார்ந்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தார். படைவீரர்களுக்குக் கொடுக்கப்படும் சாதாரணமான உணவு பீல்டு மார்ஷலுக்குப் பழக்கமானதே. அந்த சூப்பையோ அல்லது காஷாவைப் பற்றியோ அவர் குமட்டலோடு நினேத்ததில்லே. எனவே அவர் நன்ருக, திருப்தியாகச் சாப்பிட்டார்.

''ஹோ! இது நல்ல சூப்! உண்மையாகவே மிகவும் ருசியாக இருக்கிறது'' என்று சுவோரோவ் பாராட்டினர்.

படைவீரர்கள் பலமாகச் சிரித்தார்கள். சூப்புகளேப் பற்றி பீல்டு மார்ஷல் ஒரு நிபுணர் என்பது அவர்களுக்குத் தெரியும். அவரே இப்படிச் சொல்வதென்ருல் சூப் உண்மையிலேயே மிகவும் ருசியாகத்தான் இருக்க வேண்டும் என்று நினேத்தார்கள்.

சுவோரொவ் நிறைய சூப் குடித்தார்; பிறகு காஷாவைச் சாப்பிட ஆரம்பித்தார். பசியடங்கியதும் சுவோரொவ் படைவீரர்களுக்கு நன்றி சொல்லிவிட்டுத் தளபதிகளே நோக்கித் திரும்பினர். தன்னுடைய கூடாரத்துக்குச் சென்று படுத்தார்; நன்ருக, நிம்மதியாகத் தூங்கினர். ஆனல் அவருடைய தளபதிகளால் தூங்க முடியவில்லே. அவர்கள் படுக்கையில் பசியோடு இங்குமங்கும் புரண்டு கொண்டிருந்தார்கள். அவர்கள் லுஷ்காவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் காலேயிலும் லுஷ்கா வந்து சேரவில்லே.

சுவோரொவ் துருப்புகளே வரிசையாக நிற்குமாறு உத்தரவு கொடுத்தார். மறுபடியும் விரைந்து செல்லும் நடைப் பயணம் ஆரம்பமாயிற்று. தளபதிகள் உற்சாகமில்லாமல்

நடந்தார்கள்; அவர்களுடைய வயிறுகள் முணுமுணுத்தன. அவர்களால் பசியைத் தாங்க முடியவில்லை. ஆனால் அடுத்த படியாகத் தங்குவதற்கு உத்தரவு வருகின்றவரையிலும் அவர்கள் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான். துருப்புகள் தங்குவதற்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. படைவீரர்களின் அடுப்புகளை நோக்கி சுவோரொவ் போன பொழுது அவருக்குப் பின்னால் எல்லாத் தளபதிகளுமே வந்தார்கள். வேறு என்ன செய்வது? பட்டினி கிடந்து சாக முடியுமா? நெருப்பைச் சுற்றி அவர்களும் உட்கார்ந்து கொண்டார்கள். படைவீரனின் சாதாரண உணவு சமைக்கப் படுகின்ற வரை கூட அவர்களுக்குப் பொறுமையில்லை.

சுவோரொவ் சிரித்தார். சூப்பையும் காஷாவையும் தானே தளபதிகளுக்குப் பரிமாறுவதென்று முடிவு செய்தார். அவர்கள் ஒவ்வொருவருடைய தட்டிலும் சூப்பை ஊற்றும்பொழுது அவர் பின்வருமாறு சொன்னார்:

''நன்றாகச் சாப்பிடுங்கள். இன்னும் வேண்டுமென்றால் வெட்கப்படாமல் கேளுங்கள். இன்று முதல் சாதாரணப் படைவீரனின் வாழ்க்கையை நினைத்துக் குமட்டலடையாதீர்கள். அவனும் ஒரு மனிதப் பிறவிதான். சாதாரணப் படை வீரனை என்னுடைய சொந்த வாழ்க்கையைக் காட்டிலும் அன்போடு நேசிக்கிறேன்.''

புரோஷ்கா

சுவோரொவிடம் பணியாளாக வேலை செய்யுமாறு புரோஷ்காவிடம் கூறப்பட்ட பொழுது அவனுக்கு அதிகமான மகிழ்ச்சி ஏற்பட்டது. ''எனக்கு நல்ல காலம் வந்துவிட்டது'' என்று நினைத்தான். ''இனிமேல் நான் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டியிருக்காது. வழக்கமான வேலைகள், குறிப்பிட்ட முறை எதுவும் எனக்கு இருக்காது. இனிமேல் நான் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை.''

ஆனால் புரோஷ்காவுக்கு அதிகமான ஆச்சரியம் காத்திருந்தது. முதல் நாளன்றே, அதிகாலை நான்கு மணிக்கு யாரோ ஒருவர் அவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பினார்.

அவன் கண்களைத் திறந்து பார்த்தான். அங்கே சுவோரொவ் நின்று கொண்டிருந்தார்.

''இளைஞனே! எழுந்திரு! ருஷ்ய வீரர்கள் அதிகமாகத் தூங்க மாட்டார்கள்!'' என்றார்.

உண்மை என்னவென்ருல் இராணுவ முகாமில் அதிகாலை யில் முதலில் எழுந்திருப்பவர் சுவோரொவ்தான்.

புரோஷ்கா எழுந்தான். அவன் உடனே மற்ருெரு கஷ்டமான காரியத்தைச் செய்ய வேண்டியிருந்தது. ஒரு வாளி நிறையக் குளிர்ந்த தண்ணீர் கொண்டு வருமாறு பீல்டு மார்ஷல் அவனுக்கு உத்தரவிட்டார். அவன் தண்ணீ ரைக் கொண்டு வந்ததும் அவர் உடனே குளிக்க ஆரம்பித் தார்.

சுவோரொவ் தன்னுடைய மார்பில், கழுத்தில், முது கில், கைகளில் தண்ணீரை ஊற்றிக் கொண்டார். புரோஷ்கா கண்களை அகலமாக விரித்து அவரையே பார்த்துக் கொண் டிருந்தான். அவனுக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

''ஏன் இப்படி முழிக்கிருய்?'' என்று சுவோரொவ் உறு மினுர். அவனையும் பனியில் உறைந்திருந்த குளிர்ந்த தண் ணீரில் குளிக்குமாறு உத்தரவிட்டார்.

புரோஷ்காவுக்குக் குளித்துப் பழக்கமில்லை. உடலில் குளிர்ந்த தண்ணீர் பட்டதும் அவன் உடலைக் குறுக்கிக் கொண்டு கீச்சுக் குரலில் கத்தினுன். ஆனுல் சுவோரொவ் அவனைப் பார்த்துச் சிரித்தார்.

''உடம்பு சுத்தமாக இருந்தால்தான் மூளை நன்ருக வேலை செய்யும்'' என்று சொல்லி மறுபடியும் சிரித்தார்.

புரோஷ்கா குளித்த பிறகு சுவோரொவ் அவனைக் கூட்டிக் கொண்டு மைதானத்துக்கு வந்தார்.

''என்னைப் பிடி!'' என்று சொல்லி விட்டு அவர் மை தானத்தில் வேகமாக ஓடினுர்.

அவன் பீல்டு மார்ஷலைப் பிடிப்பதற்காக அரை மணி நேரம் ஓடினுன். அவன் உடம்பில் அதிகமான வலி ஏற் பட்டது; எலும்பு மூட்டுகள் வலித்தன. சுவோரொவ் அதிக வயதானவர். ஆனுல் அவரைப் பார்க்கும் பொழுது, உலாவச் சென்றுவிட்டு அப்பொழுது தான் திரும்பியவர் போலத் தோன்றினுர். அவர் அங்கே நின்று கொண்டு மறுபடியும் அட்டகாசமாகச் சிரித்தார்.

ஆகவே புரோஷ்காவுக்கு சுகமான வாழ்க்கை ஆரம்ப மாகவில்லை; தொடர்ச்சியான சித்திரவதைகள் ஆரம்பமா யின. சுவோரொவ் திடீரென்று தற்காப்பு நிலைகளைப் பார்வை யிட விரும்புவார். புரோஷ்கா அவரோடு நாள் முழு வதும் குதிரையின் மீது உட்கார்ந்து போகவேண்டியிருக்கும்; அது தூக்கித் தூக்கிப் போடுவதை அனுபவிக்க வேண்டி யிருக்கும்; அல்லது இரவில் காவல் காக்கும் ரோந்துப் படை களை சோதிக்கப் புறப்படுவார். புரோஷ்காவுக்கு இரவு முழு வதும் தூக்கம் இல்லாமற் போய்விடும்.

புரோஷ்காவுக்கு இத்தனை துன்பங்களும் போதாது என்பதைப் போல சுவோரொவ் துருக்கி மொழியைக் கற்க ஆரம்பித்தார்; புரோஷ்காவும் அதைக் கற்க வேண்டுமென்று உத்தரவிட்டார்.

''நாசமாய்ப் போன துருக்கியர்கள் எப்படிப் பேசினுல் எனக்கென்ன? நான் அவர்களுடைய மொழியைக் கற்றுக் கொண்டு அவர்கள் பேச்சைப் புரிந்து கொள்வது அவசியமா?''

''என்ன உளறுகிருய்?'' என்று சுவோரொவ் ஆத்திரத்தோடு கேட்டார். ''துருக்கியர்கள் யுத்தத்துக்குத் தயாரிப்புச் செய்து கொண்டிருக்கிருர்கள்; நாம் அவர்களை எதிர்த்துச் சண்டை செய்யப் போகிறேம்.''

அவர் சொன்னதைச் செய்வதைத் தவிர புரோஷ்காவுக்கு வேறு வழியில்லை. அவன் துருக்கிய மொழியின் அரிச்சுவடிப் புத்தகத்தை எடுத்தான்; தன்னை நொந்து கொண்டே அதைக் கற்க ஆரம்பித்தான்.

எங்காவது அமைதியான இடத்துக்குப் போய் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவன் நினைத்தான். தன்னுடைய பழைய படைப்பிரிவுக்குத் தன்னை மறுபடியும் அனுப்பிவிடுமாறு கேட்கலாமா என்று நினைத்தான். ஆனுல் பீல்டு மார்ஷலிடம் அவனுக்குப் பாசம் ஏற்பட்டு விட்டது. அவரோடு சேர்ந்து கஷ்டப்படுவதும் அவனுக்குப் பழகி விட்டது. தன்னுடைய கடைசிக் காலம் வரை அவன் சுவோரொவிடம் பணிவோடும் நேர்மையோடும் சேவை செய்தான்.

ஒரு உண்மையான வீரன்

ஒரு சமயத்தில் சுவோரொவ் ஒரு படைவீரனிடம் சில கேள்விகளைக் கேட்டார்:

''பூமியிலிருந்து சந்திரன் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?''

''சுவோரொவின் விரைந்து செல்லும் நடைப் பயணத்தைப் போல இரண்டு மடங்கு தூரம்'' என்று அந்தப் படைவீரன் திறமையாக பதிலளித்தான்.

பீல்டு மார்ஷல் ஆச்சரியத்தில் மூழ்கினுர். எப்படி பதில் சொல்லி விட்டான். இவன் உண்மையான வீரனே என்று புரிப்படைந்தார்.

படைவீரர்களிடம் கேள்வி கேட்கும் பொழுது அவர்கள் தயங்காமல் சாமர்த்தியமாக பதில் சொன்னுல் சுவோ

ரொவுக்கு மிகவும் பிடிக்கும். எனவே அவர் இந்தப் படை வீரனைப் பாராட்டினார்; அவன் பதிலை ரசித்தார். ஆனால் அவனை மடக்க வேண்டுமென்று விரும்பினார்.

''சுவோரொவ் இந்தப் பயலை சமாளிக்க முடியவில்லை என்பது உண்மைதானா?'' என்று அவர் தன்னைத் தானே கேட்டுக் கொண்டார்.

சில நாட்களுக்குப் பிறகு அவர் மறுபடியும் அவனைச் சந்திக்க நேர்ந்தது. அவர் உடனே அவனிடம் கேள்வி கேட்டார்:

''வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களின் எண்ணிக்கையைச் சொல்.''

''தளபதி அவர்களே! ஒரே ஒரு நிமிடம் பொறுத்திருங்கள். இதோ எண்ணிச் சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அவன் வானத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

சுவோரொவ் அங்கே நின்றார், வெகுநேரம் நின்றார். குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. அந்தப் படைவீரன் வானத்திலிருக்கும் நட்சத்திரங்களை நிதானமாக எண்ணிக் கொண்டிருந்தான்.

சுவோரொவ் கோபத்தோடு அந்த இடத்தை விட்டுப் போனார். ''எவ்வளவு சாமர்த்தியசாலி!'' என்று மறுபடியும் அவனைப் பாராட்டினார். ''இனி மூன்றாவது தடவை அவனைச் சந்தித்தால், அவனை என் காலில் விழச் செய்து விடுகிறேன்.''

அவர் மூன்றாவது தடவையாக அந்தப் படைவீரனைச் சந்தித்தார். அவரிடம் இப்பொழுது தயாராக ஒரு கேள்வி இருந்தது.

''இளைஞனே! என்னுடைய கொள்ளுப் பாட்டியின் பெயர் என்ன?'' என்று கேட்டார்.

இந்தக் கேள்வியைப் பற்றி சுவோரொவ் முழுத் திருப்தியடைந்தார். அவருடைய கொள்ளுப்பாட்டி எந்த வகையிலும் பிரபலமடையாதவள். எனவே ஒரு படைவீரனுக்கு அவள் பெயர் தெரிந்திருக்கப் போவதில்லை. அவர் மகிழ்ச்சியில் தன்னுடைய கைகளைத் தேய்த்துக் கொண்டார். ''என்னப்பா இளைஞனே! இப்பொழுது மாட்டிக் கொண்டாயா?'' என்று சொல்ல நினைத்தார். அந்த நேரத்தில் அந்தப் படைவீரன் கேள்விக்கு பதிலை உரக்கக் கத்தினான்.

''தளபதி அவர்களே! உங்கள் கொள்ளுப் பாட்டியின் பெயர் விக்டோரியா'' என்றான்.

சுவோரொவ் மனதில் ஆனந்தம் பொங்கியது. ''தப்பு. அவள் பெயர் விக்டோரியா அல்ல'' என்றார்.

''விக்டோரியா! விக்டோரியா!'' என்று படைவீரன் அந்தப் பெயரைப் பல முறை உச்சரித்தான். ''விக்டோரியா என்ற பெயரில் நம்முடைய பீல்டு மார்ஷலுக்கு ஒரு கொள்ளுப் பாட்டி இருந்திருக்க வேண்டுமே.''

இந்த பதிலைக் கேட்டு சுவோரொவ் வியப்படைந்தார். எவ்வளவு நயமான பதில். உண்மையிலே இவன் கெட்டிக் காரன் என்று அதிசயித்தார்.

''நீ மிகவும் கெட்டிக்காரன் என்பதால் இந்தக் கேள் விக்கும் பதில் சொல். உன்னுடைய படைத்தளபதிக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் என்ன?''

படைவீரன் சிறிதும் தயங்காமல் பதிலளித்தான்.

''என்னுடைய படைத்தளபதி என்னை சார்ஜென்ட் பத விக்கு உயர்த்த விரும்பினுல் கூட அவரால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனுல் அந்த எண்ணம் உங்கள் மனதில் லேசாகத் தோன்றினுல் கூடப் போதும். நான்...''

சுவோரொவ் என்ன செய்ய முடியும்? அந்தப் படைவீரனை சார்ஜென்ட் பதவிக்கு உயர்த்துவது அவசியமாயிற்று. அவர் தன்னுடைய கூடாரத்துக்குத் திரும்பினுர். அந்த இளம் படைவீரனைப் பற்றி மிக உயர்வாகப் பேசினுர்.

''கடவுளே! என்னை எப்படி முட்டாளாக்கி விட்டான் தெரியுமா? அவன் உண்மையான வீரன், சரியான ருஷ்ய வீரன்!'' என்றுர்.

''விலகிப் போ!''

சுவோரொவ் எப்பொழுதும் தலை தெறிக்கும் வேகத்தில் பிரயாணம் செய்ய விரும்புவார். குதிரையின் மீது சவாரி செய்தாலும் சறுக்கு வண்டியில் பயணம் செய்தாலும் அவர் முகத்தில் காற்று சுள்ளென்று அடிக்க வேண்டும்; அவருக்கு மூச்சுத் திணற வேண்டும். அவருக்கு அது தான் மிகவும் பிடிக்கும்.

அவர்கள் ருஷ்யாவின் வட பகுதியில் இருந்தார்கள். ஒரு நாள் அவர் கோட்டைகளைப் பார்வையிடுவதற்காக புரோஷ்காவுடன் சறுக்கு வண்டியில் புறப்பட்டார். அதே சமயத்தில் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து ஒரு அதிகாரி சுவோ ரொவிடம் கொடுப்பதற்காக முக்கியமான கடிதங்களோடு வந்து கொண்டிருந்தார். அவர் தலைமையிடத்துக்கு வந்த தும் வியர்வை வழிந்து கொண்டிருந்த குதிரைகளைக் கடி வாளத்தை இழுத்து நிறுத்தினுர். பிறகு அங்கேயிருந்தவர் களிடம் உரத்த குரலில் பேசினுர்.

''பீல்டு மார்ஷல் சுவோரொவ் எங்கே இருக்கிருர்? நான் அவருக்கு முக்கியமான கடிதங்களைக் கொண்டு வந்திருக்கிறேன்.''

''அவர் போய்விட்டார்'' என்று விளக்கிக் கூறப்பட்டது.

''எங்கே போயிருக்கிருர்?''

''ஒஸேர்னயா கோட்டைக்கு.''

அந்த அதிகாரி உடனே ஒஸேர்னயா கோட்டைக்கு விரைந்தார்.

''சுவோரொவ் இருக்கிருரா?''

''இல்லையே. அவர் போய்விட்டார்.''

''எங்கே?''

''லிக்கோலா கோட்டைக்கு.''

அவர் லிக்கோலா கோட்டைக்கு வேகமாகச் சென்ருர்.

''சுவோரொவ் இருக்கிருரா?''

''அவர் கியுமென்-கிராட் கோட்டைக்குப் போய்விட்டார்.''

அவர் கியுமென்-கிராட் கோட்டைக்கு விரைந்தார்.

''சுவோரொவ் இருக்கிருரா?''

''அவர் போய்விட்டார்...''

சுவோரொவ் இதுவரை எந்த இடையூறுமில்லாமல் எல்லாக் கோட்டைகளையும் பார்வையிட்டுவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். ஆனுல் இங்கே ஒரு இடையூறு ஏற்பட்டது. அவருடைய குதிரைகளில் ஒன்றுக்குக் கால் வளைந்து விட்டது. எனவே அவர் புறப்பட்ட இடத்துக்குத் திரும்ப வேண்டியிருந்தது. அவர்கள் மிகவும் மெதுவாக ஆடி அசைந்து போய்க் கொண்டிருந்தார்கள். வண்டிக்காரனின் பெட்டியில் உட்கார்ந்திருந்த புரோஷ்கா சிந்தனையில் மூழ்கியிருந்தான். சுவோரொவ் இருப்புக் கொள்ளாமல் துடித்தார். அவ்வப்பொழுது குதிரைகளை வேகமாக ஓட்டு என்று தனது பணியாளின் முதுகில் குத்துவார்.

''தளபதி அவர்களே! வேகமாகப் போக முடியாது. குதிரைக்குக் காயம் பட்டிருக்கிறது'' என்று புரோஷ்கா விடாப்பிடியாக பதிலளித்தான்.

சுவோரொவ் சிறிது நேரம் அமைதியாகக் காத்துக் கொண்டிருப்பார். பிறகு புரோஷ்காவின் முதுகில் மறுபடியும் குத்துவார். பீல்டு மார்ஷலால் அசையாமல் உட்கார்ந்திருக்க முடியவில்லை. வண்டி மெதுவாகப் போவதைத் தாங்கிக் கொள்ளும் அளவுக்கு அவருக்குப் பொறுமையில்லை.

அவர்கள் இரண்டு வெர்ஸ்டா தூரம் போன பிறகு தனக்கு எதிரே மூன்று குதிரை பூட்டிய வண்டி ஒன்று வந்து கொண்

டிருப்பதை சுவோரொவ் கவனித்தார். அந்தக் குதிரைகள் வயலின் மீது பறந்து வந்து கொண்டிருந்தன. அவற்றின் குளம்புகள் மிதித்துப் பனி தெறித்துச் சிதறியது. குதிரைகளின் மூக்குகளிலிருந்து நீராவி நீரோடையைப் போல வந்து கொண்டிருந்தது.

இதைக் கண்ட சுவோரொவ் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தார். அவர் அந்த வண்டியை கவனித்தார். வண்டியோட்டியின் இடத்தில் வண்டியோட்டிக்குப் பதிலாக ஒரு இளம் அதிகாரி உட்கார்ந்திருந்தார். அவர் கைகளில் கடிவாளக் கயிறை வைத்திருந்தார்; இடையில் சவுக்கைச் சொருகியிருந்தார். அவர் தலையில் அணிந்திருந்த பாபாகா தொப்பி காது வரை வந்தது. அவருடைய சுருள் சுருளான தலை முடி காற்றிலே அசைந்தது.

''என்ன துணிச்சல்! என்ன துணிச்சல்!'' சுவோரொவினால் தன்னுடைய மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

''தளபதி அவர்களே! கடிதம் கொண்டு வருகின்ற தூதராகத் தெரிகிறது. அவரைப் பார்க்கும் பொழுது ஜாரிடமிருந்து வருபவராகத் தெரிகிறது'' என்றான் புரோஷ்கா.

சுவோரொவ் இதயம் நிறைந்த பூரிப்போடு அந்த அதிகாரியைப் பார்த்துக் கொண்டிருந்தார். குளிர்காலத்தில் அந்தச் சாலை நன்கு மேவப்படாமல் குறுகலாக இருந்தது. அதில் வண்டியை ஓட்டுவது சிரமம். ஆனால் குதிரைகள் வேகமாக ஓடிவந்து கொண்டிருந்தன. குதிரைகளின் சீறலும் சறுக்கு வண்டி கிறீச்சிடும் சத்தமும் அதற்குள் காதுகளில் விழுந்தது.

''விலகிப் போ!'' என்று அதிகாரி சத்தம் போட்டார்.

புரோஷ்கா தயங்கினான். மற்றவர்களுக்கு வழிவிடுகின்ற அனுபவம் அவனுக்கு இதுவரை கிடையாது.

''விலகிப் போ!'' என்று அதிகாரி மறுபடியும் கத்தினார். அதற்குள் அவருடைய வண்டி சுவோரொவின் வண்டியின் மீது மோதியது... டமார்!

சுவோரொவும் புரோஷ்காவும் வண்டியிலிருந்து தூக்கி எறியப்பட்டனர். அவர்கள் பனியில் இடுப்பு வரை அமுங்கினார்கள்.

அந்த அதிகாரி வேகமாகச் சென்று விட்டார். அவர் சீழ்க்கை அடித்துக் கொண்டு வெகு தூரம் போய்விட்டார்.

புரோஷ்கா எழுந்து நின்றான், தன் உடைகளில் ஒட்டியிருந்த பனியை உதறினான். மறைந்து கொண்டிருந்த அதிகாரியின் உருவத்தைப் பார்த்துத் திட்டினான்.

''சத்தம் போடாதே'' என்று அதட்டினார் சுவோரொவ். அவர் மறுபடியும் சறுக்கு வண்டியைப் பார்த்துப் பூரித்

பாபாகா — ஆட்டுத்தோலில் செய்யப்பட்ட காக்கேஸியத் தொப்பி; உயரமாக இருக்கும்

தார். "என்ன துணிச்சல். அவன்தான் தைரியசாலி" என்ருர்.

அந்த அதிகாரி ருஷ்யாவின் வட பகுதியில் மூன்று நாட்கள் இங்குமங்கும் வேகமாகப் போய்க் கொண்டிருந்தார். கடைசியில் ஒருவழியாக சுவோரொவைச் சந்தித்தார்.

சுவோரொவ் கடிதங்களை வாங்கிக் கொண்டார். அந்த அதிகாரியை கவனித்தார். பிறகு திடீரென்று தன் விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அதிகாரியிடம் கொடுத்தார்.

"தளபதி அவர்களே! இது எதற்கு?" என்று அதிகாரி ஆச்சரியத்தில் கேட்டார்.

"உன்னுடைய துணிச்சலுக்காக!"

அதிகாரி ஒன்றும் புரியாமல் அங்கே நின்ருர். சுவோரொவ் தொடர்ந்து பேசினுர்:

"எடுத்துக்கொள்! எடுத்துக்கொள்! என்னுடைய அன்பளிப்பு இது. துணிவுக்காக! ருஷ்ய ஆன்மாவுக்காக!"

துப்பாக்கி ஈட்டி

ஒரு சமயம் சுவோரொவ் நோவ்கரோட் மாநிலத்தில் தன்னுடைய நண்பரைப் பார்க்கப் போயிருந்தார். மாலை நேரங்களில் நண்பர்களிருவரும் வீட்டிலிருந்து கொண்டு பழைய நண்பர்கள், இராணுவப் பயணங்கள், சண்டைகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசி மகிழ்ந்தார்கள். பகலில் சுவோரொவ் பக்கத்திலிருந்த காட்டுக்குப் போய் அந்தப் பகுதியை சுற்றிப் பார்ப்பார். அந்தக் காட்டில் ஒரு பெரிய ஓக் மரத்தின் அருகில் அவர் சான்கா விட்ரின் என்ற சிறுவனைச் சந்தித்தார்.

"நீங்கள் இராணுவத்தில் இருக்கிறீர்களா?" என்று சான்கா சுவோரொவைக் கேட்டான்.

"ஆமாம்" என்று பீல்டு மார்ஷல் பதிலளித்தார்.

"எங்கேயிருந்து வருகிறீர்கள்?"

"போர்முனையிலிருந்து வருகிறேன்."

"சுவோரொவைப் பற்றிச் சொல்லுங்கள்.

பீல்டு மார்ஷல் தன்னுடைய கண்களைக் குறுக்கிக் கொண்டு அந்தச் சிறுவனை விஷமத்தனமாகப் பார்த்தார்.

"சுவோரொவ் என்ரு சொன்னுய்? நீ குறிப்பிடும் சுவோரொவ் என்பவர் யார்?"

''உங்களுக்குத் தெரியாதா? அவர் துருக்கியர்களுக்கு எதிராகச் சண்டை போட்டார். இஸ்மாயில் கோட்டையைப் பிடித்தது அவர்தான். பீல்டு மார்ஷல். அவரைத் தெரியாதா?''

''இல்லே, எனக்குத் தெரியாது'' என்ருர் சுவோரொவ்.

''சுவோரொவைப் பற்றித் தெரியாமல் நீங்கள் எப்படிப் படைவீரராக இருக்க முடியும்?'' என்று சான்கா சீறினுன். அந்தச் சிறுவன் தரையில் கிடந்த குச்சியைக் கையிலே எடுத்தான். ''ஹுரே! வீரர்களே! என்னைப் பின்தொடருங்கள்! முன்னேறுங்கள்!'' என்று சுவோரொவைப் போலவே முழங்கினுன்.

சான்கா பீல்டு மார்ஷலேச் சுற்றி ஓடிவந்தான். சுவோரொவின் வயிற்றில் குத்தப் போவது போல அந்தக் குச்சியை ஓங்கினுன். அவன் நடிப்பு படைவீரனைப் போலவே தத்ரூபமாக இருந்தது.

''ஹோ! இவன் பெரிய ஆள்தான்'' என்று சுவோரொவ் அதிசயித்தார். தன்னுடைய பெயரும் வீரச் செயல்களும் குழந்தைகளுக்குக் கூடத் தெரிந்திருப்பதைப் பற்றி அவர் மகிழ்ச்சி அடைந்தார்.

சான்கா ஓட்டத்தை நிறுத்தினுன். குச்சியை இடைவாரில் சொருகிக் கொண்டு பேசினுன்.

''ஐயா! உங்களுடைய துப்பாக்கி ஈட்டியை எனக்குக் கொடுங்கள்.''

''அதை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிருய்?

''யுத்த விளேயாட்டு விளேயாடுவேன். அந்த ஈட்டியைக் கொண்டு எதிரியைக் குத்துவேன்.''

''அடப்பாவமே! என்னிடம் துப்பாக்கி ஈட்டி இல்லேயே'' என்ருர்.

''பொய் சொல்லாதீர்கள்! ஏய்க்காதீர்கள்!'' என்ருன் சான்கா. ''அதெப்படி, துப்பாக்கி ஈட்டி இல்லாத படைவீரனு?'' என்ருன்.

''உண்மையாகச் சொல்கிறேன். என்னிடம் துப்பாக்கி ஈட்டி இல்லே.'' சுவோரொவ் தன்னுடைய கைகளே விரித்துக் காட்டினுர்.

''அப்படியானுல் எனக்கு ஒரு துப்பாக்கி ஈட்டி கொண்டு வருகிறீர்களா?'' சான்கா அவரை விடாமல் கேட்டான்.

சான்கா அவரை நச்சரித்தான். கடைசியில் சுவோரொவ் அவனுக்கு ஒரு துப்பாக்கி ஈட்டி தருவதாக உறுதி கொடுத்தார்.

மறுநாள் சான்கா காட்டிலிருந்த அந்தப் பழைய ஓக் மரத்தை நோக்கி ஓடினுன். மாலைவரையிலும் அங்கேயே காத்திருந்தான். ஆனுல் அந்தப் ''படைவீரன்'' மறுபடியும் வரவில்லை.

''பொய்யன்! அந்தப் படைவீரன் ஒரு உதவாக் கரை'' என்று சான்கா கோபமடைந்து திட்டினுன்.

எனினும் சில நாட்களுக்குப் பிறகு சான்கா வசித்து வந்த குடிசைக்கு ஒரு நபர் குதிரை மீது வந்தார். அந்தச் சிறுவனைக் கூப்பிட்டு அவனிடம் ஒரு பொட்டலத்தைக் கொடுத்தார்.

''பீல்டு மார்ஷல் சுவோரொவ் உனக்குக் கொடுத் தனுப்பியிருக்கிருர்.''

சான்கா திறந்த வாயை மூடவில்லை. அதைக் கேட்பதற்கு அவனுக்கு அவ்வளவு ஆச்சரியமாக இருந்தது. அவ னுல் தன்னுடைய கண்களையும் காதுகளையும் நம்ப முடிய வில்லை. மௌனமாக அந்தப் பொட்டலத்தைப் பார்த்த படியே நின்று கொண்டிருந்தான். பீல்டு மார்ஷல் தனக்கு, சான்காவுக்கு ஒரு பொட்டலத்தைக் கொடுத்தனுப்பியிருக் கிருர் என்பது உண்மையாக இருக்குமா?

விவசாயிகள்—ஆண்களும் பெண்களும்—விட்ரின் குடிசைக்கு ஓடி வந்தார்கள். குழந்தைகள் அங்கே கூட்டமாக வந்துவிட்டார்கள். நடக்க முடியாத காச்கின்கூட அங்கே நொண்டிக் கொண்டே வந்து சேர்ந்தான்.

''பொட்டலத்தைப் பிரி! பொட்டலத்தைப் பிரி!'' என்று விவசாயிகள் கத்தினுர்கள்.

சான்கா பொட்டலத்தைப் பிரிக்கும்பொழுது அவ னுடைய கைகள் நடுங்கின. அதில் ஒரு துப்பாக்கி ஈட்டி இருந்தது.

''சுவோரொவின் துப்பாக்கி ஈட்டி. யாராலும் வெல்ல முடியாதது'' என்று காச்கின் உரத்த குரலில் பேசினுன்.

''கடவுளே! உண்மையான துப்பாக்கி ஈட்டி'' என்று அங்கேயிருந்த பெண்கள் சிலுவைக் குறியிட்டுக் கொண் டனர்.

''எங்களுக்குக் காட்டு! எங்களுக்குக் காட்டு!'' என்று குழந்தைகள் கெஞ்சின.

இப்பொழுதுதான் சான்கா சுய நினைவுக்கு வந்தான். அவன் ஒரு வழியாக வாயை மூடினுன். அவனுடைய கைகளின் நடுக்கம் நின்றது. என்ன நடந்திருக்க வேண்டும் என்பது அவனுக்குப் புரிந்தது. காட்டில் ஒரு புதியவரைச் சந்தித்த கதையை அவன் தன்னுடைய தகப்பனுர், தாயார்,

காச்கின், அந்த கிராமத்து விவசாயிகள், குழந்தைகள் எல்லோருக்கும் சொன்னுன்.

சான்கா இந்தக் கதையை—அதன் எல்லா அம்சங்களோடும்—பல வருடங்கள் வரையிலும் சொல்லிக் கொண்டிருந்தான்.

துப்பாக்கி ஈட்டியை என்ன செய்தான்?

உலகத்திலுள்ள வேறு எப்பொருளையும் காட்டிலும் அந்தத் துப்பாக்கி ஈட்டியை விலைமதிப்பற்றதாக அவன் கருதினுன். அது பக்கத்தில் இல்லாவிட்டால் அவனுக்குத் தூக்கம் வராது. அவன் அதைப் பளபளவென்று தேய்த்து வைத்திருந்தான். அதற்கென்று ஒரு உறை தைத்தான். அதை எப்பொழுதும் தன்னேடு ஒரு விலைமதிப்பற்ற பொருளைப் போல எடுத்துக் கொண்டு சென்றுன். சான்கா வளர்ந்து படைவீரஞன பிறகு, அந்தத் துப்பாக்கி ஈட்டியை எடுத்துக் கொண்டுதான் யுத்தத்துக்குப் போனுன்; அங்கே சுவோரொவுக்குப் புகழ் சேர்க்கும் வகையில் அதைப் பயன்படுத்தினுன்.

முகப்பவுடர் வெடிமருந்தாகாது

சக்கரவர்த்தி முதலாம் பாவெல் தம்முடைய இராணுவத்தை மாற்றியமைக்க விரும்பினுர். ருஷ்யர்கள் காரியங்களைச் செய்கின்ற முறை அவருக்குப் பிடிக்கவில்லை; அந்நிய நாட்டு முறைகளை, குறிப்பாக ஜெர்மன் முறைகளை அவர் விரும்பினுர். ஆகவே அவர் ருஷ்ய இராணுவத்தை பிரஷ்ய பாணியில், அதாவது ஜெர்மன் பாணியில் மாற்றியமைக்க விரும்பினுர்.

தமது படைவீரர்கள் தலையில் நீளமான சடை வைத்துக் கொள்ள வேண்டும்; நெற்றியில் சுருள்சுருளாக முடி விழ வேண்டும்; முகத்தில் பவுடர் பூசியிருக்க வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார். அவ்வாறு ஒப்பனை செய்த ஒரு படைவீரனை யாராவது பார்த்தால் பொம்மை என்று நினைப்பார்களே தவிர ருஷ்யப் படைவீரன் என்று நினைக்க மாட்டார்கள்.

படைவீரர்கள் அணிவகுப்பு முறைகளைப் பற்றிப் படிக்கத் தொடங்கினுர்கள். ஆயுதங்களைக் கையாளுவது எப்படி, துப்பாக்கி ஈட்டியைக் கொண்டு குத்துவது எப்படி என்று தெரிந்து கொள்வதற்குப் பதிலாகக் குதிகாலை ஊன்றிக் கச்சிதமாகத் திரும்புவது எப்படி, காலடி தவருமல் அணி

வகுத்துப் போவது எப்படி என்று கற்றுக் கொள்ளத் தொடங்கினர்கள்.

இந்தப் புதிய முறை சுவோரொவ் மனதில் அதிகமான அருவருப்பை ஏற்படுத்தியது. அவர் தன்னுடைய அபிப்பிராயத்தை மறைக்காமல் அடிக்கடி எடுத்துக் கூறினர்.

''ருஷ்யர்கள் எப்பொழுதும் பிரஷ்யர்களைத் தோற்கடித்திருக்கிறர்கள். நாம் எதற்காக அவர்களைக் காப்பியடிக்க வேண்டும்?'' என்று பீல்டு மார்ஷல் கேட்டார்.

ஒரு சமயம் முதலாம் பாவெல் இராணுவ அணிவகுப்பைப் பார்வையிடுவதற்கென்று சுவோரொவை அழைத்தார். அதிகமான புகழ்பெற்ற ருஷ்ய படைப்பிரிவுகள் அவருக்கு முன்பு அணிவகுத்துச் சென்றன. சுவோரொவ் தன்னுடைய பழைய வீரர்களை அடையாளம் காண முடியாது திகைத்தார். அவர்களுடைய துணிவும் வீரமும் எங்கோ மறைந்து விட்டன. சாவி கொடுத்தால் நடக்கின்ற பொம்மைகளைப் போல அவர்கள் அணிவகுத்து நடந்தார்கள். சாலைக் கற்களின் மீது அவர்களுடைய குதிகால்கள் பட்டு ஓசையுண்டாக்கின; பின்னல் சடைகள் அவர்களுடைய முதுகுகளில் பட்டு ஒலியெழுப்பின... சக்கரவர்த்தி திருப்தியோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

''நன்ருகப் பாருங்கள். இன்னும் சிறிது பயிற்சி கொடுத்தால் போதும், பிறகு நாம் பிரஷ்யர்களுக்கு இணையாகி விடுவோம்'' என்று அவர் சுவோரொவிடம் கூறினர்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சுவோரொவின் முகம் அருவருப்பைக் காட்டியது. அவர் தன்னையறியாமல் நடுங்கினர்.

''சக்கரவர்த்தி அவர்களே! அதில் அப்படி என்ன சிறப்பு இருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. ருஷ்யர்கள் எப்போதும் பிரஷ்யர்களைத் தோற்கடித்திருக்கிறர்கள். அப்படியிருக்க இப்பொழுது பிரஷ்யர்களைப் பற்றி நாம் நினைத்துப் பெருமைப்படுவது ஏன்?''

சக்கரவர்த்தி சுவோரொவை முறைத்துப் பார்த்துவிட்டு மௌனமாக இருந்தார். சிறிது நேரத்துக்குப் பிறகு மறுபடியும் சுவோரொவ் பக்கமாகத் திரும்பினர்.

''பாருங்கள்! நன்ருகப் பாருங்கள்! எவ்வளவு அழகான சடைகள்! எவ்வளவு கவர்ச்சியான முடிச் சுருள்கள்!'' என்ருர்.

''முடிச் சுருள்கள்'' என்று உறுமினர் பீல்டு மார்ஷல்.

இப்பொழுது சக்கரவர்த்தியால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவர் பீல்டு மார்ஷல் பக்கமாகத்

திரும்பி அவர் அணிந்திருந்த பழைய கால இராணுவ உடையைப் பிடித்து இழுத்தார்.

''இந்த உடையை மாற்றுங்கள்! உடனே மாற்றுங்கள்! இது என்னுடைய உத்தரவு!'' என்ருர்.

சுவோரொவ் அப்பொழுது சொன்ன வாக்கியங்கள் மிகவும் பிரபலமடைந்து விட்டன.

''முகப் பவுடர் வெடி மருந்தாகாது; முடிச் சுருள் பீரங்கியாகாது; சடை வாளாகாது. சக்கரவர்த்தி அவர்களே! நான் ஜெர்மானியனல்ல; சுத்தமான இரத்தம் ஓடுகின்ற ருஷ்யன்!'' என்று சொல்லிவிட்டு சுவோரொவ் அணிவகுப்பை விட்டு வெளியேறினர்.

சக்கரவர்த்தி பாவெலுக்குப் பெருங் கோபமேற்பட்டது. அந்த முரட்டுத்தனமான கிழவரைக் கோஞ்சான்ஸ்கொயே கிராமத்துக்கு நாடு கடத்தினர்.

இறைச்சி கொழுப்பு

ஆல்ப்ஸ் மலைகள் உயரமானவை; அவற்றில் செங்குத்தான சரிவுகளும் ஆழம் காண முடியாத படுகுழிகளும் உண்டு. ஏறமுடியாத சிகரங்களும் இடியோசையைப் போல சத்தமிடுகின்ற நீர்வீழ்ச்சிகளும் உண்டு. மலைச் சிகரங்களில் எப்பொழுதும் பனி மூடியிருக்கும். அங்கே நிரந்தரமாகப் பனிக் காற்றடித்துக் கொண்டிருக்கும்.

சுவோரொவின் கடைசிப் படையெடுப்பின்போது அவரும் அவருடைய வீரம்நிறைந்த படைவீரர்களும் ஆல்ப்ஸ் மலையின் பிளவுகளிலும் நீரோட்டங்களிலும் புகுந்து சென்ருர்கள்.

பனிப்புயல்கள்... பனிப்பாறைகள் சரிந்து வருதல்... மூடுபனி. அது நீண்ட பயணம். அந்தப் பாதைகளில் யாரும் இதுவரை போனதில்லை. படைவீரர்கள் கால்தவறிக் கீழே விழுந்தனர். அவர்களுடைய உடல்கள் மலைப்பிளவுகளில் மறைந்தன. அவர்கள் கனமான பீரங்கிகளை இழுத்துக் கொண்டு மலையில் ஏற வேண்டியிருந்தது. நோயினுலும் மூடுபனியினுலும் கடுமையாக பாதிக்கப்பட்ட தங்கள் தோழர்களையும் சுமந்து கொண்டு மலையில் ஏற வேண்டியிருந்தது.

எதிரிகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒவ்வொரு மைல் இடைவெளியிலும் அவர்கள் ஒரு புதிய சண்டையில் ஈடுபட்டார்கள்.

எத்தனை சிரமங்கள் ஏற்பட்ட போதிலும் ருஷ்ய இரா ணுவம் மலைகளின் வழியாக முன்னேறியது; எதிரிகளையும் மீறி முன்னேறியது. எப்படியாவது ஆல்ப்ஸ் மலையைக் காத்து விடுவதென்று அவர்கள் உறுதி கொண்டிருந்தனர்.

அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவு மிகவும் குறை வாக இருந்தது. உலர்ந்த ரொட்டிகள் மழையில் நனைந்து கெட்டுவிட்டன. போகும் வழியில் அங்கொன்றும் இங்கொன்று மாகவே ஸ்விஸ் கிராமங்கள் தென்பட்டன. அந்த கிராமங் களிலும் அவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை. படைவீரர் கள் செத்துப் போன குதிரைகளின் இறைச்சியைச் சாப்பிட ஆரம்பித்தார்கள்; மலையிடுக்குகளில் கிழங்குகளைத் தோண்டி யெடுத்துச் சாப்பிட்டார்கள். இவை தீர்ந்த பிறகு குதிரை களின் தோலைச் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

படைவீரர்கள் எடை குறைந்து, எலும்புந் தோலுமாகக் காட்சியளித்தனர். அவர்கள் இப்பொழுது தங்களுடைய இடைவார்களை மாட்டும் பொழுது, கடைசியாக இருக்கும் திருகை மாட்டினார்கள். முட்டைகோசு சூப்பின் வாசனையை யும், சூடான காஷா தங்களுடைய வாய்களில் உருகுவதாக வும் கற்பனையில் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே நடந்தார்கள்.

''ஒரு ரொட்டித் துண்டு, பன்றிக் கொழுப்பில் ஒரு பகுதியாவது கிடைக்காதா?'' என்று படைவீரர்கள் பெரு மூச்செறிந்தார்கள்.

ஒரு நாள் மலையின் மீது எங்கோ ஒரு இடத்திலிருந்த குடிசையில் ஒரு துண்டு உண்மையான கொழுப்பு அவர்க ளுக்குக் கிடைத்தது. அது சிறு துண்டுதான்; உள்ளங்கை அளவு இருக்கும். படைவீரர்கள் சுற்றி நின்று கொண்டு அதைப் பார்த்தார்கள். அவர்களுடைய கண்கள் பிரகாசித்தன; நாசித்துவாரங்கள் விரிந்தன.

அதைப் பங்கு போட்டுப் பிரித்துக் கொள்வதென்று அவர்கள் முடிவு செய்தார்கள். ஆனால் திடீரென்று அவர் கள் தங்களுடைய முட்டாள்தனத்தை உணர்ந்தார்கள். ஒரு மனிதனுக்குக் கூடப் போதாததை அவர்கள் அத்தனை பேரும் எப்படிப் பிரித்துக் கொள்ள முடியும்?

படைவீரர்கள் மத்தியில் வேறுபாடுகள் ஏற்பட்டுக் கசமுசவென்று பேசிக் கொண்டனர்.

''சீட்டுக் குலுக்கிப் போடுவோம்'' என்று யோசனை கூறினார் ஒரு படைவீரர்.

''யார் அதைக் கண்டெடுத்தாரோ, அவரே அதைச் சாப்பிடட்டும்'' என்று புது யோசனை சொன்னார் இன்னொரு வர்.

''இல்லே. எல்லோருக்கும் பங்கு கிடைக்கும் படி நாம் அதைப் பிரிக்க வேண்டும்'' என்முர் மூன்முவது படைவீரர்.

விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. திடீரென்று ஒருவர் பேசினுர்:

''சகோதரர்களே! நான் சொல்வது இதுதான். இந்தக் கொழுப்புத் துண்டை சுவோரொவுக்குக் கொடுப்போம்.''

''இது நல்ல யோசனே. சுவோரொவ், சுவோரொவ்!'' என்று எல்லோரும் ஒரே குரலில் கத்திஞர்கள்.

படைவீரர்கள் சுவோரொவின் பணியாளான புரோஷ்காவைச் சந்தித்து அந்தக் கொழுப்புத் துண்டைக் கொடுத்து ''இதை சுவோரொவிடம் கொடு'' என்று சொன்ஞர்கள்.

படைவீரர்கள் திருப்தியடைந்தனர்; புரோஷ்காவுக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்தக் கொழுப்புத் துண்டு எத்தனே நாளேக்கு வரும் என்று அவன் கணக்குப் போட ஆரம்பித்தான். ஒவ்வொரு நாளும் ஒரு விரல் பருமனுள்ள அளவை வெட்டிஞல் அந்தக் கொழுப்புத் துண்டு ஒரு வாரத்துக்கு வரும் என்று முடிவு செய்தான்.

புரோஷ்கா சுவோரொவிடம் தகவலேக் கூறிஞன்.

''கொழுப்பா? அது எங்கேயிருந்து வந்தது?'' என்று அவர் ஆச்சரியத்தோடு கேட்டார்.

புரோஷ்கா அவரிடம் படைவீரர்கள் தெரிவித்த தகவலேக் கூறிஞன். சுருக்கமாகச் சொல்வதென்முல் அது படைவீரர்களின் அன்பளிப்பு.

''என் படையினர்! என்னுடைய வீரர்கள்'' என்று சுவோரொவ் கண்களில் கண்ணீர் மல்க வியந்து கூறிஞர். திடீரென்று அவர் புரோஷ்கா பக்கம் திரும்பிஞர். ''நீ எப்படி இதை வாங்கலாம்? என்ன தைரியம் உனக்கு! படைவீரர்கள் குதிரைத் தோலேச் சாப்பிடுகிருர்கள்; எனக்கு மட்டும் கொழுப்பு உணவா?'' என்று ஆத்திரமாகக் கேட்டார்.

''அவர்கள் சாதாரணப் படைவீரர்கள் தானே!'' என்முன் புரோஷ்கா.

''அவர்கள் படைவீரர்கள் தான் ஆஞல் என்னுடைய உயிரைக் காட்டிலும் அவர்கள்தான் எனக்கு முக்கியம். உடனே ஓடு! அவர்களிடம் போய் இதை நான் நன்றி கூறித் திருப்பியனுப்பிவிட்டேன் என்று அவர்களிடம் கொடுத்துவிடு. என்னுடைய இதயம் நிறைந்த அன்பை அவர்களிடம் சொல்'' என்முர்.

''ஆஞல் அவர்கள்தானே உங்களுக்காக அதைக் கொடுத்தார்கள்'' என்று புரோஷ்கா வற்புறுத்திஞன். ''ஒரு உள்

ளங்கை அளவுள்ள கொழுப்பை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்ய முடியும்? அவர்களுக்கு அது கடலில் ஒரு துளி மாதிரிதான். ஆனால் ஒரு நபருக்கோ...''

சுவோரொவ் அந்தப் பன்றிக் கொழுப்பைப் பார்த்தார். புரோஷ்கா சொல்வதில் அர்த்தம் இருந்தது. அந்தக் கொழுப்புத் துண்டு சிறு அளவாகத் தான் இருந்தது.

''சரி. மருத்துவக் கூடாரத்துக்குப் போ. காயம் பட்டிருப்பவர்களுக்கு அதைக் கொடு'' என்றார்.

மறுபடியும் புரோஷ்கா மறுத்துப் பேசினான். ''காயம் பட்டவர்களுக்கா? அது கீழே போடுவது மாதிரிதானே. அவர்கள் எப்படியும் சாகப் போகிறார்கள்.''

''உனக்கு வெட்கமில்லையா? என்று சுவோரொவ் உறுமினார். அவர் கை சவுக்கை எடுப்பதற்கு நீண்டது.

இனிமேல் அவரோடு தான் வாதாடினால் விளைவு ஆபத்தாக இருக்கும் என்று புரோஷ்கா புரிந்து கொண்டான். அந்தக் கொழுப்புத் துண்டை எடுத்துக் கொண்டு உடனே மருத்துவக் கூடாரத்துக்கு ஓடினான்.

மறுநாள் படைவீரர்கள் புரோஷ்காவை சந்தித்தார்கள்.

''அந்தக் கொழுப்பை என்ன செய்தாய்? பீல்டு மார்ஷல் அதைச் சாப்பிட்டாரா?'' என்று அவனிடம் விசாரித்தார்கள்.

புரோஷ்கா பதில் சொல்ல வாயைத் திறந்தபொழுது சுவோரொவ் அங்கே வந்து விட்டார்.

''என் அருமைத் தோழர்களே! என் வீரர்களே! அந்தக் கொழுப்பு மிகவும் ருசியாக இருந்தது. இவ்வளவு நல்ல கொழுப்பை என் குழந்தைப் பருவத்திலிருந்து இன்று வரை நான் சாப்பிட்டதே இல்லை. இந்தக் கிழவனின் நன்றியைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டுக் குனிந்து அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தார்.

புரோஷ்காவின் கண்கள் ஆச்சரியத்தால் பிதுங்கி வெளியே வந்து விடுவது போலத் தோன்றின. ஆனால் படைவீரர்கள் மத்தியில் ஒரே சிரிப்பு. அவர்கள் பீல்டு மார்ஷலுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுத் தங்களுடைய பிரிவுகளுக்குத் திரும்பினார்கள்.

''அவருக்கு ரொம்பப் பிடித்திருந்ததாம்'' என்று போகும் வழியில் தங்களுக்கிடையே பேசிக் கொண்டார்கள். ''அவர் நமக்கு எப்படி நன்றி சொன்னார் என்பதை கவனித்தாயா? கொழுப்பு. அது ஒரு பீல்டு மார்ஷலுக்குக் கூட ருசியாக இருக்கிறது.''

"எனக்குத் தெரிகிறது!"

காப்டன் லுக்கோவ் தலைமையிலிருந்த படைப்பிரிவு எதிரிப் படைகளின் பின்புறத்தில் ஒரு சிறு சண்டையில் ஈடு பட்டிருந்தது. சண்டை முடிந்ததும் காயம் பட்டவர்களைத் தூக்கிக் கொண்டு பிரதான படையோடு சேருவதற்காக வந்து கொண்டிருந்தார்கள்.

வாயைப் பிளந்து கொண்டிருந்த மலைச் சரிவில், குறுகலான நடைபாதையின் ஓரத்தில் அவர்கள் வரிசையாக வந்து கொண்டிந்தார்கள். அந்த வரிசை ஒரு வெர்ஸ்டா நீளம் இருக்கும்.

''பின்தங்காதே! முன்னால் நட!'' என்று லுக்கோவ் சத்தம் போட்டார். ''காயமடைந்தவர்களை முன்னால் கொண்டு வாருங்கள்.''

அவர்கள் காயமடைந்தவர்களை முன்னால் கொண்டு போனார்கள்.

அந்தப் படை இரண்டு வெர்ஸ்டா தூரத்தைக் கடந்திருக்கும். அதற்குள் நன்றாக இருட்டி பலமான காற்றடிக்க ஆரம்பித்தது. பனி விழத் தொடங்கியது. புயல் வீசும் என்ற அறிகுறிகள் தோன்றின.

படைவீரர்கள் நடக்க ஆரம்பித்து ஒன்று, இரண்டு, மூன்று மணி நேரம் ஆகியிருக்கும். துருப்புகளின் கூடார நெருப்புத் தெரிகிறதா என்று காப்டன் லுக்கோவ் தனக்கு முன்னால் கூர்மையாகப் பார்த்தார். அவர்களைச் சுற்றி அடர்த்தியான இருள் பரவியது. பனிப்புயல் ஆரம்பமானதும் அவர்களால் ஒன்றையும் பார்க்க முடியவில்லை. வேகமாக வீசிய காற்று படைவீரர்களின் கோட்டுகளையும் தொப்பிகளையும் அலங்கோலப்படுத்தியது. காற்று பனியை வாரி இறைத்தது. பனி படைவீரர்களின் சட்டை, கழுத்துப் பட்டை, கைகளுக்குள் நுழைந்து ஊசியைப் போலக் குத்தியது. குளிரில் அவர்களுடைய முகங்களும் கைகளும் உறைந்தன. அந்தக் காரிருளில் படைவீரர்கள் கால் தடுக்கிக் கீழே வழுக்கிக் கொண்டு விழுந்தார்கள். மரக் கட்டைகளைப் போல மாறிவிட்ட கால்களைத் தூக்கி வைத்து நடப்பது அவர்களுக்குப் பெரும்பாடாக இருந்தது. அவர்களுடைய வேகம் மென்மேலும் குறைந்து, அவர்கள் இப்பொழுது மிகவும் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

''பின் தங்காதே! முன்னால் நட!'' என்று லுக்கோவ் சத்தம் போட்டார்.

மேலும் ஒரு மணி நேரம் கழிந்தது. கடைசியில் அந்தப் படைவீரர்கள் களைத்துச் சோர்ந்து போய்விட்டார்கள். அவர்கள் நடக்க முடியாமல் பாதையில் நின்று விட்டார்கள்; சிலர் பக்கத்திலிருந்த பாறைகளின் மீது உட்கார்ந்து ஓய்வெடுத்தார்கள்.

''நடந்து கொண்டிருங்கள்! நிற்க வேண்டாம்'' என்று காப்டன் தளர்ந்து போன குரலில் உத்தரவிட்டார். ஆனால் இனிமேல் நடப்பதற்கு அவர்கள் உடலில் பலம் சிறிதுமில்லை. பிரச்சினையே அதுதான். லுக்கோவ் மிகவும் தளர்ந்தவராக மறுபடியும் இருளினூடே பார்த்தார். கூடார நெருப்புகள் எதுவும் தெரியவில்லை. அவரும் சோர்ந்து போய் அங்கேயிருந்த பாறையின் மீது உட்கார்ந்தார்.

திடீரென்று ஒரு குரல் கேட்டது.

''அதோ தெரிகிறது! எனக்குத் தெரிகிறது!''

காப்டனும் படைவீரர்களும் சுறுசுறுப்படைந்து எழுந்தார்கள். சத்தம் வந்த திசையைப் பார்த்தார்கள். சண்டையில் காயமடைந்த இவான் கோஷின் என்ற படைவீரனைத் தூக்கு கட்டிலில் வைத்துத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அவன் அந்தக் கட்டிலில் முதுகை நிமிர்த்தி உட்கார்ந்திருந்தான். அவன் கைவிரலை முன்னே சுட்டிக் காட்டினான்.

''அவன் பார்த்துவிட்டான்! நெருப்புத் தெரிகிறது'' என்று அங்கேயிருந்த அனைவரும் அடுத்தடுத்துச் சொல்லிக் கொண்டார்கள்.

அவர்கள் எப்படியோ தங்கள் பலத்தைத் திரட்டிப் பாறைகளிலிருந்து கீழே குதித்தார்கள். கீழே போட்டிருந்த ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டார்கள். அவர்களிடம் புது வேகம் பிறந்தது. இவான் கோஷின், அவன் கழுகுப் பார்வை கொண்டவன்.

படைவீரர்கள் சுமார் ஒரு வெர்ஸ்டா தூரம் நடந்திருப்பார்கள். ஆனால் கூடார நெருப்பு எதுவும் கண்ணுக்குத் தென்படவில்லை. கோஷினுக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருந்தவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள்.

''நெருப்பு எங்கே? நீ பொய் சொன்னாயா?'' என்று கோஷினைக் கேட்டார்கள்.

''எனக்குத் தெரிகிறது! எனக்குத் தெரிகிறது'' என்று அவன் தன் விரலை முன்னால் நீட்டிச் சுட்டிக் காட்டியபடியே பேசினான்.

படைவீரர்கள் தங்களுக்கு முன்னல் கூர்மையாகப் பார்த்தார்கள். ஆனல் அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. எனினும் அவர்கள் தொடர்ந்து நடந்து போனர்கள். ஒரு வேளை அவர்களைக் காட்டிலும் கோஷினுடைய கண்பார்வை நன்ருக இருக்கலாம். யாருக்குத் தெரியும்?

அவர்கள் இன்னெரு வெர்ஸ்டா தூரத்தைக் கடந்தார்கள்; ஆனல் நெருப்பு இன்னும் தெரியவில்லை. படைவீரர்கள் மறுபடியும் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள்.

''நாங்கள் இனிமேல் நடக்க மாட்டோம்.''

''கோஷினை நம்பாதீர்கள்!''

''சகோதரர்களே!'' என்று கோஷின் கத்தினன். ''எனக்குத் தெரிகிறது. என்னை நம்புங்கள். அது தூரத்திலில்லை. இன்னும் சிறிது தூரம் மட்டும் நடந்தால் போதும். அதோ அந்த நெருப்பு கொழுந்து விட்டெறிகிறது.'' மறுபடியும் அந்தத் திசையை நோக்கி அவன் விரலை நீட்டினன்.

படைவீரர்கள் அவனைத் திட்டினர்கள்; முணுமுணுத்தார்கள். ஆனல் வேறு வழியில்லாமல் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் நடந்து சென்ற பாதை மலைச் சிகரத்தில் ஒரு முனையைச் சுற்றிக் கொண்டு போயிற்று. படைவீரர்கள் அந்த முனையைச் சுற்றி வந்து திரும்பினர்கள். திடீரென்று நெருப்பின் வெளிச்சம் தெரிந்தது. அவர்கள் இருந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் கூடார நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. பனி பார்வையை மறைத்த போதிலும் அந்த நெருப்பு நன்ருகத் தெரிந்தது.

படைவீரர்கள் பாதையிலேயே நின்றுவிட்டார்கள்; தங்கள் கண்களையே அவர்களால் நம்ப முடியவில்லை.

''உனக்குத் தெரிகிறதா?'' என்று ஒருவரையொருவர் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டார்கள்.

''எனக்குத் தெரிகிறது.''

''எனக்கும்தான்.''

''எனக்கும் தெரிகிறது.''

''கோஷின்! எப்படிப்பட்ட கழுகுப் பார்வை! எவ்வளவு சிறந்த படைவீரன்!'' என்று எல்லோரும் சொன்னர்கள்.

''அவன்தான் முதலில் பார்த்தான். அவனுக்கு மும்முறை வாழ்த்துக் கூறுவோம்!''

தாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து அந்தக் கூடார நெருப்பை, அதன் இதமான வெப்பத்தை நோக்கி ஓடினர்கள்; தங்கள் தோழர்களை நோக்கி ஓடினர்கள்.

கோஷின் படுத்திருந்த தூக்கு கட்டிலையும் தங்களோடு இழுத்துக் கொண்டு ஓடினார்கள்.

''அவனை நெருப்புக்குப் பக்கத்தில் கொண்டு வா'' என்று சத்தம் கேட்டது. ''அவன் குளிர் காயட்டும். அவன் உரிமை அது. நம் அனைவருக்கும் வழி காட்டியது அவன் தானே!''

நெருப்பின் ஒளி கோஷின் முகத்திலே விழுந்தது. படை வீரர்கள் அவன் முகத்தைப் பார்த்தார்கள்; அப்படியே இருந்த இடத்தில் கல்லானார்கள். அவன் முகம் கருகிப் போயிருந்தது; அவனுடைய புருவங்கள் பொசுங்கியிருந்தன. அவன் கண்கள்....

''சகோதரர்களே! அவன் குருடன்'' என்று யாரோ மெதுவாகச் சொன்னார்கள்.

படைவீரர்கள் அவன் முகத்தை உற்றுப் பார்த்தார்கள். கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் குழிகள் மட்டுமே இருந்தன. அதற்கு முந்திய நாளன்று பிரெஞ்சுக்காரர்களோடு நடைபெற்ற சண்டையின் போது ஒரு எறிகுண்டு அவன் கண்களைப் பிடுங்கிவிட்டது.

தலைமைத் தளபதி

ஆல்ப்ஸ் மலைகளைக் கடந்து சென்று எதிரிகளை முறியடித்ததற்காக சுவோரொவ் ருஷ்ய இராணுவத்தின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

அவர் தம் படையினரோடு ருஷ்யாவுக்குத் திரும்பும் வழியில் எல்லையோரத்திலிருந்த கிராமத்தில் ஓய்வெடுப்பதற்காகத் தங்கினார்.

அவர் ஒரு குடிசைக்குள் நுழைந்தார். குளிர்ந்த இறைச்சி, சோளக் காஷா, ஒரு கோப்பை ஒயின் தனக்குக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

''இதுதான் காஷா. நான் இவ்வளவு ருசியாகச் சாப்பிட்டு ரொம்பக் காலமாகிவிட்டது. ஒயின் முதல் தரமாக இருக்கிறது. ருஷ்யப் படைவீரர்களின் புகழ் ஓங்கட்டும் என்று வாழ்த்துக் கூறுவதற்காக இப்படிப்பட்ட ஒயினைக் குடிப்பது பாவமான காரியம் அல்ல'' என்றார்.

படைவீரர்கள் அந்தக் குடிசையைச் சுற்றியிருந்த இடங்களில் உட்கார்ந்து கொண்டார்கள்.

இங்கே குதிரைகளைப் பற்றிக் கவலைப்பட்ட ஒரே நபர் புரோஷ்காதான். அவன் குதிரைகளைக் கட்டிவிட்டுத் திரும்பிய

பொழுது கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''உன்னுடைய எஜமானருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புதுப் பதவியைப் பற்றி எங்களுக்கு விளக்கிச் சொல்'' என்று அவர்கள் அவனிடம் விசாரித்தார்கள். ''இப்படி ஒரு பதவி இருப்பதாக நாங்கள் இதுவரை கேள்விப்படவில்லை'' என்ருர்கள்.

''இதைப் புரிந்து கொள்வதில் என்ன சிரமம்?'' என்று கேட்டான் புரோஷ்கா. ''அது மிகவும் சுலபம்தானே. தலைமைத் தளபதி என்பவர் தளபதிகளுக்குத் தளபதியாக இருப்பார். முக்கியமானவர்களுக்கு மத்தியில் அவர் மிகவும் முக்கியமானவர்.''

''பார்த்தீர்களா? இப்பொழுது புரிந்து விட்டதா?'' என்ருன் தேய்ந்துபோன மரச் செருப்பை அணிந்து கொண்டிருந்த ஒரு ஒல்லியான விவசாயி.

''அவர் அதற்குத் தகுதியுடையவர்'' என்ருன் தாடி வைத்துக் கொண்டிருந்த ஒரு விவசாயி.

சுவோரொவ் குடிசையின் வாசலில் நின்று கொண்டு அவர்களுடைய உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''தப்பு, தப்பு!'' என்று அவர் வாயிலில் நின்ற படியே அவர்களுடைய பேச்சில் குறுக்கிட்டார். ''நான் முக்கியமான நபரல்ல'' என்று அந்த விவசாயிகளின் அருகில் வந்து சொன்ஞர். ''இதோ நிற்கிருனே புரோஷ்கா! இவன் மிக முக்கியமானவன்.''

அவருக்குப் பக்கத்தில் ஒல்லியான படைவீரன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் அம்மை வடுக்கள் நிறைந்திருந்தன. அவனைச் சுட்டிக் காட்டி ''இவன் மிக முக்கியமானவன்'' என்ருர். ''அவனும் முக்கியமானவன்'' என்று பருமனை உடலும் பழுப்பு மீசையும் கொண்டிருந்த ஒரு கார்ப்பொரலைச் சுட்டிக் காட்டினர். ''இவர்கள் எல்லோருமே முக்கியமானவர்கள்'' என்று அங்கே நின்று கொண்டிருந்த படைவீரர்கள் எல்லோரையும் குறிப்பது போலக் கையை. வேகமாக ஆட்டினர். இவ்வாறு சொல்லி விட்டுத் தம்முடைய வண்டியில் ஏறிக் கொண்டார். உடனே வண்டியை ஓட்டுமாறு வண்டியோட்டிக்கு உத்தரவு கொடுத்தார்.

படைவீரர்கள் எழுந்து அணி வகுத்து வரிசையாக நடந்து சென்ருர்கள். அவர்கள் காலடி பட்டுக் கிளம்பிய புழுதி மாலைகளைப் போல சுருள் சுருளாக மேலே மிதந்தது. படை

வீரர்களின் உற்சாகமான வழிநடைப் பாடல்கள் காற்றிலே தவழ்ந்து வந்தன.

விவசாயிகள் சாலையின் ஓரத்தில் வெகு நேரம் நின்றார்கள். தூரத்தில் சிறிது சிறிதாக மறைந்து கொண்டிருக்கும் படைவீரர்களின் உருவங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகங்களில் கேள்விக்குறிகள் இருந்தன.

அங்கே நிலவிய மௌனத்தைக் கலைத்துக் கொண்டு ஒரு இளைஞன் பேசினான். ''அவர் நம்மை முட்டாளாக்கி விட்டார்.''

''அவர் சொன்னது புதிர் மாதிரியாக இருந்தது'' என்றான் ஒல்லியான விவசாயி.

''மட்டிப் பயல்கள்!'' என்று சொல்லி விட்டு அந்த தாடிக்கார விவசாயி எச்சிலைத்துப்பினான். ''பீல்டு மார்ஷல் உண்மையைத்தான் சொன்னார். இராணுவம் இல்லாமல் தளபதி மட்டும் என்ன செய்ய முடியும்? ருஷ்யாவின் பலம் சாதாரண மக்களிடம் இருக்கிறது. மக்கள்தான் முக்கியமானவர்கள். அதைத்தான் அவர் சொன்னார். உண்மையிலேயே அவர் தளபதிகளுக்குத் தளபதியே.''

புகழ்



சுவோரொவுக்கு ஏற்பட்டிருந்த புகழ் தளபதியும் இளவரசருமான பரோக்வாஸ்டவிடம் பொறுமையை ஏற்படுத்தியது. ஒரு நாள் அவர் ஒரு படைவீரனிடம் பேசிக் கொண்டிருந்தபொழுது சுவோரொவைப் பற்றிக் கேட்டார்.

''நண்பனே! படைவீரர்கள் சுவோரொவிடம் அதிகமான அன்பு வைத்திருப்பதற்குக் காரணமென்ன?''

''தளபதி அவர்களே! சுவோரொவ் தளபதியாக இருந்தாலும் சாதாரணப் படைவீரனுக்குத் தரப்படுகின்ற உணவையே சாப்பிடுகிறார்'' என்று அவன் பதிலளித்தான்.

பரோக்வாஸ்டவ் சுவோரொவ் மாதிரியே நடந்து கொள்ள விரும்பினார். எனவே அவரும் காபேஜ் சூப்பும் காஷாவும் சாப்பிட்டார். அந்த உணவைச் சாப்பிடும் பொழுது அவருடைய முகம் எட்டுக் கோணலாக மாறியது. இருந்தாலும் அவர் பிடிவாதத்தோடு அந்த உணவையே சாப்பிட்டார். சுவோரொவுக்குக் கிடைத்த புகழ் தனக்கும்

ஏற்பட வேண்டுமென்று அவர் விரும்பியதுதான் அதற்குக் காரணம்.

சில நாட்கள் கழிந்தன; ஆனால் பரோக்வாஸ்டவுக்கு யாரும் புகழ் மாலை சூட்டவில்லை. அவர் மறுபடியும் அந்தப் படைவீரனிடம் கேட்டார்.

''எனக்குப் புகழ் ஏற்படவில்லையே. ஏன்?''

''தளபதி அவர்களே! சுவோரொவ் சாதாரணப் படைவீரனுக்குத் தரப்படும் காஷாவையும் சூப்பையும் சாப்பிடுவது மட்டுமல்ல; அவனைப் போலவே அவர் சாதாரணப் படுக்கையில் தூங்குகிறார்'' என்றான்.

இதற்குப் பிறகு பரோக்வாஸ்டவ் சாதாரணப் படைவீரனைப் போல சாதாரணமான கூடாரத்தில் கரடு முரடான வைக்கோற் படுக்கையில் படுத்துத் தூங்க ஆரம்பித்தார். அவருடைய மென்மையான உடல் வலித்தது; அவரால் குளிரைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் அவர் வைக்கோற் படுக்கையிலேயே படுத்துத் தூங்கினார். சுவோரொவ் போலப் புகழ் அடைவதென்றால் சும்மா முடியுமா?

சில நாட்கள் கழிந்தன; ஆனால் அவருக்கு விசேஷமான புகழ் ஏற்படவில்லை. அவர் மறுபடியும் படைவீரனைக் கூப்பிட்டார்.

''சுவோரொவின் இரகசியம் என்ன? என்னிடம் சொல்.''

''சுவோரொவ் தன்னுடைய துருப்புகளை மதிக்கிறார். அதுதான் அவரிடமிருக்கும் இரகசியம்.''

இளவரசர் பரோக்வாஸ்டவ் தன்னுடைய கீழ்நிலை அதிகாரிகளை மதிப்பதற்கும் படைவீரர்களிடம் அன்போடு பழகுவதற்கும் முயற்சி செய்தார்.

அதற்குப் பிறகும் அந்தத் தளபதியின் புகழ் அதிகரிப்பதாகத் தோன்றவில்லை. படைவீரர்கள் அவரைப் பார்க்கும் பொழுது தங்களுக்குள் சிரித்துக் கொண்டார்கள். இதைத் தவிர வேறு எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை.

தளபதிக்கு ஆத்திரம் ஏற்பட்டது. அவர் அந்தப் படைவீரனை மறுபடியும் கூப்பிட்டார்.

''நான் காபேஜ் சூப்பும் காஷாவும் சாப்பிடுகிறேன்; வைக்கோற் படுக்கையில் படுத்துத் தூங்குகிறேன். படைவீரர்களிடம் அன்போடு பேசுகிறேன்—ஆனால் யாரும் என்னைப் புகழவில்லையே, ஏன்?'' என்று கேட்டார்.

''தளபதி அவர்களே! இவை மட்டும் போதா''.

''இனிமேலும் என்ன செய்ய வேண்டும்? சுவோரொவிடம் இருக்கும் மற்ற இரகசியங்கள் எவை?''

''ஒரு இரகசியம் இருக்கிறது. எதிரியை முறியடிப்பதற்கென்று அவரிடம் 'சுவோரொவ் வழி' என்று சொல்லப்படும் தனி வழி இருக்கிறது; அவருடைய புகழின் இரகசியம் இது.''

இந்தக் கடைசி இரகசியத்தை பரோக்வாஸ்டவினால் தன் வயப்படுத்த முடியவில்லை. எனவே அவர் புகழடையவில்லை; சாதாரணமாகவே மறைந்தார்.

ஆனால் சுவோரொவின் புகழ் நூற்றாண்டுகளையும் கடந்து நிற்கிறது. சுவோரொவை அறியாதவர் ஒருவருமில்லை.

2

3

1

4

5

1. அலெக்ஸாந்தர் சுவோரொவ் (உட்கின் என்பவரால் செதுக்கப் பட்ட ஓவியம், *1818*). *2, 3, 4, 5.* சுவோரொவ் காலத்தைச் சேர்ந்த இராணுவ வீரர்கள்.



6

8

9



7

10

12

НАУКА ПОБѢЖДАТЬ.

Творенiе

Препрославившагося въ Свѣтѣ всегдашними побѣдами

Генералиссимуса Россiйскихъ армiй, Князя Италiйскаго, Графа Суворова-Рымникскаго,

Съ письмами,

собственноручно имъ писанными, и открывающими наиболѣе въ немъ величайшiя свойства его души и таковыя же знанiя военнаго искусства, сердца человѣческаго, духа Россiянъ и выгодъ общественныхъ.

ВТОРОЕ ИЗДАНIЕ.

ВЪ САНКТПЕТЕРБУРГѢ.

при Сенатской типографiи 1809 года.

11

6. இரண்டாம் பிரெடெரிக் குனேர்ஸ்டோர்ப் என்ற இடத்தில் ருஷ்யத் துருப்புகளால் முறியடிக்கப்பட்டுத் தப்பியோடுதல், ஆகஸ்ட் 1, 1759 (18ம் நூற்றுண்டில் செதுக்கப்பட்ட ஓவியம்). 7. சுவோரொவ் தலைமையில் ருஷ்ய ராணுவம் போக்ஷானி என்ற இடத்தில் 30,000 வீரர்களைக் கொண்ட துருக்கிய இராணுவத்தை ஒழித்தல், ஜூலை 21, 1789 (அக்காலத்தில் செதுக்கப்பட்ட ஓவியம்). 8. ஷ்லூஸ்ஸெல்பெர்க் வெடிகுண்டுப் படையைச் சேர்ந்த வீரர். 9. 18ம் நூற்றுண்டின் பிற்பாதியைச் சேர்ந்த சாதாரண வீரர். 10, 11. சுவோரொவ் காலத்தில் இராணுவ உயர் அதிகாரியின் வாளும் சுரிகையும். 12. சுவோரொவ் எழுதிய ''வெற்றியின் விஞ்ஞானம்'' என்ற நூலின் மேலட்டை.

14

15



16

13

17

18

13, 14. சுவோரொவ் காலத்திய ஆயுதங்கள். 15. வெடிகுண்டுப் படையினரது தொப்பி. 16. சுவோரொவை கௌரவிக்க வெளியிடப்பட்ட பதக்கம். 17. சுவோரோவை கௌரவிக்க அந்நிய நாடுகள் வெளியிட்ட பதக்கங்கள். 18. துருக்கிய இராணுவத்தை ரிம்னிக் என்ற இடத்தில் சுவோரொவ் முறியடித்தல், செப்டெம்பர் 11, 1789 (அக்காலத்தில் செதுக்கப்பட்ட ஓவியம்).



19

22

21

21. இஸ்மாயில் நகரத்தில் சுவோரொவுக்கு எழுப்பப்பட்ட நினைவுச்சின்னம். 22. 'டெவில்ஸ் பிரிட்ஜ்' என்ற இடத்தில் நடந்த சண்டை (18ம் நூற்றூண்டில் செதுக்கப்பட்ட ஓவியம்). 23. ''சுவோரொவ் ஆல்ப்ஸ் மலையைக் கடத்தல்'' (வஸீலி ஸுரிக்கோவ் வரைந்த ஓவியம்).

20



19. இஸ்மாயில் கோட்டையைத் தாக்குதல், டிசம்பர் 11, 1790 (அக்காலத்தில் செதுக்கப்பட்ட ஓவியம்).
20. இஸ்மாயில் கோட்டையை முற்றுகையிடுவதற்கு சுவோரொவ் தயாரித்த திட்டம்.

புகழ்மிக்க வீரம்

பாலத்தின் மீது படைகள்

1812ம் வருடம். கோடை காலம். நேமன் நதியின் மீதிருக்கும் பாலம். ருஷ்யாவின் எல்லைப்புறம். படைவீரர் கள் ஒவ்வொரு படைப் பிரிவாக அந்தப் பாலத்தைக் கடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அந்நிய மொழிகளில் பேசும் சத்தம் காற்றிலே வருகிறது. பிரெஞ்சுக்காரர்கள், ஆஸ் திரியர்கள், பிரஷ்யர்கள், ஸாக்ஸனியர்கள், இத்தாலியர் கள், ஸ்விட்சர்லாந்துக்காரர்கள். ஹாம்பர்க், பிரேமென் ஆகிய நகரங்களைச் சேர்ந்தவர்கள். டச்சுக்காரர்கள், பெல் ஜியர்கள், இத்தாலியர்கள், ஸ்பானிஷ்காரர்கள். படை வீரர்கள் பாலத்தைக் கடந்து போய்க் கொண்டிருக்கிறார் கள்.

''சக்கரவர்த்தி வாழ்க!''

''பிரான்ஸ் வாழ்க!''

''வெற்றி, வெற்றி, வெற்றி!'' என்ற முழக்கம் எல்லாத் திசைகளிலிருந்தும் ஒலித்தது. நெப்போலியன் ஒரு கம்பீர மான அரபுக் குதிரை மீது உட்கார்ந்து கொண்டு துருப்புகள் பாலத்தைக் கடப்பதைப் பார்வையிடுகிறார். பிரெஞ்சுச் சக் கரவர்த்தி சிந்தனையில் மூழ்கியிருக்கிறார். அவருடைய இரா ணுவ உடையில் கழுத்து வரை பொத்தான் மாட்டப்பட்டிருக் கிறது. அவருடைய தலையிலிருக்கும் மும்முனைத் தொப்பி நெற்றியின் மீது விழும்படியாக இறக்கி வைக்கப்பட்டிருக் கிறது. அவர் முகத்தில் கோபத்தின் அறிகுறி தென் பட்டது.

அவருக்குப் பின்னால் அரைவட்ட வடிவத்தில் அவருடைய பரிவாரம் மரியாதையாக நின்றுகொண்டிருந்தனர். அவர் கள் மௌனமாக இருந்தனர். காலைக் காற்றில் தேனீக்களின் ரீங்காரம் கேட்டது.

நெப்போலியன் அந்தப் பரிவாரத்தில் ஒருவராக நின்று கொண்டிருந்த தளபதி கோலென்கூரை நோக்கித் திரும் பினார்.

''நீ பிரெஞ்சுக்காரன் அல்ல'' என்று ஆத்திரமாகச் சொன்னார்.

கோலென்கூர் மௌனமாக நின்ருர்.

''நீ பிரெஞ்சுக்காரன் அல்ல.'' நெப்போலியன் வெறி பிடித்தவர் போல ஏசினர்.

அதற்கு முந்திய நாள் மாலையில் இராணுவ ஆலோசனைக் கூட்டம் நடைபெற்ற பொழுது கோலென்கூர் துணிச்சலாக சில கருத்துக்களைச் சொன்னர். அங்கேயிருந்த மார்ஷல்கள், தளபதிகள் ஆகியோருக்கு மத்தியில் ருஷ்யாவின் மீது படையெடுக்கின்ற யோசனைக்கு மறுப்புக் கூறிய ஒரே நபர் அவர் தான்.

''அது நரகத்துக்குப் போகும் பாதை'' என்று அவர் சொன்னர்.

''என்னுடைய கூடாரத்தில் ருஷ்யர்கள், ருஷ்யர்கள் இருக்கிருர்கள்'' என்று நெப்போலியன் கோலென்கூரைச் சுட்டிக் காட்டிக் கோபமாகச் சீறினர்.

ஆகவே, மறுநாள் அந்த தளபதியைப் பார்த்தவுடன் நெப்போலியனல் தன்னுடைய கோபத்தை அடக்க முடியவில்லை.

''ருஷ்யர்களைப் போல தாடி வளர்த்துக் கொள்ளுங்கள். அர்மியாக்கும்*, மரப்பட்டைச் செருப்பும் அணிந்து கொள்ள வேண்டியதுதானே.''

அங்கே பக்கத்திலிருந்த காடுகளுக்கு மேல் சூரியன் தலை காட்டியது.

நெப்போலியன் குதிரையின் மீது விறைப்பாக உட்கார்ந்தார்.

''அதோ! ஆஸ்டர்லிட்ஸ் சண்டையில் வெற்றி கண்ட சூரியன்!''

''சக்கரவர்த்தி வாழ்க!''

''சக்கரவர்த்தியின் புகழ் ஓங்குக!''

''பிரான்ஸ் வாழ்க!''

''வாழ்க, வாழ்க, வாழ்க!'' என்ற முழக்கம் எல்லாத் திசைகளிலிருந்தும் ஒலித்தது.

சிகப்பு, மஞ்சள், நீல நிறங்களில் படைவீரர்கள் அணிந்திருந்த பிரகாசமான இராணுவ உடைகள் கண்களைக் கூசச் செய்தன.

படைவீரர்கள் பாலத்தின் மீது போய்க் கொண்டிருந்தார்கள். ஒன்று, இரண்டு, மூன்று மணி நேரம்... முதல் நாள், இரண்டாம் நாள், மூன்ரும் நாள்... படைவீரர்கள் பாலத்தின் மீது போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய மரணத்தை, அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

அர்மியாக்—துணியில் தைக்கப்பட்ட கோட்; விவசாயிகள் வழக்கமாக அணியும் உடை

வயோதிகக் கார்பரல் சொன்ன கதை

ருஷ்யப் படைகள் ஒவ்வொரு வெர்ஸ்டா தூரமாக விட்டுக் கொடுத்தன; பின்வாங்கின.

இரண்டு ருஷ்யப் படைகள் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. பார்க்லாய் டெ டோல்லி என்ற தளபதி தலைமை தாங்கிய படைகள் முதலில் வில்னியசுக்கும், பிறகு அங்கேயிருந்து டிரிஸ்ஸாவுக்கும், போலோட்ஸ்க்கிற்கும் பின்வாங்கிச் சென்றன. பக்ராத்தியோன் என்ற தளபதி தலைமை தாங்கிய படைகள் தெற்கே கிரோட்னோவுக்கும் அங்கிருந்து ஸ்லுட்ஸ்க்கிற்கும் போப்ரூயிஸ்கிற்கும் பின்வாங்கிச் சென்றன.

பார்க்லாய், பக்ராத்தியோன் ஆகிய இரண்டு தளபதிகளுடைய படைகளையும் போல மும்மடங்கு அதிக எண்ணிக்கையைக் கொண்டிருந்தன நெப்போலியனின் படைகள். ருஷ்யப் படைகள் ஒன்று சேர முடியாதபடி பிரெஞ்சுக்காரர்கள் தடுத்தனர். ஏனென்றால் இரண்டு ருஷ்யப் படைகளையும் தனித்தனியாக அழித்துவிடுவதற்கு அவர்கள் விரும்பினார்கள்.

எதிரியின் தாக்குதலை எதிர்க்கும் அளவுக்குப் போதுமான பலம் ருஷ்யப் படைகளிடம் அந்த சமயத்தில் இல்லை என்பதை இரு தளபதிகளும் உணர்ந்திருந்தார்கள். எனவே தங்கள் படைகளைப் பின்வாங்குமாறு செய்து பலத்தைப் பாதுகாத்துக் கொண்டார்கள்.

''கடவுளே! தளபதிகள் நம்மிடம் கதை சொல்கிறார்களா?'' என்று படைவீரர்கள் பேசிக் கொண்டார்கள்.

''படைவீரர்கள் என்ற முறையில் நம்முடைய கௌரவத்துக்கே இது இழுக்கு.''

மற்றவர்களோடு சேர்ந்து நடந்து வந்து கொண்டிருந்த ஒரு வயோதிக கார்பரல் தன்னுடைய தோழர்களை உற்றுப் பார்த்தார்.

''நான் ஒரு கதை சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்.''

அடுத்த தங்குமிடத்துக்கு வந்ததும் படைவீரர்கள் அவரைச் சுற்றி வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள். அங்கே அமைதி நிலவியது.

''இது வெகு காலத்துக்கு முன்பு நடந்திருக்க வேண்டும். அது நடந்ததா இல்லையா என்பது முக்கியமல்ல'' என்று கார்பரல் கதையைச் சொல்ல ஆரம்பித்தார். ''எப்பொழுதோ ஒரு சந்தர்ப்பத்தில், காட்டில் பழுப்பு நிறம் கொண்ட ஒரு ஓநாய் காட்டு மான்குட்டியைச் சந்தித்தது. அதற்கு ஒரு வயதுதான் ஆகியிருக்கும்.

" 'மான்குட்டியே! மான்குட்டியே! நான் உன்னைச் சாப்பிடப் போகிறேன்' என்றது ஓநாய்.

" 'பழுப்பு ஓநாயே! கொஞ்சம் பொறு. நான் இப்பொழுது தானே பிறந்திருக்கிறேன். முதலில் என் உடல் சற்றுப் பருமனாகட்டும்.'

"அந்தக் காட்டு ஓநாய் ஒத்துக் கொண்டது. கொஞ்ச நாளைக்கு விட்டு வைப்போம், அதன் எலும்புகளில் சதை வைக்கட்டும் என்று நினைத்தது.

"எவ்வளவு காலம் விட்டு வைத்தது என்பது உண்மையில் முக்கியமல்ல. மறுபடியும் ஒரு நாள் அந்த ஓநாய் மான்குட்டியைச் சந்தித்தது. அதை உற்றுப் பார்த்தது. இதற்கிடையில் மான்குட்டியின் உடல் கொஞ்சம் பருத்திருந்தது. அதன் கொம்புகள் முளைக்க ஆரம்பித்து லேசாக வெளியே தெரிந்தன; அதற்குக் குளம்புகள் ஏற்பட்டிருந்தன. இப்பொழுது அந்த ஓநாய்க்கு முன்னால் நின்று கொண்டிருந்தது மான்குட்டியல்ல — ஓரளவுக்கு வளர்ச்சியடைந்த காட்டு மான். ஓநாய் நாக்கைச் சப்பியது.

" 'காட்டு மானே! காட்டு மானே! நான் உன்னைச் சாப்பிடப் போகிறேன்.'

" 'ஓநாயே! அதற்கென்ன. என்னுடைய தாய் நாட்டிலிருந்து விடை பெற்றுக் கொள்வதற்கு மட்டும் எனக்குச் சிறிது அவகாசம் கொடு' என்று அது கேட்டது.

" 'சரி. விடை பெற்றுக் கொண்டுவா' என்று ஓநாய் அனுமதி கொடுத்தது.

"அந்த இளம் காட்டு மான் தன்னுடைய தாய் நாட்டின் வயல்களிலும் காடுகளிலும் ஓக் மரத் தோப்புகளிலும் அலைந்து திரிந்தது. சொந்த நாட்டைச் சுற்றி வந்த பொழுது அதன் உடலில் பலம் அதிகரித்தது. ஓநாயும் அதைப் பின்தொடர்ந்தது. அலைச்சலைத் தாங்க முடியாமல் ஓநாய் பலவீனமடைந்தது. அதன் உரோமம் உதிரத் தொடங்கியது; நாக்கு தாடைகளின் மீது தொங்கியது; எலும்புகள் வெளியே துருத்தின.

" 'போதும். நிறுத்து' என்று ஓநாய் உத்தரவிட்டது.

"அதற்குப் பிறகு எவ்வளவு காலமாயிற்று என்பது உண்மையில் முக்கியமல்ல. கடைசியில் அந்தக் காட்டு மான் ஒரு இடத்தில் நின்றது. ஓநாயைச் சந்திக்கத் தயாராகத் திரும்பியது. அங்கே ஓநாய்க்கு எதிரில் நின்றது வெறும் காட்டு மானல்ல; முழு வளர்ச்சியடைந்த முரட்டு மான். ஓநாய் வாயைத் திறந்து பற்களைக் காட்டியது.

"காட்டு மானே! காட்டு மானே! நான் உன்னைச் சாப்பிடப் போகிறேன்" என்றது ஓநாய்.

''அந்த முரட்டு மான் சிரித்தது.

'' 'இங்கே வா, பார்க்கலாம்' என்றது.

''ஓநாய் முன்னால் பாய்ந்தது. ஆனால் அதற்கு முன்பு இருந்த பலம் இப்பொழுது கிடையாது. முரட்டு மான் பின்னங்கால்களில் நின்று கொண்டு முன் கால்களைத் தூக்கி தன்னுடைய கனமான குளம்புகளால் ஓநாயைத் தாக்கியது. தன்னுடைய கொம்புகளில் ஓநாயைத் தூக்கித் தரையில் வீசியது. ஓநாய் பொத்தென்று விழுந்தது. பாவம்! அது செத்துப் போயிற்று.''

கதையைச் சொல்லிமுடித்த பிறகு கார்பரல் மௌனமாக இருந்தார். படைவீரர்கள் கதையைப் பற்றி ஆழமாகச் சிந்தித்தனர்.

''அது மிகவும் கெட்டிக்கார மான்.''

''அது முரட்டு மானாக வளர்ந்து விட்டது.''

''இந்தக் கதைக்கு ஒரு படிப்பினை இருக்கிறது. அது புரிகிறதா?''

''பின்வாங்குங்கள்! புறப்படுங்கள்!'' என்று உத்தரவு கேட்டது.

படைவீரர்கள் உடனே குதித்தெழுந்து வரிசையாக நின்றார்கள். அவர்கள் நெஞ்சை முன்னே தள்ளி நிமிர்ந்து நடந்தார்கள். அவர்கள் வயல்களிலும் காடுகளிலும் ஓக் மரத் தோப்புகளிலும் சுற்றினார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த நாட்டுக்குள் போய்க் கொண்டிருந்தார்கள்—அந்நிய நாட்டுக்குள் அல்ல.

"அந்த வீரர்கள் எங்கே?"

ருஷ்ய இராணுவப் பிரிவுகள் ஸ்மொலேன்ஸ்க் அருகே ஒன்று சேர்ந்தன. உடனே போரில் ஈடுபட்டன.

பிரெஞ்சுக்காரர்கள் இரண்டு நாட்களாக அந்த நகரத்தைப் புயல் போலத் தாக்கினார்கள்.

தாக்குதல்கள் அலையலையாக அடுத்தடுத்து வந்து கொண்டிருந்தன.

ருஷ்யப் படைவீரர்கள் பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்துத் தீவிரமாகப் போர் புரிந்தார்கள். அவர்களிடம் அச்சம் என்பது அணுவளவும் இல்லை. ஒரு படைவீரன் பிரெஞ்சுப் படையின் ஒரு பிரிவை மொத்தமாக எதிர்த்துப் போர் புரிந்தான். இரண்டு படைவீரர்கள் ஒரு பட்டாளத்தையே மொத்தமாக எதிர்த்துச் சண்டை போட்டார்கள்.

ஸிம்பீர்ஸ்கி, வொலின்ஸ்கி, உபிம்ஸ்கி பட்டாளங்கள் அருகருகே நின்று போர் புரிந்தன.

எல்லாப் படைகளும் படைப்பிரிவுகளும் வீரத்தோடு போர் புரிந்தன. வீரத்தைப் பொறுத்தவரை யாரும் இரண்டாவது இடத்தைப் பெறுவதற்குத் தயாராக இருக்கவில்லை.

ஸிம்பீர்ஸ்கி படையைச் சேர்ந்த எகோர் பிஞெயெவ் என்ற படைவீரன் கழுத்தில் துப்பாக்கி ஈட்டியால் குத்தப்பட்டுக் காயமடைந்தான். காயத்திலிருந்து பீறிட்ட இரத்தம் உடல் முழுவதும் வழிந்தது. ஆனால் அவன் காயத்தைக் கூட உணரவில்லை.

''தாக்குங்கள்! தாக்குங்கள்!'' என்று முழங்கினான்.

குண்டு வீச்சில் வொலின்ஸ்கி படையைச் சேர்ந்த பீட்டர் ஸஞேஸா என்ற படைவீரனின் காது அறுந்தது. அவன் காதிலிருந்து வழிந்த இரத்தத்தைத் துடைத்து விட்டு வேடிக்கையாகப் பேசி மற்றவர்களை உற்சாகப்படுத்தினான்.

''ஒரு கொசு பறவையல்ல; ஒரு ஆடு ஓநாய் அல்ல; ஒரு காது தலையல்ல!''

உபிம்ஸ்கி படையைச் சேர்ந்த ரஸ்ஸாடா என்ற படைவீரனுடைய காலில் குண்டு பட்டுக் காயமேற்பட்டது. அவன் தரையில் விழுந்தான். அவனால் நிற்க முடியவில்லை; படுத்துக் கொண்டு தான் குறி பார்த்துச் சுட முடிந்தது. ஆனால் அவன் அந்த நிலையிலும் தொடர்ந்து சுட்டுக் கொண்டிருந்தான்.

''சகோதரர்களே! முன்னேறுங்கள்!''

படைவீரர்கள் தீவிரமாகப் போர் புரிந்தார்கள். இரத்தம் ஆறுக ஓடியது.

இரண்டாம் நாள் மாலையில் எதிரிப் படைகளின் பயங்கரமான பீரங்கித் தாக்குதலினால் ஸ்மொலேன்ஸ்க் தீப் பற்றியது. சுவர் உயரத்துக்கு நெருப்பு பேரிரைச்சலோடு வேகமாகப் பரவியது. நகரத்துக்குப் பக்கத்திலுள்ள ஸ்மொலேன்ஸ்க் மலைக்குப் பரவியது.

ஸிம்பீர்ஸ்கி, வொலின்ஸ்கி, உபிம்ஸ்கி படைகள் தொடர்ந்து போர் புரிந்தன. அவர்கள் மற்ற படையினரோடு தோளொடு தோள் நின்று போர் புரிந்தார்கள். இந்த வீரர்களுக்கு அச்சம் என்ற வார்த்தையின் அர்த்தம் கூடத் தெரியாது.

காயமடைந்த பிரெஞ்சுப் படைகளுக்குப் பதிலாக வேறு படைகள் தொடர்ச்சியாகக் களத்துக்கு வந்து கொண்டிருந்தன. இனிமேல் ருஷ்யர்களால் பிரெஞ்சுக்காரர்களைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதை பார்க்லாய் டெ டோல்லி உணர்ந்தார். அன்றிரவில் துருப்புகள் பின்வாங்குமாறு உத்தரவு கொடுத்தார்.

ருஷ்யப் படைகள் தங்கள் நிலைகளிலிருந்து பின்வாங்கி நீப்பர் நதிக்குப் பின்னால் அமைதியாகச் சென்றன. மேலும் பல வெர்ஸ்டா தூரங்களை அவர்கள் கடந்து சென்றார்கள்.

பினுயெவ் துருப்புகளோடு நடந்து சென்றான். ஸனேஸா வும் அப்படியே வரிசையில் அணிவகுத்துச் சென்றான். ரஸ் ஸாடாவை ஒரு தூக்கு கட்டிலில் தூக்கிக் கொண்டு போனார் கள்.

ஸிம்பீர்ஸ்கி, வொலின்ஸ்கி, உபிம்ஸ்கி படைகள் மற்ற படைகளோடும் பிரிவுகளோடும் சாலையில் போய்க் கொண் டிருந்தன.

தளபதி பார்க்லாய் டெ டோல்லி படைகளுக்குப் பக்கத் தில் வந்தார்.

''வீரர்களை வாழ்த்துவோம்!'' என்றார்.

படைவீரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண் டார்கள்: ''தளபதி யாருக்கு வாழ்த்துக் கூறுகிறார்?'' என்று கேட்டார்கள்.

''வொலின்ஸ்கி படையைச் சேர்ந்த வீரர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார்'' என்று ஸிம்பீர்ஸ்கி படையினர் முடிவு செய்தார்கள்.

''உபிம்ஸ்கி படையைச் சேர்ந்த வீரர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார்'' என்று வொலின்ஸ்கி படையினர் முடிவு செய் தார்கள்.

''ஸிம்பீர்ஸ்கி படையைச் சேர்ந்தவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார்'' என்று உபிம்ஸ்கி படையினர் முடிவு செய்தார் கள். படைவீரர்கள் தங்களைச் சுற்றி எல்லாத் திசைகளிலும் பார்த்தார்கள்.

''அந்த வீரர்கள் எங்கே?''

இராணுவ நடவடிக்கை

குட்டுஸொவ் வசதியாக சுகமாக வாழ்க்கை நடத்த வில்லை. அவர் கடினமான ஆனால் புகழ்மிக்க வகையில் வாழ்ந் தார்.

1812ம் வருடத்தில் மிஹயீல் இல்லாரியோனவிச் குட்டு ஸொவுக்கு வயது அறுபத்தேழு.

அவர் வாழ்க்கையில் திரும்பிப் பார்க்க வேண்டிய நிகழ்ச்சி கள் அதிகமாக இருந்தன. எண்ணற்ற யுத்தங்கள், கால் நடைப் பயணங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு உயிர் தப்பிய வர். கிரிமியாவும் டான்யூபும், ஆஸ்திரியாவின் வயல்களும் இஸ்மாயில் கோட்டையின் ஆபத்துக்கள் நிறைந்த சுவர்களும்,

அலுஷ்டா யுத்தமும் ஒச்சாக்கவ் முற்றுகையும் காகூலில் நெடுங்காலம் நடைபெற்ற யுத்தமும் அவர் உயிரைப் பறித்து விடவில்லை. அவருக்கு மூன்று தடவை ஆபத்தான காயங்கள் ஏற்பட்டன. இரண்டு தடவை தலையிலும் ஒரு தடவை முகத்திலும் காயமேற்பட்டது. இன்னொரு சண்டையில் அவர் தன் வலது கண்ணை இழந்தார்.

முதியவர்கள் எல்லோரையும் போல அவரும் நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆனால் அவருக்கு ஓய்வு கிடைக்கவில்லை—மக்கள் குட்டுஸொவின் பெயரை நினைவில் வைத்திருந்தார்கள். மறுபடியும் சவாரி செய்யக் கொண்டு வரப்படும் கிழட்டுக் குதிரையைப் போல குட்டுஸொவ் துருப்புகளிடம் போனார். அவர் புதிய தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

படைவீரர்கள் மிக அதிகமாக மகிழ்ச்சியடைந்தார்கள். ''பிரெஞ்சுக்காரர்களை விரட்டியடிப்பதற்குக் குட்டுஸொவ் வந்துவிட்டார்'' என்று படைவீரர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்.

துருப்புகளைச் சந்திக்கப் போகும் வழியில் குட்டுஸொவ் எல்லாவற்றையும் நன்றாகச் சிந்தித்தார். ''நம்முடைய நிலைமை மோசமாக இருக்கிறது. இராணுவம் பின்வாங்குமாறு நேர்ந்தால் அது நல்லதல்ல. அத்தகைய நடவடிக்கைகள் ருஷ்யப் படைவீரனின் இயல்புக்கு ஏற்றவை அல்ல. ஏனென்றால் அவர்கள் கழுகுகளைப் போன்றவர்கள். இப்போது நம்மிடம் எதிரிகளுக்குச் சமமான பலம் இல்லை என்பது உண்மையே. நம்மிடம் இருக்கும் துருப்புகளைப் பாதுகாக்க வேண்டும். இராணுவம் இல்லையென்றால் ருஷ்ய அரசுக்கே பேராபத்து ஏற்படும். ஆனால் நாம் ருஷ்யப் படைவீரர்களின் மனோநிலையையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். ருஷ்ய ஆன்மாவை நாம் புரிந்து கொள்ள வேண்டும்...''

குட்டுஸொவ் துருப்புகள் தங்கியிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்.

''ஹுரே!'' என்று படைவீரர்கள் பலமாக முழங்கியபடியே தங்கள் தளகர்த்தரை வரவேற்றார்கள். ''எங்களை யுத்தம் செய்ய விடுங்கள்! ஐயா! நாங்கள் போர் செய்யத் துடிக்கிறோம்'' என்றார்கள்.

''நாம் இருவருமே ஒரே விதமாகச் சிந்திக்கிறோம். நம் மண்ணிலே இருக்கும் எதிரிக்குப் பாடம் கற்பிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது'' என்றார் குட்டுஸொவ்.

படைவீரர்கள் ஒருவரையொருவர் பொருள் பொதிந்த முறையில் பார்த்துக் கொண்டார்கள்; தங்களுடைய கண்

களைச் சிமிட்டினுர்கள். இப்பொழுது அவர்களுக்குக் கிடைத்திருக்கும் தளபதி உண்மையிலேயே அச்சம் என்பது என்னவென்று அறியாதவர்.

''நாம் யார்—ருஷ்யப் படைவீரர்கள் தானே? யுத்தம் செய்வதற்குரிய பலத்தைக் கடவுள் நம்மிடமிருந்து பறித்து விட்டாரா? நமக்குத் துணிவு போதாதா? எவ்வளவு காலம் நாம் பின்வாங்கிக் கொண்டிருக்க முடியும்?'' என்று குட்டுஸொவ் பேசினுர்.

''இது சரியான பேச்சு!''

''தளபதி குட்டுஸொவ் வாழ்க!'' என்று படைவீரர்கள் முழங்கினுர்கள்.

''சகோதரர்களே! இனிமேல் நாம் பின்வாங்கப் போவதில்லை. தீர்மானமான யுத்தம் விரைவில் இருக்கும். அது நிச்சயம்'' என்ருர் குட்டுஸொவ்.

அன்றிரவில் படைவீரர்கள் அமைதியாகத் தூங்கினுர்கள். மறுநாள் காலையில் அவர்கள் கண்களைத் திறந்தபொழுது குட்டுஸொவின் முதல் உத்தரவு அறிவிக்கப்பட்டது. அந்த உத்தரவு சந்தேகத்துக்கு இடமில்லாதபடி மணியைப் போலத் தெளிவாக ஒலித்தது: 'தொடர்ந்து பின்வாங்குங்கள்.'

படைவீரர்கள் முணுமுணுத்தார்கள். ''அப்படியாஞல் யுத்தம் எப்பொழுது ஆரம்பமாகிறதாம்? இது புரியவில்லையே'' என்று அவர்கள் தோள்களைக் குலுக்கினுர்கள்.

''ஒரு வேளை பழைய தலைமை வெளியிட்ட உத்தரவாக இருக்குமோ?''

அப்பொழுது குட்டுஸொவ் அங்கே வந்தார்.

''தளபதி அவர்களே! நாம் மறுபடியும் பின்வாங்கப் போகிருேமா? கதை பழையபடி தொடர்கிறதே'' என்று படைவீரர்கள் கேட்டார்கள்.

குட்டுஸொவ் படைவீரர்களை உற்றுப் பார்த்தார். அவர் முகத்தில் மிச்சமிருந்த ஒற்றைக் கண் விஷமத்தனமாகச் சிமிட்டியது. ''பின்வாங்க வேண்டும் என்று யார் சொன்னுர்கள்? இது ஒரு இராணுவ நடவடிக்கை'' என்ருர்.

புதுப் பதவி

குட்டுஸொவ் தனக்கு வந்த ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தார்:

''மேன்மை தங்கிய தளபதி, மதிப்புக்குரிய மிஹயீல் இல்லாரியோனவிச் அவர்களே!..''

அவருடைய பழைய நண்பரொருவர் கடிதத்தை எழுதியிருந்தார். அவர் முன்பு தளபதியாக இருந்தவர். அந்த சமயத்தில் அவர் இராணுவத்திலிருந்து ஒய்வு பெற்றிருந்தார். அவர் குட்டுஸொவுடன் பணியாற்றிய நீண்ட இராணுவ சேவையையும் அவர்களிருவரும் சேர்ந்து நடந்து சென்ற கால்நடைப் பயணங்களையும் நினைவுபடுத்தி எழுதியிருந்தார். அவர் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டதற்குப் பாராட்டும் அவருடைய வெற்றிக்கு வாழ்த்தும் தெரிவித்திருந்தார். ஆனால் அந்தக் கடிதத்தின் முக்கியமான பகுதியைக் கடைசியில்தான் எழுதியிருந்தார். அது அந்த தளபதியின் மகன், கிரிஷென்கா என்ற இளம் அதிகாரியைப் பற்றியது. தங்கள் இருவருக்குமிடையே உள்ள நீண்ட கால நட்பை உத்தேசித்துத் தன் மகனை ஒரு சுலபமான பதவியில் நியமிக்குமாறும் இயலுமானல் அவருடைய உதவியாளராக வைத்துக் கொள்ளுமாறும் குட்டுஸொவை ஒய்வு பெற்ற தளபதி கேட்டுக் கொண்டிருந்தார்.

''அப்படியா!'' என்று குட்டுஸொவ் பெருமூச்சுவிட்டார். ''நாங்கள் இப்படி வாழ்க்கையை ஆரம்பிக்கவில்லை. இளைய தலைமுறை எங்களைப் போலன்றி, வேறு விதமாக இருக்கிறது போலும். அவர்கள் தங்களுடைய நேரம் முழுவதையும் அமைதியாகப் பொழுதைக் கழிக்க கூடிய சுலபமான பதவியைத் தேடிக்கொண்டிருப்பதில் செலவிடுகிறார்கள். எல்லோருக்குமே தலைமையகத்தில் வேலை வேண்டும்; யுத்தத்தில் ஈடுபடக் கூடாது. கடவுள் தான் அவர்களைக் காப்பாற்ற வேண்டும்.''

என்ன இருந்தாலும் நட்பு வலிமையானது தானே. அதிலும் அந்தத் தளபதி சிறந்த படைவீரராகப் புகழ் பெற்றவர். குட்டுஸொவ் அவர் மீது அதிகமான மரியாதை வைத்திருந்தார். எனவே தகப்பனர் என்ற முறையில் அவருடைய வேண்டுகோளை கௌரவிக்க விரும்பினர்.

சில நாட்களுக்குப் பிறகு கிரிஷென்கா அவருக்கு முன்பு வந்தான். குட்டுஸொவ் அவனை ஏற இறங்கப் பார்த்தார். புதிதாகச் சிறகுகள் முளைத்த பறவையைப் போல ஒரு இளைஞன் அவருக்கு முன்னல் நின்று கொண்டிருந்தான். அவன் அதிகாரியாக இருக்கலாம். ஆனல் உண்மையில் அவன் சிறுவன் தான். குட்டுஸொவின் தோளைக்கூட அவன் எட்டவில்லை. நாணலைப் போல ஒல்லியாக இருந்தான். அவனுடைய கன்னங்களில் மழிக்கப்படாத மென்முடி தென்பட்டது.

அதைப் பார்க்கும் பொழுது குட்டுஸொவுக்கு ஓரளவுக்கு வேடிக்கையாகக் கூட இருந்தது. ''ஆம். இன்றைய இளைஞர்கள் அந்தக் காலத்தைப் போல இல்லை. நமது இராணுவ

அதிகாரிகளின் தரம், தகுதி குறைந்து போய் விட்டது. மெலிந்த உடலும் நலிந்த சிந்தனையும்—இவர்களை இப்படித் தான் வர்ணிக்க வேண்டும்'' என்று மனதில் எண்ணினர்.

குட்டுஸொவ் கிரிஷென்காவின் தகப்பனரைப் பற்றியும் தாயாரைப் பற்றியும் விசாரித்தார்.

''சரி. உன் தகப்பனர் பீட்டர் நிக்கோடிமிச் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவருடைய விருப்பத்தின்படி உன்னை என்னுடைய உதவியாளராக நியமித்திருக்கிறேன். அதற்குரிய இராணுவ உடைகளைத் தயாரித்துக் கொள்'' என்ருர்.

இதைக் கேட்ட பிறகும் அந்த அதிகாரி அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தார்.

''தளபதி அவர்களே!''

குட்டுஸொவுக்குக் கோபம் ஏற்பட்டது. அந்த இளைஞன் தனக்கு நன்றி சொல்லப் போகிருன் என்று நினைத்தார்.

''தளபதி அவர்களே...'' கிரிஷென்கா மறுபடியும் பேச ஆரம்பித்தான்.

குட்டுஸொவ் முகத்தைச் சுளித்தார். ''இது என்ன தொந்தரவு!''

''சீக்கிரம் சொல்.''

''மிஹயீல் இல்லாரியோனவிச்! நான் படையிலேயே தொடர்ந்து இருக்க விரும்புகிறேன்... இளவரசர் பீட்டர் பக்ராத்தியோனுடைய பட்டாளத்திலேயே நீடிக்க விரும்புகிறேன்'' என்று அவன் பயந்து கொண்டே சொன்னன்.

குட்டுஸொவுக்கு இது இன்னும் அதிக வேடிக்கையாகத் தோன்றியது. அவர் அந்தக் குட்டையான அதிகாரியை, அவன் முகத்தில் அரும்பியிருக்கும் மீசையைப் பார்த்தார். 'இவன் ஒரு குழந்தை. இன்னும் குழந்தையாகத் தான் இருக்கிருன்' என்று நினைத்தார். திடீரென்று அவன் மீது அவருக்கு அனுதாபம் ஏற்பட்டது. துப்பாக்கி குண்டுகளுக்கு முன்னல் நிற்குமாறு இந்தச் சிறுவனை அனுப்புவது சரியா?

''இல்லை. அது என்னல் முடியாது. நான் உன் தகப்பனருக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன்'' என்ருர் குட்டுஸொவ்.

அந்த அதிகாரியின் உதடுகள் நடுங்கின. அவன் இன்னும் சிறிது நேரத்தில் அழுவதற்கு ஆரம்பிப்பான் என்று தோன்றியது.

''அது என்னல் முடியாது. படையில் எந்தப் பதவியை உனக்குத் தர முடியும்? போர்க் களத்தில் நீ நின்ருல் கூட யாருக்கும் தெரியாதே'' என்ருர்.

அவர் சொன்ன கடைசி வாக்கியம் அந்த இளைஞனின் மனதை உறுத்தியிருக்க வேண்டும்.

''சுவோரொவ் ஒன்றும் இராட்சச உருவம் கொண் டிருக்கவில்லையே.''

குட்டுஸொவ் ஆச்சரியத்தில் புருவங்களை உயர்த்தினர். தகப்பனருடைய கோட்டுக்குள் மறைந்து கொள்பவர்களில் கிரிஷென்காவும் ஒருவனல்ல என்பதை அவர் உணர்ந்தார். அவர் அந்த இளைஞனின் அருகே சென்று அவனைக் கட்டித் தழுவினர்.

''சரி. நீ சொன்னது போதும். உன் தகப்பனரைப் போல...'' குட்டுஸொவினல் வாக்கியத்தை முடிக்க இயல வில்லை. அந்த வயோதிகருடைய கண்களில் நீர்த்துளிகள் திரண்டன.

அவர் சிறிது நேரம் தயங்கினர்.

''நீ போகலாம்'' என்று குட்டுஸொவ் முடிவாகக் கூறி னர். ''நடப்பது நடக்கட்டும். உன்னுடைய சொந்த வழி யிலேயே நீ நட, அது எங்கே போய்ச் சேர்ந்தாலும் சரி'' என்றர்.

கிரிஷேன்கா தன் கால்களை ஒன்ருகச் சேர்த்து நிமிர்ந்து நின்றன்; குதிகால்களில் கச்சிதமாகச் சுழன்று திரும்பினன். அந்த இடத்தை விட்டு அகன்றன். எனினும் குட்டுஸொவ் அங்கேயே சிறிது நேரம் நின்று அந்த இளைஞனின் உருவம் மறைவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு ஒரு காகிதம் கொண்டு வரச் சொல்லி உத்தரவிட் டார். தன்னுடைய நண்பரான வயோதிகத் தளபதிக்குப் பதில் எழுதத் தொடங்கினர்.

''மரியாதைக்குரிய பீட்டர் நிக்கோடிமவிச் அவர்களே!

ஆண்டவன் எனக்கு அதிகமான மகிழ்ச்சியைக் கொடுத் திருக்கிறர். உங்கள் மகன் கிரிஷென்கா என்னிடம் வந்து விட்டான். அவன் ஒரு புதிய தலைமுறையைச் சேர்ந்தவனல்ல, நம்முடைய இளமைப் பருவம் நம்மிடம் திரும்புவது போலவே எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய ஆச்சரியத்தை எனக்குக் கொடுத்தற்காக உங்களுக்குப் பல தடவை நன்றி சொல்கிறேன். எதிர்காலத்தில் நம்முடைய வீரர்களில் ஒரு வனக அவன் பிரகாசிப்பான் என்பது என்னுடைய ஆழமான நம்பிக்கை...''

இப்படி எழுதிய பிறகு அவர் சிறிது நேரம் சிந்தித்தார்; மறுபடியும் கடிதத்தைத் தொடர்ந்தார்.

''உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி விட்டேன். இந்த நேரத்திலிருந்து கிரிஷென்கா என்னுடைய இதயத்தின் மிக முக்கியமான இடத்தில் உதவியாளராக இருப்பான்.''

இக்கடிதத்தைப் படித்த பிறகு அந்த வயோதிகத் தளபதி வெகு நேரம் மூளையைக் குழப்பிக் கொண்டார்.

'''என்னுடைய இதயத்தில் மிக முக்கியமான இடத்தில் உதவியாளர்'—இதற்கு என்ன அர்த்தம்? சரி. நான் இராணுவ விவகாரங்களை விட்டு விலகி அதிகமான காலமாகி விட்டது. தலைமையகத்தில் இப்பொழுது ஒரு புதுப் பதவியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் போலும் '' என்று நினைத்தார்.

தாத்தாரியன்

ஒரு சமயம் கிழாட்ஸ்க் நகரத்துக்கு அருகே போரில் இறந்து போன தோழர்களைப் புதைப்பதற்குப் படைவீரர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். மலையில் மூன்று பைன் மரங்களுக்கு இடையிலிருந்த ஒரு இடத்தை அதற்காகத் தேர்ந்தெடுத்தார்கள். அங்கே பெரிய புதைகுழியைத் தோண்டினார்கள்.

அந்த இடத்திலிருந்து இடது பக்கமாகப் பார்த்தால் நம் கண்களுக்கு முன்னால் ஒரு நதி வளைந்து போய்க் கொண்டிருப்பது தெரியும். வலது பக்கத்தில் சாலை அடிவானம் வரையிலும் நீண்டிருந்தது. நேராகப் பார்த்தால் அடுத்தடுத்து இருக்கும் வயல்கள், ருஷ்யாவின் நீண்ட அகன்ற சமவெளி தெரியும். அந்த வீரர்களுக்கு அமைதியான ஓய்விடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.

படைவீரர்கள் இறந்து போன தோழர்களின் உடல்களை மலைக்குத் தூக்கிக் கொண்டு வந்து அந்தப் புதைகுழியின் ஓரமாக வைத்தார்கள். சவங்களை நல்லடக்கம் செய்கின்ற தோத்திரத்தை வாசிப்பதற்காக தங்கள் படைப்பிரிவின் மதகுரு வரட்டும் என்று காத்திருந்தார்கள்.

இறந்து போன படைவீரர்கள் அணிவகுப்பிலிருப்பதைப் போல வரிசையாக வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய கண்கள் மூடியிருந்ததுதான் அங்கேயிருந்த ஒரே வித்தியாசமாகும். அவர்கள் ஒவ்வொருவருடைய கைகளும் மார்பின் மீது வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக இருந்தார்கள். வாலிபம், வயோதிகம், ஒல்லியான உடல், இரட்டை நாடியான உடம்பு, அடர்த்தியான மீசை, முதிராத இளைஞனின் மென்முடி, அழுத்தமான புருவங்கள், லேசான புருவங்கள்... அகலமான தாடையோடு கூடிய ஒருவனுக்குப் புருவங்களே இல்லை.

''ஏய்! அவன் தாத்தாரியன்!''

படைவீரர்கள் உற்றுப் பார்த்தார்கள். அவனை என்ன செய்வது? தாத்தாரியன் கிறிஸ்துவன் அல்ல; அவன் வேறு

சமயத்தைச் சேர்ந்தவன். அவனுடைய சவ நல்லடக்கப் பிரார்த்தனையை எப்படிச் செய்வது? இந்தத் தாத்தாரியனுக்கு நல்லடக்கப் பிரார்த்தனை நடத்தியதற்காகக் கடவுள் தங்களை தண்டிக்காத வகையில் சடங்குகளை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும்?

படைவீரர்கள் கூட்டமாகச் சேர்ந்து தங்களுக்குள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள்.

''அது அவ்வளவு சரியில்லைதான். ஆனால் அவன் மற்றவர்களோடு சேர்ந்து நின்று சண்டை போட்டான். ருஷ்யாவுக்காகத் தன்னுடைய உயிரைக் கொடுத்தான். அவனுடைய இரத்தம் கிறிஸ்துவ இரத்தமாக இல்லாதிருக்கலாம்; ஆனால் அது படைவீரனுடைய இரத்தம். அவனை மட்டும் பிரித்துத் தனியாக ஒரு குழியில் புதைப்பது சரியல்ல. அவனும் மற்றவர்களோடு சேர்ந்தே இருக்கட்டும்.''

பாதிரியார் வந்தார்; தன்னுடைய நீண்ட தாடியைச் சரிப்படுத்திக்கொண்டார். தூபக்காலை எடுத்து சடங்குகளுக்கு ஆயத்தம் செய்தார். அவர் தோத்திரத்தைச் சொல்லப் போகும் பொழுது அந்தத் தத்தாரியனைப் பார்த்தார்.

அவர் முகத்தில் கோபக் குறிகள் தோன்றின.

''அவனை அந்த இடத்திலிருந்து அகற்றுங்கள்.''

படைவீரர்கள் அசையவில்லை.

''அவனைத் தூக்குங்கள்'' என்று மதகுரு மறுபடியும் உத்தரவிட்டார்.

''பாதிரியார் அவர்களே! அவனும் இங்கேயே இருக்கட்டும். அவன் ஒரு படைவீரன். கடவுள் இதைத் தவருகக் கருத மாட்டார்.''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அந்தப் பாதிரியாரின் முகம் அருவருப்பால் எட்டுக் கோணலாயிற்று. அவருடைய தாடைத் தசைகள் துடித்தன; அவர் வாய் ஆச்சரியத்தால் பிளந்து அப்படியே நின்றுவிட்டது.

''கடவுளை நிந்தனை செய்பவர்கள்!'' என்று அவர் அலறினர். ''கடவுளின் புனித வார்த்தைகளை அவமதிப்பவர்கள்! பாவ மன்னிப்புக் கேளுங்கள். புனித ஆவிகளிடம் பாவ மன்னிப்புக் கேளுங்கள்'' என்றார்.

படைவீரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அது பேச்சல்ல; இடி முழக்கம். தாங்கள் சொன்ன வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுவிட அவர்கள் விரும்பினர்கள், ஆனால் ஏதோ ஒன்று அவர்களைத் தடுத்து நிறுத்தியது. படைவீரர்கள் என்ற முறையில் அவர்களுடைய பந்தங்கள் மிகவும் பலமாக இருந்தன.

அந்த நேரத்தில் குட்டுஸொவ் அந்த இடத்துக்குச் சமீ

பத்தில் குதிரையின் மீது போய்க் கொண்டிருந்தார். அவர் பைன் மரங்களைக் கடக்கும் பொழுது மதகுருவையும் புதை குழியையும் வரிசையாகக் கிடக்கும் பிரேதங்களையும் பார்த்தார். அவர் குதிரையை விட்டுக் கீழே இறங்கினர்; தொப்பியை அகற்றிவிட்டு சிலுவைக் குறி இட்டுக் கொண்டார்.

''பாதிரியார் அவர்களே! ஏதேனும் பிரச்சினையா?''

பாதிரியார் சிக்கலை விளக்கினர். குட்டுஸொவ் இறந்து போன படைவீரர்களின் உடல்களையும் தாத்தாரியன் உடலையும் பார்த்தார்; உயிரோடு நின்று கொண்டிருக்கும் படைவீரர்களையும் பார்த்தார். கடைசியில் பாதிரியாரை நோக்கித் திரும்பினர்.

''அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற முடியாதா?''

''தளபதி அவர்களே! கடவுளை வணங்குவோம்! அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிவோம்.''

''சரி, சரி'' என்று தலைமைத் தளபதி கோபத்தோடு சொன்னர். மறுபடியும் படைவீரர்களைப் பார்த்தார். பிறகு தூபக்காலைச் சுட்டிக் காட்டினர்.

''அதை என்னிடம் கொடுங்கள்'' என்றார்.

பாதிரியார் முற்றிலும் அமைதிகுலைந்தார். ஆனல் தூபக்காலை எடுத்து நீட்டினர். குட்டுஸொவ் தானே அந்த உடல்களின் மேல் தூபக்காலை ஆட்டினர்.

அமைதி அழிந்தது

பொரோடினே கிராமத்தில் நடு நாயகமாக இருக்கும் மாதாகோவிலின் மணிக்கூண்டில் நீங்கள் ஏறிப்பார்த்தால் பக்கத்திலுள்ள வயல்கள் நன்ருகத் தெரியும்.

இங்கே 1812ம் வருடம் செப்டெம்பர் மாதம் 7ந் தேதியன்று கால்வாய்கள் நிறைந்து காணப்படுகின்ற விஸ்தாரமான சமவெளிப் பிரதேசத்தில் அழியாப் புகழ் பெற்ற யுத்தம் ஆரம்பமாயிற்று. இங்கு தான் ருஷ்யாவின் மகத்தான புகழுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. நெடுங்காலத்துக்கு முன்பு வாழ்ந்த நமது முன்னோர்கள் நம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய மரபுச் சொத்தை இங்கே தான் உயிரை அர்ப்பணித்துக் காத்தார்கள். இந்த மகத்தான பூமிக்கு மரியாதையைச் செலுத்துங்கள். அங்கே அரங்கேற்றப்பட்ட வீரத்துக்கு வணக்கத்தைச் செலுத்துங்கள்.

அதைத் தெரிந்து கொள்ளுங்கள்! நன்ருகப் புரிந்து கொள்ளுங்கள்! ஒரு போதும் மறவாறு நினைவிலிறுத்துங்கள்!

பொழுது புலர்வதற்கு முன்பு இன்னும் இருள் மறையா திருந்த நேரத்தில் குட்டுஸொவ் யாரிடமும் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் தன் குதிரை மீதேறி ஒன்றரை வெர்ஸ்டா தூரம் பயணம் செய்து பொரோடிநோ அருகில் கோர்க்கி என்ற சிறு குடியேற்றத்துக்குப் பக்கத்திலுள்ள குன்றை வந்தடைந்தார். அதற்கு முந்திய நாள் மாலையில் அவர் இந்த இடத்தைப் பொறுக்கியெடுத்தார். அவருடைய தலைமை யகத்தை இங்கே அமைத்துக் கொள்ள முடிவு செய்தார்.

அந்த இடத்துக்கு வலது பக்கத்தில் சற்று தூரத்தில் மாஸ்க்வோ நதியின் கிளை நதியான கொலோச்சா நதி ஓடியது. இங்கே ருஷ்யப் படையின் வலது பக்க அணி அமைந் திருந்தது. இங்கிருந்து புதிய ருஷ்யப் படைகளின் நிலை புதிய ஸ்மொலேன்ஸ்க் சாலைக்குக் குறுக்கே சென்று இடது பக்கத் தில் ஏழு வெர்ஸ்டா தூரத்துக்குச் சிறிது குறைவாக நீண் டது; அங்கே செமியோனவ்ஸ்கொயே கிராமத்துக்கும் நீரோ டைக்கும் போகின்ற பழைய ஸ்மொலேன்ஸ்க் சாலையின் பக்கத்தில் உடிட்ஸா என்ற கிராமம் அமைந்திருந்தது.

அதற்கருகில் மேடான பகுதிகளின் மீது ருஷ்ய பீரங்கி கள் பல வைக்கப்பட்டிருந்தன. இவற்றில், குர்காநோவாய என்ற இடத்தில் வைக்கப்பட்டிருந்த பீரங்கி பொரோடிநோ போர்க்களத்தில் பிரதான பாத்திரத்தை வகிக்கப் போகிறது.

ரயேவ்ஸ்கி தலைமை வகித்த பிரபலமான பீரங்கிப் படை இங்குதானிருந்தது. அதன் இடது பக்கத்தில் செமியோனவ்ஸ் கொயே கிராமத்தின் பின்புறத்தில் எதிரிகளின் படைகள் இருந்த இடத்துக்குச் சாய்வாகப் பள்ளங்கள் வெட்டப் பட்டிருந்தன. இங்கு புகழ் மிக்க பக்ராத்தியோனுடைய படைகள் இருந்தன.

ருஷ்யப் படைகளின் வலது அணிக்கு பார்க்லாய் டெ டோல்லி தலைமை தாங்கினார். பக்ராத்தியோன் இடது அணிக்குத் தலைமை தாங்கினார்.

துருப்புகள் குவிக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சில வெர் ஸ்டா தூரத்துக்கு அப்பால் சேமப்படை நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. கஸாக்குகளையும் குதிரைப் படையினரையும் கொண்ட இந்தப் பிரிவு புதர்க்காடுகளிலும் பள்ளமான இடங்களிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

குட்டுஸொவ் இருளில் தன் குதிரை மீது மௌனமாக உட்கார்ந்திருந்தார். அவரால் சரியாகப் பார்க்க முடிய வில்லை என்றாலும் அநேகமாக அணைக்கப்பட்டு விட்ட நெருப்பு களின் மங்கிய ஒளியில் எதிரிப் படைகளின் நிலைகளைத் தெரிந்து கொண்டார். எதிரி முகாமில் நடைபெறும் இயக் கத்தின் அறிகுறிகளைத் தெரிந்து கொள்வதற்குத் தம்முடைய

செவியைக் காட்டிலும், அனுபவம் நிறைந்த படைவீரனின் அறிவையே அவர் அதிகமாக நம்பினர்.

குட்டுஸொவ் மிகுந்த சிரமத்தோடு குதிரையிலிருந்து கீழே இறங்கினர். யாருடைய உதவியுமில்லாமல் கீழே இறங்குவது அவருக்குக் கஷ்டமாக இருந்தது. அவருக்கும் வயதாகிவிட்டது; வயதின் சுமையினல் அவர் உடல் தளர்ந்துவிட்டது. அவருடைய இளமை மறைந்து நெடுங்காலமாகிவிட்டது.

தலைமைத் தளகர்த்தர் முனகிக் கொண்டே முழங்கால்களை வளைத்துக் கீழே குனிந்தார். பூமியில் காதை வைத்துக் கேட்டார். எதிரி முகாமில் என்ன நடைபெறுகிறது என்று அவர் கருதியதை சரிபார்ப்பதற்காக அவர் அவ்விதம் செய்தார். அந்த இருளின் அமைதியில் ஒலியை எதிரொலிக்கும் பலகையாக பூமி இருந்தது. குட்டுஸொவ் சங்கீதக் கலைஞனின் செவிப் புலனேடு மிகவும் மெல்லிய சத்தங்களையும் கூட சிறிதும் தவறில்லாதபடி இனங் கண்டார்.

பிறகு அவர் எழுந்து நின்ருர்; குதிரையின் மீதேறி உட்கார்ந்தார். மறுபடியும் அவருடைய கண்கள் இரவு வானத்தை உற்று நோக்கின.

கிழக்கே காலைக் கதிரவனின் முதற் கதிர்கள் தோன்றின. வெண்மையான மரங்களில் உட்கார்ந்திருந்த காக்கைகள் கரைந்தன. குட்டுஸொவின் குதிரை தன்னுடைய குளம்புகளினல் புல்தரையைத் தோண்ட ஆரம்பித்தது; மெலிதாகக் கனைத்தது.

குட்டுஸொவின் உதவியாளர்களும் தளபதிகளும் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் கவலையோடு அவர் எங்கே என்று தேடிக்கொண்டிருந்தார்கள். அவரைப் பார்த்ததும் வேகமாக ஓடி வந்து அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

கிழக்கு மென்மேலும் அதிகமாகப் பிரகாசித்தது. அந்தக் குன்றிலிருந்து பார்க்கும் பொழுது சுற்றுப்புறங்கள் உள்ளங்கை அளவுக்குத்தான் தோன்றின. வாழ்க்கையின் ஓசைகள் குறைந்து பிறகு அடங்கிவிட்டன. எங்கும் அமைதி சூழ்ந்தது. வயல்களின் மீது செவிப்பறைகளைக் கிழிக்கும் அமைதி நிலவியது. காடுகளுக்கு மேல் மேகங்கள் மட்டும் பூனைகளைப் போலப் பதுங்கிச் சென்றன.

திடீரென்று இடிமுழக்கத்தைப் போல பீரங்கி வெடித்தது. அமைதி அழிந்தது. பொரோடினே போருக்குக் குறித்த நேரம் வந்து விட்டது.

பக்ராத்தியோன் எங்கே இருப்பார்?

குட்டுஸொவ் போருக்கு முன்பு உரிய இடங்களில் படைகளை வைத்தபொழுது இடது பக்கத்தில் பக்ராத்தியோனுடைய படையை நிறுத்திஞர். மிகவும்அதிகமானஅளவுக்குத் திறந்திருந்த காரணத்தால் இதுதான் மிகவும் ஆபத்தான இடமாகும். பிரெஞ்சுப் படைகள் தங்களுடைய தாக்குதலை இங்கேதான் ஆரம்பிப்பார்கள் என்பது குட்டுஸொவுக்குத் தெரியும்.

''இளவரசர் பீட்டரிடம் போதிய படைகள் இல்லையென்று தோன்றுகிறது'' என்று அதிகாரிகளில் ஒருவர் கவலையோடு விசாரித்தார்.

''அங்கே பக்ராத்தியோன் இருக்கிருர். அவர் இருப்பதஞல் அவர்களுடைய பலம் இரண்டு மடங்கு அதிகரித்துவிடும்'' என்ருர் குட்டுஸொவ்.

அவர் எதிர்பார்த்தது போலவே நெப்போலியன் இடது பக்க அணியைத்தான் முதலில் தாக்கிஞர். பக்ராத்தியோனுடைய படைகளை அழித்து விட்டு அங்கேயிருந்து மத்தியப் பகுதியை நேரடியாகத் தாக்குவது சக்கரவர்த்தி நெப்போலியனின் போர்த்திட்டமாகும்.

இடது அணியிலிருந்து படைகளின் மீது 130 பிரெஞ்சு பீரங்கிகள் தாக்கின. மூன்று குதிரைப் படைகள் அதன் மீது மோதின. அந்தச் சிறு இடத்தை நோக்கிக் காலாட்படைகள் டஜன்கணக்கில் குவிந்தன. நேய், டவூ, முராத்—பிரான்சின் மிகச் சிறந்த மார்ஷல்கள் தாக்குதலுக்கு நேரடியாகத் தலைமை தாங்கினர்.

''ஒரு ஜெனரலுக்கு எதிராக இத்தனை மார்ஷல்களா?'' என்று ருஷ்யப் படைவீரர்கள் கேலி செய்தனர்.

''நம் தளபதிக்கு எதிராக ஐந்து மார்ஷல்களை அனுப்பட்டுமே. அதஞல் போரின் முடிவு மாறப் போகிறதா?''

''சகோதரர்களே! அஞ்ச வேண்டாம். உறுதியாக நில்லுங்கள்.''

எதிரிப் படையினர் அலையலையாக வந்து தாக்கிஞர்கள். பிரெஞ்சுக்காரர்களிடம் அச்சம் என்பதே அணுவளவும் இல்லை. காயமடைந்து கீழே விழுந்த தோழர்களின் இடங்களில் புதிய வீரர்கள் உடனே வந்து நின்று தாக்குதலைத் தொடர்ந்தனர்.

''பிரமாதம்! பிரமாதம்!'' என்று பக்ராத்தியோன் பாராட்டிஞர். அவரால் அந்த வீரர்களைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

ஆனால் ருஷ்யர்களும் அதே அளவுக்கு உறுதியுடையவர்களாக இருந்தனர். அவர்களுடைய துணிச்சல் பிரெஞ்சுக்காரர்களின் துணிச்சலுக்கு ஈடு கொடுத்தது. இரண்டு இரும்புச் சுவர்கள் மோதின. வீரன் வீரனோடு போர் செய்தான்; துணிவு துணிவைச் சந்தித்தது. அது கருக்கறிவாளைக் கொண்டு கருங்கல்லை உடைக்க முயலுவதைப் போல இருந்தது. ருஷ்யர்கள் ஒரு அடிகூடப் பின்வாங்கவில்லை; பிரெஞ்சுக்காரர்கள் ஒரு அடிகூட முன்னே செல்ல முடியவில்லை. போர்க்களத்தில் பிரேதங்கள் மலையாகக் குவிந்தன.

பள்ளங்களில் யுத்தம் முடிவில்லாமல் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. சூரியன் வானத்தின் உச்சிக்கு வந்து வெகு நேரமாயிற்று; ஆனால் ருஷ்யப் படைகளின் உறுதிமிக்க தற்காப்பைக் குலைக்க முடியவில்லை.

நெப்போலியனுடைய அதிரடித் திட்டம் வெற்றியடையாததால் அவர் அதிருப்தியடைந்தார். அவர் இருநூறு, முந்நூறு, நானூறு பீரங்கிகளை அங்கே அனுப்பினார். அவர் அச்சமுண்டாக்கக் கூடிய வகையில் உத்தரவிட்டார்.

''எல்லாப் படைகளும் இடது பக்கத்தைத் தாக்கட்டும்!''

புதிய சேமப்படைகள் போரில் ஈடுபட்டன.

''நிலைமை எப்படி? பக்ராத்தியோன் பின்வாங்கிவிட்டாரா?

''சக்கரவர்த்தி அவர்களே! இல்லை.''

குட்டுஸொவிடமிருந்து பக்ராத்தியோனுக்குத் தூதர்கள் விரைந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் கட்டளைகளையும் உத்தரவுகளையும் எச்சரிக்கைகளையும் எடுத்துக் கொண்டு போனார்கள். ஆனால் உக்கிரமான போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது தளபதியைப் பார்ப்பது மிகவும் கடினமாக இருந்தது. பக்ராத்தியோன் ஒரு இடத்தில் ஒரு போதும் இருப்பதில்லை.

''நான் தளபதியல்ல; நான்தான் முதல் படைவீரன்'' என்று அவர் அடிக்கடி வேடிக்கையாகச் சொல்லுவார்.

தூதர்கள் இளவரசர் பீட்டரைத் தேடி எல்லா இடங்களுக்கும் போவார்கள்.

''அவர் இங்கேதான் இருக்க வேண்டும்'' என்று அவர்கள் முடிவு செய்வார்கள்.

''தளபதி அந்தத் திசையில் போனார்'' என்று தகவல் கிடைக்கும். அவர்கள் அந்தத் திசையை நோக்கி ஓடுவார்கள். அவர்கள் அங்கே போய்ச் சேர்ந்ததும் அவர் இல்லை என்பதைத் தெரிந்து கொள்வார்கள்.

''ஆம். அவர் இங்கே வந்தார். ஆனால் உடனே போய்விட்டார்.''

தூதர்கள் மறுபடியும் ஓடுவார்கள். மறுபடியும் அதே ஏமாற்றம் காத்திருக்கும். அவர்களுடைய குதிரைகளின் மீது வியர்வை ஆருக வழிந்து கொண்டிருக்கும்; ஆனுல் அவர்கள் பொன்னுன நேரத்தை வீணுக்கிக் கொண்டிருப்பார்கள்.

வொயேய்கவ் என்ற பெயருடைய ஒரு அதிகாரி மட்டும் குட்டுஸொவிடமிருந்து உத்தரவு கிடைத்ததும் உடனே பக்ராத்தியோனேக் கண்டுபிடித்துக் கொடுத்துவிடுவார்.

அவர் மீது மற்ற தூதர்கள் பொருமையடைந்தார்கள். ''அந்த வொயேய்கவ் எவ்வளவு அதிர்ஷ்டசாலி'' என்று அவர்கள் முணுமுணுத்தார்கள். தளபதி இருக்குமிடத்தை அவர் எப்படி சரியாகக் கண்டுபிடித்துவிடுகிருர் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அவர்கள் முயன்ருர்கள்.

''அது மிகச் சுலபம். இளவரசர் பக்ராத்தியோன் தானே எனக்கு உதவி செய்கிருர்'' என்று வொயேய்கவ் பதிலளித்தார்.

இதைக் கேட்டதும் மற்ற அதிகாரிகளுக்குக் கோபம் வந்தது. வொயேய்கவ் வேடிக்கை செய்வதாக அவர்கள் நினேத்தார்கள்.

''எங்களே ஏமாற்ற நினேக்க வேண்டாம், நாங்கள் முட்டாள்கள் அல்ல; உங்களுடைய இரகசியத்தைச் சொல்லுங்கள்'' என்ருர்கள்.

வொயேய்கவ் படீரென்று சிரித்தார்.

''இரகசியமா? அதோ தெரிகிறதே! அது தான் என்னுடைய இரகசியம்'' என்று வொயேய்கவ் பக்ராத்தியோனுடைய படைகள் இருக்கும் திசையைச் சுட்டிக்காட்டினுர்.

தூதர்கள் அவர் விரல்கள் காட்டிய திசையைப் பார்த்தார்கள். அங்கே புதுமையாக ஒன்றும் இல்லே. எப்பொழுதும் போல அங்கே படைகள் நின்று கொண்டிருந்தன. வழக்கம் போல யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. துப்பாக்கிகளேச் சுடுகின்ற சத்தமும் புகையும், தூப்பாக்கி ஈட்டிகளே ஓங்கிக் குத்துகின்ற சத்தமும் கேட்டது. உக்கிரமான தாக்குதலின் காரணமாக பூமி நடுங்கியது.

''நன்ருகப் பாருங்கள்! உற்றுப் பாருங்கள்! தீவிரமான யுத்தம் நடைபெறும் இடம் தெரிகிறதா?'' என்று வொயேய்கவ் கேட்டார்.

அதிகாரிகள் அந்த இடத்தைக் கண்டுபிடித்தார்கள்.

''அங்கே!'' என்று விரல்களினுல் சுட்டிக் காட்டினுர்கள்.

''அந்த இடத்துக்குப் போக வேண்டும். அதுதான் என்னுடைய இரகசியம். அந்த நரகத்தில் தான் பக்ராத்தியோன் எப்பொழுதும் இருப்பார். அங்கே போனுல் அவரை நிச்சயமாகப் பார்க்கலாம்'' என்ருர் வொயேய்கவ்.

ஹெர்குலிசின் பலம்

லெப்டினென்ட் ஜாப்ரின் தலைமையில் இருந்த பீரங்கிப் படை மிகக் குறைவான நேரத்தில் தன்னுடைய நிலையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வீரர்கள் வண்டிகளில் குதிரைகளைப் பூட்டி புதிய இடத்தை நோக்கி வேகமாகப் புறப்பட்டார்கள். தளபதி மிலொராடவிச்சின் தலைமையில் உள்ள படை தாக்குதலை ஆரம்பித்து விட்டபடியால் அவர்களுக்கு உடனடியான உதவி தேவைப் பட்டது.

''வேகமாகப் போங்கள்! ஹே! நான் சொல்வது காதில் விழுகிறதா? வேகம்!'' என்று ஜாப்ரின் உத்தரவு கொடுத்தார், அதட்டினார்.

சமீபத்தில் தாக்குதல் நடைபெற்ற ஒரு இடத்தின் வழியாக அவர்கள் போக வேண்டியிருந்தது. பள்ளமான பகுதிக்குள் குதிரைகள் இறங்கிச் சென்றன. அந்த வயல் முழுவதும் பிரேதங்கள் சிதறிக் கிடந்தன. ருஷ்யர்களும் பிரெஞ்சுக்காரர்களும் ஒருவர் மீதொருவர் செத்துக் கிடந்தனர். யாரோ ஒருவர் மாவு மூட்டைகளைத் தாறுமாறாகப் போட்டது போல அந்த இடம் தோன்றியது. படைவீரர்கள் அந்த இடத்தில் அப்படியே நின்றுவிட்டனர்.

''அட கடவுளே! இப்படியும் ஒரு காட்சியா?''

ஜாப்ரின் முதலில் இடது பக்கம் பார்த்தார்; பிறகு வலது பக்கம் பார்த்தார். அங்கே பீரங்கி வண்டிகள் போவதற்கும் படைவீரர்கள் நடப்பதற்கும் வழி இல்லாதிருந்தது. அதைச் சுற்றி வேறு வழியில் போவதற்கு இனி நேரமில்லை. லெப்டினென்ட் சிலுவைக்குறி இட்டார்.

''நேரே போங்கள்! செத்துப் போனவர்களால் உயிரோடிருப்பவர்களுக்கு எந்த ஆபத்தும் கிடையாது.''

எப்பிஃபானெவ் என்ற பெயருடைய ஒரு படைவீரன் மற்றவர்களுக்குப் பின்னால் சிறிது பின்தங்கினான். அவன் பயத்தினால் கண்களை மூடிக் கொண்டான்.

இந்த பயங்கரமான இடத்தை அவர்கள் சீக்கிரமாகக் கடந்து விட வேண்டுமென்று அவன் மனதில் நினைத்துக் கொண்டான். பள்ளங்களும் மேடுகளும் நிறைந்த சாலையில் போவதைப் போல பீரங்கிகள் ஏறி இறங்கிப் போய்க் கொண்டிருந்தன. அந்தப் படை வீரனுக்கு நடுக்கம் ஏற்பட்டது. ஒரு மெலிதான, நீண்ட முனகல் திடீரென்று அவனுக்குக் கேட்டது. அவன் கண்களைத் திறந்து பார்த்தான். பீரங்கி வண்டியின் சக்கரத்துக்குக் கீழே பழுப்பு நிறத்தில் மீசை

யோடு கூடிய ஒரு கார்பரலின் உடல் கிடந்தது. அந்த உடல் லேசாக அசைவதைப் பார்த்தான். அவன் உடல் நடுங்கி வியர்வை ஆறாகப் பெருகியது.

''ஓ!'' என்று எப்பிஃபானெவ் குதிரைகளை அதட்டி நிறுத்தினான். உடனே கீழே குதித்தான்.

அந்த கார்பரல் ஜன்னி கண்ட நிலைமையில் இருந்தார், தரையில் கிடந்தார். அவருடைய உடலின் ஒரு பக்கத்திலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. அவருடைய தொப்பி தரையில் கிடந்தது. ஆனால் அவருடைய கை ஆயுதத்தை கெட்டியாகப் பிடித்திருந்தது.

எப்பிஃபானெவ் அந்தக் கார்பரலிடம் ஓடினான். பீரங்கி வண்டிச் சக்கரத்துக்கு அடியில் கிடந்த அவருடைய உடலைத் தன் முழு பலத்தோடு வெளியே இழுக்க முயற்சி செய்தான். கார்பரலின் உடல் கனமாக இருந்தது; அவருடைய கனத்தோடு அவருடைய உடல் மீது கிடந்த மற்ற உடல்களின் கனமும் சேர்ந்து கொண்டது.

கார்பரல் உடலை அசைத்தார். வானத்தையும் எப்பிஃபானெவையும் பீரங்கி வண்டியையும் பார்த்தார்.

''நீ எங்கேயிருந்து வருகிறாய்?''

''நான் பீரங்கிப் படைப்பிரிவைச் சேர்ந்தவன். நாங்கள் இடது முனையிலிருந்து வலது முனைக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். அங்கே உடனடியாக வந்து உதவி செய்ய வேண்டுமென்று உத்தரவு. குண்டு வீச்சுச் சத்தம் உனக்குக் கேட்கிறதா? தளபதி மிலொராடவிச் முன்னேறித் தாக்கிக் கொண்டிருக்கிறார்'' என்றான் எப்பிஃபானெவ்.

''அவர் என்னுடைய தளபதி, என்னுடையவர்'' என்று கார்பரல் கத்தினார். ''என்னுடைய தலையைச் சற்று உயர்த்து. உன்னால் முடியுமா?''

இப்பொழுது அந்தக் கார்பரலினால் நன்றாகப் பார்க்க முடிந்தது. அவருக்கு எதிரில் அந்தக் குன்றின் மீது படைவீரர்கள் அணியணியாக முன்னேறிச் சென்று கொண்டிருந்தார்கள். அந்த அனுபவமிக்க யுத்தக் குதிரை தனக்குப் பழக்கமான ஒலிகளைக் கேட்டது. தன்னுடைய தோழர்கள் தன்னைக் கூப்பிடுவது போல கார்பரலுக்குத் தோன்றியது. அவர் முகத்தில் புன்சிரிப்பு ஏற்பட்டது.

''கொஞ்சம் தூக்குங்கள்!''

அவர் தரையிலிருந்து எழுந்து நிற்பதற்கு எப்பிஃபானெவ் உதவி செய்தான்.

''என் தொப்பியைத் தலையில் மாட்டுங்கள்.''

எப்பிஃபானெவ் கீழே கிடந்த தொப்பியை எடுத்து அவருடைய நரைத்த தலையில் மாட்டினான்.

வரிசையில் நிற்பதைப் போல அவர் உடலைச் சரி செய்து கொண்டார்; எதிரிகளைத் தாக்குவது போல ஆயுதத்தை முன்னால் நீட்டினார். இடது காலை ஒரு அடி முன்னால் தூக்கி வைத்தார்; பிறகு வலது காலைத் தூக்கி வைத்தார். சிறிது தூரம் நடந்தவுடன் ஓட ஆரம்பித்தார்.

இதைப் பார்த்து ஆச்சரியமடைந்த எப்பிஃபானெவ் அப்படியே நின்றான். அந்தக் கார்பரலின் காயங்களிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

''ஹுரே!'' வெற்றி முழக்கம் குன்றிலிருந்து காற்றிலே மிதந்து வந்தது.

''ஹுரே!'' என்று அந்தக் கார்பரலும் முழங்கினார்.

அவர் மிகவும் சிரமத்தோடு பத்து அல்லது பதினைந்து மீட்டர் தூரம் ஓடியிருப்பார்; மரம்வெட்டியின் கடைசி வெட்டில் நெடிதுயர்ந்த ஓக் மரம் பொத்தென்று விழு வதைப் போல திடீரென்று தரையில் விழுந்தார்.

எப்பிஃபானெவ் கார்பரலை நோக்கி ஓடினான். ஆனால் அவர் இப்பொழுது முனகவில்லை; மூச்சு நின்று விட்டது. அந்த வீரரின் வாழ்க்கை முடிந்து விட்டது.

எப்பிஃபானெவ் தன்னுடைய படையோடு சேர்ந்து கொண்டான். ஜாப்ரின் அவனைக் கடித்துவிடுவது போலப் பார்த்தார்.

''நீ எங்கே மறைந்து விட்டாய்? பேடிப் பயலே!'' என்றார்.

அந்தப் படைவீரன் தம்முடைய தாமதத்துக்குக் காரணத்தை விளக்கினான். அவன் இன்னும் சுய உணர்வுக்கு வர முடியவில்லை. அந்த வயதான கார்பரலைப் பற்றி வார்த்தைகள் தடுமாறியபடியே எடுத்துக் கூறினான்.

ஜாப்ரின் மௌனமாக இருந்தார். மற்ற படைவீரர்களும் பேசவில்லை.

''அவர் பெயர் என்ன? அவரிடம் கேட்டாயா? அவரை எப்படிக் கூப்பிடுவார்களாம்?''

எப்பிஃபானெவ் தன்னுடைய தோளைக் குலுக்கினான்.

''அவர் ஒரு கார்பரல்; வயதானவர்; பழுப்பு நிறத்தில் மீசை வைத்திருந்தார். அவர் உடலில் சிறிதும் பலமில்லை.''

படைவீரர்கள் தங்கள் தொப்பியை உயர்த்தி அவருக்கு அஞ்சலி செய்தார்கள்.

''அவரிடம் சிறிதும் பலமில்லையா? முட்டாள். அவர் ஹெர்குலிசினுடைய பலத்தைக் கொண்டிருந்திருக்க வேண்டும்.''

இளம் படைவீரனின் இதய ஊற்று

அவர்களிருவரும் போர் நடவடிக்கைகளின் போது நண்பர்களானுர்கள். அவன் இராணுவத்தில் புதிதாகச் சேர்ந்த இளைஞன்; கிளிம் டுகா என்பது அவனுடைய பெயர். அவர் பழைய யுத்தக் குதிரை; அவர் பெயர் மட்வேய் போரொடுலின். அவர்களிருவரும் ஒன்ருகவே நேமன் நதியிலிருந்து பின்வாங்கினுர்கள். விடெப்ஸ்கில் தோளோடு தோள் நின்று போர் புரிந்தார்கள். ஸ்மொலேன்ஸ்க் கோட்டைச் சுவருக்கு அருகில் நடைபெற்ற யுத்தத்தின் போது அவர்களிருவரும் ஒன்ருகவே உயிர் பிழைத்தார்கள். அவர்களிருவரும் மறுபடியும் ஒன்ருகவே பொரோடினேவின் வயல்களுக்கு வந்து சேர்ந்தார்கள்.

கிளிம் டுகாவுக்கு மட்வேய் போரொடுலின் இரண்டாவது தகப்பனுரைப் போல இருந்தார். வெடிமருந்தை ஈரமடையாமல் வைத்திருப்பது எப்படி, துப்பாக்கி ஈட்டியைத் தீட்டிவைத்திருப்பது எப்படி, களைப்படையாத விதத்தில் அணிவகுத்துப் போவது எப்படி என்பனவற்றை—இராணுவ அறிவின் அடிப்படைகளை—அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார். தங்குமிடங்களில் போரொடுலின் நெருப்புக்குப் பக்கத்தில் தன்னுடைய இடத்தை அந்த இளம் படைவீரனுக்கு விட்டுக் கொடுப்பார்.

டுகா மறுப்பான்.

''நான் என்ன குழந்தையா?''

''படு, படு. இந்தக் கஷ்டமெல்லாம் எனக்குப் பழக்கமாகி விட்டது. குளிர்ந்திருக்கும் இடங்களில் நான் நன்ருகத் தூங்குவேன்'' என்று அவர் பதிலளிப்பார்.

காஷாவை ஊற்றும் பொழுதும் அவர் அந்த இளைஞனைத் தான் நினைப்பார். தன்னுடைய தட்டிலிருந்து அதிகமான பகுதியை அந்த இளம் வீரனின் தட்டில் ஊற்றுவார்.

''மட்வேய் மாமா!'' என்று அவன் மறுப்புக் கூறுவான். ''நான் யாரென்று நினைக்கிறீர்கள்? பன்றிக்குத் தான் அதிகமான உணவு கொடுப்பார்கள். என்னையும் அப்படி நினைக்கிறீர்களா?''

''சாப்பிடு, சாப்பிடு. நீ வளர வேண்டியவன். நீ அதிகமாகச் சாப்பிட வேண்டும்.''

பொரோடினே யுத்தத்தின் போது இளம் வீரஞன கிளிமும் ஒல்லியான வயோதிகரான போரொடுலினும் ஒன்ருகவே சண்டை செய்தார்கள். அந்த வயோதிகரை மறைத்துக் கொண்டு அவன் சண்டையிட்ட போதிலும் அவர் திடீரென்று

அடிபட்டுக் காயமடைந்தார். சூரியனைக் கண்டதும் மறைகின்ற பனியைப் போல மட்வேய் போரொடுலின் தரையின் மீது சுருண்டு விழுந்தார்.

''மட்வேய் மாமா! மட்வேய் மாமா!'' என்று டுகா கத்தினன். அவன் முழங்காலில் குனிந்து அவர் உடலைப் பிடித்துக் குலுக்கினன். அவர் மார்பில் காதை வைத்து இருதயம் துடிக்கிறதா என்று பார்த்தான். ''மாட்வேய் மாமா! ஐயோ!''

போரொடுலின் கண்களை லேசாகத் திறந்து அந்த இளம் படைவீரனைப் பார்த்தார்.

''தண்ணீர்!'' என்று முனகிக் கொண்டே சொன்னர்; மறுபடியும் அவர் மயக்கமடைந்தார்.

ஒரு குவளை தண்ணீர் கிடைக்குமா என்று படைவீரர்கள் தேடினர்கள். ஆனல் பாத்திரங்களெல்லாம் காலியாக இருந்தன. அநேகமாகப் பத்து மணி நேரமாக யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கே குடிப்பதற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூட மிச்சமில்லை.

அங்கே தண்ணீர் கிடைக்கவில்லை. பக்கத்தில் நீரோடைகள் எதுவுமில்லை. போர்க் களத்துக்கு மிகவும் அருகிலிருந்த நீரோடை பிரெஞ்சுக்காரர்கள் பகுதியிலிருந்தது.

டுகா நிமிர்ந்தான். பைத்தியம் பிடித்தவனைப் போல தன்னைச் சுற்றிலும் பார்த்தான். திடீரென்று தன்னை மின்சாரம் தாக்கியதைப் போல நடந்து கொண்டான். காலியாகக் கிடந்த போத்தலைக் கையிலே எடுத்தான்; ஆகாயத்தை நோக்கிக் கையை நீட்டிக் கொண்டு பிரெஞ்சுக்காரர்களுக்கு அருகில் வேகமாக ஓடினன். அந்த நீரோடைக்கும் அவனுக்கும் நடுவே நீட்டிக் கொண்டிருந்த துப்பாக்கி ஈட்டிகளையும் ஆயுதங்களையும் நோக்கி ஓடினன்.

அவனுக்குப் பக்கத்திலிருந்த படைவீரர்கள் அதைப் பார்த்து திகைத்துப் போனர்கள்; மலைத்து நின்றர்கள்.

''அட கடவுளே! அவன் சாகப் போகிறன்!''

''அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?''

''அவன் பிரெஞ்சுக்காரர்களிடம் அகப்பட்டு விடுவான்.''

ருஷ்யப் படைவீரர்கள் அவன் ஓடுவதைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். வேகமாக ஓடிவருகின்ற நபரை பிரெஞ்சுக்காரர்களும் ஆர்வத்தோடு பார்த்தார்கள்.

''நண்பர்களே!'' என்று டுகா பலமாகக் கத்தினன். ''மட்வேய் மாமா செத்துக் கொண்டிருக்கிறர். அவருக்குத் தண்ணீர் வேண்டும். எல்லாப் போத்தல்களும் காலியாகி விட்டன'' என்று சொல்லியபடியே அவன் நுழைவுச் சீட்டைக் காட்டுவதைப் போல தன் கையிலிருந்த காலிப் போத்தலை ஆட்டினன்.

''தண்ணீர்! தண்ணீர்!'' என்ற சத்தம் வயல்களின் மீது மிதந்து வந்தது.

பிரெஞ்சுக்காரர்கள் எதிரிகளாக இருந்தாலும் மனிதப் பிறவிகள்தான். அவர்களுக்கு ருஷ்ய மொழியில் ஒரு வார்த்தை கூடத் தெரியாது; ஆனுல் அவர்கள் மனிதனின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டார்கள். யாராவது காரணமில்லாமல் எதிரியின் பிடிக்குள், எல்லைக்குள் ஓடி வருவார்களா?

பிரெஞ்சுக்காரர்கள் விலகிக் கொண்டு அவன் நீரோடைக்குப் போவதற்குப் பாதையை ஒதுக்கிக் கொடுத்தார்கள். போர்க்களத்தில் மௌனம் நிலவியது; இரண்டு தரப்புமே சுடவில்லை. அங்கே ஒரே ஒரு குரல் மட்டும்தான் கேட்டது.

''மட்வேய் மாமா செத்துக் கொண்டிருக்கிருர்!'' அந்தப் படைவீரனின் ஓலம் காற்றைக் கிழித்துக் கொண்டு வந்தது.

டுகா நீரோடையை நோக்கி ஓடிஞன். பனிக்கட்டியைப் போல ஜில்லென்றிருந்த தண்ணீரைப் போத்தலில் நிரப்பிக் கொண்டான். பிறகு திரும்பி பிரெஞ்சுப் படைவீரர்களுக்கு நடுவில் குறுகலான பாதையில் ஓடிஞன்.

அவன் வெகு சீக்கிரத்தில் மட்வேய் மாமாவிடம் போய்ச் சேர்ந்தான். மறுபடியும் முழங்கால்களை மடித்துக் குனிந்து அந்த வயோதிகரை மார்போடணைத்துத் தூக்கி தண்ணீர்ப் போத்தலை அவர் வாயில் சாய்த்து வைத்தான். அவருடைய நெற்றியிலும் கன்னப் பொட்டுகளிலும் தண்ணீரை ஒத்திஞன்.

போரொடுலின் மறுபடியும் மெதுவாக உணர்வுக்கு வந்தார். கண்களைத் திறந்து பார்த்தார். தன்னுடைய இளம் தோழனை அவர் அடையாளம் கண்டு கொண்டார்.

''அருமை நண்பனே! தண்ணீர் எங்கே கிடைத்தது?'' என்று கேட்டார்.

எங்கேயிருந்து கிடைத்தது?

அந்த இளம் படைவீரனின் இதயத்தில் பெருக்கெடுத்த ஊற்றிலிருந்து தான் அந்தத் தண்ணீர் வந்தது.

புகழ்ப் பறவை

இஸ்யுமவ் என்ற படைவீரன் புகழைப் பற்றியே கனவு காண்பான்; ஆனுல் பொரோடினே போர் நடைபெறும் வரையிலும் அவன் எத்தகைய சிறப்பையும் பெறவில்லை.

யுத்தம் ஆரம்பமான உடனேயே அவனுக்கும் இன்னெரு படைவீரனுக்கும் பின்வரும் உரையாடல் நடைபெற்றது.

''புகழ் என்று சொல்கிறீர்களே, அது என்ன?'' என்று இஸ்யுமவ் கேட்டான்.

''புகழ் என்பது ஒரு பறவை. அது எப்பொழுதும் போர்க் களத்தைச் சுற்றியே வட்டமிடும். இந்தப் பறவையைப் பிடிப்பவர்கள் புகழடைகிறார்கள்'' என்று அந்தப் படைவீரன் பதிலளித்தான்.

அந்தப் படைவீரன் வேடிக்கையாகச் சொல்லியிருக்க லாம்; அல்லது இப்படிப்பட்ட ஏதாவதொரு கருத்தை உண் மையாகவே நம்பியவனாகவும் இருக்கலாம். எப்படியிருந்த போதிலும் இஸ்யுமவ் அந்த நேரத்திலிருந்து சிறிதும் நிம் மதியில்லாமல் தவித்தான். இந்த அதிசயப் பறவையைத் தவிர வேறு எதைப் பற்றியும் அவனால் சிந்திக்க முடியவில்லை.

விடெப்ஸ்கில் யுத்தம் நடந்து கொண்டிருந்த பொழுது அவன் அந்தப் பறவையைப் பற்றியே நினைத்துக் கொண் டிருந்தான். மற்ற படைவீரர்கள் தாக்குதலில் தீவிரமாக ஈடுபட்டு எதிரியை ஓட ஓட விரட்டினார்கள். ஆனால் இஸ்யு மவ் அந்தப் பறவையைக் கவனியாதிருந்து விடக் கூடாது என்ற நோக்கத்தில் ஆகாயத்தையே பார்த்துக் கொண் டிருந்தான். அப்படியிருந்தும் அந்தப் பறவை அவனை ஏமாற்றி விட்டது. மற்ற வீரர்கள் புகழடைந்தனர்.

ஸ்மொலேன்ஸ்குக்கு அருகே நடைபெற்ற யுத்தத்தின் போதும் அதுவே நடந்தது. அவன் மறுபடியும் புகழடையத் தவறினான். இஸ்யுமவ் மிகவும் கவலைப்பட்டான். தனக்கு புகழ் கிடைக்காததைப் பற்றி அவன் நண்பர்களிடம் வருத்தப் பட்டான்.

படைவீரர்கள் சிரித்தார்கள்.

''நீ புகழைப் பிடிக்க முடியாது. அது தானே வீரர்களை வந்தடையும். அது உண்மையில் பறவையைப் போலவே இருக்கும். ஆனால் அதைப் பற்றியே நாம் நினைத்துக் கொண் டிருக்கக் கூடாது. சில சமயங்களில் நாமே அதை விரட்டி விடுவோம்'' என்றார்கள்.

பொரோடினோ யுத்தத்தின் போது அவன் உண்மை யாகவே புகழைப் பற்றி நினைக்கவில்லை. எப்படியோ அதை மறந்துவிட்டான். உடனே அதை மறந்து விடவில்லை என்பது உண்மையே. ஆனால் படிப்படியாக, அவனுக்கே புலப்படாத விதத்தில் அதை மறந்துவிட்டான்.

யுத்தம் முடிவடைகின்ற கட்டத்தில் இருந்தது. பிரெஞ்சுக் காரர்கள் எப்படியாவது வெற்றியடைந்து விட வேண்டு மென்று தீவிரமாகச் சண்டை செய்து கொண்டிருந்தார்கள். ருஷ்யக் காலாட்படைக்கு எதிராக உலான் படைப்பிரிவைப் போன்ற சிறந்த துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

குதிரைப் படைகள் மின்னல் வேகத்தில் ஓடிவந்தன. அவ்வளவு அதிகமான படைகள் பாய்ந்து வரும் பொழுது சாலையில் யார்தான் நிற்க முடியும்?

இதைப் பார்த்த போது இஸ்யுமவ் அப்படியே நின்று விட்டான். அவன் புகழை மறந்தான். இந்தக் குதிரைப் படையின் தாக்குதலை எப்படிச் சமாளிப்பது என்பதைப் பற்றி மட்டுமே நினைத்தான். குதிரைகள் மென்மேலும் பெரிதாகத் தோன்றின. ருஷ்ய வீரர்களின் தலைகளில் பட்டாக் கத்திகளும் வாள்களும் வெட்டும் பொழுது குதிரைகள் அவர்களை மிதித்து நசுக்குகின்ற காட்சியை அவன் கற்பனை செய்தான். அவன் முதல் வரிசையில் இருந்தபடியால் ஓரளவுக்கு பயத்தினால் அவன் உடல் நடுங்கியது.

''தயாராக இரு! குறி பார்! எதிரிகள் குறியெல்லைக்குள் வருகின்ற வரையிலும் காத்திரு!'' இந்த உத்தரவுகளுக்குப் பிறகு என்ன நடந்ததென்று சரியாக எடுத்துச் சொல்ல முடியவில்லை.

இஸ்யுமல் ஒரு விநாடி நேரம் அந்த இடத்திலேயே வேர் விட்டது போல நின்றான். பிறகு திடீரென்று துப்பாக்கி ஈட்டித் தாக்குதலைச் சமாளிப்பது போல தன்னுடைய ஆயுதத்தைத் தயாராக வைத்துக் கொண்டான். குதிரைப் படைத் தாக்குதலுக்கு எதிராக முன்னே பாய்ந்து சென்றான்.

மற்ற படைவீரர்களும் அவனைப் பின் தொடர்ந்து சென்றார்கள். அங்கே நடைபெற்றது என்னவென்றால் ருஷ்யக் காலாட்படைதான் பிரெஞ்சுக் குதிரைப் படையைத் தாக்கியது.

''ஹுரே!'' என்று முழங்கினான் இஸ்யுமவ்.

''ஹுரே!'' என்று எல்லாப் படைவீரர்களும் ஒரே குரலில் முழங்கினார்கள்.

பிரெஞ்சுக்காரர்களின் உலான் படைப்பிரிவுகள் இடி விழுந்ததைப் போல நின்றன. இப்படி ஒரு காட்சியை அவர்கள் இதுவரையிலும் பார்த்ததில்லை. அவர்கள் தங்களுடைய தாக்குதலை நிறுத்தவில்லை என்றாலும் கூட குதிரைப் படை கண நேரம் தயங்கியதும் தாமதித்ததும் உண்மையே. யுத்தம் நடைபெறும் பொழுது இந்தக் கண நேரம் மிகவும் முக்கியமானதாகும். அவர்களிடமிருந்த உற்சாகம் குறைந்துவிட்டது.

ருஷ்யப் படைவீரர்கள் பிரெஞ்சுக்காரர்களை நோக்கி ஓடி தங்களுடைய துப்பாக்கி ஈட்டிகளைக் கவர்க்கோலைப் போல உபயோகித்தார்கள். போர்க்களத்தில் ஒரு அதிசயம் நடைபெற்றது; காலாட்படை குதிரைப் படையை வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தது. ருஷ்யக் காலாட் படையினரின் உணர்ச்சி பொங்கியெழுந்தது.

''சகோதரர்களே! உங்களுடைய துப்பாக்கி ஈட்டிகள் உடைந்து விட்டால் துப்பாக்கிக் கட்டைகளால் பிரெஞ்சுக் காரர்களை அடியுங்கள்'' என்று இஸ்யுமவ் வெறி கொண்டு கத்தினன்.

பிரெஞ்சுக்காரர்கள் எல்லாவிதமான ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கைவிட்டார்கள். அவர்களுடைய பட்டாக் கத்திகள் மென்மேலும் அபூர்வமாகவே பிரகாசித்தன; அவர்களுடைய தாக்குதல்கள் மென்மேலும் பலவீனமாக இருந்தன. அவர்களுடைய ஆற்றல் குறைந்துவிடவே யுத்தம் செய்வதற்குரிய அனைத்து வேகத்தையும் இழந்தார்கள். அவர்களுடைய குதிரைகள் அங்கே அலைந்து கொண்டிருந்தன.

எல்லாம் முடிந்துவிட்டது போலத் தோன்றியது. ருஷ்யர்கள் வெற்றி பெற்று விட்டனர். ஆனல் அதோடு முடிந்து விடவில்லை.

''சகோதரர்களே! அவர்களை விரட்டிப் பிடிப்போம்'' என்று கத்தினன் இஸ்யுமவ்.

ருஷ்யப் படைவீரர்கள் பிரெஞ்சுக்காரர்களை வேகமாக விரட்டினர்கள். காலாட் படை குதிரைப் படையைப் போர்க் களத்திலிருந்து விரட்டியது. அது ஒரு அரிய காட்சியாகும்.

குதிரைகள் மனிதர்களைக் காட்டிலும் வேகமானவை என்பது தெரிந்த விஷயம். எனினும் சிலர் என்று சொல்ல முடியாத அளவுக்கு எண்ணிக்கையில் கூடுதலான பிரெஞ்சுக் காரர்கள் விரட்டிப் பிடிக்கப்பட்டுத் துப்பாக்கி ஈட்டிகளால் குத்திக் கொல்லப்பட்டனர்.

சில படைவீரர்கள் பின்தங்கிவிட்டாலும் கூட அவர்களும் ஈட்டிகளைப் போலத் தங்களுடைய ஆயுதங்களைக் குறி பார்த்து பிரெஞ்சுக்காரர்களை நோக்கி வீசினர்கள்.

பிரெஞ்சுக்காரர்கள் வேகமாக ஓடி மறைந்தார்கள். ருஷ்யப் படை வீரர்கள் தங்களுடைய ஆயுதங்களைத் தேடி எடுத்துக் கொண்டு தங்களுடைய படைகளை நோக்கித் திரும்ப ஆரம்பித்தார்கள். படைவீரர்கள் ஒருவரையொருவர் பார்த்தவுடன் உணர்ச்சிப் பெருக்கில் முழங்கினர்கள்.

''வீரர்கள் புகழ் ஓங்குக!''

''இஸ்யுமவ் புகழ் ஓங்குக!''

''வீரர்களை மதிப்போம்! புகழோடு போற்றுவோம்!''

அந்த சண்டைக்குப் பிறகு படைவீரர்கள் முற்றிலும் களைத்துப் போய் விட்டார்கள். அவர்கள் மூடுபனியில் நடந்து வருபவர்களைப் போல வந்தார்கள்; அவர்கள் எதையும் பார்க்கவில்லை; எதையும் கேட்கவில்லை. ஆனல் நாம் மிகத் தெளிவாகப் பார்க்க முடியும். புகழ்ப் பறவை அவர்களுக்கு மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

முடிவும் வேதனையும்

மாஸ்கோவின் எல்லையிலுள்ள ஃபிலி என்ற சின்னஞ்சிறு கிராமம். விவசாயியின் குடிசை. அங்கே ஓக் மரத்தில் செய்யப்பட்ட மேசை. ஒரு மூலையில் தெய்வவடிவமும் விளக்கும்.

இந்தக் குடிசையில் மேசையைச் சுற்றி ருஷ்ய தளபதிகள் அமர்ந்திருக்கிறார்கள். யுத்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யுத்தத்தில் ஈடுபடாமல் மாஸ்கோவைக் கைவிடலாமா அல்லது நகரத்தின் கோட்டைச் சுவர்களுக்கருகே எதிரியோடு சண்டை செய்வதா என்பதை முடிவு செய்வது அவசியமாகிவிட்டது.

மாஸ்கோவைக் கைவிடுவோம் என்று சுலபமாகச் சொல்ல முடியவில்லை. அந்த வார்த்தைகள் ஒவ்வொரு ருஷ்யனின் இதயத்திலும் கூர்மையான கட்டாரியைப் போல ஆழமாகப் பாய்ந்தது. தளபதிகள் சண்டை செய்வதற்கு ஆதரவு கொடுத்தார்கள்.

அந்த ஒரு மணி நேரம் குட்டுஸொவுக்கு மிகவும் நெருக்கடியாக இருந்தது. அவருக்குப் பதவி உயர்வு கிடைத்துச் சற்று நேரம்தான் ஆகியிருக்கும். பொரோடினோ யுத்தத்தில் அவருடைய தலைமைக்காக பீல்டு மார்ஷல் பட்டம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இராணுவ அந்தஸ்தில் அவர்தான் மிக உயர்ந்தவர்; தலைமைத் தளபதி, பீல்டு மார்ஷல் என்ற முறையில் அவருடைய முடிவுதான் இறுதியானது: ஆம் அல்லது இல்லை.

பொரோடினோ யுத்தத்தில் பிரெஞ்சுப் படைகள் தங்களுடைய அதிகமான எண்ணிக்கையினால் ருஷ்யப் படைகளைப் பணிய வைக்க முடியவில்லை. ஆனால் ருஷ்யர்கள் பிரெஞ்சுக்காரர்களை முறியடித்து விடவுமில்லை. அது வெற்றி, தோல்வி இல்லாமல் முடிந்த யுத்தம். ஆனால் அதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள் என்பது முக்கியமாகும். முதல் தடவையாக நெப்போலியன் தெட்டத் தெளிவான வெற்றியைப் பெற முடியவில்லை. உலகத்திலேயே முதல் தடவையாக ருஷ்யர்கள் நெப்போலியனிடம் தோல்வி அடையவில்லை. அப்படியானால், ருஷ்யர்களுக்கு அது வெற்றிதான். பிரெஞ்சுக்காரர்களுக்கு அப்படிச் சொல்ல முடியாது.

தளபதிகள் இன்னொரு யுத்தத்துக்காகத் துடித்துக் கொண்டிருந்தார்கள். படைவீரர்கள் சண்டையில் தங்கள் பலத்தைக் காட்ட வேண்டுமென்று விரும்பினார்கள். அப்படியானால் குட்டுஸொவ் முடிவு செய்ய என்ன இருக்கிறது?

குட்டுஸொவ் யுத்தத்திலும் அதன் போக்குகளிலும் அதிக மான அனுபவமும் அறிவும் உடையவர். விடெப்ஸ்கிலிருந் தும் ஸ்மொலேன்ஸ்கிலிருந்தும் நெப்போலியனின் உதவிக் காகத் துருப்புகள் வந்து கொண்டிருக்கின்றன என்பது அவ ருக்குத் தெரியும். பிரெஞ்சுக்காரர்கள் நிலை கீழேதான் இருக் கிறதென்றாலும் அவர்கள் இன்னும் தோல்வியடையவில்லை. முன்பிருந்ததைப் போலவே இப்பொழுதும் அவர்கள்தான் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள்.

ஒரு புதிய சண்டை—ஒரு தீர்மானமான சண்டை. ஏழு தடவை அளந்துபார்த்து விட்டு வெட்டுவது நல்லது என்பது அன்றைய மந்திரமாக இருந்தது. இராணுவம் மிகவும் விலை மதிப்பற்றதாகக் கருதப்படும் நிலையில் இருந்தது. எனவே துருப்புகளைப் பாதுகாப்பது மிகவும் முக்கியம். இராணுவம் கட்டுக்கோப்பாக இருந்தால், தக்க நேரத்தில் எதிரியை ஒழிக்க முடியும்.

குட்டுஸொவ் தன்னுடைய கருத்தைச் சொல்லட்டும் என்று எல்லோரும் காத்திருந்தார்கள். பீல்டு மார்ஷல் தன் னுடைய நாற்காலியிலிருந்து எழுந்தார்; சுற்றிலும் அமர்ந் திருந்த தளபதிகளைப் பார்த்தார்.

அவர் என்ன சொல்லப் போகிறார் என்று அவர்கள் காத் திருந்தார்கள்.

குட்டுஸொவ் தெய்வ வடிவத்தையும் விளக்கையும் பார்த் தார்; சன்னல் வழியாகத் தெரிந்த பழுப்பு நிற வானத்தைப் பார்த்தார். பிறகு குனிந்து தன் கால்களைப் பார்த்தார்.

தளபதிகள் காத்துக் கொண்டிருந்தார்கள். ருஷ்யாவே காத்துக் கொண்டிருந்தது.

''மாஸ்கோவை இழந்துவிட்டால் கூட நாம் ருஷ்யா வை இழந்துவிடப் போவதில்லை'' என்று குட்டுஸொவ் மெது வாகப் பேச ஆரம்பித்தார். ''ஆனால் நம்முடைய இரா ணுவம் அழிந்துவிட்டால் மாஸ்கோவும் ருஷ்யாவுமே அழிந்து விடும்.''

குட்டுஸொவ் சற்று நேரம் பேசாமலிருந்தார். சன்னலின் மீது ஒரு கொசு தட்டியது. பீல்டு மார்ஷலின் உடல் கனத் தைத் தாங்க முடியாமல் மரப்பலகைகள் வளைந்து கொடுத் தன. அங்கே நிலவிய மௌனத்துக்கு நடுவே ஒரு நீண்ட பெருமூச்சு எழுந்தது. குட்டுஸொவ் தன்னுடைய நரைத்த தலையை உயர்த்தினார். அவருக்கு முன்பாக உட்கார்ந்திருந்த ஆட்டமான் பிளாட்டவின் முகத்தைப் பார்த்தார். அந்த வயதான வீரரின் கன்னத்தில் கண்ணீர் வழிந்து கொண் டிருந்தது. அந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பதை குட்டுஸொவ் உணர்ந்தார். இனி வார்த்தைகளால்

பயனில்லை; உத்தரவுதான் முக்கியம். அவர் சுருக்கமாக, கண்டிப்பான முறையில் பேசினர்.

''ஜார் சக்கரவர்த்தியும் தாய்நாடும் எனக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தின் பேரில், மாஸ்கோவிலிருந்து வெளியேற வேண்டுமென்று நான் உத்தரவிடுகிறேன்...'' என்ருர். ''இது என்னுடைய உத்தரவு'' என்று மறுபடியும் வலியுறுத்திஞர்.

...அந்த உத்தரவின்படி துருப்புகள் மாஸ்கோவிலிருந்து வெளியேறின. யாவுஸா பாலம். படைவீரர்கள் மனவருத்தத்தோடு அதைக் கடந்து சென்றனர். குட்டுஸொவ் அங்கே குதிரை மீது வந்தார். அவர் துருப்புகளைப் பார்த்தார். படைவீரர்கள் அவரைப் பார்த்தார்கள். ஆனல் அவரைப் பார்க்காதது போல நடித்தார்கள். அவர்கள் அவரை உற்சாகமாக, ஆரவாரத்தோடு வரவேற்காதது அது தான் முதல் தடவை.

நெருப்புக் கடல்

ருஷ்ய இராணுவம் மாஸ்கோவுக்குத் தெற்கேயுள்ள டருடினே கிராமத்தில் தங்கியிருந்தது.

குட்டுஸொவ் சிறிதும் தாமதமில்லாமல் உடனடி வேலைகளை கவனிக்க ஆரம்பித்தார். துருப்புகள் கிழிந்து போன உடைகளை அணிந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குச் சீருடைகள் தயாரிக்க வேண்டும். இலையுதிர் காலம் தொடங்கிவிட்டது; இனி கம்பளி உடைகள் தேவைப்படும். உணவுப் பொருள்கள் தீர்ந்துவிட்டன; எனவே தானியத்தைச் சேகரித்துப் பாதுகாக்க வேண்டும்.

குட்டுஸொவ் மனதில் பல கவலைகள் இருந்தன.

நெப்போலியன் இப்பொழுது மாஸ்கோவிலிருந்தார். அவருக்கும் கவலைகள் கொஞ்சமல்ல. பிரெஞ்சுக்காரர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லை. மாஸ்கோவில் வசித்தவர்கள் அதை விட்டுப் போகும் பொழுது எல்லாப் பொருள்களையும் கொண்டு போய்விட்டார்கள். மாஸ்கோவில் ரொட்டியோ இறைச்சியோ கிடைக்கவில்லை; குதிரைகளுக்குத் தீனியும் கிடையாது. ஒயின் மட்டும் அங்கே நிறைய இருந்தது. படைவீரர்கள் வேண்டிய மட்டும் குடித்தார்கள், குடித்த பிறகு கொள்ளையடிக்கத் தொடங்கினர்கள். எங்கே கொள்ளை ஆரம்பமாகிவிட்டதோ அங்கே நெருப்பும் தொடரும். அது உலர்ந்துபோன இலையுதிர் காலம். நெருப்பு வேகமாகப் பரவியது. கிடாய்கோரோட் தீப்பிடித்து எரிந்தது. பிறகு

கோஸ்டினி ட்வோர். பிறகு குரெஸ்டினி வீதி. ஒஹோட்னி வீதியிலும் நெருப்பு. மாஸ்கோ நதிக்குப் பின்புறத்தில் பால்ச்சுக் எரிந்தது. இரவு பகலைப் போல நெருப்புப் பிடித்து எரிந்தது. நெப்போலியன் கிரெம்ளின் அரண்மனையில் உட்கார்ந்திருந்தார். அவர் எந்தத் திசையில் திரும்பினாலும் அங்கே நெருப்புப் பிடித்து எரிவது தெரிந்தது. அந்த நகரம் நெருப்புக் கடலாக மாறிவிட்டது.

''சக்கரவர்த்தி அவர்களே! ஆபத்து அதிகரிக்கிறது. நெருப்பு கிரெம்ளினைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது'' என்று நெப்போலியனின் மார்ஷல்களும் தளபதிகளும் கவலையோடு சொன்னார்கள்.

நெப்போலியன் கிரெம்ளினை விட்டுப் போக விரும்பவில்லை. அது அவமானம். அதனால் சங்கடம் ஏற்படும். மாஸ்கோ கிரெம்ளினைப் பிடித்த உடனேயே அதை விட்டுப் போவதென்றால்..! அவர் தாமதித்தார்.

''சக்கரவர்த்தி அவர்களே! உங்கள் உயிருக்கு ஆபத்து! ஆற்றுக்குப் பக்கத்தில் போய்விடுவோம்'' என்று தளபதிகள் அவரிடம் கெஞ்சினார்கள்.

நெப்போலியன் தாமதித்தார்.

''சக்கரவர்த்தி அவர்களே!..''

இப்பொழுது சக்கரவர்த்தி சிறிதும் மனமில்லாமல் தம்முடைய உள்கோட்டை அணிந்து கொண்டார்.

நெருப்பு இன்னும் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

அகலமான கிரெம்ளின் மாடிப்படிகளில் நெப்போலியன் வேகமாகக் கீழே இறங்கினார். ''அது நரகத்துக்குப் போகும் பாதை'' என்று கோலென்கூர் சொன்ன வார்த்தைகள் அவருடைய நினைவுக்கு வந்தன. அவர் கோபத்தில் தன்னுடைய உதடுகளைக் கடித்தார்.

நான்கு நாட்களாக அந்த நகரம் நெருப்பில் எரிந்தது.

ஐந்தாம் நாளன்று மாஸ்கோவில் சாம்பற்குவியல்தான் மிஞ்சியது. அதன் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் பெரிய நகரத்தை வைத்திருக்கவில்லை; அழிவுக் குவியலைத்தான் வைத்திருந்தார்கள்.

டரூடினோவில் ருஷ்யத் துருப்புகள் வசதியாக இருந்தனர். வண்டிகளில் உணவுப் பொருள்கள் வந்திறங்கின; படைவீரர்களுக்குப் புது உடைகள் கொடுக்கப்பட்டன; குதிரைப் படையில் ஏற்பட்ட சேதங்கள் ஈடு செய்யப்பட்டன. படைவீரர்கள் ஓய்வெடுத்துத் தங்களைத் தயார் செய்து கொண்டிருந்தனர்.

மாஸ்கோவில் பிரெஞ்சுப் படைகளின் நிலை இவ்வளவு வசதியாக இருக்கவில்லை.

நெப்போலியன் ஒரு விஷயத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்: ''நான் வெற்றியடைந்தேனு அல்லது...?''

''ருஷ்யர்கள் ஏன் நம்மிடம் சமாதானத்துக்காகக் கெஞ்சவில்லை?''

மூன்று வாரங்கள் கழிந்தன; அவை அலுப்புத் தருகின்ற நீண்ட வாரங்கள்; சோர்வைக் கொடுத்த நீண்ட வாரங்கள். இப்பொழுது நெப்போலியனுக்கு ஆத்திரமேற்பட்டது.

''சமாதானம், ருஷ்யாவோடு உடனடியாக சமாதானம் பேசுவோம்!''

ருஷ்ய தூதர்கள் வரட்டும் என்று சக்கரவர்த்தி காத்திருந்தார்; ஆனுல் யாரும் வரவில்லை. உடனே தன்னுடைய உதவியாளரை, லொரிஸ்டோன் பிரபுவைக் கூப்பிட்டார்.

''டரூடினேவுக்குப் போங்கள். அந்தக் கிழட்டு நரியிடம் போங்கள்... உடனே புறப்படுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

டரூடினே

பிரெஞ்சுக்காரர்கள் மோசமான நிலையில் இருக்கிருர்கள் என்பதை லொரிஸ்டோன் பிரபுவின் வருகைக்குப் பிறகு குட்டுஸொவ் நன்ருக உணர்ந்தார். டரூடினேவுக்கு அருகில் அவர்களோடு சண்டை செய்வதென்று முடிவு செய்தார்.

மறுபடியும் பீரங்கிகள் முழங்கின; துப்பாக்கி ஈட்டிகளும் வாள்களும் உரசின. இராணுவம் இராணுவத்தோடு மோதியது. இந்தத் தடவை பிரெஞ்சுக்காரர்கள் தோல்வியடைந்தனர். அவர்களிடமிருந்து 36 பீரங்கிகளை ருஷ்யர்கள் கைப்பற்றிஞர்கள்.

இந்தச் சண்டை முடிந்து நான்கு நாட்களுக்குப் பிறகு யாஸிகோவ் என்ற அதிகாரி கஸாக்குகள் படைப்பிரிவோடு வேவு பார்ப்பதற்காகப் போஞர். அந்தக் கஸாக்குகள் தைரியமாக மாஸ்கோவின் எல்லைக்கே போய்விட்டார்கள். எரிந்து சாம்பலாகிவிட்ட நகரத்தைப் பார்த்துக் கொண்டு அவர்கள் வெகு நேரம் நின்ருர்கள்.

''அதோ... ஒரு தியாகச் சின்னம்'' என்ருர்கள்.

அது கதகதப்பான மாலை நேரம். காற்றடிக்கவில்லை. எனினும் இலையுதிர் காலத்தின் லேசான மழைத் துளிகள் விழுந்தன. வெகு தூரத்தில் ஒரு நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

''சத்தத்தைக் கேட்டீர்களா? அவர்கள் நாய்களைக் கூட சாப்பிட்டு விட்டதாகச் சொன்ஞர்களே.''

''இது கெட்டிக்காரத்தனமாகத் தப்பியிருக்க வேண்டும்.''

''பார்! நமது அழகிய மாஸ்கோ அழிந்து விட்டது.''

''முட்டாள்! போனதை நினைத்து அழக் கூடாது. மாஸ்கோ அழிந்துவிடவில்லை; அதைத் திருப்பிக் கட்டிவிட முடியும்.''

கஸாக்குகள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று நகரத்திலிருந்து பயங்கரமான வெடிக்கும் சத்தம் கேட்டது. கற்கள், சுவர்கள் உருட்டிப் புரட்டி எறியப் படும் சத்தம் கேட்டது. டோன் கஸாக்குகள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்; தங்கள் அதிகாரியையும் ஓரக் கண்ணுல் பார்த்தார்கள். அது என்ன என்று கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆவல் அவர்களைப் பிடுங்கியது. அவர்கள் மறுபடியும் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள். உடனே நகரத்தை நோக்கி ஓடிஞர்கள்.

''நகரத்துக்குள் போய்த்தான் பார்ப்போமே. சில சமயங்களில் நாமாகவே ஆபத்துக்களை மேற்கொள்ள வேண்டியது தான். அதற்காகத்தானே வேவுப் படை இருக்கிறது.''

அவர்கள் வெறிச் சென்று கிடந்த தெருக்களின் வழியாகப் போனுர்கள். அங்கே பிரெஞ்சுக்காரர்களுமில்லை; ருஷ்யர்களுமில்லை; வாழ்க்கையின் ஒரு அறிகுறி கூட இல்லை. அழிந்து போன நகரம் அமைதியில் மூழ்கியிருந்தது. அவர்களுடைய குதிரைகளின் குளம்புகள் ஏற்படுத்திய சத்தம் அந்த மோன அமைதியைக் குலைத்தது. குதிரைவீரர்கள் நகரத்தின் மத்தியப் பகுதியை நோக்கிப் போனுர்கள். கிரெம்ளினுக்கு அருகிலுள்ள ஆர்டின்கா தெரு வரைக்கும் அவர்கள் வேகமாகப் போனுர்கள். ஒரு இடத்தில் கூட பிரெஞ்சுக் காரர்களைப் பார்க்க முடியவில்லை.

அவர்கள் எதிர்பாராத விதமாக ஒரு கிழவனைச் சந்தித்தார்கள்.

''என்ன கிழவா! அந்தக் காட்டுமிராண்டிகள் எங்கே போனுர்கள்?''

''அவர்கள் போய்விட்டார்கள். பிரெஞ்சுக்காரர்கள் மாஸ்கோவை விட்டுப் போய்விட்டார்கள். நண்பர்களே! அவர்கள் இன்று காலையில் போனுர்கள்.''

நெப்போலியன் மாஸ்கோவில் ஒரு மாதத்துக்கு மேல் தங்கியிருந்தார். சமாதானப் பிரேரணைகளோடு ருஷ்ய தூதர்கள் தம்மிடம் வருவார்கள் என்று எதிர் பார்த்துக் கொண்டு அங்கே காத்திருந்தார். ஆனுல் ஒரு தூதர் கூட வரவில்லை. அதற்குப் பிறகு லொரிஸ்டோன் பிரபுவை அவர்களிடம் அனுப்பிவைத்தார். ஆனுல் அவர் வெறுங்கையோடு

திரும்பினர். அதற்குப் பிறகு டரூடினோவுக்கு அருகே யுத்தம் நடைபெற்றது. சீக்கிரத்தில் குளிர்காலம் வந்துவிடும். அவருடைய படைகள் அப்பொழுதே உணவுப் பஞ்சத்தை சமாளிக்க வேண்டியிருந்தது. இனி பொறியில் அகப்பட்ட எலிகளைப் போல மாஸ்கோவில் தங்கியிருப்பதில் அர்த்தமில்லை. அவர்களிடம் பலம் இருக்கும் பொழுதே, இன்னும் காலம் இருக்கும் பொழுதே ஊருக்குத் திரும்புவதென்று முடிவு செய்தார்கள். அவர்கள் மாஸ்கோவிலிருந்து வெற்றி மாலைகளோடு திரும்பவில்லை; நிழல்களைப் போலத் திரும்பினார்கள்.

கஸாக்குகள் இந்தச் செய்தியைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. எனவே வேட்டுச் சத்தத்தையும் வீடுகள் சரிந்ததையும் மறந்துவிட்டு அவர்கள் தங்கள் குதிரைகளைத் திருப்பிக் கொண்டு புறப்பட்டார்கள். குட்டுஸொவிடம் செய்தியைத் தெரிவிப்பதற்காக வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போல வேகமாகச் சென்றார்கள்.

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் தான் வேட்டுச் சத்தம் கேட்ட காரணத்தை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். நெப்போலியன் பழி வாங்கும் மனம் உடையவர்; எனவே தன்னுடைய தோல்விக்குப் பழிவாங்க முடிவு செய்தார். மாஸ்கோவை விட்டுப் புறப்படும் பொழுது கிரெம்ளினை ஈவிரக்கமின்றித் தகர்க்குமாறு உத்தரவிட்டார். அதிர்ஷ்டவசமாகக் குறைவான சேதமே ஏற்பட்டது. திடீரென்று மழை விழுந்து வெடி மருந்துத் திரிகளின் நெருப்பை அணைத்துவிட்டது.

குட்டுஸொவ் யாஸிகோவின் அறிக்கையைக் கேட்டார்; பிறகு சிலுவைக் குறியிட்டார்.

''அது நடந்துவிட்டது. அது தவிர்க்க முடியாததாக இருந்தது. இன்று முதல் ருஷ்யா காப்பாற்றப்பட்டு விட்டது'' என்றார்.

அவர் திரும்பி கிராமத்தைப் பார்த்தார்.

''டரூடினோ, என்னுடைய நன்றியை ஏற்றுக் கொள்'' என்றார்.

டிஷ்காவும் மின்காவும்

மாஸ்கோவிலிருந்து புறப்பட்ட நெப்போலியன் கலூகாவை நோக்கி முன்னேறினர். அந்த நகரம் யுத்தத்தினல் பாதிக்கப்படவில்லை என்பதால் பிரெஞ்சுக்காரர்களுக்கு உணவுப் பொருள்களைத் தரக்கூடிய வாய்ப்பான நிலையில் இருந்தது. அங்கேயிருந்து அவர்கள் ஸ்மொலேன்ஸ்குக்குப்

போகலாம்; அங்கிருந்து வில்னுேவுக்கும் அப்படியே ருஷ்யா வுக்கு வெளியேயும் போய்விடலாம்.

குட்டுஸொவ் தன்னுடைய எதிரிகளின் திட்டங்களைப் புரிந்து கொண்டார். எனவே தன்னுடைய இராணுவத்தை பிரெஞ்சுக்காரர்கள் பாதையின் குறுக்கே நிறுத்தினுர். மால யாரொஸ்லாவெட்ஸ் என்ற நகரத்தில் ஒரு சண்டை புதி தாக ஏற்பட்டது. இங்கே மறுபடியும் பொரோடினுேவைப் போலவே காலை முதல் மாலை வரையிலும் சண்டை நடை பெற்றது. பிரெஞ்சுக்காரர்கள், ருஷ்யர்கள் ஆகிய இரு வருமே முரட்டுத்துணிச்சலினுல் ஏற்படுகின்ற பிடிவாதத் தோடு சண்டை போட்டார்கள்.

பிரெஞ்சுக்காரர்கள் ருஷ்யர்களை மாலயாரொஸ்லா வெட்ஸை விட்டு விரட்டினுர்கள். ருஷ்யர்கள் மறுபடியும் எதிர்த் தாக்குதலை ஆரம்பித்தார்கள்.

இப்படி எட்டுத் தடவைகள் நடந்தது. அந்த நகரம் திரும்பத் திரும்பக் கைமாறியது.

முதல் தடவை பிரெஞ்சுத் தாக்குதல் ஆரம்பமான பொழுது டிஷ்கா, மின்கா என்ற இரட்டையர்கள் ஒரு நில வறைக்குள் ஒளிந்து கொண்டார்கள். அந்த நிலவறையில் தெருவைப் பார்த்து ஒரு சிறிய சன்னல் அமைந்திருந்தது. அந்தச் சிறுவர்கள் சன்னலில் முகத்தைப் புதைத்தபடி பார்த் தனர். அவர்கள் மிகவும் பயந்து போயிருந்தனர். எனினும் தங்களைச் சுற்றி நடைபெறுகின்ற சம்பவங்களில் அவர்களுக்கு ஆர்வம் இருந்தது.

பிரெஞ்சுக்காரர்கள் வந்தவுடன் அநேகமாக அந்த நகரத்தில் வசித்தவர்கள் எல்லோருமே அதை விட்டுப் போய்விட்டார்கள். அவர்களோடு டிஷ்கா, மின்காவின் பெற் ருேர்களும் போய் விட்டார்கள். அவர்கள் தங்களுடைய குழந்தைகளையும் கூட்டிக் கொண்டுதான் போனுர்கள். ஆனுல் அந்தக் குழந்தைகள் கூட்டத்தில் பெற்ருேர்களை விட்டுப் பிரிந்து விட்டார்கள். பிறகு சண்டையைப் பார்க் கின்ற முடிவோடு நகரத்துக்குத் திரும்பினுர்கள். நிஜச் சண் டையைப் பார்க்கப் போகிருேம் என்ற ஆசை அவர்களிடம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஆகவே சண்டை ஆரம்பமான பொழுது அவர்கள் சன்ன லில் முகத்தைப் புதைத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். படைவீரர்களின் தாக்குதலும் தலைமை அதிகாரிகள் உத் தரவு கொடுப்பதும் ஆயுதங்களிலிருந்து வரும் புகை ஆகாயத்தில் மிதந்து செல்வதும், சுருக்கமாகச் சொன்னுல் எல்லாமே அவர்களுக்குப் புதுமையாக இருந்தது.

முதலில் பிரெஞ்சுக்காரர்கள் தாக்குதலை ஆரம்பித்த

பொழுது, சண்டை தூரத்தில் எங்கேயோ நடைபெற்றது. அந்தக் குழந்தைகள் பயங்கரமான சத்தத்தையே கேட்க முடிந்தது; வேறு ஒன்றும் தெரியவில்லை. பிறகு ருஷ்யர்கள் ஊருக்குள் நுழைந்த பொழுது அங்கே நடைபெற்ற சண்டைகளில் ஒன்று டிஷ்கா, மின்கா இருந்த தெருவிலேயே நடைபெற்றது. ஒரு இளம் அதிகாரி ருஷ்யப் படைப் பிரிவுக்குத் தலைமை தாங்கினர். அவர் அழகாக இருந்தார்; கச்சிதமாக உடை அணிந்திருந்தார்.

சிறுவர்கள் அந்த அதிகாரியைத் தங்களுடைய கண்களால் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

''அவர் ஒரு தளபதி'' என்று இரகசியமாகச் சொன்னன் மின்கா.

''அவர் மிகவும் இளமையானவராக இருக்கிறர். எனவே தளபதியாக இருக்காது. ஒரு வேளை அவர் ஒரு லெப்டினென்டாக இருக்கலாம்'' என்று அவனைத் திருத்தினன் டிஷ்கா.

அந்த சன்னலுக்குப் பக்கத்திலேயே உக்கிரமான சண்டை நடைபெற்றது. இரு தரப்பினரும் துப்பாக்கி ஈட்டிகளால் தாக்கினர்கள்.

''நண்பர்களே! துப்பாக்கி ஈட்டிகளை உபயோகிக்காமலிருந்தால் அவை துருப்பிடித்துவிடும். வெற்றி இல்லாத வீரனும் ஒரு வீரனு? முன்னேறுங்கள்!'' என்று அந்த அதிகாரி வீரமாக முழங்கி முதலில் சென்று தாக்கினர்.

ஒரு நிமிடத்துக்குள் அவர்களுடைய துப்பாக்கி ஈட்டிகள் இரத்தம் குடித்தன. அவர்களுடைய உடைகளில் இரத்தக் கறை படிந்தது. சண்டை நடைபெற்ற இடத்தில் இரத்தம் குட்டையாகத் தேங்கி நின்றது. பிரெஞ்சு இரத்தமும் ருஷ்ய இரத்தமும் தரையில் கூடிக் கலந்தன. அந்தச் சிறுவர்கள் சன்னலிலிருந்து விலகிப் போய்விட்டார்கள்.

''உனக்கு பயமாக இருக்கிறதா?'' என்று டிஷ்கா தன்னுடைய சகோதரனைக் கேட்டான்.

''இல்லை'' என்று மின்கா பதிலளித்தான்.

அவன் இல்லை என்று சொன்னனே தவிர அவனுடைய கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. அவனுடைய கைகள் மட்டுமல்ல. இரண்டு சிறுவர்களுடைய கைகளுமே கட்டுப்படுத்த முடியாதபடி நடுங்கிக் கொண்டிருந்தன.

அவர்கள் மறுபடியும் சன்னல் வழியாகப் பார்த்த பொழுது அந்த இடத்தில் நடைபெற்ற சண்டை நின்றிருந்தது. எங்கும் ஒரே அமைதி. இறந்து போன வீரர்களின் உடல்கள் அங்கே சிதறிக் கிடந்தன. அவர்களுக்கு மிகவும் அருகில் அந்த இளம் அதிகாரியின் உடல் கிடந்தது. அவர் உடலில் துப்பாக்கி ஈட்டியால் குத்தப்பட்ட காயம் இருப்

பதை அவர்கள் பார்த்தார்கள். அவரிடமிருந்து லேசான முணுமுணுப்பு வந்து கொண்டிருந்தது. மற்றபடி அவர் அமைதியாகக் கிடந்தார். அந்தச் சிறுவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''அவரை நிலவறைக்குள் கொண்டு வருவதுதான் நல்லது'' என்று டிஷ்கா ஜாக்கிரதையாகச் சொன்னான்.

''ஆம். அதுதான் சரி'' என்று மின்கா ஒத்துக் கொண்டான்.

ஆனால் தெருவுக்குள் போவதற்கு அவர்களுக்குப் பயமாக இருந்தது. அவர்கள் சற்று நேரம் தாமதித்தார்கள். பிறகுதான் அவர்களுக்குத் துணிவு ஏற்பட்டது. அவர்கள் அடிமேலடி வைத்து வெளியே சென்றார்கள். அந்த அதிகாரியின் கைகளைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு வந்தார்கள்.

''அதிக கனமாக இருக்கிறது'' என்று மின்கா இரகசியமாகச் சொன்னான்.

''ஆமாம். அதிகாரிகள் சாப்பிடும் உணவுதான் அதற்குக் காரணம்'' என்று டிஷ்கா ஒத்துக் கொண்டான்.

அவர்கள் அந்த அதிகாரியை நிலவறைக்குள் இழுத்துக் கொண்டு வந்தார்கள். நல்ல வேளை. உரிய நேரத்தில் அதைச் செய்தார்கள். தெருவில் இன்னொரு சண்டை ஆரம்பமாகி விட்டது. இந்தத் தடவை சிறுவர்கள் சன்னலுக்குப் பக்கத்தில் போகவில்லை. அவர்கள் அந்த அதிகாரிக்குப் பக்கத்திலேயே இருந்தார்கள். அவர் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார்கள். டிஷ்கா தன்னுடைய உள் சட்டையில் சுத்தமான பகுதிகளைக் கிழித்து, அதிகாரியின் உடலிலிருந்த காயத்தைச் சுற்றி அந்தத் துணியைக் கட்டினான்.

அவர் அதிகமான காய்ச்சல் ஏற்பட்டிருப்பது போலத் துடித்தார். அவர் ஏதாவது பலமாகச் சத்தம் போடுவார். பிறகு அமைதியாகிவிடுவார். அதன் பிறகு மறுபடியும் சத்தம் போடுவார்.

அந்த மாலைப் பொழுதிலும் இரவிலும் அவர் நிலை இப்படியே தொடர்ந்தது. அவருக்கு உதவி செய்து கவனித்துக் கொண்டதில் சிறுவர்கள் களைப்படைந்து விட்டனர். அந்த வீட்டுக்குப் பக்கத்திலிருந்த பல வீடுகள் நெருப்புப் பிடித்து எரிந்தன. புகை அந்த நிலவறைக்குள் வந்தது. அவர்கள் ஒளிந்திருந்த வீடு கற்களால் கட்டப்பட்டிருந்தது அவர்களுடைய அதிர்ஷ்டமே. அதனால் அவர்கள் நெருப்பில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பினார்கள்.

ஆனால் எல்லாவற்றையும் காட்டிலும் மிகவும் பயங்கரமான சம்பவம் அப்பொழுது தான் ஆரம்பமாகிக் கொண்

டிருந்தது. மாலயாரொஸ்லாவெட்ஸ் பிரெஞ்சுக்காரர்கள் வசம் நீடித்தது. சில பிரெஞ்சுப் படைவீரர்கள் அந்த வீட்டில் தங்கினர். அவர்கள் நிலவறைக்குள் வந்துவிடுவார்களோ என்று சிறுவர்கள் பயந்து கொண்டிருந்தார்கள்.

''அதிகாரி அவர்களே! அமைதியாக இருங்கள். அமைதி!'' என்று சிறுவர்கள் அவரிடம் கெஞ்சினார்கள்.

அவர்களுடைய பயத்தைப் புரிந்து கொண்டவர் போல அதிகாரி சற்று நேரம் அமைதியாக இருப்பார். ஆனால் மறுபடியும் அவர் உடம்பு தூக்கித் தூக்கிப் போடும்; ஜன்னியில் பிதற்ற ஆரம்பிப்பார்.

அதிர்ஷ்டவசமாக எல்லாமே ஆபத்தில்லாமல் முடிந்தது.

இரவில் அந்தச் சிறுவர்கள் நன்றாகத் தூங்கினார்கள். அவர்கள் கண் விழித்துப் பார்த்த பொழுது சூரியன் உதித்து வெகு நேரமாகியிருந்தது. எங்கும் ஒரே அமைதி. அவர்கள் சன்னலை நோக்கி ஓடினார்கள். ஆனால் தெருக்களில் ஒருவருமில்லை. ஒரு பிரெஞ்சுக்காரர் கூடத் தென்படவில்லை.

நடந்தது இதுதான். மாலொயாரொஸ்லாவெட்ஸ் பிரெஞ்சுக்காரர்களிடம் இருந்த போதிலும், தான் கலூகாவுக்குப் போக முடியாதென்பதை நெப்போலியன் உணர்ந்தார். சக்கரவர்த்தி தன்னுடைய வாழ்க்கையில் முதன் முறையாக இன்னொரு சண்டைக்குத் துணியவில்லை. எனவே தன்னுடைய படைகளைப் பின்வாங்குமாறு உத்தரவிட்டார்.

சிறுவர்கள் நிலவறையை விட்டு வெளியே வந்து தெருவுக்குள் நுழைந்தார்கள். ருஷ்யர்கள் நகரத்துக்குள் வந்து கொண்டிருந்ததை அவர்கள் பார்த்தார்கள். அந்த நகரவாசிகளும் படைவீரர்களுக்குப் பக்கத்தில் நெருக்கியடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். டிஷ்கா, மின்கா ஆகியோரின் பெற்றோர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். அவர்களுடைய தகப்பனார் சிறுவர்களைப் பார்த்தார்.

''கொள்ளைக்காரப் பசங்களா! சடை நாய்களா!'' என்று கத்தினார்.

டிஷ்காவும் மின்காவும் அப்படியே அந்த இடத்தில் வேரூன்றிவிட்டது போல நின்றனர். அவர் தன் இடைவாரைக் கழற்றினார். அந்தத் தெருவின் நடுவிலேயே தன்னுடைய குழந்தைகளைச் செம்மையாக அடிக்க ஆரம்பித்தார்.

அந்தச் சிறுவர்களிருவரும் அதைத் தாங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அவர்கள் தகப்பனார் மிகவும் கண்டிப்பானவர். அவர் என்ன செய்வார் என்பதும் அவர்களுக்குத் தெரிந்ததே.

கடைசியில் அவருக்கே அலுத்துவிட்டது. மூச்சு வாங்குவதற்காக நிறுத்தினார்.

''அப்பா!'' என்ருன் டிஷ்கா. ''காயமடைந்த நபர் ஒருவர் அங்கே இருக்கிருர்'' என்று பூமியில் நீட்டிக்கொண்டிருந்த நிலவறையின் சன்னலைச் சுட்டிக் காட்டிச் சொன்ஞன்.

''அவர் ஒரு அதிகாரி'' என்ருன் மின்கா.

தகப்பஞர் நிலவறைக்குள் நுழைந்து பார்த்தார். அவர்கள் சொன்னது உண்மையென்று கண்டார். அங்கே ஒரு இளம் கர்னலின் உருவம் தெரிந்தது.

''அட கடவுளே!'' என்ருர்.

அவர் உடனே தகவலைத் தெரிவிப்பதற்காக அதிகாரிகளிடம் போஞர். பணியாட்கள் வந்தார்கள். அந்த கர்னலைத் தூக்கிக் கொண்டு போஞர்கள்.

தகப்பஞர் மறுபடியும் இடைவாரைக் கழற்றிஞர்; அந்தச் சிறுவர்களை அடிக்கத் தொடங்கிஞர். ஆஞல் இப்பொழுது அவருடைய அடிகள் பலமாக விழவில்லை. அவர் திட்டியது கூட முணுமுணுப்பாகத்தான் இருந்தது.

''உங்க அம்மாவைப் பத்தியாவது நினைச்சீங்களா? என்ன தைரியம்!''

சில தினங்களுக்குப் பிறகு நகர அதிகாரிகள் அந்தத் தகப்பஞரைக் கூப்பிட்டனுப்பிஞர்கள். அங்கே அவரிடம் ஒரு பதக்கத்தைக் கொடுத்தார்கள். அந்தப் பதக்கத்தோடு கொடுக்கப்பட்டிருந்த சான்றிதழில் மாலயாரொஸ்லாவெட்ஸ் நகரத்தைச் சேர்ந்த இவான் மிஹாய்லவிச் குடினவுக்கு (அதாவது டிஷ்கா, மின்காவின் தகப்பஞருக்கு) ஒரு ருஷ்ய அதிகாரியின் உயிரைக் காப்பாற்றியதற்காக அந்தப் பதக்கம் வழங்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அவர் திகைப்படைந்து நின்ருர். அந்த அதிகாரியைக் காப்பாற்றியது தானல்ல; டிஷ்காவும் மின்காவுமே என்று சொல்ல முயன்ருர். ஆஞல் அங்கேயிருந்த அதிகாரிகள் அவருடைய விளக்கத்தைக் கேட்கத் தயாராயில்லை.

''அவர் உயிரைக் காப்பாற்றியது யார் என்பதை நீயே முடிவு செய்து கொள். பதக்கத்தைப் பெற்றுக் கொண்டாயல்லவா? சரி. போய் வா. எங்களுக்கு நிறைய வேலை இருக்கிறது'' என்ருர்கள்.

தகப்பஞர் வீட்டுக்குத் திரும்பிஞர். அந்தப் பதக்கத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. இரண்டு பையன்களுக்கும் அதை எப்படிப் பிரித்துக் கொடுப்பது?

''இதோ! பதக்கம். இரண்டு பேருக்கு ஒரு பதக்கம்'' என்று பையன்களிடம் பதக்கத்தைக் கொடுத்தார்.

டிஷ்காவும் மின்காவும் பதக்கத்தைப் பார்த்தார்கள். அவர்களுடைய கண்கள் ஒளிர்ந்தன; கைகள் தங்களையறியா

மலே பதக்கத்தை நோக்கி நீண்டன. மார்பிலே அதை அணிந்து கொண்டால் எவ்வளவு கம்பீரமாக இருக்கும். ஆனுல் அவர்களுடைய தகப்பனர் கண்டிப்பானவர். அவர் அந்தப் பதக்கத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டினர்.

''இது ஒன்றும் பொம்மையல்ல, தெரியுமா?'' என்று அவர் கடுகடுப்பாகச் சொன்னர்.

அந்தப் பதக்கம் பெட்டியிலேயே இருந்தது.

எனினும் வருடத்துக்கு இரண்டு முறை, கிறிஸ்துமஸ், ஈஸ்டரின் போது குடினவ் குடும்பம் முழுவதுமே மாதாகோவிலுக்குப் புறப்படும் பொழுது, தகப்பனர் அந்தப் பதக்கத்தை எடுத்துப் பையன்களிடம் கொடுப்பார்.

மாதாகோவிலுக்குப் போகும் பொழுது டிஷ்கா அந்தப் பதக்கத்தை மார்பில் அணிந்து கொண்டு போவான். மாதாகோவிலிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் பொழுது பதக்கம் மின்காவின் மார்பில் பிரகாசிக்கும்.

முக்கியமான திருப்பம்

பொரோடினே யுத்தம் நடைபெறுவதற்கு முன்பு ருஷ்யத் துருப்புகள் பின்வாங்கிக் கொண்டிருந்த காலத்தில் ஒரு நாள் ஆக்டிர்ஸ்கி ஹுஸ்ஸார்கள் படைப்பிரிவைச் சேர்ந்த லெப்டினென்ட்-கர்னல்—டெனிஸ் டவீடொவ் என்ற பெயர் கொண்டவர்—இளவரசர் பீட்டர் பக்ராத்தியோனைச் சந்தித்தார்.

அவர் ஒரு சமயத்தில் பக்ராத்தியோனுடைய உதவியாளராகப் பணி புரிந்தார். எனவே அவருக்கு டவீடொவை வெகு காலமாகத் தெரியும். எனவே அவருக்கு உடனடியாகப் பேட்டி கொடுத்ததோடு அன்போடு வரவேற்ருர்.

''உன் கவலே என்னவென்று சொல். தயங்க வேண்டாம். உன் மேலதிகாரிகளிடம் ஏதாவது மனத்தாங்கலா?''

''இல்லே'' என்று பதிலளித்தார் டவீடொவ்.

''உனக்குக் கிடைக்க வேண்டிய பதக்கத்தைக் கொடுக்கத் தவறிவிட்டார்களா? விடுமுறை வேண்டுமா? சொல்.''

''இல்லே'' என்ருர் டவீடொவ்.

பக்ராத்தியோன் ஓரளவுக்குத் திகைப்படைந்தார் என்று தான் சொல்ல வேண்டும். அந்த அதிகாரி வந்த காரணத்தைச் சொல்லட்டும் என்று காத்திருந்தார்.

''என் மனதில் இருப்பது இதுதான்...'' என்று ஆரம்பித்தார் டவீடொவ்.

மலே பதக்கத்தை நோக்கி நீண்டன. மார்பிலே அதை அணிந்து கொண்டால் எவ்வளவு கம்பீரமாக இருக்கும். ஆனால் அவர்களுடைய தகப்பனார் கண்டிப்பானவர். அவர் அந்தப் பதக்கத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டினார்.

''இது ஒன்றும் பொம்மையல்ல, தெரியுமா?'' என்று அவர் கடுகடுப்பாகச் சொன்னார்.

அந்தப் பதக்கம் பெட்டியிலேயே இருந்தது.

எனினும் வருடத்துக்கு இரண்டு முறை, கிறிஸ்துமஸ், ஈஸ்டரின் போது குடினவ் குடும்பம் முழுவதுமே மாதாகோவிலுக்குப் புறப்படும் பொழுது, தகப்பனார் அந்தப் பதக்கத்தை எடுத்துப் பையன்களிடம் கொடுப்பார்.

மாதாகோவிலுக்குப் போகும் பொழுது டிஷ்கா அந்தப் பதக்கத்தை மார்பில் அணிந்து கொண்டு போவான். மாதாகோவிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் பொழுது பதக்கம் மின்காவின் மார்பில் பிரகாசிக்கும்.

முக்கியமான திருப்பம்

பொரோடினோ யுத்தம் நடைபெறுவதற்கு முன்பு ருஷ்யத் துருப்புகள் பின்வாங்கிக் கொண்டிருந்த காலத்தில் ஒரு நாள் ஆக்டிர்ஸ்கி ஹுஸ்ஸார்கள் படைப்பிரிவைச் சேர்ந்த லெப்டினென்ட்-கர்னல்—டெனிஸ் டவீடொவ் என்ற பெயர் கொண்டவர்—இளவரசர் பீட்டர் பக்ராத்தியோனைச் சந்தித்தார்.

அவர் ஒரு சமயத்தில் பக்ராத்தியோனுடைய உதவியாளராகப் பணி புரிந்தார். எனவே அவருக்கு டவீடொவை வெகு காலமாகத் தெரியும். எனவே அவருக்கு உடனடியாகப் பேட்டி கொடுத்ததோடு அன்போடு வரவேற்றார்.

''உன் கவலை என்னவென்று சொல். தயங்க வேண்டாம். உன் மேலதிகாரிகளிடம் ஏதாவது மனத்தாங்கலா?''

''இல்லை'' என்று பதிலளித்தார் டவீடொவ்.

''உனக்குக் கிடைக்க வேண்டிய பதக்கத்தைக் கொடுக்கத் தவறிவிட்டார்களா? விடுமுறை வேண்டுமா? சொல்.''

''இல்லை'' என்றார் டவீடொவ்.

பக்ராத்தியோன் ஓரளவுக்குத் திகைப்படைந்தார் என்று தான் சொல்ல வேண்டும். அந்த அதிகாரி வந்த காரணத்தைச் சொல்லட்டும் என்று காத்திருந்தார்.

''என் மனதில் இருப்பது இதுதான்...'' என்று ஆரம்பித்தார் டவீடொவ்.

அவர் பிரெஞ்சு இராணுவத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அவர்கள் நூற்றுக்கணக்கான வெர்ஸ்டா தூரத்தில் சிதறிக்கிடப்பது உண்மைதானே? அவர்களுக்கு உணவுப் பொருள்களும் மற்றவைகளும் கொண்டு வரும் பாதைகள் ருஷ்யா நெடுகிலும் நேமன் நதிவரை நீண்டிருக்கவில்லையா? உணவு வண்டிகளும், வெடி மருந்தும், பீரங்கிக் குண்டுகளும் உதவிப் படைகளும் அங்கேயிருந்துதானே வர வேண்டும்?

''ஆமாம். உண்மைதான்'' என்றார் பக்ராத்தியோன்.

''இந்த நீளமான பாதை நெடுகிலும் அவர்களுடைய தூதர்கள் சதா வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.''

''உண்மைதான். உண்மைதான்'' என்றார் இளவரசர் பீட்டர். ''இது எனக்குப் புதுத் தகவல் அல்ல.''

''நான் புதிதாக என்ன சொல்லப் போகிறேனென்றால் அவர்களுடைய துருப்புகளுக்குப் பின்னால் நம்முடைய குதிரைப் படைப் பிரிவுகளை நிறுத்த வேண்டும். அந்தப் பாதை வழியாகப் போகும் சிறிய குழுக்களுக்கும் படைவீரர்களுக்கும் அவர்கள் தொல்லை கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் அது எதிரிக்குப் பெருஞ் சிரமமாக இருக்கும். சில கஸாக்குகளையும் ஹுஸ்ஸார்களையும் எனக்குக் கொடுங்கள். அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை நான் காட்டுகிறேன்.''

டவீடொவ் பேசிக்கொண்டிருக்கும் பொழுது பக்ராத்தியோனின் முகம் மேலும் மேலும் பிரகாசமடைந்தது. அவர் முகத்தில் புன்சிரிப்பு மலர்ந்தது. ''எவ்வளவு அருமையான இளைஞன்!'' என்று அவனைக் கட்டியணைத்துப் பாராட்டினார். ''சிறிது பொறுத்திரு'' என்றார்.

இதற்குப் பிறகு பக்ராத்தியோன் குட்டுஸொவை சந்தித்தார். அவர் டவீடொவின் வாதங்களைத் திரும்பச் சொன்னார். பல நூறு வெர்ஸ்டா தூர முழுவதிலும் பிரெஞ்சு இராணுவம் சிதறிக் கிடக்கவில்லையா?... பிறகு அவர் டெனிஸ் டவீடொவின் வேண்டுகோளை சொல்லுக்குச் சொல் அப்படியே எடுத்துக் கூறினார். பக்ராத்தியோன் சொன்னது முழுவதையும் குட்டுஸொவ் கடைசி வரை கேட்டார்.

''எவ்வளவு விசித்திரமான கற்பனை...''

குட்டுஸொவ் அப்பொழுதுதான் ருஷ்ய இராணுவத்துக்குத் தலைமையேற்றிருந்தார். ஒவ்வொரு படைப் பிரிவையும் விழிப்போடு காத்து வந்தார்.

''மேன்மை தங்கிய தளபதி அவர்களே!'' என்று பக்ராத்தியோன் தான் அவமதிக்கப்பட்டது போன்ற உணர்ச்சியோடு கோபமாகப் பேசினார் (சில சமயங்களில் அவருக்கு

அடக்க முடியாத கோபம் ஏற்படுவதுண்டு). ''விசித்திர மான கற்பனை என்று சொல்கிறீர்கள்? நமக்கு எது நன்மை யென்றே நமக்குப் பல சமயங்களில் தெரியாமற் போய்விடு கிறது. அதைக் காட்டிலுமா இது விசித்திரக் கற்பனை!'' என்றார். பிறகு நிதானமாகப் பேசினார். ''இது நல்ல யோசனை என்று எனக்குத் தோன்றுகிறது. இதன் மூலம் பெரிய விளைவு கள் ஏற்படலாம்.''

''நண்பரே! உங்கள் விருப்பப்படியே இருக்கட்டும். நான் முன்பே அப்படி முடிவு செய்துவிட்டேன். இந்த லெப்டி னென்ட்-கர்னல் நம்பிக்கையான நபர்தானா? அவர் ஹுஸ் ஸார் பிரிவைச் சேர்ந்தவர் என்று சொன்னீர்களல்லவா? தங்களுடைய மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவதில் அவர்கள் சாமர்த்தியசாலிகள். நீங்கள் கவனமாக யோசித் தீர்களா?''

''தளபதி அவர்களே! அவர் மிகவும் நம்பிக்கையானவர். என்னிடம் ஐந்து வருடங்கள் உதவியாளராக இருந்திருக் கிறார்.''

குட்டுஸொவ் சிறிது நேரம் சிந்தனையிலாழ்ந்தார்.

''சரி. நீங்கள் நினைப்பதைப் போல இந்த நடவடிக்கை யின் மூலம் முக்கியமான விளைவுகள் ஏற்படலாம்'' என்றார் குட்டுஸொவ்.

டவீடொவுக்கு 50 ஹுஸ்ஸார்களையும் 80 கஸாக்குகளை யும் ஒதுக்கித்தரும்படி குட்டுஸொவ் உத்தரவிட்டார். முதல் பார்ட்டிஸான் பிரிவு இப்படித் தோன்றியது. ருஷ்ய இரா ணுவம் இன்னும் பின்வாங்கிச் சென்றது. டெனிஸ் டவீடொவ் தன்னுடைய அணியினரோடு காடுகளுக்குள் மறைந்தார்.

பிரெஞ்சுக்காரர்கள் மீது பார்ட்டிஸான்கள் ஏற்படுத் திய நாசம் குறிப்பிடத்தக்கதாகும். டவீடொவ் தெரிவித்த யோசனை எவ்வளவு சிறந்தது என்பதை பீல்டு மார்ஷலே சீக்கிரத்தில் தெரிந்து கொண்டு பாராட்டினார். எதிரியின் படைகளின் பின்புறத்தில் சென்று அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதற்காக அவரே படைப்பிரிவுகளை அனுப்ப ஆரம் பித்தார்.

இந்த நடவடிக்கை படிப்படியாக விரிவடைந்த பொழுது மேலும் மேலும் அதிகமான எண்ணிக்கையில் விவசாயிகள் படைவீரர்களோடு சேர்ந்தார்கள். அவர்கள் தங்களுடைய சொந்தப் படைப்பிரிவுகளையும் ஏற்படுத்திக் கொண்டார் கள். நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் விவசாயிகளின் படைப் பிரிவுகள் எதிரிகளைத் தாக்க ஆரம்பித்தன.

வெள்ளம் பெருகிவரும் பொழுது நதி கரைகளை மீறிப்

பார்ட்டிஸான் — காடுகளுக்குள் மறைந்திருந்து பிரெஞ்சுத் துருப்புகளைத் தாக்கி சேதப் படுத்திய கொரில்லாப் படை

பாய்ந்து அருகிலுள்ள பகுதிகளை வெள்ளக்காடாக்குவதைப் போல இங்கும் விவசாயிகளின் கோபவெள்ளம் மக்கள் யுத்தத்துக்கு நடுவில் பொங்கி எழுந்தது. இதற்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு, ருஷ்ய இராணுவம் தாக்குதலை ஆரம்பித்த சிறிது காலத்துக்குப் பிறகு, குட்டுஸொவ் டவீடொவைத் தன்னுடைய தலைமையகத்துக்குக் கூப்பிட்டனுப்பினார். அவர் அந்த ஹுஸ்ஸாரை வெகு நேரம் உற்றுப் பார்த்தார். கடைசியாக அவர் பேசினார்.

''இளவரசர் பீட்டர் உயிரோடிருந்தபொழுது உன்னுடைய தந்திரமான திட்டம் பைத்தியக்காரத் தனமானது, கற்பனையானது என்று அவரிடமே சொன்னேன். இந்தக் கிழவனை நீ மன்னிக்க வேண்டும். நான் சொன்ன வார்த்தைகளை வாபஸ் பெற்றுக் கொள்ளப் போகிறேன் என்று மட்டும் நினைக்காதே. நீ இதுவரை சாதித்திருப்பது உண்மையிலேயே மிகவும் அதிசயமானது என்றுதான் சொல்ல வேண்டும்.''

இப்படிச் சொன்ன பிறகு அவர் டெனிஸ் டவீடொவுக்குப் பக்கத்தில் சென்றார். பக்ராத்தியோன் செய்ததைப் போலவே டவீடொவை அன்போடு கட்டியணைத்தார்.

குற்றமும் தண்டனையும்

பார்ட்டிஸான் வீரனை டெனிஸ் டவீடொவின் மகத்தான சாதனைகளைப் பற்றிய வதந்திகள் ருஷ்ய இராணுவத்தினர் மத்தியில் அதிகமாகப் பரவின. இந்த வதந்திகள் அடுத்தடுத்து வேகமாக வந்து கொண்டிருந்தன. சேர்ந்தாற் போலச் சென்று கொண்டிருந்த வெடிமருந்து வண்டிகளைக் கைப்பற்றியதாக முதல் செய்தி வந்தது. அடுத்தபடியாக ஒரு பீரங்கிப் படைப் பிரிவு பிரயாணம் செய்து கொண்டிருந்தபொழுது அது முழுவதையுமே சிதறடித்து விட்ட செய்தி; பிறகு மிக முக்கியமான கடிதத்தைக் கொண்டு சென்ற எதிரி தூதனை வழிமறித்துக் கடிதத்தைக் கைப்பற்றியது. கடைசியாக டவீடொவ் வாட் சண்டையில்—அதிலும் அதிகமான சிரமம் இல்லாமலே—நான்கு பிரெஞ்சுக்காரர்களைக் கொன்று பிரபலமடைந்த செய்தி.

வஸீல்ச்சிக்கொவ் என்ற இளம் கார்னெட் பார்ட்டிஸான்களோடு சேர வேண்டுமென்று விரும்பி நாள்தோறும் அதைப் பற்றியே கனவு கண்டான். அவன் தன்னுடைய படைப்பிரிவின் அதிகாரியிடம் போனான்.

''டவீடொவின் வீரர்களோடு சேர விரும்புகிறேன். எனக்கு அனுமதி கொடுங்கள்.''

பிறகு பட்டாளத்தின் தலைமை அதிகாரியிடம் போனான்.

''டவீடொவின் வீரர்களோடு சேர்ந்து சண்டைபோட விரும்புகிறேன். எனக்கு அனுமதி கொடுங்கள்.''

ஆனால் அவனுடைய அதிகாரிகள் அனுமதி கொடுக்க மறுத்தார்கள். கார்னெட் குமுறினான். அதன் பிறகு அவன் திடீரென்று விடுமுறை அனுமதி இல்லாமல் ஓடி விட்டான். அவன் இராணுவத்தை விட்டு ஓடிவிட்டதாக யாரும் குற்றம் சாட்டக் கூடாது என்பதற்காக ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டுப் போனான். என்னுடைய ஆர்வத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை; எனவே பார்ட்டிஸான்களோடு சேரப் போகிறேன் என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான்.

டவீடொவ் மறைந்திருப்பதாகச் சொல்லப்படும் ஜாட்ஸ்க் மாவட்டத்தை நோக்கி அவன் சென்றான்.

போகும் வழியில் அவன் டவீடொவைப் பற்றி நினைத் தான். அந்தப் பார்ட்டிஸான் தளபதி வர்ண மேல்சட்டை, தொப்பி, அதன் மீது சொருகப்பட்டிருக்கும் இறகு ஆகிய ஒப்பனையலங்காரத்தோடு, ஒரு உண்மையான ஹுஸ்ஸா ரைப் போல இருப்பார் என்று கற்பனை செய்தான்.

அவன் ஜாட்ஸ்க் வட்டாரத்துக்கு எப்படியோ வந்து சேர்ந்தான்; பார்ட்டிஸான்கள் இருக்குமிடத்துக்கும் வெற்றி கரமாக வந்து சேர்ந்தான். சரியாகச் சொல்ல வேண்டுமென் றால் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த பார்ட்டிஸான்கள் அவனைப் பிடித்து டவீடொவ் தங்கியிருந்த இடத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

அவன் டெனிஸ் டவீடொவை மிகுந்த ஆர்வத்தோடு பார்த்தான். ஹுஸ்ஸாரின் மேல் சட்டை, தலையிறகு ஆகிய வற்றைக் காணோமே?

அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக ஒரு உண்மையான விவசாயி அவனுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார். அவருடைய தாடியும், கஃப்தானும், இடைவாரும் கூட ஒரு விவசாயியைப் போலவே தத்ரூபமாக இருந்தது. வஸீல்ச்சிக்கொவ் ஏமாற்றத்தினால் தன்னை மறந்த நிலையில் இருந்தான். தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதற்குக் கூட மறந்துவிட்டான். டவீடொவ் சிரித்தார்.

''நான் லெப்டினென்ட்-கர்னல் டவீடொவ். உன் பெயர்?'' என்றார்.

''வஸீல்ச்சிக்கொவ்'' என்று அவன் கீச்சுக் குரலில் சொன் னான்.

அவன் பிரயாணத்தால் களைத்துப் போயிருந்தபடியால் படுத்துத் தூங்குவதற்கு ஒரு இடத்தைத் தேடினான். அங்கே ஒரு பைன் மரத்தடியில் கோட்டை விரித்துப் படுக்குமாறு

சொன்னார்கள். அவனுடைய பார்ட்டிஸான் வாழ்க்கை ஆரம்பமாகிவிட்டது.

மறுநாள் காலையில் டவீடொவ் அவனுக்குப் பாடங்களைக் கற்பிக்கத் தொடங்கினார்.

''ஒரு பார்ட்டிஸானுக்கு அதிக முக்கியமானது என்ன?''

தனக்குத் தெரியாது என்று கார்னெட் தோளைக் குலுக்கினான்.

''திடீர்த் தாக்குதல்'' என்று பதில் கூறினார் டவீடொவ். ''எந்த நிலை மிகவும் சிறப்பானது?'' என்று கேட்டு அவரே பதிலையும் சொன்னார். ''தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருப்பது.'' ''ஒரு பார்ட்டிஸானின் சிறந்த ஆயுதம் எது? எண்ணிக்கையல்ல, திறமையே அவனுடைய சிறந்த ஆயுதம்.''

பிறகு பயணங்கள், ஓயாத பயணங்கள், நதிகளைக் கடந்து போவது, காடுகளில் இரவைக் கழிப்பது—இவை ஆரம்பமாயின. அவர்கள் மழையில் நனைந்தார்கள்; பனியில் உறைந்தார்கள்; இரவு நேரங்களில் ஈரத் தரையில் படுத்து உடம்பு குளிர்ந்து போய்விட்டது.

திட்டங்கள் இல்லாத யுத்தங்கள்—எந்த விதி முறைக்கும் உட்படாத போர்கள்—காலையில் ஒரு கைகலப்பு—மாலையில் ஒரு திடீர் சண்டை—இரவு நேரத்தில் திடீர் அபாய அறிவிப்பு; இதுதான் பார்ட்டிஸானின் வாழ்க்கை.

அந்த கார்னெட் இந்த வாழ்க்கைக்குத் தயாராக இருக்கவில்லை. தன்னுடைய படைப்பிரிவை விட்டு வந்தது தவறு என்று நினைத்து வருந்த ஆரம்பித்தான். அவன் அங்கே ஒரு வார காலம் இருந்தான். பிறகு அதை விட்டுப் போய் விட்டான். இந்தத் தடவை அவன் கடிதம் கூட எழுதிவைக்கவில்லை.

வஸீல்ச்சிக்கொவ் தன்னுடைய படைப்பிரிவுக்குத் திரும்பினான். அவன் அங்கிருந்து போன பொழுது அது பரபரப்பாக இருந்தது. ஒரு படைவீரன் தன் படைப்பிரிவை விட்டு அனுமதியில்லாமல் போவது மோசமான குற்றமாகும். எனவே குட்டுஸொவிடம் அதைப் பற்றித் தெரிவிக்கப் பட்டது. அவன் திரும்பிவிட்டபடியால், அதுவும் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

குட்டுஸொவ் தகவலறிந்ததும் பின்வருமாறு உத்தரவிட்டார்:

''அனுமதியில்லாமல் போனதற்காக தண்டனை கொடுங்கள்.'' பிறகு சிறிது நேரம் யோசித்துவிட்டுக் கண்டிப்பான குரலில் சொன்னார்: ''அவன் திரும்பி வந்ததற்காக, இரண்டு மடங்கு தண்டனை கொடுங்கள்.''

விவசாயிகள் படை

குதிரைப் படைப்பிரிவைச் சேர்ந்த எர்மோலாய் செட்வெர்ட்டக்கோவ் என்ற வீரர் போரில் தன்னுடைய குதிரை காயமடைந்ததும் எதிரியினுல் சிறைப்பிடிக்கப்பட்டார். அவரை ஜாட்ஸ்குக்குக் கொண்டு போனுர்கள். ஆனுல் போகும் வழியில் அவர் தப்பிவிட்டார்.

பஸ்மானி என்ற கிராமத்துக்கு வந்தார். அங்கே விவசாயிகள் கோபமடைந்து கொதித்துக் கொண்டிருந்ததையும் எதிரியோடு சண்டை போடுவதற்குத் துடித்துக் கொண்டிருந்ததையும் கண்டார். பிரெஞ்சுக்காரர்கள் என்று யாராவது சொல்லிவிட்டால் அவர்கள் சரமாரியாகத் திட்டினுர்கள்.

இதைப் பார்த்த பொழுது பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்துச் சண்டை போடக் கூடிய வகையில் விவசாயிகளின் பார்ட்டிஸான் படையை ஏற்படுத்தலாமே என்ற எண்ணம் அவர் மனதில் தோன்றியது. தன்னுடைய யோசனையை அவர்களிடம் கூறினுர்.

ஆனுல் விவசாயிகளிடம் தயக்கம் ஏற்பட்டது. அந்தப் படைவீரனைப் பற்றி யாருக்குத் தெரியும்? அவர் எங்கேயிருந்து வருகிருர்? இந்த யோசனையின் முடிவு என்னவாக இருக்கும் என்று யாரால் சொல்ல முடியும்? முகத்தில் அம்மைத் தழும்புகள் நிறைந்த ஒரே ஒரு இளைஞன் மட்டும் அந்தப் படை வீரரோடு சேர்ந்தான்.

அவர்களிருவரும் விவசாயிகளைத் திரட்டுவதற்காக ஸாட்கொவோ என்ற கிராமத்துக்குப் புறப்பட்டார்கள். போகும் வழியில் இரண்டு பிரெஞ்சு வீரர்களைப் பார்த்தார்கள். அவர்களைக் கொன்றுர்கள். பிறகு மேலும் இரண்டு பிரெஞ்சு வீரர்களைப் பார்த்தார்கள். அவர்களுக்கும் சீக்கிரத்தில் அதே கதி ஏற்பட்டது.

''இரண்டு பேர்தான். ஆனுல் நான்கு எதிரிகளைத் தொலைத்து விட்டார்களே!'' என்று பஸ்மானி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஆச்சரியத்தோடு பேசிக் கொண்டார்கள்.

''நான்கு பேர்கள் இருந்தால் எட்டுப் பேரைக் காலி செய்திருப்பார்கள்!''

''எட்டுப் பேர்கள் என்றுல் பதினறு பேர்களைக் காலி செய்திருப்பார்கள்!''

பஸ்மானி கிராமத்திலிருந்த விவசாயிகள் அதிகமான பரபரப்பை அடைந்தனர். ஸாட்கொவோ கிராமத்தைச்

சேர்ந்த இளைஞர்கள் தங்களை முந்திக் கொண்டு விவசாயிகள் படையை அமைத்துவிட்டால் என்ன செய்வது?

''அந்த வீரரை உடனே இங்கே கூட்டிவருவோம்.''

''நம்முடைய விவசாயப் படையை அமைப்போம்.''

அவர்களுடைய விருப்பத்துக்கிணங்கி அந்தப் படைவீரர் பஸ்மானிக்குத் திரும்பினார். அந்த கிராமத்தின் விவசாயிகள் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

''எங்கள் மீது கோபமடைய வேண்டாம். நீங்கள் உண்மையிலேயே நம்முடைய படையைச் சேர்ந்தவர்தானா என்பதை நாங்கள் சோதனை செய்தோம்.'' என்று அவர்கள் சாமர்த்தியமாகப் பேசினார்கள்.

இருநூறுக்கும் அதிகமான பேர்கள் விவசாயிகள் படையில் சேர்வதென்று முடிவு செய்தார்கள். இது தான் ஆரம்பம். குறைந்த காலத்துக்குள் நாலாயிரத்துக்கும் அதிகமான விவசாயிகள் செட்வெர்ட்டக்கோவின் தலைமையின் கீழ் திரண்டனர்.

செட்வெர்ட்டக்கோவ் உண்மையான தளபதியாக இருந்தார். அவர் தன்னுடைய படையில் இராணுவக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினார். ரோந்து வருவது, இரவுக் காவல், இராணுவ நடவடிக்கைகளைப் பற்றிய பாடங்கள் எல்லாம் இருந்தன. விவசாயிகள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும், நல்ல ஆரோக்கியத்தோடிருக்க வேண்டும் என்பதில் அவர் அதிகமான அக்கறை காட்டினார்.

''உங்கள் பதவி என்ன—கர்னலா?'' என்று விவசாயிகள் அவரைக் கேட்டுச் சிரித்தார்கள். தங்கள் தளகர்த்தர் எல்லா விஷயங்களிலும் மிகவும் உறுதியாக இருப்பதைக் கண்டு அவர்களுக்கு உள்ளூற மகிழ்ச்சி ஏற்பட்டது.

''என்ன கர்னல் என்று சொல்கிறாய்? அவர் தளபதியாக்கும். மேன்மை தங்கிய தளபதி அவர்களே!''

விவசாயிகள் தங்கள் கிராமங்களிலேயே தொடர்ந்து வசித்தார்கள். அவர்கள் வரவேண்டும் என்றால் ஒரு சமிக்ஞை கொடுக்கப்படும்; உடனே அவர்கள் கிளம்பிவிடுவார்கள்.

...ருஷ்யாவின் சாலை வழியே ஒரு பிரெஞ்சுப் படைப் பிரிவு போய்க் கொண்டிருந்தது. பல வண்டிகள் அதிகமான பாதுகாப்போடு போய்க் கொண்டிருந்தன. அந்த வண்டிகளில் துருப்புகளுக்கு வெடிமருந்து இருந்தது. வண்டிகளுக்கு முன்னால் குதிரைகள் பீரங்கியை இழுத்துக் கொண்டு வந்தன. அது விவசாயிகளை பயமுறுத்துவதற்காக மட்டுமல்ல, பிரெஞ்சுக்காரர்களுக்கு தைரியமூட்டுவதற்குமே.

அந்த வட்டாரத்திலுள்ள மாதாகோவில்களின் மணிகள் ஒலித்தன. முதலில் அவை ஆபத்து என்று எச்சரிப்பதைப்

போல சத்தம் எழுப்பின; பிறகு சாந்தப்படுத்துவதைப் போலத் தணிவாக ஒலித்தன. பிறகு கணீரென்று ஒலித்துத் தேய்ந்தன. இந்த மணியோசையைக் கேட்டு பிரெஞ்சுக் காரர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மணிகள் அமைதியாக இருந்தன. பிரெஞ்சுக்காரர்கள் ஒரு குன்றுக்குச் சமீபமாக வந்ததும் இடது பக்கத்திலிருந் தும் வலது பக்கத்திலிருந்தும் மணிகள் மறுபடியும் வேக மாக ஒலித்தன. ஒவ்வொரு கிராமத்திலும் மணிகள் ஒலித் தன. எவ்வளவு இனிமையான ஓசை...

பிரெஞ்சுக்காரர்கள் தொடர்ந்து போய்க் கொண்டிருந் தார்கள். மணிகளிலிருந்து வந்த இனிமையான சங்கீத ஒலியைக் கேட்டபொழுது அந்தக் குரல்கள் தங்களுடைய மரணப் பாடலைப் பாடிக் கொண்டிருக்கின்றன என் பதை அவர்கள் சிறிதும் உணரவில்லை.

செட்வெர்ட்டக்கோவ் தன்னுடைய படையைச் சேர்ந்த விவசாயிகளுக்கு சமிக்ஞை கொடுப்பதற்கு மாதாகோவில் மணிகளைப் பயன்படுத்தினர். அவை எச்சரிக்கை கொடுப் பதோடு நின்றுவிடவில்லை; ஒவ்வொரு ரகமான ஒலியிலும் ஒரு வகை உத்தரவு இருந்தது. அவற்றைக் கவனமாகக் கேட்டால் எங்கே போக வேண்டும், துருப்புகள் எங்கே திரள வேண்டும் என்ற குறிப்புகள் இருக்கும்.

பிரெஞ்சுக்காரர்கள் தொடர்ந்து போய்க் கொண்டிருந் தார்கள். அதற்குள் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த பல கிராமங்களிலுமிருந்து படைகள் புறப்பட்டுக் கொண்டிருந் தன. எகோர்யெவ்ஸ்கயா மலையிடுக்கிலுள்ள நதியின் ஓரத் தில் அன்றைய தினத்தில் கூட வேண்டுமென்ற உத்தரவை மணிகள் அறிவித்தன.

பிரெஞ்சுக்காரர்கள் அந்த நதிக்குப் பக்கத்தில் வந்த னர். அங்கே ஏராளமான விவசாயிகள் மறைந்திருந்தார்கள். அவர்களுடைய எண்ணிக்கை கணக்கில் அடங்காது. அங்கே யிருந்த கஃப்தான்களின் கடலில் ஒரு குதிரைவீரர் மட்டும் தனியாகத் தெரிந்தார். அவர்தான் தளகர்த்தராக இருக்க வேண்டும். அவர் உத்தரவு கொடுத்தார். விவசாயிகள் படை பிரெஞ்சுப் படை வீரர்களையும் வண்டிகளையும் சூழ்ந்து கொண்டது. பீரங்கியோடு வந்த படைவீரர்கள் என்ன செய் வதென்று—எந்தத் திசையில் பீரங்கியை வெடிப்பதென்று— தெரியாமல் திகைத்தனர். எங்கே திரும்பினாலும் விவசாயி கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் குதிரை மீதி ருந்த வீரனைப் பார்த்துச் சுட்டார்கள். ஏனென்றால் அங்கே யிருந்தவர்களுக்கு அவர்தான் அதிகாரி என்று தெளி வாகப் புலப்பட்டது. நல்ல வேளையாக அவர்களுடைய குறி

தவறிவிட்டது. குண்டு அவர் தலைக்கு மேலே போய் விழுந்தது.

அவர்கள் முதல் தடவையாகவும் கடைசித் தடவையாகவும் சுட்டது அப்பொழுதுதான். பீரங்கியில் மறுபடியும் குண்டு வைப்பதற்கு அவர்களுக்கு மற்ருெரு வாய்ப்புக் கிடைக்கவில்லை. விவசாயிகளின் கால்கள் வேகமாகவும் கைகள் சுறுசுறுப்பாகவும் இருந்தன. அங்கேயிருந்த பீரங்கி, வண்டிகள், குதிரைகள், படைவீரர்கள் எல்லாமே ஒரு விஞடிக்குள் அவர்களிடம் சிக்கிவிட்டன.

பார்ட்டிஸான்கள் தங்களுடைய துணிகரமான தாக்குதலை முடித்துக் கொண்டு வீடுகளுக்குத் திரும்பினுர்கள். அவர்களுக்கு மத்தியில் குதிரை மீது படைவீரன் செட்வெர்ட்டக்கோவ், எர்மொலாய்... உங்களுடைய இரண்டாவது பெயர் என்ன? சரி. அந்த இரண்டாவது பெயர் நமக்குத் தேவையில்லை. எர்மொலாய் செட்வெர்ட்டக்கோவ்—விவசாயிகளின் தளபதி! மேன்மை தங்கிய விவசாயிகள் படைவீரர்!

சுருக்குக் கயிறும் முன்முடியும்

லோகொத்கீ கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் பிரெஞ்சுக்காரர்களை சுருக்குக் கயிறு மாட்டிப் பிடிப்பதில் கை தேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் காட்டுப் பாதைகளுக்கு நடுவிலுள்ள புதர்களின் மறைந்து கொண்டு அந்தப் பக்கமாக எதிரியின் படை வரட்டும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். காலாட்படை அல்லது குதிரைப்படை அந்தப் பக்கமாக வரும்பொழுது அவற்றில் கடைசியாக வருபவர்களுக்காக அவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் வந்ததும்... அவர்கள் கழுத்தை நோக்கிச் சுருக்குக் கயிற்றை வீசுவார்கள். அவன் கூச்சலிடுவதற்கு முன்பு அவனை இழுத்து அதன் வாயைக் கட்டிவிடுவார்கள். பிரெஞ்சுக் கனவான் அவர்களே! எப்படி இருக்கிறீர்கள்? என்ன இருந்தாலும் இப்படி மாட்டிக் கொள்ளலாமா!

ஒரு சமயத்தில் இப்படி எதிரியைப் பிடிப்பதற்காக விவசாயிகள் புதரில் மறைந்திருந்தார்கள். பிரெஞ்சுக்காரர்கள் அந்த இடத்துக்குப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். விவசாயிகள் சுருக்குக் கயிற்றை வீசினுர்கள். குதிரை மீது சென்று கொண்டிருந்த வீரன் அதிலிருந்து கீழே விழுந்தான். உடனே அவனுடைய வாயைக் கட்டி அவனை கிராமத்துக்கு இழுத்துக் கொண்டு போனுர்கள். போகும் வழியில்

அவன் முரண்டு செய்து கொண்டும் விவசாயிகளை மிதித்துக் கொண்டும் வந்தபடியால் அவர்கள் அவன் மண்டையில் ஓங்கி அடித்தார்கள்.

அவர்கள் அவனைப் பன்றிப் பட்டியில் அடைத்துத் தண்ணீரைக் கொண்டு வந்து அவன் தலையில் ஊற்றினார்கள். அவர்கள் கைதிகளை வைத்திருந்த மாவட்டத் தலைநகரமான ஸிசேவ்காவுக்கு அவனைக் கொண்டு போக முடிவு செய்து அவன் வாயிலடைத்திருந்த துணியை எடுத்தார்கள்.

அந்த பிரெஞ்சுக்காரன் எழுந்து நின்றதும் அவர்களை பலமாகத் திட்ட ஆரம்பித்தான்.

''மூளையில்லாத காட்டான்கள்! மாட்டுத் தலை முட்டாள்கள்! உங்களுக்குப் பிளேக் நோய் வரட்டும்!''

விவசாயிகள் வாயைப் பிளந்து கொண்டு நின்றார்கள். அவர்களுக்கு ஆச்சரியமேற்பட்டது. பிறகு மெதுவாகச் சிரிக்கத் தொடங்கினார்கள்.

அந்த நபர் பிரெஞ்சுக்காரனல்ல; டெனிஸ் டவிடொவின் படைப்பிரிவைச் சேர்ந்த டோன் கஸாக் என்று தெரியவந்தது. கஸாக்குகள் வேவு பார்ப்பதற்கோ அல்லது அது சம்பந்தமான வேறு வேலைக்காகவோ புறப்பட்ட பொழுது வேண்டுமென்றே பிரெஞ்சுக்காரர்களைப் போல மாறுவேடம் போட்டுக் கொண்டார்கள்.

விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தபோதிலும் சிறிது நேரத்தில் சமாளித்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்கள்.

''நீ மாறுவேடம் போட்டிருப்பது எங்களுக்கு எப்படித் தெரியும்?''

''உன் தலையில் எழுதியிருக்கவில்லையே!''

''உன்னைப் பிடித்தவுடன் கழுத்தை வெட்டாமலிருந்ததற்கு நீ எங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.''

''மரமண்டைகள்! முட்டாள்கள்!'' என்று அந்த கஸாக் மேலும் திட்டினான். ''இது என்னவென்று தெரிகிறதா?'' என்று அவன் கஸாக்குகளுக்கே உரித்தான முன்முடியைச் சுட்டிக் காட்டினான்.

உண்மைதான். பிரெஞ்சுக்காரர்கள் முன்முடி வைத்திருக்க மாட்டார்கள். ஆனால் அந்த நேரத்தில் யாரால் இதை கவனிக்க முடியும்?

சற்று நேரத்துக்குப் பிறகு அந்த கஸாக் சமாதானமடைந்தான். ''ஒரு கோப்பை ஒயின் எனக்குக் கொடுக்கலாமல்லவா?'' என்றான்.

''தருகிறோம்'' என்றார்கள் விவசாயிகள்.

கஸாக் ஒயினைக் குடித்தபிறகு தோள்களை நேரே நிமிர்த்தினான்.

"சரி. நண்பர்களே! விடை பெற்றுக் கொள்கிறேன். உங்கள் விருந்தோம்பலுக்கு நன்றி."

அதற்குப் பிறகு சில தினங்கள் வரை விவசாயிகள் அந்த இடத்துக்குப் போகவில்லை.

"மறுபடியும் இதே மாதிரி நடந்து விட்டால்? நம்மவர்களிலேயே ஒருவரைப் பிடித்துவிட்டால்?" என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

ஆனால் பிறகு அவர்கள் மறுபடியும் செயலில் ஈடுபட்டார்கள். இப்பொழுது மிகவும் கவனமாக நடந்து கொண்டார்கள். அவர்கள் ஒரு பிரெஞ்சுக்காரனைப் பிடித்தால் முதலில் அவன் தலையை நன்றாக கவனித்தார்கள். அங்கே கஸாக் முன்முடி இருக்கிறதா என்று ஆராய்ந்தார்கள்.

இளைஞனின் கோபம்

விவசாயிகள் படையின் வீரச் செயல்களைப் பற்றி எண்ணற்ற கதைகளைக் கேட்ட பிறகு குட்டுஸொவ் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று முடிவு செய்தார். யுக்னேவ் என்ற நகரத்துக்கு அருகில் தன்னைச் சந்திக்குமாறு விவசாயிகளைக் கூப்பிட்டனுப்பினர். இளைஞர்களும் வயதானவர்களும், அலங்காரமான உடையணிந்தவர்களும் சாதாரணமான எளிய உடையணிந்தவர்களும்—மொத்தத்தில் கவர்ச்சிமிக்க கோஷ்டியாக—அவர்கள் வந்தார்கள். அவர்களில் சிலர் முகங்களில் போர்த் தழும்புகள் தெரிந்தன, அதில் ஒரு நபர் குட்டுஸொவைப் போல தன்னுடைய வலது கண்ணை இழந்திருந்தார்.

விவசாயிகள் ஒருவர் பின் ஒருவராகக் குடிசைக்குள் நுழைந்தார்கள். குட்டுஸொவ் எல்லோருக்கும் தேநீர் கொடுத்தார். விவசாயிகள் அவசரப்படாமல், நிதானமாக—கிராமப் பழக்கத்தின்படி சர்க்கரைக் கட்டியைப் பற்களுக்கு இடையே வைத்துக் கொண்டு—தேநீர் குடித்தார்கள். அவர்கள் தேநீர் குடித்துக் கொண்டிருக்கும் பொழுது உரையாடல் ஆரம்பமாயிற்று. அவர்கள் பிரெஞ்சுக்காரர்களைப் பற்றிப் பேசத் தொடங்கியது இயற்கையே.

"பிரெஞ்சுக்காரர்கள் வீரம் நிறைந்தவர்கள்; ஆனால் அவர்களிடம் உத்வேகம் இல்லை" என்று விவசாயிகள் கூறினார்கள். "நெப்போலியன் தவறு செய்து விட்டார். ருஷ்யாவை பயமுறுத்திப் பிடித்துவிட முடியும் என்று அவர் உண்மையிலேயே நினைத்தாரா?"

''வாளை எடுத்தவன் வாளின் மூலமே அழிவான் என்று அலெக்ஸாண்டர் நேவ்ஸ்கி தானே சொன்னார்'' என்று ஒரு ஒற்றைக்கண் விவசாயி நினைவுபடுத்தினான்.

''ஆமாம்'' என்று மற்ற விவசாயிகள் ஒத்துக் கொண்டார்கள்.

பிறகு அவர்கள் மாஸ்கோவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''நினைக்கவே வருத்தமாக இருக்கிறது. அது ஒரு மாபெரும் நகரம். பல நூற்றாண்டுகளாக நம் நாட்டுக்குப் பெருமையைக் கொடுத்த நகரம். ஆனால் மாஸ்கோ உண்மையிலேயே மொத்த ருஷ்யாவாக முடியாது. மாஸ்கோவைத் திருப்பிக் கட்ட முடியும். நம்முடைய அரசு நீடிக்க வேண்டும். அதுதான் முக்கியம்.''

பிறகு குட்டுஸொவ் பிரெஞ்சுக்காரர்களோடு வீரமான வகையில் போராடியதற்காக விவசாயிகளைப் பாராட்டினார்.

''அது பெரிய விஷயமல்ல. நாங்கள் சிறு பகுதியினரைத் தான் சந்திக்கிறோம். ஆனால் உண்மையாகச் சண்டை போடுவது இராணுவம் தான்.''

அவர்கள் சிறிதும் முட்டாள்களல்ல என்பதைக் குட்டுஸொவ் புரிந்து கொண்டார். அவர்களுடைய உரையாடலை இரசித்தார்.

''டெனிஸ் டவீடொவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''கேள்விப்படுவதா? அவருடைய படைப் பிரிவுகள் எங்களுடைய மாவட்டத்தில் தானே இருக்கின்றன. அவர் துணிச்சலும் வீரமும் நிறைந்தவர். அவர் மாபெரும் காரியங்களைச் செய்திருக்கிறார்.''

''ஸ்மொலேன்ஸ்கில் ஒரு பெண் பார்ட்டிஸான் இருப்பதாகச் சொல்கிறார்களே?''

''அது கோஷினாவாகத்தான் இருக்க வேண்டும். வஸிலீஸா. கிராமப் பெரியவரின் மனைவி. சண்டை போடுவதற்கு லாயக்கானவள்; அவள் ஆம்பிளை மாதிரி'' என்று விவசாயிகள் பதிலளித்தார்கள்.

அவர்கள் செட்வெர்ட்டக்கோவைப் பற்றியும் பேசினார்கள்.

''அவர் பிறவித் தளகர்த்தர். அவருடைய தகுதிகளுக்கு முன்பே அதிகாரியாக இருக்க வேண்டும்.''

பிறகு அந்த உரையாடல் அவர்களறியாமலேயே மற்ற விஷயங்களுக்கு மாறியது. விவசாயிகள் குளிர்கால, பனிக்கால நடுகை, ஸ்மொலேன்ஸ்க் பிராந்தியத்தில் விளைச்சல் இல்லாமற் போனது மற்றும் நிலவுடைமையாளர்களைப்

பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் திடீரென்று அவரிடம் கேட்டார்கள்.

''மிஹயீல் இல்லாரியோனவிச் அவர்களே! எங்களுக்கு சுதந்திரம் கிடைக்குமா? போரில் வெற்றியடைந்த பிறகு எங்கள் அனைவருக்கும் சுதந்திரம் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்களே. அது உண்மையா?''

குட்டுஸொவ் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. எப்படியிருந்த போதிலும் சுதந்திரத்தைப் பற்றி விவசாயிகளிடம் அவர் என்ன சொல்ல முடியும்? ருஷ்யாவிலிருக்கும் நிலைமை மிகக் கேவலம் என்பதில் சந்தேகமில்லை. அவருக்கு அதிகாரம் கொடுத்தால் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று அவருக்குத் தெரியும். ஆனால் அவர் இராணுவ விவகாரங்களுக்கு மட்டுமே பொறுப்பாக இருக்கின்ற தளபதி. அவர்களுடைய சுதந்திரத்தைப் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க அவருக்கு அதிகாரம் இல்லை. என்னபதில் சொல்வதென்று அவருக்குத் தெரியவில்லை. பீல்டு மார்ஷல் முதல் தடவையாகப் பேச முடியாமல் தடு மாறினார்.

குட்டுஸொவுக்குச் சங்கடமான நிலையை ஏற்படுத்திவிட்டதை விவசாயிகள் உணர்ந்தனர். அவருக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்த வேண்டாமென்று நினைத்து விவசாயிகள் மறுபடியும் யுத்தத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். ஆனால் பேச்சு இப்பொழுது சுலபமாக வரவில்லை. அதில் ஏதோ ஒன்று இல்லாமலிருந்தது. குட்டுஸொவ் அவர்களுக்கு விடை கொடுத்தார்.

விவசாயிகள் கிராமத்துக்குத் திரும்பினார்கள்; வழி முழுவதும் பேசிக் கொண்டே திரும்பினார்கள்.

''ஒன்று நிச்சயம். அந்த விஷயம் சம்பந்தமாக நம் பிக்கையூட்டும் வகையில் அவர் எதுவும் சொல்லவில்லை.''

''நிலம் முந்தி மாதிரியே, மேன் மக்களிடம் தான் இருக்கப் போகிறது.''

அவர்களோடு வந்த இளைஞன் ஒருவன் திடீரென்று நின்று தன்னுடைய தொப்பியைத் தூக்கிக் கோபமாகத் தரையில் எறிந்தான்.

''அப்படியானால் நாம் பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்து ஏன் சண்டை போட வேண்டும்? உயிருக்கே ஆபத்தான காரியங்களில் இன்னும் ஈடுபட வேண்டுமா?'' என்று கேட்டான்.

''இளைஞனே! அவசரப்படாதே!'' என்றார் ஒற்றைக்கண் விவசாயி. ''நாம் இரண்டு வெவ்வேறான பொருள்களை ஒப்பிடுகின்றோம். மேன் மக்கள் மேன் மக்களாகத் தான் இருப்பார்கள். ருஷ்யா தான் நமக்குப் பெரிது.''

வெள்ளிச் சட்டம்

ஜோர்ஜ் மிஷ்லே ஒரு பிரெஞ்சுப் படைவீரன். அவன் அதிகமான நம்பிக்கைகளோடு ருஷ்யாவுக்கு வந்தான். ''ருஷ்யா பணக்கார நாடு. விலையுயர்ந்த பொருள்கள் பல வற்றை மூட்டை கட்டிக் கொண்டுவந்து விடலாம்'' என்று நினைத்தான். இந்த மாதிரி அவன் மட்டும் நினைக்கவில்லை. அவனோடு வந்தவர்களில் பெரும்பாலோர் அப்படித்தான் நினைத்தார்கள். சக்கரவர்த்தியும் அவர்களிடம் அவ்வாறு வாக்குறுதி கொடுத்திருந்தார்.

இப்படிப் பொருள்களைச் சேர்ப்பது ஸ்மொலேன்ஸ்கில் ஆரம்பமாயிற்று. அங்கே ஒரு எர்மைன் கோட்டை அவன் எடுத்துக் கொண்டான். வியாஸ்மாவில் மெழுவர்த்தி வைக்கும் விலையுயர்ந்த பீடங்கள் சிலவற்றை எடுத்தான். ஜாட்ஸ்கில் பாமீர் கம்பளியில் நெய்யப்பட்ட கம்பளம் கிடைத்தது. மாஸ்கோவிலுள்ள பெரிய மாதாகோவில்களில் ஒன்றில் வெள்ளிச் சட்டத்தில் பதிக்கப்பட்டிருந்த தெய்வ வடிவத்தைக் களவாடினான்.

இப்பொழுது மிஷ்லேவுக்குத் திருப்தி ஏற்பட்டிருந்தது. அவன் இன்னும் பல பொருள்களை எடுத்திருப்பான். ஆனால் அவற்றின் எடை அவனுக்குத் தொந்தரவாக இருந்திருக்கும். ''போதும். இனி ருஷ்யர்கள் சமாதானம் பேசட்டும். நான் வீட்டுக்குத் திரும்பத் தயாராக இருக்கிறேன்'' என்றான்.

ஆனால் ருஷ்யர்கள் சமாதானம் பேசவில்லை. ஒவ்வொரு நாளும் பிரெஞ்சுக்காரர்களின் நிலை மோசமாயிற்று. மாஸ்கோ என்ற பெயரே அவர்களுக்கு பீதியைக் கொடுத்தது.

அதற்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் ஊரை நோக்கித் திரும்பினார்கள். எப்படியாவது ருஷ்யாவை விட்டுப் போய் விட்டால் போதும். மிஷ்லே தான் அபகரித்த பொருள்களை அவசரமாக அடுக்கினான். பாமீர் கம்பளத்தை ஒரு பையில் வைத்தான். மெழுகுவத்தி பீடங்களைத் தன்னுடைய இராணுவ முதுகுப்பைக்குள் வைத்தான். இராணுவ உடைக்கு மேல் எர்மைன் கோட்டை அணிந்து கொண்டான். ஆனால் அந்த வெள்ளிச் சட்டத்தை எங்கே வைப்பது? அதைத் தன் கழுத்தில் மாட்டிக் கொள்வதென்று முடிவு செய்தான். சட்டத்திலிருந்து வெளியே நீட்டிய கொள்ளைக்காரனுடைய தலை மிகவும் புனிதமாகத் தோன்றியது.

ருஷ்யர்கள் பிரெஞ்சுக்காரர்களைத் துரத்தினார்கள். துருப்புகள் தாக்கின; காடுகளிலிருந்து பார்ட்டிஸான்கள்

அவர்களை விரட்டினார்கள். போகும் வழியில் விவசாயிகள் மறைந்திருந்து தாக்கினார்கள். பிரெஞ்சுக்காரர்கள் ஓட்டமும் நடையுமாகப் போனார்கள். மிஷ்லே சுமை தாங்க முடியாமல் தவித்தான், திணறினான்.

இவ்வளவு பொருள்களைத் தூக்கிக் கொண்டு போவது சிரமமான காரியமாக இருந்தது. முதுகுப்பை தோளை அழுத்தியது. வெள்ளிச் சட்டம் மிகவும் கனமாக இருந்தது. அதில் இருந்த வெள்ளி மட்டுமே எட்டு கிலோகிராம் கனம் இருக்கும். அந்த கனத்தைத் தாங்க முடியாமல் காற்றிலே மரக்கிளை சாய்வதைப் போல அவன் தரையை நோக்கிக் குனிந்தான். எர்மைன் கோட் நீளமாக இருந்தபடியால் அதன் ஓரங்கள் தரையைக் கூட்டிக் கொண்டு வந்தன. அந்தப் பொருள்களைக் கொண்டு போவது சுலபமான காரியமாக இருக்கவில்லை.

பிரெஞ்சுப் படை பின்வாங்கியது. கஸாக்குகளை நினைக்கும் பொழுதெல்லாம் அவர்கள் பயத்தினால் செத்தார்கள். குட்டுஸொவ் அவர்களைக் கண்ட துண்டமாக வெட்டிக் கொண்டிருந்தார்.

பிரெஞ்சுப் படைகளிலிருந்து பின்தங்கி விடுகின்ற உதிரிகளின் எண்ணிக்கை மென்மேலும் அதிகரித்தது. இந்த உதிரிகளில் மிஷ்லேவும் ஒருவன். அவன் சாலையில் தடுமாறி வந்து கொண்டிருந்தான். அவன் உடல் பலம் குறைந்து கொண்டிருந்தது. அவன் அபகரித்துக் கொண்டு வந்த விலையுயர்ந்த பொருள்களைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அவர்கள் ஜாட்ஸ்குக்கு வந்தார்கள். முதலில் அந்த ஊருக்கு வந்த பொழுது மிஷ்லே அங்கேதான் பாமீர் கம்பளத்தை எடுத்தான். அந்தப் பொன்னான நாட்களை நினைத்து அவன் கண்ணீர் வடித்தான். பாமீர் கம்பளத்தை வீசி எறிந்தான்.

அவர்கள் ஒருவழியாக வியாஸ்மாவுக்கு வந்து சேர்ந்தார்கள். முன்பு அந்த ஊரில் தான் மெழுகு வர்த்தி பீடங்களை அவன் அபகரித்தான். கடைசித் தடவையாக அவற்றை ஆசை பொங்கப் பார்த்தான்; கண்களிலிருந்த வழிந்த கண்ணீரைத் துடைத்தான். மெழுகு வர்த்தி பீடங்களைத் தூக்கியெறிந்தான். ஸ்மொலேன்ஸ்குக்கு வந்தபொழுது கோட்டையும் கழற்றிப் போட்டான்.

அவன் ஆசையோடு கொள்ளையடித்த பொருள்களைக் கைவிட வேண்டிய அவசியம் ஏற்பட்ட பொழுது அவன் மிகவும் வேதனைப்பட்டான். அவன் கண்கள் நீரைக் கொட்டின. அவன் முதுகுப் பையைத் தூக்கி எறிந்தான்; பாதை

யில் தன்னுடைய ஆயுதத்தைப் போட்டான்; ஆனுல் அந்த வெள்ளிச் சட்டத்தைப் பிடிவாதமாக வைத்துக் கொண்டான்.

''அச்சட்டத்தைத் தூக்கி எறி!'' என்று அந்தப் பிடிவாதக்காரனைப் பார்த்து மற்ற தோழர்கள் அதட்டினுர்கள்.

அதைத் தூக்கியெறிந்து அவன் தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கலாம். ஆனுல் அவனுக்கு மனம் வரவில்லை. ருஷ்யாவில் ஏராளமான செல்வம் கிடைக்கும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வெள்ளிச் சட்டத்துக்காகவே அவன் ருஷ்யாவுக்கு வந்ததாகக் கூட இருக்கலாம்.

அவன் உடலில் மிச்சமிருந்த கடைசி பலமும் மறைந்தது. ஸ்மொலேன்ஸ்கைக் கடந்ததும் அவன் நடக்க முடியாமல் பின்தங்கிவிட்டான்; பாதை தவறி வழியிலேயே செத்து விழுந்தான்.

சாலைக்கு அருகேயிருந்த சாக்கடை வாய்க்காலில் ஒரு வெள்ளிச் சட்டம் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. அந்தச் சட்டத்துக்கு நடுவில் ஒரு கொள்ளைக்காரனின் முகம் ஞானியின் முகத்தைப் போல நீட்டிக் கொண்டிருந்தது.

திருமணம்

ஸ்மோர்கோனுக்கு அருகே ஒரு சிறிய கிராமத்தில் ஒரு விவசாயியின் குடும்பத்தில் திருமணம் நடைபெற்று கொண்டிருந்த பொழுது குட்டுஸொவ் அங்கே வந்து சேர்ந்தார்.

அவரை உள்ளே வருமாறு அழைத்தார்கள். அவரும் மறுக்கவில்லை.

ஒரு சிறு வீட்டில் மேசைகளும் நாற்காலிகளும் நீளமாகப் போடப்பட்டிருந்தன. நடனமாடுவதற்காக ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. பிரகாசமான உடையணிந்து வந்த விருந்தினர்கள். வானத்தின் நீல நிறத்தில் சட்டையணிந்த மணமகன். வெளிர் நிற ரிப்பன்கள் அணிந்த மணமகள்.

மேசைகளுக்கு முன்பு இளைஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். குட்டுஸொவும் அங்கே அமர்ந்திருந்தார்.

ருஷ்ய கிராமத்தில் அது பார்க்க முடியாத காட்சி! அங்கே உட்கார்ந்திருந்தவர் யாரோ ஒரு கிழட்டுத் தளபதி யல்ல; பீல்டு மார்ஷலே அங்கே உட்கார்ந்திருக்கிறுர்!

கிராமத்தில் வசித்தவர்கள் எல்லோருமே அந்த வீட்டைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். உல்லாசம் கரை புரண்டோடியது. எல்லோரும் மணமக்களுக்கு வாழ்த்துக் கூறினுர்கள்.

''மணமகனின் நலத்துக்காக!''

கோப்பைகளில் மது நிரம்பி வழிந்தது.

''மணமகள், மணமகனின் முன்னேற்றத்துக்காக!''

''மணமகளின் தகப்பனாரின் நலத்துக்காக!''

''மணமகனின் பெற்றோர்களின் நலத்துக்காக!''

''தாய்மார்களுக்காக!''

திடீரென்று:

''மேன்மை தங்கிய பீல்டு மார்ஷல், இளவரசர் குட்டு ஸொவுக்காக!''

குட்டுஸொவ் தான் அமர்ந்திருந்த மரியாதைக்குரிய இடத்திலிருந்து எழுந்தார்.

''போதும்! போதும்! நான் மணமகன் அல்ல. நானே இப்பொழுது பேசுகிறேன். அன்னை ருஷ்யாவுக்கு! ருஷ்யா வின் வீரமிக்க மக்களுக்கு!''

''ருஷ்யாவுக்கு!'' என்று விவசாயிகள் கூறினார்கள்.

குட்டுஸொவ் தலைமையகத்துக்குத் திரும்பினார். அவ ருடைய தளபதிகள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''மேன்மை தங்கிய தலைமைத் தளபதி அவர்களே! விவ சாயிகளின் திருமணங்களில் நீங்கள் கலந்து கொள்வது உங் களுடைய ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல'' என்றார்கள். பிறகு விவசாயிகளைப் பார்த்துக் குறை சொல்கின்ற தோரணையில் பேசினார்கள். ''நம்மைச் சுற்றிலும் எங்கும் யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் கல்யாணக் கொண் டாட்டம் நடத்துகிறீர்கள். இது பொருத்தமாகத் தோன்ற வில்லை'' என்றார்கள்.

குட்டுஸொவ் அவர்களுக்கு பதிலளித்தார்.

''அது சரியானது; மிகவும் பொருத்தமானது. விவசாயி கள் சமாதான பூர்வமான வாழ்க்கை முறையை நேசிக்கிறார் கள். யுத்தம் முடிவுக்கு வரப் போகிறது. ருஷ்யர்களின் ஆன்மாவுக்கு மிகவும் உகந்தது சமாதானம்—யுத்தமல்ல, வாழ்க்கை—மரணமல்ல.''

மறுபடியும் பாலத்தின் மீது படைகள்

1812. டிசம்பர் மாதம். நேமன். ருஷ்யாவின் எல்லைப் புறம். அரை வருடத்துக்கு முன்பு கோடை காலத்தில் நாம் பார்த்த அதே பாலம்.

படைவீரர்கள் அந்தப் பாலத்தைக் கடந்து கொண்டிருந் தார்கள். ஆனால் அவர்கள் எதிர்த்திசையில் போய்க்

கொண்டிருந்தார்கள். இந்தத் தடவை அவர்கள் முறையாக அணி வகுத்துப் போகவில்லை; இராணுவ இசைக்கேற்ப நடந்து போகவுமில்லை. வாத்தியங்கள் ஒலிக்கவில்லை; படை வீரர்களின் தலைக்கு மேலே பதாகைகள் பறக்கவில்லை. பரிதாபத்துக்குரிய சிலர், கந்தைகளை அணிந்து கொண்டிருந்த சிறு கூட்டம்—அவர்கள் இன்னும் உயிரோடிருந்தது ஆச்சரியமே—பிரெஞ்சுக்காரர்கள் அந்த நதியின் ருஷ்யப் பகுதியிலிருந்து பாலத்தின் மீது போய்க் கொண்டிருந்தார்கள். இவர்கள் ஒரு காலத்தில் மாபெரும் சக்தியுள்ளதாகக் கருதப்பட்ட இராணுவத்தின் பரிதாபத்துக்குரிய மிச்சங்கள்; மற்றொரு இராணுவத்தின் பலத்துக்கும் அவர்களே நிரூபணம் என்று கூறலாம்.

நேமன் நதியின் கரையின் மீது ருஷ்யர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய இராணுவ நடவடிக்கை அங்கே முடிவடைந்தது.

''ருஷ்யா சமாளித்துவிட்டது என்று தோன்றுகிறது!''

''உயிரைக் காத்துக் கொண்டது'' என்று பழுப்பு நிறத்தில் மீசை வைத்திருந்த கார்பரல் சொன்னார்.

படைவீரர்கள் அவரை கவனித்தார்கள். அந்த முகத்தை எப்பொழுதோ பார்த்திருக்கும் நினைவு ஏற்பட்டது.

''சிறிது காலத்துக்கு முன்பு அந்தக் கதையைச் சொன்னது நீ தானே?'' என்று கேட்டார்கள்.

படைவீரர் ஆமென்று ஒத்துக் கொண்டார்.

''மான் குட்டி முரட்டு மானாக வளர்ந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்'' என்று சொல்லிவிட்டுப் படைவீரர்கள் சிரித்தார்கள். ''அது தன்னுடைய குளம்புகளினால் அந்தக் கிழட்டு ஓநாயை நசுக்கிவிட்டது.''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

படைவீரர்களின் இதயங்கள் மகிழ்ச்சியில் விம்மிக் கொண்டிருந்தன. அவர்கள் தங்கள் இலட்சியத்தை நிறைவேற்றிவிட்டார்கள். அந்த நதியின் கரை மீது நின்று கொண்டு இதுவரை நடந்தவற்றை நினைத்துப் பார்த்தார்கள். விடெப்ஸ்கில் நடைபெற்ற சண்டை, ஸ்மொலேன்ஸ்குக்கு அருகில் நடைபெற்ற யுத்தம், பொரோடினேவில் உக்கிரமான போர், மாஸ்கோவுக்குத் தீ வைக்கப்பட்டது... வெற்றியை அடைவதற்கு அவர்கள் சென்ற பாதை சுலபமாக இருக்கவில்லை என்பது உண்மையே. எதிர்கால சந்ததியினர் அந்த நட்களை நினைவில் கொள்வார்களா?... ருஷ்யர்கள் கொட்டிய இரத்தம் மிக அதிகம். ருஷ்யாவில் புதிய புதைகுழிகள் ஏராளமாக ஏற்பட்டிருந்தன.

படைவீரர்கள் இறந்து போன தோழர்களை நினைவு கூர்ந்த பொழுது அவர்களுடைய குரல்கள் துயரத்தில் தோய்ந் திருந்தன. அந்த நேரம் ஆனந்தமானதாகவும் இருந்தது; துயரம் நிறைந்ததாகவும் இருந்தது. அந்த நேரத்தில் குட்டு ஸொவும் அவருடைய பரிவாரங்களும் அந்த இடத்துக்கு வந் தார்கள்.

''ஹுர்ரே!'' என்று படைவீரர்கள் முழங்கினார்கள்.

''தாய்நாட்டைக் காத்த மாவீரர் புகழ் ஓங்குக!''

''பீல்டு மார்ஷல் புகழ் ஓங்குக!''

''ஹுர்ரே!''

குட்டுஸொவ் படைவீரர்களை நோக்கிக் குனிந்தார்.

''அன்னை ருஷ்யாவின் வீரர்கள் புகழ் ஓங்கட்டும்! ருஷ்யப் படைவீரன் புகழ் ஓங்கட்டும்! '' என்றார்.

பிறகு படைவீரர்களுக்குப் பக்கத்தில் வந்தார்.

''களைத்து விட்டீர்களா?'' என்று கேட்டார்.

''ஆம். களைத்திருக்கிறோம்'' என்று படைவீரர்கள் ஒத்துக் கொண்டார்கள். ''ஆனால் இப்பொழுது எல்லாம் முடிந்து விட்டதே.''

''இல்லை. இன்னும் முடியவில்லை'' என்றார் குட்டுஸொவ். ''நீங்கள் இன்னொரு பயணம் புறப்பட வேண்டும்.''

படைவீரர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டது. பீல்டு மார் ஷல் எதைக் குறிப்பிடுகிறார்? எனினும் ''மகிழ்ச்சியோடு செய்வோம்'' என்று அவர்கள் பதிலளித்தார்கள். இராணுவ விதிகளும் ஒழுங்குமுறைகளும் சொல்லித் தருகின்ற பதில் அதுதானே.

குட்டுஸொவ் தன்னுடைய படையினர் எல்லோரையும் ஒன்றாகப் பார்க்கக் கூடிய இடத்துக்குப் போய் நின்றார்; தன் கண்களைச் சுழற்றி எல்லோரையும் பார்த்தார். பிறகு கம் பீரமான குரலில் (அந்த வயோதிகரின் கீச்சுக் குரல் எப் பொழுது மாறியது?) பேச ஆரம்பித்தார்:

''விடெப்ஸ்க் வீரர்களே! ஸ்மொலேன்ஸ்க் வீரர்களே! பொரோடினோ, யாரொஸ்லாவெட்ஸ், டரூடினோ போர்க் களங்களின் கழுகுகளே! அழியாப் புகழ் பெற்ற ருஷ்யப் புதல்வர்களே!'' குட்டுஸொவ் குதிரை மீது நிமிர்ந்தார். ''செத்தவர்களும் உயிரோடிருப்பவர்களும் வரிசையாக நில் லுங்கள்! வீரர்களே! உங்கள் பயணம் முடிந்துவிடவில்லை. நீங்கள் இன்னொரு பயணத்துக்குப் புறப்பட வேண்டும். இது வரலாற்றின் ஏடுகளில் நிரந்தரமாக இடம் பெறுகின்ற பயணம்'' என்றார்.



1

2

1. நெப்போலியனின் ருஷ்யப் படையெடுப்பின் ஆரம்பம்—பிரெஞ்சு இராணுவம் 1812, ஜூன் 12ந் தேதியன்று நேமான் நதியைக் கடக்கிறது (19ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் செதுக்கப்பட்ட ஓவியம்). 2. ''பைலோருஷ்யாவில் பிரெஞ்சுப் போர்வீரர்கள்'' (ஃபாபெர் டு ஃபோர் வரைந்த ஓவியம்). இந்தப் படத்தில் பிரெஞ்சுப் போர்வீரர்கள் கிராமங்களில் கொள்ளையடிப்பது சித்திரிக்கப் பட்டிருக்கிறது.

3

4

3. பார்க்லாய் டெ டோல்லி—குட்டுஸொவின் கீழ் ருஷ்ய இராணுவத்தின் தளபதி, 1812ம் வருடப் போரில் பெரும் புகழ் பெற்றவர் (டௌ என்பவரால் செதுக்கப்பட்ட ஓவியம்).

5

6

4. பக்ராத்தியோன்—*1812*ம் வருடப் போரில் பெரும் புகழ் பெற்ற தளகர்த்தர் (கார்டெலி என்பவரால் செதுக்கப்பட்ட ஓவியம்). 5. ஸ்மொலேன்ஸ்க் அருகில் நெப்போலியனும் அவருடைய இராணுவமும் (மார்டினே என்பவரால் செதுக்கப்பட்ட ஓவியம்). 6. இளவரசர் மிஹயீல் கொலெனிஷ்சேவ்-குட்டுஸொவ். 7, 8, 9. மாட்வெய் பிளாடொவ், நிக்கோலாய் ரயேவ்ஸ்கி, மிஹயீல் மிலொராடோவிச், குட்டுஸொவின் தளகர்த்தர்கள், 1812ம் வருடப் போரில் புகழ்பெற்றவர்கள்.

7

8

9

10

11

10. பொரோடினோ யுத்தம். பிரெஞ்சுப் படைகளின் எட்டாவது தாக்குதல் முறியடிக்கப்படுகிறது. இந்தப் யுத்தத்தில் பக்ராத்தியோன் காயமடைந்தார் (கெஸ் என்பவரால் செதுக்கப்பட்ட ஓவியம்).

11. பொரோடினோ யுத்தம். தளபதி ரயேவ்ஸ்கியின் தலைமையிலிருந்த பீரங்கிப் படைகளை பிரெஞ்சுப் படைகள் தாக்குதல். 12, 13, 14, 16, 17, 18. ருஷ்ய இராணுவத்தைச் சேர்ந்த வெவ்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகளின் படங்கள். 15. ''ஃபிலியில் இராணுவத் தலைமையின் ஆலோசனைக் கூட்டம்'' (ஏ. எச். கிவ்ஷெங்கோ வரைந்த ஓவியம்).

12

13

14

15

16

17

18

19

20

21

19. ''பிரெஞ்சுத் துருப்புகள் மாஸ்கோவாசிகளைச் சுட்டுக்கொல்லுதல்'' (வஸீலி வெரெஷ்சாகின் வரைந்த ஓவியம்). 20. ''என்ன விலை கொடுத்தாகிலும் சமாதானம்'' (வெரெஷ்சாகின் வரைந்த ஓவியம்). நெப்போலியனின் சமாதானப் பிரேரணையைக் குட்டுஸொவ் நிராகரித்து விட்ட செய்தியை உதவித் தளபதி லொரிஸ்டோன் நெப்போலியனிடம் தெரிவிக்கிறார். 21. மாஸ்கோ தீப்பற்றியெரிகிறது (கபேர்மான் வரைந்த நீர்வண்ண ஓவியம்). 22. ருஷ்யக் காவல் படையினர். 23. நெப்போலியனின் இராணுவத்தில் எஞ்சியிருந்தவர்கள் மாஸ்கோவிலிருந்து விரட்டப்படுதல் (அக்காலத்தில் செதுக்கப்பட்ட ஓவியம்).

22

23

24

25

26

27

24. கெராசிம் கூரின், மறைந்து தாக்கும் விவசாயப் படைவீரன். 25. டெனிஸ் வஸீலியெவிச் டவீடொவ் (அலெக்சாந்தர் ஆர்லோவ்ஸ்கி வரைந்த ஓவியம்). 26. வஸிலீஸா கோஷினு, மறைந்து தாக்கும் விவசாயப் படைக்குத் தலைமை வகித்த வீரப் பெண். 27. ''1812ம் வருட தேசபக்தப் போரில் மறைந்து தாக்கும் விவசாயப் படையினர்'' (டெர்பெனெவ் என்பவர் மரத்தில் செதுக்கிய சித்திரம்). ''வஸிலீஸாவினுல் பிடிக்கப் படும் பொழுது பிரெஞ்சுக்காரர்கள் பட்டினி கிடந்த எலிகளைப் போல இருந்தார்கள்'' என்ற வாசகம் சித்திரத்தின் கீழ் எழுதப்பட்டிருக்கிறது.

28. மாலயாரொஸ்லாவெட்ஸ் அருகே நடைபெற்ற போர், அக்டோபர் 12, 1812 (19ம் நூற்றுண்டில் அச்சிடப்பட்ட ஓவியம்). 29. 1812ம் வருடப் போரில் ருஷ்யத் துருப்புகள் உபயோகித்த ஆயுதங்கள்.

28

29

30

31

30. ''நெடுஞ்சாலையில்'' (வெரெஷ்சாகின் வரைந்த ஓவியம்). நெப்போலியனுடைய ''வெல்லப்பட முடியாத'' இராணுவம் இப்படி ருஷ்யாவை விட்டு வெளியேறியது.
31. ''1812'' (பிரியானிஷ்னிகோவ் வரைந்த ஓவியம்).

32

32. 1812ம் வருடப் போரில் பங்கு கொண்டதற்காகப் பெற்ற பதக்கத்தோடு ருஷ்யப் போர் வீரன் (பி. ஜுக்கோவ்ஸ்கி என்பவர் வரைந்து அச்சிடப்பட்ட ஓவியம்). 33. 19ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் உபயோகிக்கப்பட்ட பீரங்கி. 34. பொரோடினே போர்க்களத்தில் ருஷ்யப் போர் வீரருக்கு நினைவுச் சின்னம்.

33

34

உழைப்பின் செங்கொடி

எமெல்யானவ்கா காட்டில்

பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து மூன்று வெர்ஸ்டா தூரத்தில், முக்கியமான பாதைகளிலிருந்து சற்றுத் தள்ளி எமெல்யானவ்கா கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்துக்குப் பின்னுல் ஒரு காடு இருந்தது. அந்தக் காடு பின்லாந்து வளைகுடாவின் கரையோடு முடிந்துவிடும்.

அது ஒரு சிறு கிராமம். மிகச் சாதாரணமான கிராமம். அங்கே வசித்த மக்களின் எண்ணிக்கை குறைவு. அவர்கள் சமாதானமான வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அங்கே முக்கியமான சம்பவங்கள் இதுவரை நடந்ததில்லை. எனவே அதன் வரலாறு சிறப்பான செய்திகளைக் கொண்டிருக்க வில்லை. அந்தப் பிராந்தியத்துக்கு உரிய மரங்களான பைன், பர்ச், ராஸ்பெர்ரி புதர்கள், ஹேஸல் கொட்டைப் புதர்கள் முதலியவையே அந்தக் காட்டில் இருந்தன. சாலை வழியே செல்பவர்கள் அபூர்வமாகத்தான் அந்தப் பாதையிலிருந்து விலகி காட்டுக்குள் வருவதுண்டு. ஆனுல் ஒரு நாள்...

அந்த கிராமத்தைச் சேர்ந்த ஸான்கா லாபின் என்ற பெயருடைய பையன் ஒரு நாள் காட்டுக்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது இரண்டு புதியவர்களைப் பார்த்தான். அவர்கள் எல்லாத் திசைகளிலும் நன்கு பார்த்துவிட்டு வயலின் குறுக்கே நடந்து போனுர்கள். அங்கே காட்டுப் புதர்களுக்கிடையே ஒளிந்து கொண்டார்கள்.

''அவர்கள் யாராக இருக்கும்?'' என்று ஸான்கா ஆச்சரியப்பட்டான். ''அவர்கள் இளைஞர்களாகத் தோன்றுகிறுர்கள். பலசாலிகளாகவும் இருக்கிறுர்கள். ஒரு வேளை கொள்ளைக்காரர்களாக இருப்பார்களோ?''

அந்தப் புதர்களுக்கருகே பதுங்கிப் போய்ப் பார்க்க வேண்டுமென்று அந்தச் சிறுவன் விரும்பினுன். ஆனுல் அதற்குத் தேவையான தைரியம் அவனிடம் இல்லை. அந்தப் புதரிலிருந்து தள்ளி ஓடினுன். வளைகுடாவுக்குப் பக்கத்தில் போனபொழுது அங்கே அவனுக்கு இன்னெரு ஆச்சரியம் காத்திருந்தது. ஒன்று, இரண்டு, மூன்று படகுகள் கரையில் நின்றன... அவற்றிலிருந்து ஆட்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள்; எல்லாப் பக்கங்களிலும் நன்ருகப் பார்த்துவிட்டுக் காட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஸான்கா தன்னுடைய நண்பன் பாஷ்கா டுடாரொவைப் பார்ப்பதற்காகக் கிராமத்தை நோக்கி வேகமாக ஓடினன்.

''பாஷ்கா, பாஷ்கா'' என்று இரகசியமாகச் சொன்னன். ''சுமார் இருநூறு அந்நியர்கள் இங்கே வந்திருக்கிருர்கள்!''

''பொய் சொல்லாதே!''

''சத்தியம் செய்கிறேன். நான் சொல்வது உண்மை.''

இரண்டு நண்பர்களும் வளேகுடாவை நோக்கி ஓடினர் கள். அங்கே உண்மையிலேயே படகுகள் நிற்பதைப் பாஷ்கா பார்த்தான்.

அந்த அந்நியர்கள் காடுகளுக்குள் சென்றுர்கள். பிறகு ஒரு புதரிலிருந்து இன்னெரு புதருக்கு அடிமேலடி வைத்துப் போனர்கள். அந்தக் காட்டில் மரம், செடிகள் இல்லாத பொட்டலில் நின்றுர்கள். அடேயப்பா! எவ்வளவு பேர்! அகன்ற தோள்களேக் கொண்ட ஒரு நபரைச் சுற்றி அவர் கள் அரை வட்ட வடிவத்தில் நின்று கொண்டார்கள். அவர் ஒரு கம்பத்தில் செங்கொடியை ஏற்றிவைத்த பிறகு பேசத் தொடங்கினர். அந்தச் சிறுவர்களுக்குத் திகைப்பு ஏற்பட் டது. அவர்கள் புதர்களுக்குப் பின்னல் மறைந்து கொண்டு என்ன நடக்கிறதென்று பார்த்தார்கள்.

''பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களே! நாம் இங்கே கூடி யிருப்பது...'' காற்றிலே மிதந்து வந்த பேச்சாளரின் சொற் பொழிவு பையன்களின் காதுகளில் விழுந்தது. ''நாம் இன்று சிலராக மட்டுமே இருக்கலாம். ஆனல் மக்கள் விழிப்படை யும் நாள் வெகு தூரத்தில் இல்லே...''

அந்தப் பேச்சாளர் அதிக நேரம் பேசினர். பிறகு பின் வரும் முழக்கத்தோடு தம் பேச்சை முடித்தார்:

''பாட்டாளி வர்க்க உரிமை நாள் வாழ்க!''

ஸான்கா பாஷ்காவைக் குத்தினன்.

''அவர் சொல்வது என்ன?''

பாஷ்கா தோளேக் குலுக்கினன்.

முதல் பேச்சாளர் பேசி முடித்த பிறகு வேறு சிலரும் வரிசைக் கிரமமாகப் பேசினர்கள். அவர்கள் தொழிலாளி யின் துன்பத்தைப் பற்றியும், புதிய வாழ்க்கையை உருவாக்கு வதற்காக அவர்கள் போராட வேண்டிய அவசியத்தைப் பற்றியும் பேசினர்கள். மறுபடியும் அந்த உரிமை நாளேப் பற்றிப் பேசினர்கள்.

அந்தக் கூட்டம் முடிவடைவதற்கு இரண்டு மணி நேர மாயிற்று. அந்தப் பையன்களும் அதுவரை அந்தப் புதருக்கு அடியிலேயே படுத்திருந்தார்கள். கூட்டம் முடிந்ததும் தொழிலாளர்கள் சிறு சிறு குழுக்களாகக் கலேந்து சென்றுர் கள். அதற்குச் சிறிது நேரத்துக்குப் பிறகு பையன்கள்

எழுந்து நின்ருர்கள். காட்டுக்கு வந்தவர்கள் யாராக இருக்கலாம்; அவர்கள் ஏதோ உரிமை நாளைப் பற்றிப் பேசினர்களே, அது என்ன என்று போகும் வழியில் அவர்கள் பேசிக் கொண்டு போனுர்கள்.

இருவரும் எமெல்யானவ்கா கிராமத்துக்குத் திரும்பி விட்டார்கள். பெரியவர்களிடம் விசாரிப்போம் என்று முடிவு செய்தார்கள்.

ஸான்கா தன்னுடைய தகப்பனரிடம் அந்தக் கூட்டத்தையும் அங்கே ஏற்றப்பட்ட கொடியையும் பற்றிச் சொன்ஞன்.

''நீ இட்டுக் கட்டிச் சொல்லவில்லேயே?'' என்று அவன் தகப்பனர் சந்தேகக் குரலில் கேட்டார்.

''இட்டுக் கட்டுவதா? நாங்களே நேரில் பார்த்தோம். புதருக்குப் பின்னல் மறைந்து கொண்டு பார்த்தோம்.''

அவன் தகப்பனர் தோளைக் குலுக்கினர். அந்த விஷயத்தைப் பற்றி அவரால் விளக்க முடியவில்லை.

அந்தச் சிறுவர்கள் தங்களுடைய தாயார்களிடம் போய்க் கேட்டார்கள். அத்தை மார்யாவிடமும் மாமா எகோரிடமும் ஓடினர்கள். எனினும் தொழிலாளர்களின் உரிமை நாளைப் பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியவில்லை.

கடைசியில் இருவரும் வயோதிகர் ஓனுச்கினைப் பார்க்கப் போனுர்கள். அந்த கிராமத்திலேயே அவர்தான் அதிக வயதானவர். அவருக்கு ஏதாவது தெரிந்திருக்கும் என்பது நிச்சயம். எத்தனே விதமான விழாக்கள் இருக்கின்றன என்று ஓனுச்கின் விளக்கத் தொடங்கினர். கிறிஸ்மஸ், ஈஸ்டர், ஜார் பிறந்த நாள், ஜாரிஞவின் பிறந்த நாள்...

''அவையல்ல, அவையல்ல'' என்று சிறுவர்கள் குறுக்கிட்டார்கள்.

''தொழிலாளர்களின் உரிமை நாளைப் பற்றிச் சொல்லுங்கள்.''

''தொழிலாளர்களா?'' அந்த வயோதிகர் சிந்திப்பதற்கு நேரமாயிற்று. அவர் தன்னுடைய தலேயின் பின்புறத்தில் சொரிந்தார்; பிறகு எனக்குத் தெரியவில்லேயே என்று கைகளை ஆட்டினர். ''அப்படி ஒரு உரிமை நாளைப் பற்றி நான் ஒரு போதும் கேள்விப்படவில்லை'' என்ருர்.

இரண்டு நண்பர்களுக்கும் அந்த உரிமை நாளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியவில்லை.

எமெல்யானவ்கா கிராமத்தில் உண்மையில் நடைபெற்றது இதுவே. அங்கே ருஷ்யத் தொழிலாளர்கள் முதல் தடவையாக மே தினத்தைக் கொண்டாடினர்கள். அது நெடுங் காலத்துக்கு முன்பு, 1891ம் வருடத்தில் நடைபெற்றது.

எனினும் ஸான்காவும் பாஷ்காவும் மே முதல் நாள் விடுமுறையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு நீண்ட காலமாயிற்று. அவர்கள் வளர்ந்த பிறகு, தாங்களும் தொழிலாளர்களான பிறகுதான் மே தினத்தைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள்.

ஈமச் சடங்கு

மே தினத்தைக் கொண்டாடக் கூடாதென்று தொழிலாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினத்தில் கூட்டமாகச் சேருவதற்கோ, பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கோ அல்லது ஆர்ப்பாட்டம் செய்வதற்கோ அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

எனவே அவர்கள் பல தந்திரங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமேற்பட்டது. உதாரணமாக, மாஸ்கோவிலுள்ள ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இடுகாட்டில் கூடி மே தினத்தைக் கொண்டாடுவதென்று முடிவு செய்தார்கள்.

அவர்கள் ஒரு சவப் பெட்டியைத் தயாரித்துக் கொண்டார்கள். ஈமச் சடங்கு செய்ய ஒரு மதகுருவையும் அமர்த்திக் கொண்டார்கள். ஆறு பேர்கள் சவப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு முன்னால் நடந்தார்கள். மதகுரு தூபக்கோலை ஆட்டிக் கொண்டு அவர்களுக்கு முன்னால் பகட்டாக நடந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாரும் தொழிலாளர்களை விரட்ட மாட்டார்கள். அந்த ஊர்வலம் வந்தபொழுது போலீஸ்காரர்கள் கூட மரியாதையாக ஒதுங்கிக் கொண்டு வழிவிட்டார்கள்.

இடுகாட்டிலுள்ள மாதாகோவிலில் ''செத்துப் போனவருக்காகப்'' பிரார்த்தனை நடத்தப்பட்டது. மதகுரு தூபக்கோலை ஆட்டிக் கொண்டு பிரசங்கித்தார்.

''ஆண்டவனுடைய ஊழியனின் ஆன்மாவின் அமைதிக்காக! அவன் பெயர் என்ன?'' என்று மதகுரு தொழிலாளர்களிடம் கேட்டார்.

''நிக்கலாய்.''

''கடவுளின் ஊழியனை நிக்கலாயின் ஆன்மாவின் அமைதிக்காக!'' என்று மதகுரு திரும்பச் சொன்னார்.

பிரார்த்தனை முடிந்ததும், முன்னரே ஒத்துக் கொண்டபடி ஐந்து ரூபிள் பணத்தை வாங்கிக் கொண்டு மதகுரு போய்விட்டார். தொழிலாளர்கள் அந்த இடுகாட்டின் கடைசி மூலையில் கூடினார்கள். கூட்டம் நடந்தது. அவர்கள்

தணிந்த குரலில் புரட்சிகரமான பாடல்களைப் பாடினார்கள். மே தினத்துக்கென்று விசேஷமாக எழுதப்பட்ட அறிக்கைகளைப் படித்தார்கள்.

அந்த இடுகாட்டின் இரவுக் காவலாளியான டியாட்கின் என்ற பெயருடையவன் அன்றிரவில் சுற்றி வரும்பொழுது தரையின் மேல் வைக்கப்பட்டிருந்த சவப் பெட்டியின் மீது தடுக்கி விழுந்தான். அவன் ஆச்சரியத்தோடு சவப் பெட்டியின் மூடியைத் தூக்கிப் பார்த்தான். அப்பொழுது அவன் கண்ட பயங்கரக் காட்சியை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

அவன் ஸ்தல போலீஸ் அதிகாரியைச் சந்திக்க ஓடினான்.

''என்ன விஷயம்? சொல்.''

''ஐயா, ஒரு சவப் பெட்டி.''

''அதில் என்ன புதுமை?''

''அந்த சவப் பெட்டியில்...'' டியாட்கின் பேச முடியாமல் தடுமாறினான்.

''அந்த சவப் பெட்டியில் என்ன இருந்தது? சொல்லித் தொலை.''

''மாட்சிமை தங்கிய ஜார் இரண்டாம் நிக்கலாய்'' என்றான் டியாட்கின்.

''உனக்குப் பைத்தியமா?''

''நிச்சயமாக இல்லை'' என்று சொல்லிவிட்டு அவன் சிலுவைக் குறியிட்டுக் கொண்டான். ''அது ஜார்தான். இப்படிச் சொல்லுவதற்கு என்னை மன்னியுங்கள்.''

போலீஸ் அதிகாரி இடுகாட்டுக்குப் போனார். அவர் சவப் பெட்டிக்குள் பார்த்தார். அதில்... ஜார் இல்லையென்றாலும் அவருடைய முழு அளவு உருவப்படம். இராணுவ உடையில், பதக்கங்களோடு இருந்தது.

இந்த விவகாரத்தைப் பற்றி விசாரணை நடை பெற்றது.

டியாட்கினால் புதிய தகவல் எதுவும் கொடுக்க முடியவில்லை. அவர்கள் மதகுருவைத் தேடினார்கள்.

''கடைசிச் சடங்குகள் செய்தது நீர்தானா? '' என்று அதிகாரி விசாரித்தார்.

''நான்தான் நடத்திவைத்தேன்.''

''யாருக்கு?''

''கடவுளின் ஊழியனான நிக்கலாய்க்கு.''

''முட்டாள்!'' என்று அந்த அதிகாரி ஆத்திரத்தோடு கத்தினார்.

இவ்வளவு கடுமையான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டிய காரணத்தைப் பற்றியோ அல்லது மதகுருவான தன்னை மாவட்டப் போலீஸ் நிலையத்துக்கு இழுத்துவர வேண்டிய அவசியத்தைப் பற்றியோ மதகுருவுக்கு முதலில்

ஒன்றும் புரியவில்லை. அப்படி நான் என்ன குற்றம் செய்தேன் என்று அவர் நினைத்தார்.

ஆனால் உண்மை தெரிந்தவுடன் அவர் இலையுதிர் பருவத்தில் அடிக்கும் காற்றில் மரத்திலிருக்கும் இலை ஆடுவதைப் போல ஆட ஆரம்பித்தார். அவர் உடல் நடுங்கியது. சிலுவைக் குறி இட்டார். பயத்தில் பிதுங்கி வெளியே வந்த கண்களை மூடித் திறந்தார்.

''அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் யார் என்பதைச் சொல்'' என்று அதிகாரி விடாமல் கேட்டார்.

மதகுரு நினைவைத் துழாவினார் ஆனால் அவரால் எதுவும் சொல்ல முடியவில்லை.

''பல பேர்கள்... சுமார் நாற்பது பேர்கள் இருப்பார்கள். சிலர் உயரமானவர்கள். சிலர் ஒல்லியானவர்கள். சிலர் வயதானவர்கள். சிலர் இளைஞர்கள். அவர்களில் ஒருவன் 'அல்லெலுயாவை' நன்றாகப் பாடினான்.''

'''அல்லெலுயா' பாடினானா?'' என்று அதிகாரி கேலியாகக் கேட்டார். ''சரி, உம்மைக் கூப்பிட்டது யார்? உமக்குக் கூலி கொடுத்தது யார்?''

''பெரிய தோள்களை உடைய ஒரு நபர். அவன் மீசை வைத்திருந்தான். அவன் கைகள் காய்த்துப் போயிருந்தன'' என்று மதகுரு உற்சாகமாக பதிலளித்தார்.

அந்த நபரைத் தேடினார்கள். எனினும் அகன்ற தோள்களும் மீசையும் கொண்ட தொழிலாளர்கள் பலர் இருந்தார்கள். அதிலும் காய்த்துப் போகாத கைகளைக் கொண்ட தொழிலாளர்கள் குறைவாகத்தான் இருந்தார்கள். அவர்களுடைய முயற்சி வெற்றியடையவில்லை.

போலீஸ் அதிகாரி மதகுருவையும் டியாட்கினையும் மறுபடியும் திட்டினார். அதோடு விஷயம் முடிந்தது.

தொழிலாளர்களுக்கு முழுத் திருப்தி. அவர்கள் ஒரே சமயத்தில் மே தினத்தையும் கொண்டாடினார்கள், ஜாருக்கு ஈமச் சடங்குகளையும் செய்தார்கள் என்று சொன்னால் அது வேடிக்கையல்ல.

கிரிஷா லோஸ்னியாக்

கிரிஷா லோஸ்னியாக் என்பவனைச் சிறையில் தனிக் கொட்டடியில் அடைத்திருந்தார்கள். அவன் ஒல்லியாகவும் மெலிவாகவும் இருந்தான். அவனுடைய தோள்கள் குறுகலாக இருந்தன. வெளித் தோற்றத்தைக் கொண்டு பார்த்தால் அவன் மிகச் சாதாரணமான மனிதன் என்று தான்

'அல்லெலுயா'—தோத்திரப் பாடல்

கூற வேண்டும். அவன் அடக்கமாக நடந்து கொண்டான். சிறை அதிகாரிகளோடு சண்டை போடாமல் சிறை விதிகளைப் பின்பற்றி நடந்தான். கைதிகளைக் கொட்டடிக்கு வெளியே உலாவ அனுமதிப்பதுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் அவன் மௌனமாக இருப்பான். ''இவன் முட்டாள் தனமாக ஏதோ செய்ததனுல் இங்கே மாட்டிக் கொண்டான். இதில் தவறு ஏற்பட்டிருப்பது கூட நிச்சயம்'' என்று சிறைக் காவலர்கள் அவனைப் பார்க்கும் பொழுது எண்ணினுர்கள்.

வாரத்துக்கு ஒரு முறை அவனுடைய சகோதரி அவனுக்கு ஒரு பொட்டலம் கொண்டு வருவாள். எப்பொழுதும் ஒரே பொருள்கள்தான்—ஒரு ரொட்டி, ஒரு பாட்டில் பால், கால் பவுண்டு சாதாரண மிட்டாய். மிட்டாய் ஒவ்வொன்றும் ஒரு காகிதத்தில் சுற்றப்பட்டிருக்கும்.

அவள் பெயர் லிஸா. அவள் சகோதரனைப் போலவே ஒல்லியாகவும் மெலிந்தும் குறைந்த வயதாகவும் இருந்தாள்.

லிஸா தன்னுடைய சந்தர்ப்பம் வரும் வரை பொறுமையாகக் காத்திருப்பாள்; பொட்டலத்தை அமைதியாகக் கொடுத்துவிட்டுப் போய்விடுவாள்.

''அவள் எலிக்குஞ்சைப் போல பயந்தவளாக இருக்கிருள்'' என்று சிறைக் காவலர்கள் பேசிக் கொள்வார்கள்.

எனினும் தோற்றங்கள் உண்மையல்ல.

கிரிஷா சிறையில் அடைக்கப்பட்டது தற்செயலாக ஏற்பட்டதல்ல. அவன் போல்ஷிவிக் கட்சியில் உறுப்பினராக இருந்தான். இரகசிய அச்சகத்தை நடத்தி வந்தான். போலீசார் சோதனை போட்ட பொழுது அவனைக் கைது செய்தார்கள்.

லிஸா கிரிஷாவின் சகோதரியும் அல்ல. அவளும் போல்ஷிவிக் கட்சியைச் சேர்ந்தவள். கட்சியின் ஆணைகளை நிறைவேற்றி வந்தாள். அவள் ரொட்டியும் பாலும் மிட்டாய்களும் கொண்டு வருவது காரணத்தோடுதான். அந்த மிட்டாய்களில் சுற்றியிருக்கும் காகிதங்கள் இன்னும் வெளியே இருந்த அவன் தோழர்களின் கடிதங்களாகும். கிரிஷா சிறையில் இருந்த போதிலும் வெளியுலகச் செய்திகள் அவனுக்குத் தெரியும்.

கிரிஷா ரொட்டியைக் குடைந்து மைக் கூடு போலச் செய்வான். அதில் பாலை ஊற்றி அதைக் கொண்டு தன்னுடைய தோழர்களுக்கு பதில் எழுதுவான். இப்படி எழுதிக் கொண்டிருக்கும் பொழுது சிறைக் காவலர்களில் யாராவது ஒருவர் அங்கே வந்தால் அவன் ''மையையும்'' ''மைக் கூடையும்'' வாயில் போட்டு விழுங்கி விடுவான். விளதீமிர் இலியீச் லெனின் தன்னுடைய சிறைக் கடிதங்களை இப்படித்

தான் எழுதினுர் என்பது ஒரு வேளை உங்களுக்குத் தெரிந் திருக்கலாம்.

மே தினம் நெருங்கிக் கொண்டிருந்தது.

இதற்கு முன்பு நடைபெற்ற மே தின நடவடிக்கைகள் பலவற்றிலும் கிரிஷா பங்கு கொண்டிருக்கிறுன். சிறைச் சாலையிலும் தொழிலாளர்கள் உரிமை நாளைக் கொண் டாடுவதென்று அவன் முடிவு செய்தான். தன்னுடைய அடுத்த வீட்டுக்காரர்களிடம், அதாவது பக்கத்து அறை களிலிருந்த கைதிகளிடம் இந்த முடிவைத் தெரிவித்தான். சிறைச் சுவரில் விசேஷமான முறையில் தந்தியடிப்பதன் மூலம் இதைத் தெரிவித்தான். முதலில் வலது பக்கச் சுவரி லும் பிறகு இடது பக்கச் சுவரிலும் தந்தியடித்தான். அங்கி ருந்த தோழர்கள் அவனுடைய செய்தியைப் புரிந்து கொண் டார்கள்; அந்தக் கருத்தை ஆதரித்தார்கள்; தங்களுக்குப் பக்கத்து அறைகளில் இருப்பவர்களுக்குத் தகவல் தெரிவித் தார்கள். மிகவும் குறைவான காலத்துக்குள் அங்கிருந்த அரசியல் கைதிகள் எல்லோருமே கிரிஷா லோஸ்னியாக்கின் பிரேரணையைத் தெரிந்து கொண்டார்கள்.

மறு நாளிலிருந்து சிறிய அளவுள்ள சிகப்புத் துணிகள் சிறைக்குள் வர ஆரம்பித்தன. ரொட்டிக்குள் ஒரு துணி வைக்கப்பட்டிருந்தது. அப்பத்துக்குள் இன்னொரு துணி வைக்கப்பட்டிருந்தது. மூன்ருவது துணி புத்தகத்தின் அட் டையில் தைக்கப்பட்டிருந்தது. காலையில் உலாவச் செல்கின்ற பொழுது கைதிகள் இந்தத் துணிகளை கிரிஷாவிடம் இர கசியமாகக் கொடுத்தார்கள். இரவில் அவன் அவற்றைச் சேர்த்துத் தைத்து ஒரு செங்கொடி தயாரித்தான்.

மே தினம் வந்தது. வழக்கம் போல அன்று காலையில் உலவுவதற்காகக் கைதிகள் வெளியே விடப்பட்டனர். சிறை யின் வெளியிடம் சிறியதாக இருந்தபடியால் கைதிகள் வட்ட மாகச் சுற்றினுர்கள். பத்து வட்டங்கள்—முப்பது நிமிடங் கள். முப்பது நிமிடங்கள்—அவர்கள் உலாவ ஒதுக்கப்பட்ட மொத்த நேரமே அதுதான்.

கைதிகள் முதல் தடவை சுற்றி வந்தார்கள். பிறகு இரண்டாம் தடவை சுற்றி வந்தார்கள். திடீரென்று அந்தக் கைதிகளின் தலைக்கு மேல் ஒரு கொடி அசைந்தாடியது. அந்தச் செங்கொடி காற்றிலே அசைந்து வானத்தையும் கதிரவனையும் நோக்கி நீண்டது.

முன்னே செல்வோம்; துணிவோடு
முன்னே செல்வோம் தோழர்களே!
எதிரிகள் பலத்தை மதியாது
முன்னே செல்வோம் தோழர்களே!

கிரிஷா லோஸ்னியாக் பாட ஆரம்பித்தான்.

அருமைத் தாயகம் காப்போம்!
மானம் நீதி சுதந்திரம்
உயிரினும் மேலாய்ப் பேணுவோம்!

மற்றவர்கள் அவனோடு சேர்ந்து பாடினார்கள்.

காவலர்கள் கலவரமடைந்து ஓடி வந்தார்கள்.

''பாட்டை நிறுத்து!'' என்று கத்தினார்கள். ''பாட்டை நிறுத்து!''

அவர்களுடைய உத்தரவைப் பற்றிக் கைதிகள் கவலைப் படவில்லை:

அச்சமில்லை! அச்சமில்லை!
சிறையிலே அடைக்கட்டும்!
நெருப்பிலே வதைக்கட்டும்!
அச்சமில்லை! அச்சமில்லை!
சுரங்கத்துக்கு விரட்டினாலும்
சுருக்குக் கயிற்றை மாட்டினாலும்
அச்சமில்லை! அச்சமில்லை!

சிறை மேலதிகாரி அங்கே வந்தார். எல்லாப் பக்கங்களிலும் காவலர்கள் கைதிகளைச் சூழ்ந்து கொண்டு தங்களுடைய துப்பாக்கிக் கட்டைகளால் மூர்க்கத்தனமாக அவர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். அதன் பிறகு அவர்களைப் பாதாளத்திலே இருக்கும் தண்டனை அறைகளுக்குள் விரட்டினார்கள். அவை மிகவும் மோசமானவை.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தண்டனை அறைகளில் இரண்டு வாரங்கள் வைக்கப்பட்டனர். பிறகு மற்ற நகரங்களில் இருக்கும் தனிச் சிறைகளுக்கு அனுப்பப்பட்டனர். மற்றவர்களைப் போல கிரிஷா லோஸ்னியாக்கும் இன்னொரு இடத்துக்கு மாற்றப்பட்டான்.

அவன் புதிய இடத்துக்குக் கொண்டு போகப்பட்டான். அங்கே தனிக் கொட்டடியில் அவனை வைத்தார்கள்.

ஒரு வாரம் கழிந்தது. மறுபடியும் ''மைக்கூடும்'' ''மையும்'' கிரிஷாவுக்கு வந்தன. வெளியே இருக்கும் நண்பர்களிடமிருந்து மறுபடியும் அவனுக்குக் கடிதங்கள் வர ஆரம்பித்தன...

கிரிஷா ஒல்லியாகவும் மெலிவாகவும் இருந்தான். அவன் அடக்கமாக நடந்து கொண்டான். வெளித் தோற்றத்தைக் கொண்டு பார்த்தால் அவன் மிகச் சாதாரணமான மனிதன் என்று தான் சொல்ல வேண்டும்...

"மே தினம் வாழ்க!"

மே தினத்தன்று காலையில் போலீஸ் படையின் கர்னலான கோலொவா-கச்சாஜெவிடம் முத்திரையிடப்பட்ட உறை கொடுக்கப்பட்டது. அவர் முத்திரையைப் பிரித்து உறையைக் கிழித்தார். ''மே தினம் வாழ்க! சர்வாதிகாரம் ஒழிக!'' என்று எழுதப்பட்ட காகிதம் உள்ளே இருந்தது.

கோலொவா-கச்சாஜெவின் முகம் வெளுத்தது. அந்தக் காகிதத்தைக் கையிலே எடுத்துக் கொண்டு போலீஸ் தலைமை அலுவலகத்துக்குள் ஓடினார். அவர் தன்னுடைய கீழதிகாரிகளைக் கூப்பிட்டார். கால்கின் என்ற காப்டனுக்கும் குடேய்க்கின் என்ற லெப்டினென்டுக்கும் டுபிகோவ், நொஸொரோகொவ் என்ற போலீஸ் அதிகாரிக்கும் இதே மாதிரி எழுதப்பட்ட கடிதங்கள் வந்திருக்கின்றன என்று தெரிய வந்தது. இது முழுமையான பட்டியல் அல்ல. கோலொவா-கச்சாஜெவின் தொலைபேசி ஒலிக்கத் தொடங்கியது. நகரத்தின் முக்கியமான பிரமுகர்கள் பலர் தங்களுக்கும் இம்மாதிரியான கடிதங்கள் வந்திருக்கின்றன என்று தெரிவித்தார்கள். தொழிற்சாலை முதலாளி ருப்லேவ், வியாபாரி ஸொபாக்கின், ஓய்வு பெற்ற தளபதி அட்டாக்கின், இன்னும் பலர் அவரைக் கூப்பிட்ட வண்ணமாக இருந்தார்கள்...

கோலொவா-கச்சாஜெவ் என்ன செய்வதென்று தெரியாமல் தலையைப் பிடித்துக் கொண்டார். அவருடைய துன்பத்தை அதிகப்படுத்துவது போல போலீஸ் அதிகாரி நோஸொரோகொவ் திடீரென்று அவரிடம் கேட்டார்:

''கர்னல் அவர்களே! தொழிலாளர்கள் கலகம் செய்யத் திட்டமிடுவதாக நினைக்கிறீர்களா?''

''அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு உடனே போய்க் காவல் செய்யுங்கள்! இயந்திரத் துப்பாக்கிகளைத் தெருவிலே நிறுத்துங்கள்! பீரங்கிகளையும் நிறுத்துங்கள்!'' என்று உத்தரவிட்டார் கர்னல்.

போலீஸ்காரர்கள் அவருடைய உத்தரவை நிறைவேற்றுவதற்கு ஓடினார்கள். தெருக்கள் சந்திக்குமிடங்களில் இயந்திரத் துப்பாக்கிகளை வைத்தார்கள். போலீஸ் தலைமை நிலையத்துக்கு முன்னால் ஒரு பீரங்கியை வைத்தார்கள். போலீஸ் ஒற்றர்கள் நகரத்துக்குள் சென்றார்கள். ஆனால் நகரம் அமைதியாக இருந்தது—எவ்விதமான கலவரமும் இல்லை. தலைமை நிலையத்துக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த பீரங்கியைச் சுற்றி சிறுவர்கள் கூட்டமாகக் கூடினர். விசேஷமான சம்பவம் என்று அதைத்தான் சொல்ல வேண்டும். சிறு

வர்களுக்கு அது சுவாரஸ்யமான காட்சியாக இருந்தது. அவர்களில் பலர் அப்பொழுதுதான் முதல் தடவையாக பீரங்கியைப் பார்க்கிறார்கள். அவர்கள் அருகே சென்று அதைப் பார்க்க வேண்டுமென்று முன்னால் நெருக்கிக் கொண்டு போனார்கள். அவர்களில் வீரமிக்கவர்கள் பீரங்கி வண்டியின் சக்கரங்களையும் பீரங்கிக் குழாயையும் கூடத் தொட்டுப் பார்த்தார்கள்.

''தள்ளிப் போங்கள், தள்ளிப் போங்கள்'' என்று ஒரு படைவீரன் சிறுவர்களை அதட்டினான்.

சிறுவர்கள் பின்னால் போனார்கள்; ஆனால் உடனே மறு படியும் முன்னால் வந்தார்கள்.

''பீரங்கியைச் சுடுங்கள்'' என்று அவர்கள் படைவீர னிடம் சொன்னார்கள்.

நண்பகல் நேரத்தின் போதுதான் கர்னல் கோலொவா-கச்சானெவ் அமைதியடைந்தார்; அவருடைய மனோ நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டது. ஆனால் அப்பொழுது நோஸொ ரோகொவ் தலைமை நிலையத்துக்குள் வேகமாக ஓடிவந்து கர்னலிடம் ஒரு காகிதத்தைக் காட்டினார்.

''கர்னல் அவர்களே! இதை... இதைப் பாருங்கள்'' என்று பதறிக் கொண்டு சொன்னார். ''இது... இது பீரங்கி யின் மேல் ஒட்டப்பட்டிருந்தது.''

கர்னல் அதை வாங்கிப் பார்த்தார். அந்தக் காகிதத்தில் ''மே தினம் வாழ்க!'' சர்வாதிகாரம் ஒழிக!'' என்று எழுதி யிருந்தது.

கோலொவா-கச்சானெவின் முகம் மறுபடியும் வெளுத்துப் போயிற்று. மறுபடியும் தலையைப் பிடித்துக் கொண்டார். நோஸொரோகொவ் விடாமல் பேசத் தொடங்கினார்:

''கர்னல் அவர்களே! கலகம் செய்யப் போகிறார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை'' என்றார்.

மறுபடியும் போலீஸ்காரர்களும் ஒற்றர்களும் நகரத் தைச் சுற்றிவந்தார்கள். இயந்திரத் துப்பாக்கிகள் மறுபடி யும் தயாராக வைக்கப்பட்டன. இரண்டு மணிக்கு ஒரு தடவை பீரங்கியிலிருந்து வேட்டுப் போட வேண்டுமென்று கோலொவா-கச்சானெவ் உத்தரவிட்டார். அதிகாரிகள் எதையும் சமாளிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று எச் சரிக்கை செய்ய விரும்பினார். அவ்வப்பொழுது ஒரு படை வீரரோ அல்லது அதிகாரியோ கர்னலிடம் வந்து ஊர் அமைதியாக இருக்கிறது என்ற தகவலைத் தெரிவித்தார்கள். டுபிகோவ் என்ற அதிகாரி வந்தார்.

''கர்னல் அவர்களே! எல்லா இடங்களும் அமைதியாக இருக்கின்றன.''

''சரி. போய் கவனித்துக் கொள்.''

லெப்டினென்ட் குடேய்க்கின் வந்தார்.

''கர்னல் அவர்களே! எல்லா இடங்களும் அமைதியாக இருக்கின்றன.''

''சரி. போய் கவனித்துக் கொள்.''

நோஸொரோகொவும் கர்னலுக்கு முன்னல் வந்து நின்ருர்.

''கர்னல் அவர்களே! ஒரு இடத்திலாவது கலவரம் நடப்பதாகத் தகவல் இல்லை. எல்லா இடங்களும் அமைதியாக இருக்கின்றன.''

''மிகவும் நன்று. நீ போகலாம்.''

நோஸொரோகொவ் திரும்பினுர். அவர் முதுகுப் பக்கம் தெரிந்தது. அங்கே ஒரு காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. ''மே தினம் வாழ்க! சர்வாதிகாரம் ஒழிக!''

''முட்டாள்!'' என்று அலறினுர் கோலொவா-கச்சனேவ். ''உன்னைக் கைது செய்கிறேன்! இராணுவச் சிறைக்குக் கொண்டு போ!'' என்ருர்.

போலீஸ்காரர்களும் ஒற்றர்களும் மூன்ருவது தடவையாக நகரத்துக்குள் ஓடினுர்கள். போலீசுக்காரர்கள் மூன்ருவது தடவையாக இயந்திரத் துப்பாக்கிகளைத் தயாராக வைத்தார்கள். மறுபடியும் பீரங்கியைச் சுட்டார்கள்.

அன்று நகரத்துக்கு வெளியே இருந்த தோப்பில் தொழிலாளர்கள் கூடினுர்கள். மே தினத்தை அமைதியாகக் கொண்டாடினுர்கள்.

சிறுவர்கள் போட்ட பந்தயம்

ஏப்ரல் மாத மத்தியில் பொலிஸாடொவ் என்ற பெயருடைய முதலாளியின் தொழிற்சாலைக்கு பெல்ஜியம் நாட்டிலிருந்து தொழிலாளர்கள் வந்திருந்தார்கள். பெல்ஜியத்திலிருந்து சில இயந்திரங்களை இறக்குமதி செய்திருந்தபடியால் தொழிற்சாலையில் அவற்றை நிறுவுவதற்காக அவர்கள் வந்திருந்தனர்.

மே தினத்துக்கு இன்னும் சில நாட்களே இருந்தன. அன்று வேலைக்குப் போவதில்லையென்று ருஷ்யத் தொழிலாளர்கள் முடிவு செய்திருந்தார்கள். பெல்ஜியத் தொழிலாளர்கள் என்ன செய்யப் போகிருர்கள் என்பதே பேச்சாக இருந்தது.

''அவர்கள் வேலைக்குப் போவார்கள்'' என்று சிலர் சொன்னுர்கள்.

''இல்லை. அவர்கள் போக மாட்டார்கள்'' என்று வேறு சிலர் மறுத்தார்கள்.

தொழிலாளர்களுடைய குழந்தைகளும் இதைப் பற்றியே தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். முதலில் சொல்லப்பட்ட அபிப்பிராயமே சரி என்று கோல்கா சுடோவ் கருதினன். இதற்கு மாருக, பெல்ஜியர்கள் வேலைக்குப் போக மாட்டார்கள் என்று லியோன்கா கோசிச்கின் உறுதியாக நம்பினன்.

''அவர்கள் உடலில் நம்முடைய இரத்தம் ஓடவில்லை. பெல்ஜியர்கள் ருஷ்யத் தொழிலாளர்களை ஆதரிக்க மாட்டார்கள்'' என்று கோல்கா கூறினன்.

''நீ பார்த்துக் கொண்டே இரு. அவர்கள் நம்மை ஆதரிப்பார்கள்'' என்று லியோன்கா வற்புறுத்தினன்.

இருவருக்கும் விவாதம் தொடர்ந்தது. கடைசியில் தோற்பவர் நெற்றியில் பத்துப் பிரம்படி போடுவதென்று முடிவு செய்யப்பட்டது.

மே தினத்துக்கு முந்திய இரவில் லியோன்கா மிகவும் கவலைப்பட்டான். கோல்கா சொன்னபடி நடந்து பெல்ஜியர்கள் வேலைக்குப் போய்விட்டால்..? கோல்கா அவனைக் காட்டிலும் பலமானவன். அவன் அடிக்கும் பொழுது அதிகம் வலிக்குமே. அன்றிரவில் கோல்காவும் சரியாகத் தூங்கவில்லை. லியோன்கா சொன்னபடி நடந்துவிட்டால்..? அவன் உடல் வலியைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனல் மற்ற பையன்களுக்கு முன்னல் அவமானமடைய விரும்பவில்லை. எப்பொழுதுமே தான் சொன்னதுதான் சரியாக இருக்க வேண்டும் என்று நினைப்பவன் அவன்.

மறு நாள் காலையில் எல்லாப் பையன்களும் தொழிற்சாலைக்கு வேகமாக ஓடினர்கள். கோல்கா அங்கே நின்று கொண்டிருந்தான். லியோன்காவும் வந்து விட்டான். அவன் சகோதரி செம்பட்டைத் தலை காத்காவும் வந்துவிட்டாள். அவர்களைத் தவிர ஒரு டஜன் சிறுவர்கள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். இந்தப் போட்டியின் முடிவு எப்படியிருக்கும் என்று அவர்கள் மத்தியில் அதிகமான அக்கறை ஏற்பட்டிருந்தது.

ஏழு மணிக்கு பெல்ஜியர்கள் தொழிற்சாலைக்கு வந்தார்கள். முதலில் ஐந்து பேர், பிறகு ஐந்து பேர், கடைசியில் மிச்சமிருந்த எல்லோரும் வந்து விட்டார்கள்.

சிறுவர்கள் கவனமாக எண்ணினர்கள்—இருபத்தொரு நபர்கள். அவர்கள் எல்லோருமே வந்துவிட்டார்கள்.

''நான் சொன்னேனல்லவா?'' என்று கோல்கா உற்சாகமாகக் கத்தினன்.

அந்தச் சிறுவர்கள் ஒரு கணவாய்ப் பகுதியில் இறங்கினார்கள். அங்கே காற்று அதிகமாக இருக்காது. கோல்கா சட்டைக் கையை மடித்து விட்டுக் கொண்டான்.

''ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு...'' என்று எண்ணிக் கொண்டே பிரம்பினால் அடித்தான்.

அவன் பலமாக அடித்தான். லியோன்காவின் முகம் அருவருப்பாக வளைந்தது. வலி தாங்க முடியாமல் உதட்டைக் கடித்தான்.

''ஐந்து, ஆறு...''

லியோன்கா பற்களைக் கடித்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

''ஏழு, எட்டு, ஒன்பது, பத்து.''

கோல்கா பத்தாவது தடவை அடித்து ஓய்ந்தான். அப்பொழுது லியோன்காவின் சகோதரி, செம்பட்டைத் தலை காத்கா வேகமாக ஓடி வந்தாள்.

''பெல்ஜியர்கள் போய்விட்டார்கள். அவர்கள் தொழிற்சாலையை விட்டு வெளியேறிவிட்டார்கள்'' என்று கத்திக் கொண்டு ஓடி வந்தாள்.

''என்ன சொல்கிறாய்? போய்விட்டார்களா?''

''ஆம். அவர்கள் போய்விட்டார்கள்.''

சிறுவர்கள் கணவாயிலிருந்து வெளியே வந்து பார்த்தார்கள். காத்கா சொன்னது உண்மைதான். பெல்ஜியர்கள் தொழிற்சாலையை விட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள். முதலில் ஐந்து பேர், பிறகு ஐந்து பேர், மிச்சமிருந்த எல்லோரும் அவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் கவனமாக எண்ணினார்கள்—இருபத்தொரு நபர்கள்.

லியோன்கா கைகளை உயர்த்திக் கொண்டு கோல்கா மீது பாய்ந்தான்.

''நான் சொன்னேனல்லவா, சொன்னேனல்லவா? நீ பிரம்படி வாங்கு. இப்பொழுது நான் கொடுக்கிறேன்''.

''முடியாது. அவர்கள் தொழிற்சாலைக்குத் திரும்புவார்கள்'' என்றான் கோல்கா.

அங்கே நின்று கொண்டிருந்த சிறுவர்கள் இந்தத் தடவை லியோன்காவை ஆதரித்தார்கள்.

''அவர்கள் வர மாட்டார்கள். அந்த சந்தர்ப்பம் சிறிதும் ஏற்படாது. அவர்கள் தொழிற்சாலைக்குள் போன பிறகு நம்முடைய தொழிலாளர்கள் வரவில்லை என்பதைப் பார்த்தார்கள். உடனே அவர்கள் வெளியேறிவிட்டார்கள்.''

''சரி. முகத்தைக் காட்டு'' லியோன்கா இரண்டாம் தடவை அதட்டினான்.

கோல்கா அவனை நோக்கித் திரும்பினான்; அடி வாங்கத் தயாராக நின்றான்...

இரண்டு சிறுவர்களும் வீங்கிய நெற்றியோடு வீட்டுக்குத் திரும்பினார்கள். தொழிலாளர்கள் குடியிருப்பில் தங்களுடைய பெற்றோர்களைச் சந்தித்தார்கள்.

''உன்னை அடித்தது யார்?'' என்று கோல்காவின் தகப்பனார் அவனிடம் கேட்டார்.

''அடப் பாவமே'' என்று லியோன்காவின் தகப்பனார் ஆச்சரியத்தோடு அவன் முகத்தைத் தடவிக் கொடுத்தார்.

''எல்லாம் அந்த பெல்ஜியர்களால் ஏற்பட்ட வினை'' என்று செம்பட்டைத் தலை காத்கா அவர்களுடைய குட்டை உடைத்தாள்.

''பெல்ஜியர்களால் ஏற்பட்டதா? என்ன சொல்கிறாய்?''

அந்தச் சிறுமி அவர்களிடம் நடந்தவற்றைச் சொன்னாள்.

தொழிலாளர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''அவர்கள் உடலில் ஓடுவது நம்முடைய இரத்தம் அல்ல என்று நினைக்கிறீர்களா? அப்படி நினைப்பது தவறு. நம் எல்லோருடைய உடலிலும் பாட்டாளி வர்க்கத்தின் இரத்தம் ஓடுகிறது. அது தான் முக்கியம்.''

சிவப்புச் சட்டை

மே தினத்துக்குப் புதுச் சட்டை வாங்கித் தருவதாக நிக்கோல்காவிடம் அவன் தகப்பனார் சொல்லியிருந்தார்.

சில சமயங்களில் மாலை நேரத்தில் நிக்கோல்காவின் அப்பாவும் அம்மாவும் அவன் சகோதரி கிளாவாவும் அவனுக்கு எந்த மாதிரியான சட்டை வாங்குவதென்று பேசிக் கொண்டிருப்பார்கள்.

''வெள்ளை நிறத்தில் சுற்றுப் பட்டை உள்ள சட்டையாகப் பார்த்து வாங்குங்கள். கால்சட்டைக்கு மேல் போட்டுக் கொள்வதற்கு அது தான் நன்றாக இருக்கும்'' என்று ஆலோசனை கூறினாள் கிளாவா.

''அது சீக்கிரமாக அழுக்காகிவிடும். நீல நிறச் சட்டை தான் நல்லது'' என்று அவன் தாயார் சொன்னாள்.

''நீல நிறச் சட்டை வேண்டாம். செம்பரத்திப் பூவைப் போல பளபளப்பான சிகப்பு நிறத்தில் அவனுக்குச் சட்டை வாங்குவோம்'' என்று அவன் தகப்பனார் கூறினார்.

நிக்கோல்காவின் இருதயம் படபடவென்று துடித்தது. அவன் கண்கள் ஆர்வத்தோடு பிரகாசித்தன.

''நிக்கோல்கா! உனக்கு எது பிடிக்குமென்று சொல்'' என்று அவன் தகப்பனார் அவனிடம் கேட்டார்.

''சட்டையில் பைகள் இருக்க வேண்டும். சிகப்பு நிறம் தேவலை'' என்று நிக்கோல்கா பதிலளித்தான்.

அப்பா வாங்கிக் கொடுக்கப் போகின்ற சட்டையைப் பற்றி அவன் தன்னுடைய நண்பர்களிடமும் தனக்குத் தெரிந்த எல்லோரிடமும் பெருமையாகச் சொன்னான். அவனுக்கு எந்த மாதிரிச் சட்டை வாங்க வேண்டுமென்று குழந்தைகள் கூட விவாதம் செய்யத் தொடங்கினார்கள்.

''உனக்குக் கப்பல் மாலுமியின் சட்டை நன்றாக இருக்கும்'' என்று ஸோய்கா நொஸ்கோவா கூறினாள்.

''கழுத்துப் பட்டையில் சித்திர வேலைப்பாடுள்ள சட்டையாகப் பார்த்து எடு'' என்று பாஷ்கா ஸொல்டாடொவ் அறிவுரை சொன்னான்.

''மார்பில் பொத்தான்கள் இருப்பதாகப் பார்'' என்று குஸ்யா வோடிச்கின் சொன்னான்.

நிக்கோல்கா தொழிற்சாலைக் குடியிருப்பு முழுவதும் வேகமாக ஓடி தனக்கு எதிரே வந்தவர்களிடமெல்லாம் சட்டையைப் பற்றிச் சொன்னான்.

ஸ்டெப்பான் ஷிரோக்கி என்ற பெயருடைய தொழிலாளியைச் சந்தித்தான்.

''என் அப்பா எனக்குப் புதுச் சட்டை வாங்கப் போகிறார்!''

''அப்படியா?''

''ஆமாம்.''

டிஹொான் கிரோமொவ் என்ற உலோகத் தொழிலாளியைப் பார்த்தான்.

''மே தினத்துக்கு எனக்குப் புதுச் சட்டை வாங்கித் தருவதாக என் அப்பா சொல்லியிருக்கிறார். தெரியுமா?'' என்றான்.

''தேவலையே. உன் தகப்பனார் ரொம்ப நல்லவர் என்று நினைக்கிறேன்.''

''பின்னே? சந்தேகம் வேண்டுமா? அவர் மிகவும் நல்லவர்'' நிக்கோல்கா ஆனந்தமாகச் சிரித்தான்.

கடைசல் இயந்திரத்தை ஓட்டும் காஷ்கின் என்ற வயதான தொழிலாளியைச் சந்தித்தான்.

''மே தினத்துக்கு அப்பா எனக்கு புதுச் சட்டை வாங்கித் தரப் போகிறார்.''

''பிரமாதம்!''

''புதுச் சட்டை. பைகள், பொத்தான்கள் எல்லாம் இருக்கும். செம்பரத்திப் பூவைப் போல சிவப்பு'' என்று அந்தக் குழந்தை பெருமையாகச் சொல்லிக் கொண்டான்.

நிக்கோல்காவுக்குச் சட்டை வாங்கித் தரப் போகின்ற செய்தி தெரியாதவர் அந்தக் குடியிருப்பில் ஒருவர் கூட இல்லை. சில தினங்களுக்குள் அந்தச் செய்தி அப்படிப் பரவி விட்டது.

நிக்கோல்காவின் தகப்பனர் ஏதோ ஒரு வேலையாக இவானவோ நகரத்துக்குப் போக வேண்டியிருந்தது.

''நிக்கோல்கா! அம்மா சொல்கிறபடி நடந்து கொள்ள வேண்டும். வரும்பொழுது உனக்கு சட்டை வாங்கிக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டார்.

அவர் ஊருக்குப் போனர்; ஆனல் திரும்பவில்லை. போன இடத்தில் ஆபத்தில் சிக்கினர். இவானவோவில் போலீசுக் காரர்கள் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தார் கள்.

நிக்கோல்காவின் வீட்டில் மாற்றங்கள் ஏற்பட்டன. அங்கே வறுமை தாண்டவமாடியது. வீடு சூனியமாகிவிட்டது போலத் தோன்றியது.

''அம்மா, அம்மா! அப்பா ஏன் ஊரிலிருந்து திரும்ப வில்லை?'' என்று நிக்கோல்கா அடிக்கடி கேட்டான்.

அவன் தாயார் அவனை அணைத்துக் கொண்டாள்; ஆனல் பதில் சொல்லவில்லை. அவன் தகப்பனரை நினைத்து அழுதான். திரும்பத் திரும்ப அழுதான்.

''அப்பா சீக்கிரமாக வருவார். அவர் நம்மை மறக்க மாட்டார்'' என்று அவன் சகோதரி அவனை சமாதானப் படுத்தினள்.

மே தினத்துக்குச் சில தினங்களுக்கு முன்பு தொழி லாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அவர்கள் மே தினத்தைக் கொண்டாடுவதைப் பற்றியும் பரஸ்பர உதவி, ஒருமைப் பாட்டைப் பற்றியும் பேசினர்கள். கிழவர் காஷ்கின், உலோகத் தொழிலாளி டிஹொன் கிரோமொவ், ஸ்டெப்பான் ஷிரோக்கி, இன்னும் பலர் அங்கே வந்திருந்தார்கள். அவர் கள் நிக்கோல்காவின் தகப்பனரைப் பற்றிப் பேசினர்கள். அவர் மே தினத்துக்குத் தன் மகனுக்குச் சட்டை வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்ததை நினைத்துக் கொண்டார்கள்

''நாம் சட்டை வாங்கிக் கொடுப்போம்'' என்று முடிவு செய்தார்கள்.

மே தினம் வந்தது. நிக்கோல்கா தூங்கியெழுந்தான். அவன் கண்களை அவனல் நம்ப முடியவில்லை. பக்கத்தில் ஒரு நாற்காலியில் ஒரு சட்டை வைக்கப்பட்டிருந்தது. புதுச் சட்டை! பைகள்! மார்பில் பொத்தான்கள்! சிகப்பு நிறம்!

''அம்மா அப்பா வந்துவிட்டார்'' என்று நிக்கோல்கா கத்தினன்.

அவன் தாயார் அவனருகே வந்தாள். அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

''இல்லை. அப்பா வரவில்லை. அவர் வருவதற்கு ரொம்ப நாளாகும்'' என்று அவள் பதிலளித்தாள்.

நிக்கோல்கா தாயாரை உற்றுப் பார்த்தான். அப்படி யானால் சட்டை எப்படி வந்தது என்று யோசித்தான்.

''எனக்குப் புரிகிறது, எனக்குப் புரிகிறது. அப்பா அனுப்பியிருக்கிறார்கள்'' என்று கத்தினான்.

அவன் தாயார் அவனை உற்றுப் பார்த்தாள். யார் சட்டை வாங்கிக் கொடுத்தார்கள் என்ற உண்மையைச் சொல்லலாமா, வேண்டாமா என்று யோசித்தாள். அவன் சிறு குழந்தை. அவனுக்குப் புரியாது. தொழிலாளர்கள் ஒற்றுமையின் அர்த்தத்தை அவனால் புரிந்து கொள்ள முடியுமா? ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்தாள்.

நிக்கோல்கா புதுச் சட்டையை அணிந்து கொண்டான். வேகமாகத் தெருவில் ஓடினான். அவன் கண்ணில் பட்டவர்களிடமெல்லாம் தன்னுடைய புதுச் சட்டையைப் பற்றிப் பெருமையாகப் பேசத் தொடங்கினான். இளம் தொழிலாளி ஸ்டெப்பான் ஷிரோக்கியை அவன் சந்தித்தான்.

''அப்பா எனக்குப் புதுச் சட்டை அனுப்பியிருக்கிறார்!''

''ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்றான் அந்த இளம் தொழிலாளி.

''அவர் அனுப்பியிருக்கிறார், மறந்து விடவில்லை'' என்று சொல்லிக் கொண்டே நிக்கோல்கா தெருவில் ஓடினான். உலோகத் தொழிலாளி டிஹொன் கிரோமொவை அவன் சந்தித்தான்.

''பார்த்தீர்களா, அப்பா அனுப்பிய சட்டையைப் போட்டிருக்கிறேன்.''

''அட, ஆச்சரியமாக இருக்கிறதே. உன் தகப்பனார் மறக்கவில்லையே. அவர் மிகவும் நல்லவர் போல இருக்கிறது'' என்று சிரித்துக் கொண்டே கிரோமொவ் பேசினார்.

''என் அப்பா நல்லவர்; நம்பிக்கையானவர்'' என்று சொல்லிச் சிரித்தான் நிக்கோல்கா.

கடைசல் இயந்திரத்தை ஓட்டும் கிழவர் காஷ்கினை அவன் விரட்டிப் பிடித்தான்.

''என் அப்பா அனுப்பிய சட்டையைப் பாருங்கள்'' என்றான்.

''அப்படியா? உண்மைதான். நன்றாக இருக்கிறதே'' என்றார் காஷ்கின்.

''புதுச் சட்டை. புதுசு.'' நிக்கோல்காவினால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ''பைகள் இருக்க

வேண்டும். பொத்தான்கள் இருக்க வேண்டும். நல்ல சிகப்பு நிறத்தில் இருக்க வேண்டும் என்று நான் சொல்லியிருந்தேன். அவர் ஒன்றையும் மறக்கவில்லை.''

காஷ்கின் நிக்கோல்காவைக் கட்டியணைத்து அவன் தலையை அன்போடு தடவிக் கொடுத்தார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

நிக்கோல்கா தலையை உயர்த்திப் பார்த்தான்.

''நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?''

''சும்மாதான்'' என்று அந்தக் கிழவர் வேகமாகச் சொன்னார். ''நீ போய் விளையாடு. இன்று மே தினம்... தொழிலாளர் கொண்டாட்ட நாள்.'''

செங்கொடி

அந்த வருடத்தில் வசந்தகாலம் தாமதமாகவே வந்தது. நதியில் தண்ணீர் கரைபுரண்டு ஓடியது; ஆனாலும் பனிக் கட்டி உருகவில்லை. கடைசியில் மே தினத்துக்கு முந்திய நாள் பனி உருகியது. அதைப் பார்ப்பதற்காக அதிகாலையிலிருந்தே மக்கள் கரையில் கூடி நின்றார்கள்.

மாபெரும் பனிப்பாறைகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாக மிதந்து வந்தன. அவை மோதி இடித்துக் கொண்டன; முனைகளைத் திருப்பிக் கொண்டன. தண்ணீரில் அமுங்கி நீரைப் பீச்சியடித்து விட்டு மறுபடியும் தண்ணீரில் நிலையாக மிதந்தன.

கரையில் நின்று கொண்டிருந்தவர்கள் இந்தக் காட்சியைக் கண்டு குதூகலித்தனர்.

நகரத்தின் போலீசுப் படையைச் சேர்ந்த ஒஹாப்கினுக்கு நதியின் கரையில் காவல் செய்யும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது. கரையில் இங்குமங்கும் நடந்துகொண்டிருந்த பொழுது அங்கே திரண்டு நின்ற கூட்டத்தைப் பார்த்தான். ''இவர்கள் ஏதாவது தொல்லை கொடுக்காமல் இருக்க வேண்டும். இந்தத் தொழிலாளர்கள் கலவரம் செய்தால்?.. இன்று மே தினம். என்ன செய்வார்களோ, யாருக்குத் தெரியும்?'' என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

அவன் இப்படி சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு பெரிய பனிப்பாறை நதியின் வளைவைக் கடந்து மிதந்து வந்தது. ஒஹார்கின் தன்னுடைய கண்களை நம்ப முடியவில்லை. அந்த பனிப்பாறையின் மீது செங்கொடி பறந்து கொண்டிருந்தது.

அங்கே நின்று கொண்டிருந்த கூட்டம் வேடிக்கை பார்ப்பதற்காக நதியின் கரையை நெருங்கியது.

''ஹுர்ரே!'' ஒஹாப்கினுடைய முதுகுக்குப் பின்னல் அவர்கள் முழக்கம் கேட்டது. ''மே தினம் வாழ்க!''

போலீசுக்காரன் நிதானத்தை இழந்தான், வேகமாக விசிலே எடுத்தான். முதலில் கூட்டத்தை நோக்கியும் பிறகு பனிப்பாறையைப் பார்த்தும் விசிலே ஊதினுன். மக்கள் அவனேப் பார்த்து ஏளனமாகக் கூச்சலிட்டார்கள். அவர்கள் கரையிலேயே கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள்.

''கலேந்துபோ! பின்னல் போ! கூட்டம் போடாதே'' ஒஹாப்கின் தன்னல் முடிந்தவரை பலமாகக் கத்தினுன்.

இதற்கிடையில் பனிப்பாறை மென்மேலும் கரையை நெருங்கிக் கொண்டிருந்தது. அதுவே தன்னுடைய நோக்கம் என்பதைப் போல நேரடியாகக் கரையை நெருங்கியது. அதில் ஊன்றப்பட்டிருந்த செங்கொடி காற்றில் அசைந்தாடியது.

போலீசுக்காரன் என்ன செய்வதென்று தெரியாமல் சுற்றிச் சுற்றி வந்தான். அவன் நின்ருன். வேகமாக மூச்சை இழுத்தான். மறுபடியும் விசிலே ஊதத் தொடங்கினுன்.

விசிலே ஊதினுன். ஆனல் அதற்கு முன்பே பனிப்பாறை கரை மீது முட்டிக் கொண்டு நின்றது. அது ஒஹாப்கினே ஏளனம் செய்வது போல பிடிவாதத்தோடு அவனுக்கு எதிரில் நின்று கொண்டிருந்தது.

இந்தப் போலீசுக்காரன் கலங்கினுன். அவன் உடல் நடுங்கியது. ''இந்தப் பனிப்பாறையின் மீது குதித்து அந்த செங்கொடியைப் பிடுங்கி, இந்த விவகாரத்தை முடித்து விட்டால் என்ன?'' என்று நினேத்தான்.

''குதி!'' என்று அந்தக் கூட்டத்திலிருந்து யாரோ ஒருவர் சொன்னர்.

அவன் உடனே பனிப்பாறை மீது குதித்தான். அவன் குதிப்பதற்காகவே காத்துக் கொண்டிருந்தது போல பனிப்பாறை கரையை விட்டு விலகிப் போயிற்று.

''உதவி! என்னேக் காப்பாற்றுங்கள்!'' என்று அவன் புலம்பினுன்.

ஒஹாப்கின் அந்தப் பனிப்பாறையின் மீது இங்குமங்கும் ஓடினுன். இப்பொழுது அவன் விசிலேயும் செங்கொடியையும் மறந்துவிட்டான். கைகளே ஆட்டிக் கொண்டு என்னேக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சியபொழுது அவன் தொப்பியை அநேகமாகக் காணவில்லே. ஆனல் ஒரு போலீசுக்காரனேக் காப்பாற்றுவதற்காக உறைந்திருக்கும் தண்ணீரில் குதிப்பதற்கு அங்கே யாரும் தயாராக இல்லே.

''காஸ்பியன் கடலைக் கேட்டதாகச் சொல்லுங்கள்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

''உங்கள் பயணம் இனிதாக இருக்கட்டும்!''

''மே தின வாழ்த்துக்கள்!''

பனிப்பாறை மற்றொரு பனிப்பாறையோடு மோதியது. அப்பொழுது அந்தப் போலீசுக்காரன் தடுமாறித் தண்ணீருக்குள் விழுந்து மூழ்கினான்.

''உ-த-வி'' என்று ஒஹாப்கின் ஆற்றின் அடியில் கல்லைப் போல மூழ்குவதற்கு முன்பு கத்தினான்.

அந்தக் கூட்டத்திலிருந்த இளைஞர்கள் குழு முன்னால் வந்தது. அவர்கள் தண்ணீரில் குதித்தார்கள். பயந்து மூழ்கிப் போன ஒஹாப்கினைப் பிடித்துக் கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தார்கள்.

அவன் கரையில் நடுக்கிக் கொண்டே நின்றான். அவன் உடல் பலவிதமான வெள்ளை, நீல நிறங்களின் சாயல்களில் மாறியது. அவன் சிலுவைக் குறியிட்டுக் கொண்டான். அங்கே நின்று கொண்டிருந்தவர்கள் எல்லோரும் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

இதற்கிடையில் அந்தப் பனிப்பாறை நதியின் நடுப் பகுதியை அடைந்தது. அங்கிருந்து திரும்பி ஆற்றோடு சேர்ந்து கீழ்ப்பக்கமாகச் சென்றது. வசந்த காலக் காற்றில் செங்கொடி அசைந்து விளையாடியது.

''மே தினம் வாழ்க!'' என்ற முழக்கம் கரையிலிருந்து கேட்டது.

உழைப்பின் செங்கொடி

மே தினத்தைக் கூட்டாகக் கொண்டாடுவதென்று மூன்று தொழிற்சாலைகளில் முடிவு செய்யப்பட்டிருந்தது. நகோர்னயா, லிட்டேய்னயா, மார்ஷெவயா இன்னும் மற்ற தெருக்களிலிருந்து வந்த தொழிலாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து நகரத்தின் மத்தியப் பகுதியை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

அன்று காலையில் கோஷ்காவின் தகப்பனார் தன்னுடைய தொழிற்சாலையைச் சேர்ந்த மற்ற தொழிலாளர்களோடு சேர்ந்து கொள்வதற்காகப் புறப்பட்டார்.

''நானும் உங்களோடு வருகிறேன்'' என்று கோஷ்கா அவரை நச்சரித்தான்.

''நீ சின்னப் பையனாக இருக்கிறாய். நீ வீட்டிலேயே இரு'' என்று அவன் தகப்பனார் சிரித்தபடியே சொன்னார்.

''நானும் வருவேன்'' என்று கோஷ்கா தொடர்ந்து வற்புறுத்தினன். ''நேற்று நான் தயாரித்த கொடியைப் பாருங்கள்'' என்று சொல்லிவிட்டு ஒரு சிறு செங்கொடியை எடுத்துத் தகப்பனரிடம் காட்டினன்.

''நன்ருக இருக்கிறது'' என்று அவன் தகப்பனர் ஒத்துக் கொண்டார்; எனினும் தன் மகனே வீட்டிலேயே விட்டு விட்டுப் புறப்பட்டார்.

கோஷ்கா வீட்டில் தன்னுடைய அறையைச் சுற்றிச் சுற்றி வந்தான். பிறகு கொடியை எடுத்து மார்போடணைத்துக் கொண்டு கதவை நோக்கி நடந்தான்.

''எங்கே போகிருய்?'' என்று அவன் தாயார் கேட்டாள். அவள் குரலில் கவலேயும் எச்சரிக்கையும் இருந்தது.

''வான்கா செரேகினேப் பார்க்கப் போகிறேன்.''

அவன் வீட்டுக்கு வெளியே ஓடினன். முதலில் வான்காவின் வீட்டுக்குப் போவது போல நடந்து போய்விட்டுப் பிறகு நகோர்னயா இருக்கும் திசையை நோக்கி சிட்டெனப் பறந்தான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது அங்கே ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. தொழிலாளர்கள் ஊர்வலம் அந்தப் பாதையில் புறப்பட்டுவிட்டது. ஊர்வலத்துக்கு முன்னல், தொழிலாளர்களின் தலேக்கு மேலே ஒரு செங்கொடி பறந்து கொண்டிருந்தது.

ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த தொழிலாளர்கள் தன்னேக் கடக்கும் வரையிலும் கோஷ்கா நின்று கொண்டிருந்தான். பிறகு ஊர்வலத்தின் கடைசியில் சேர்ந்து கொண்டான். அவன் தன்னுடைய சிகப்புக் கொடியை வெளியே எடுத்தவுடனே ஒரு குரல் கேட்டது.

''வீட்டுக்குப் போ! ஒதுங்கு, அம்மாவிடம் போ!''

''நான் உங்களோடுதான் இருப்பேன். நானும் மே தினத்தைக் கொண்டாட வேண்டும்.''

''வீட்டுக்கு இந்த விஞடியே ஓடிப் போ. ஓடு!''

ஊர்வலத்தை விட்டு விலகுவதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லே.

அவன் அங்கே நின்று கொண்டு சிறிது நேரம் யோசித்தான். பிறகு லிட்டேய்னயாவை நோக்கி ஓடினன். அவன் அங்கே போய்ச் சேர்ந்த பொழுது இன்னெரு கூட்டம் திரண்டிருந்தது. அங்கும் தொழிலாளர்களின் ஊர்வலம் பாதை வழியாகப் போய்க் கொண்டிருந்தது. அவர்கள் தலேக்கு மேலே ஒரு செங்கொடி பறந்து கொண்டிருந்தது.

கோஷ்கா ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டான். அவன் செங்கொடியை வெளியே எடுக்க முயன்றபொழுது அவனே அதட்டுகிற சத்தம் கேட்டது.

''இங்கே என்ன செய்கிருய்?''

''நான்...''

''இடைவாரை உபயோகித்தால் தான் உனக்குப் புத்தி வரும். வீட்டுக்கு ஓடு.''

கோஷ்கா ஊர்வலத்தோடு போகாமல் நின்றுவிட்டான். அவன் ஒரு கண நேரம் யோசித்தான். பிறகு மார்ஷெவயாவை நோக்கி ஓடினன்.

அங்கும் ஒரு கூட்டம் கூடியிருந்தது. தொழிலாளர்கள் ஊர்வலம் தெருவழியே போய்க் கொண்டிருந்தது; அவர்கள் தலைக்கு மேலே செங்கொடி பறந்து கொண்டிருந்தது.

கோஷ்கா தொழிலாளர்களிடம் சென்று தந்திரமாகப் பேசினன்.

''என் அப்பாவைப் பார்க்க வேண்டும். என் தாயார் அனுப்பியிருக்கிருள். அவர் முன்னல் இருக்கிருர்.''

தொழிலாளர்கள் விலகிக் கொண்டு அவன் முன்னல் செல்வதற்கு வழிவிட்டார்கள். அவன் இப்பொழுது முதல் வரிசைக்கே போய்விட்டான். அவன் ஆழமாக மூச்சை இழுத்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். வலது பக்கத்தில் கொஞ்சம் முன்னல் அவன் தகப்பனர் நடந்து போய்க் கொண்டிருந்தார். அவர் செங்கொடியைத் தூக்கிக் கொண்டு முன்னல் போய்க் கொண்டிருந்தார்.

கோஷ்கா பின்வரிசைக்கு நழுவிப் போய் விடலாம் என்று நினைத்தான். ஆனல் காலதாமதமாகி விட்டது.

''ஏய்! இங்கே வா!'' என்று அவன் தகப்பனர் கையை ஆட்டினர்.

கோஷ்கா அவர் சொல்படி முன்னே சென்ருன்.

''உனக்கு என்ன வந்தது? உன் அப்பா, அம்மா சொல்வதைக் கேட்க மாட்டேன் என்கிருயே!ஏன்?''

''எல்லோரையும் போலத்தானே நானும். ஊர்வலத்தில் போக வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது. இதைத் தயாரித்திருக்கிறேன், பார்த்தீர்களா?'' கோஷ்கா தன்னுடைய வயிற்றிலிருந்து ஒரு சிறிய செங்கொடியை வெளியே எடுத்தான்.

தகப்பனர் மகனைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து சிரித்தார். மற்ற தொழிலாளர்களும் சிரிக்கத் தொடங்கினர்கள்.

''அதைப் பார்! கொடி தயாரித்திருக்கிருன்''.

''உண்மையான கொடி.''

''அதிலும் சிகப்புக் கொடி.''

தகப்பனர் தன் கையிலிருந்த பெரிய சிகப்புக் கொடியைப் பார்த்துவிட்டு மகன் கையில் வைத்துக் கொண்

டிருந்த சிறு சிகப்புக் கொடியைப் பார்த்தார். மறுபடியும் சிரித்துக் கொண்டு அவன் தலையில் தட்டிக் கொடுத்தார்.

''சரி. நீ வீட்டுக்குப் போய் அம்மாவோடு இரு'' என்றார்.

''நான்...''

கோஷ்கா ஏதோ சொல்ல முயற்சித்தான். ஆனால் அதற்குள் பக்கத்துத் தெருவிலிருந்து துப்பாக்கிகளோடு படை வீரர்கள் வந்தார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களின் பாதையை மறித்து எதிரே நின்று கொண்டார்கள்.

''நில்!'' என்று அந்தப் படைப் பிரிவின் அதிகாரி தொழிலாளர்களுக்கு உத்தரவிட்டார். ''நில்!''

ஆர்ப்பாட்டக்காரர்கள் வேகத்தைக் குறைத்து மெதுவாக நடந்து பிறகு நின்றுவிட்டனர்.

''கலைந்து போ!''

தொழிலாளர்கள் கோஷ்காவின் தகப்பனரையும் அவர் கையிலிருந்த செங்கொடியையும் சூழ்ந்து நெருக்கிக் கொண்டு நின்றார்கள்.

''துப்பாக்கியை நீட்டுங்கள்'' என்று அதிகாரி உத்தரவிட்டார்.

படைவீரர்கள் துப்பாக்கிகளை நேராகப் பிடித்தார்கள்.

''மகனே!..'' என்று கோஷ்காவின் தகப்பனர் மெல்லிய குரலில் பேசினர். ''மகனே! ஓடிப் போய்விடு.''

கோஷ்கா அந்த இடத்தை விட்டுப் போகவில்லை.

''ஏண்டா! நான் சொல்கிறேன், இன்னும் நிற்கிறயே. ஓடு!'' என்று அவன் தகப்பனர் ஆத்திரமாகக் கத்தினர். கோஷ்காவை வெறியோடு பிடித்துத் தள்ளினர்.

கோஷ்கா அந்த ஊர்வலத்திலிருந்து வெளியேறி நடைபாதைக்கு ஓடினன். அங்கே என்ன நடக்கிறதென்று புரியாத கலவரத்தோடு அந்தச் சிறுவன் குழம்பிப் போய் கொண்டிருந்தான். படைவீரர்களையும் தொழிலாளர்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த அதிகாரி கையைத் தூக்குவதையும் படைவீரர்கள் துப்பாக்கிகளைத் தோள்களில் வைத்துக் குறி பார்ப்பதையும் கவனித்தான். இன்னும் ஒரு வினடியில் அவர்கள் சுடப் போகிறர்கள்.

முன்னே செல்வோம்! துணிவோடு
முன்னே செல்வோம்! இளைஞர்களே!
எதிரிகள் நம்மை அழிக்க நினைத்தால்
வீரத்தோடு சீறியெழுவோம்!
சுதந்திர உலகத்தை நோக்கி
நமது பாதையில் முன்னேறுவோம்!

கோஷ்காவின் தகப்பனார் உற்சாகமாகப் பாடினார். அவர் செங்கொடியை உயர்த்தியதும் தொழிலாளர்கள் ஒரே அணியாக முன்னால் நடந்தார்கள். அங்கே இருப்பது ஒரு நபர்தான் என்று சொல்லக்கூடிய வகையில் அவர்கள் ஒரே மாதிரியாகப் படைவீரர்களை நோக்கி நடந்தார்கள்.

''சுடு!'' என்று அதிகாரி உத்தரவிட்டார்.

''அப்பா! அப்பா!'' என்று கத்திக் கொண்டு கோஷ்கா ஆர்ப்பாட்டக்காரர்கள் வரிசைக்குள் பாய்ந்தான். தன் தகப்பனாரை நோக்கி ஓடி அவருடைய கால்சட்டைக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டான். ''அப்பா! அப்பா!''

அவன் தகப்பனார் கீழே குனிந்து கோஷ்காவைத் தூக்கித் தன்னுடைய தோள் மீது உட்கார்த்திக் கொண்டார்.

அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். படைவீரர்கள் துப்பாக்கிகளைக் கீழே இறக்கி, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வழி விட்டு விலகிக் கொண்டிருந்தார்கள்.

''சுடு! சுடு!'' என்று அதிகாரி கெஞ்சினார்.

ஆனால் அவர் சொல்வதை யாரும் கேட்கவில்லை.

கோஷ்கா சிரித்துக் கொண்டே படைவீரர்களுக்கு வாழ்த்துக் கூறுவது போல அவர்களை நோக்கித் தன்னுடைய சின்னச் செங்கொடியை ஆட்டினான்.

தொழிலாளர்கள் மார்ஷெவயா தெருவின் வழியே ஊர்வலமாகப் போய் நாகோர்னய தெருவில் வந்து கொண்டிருந்தவர்களைச் சந்தித்து லிட்டேய்னயா தெருவில் வந்து கொண்டிருந்த தொழிலாளர்களோடு சேர்ந்து கொண்டனர். மற்ற தெருக்களிலிருந்தும் நகரச் சதுக்கத்திலிருந்தும் வந்தவர்களோடு கலந்தனர். அது இப்பொழுது மாபெரும் கூட்டமாகப் பெருகியிருந்தது. மே மாதக் காற்றில் டஜன் கணக்கில் செங்கொடிகள் அசைந்தாடின. ஒரு பாடல் நகரத்தின் மீது மிதந்தது:

அடிமைத் தளைகளை நொறுக்குவோம்!
நம்முடைய பலமான கரங்களால்
கொடியவர் சூழ்ச்சிகளை ஒழிப்போம்!
பறக்கட்டும்! பூமியின் மீது பறக்கட்டும்!
உழைப்பின் செங்கொடி பறக்கட்டும்!

1

2

3

4

புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் ஜாரின் ஆட்சியில் தொழிலாளர்கள், விவசாயிகளுடைய துன்பம் நிறைந்த வாழ்க்கை. 1. விவசாயிகளின் குடிசைகள். 2. சுர்கா நதியில் படகை இழுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் (சரக்குகளைக் கொண்டு வந்திருக்கும் படகை இழுக்கிறார்கள்). 3. விவசாயிகள் உபயோகித்த சூட்டடிக்கும் கம்பு. 4. நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளி.

5. புடீலவ் தொழிற் சாலேயில் வேலே நிறுத்தம், ஜனவரி 1905. 6. அமைதியாக ஊர் வலம் வந்த தொழிலாளர்கள் மீது துருப்புகள் துப்பாக்கியால் சுடுகின்றன, ஜனவரி 9, 1905. தொழிலாளர்கள் அந்த தினத்தை ''இரத்த ஞாயிறு'' என்று குறிப்பிட்டனர் (அந்த சம்பவங்களைப் பற்றிய திரைப்படக் காட்சிகள்).

7. கஸாக்குகள் ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களைக் கலைக்கின்றனர் வ. ஸெரோவ் வரைந்த ஓவியம்).

5

6

7

8

-Пролетарiи всѣхъ странъ соединяйтесь -

Въ Петербургѣ сотни убитыхъ, тысячи раненыхъ

9

8, 9. 1905ல் வெளியிடப்பட்ட புரட்சி இயக்கப் பிரசுரங்கள். ரு. ச. ஜ. தொ. கட்சியின் பீட்டர்ஸ்பர்க் கமிட்டி, ''இரத்த ஞாயிற்றுக் கிழமைக்கு'' முன்பு வெளியிட்ட பிரசுரம் (ஜனவரி, 1905). ஜார் நன்மை செய்வார் என்று எதிர்பார்ப்பது அர்த்த மற்றது என்று தொழிலாளர்களை எச்சரித்து, ஆயுதங்களைத் தூக்குவதன் மூலமாகவே விடுதலை பெற முடியும் என்று அறைகூவல் விடுத்த பிரசுரம். இரண்டாவது படத்தில்ரு. ச. ஜ. தொ. கட்சியின் மாஸ்கோ கமிட்டி ''இரத்த ஞாயிற்றுக்கிழமை'' யன்று நடைபெற்ற சம்பவங்களுக்காக ஜாரிஸ்ட் கொலைகாரர்களைக் கண்டனம் செய்கிறது (ஜனவரி, 1905).

10. ''இஸ்க்ரா'' பத்திரிகையின் முதல் இதழ் டிசம்பர் 1900. 11. செயீன்ட் பீட் டர்ஸ்பர்கில் நேவா ஆற்றங்கரையில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம். அக்டோபர், 1905.

РОССІЙСКАЯ СОЦІАЛЬ-ДЕМОКРАТИЧЕСКАЯ РАБОЧАЯ ПАРТІЯ

ИСКРА

№ 1 №1

10

11

12

12. ''பிரகடனங்களை ஒட்டுதல்'' (கொலாச்கோவ் வரைந்த ஓவியம்). அரசியல் பிரகடனங்களை வெளியிட்டு அவற்றை முக்கியமான இடங்களில் ஒட்டுவது அன்று தொழிலாளர்கள் கடைப் பிடித்த போராட்ட முறைகளில் ஒன்ருகும்.

14



13

15



16

13. பஞ்சாலை நகரமான இவானவோ-வொஸ்னெசேன்ஸ்க். இது புரட்சி இயக்கத்தின் கேந்திரமான நகரங்களில் ஒன்றாகும். அங்கே நெசவாளர்கள் போராட்டத்தைச் சித்தரிக்கும் ஓவியம் (ஜி. நியாழெவ்ஸ்கி, எஃப். குலாகின், வி. கோவரோவ் வரைந்தது). *14.* ருஷ்ய எதேச்சாதிகாரம் தொழிலாளர்களைக் குரூரமாக ஒடுக்கியது. *1912*ல் ஸைபீரியாவில் லேனா தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் ஜாரின் துருப்புகளால் கொன்று குவிக்கப்பட்டனர். *15.* ஆயிரக்கணக்கான புரட்சிக்காரர்கள் சிறையிலடைக்கப்பட்டனர்; நாடு கடத்தப்பட்டனர். *16.* புரட்சிக்காரர்ககளின் கைகளிலும் கால்களிலும் கட்டப்பட்ட இரும்புச் சங்கிலிகள்.

17

17. சுதந்திரத்துக்கும் நீதிக்கும் மக்கள் நடத்திய போராட்டத்தை அடக்குமுறைகளால் நசுக்க முடியவில்லை. புரட்சி இயக்கம் ருஷ்யாவில் மாபெரும் வளர்ச்சியடைந்தது. (''எக்காடெரிஞேஸ்லாவில் மக்களின் ஆர்ப்பாட்டம்'' என்ற தலைப்பில் எம். கிளியோன்ஸ்கி வரைந்த ஓவியம்).

ஜாராட்சிக்குப் பிறகு

ருஷ்யக் குடியரசின் குடிமகன்

பெத்ரோகிராடில் லிட்டேய்னி வீதியில் ஒரு உயரமான கட்டிடத்தின் அடிப்பகுதியில் சிறுவன் டனீல்கா வசித்து வந்தான். அவன் அங்கேதான் பிறந்தான். அங்கேதான் வளர்ந்தான். எனவே அந்தக் கட்டிடத்தில் இருப்பவர்கள் எல்லோரையுமே பார்த்த மாத்திரத்தில் அவனுக்கு அடையாளம் தெரியும்.

முதல் மாடியில் கோமகள் ஷெர்பாட்ஸ்காயா வசித்தாள். இரண்டாவது மாடியில் இளவரசர் பிரொகோவ்-பிஷாயெவ் இருந்தார். மூன்ருவது மாடியில் அரசாங்கத்தில் முக்கியமான அந்தஸ்துள்ள அதிகாரியான கொரோகொவ் குடியிருந்தார். உச்சியிலிருந்த அறைகளில் இன்ஞெரு அரசாங்க அதிகாரியான அர்டாட்டொவ் வசித்தார். அவர் அரசாங்கத்தில் கொரோகொவைக் காட்டிலும் சற்றுக் குறைவான அந்தஸ்துள்ள பதவியில் இருந்தார். அந்தக் கட்டிடத்தில் வசித்தவர்கள் எல்லோருமே முக்கியமான பிரமுகர்கள்; பட்டங்களைப் பெற்றவர்கள்.

புரட்சி நடைபெற்ற பிறகு கடந்த சில தினங்களில் சம்பவங்கள் வேகமாக நடைபெற்றன. இப்பொழுது டனீல்கா அவற்றைப் பற்றி ஆச்சரியப்படுவது கூடக் கிடையாது. ஆனல் அன்று நடைபெற்றது...

டனீல்காவின் தகப்பனர் ஒரு பத்திரிகையை வீட்டுக்குக் கொண்டு வந்தார். அதைப் பிரித்துப் படிக்கும் பொழுது மகனைப் பார்த்தார்.

''இன்று முதல் நீ ருஷ்யக் குடியரசின் குடிமகன். விளதிமிர் உலியானவ்-லெனின் அரசாணையில் கையொப்பமிட்டிருக்கிருர்'' என்ருர்.

டனீல்காவுக்கு அது உண்மையாகத் தோன்றவில்லை. மேலும் ருஷ்யக் குடியரசின் குடிமகன் என்பதன் சரியான அர்த்தம் என்ன என்று கூட அவனுக்கு விளங்கவில்லை.

''ஸ்டாட்ஸ்கி ஸொவேட்னிக் அந்தஸ்தைக் காட்டிலும் அது உயர்வானதா?'' என்று கேட்டான் (அர்டாட்டொவ் அந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தார்).

ஸ்டாட்ஸ்கி ஸொவேட்னிக்—ஜாரிஸ்ட் ருஷ்யாவின் அரசாங்கப் பதவிகளில் 5வது அந்தஸ்து

''அதைக் காட்டிலும் முக்கியம்'' என்று அவன் தகப்பஞர் சிரித்தபடியே பதிலளித்தார்.

''டாய்னி ஸொவேட்னிக்கைக் காட்டிலும் அதிக உயர்வானதா?'' (கொரோகொவுடைய பட்டம் அவன் நினைவுக்கு வந்தது).

''அதிக உயர்வானதுதான்.''

''பிரபுவைக் காட்டிலும் உயர்வானதா?''

''உயர்வானதுதான்.''

''இளவரசர் பட்டத்தைக் காட்டிலும் உயர்வானதா?''

''அதுக்கும் மேலே, மேலே'' என்று செல்லிச் சிரித்தார் அவன் தகப்பஞர்.

டனீல்கா தன்னுடைய நண்பர்களைத் தேடிக் கொண்டு வேகமாகத் தெருவில் ஓடிஞன்.

''என்னுடைய அந்தஸ்து ஸ்டாட்ஸ்கியைக் காட்டிலும், டாய்னியைக் காட்டிலும், பிரபுவைக் காட்டிலும், இளவ்ரசரைக் காட்டிலும் உயர்வானது, முக்கியமானது என்பது உனக்குத் தெரியுமா? ருஷ்யக் குடியரசின் குடிமகன் நான். பத்திரிகைகளில் அதைப் பற்றி எழுதியிருக்கிருர்கள். விளதீமிர் உலியானவ்-லெனின் அரசாணையில் கையொப்பமிட்டிருக்கிருர்'' என்ருன்.

அன்று முழுவதும் டனீல்கா தன்னுடைய நண்பர்கள் பலரையும் சந்தித்தான். அவர்கள் ஒவ்வொருவரிடமும் தவருமல் இதைப் பற்றிச் சொன்ஞன். கடைசியில் அவனுக்கு மூச்சு வாங்கியது; களைத்துப் போய் வீட்டுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான். அங்கே உட்கார்ந்தபொழுது இந்த உலியானவ்-லெனின் டனீல்காவாகிய தன்னைப் பற்றி எப்பொழுது கேள்விப்பட்டிருப்பார் என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். இப்படி சிந்தனையில் மூழ்கியிருந்தபொழுது சிகப்புத்தலை கிரில் தன்னை நோக்கி ஓடி வருவதைப் பார்த்தான். கிரில் அவனிடம் வந்து சேர்ந்ததும் ஆசுவாசப்படுத்திக் கொண்டான். வார்த்தைகள் சரமாரியாக வந்தன.

''நான் யார் என்று உனக்குத் தெரியுமா? ருஷ்யக் குடியரசில் நான் ஒரு குடிமகன்.''

டனீல்கா இதைக் கேட்டு ஆச்சரியத்தில் தடுமாறிஞன்.

''நீ குடிமகன் என்று உண்மையாகவே நினைக்கிருயா?'' என்று ஏளனம் செய்வது போலக் கேட்டான். ''நான் தான் குடிமகன். பத்திரிகைகளில் என்னைப் பற்றியே எழுதிஞர்கள்.''

''உன்னைப் பற்றியா?'' கிரில் விசிலடித்தான். ''உன்னைப் பற்றிக் கூட எழுதுவார்களா? அப்படியுமா காகிதத்தை வீணுக்குவார்கள்?''

டாய்னி ஸொவேட்னிக்— ஜாரிஸ்ட் ருஷ்யாவின் அரசாங்கப் பதவிகளில் 3வது அந்தஸ்து

இருவரும் சண்டை போட ஆரம்பித்தார்கள்.

''நான்தான் குடிமகன்...'' டனீல்கா கிரிலின் குரலை அமுக்கப் பார்த்தான்.

''இல்லே. நான்தான் குடிமகன்...'' என்று அலறினுன் கிரில்.

அப்பொழுது தெருவில் போய்க்கொண்டிருந்த ஒரு இளம் தொழிலாளி அந்தச் சிறுவர்களைப் பிரித்துவிட்டான். அவர்களுடைய தகராறுக்கு என்ன காரணம் என்பதை அவர்கள் சொல்ல மறுத்து வெகு நேரம் மௌனமாக இருந்தார்கள். கடைசியில் உண்மையைச் சொன்னுர்கள். அந்த இளம் தொழிலாளி சிரித்துக் கொண்டே பைக்குள் கையை விட்டு ஒரு பத்திரிகையை எடுத்தான். அந்தச் சிறுவர்கள் அதிக மான சிரமத்தோடு எழுத்துக் கூட்டிப் படிக்கத் தொடங்கினுர்கள்.

''முந்திய ஆட்சியின் பட்டங்கள் ஒழிக்கப்படுவதைப் பற்றிய அரசாணை'' என்று அந்தச் செய்தியின் தலைப்பைப் படித்தார்கள்.

எல்லாப் பட்டங்களும் பதவிப் பெயர்களும் அந்தஸ்து மரியாதைகளும் அன்று முதல் நிரந்தரமாக ஒழிக்கப்பட்டு விட்டன என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந் தது. பிரபுக்கள், வணிகர்கள், டாய்னி, ஸ்டாட்ஸ்கி ஸொவேட்னிக், இளவரசர்கள் அல்லது கவுண்டுகள் இனிமேல் கிடையாது. ''ருஷ்யாவிலுள்ள மக்கள் தொகையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ருஷ்யக் குடியரசின் குடிமகன் என்ற ஒரே பட்டம் வழங்கப்படுகிறது'' என்று அந்த ஆணை தெரிவித்தது.

அதனடியில் பின்வரும் கையொப்பம் காணப்பட்டது:

''மக்கள் கமிஸாரவையின் தலைவர்
வி. உலியானவ் (லெனின்).''

''இரண்டு பேர் சொன்னதுமே சரிதான்'' என்ருர் அந்த இளைஞர். ''நீ ருஷ்யக் குடியரசின் குடிமகன்'' என்று டனீல்காவைச் சுட்டிக் காட்டிச் சொன்னுர். ''நீயும் தான்'' என்று கிரிலேப் பார்த்துத் தலையை ஆட்டினுர். ''நானும்தான். நாம் எல்லோருமே ருஷ்யக் குடியரசின் குடிமக்கள். சாதாரண மனிதர்களுக்காக விளதீமிர் இலியீச் லெனின் இந்த ஆணையை வெளியிட்டிருக்கிருர்.''

அந்த ஆணை தனக்கு மட்டுமல்ல, ஒவ்வொருவருக்கும் தான் என்று அறிந்த பொழுது முதலில், டனீல்காவுக்குச் சங்கடமாக இருந்தது. எனினும் அதுதான் சரி என்பதை அவன் சீக்கிரமாகவே உணர்ந்து கொண்டான். விளதீமிர்

உலியானவ்-லெனின் யாரையுமே மறக்கவில்லை என்பது தெரிந்தது. டனீல்காவின் தாயாரையோ, தகப்பனரையோ, அவனுடைய நண்பர்களையோ, அவனோடு பழகுபவர்களையோ மறக்கவில்லை. அவர் எல்லோரையுமே நினைவில் கொண்டிருந்திருக்கிறார்.

கோமகள் ஷெர்பாட்ஸ்காயா, இளவரசர் பிரொகோவ்-பிஷாயெவ், டாய்னி ஸொவேட்னிக் கொரோகொவ், ஸ்டாட்ஸ்கி ஸொவேட்னிக் அர்டாட்டொவ் ஆகியோரைப் பொறுத்த வரையிலும், லெனின் கையெழுத்திட்ட ஆணை அவர்களுக்குச் சிறிதும் திருப்தியைத் தரவில்லை என்பது தெரியவந்தது. அவர்கள் நாட்டை விட்டுப் போய்விட்டார்கள். அதுவும் நல்லதுதான். அவர்களைப் போன்றவர்கள் தொலைந்தது நல்லதுதானே. லிட்டேய்னி தெருவிலிருந்த உயரமான கட்டிடத்தில் குடியிருப்பதற்குப் புதிய நபர்கள் வந்தார்கள். டனீல்காவின் தகப்பனரையும் தாயாரையும் போல அவர்கள் சாதாரணமானவர்கள், உழைக்கும் மக்கள். அவர்கள் குடிமக்களானது மட்டுமல்ல, அந்த மாபெரும் நாட்டின் தலைவர்களானர்கள்.

அவன் கண்ட கனவு

எரெம்கா பிக்கோவ் இங்குமங்கும் புரண்டு படுத்தான். கணப்புக்குப் பக்கத்தில் அதன் விளிம்பில் படுத்துத் தூங்குவது அவ்வளவு வசதியல்ல. அந்த இடம் அதிக வெப்பமாக இருந்தது.

அவன் தகப்பனருக்கும் தூக்கம் வரவில்லை. அதன் காரணத்தைத் தெரிந்து கொள்வது அப்படி ஒன்றும் கடினமல்ல. மறுநாள் காலையில் பிரபுக்களின் நிலங்களைப் பிரித்துக் கொடுக்கப் போகிறார்கள். அது தான் முதல் காரியம். இப்படிப்பட்ட காரியம் ஒவ்வொரு நாளும் நடப்பதில்லையே.

''தூங்கப் போ!'' என்று அவன் தாயார் அதட்டினள்.

முப்பது நிமிடங்களாகியிருக்கும். என்ன செய்த போதிலும் அவர்களுக்குத் தூக்கம் வரவில்லை.

கடைசியில் அவன் தகப்பனர் பேசினர்:

''காற்று வாங்குவதற்காக வெளியே போய் வரப் போகிறேன்.''

''நானும் வருகிறேன்'' என்று எரெம்கா சட்டென்று சொன்னன்.

''நல்ல பிறவிகள். தூக்கம் வராமல் இப்படியா அலைவார்கள்'' என்று அவன் தாயார் முணுமுணுத்தாள்.

அவள் இப்படி அலுத்துக் கொண்டாளே தவிர, உண்மையில் அவளாலும் தூங்க முடியவில்லை. வரப்போகின்ற சம்பவங்களும் நிலையும் அவள் மனதையும் உறுத்திக் கொண்டு தானிருந்தன.

எரெம்காவும் அவன் தகப்பனும் தெருவில் நடந்து போனார்கள். அவர்கள் கிராமத்தினூடே போய் அதன் வெளிப்பகுதியைக் கடந்து நதியின் மீதிருக்கும் பாலத்துக்கு வந்தார்கள். பிறகு அதைக் கடந்து அருகிலிருந்த குன்றின் மீது ஏறினார்கள். அதன் மீது ஏறிப் பார்த்தால் பிரபுக்களின் நிலங்கள் தெரியும்.

எரெம்காவின் தகப்பனார் அந்த வயல்களைப் பார்த்தார்; அவருடைய கண்களில் கண்ணீர் திரண்டது.

''அப்பா! ஏன் அழுகிறீர்கள்?'' என்று எரெம்கா அவருடைய கையை இழுத்தபடியே கேட்டான்.

''ஒன்றுமில்லை'' என்றார் அவர். பிறகு தன் கைகளினால் கண்களைத் துடைத்துக் கொண்டார். ''ஒரு நல்லவரைப் பற்றி நினைத்தேன்.''

''உலியானவ்-லெனினை, அவர் கையெழுத்திட்ட ஆணையைப் பற்றி நினைக்கிறீர்களா? அவர் நல்லவர். உங்கள் அபிப்பிராயம் அதுதானே?''

''எரெம்கா! அப்படிச் சொன்னால் மட்டும் போதாது. அவர் எல்லோருடைய பிரச்சினைகளையும் நன்றாகப் புரிந்து கொண்டவர். நிலம் இல்லாமல் விவசாயிகளால் ஒன்றும் செய்ய முடியாது. நாம் லெனினுக்கு நன்றி கூறுவோம்.''

அவர்கள் போதுமான அளவுக்கு சுத்தமான காற்றை சுவாசிக்கின்ற வரையிலும் அங்கே நின்று வயல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு வீட்டுக்குத் திரும்பினார்கள்.

எரெம்கா மறுபடியும் கணப்பின் விளிம்பில் படுத்துக் கொண்டான். ''அதிக நேரம் தூங்கி நில வினியோகத்தைப் பார்க்கத் தவறி விடக் கூடாது. இந்த முக்கியமான தருணத்தை நழுவ விடக் கூடாது'' என்று நினைத்துக் கொண்டான்.

அவன் படுத்தவுடனே நன்றாகத் தூங்கிவிட்டான்.

எரெம்கா ஒரு அற்புதமான கனவு கண்டான். பிரபுக்களின் நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதற்கு லெனினே அந்தக் கனவில் வந்தார். நிலத்தை அளப்பதற்கு ஒரு கோலைக் கையில் வைத்துக் கொண்டு அவர் வயலில் நடந்து சென்றார். லெனின் எரெம்காவிடம் பேசினார்.

''நீ எனக்கு உதவி செய்தாலென்ன? நிலப் பங்கீட்டை எப்படி ஆரம்பிக்கலாம் என்று சொல். ஒவ்வொரு வீட்டிலும்

எத்தனே பேர்கள் இருக்கிறுர்கள்? யாராருக்கு, எவ்வளவு நிலம் கொடுக்க வேண்டும்?''

யாரிடமிருந்து தொடங்குவது? எரெம்காவிடமிருந்து தான் தொடங்க வேண்டும்.

''இல்லே. அது சரியல்ல. இங்கே நடைபெறப் போகும் நிலப் பங்கீட்டில் பங்கு கொள்பவன் என்ற முறையில் நீ உன்னுடைய பங்கைக் கடைசியில் தான் வாங்கிக் கொள்ள வேண்டும்'' என்ருர் லெனின்.

அவர்கள் பிரபுக்களின் நிலங்களேப் பிரித்துக் கொடுத் தார்கள். அங்கிருந்த எல்லோருமே திருப்தியடைந்தார்கள். கடைசியாக எரெம்காவின் முறை வந்தது. அந்தக் கட்டத் தில் அவன் விழித்துக் கொண்டான். அவன் கண்களேக் கசக்கிக் கொண்டு பார்த்தான். வானத்தில் சூரியன் வெகு தூரம் மேலே போய் விட்டது. அவன் தகப்பஞர், தாயார் இரு வருமே வீட்டில் இல்லே.

''அது வெறும் கனவு தான்'' என்பதை எரெம்கா உணர்ந் தான். ''நான் அதிகமாகத் தூங்கிவிட்டேன். ஒரேயடியாகத் தூங்கிவிட்டேன். சீக்கிரம் வயலுக்குப் போக வேண்டும். ஆனல் அந்த முக்கியமான கட்டத்தில் கனவு முடிந்து விட்டதே! பிரபுக்களின் நிலத்தில் எந்தப் பகுதியை எனக்குக் கொடுப்பார்கள்?''

எரெம்கா தன்னுடைய கண்களே மறுபடியும் மூடிக் கொண்டான். அங்கேயுள்ள நிலத்தில் எந்தப் பகுதியைத் தனக்குக் கொடுப்பார்கள் என்பதைத் தெரிந்து கொள் வதற்கு அவன் துடித்தான். அந்த நதிக்கு அருகில், பழைய புர்ச் மரங்கள் இருக்கும் மேடான பகுதி மட்டும் அவ னுக்குக் கிடைத்தால் போதும். அவன் அங்கே பட்டாணிச் செடிகளே நடுவான். கோடைகாலத்தில் அங்கே நண்பர் களுக்கு விருந்தளிப்பான்.

அவன் மறுபடியும் கண்களே மூடிஞன்; வீட்டுக் கதவு கள் திறக்கப்படும் சத்தம் கேட்டது. அவன் அப்பாவும் அம்மாவும் அங்கே நின்று கொண்டிருந்தார்கள்.

''எரெம்கா! எழுந்திரு!''

எரெம்காவுக்குச் சங்கடமாக இருந்தது. நிலப் பங்கீடு நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது அவன் நன்ருகத் தூங்கிப் போய்விட்டான். ஆனல் அந்தக் கனவையும் முழு வதும் பார்க்கவில்லே. அவன் முகத்தில் கவலேக் குறியோடு எழுந்து உட்கார்ந்தான்.

''எரெம்கா! ஏன் இப்படித் தூங்கிவிட்டாய்?''

அவன் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தான். உடையணிந்து கொண்டு தெருவுக்குப் போஞன். அவனுடைய

நண்பர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு விஷமத்தன மாகச் சிரிதார்கள்.

''தூங்கு மூஞ்சி! தூங்கு மூஞ்சி!''

''நீ நன்றாகத் தூங்கிவிட்டாய்.''

''மிக முக்கியமான சம்பவத்தைக் கோட்டை விட் டாய்.''

எரெம்காவுக்கு மென்மேலும் அதிகமான கோபம் ஏற் பட்டது. அவன் அங்கேயிருந்த சிறுவர்களை உற்றுப் பார்த் தான். பிறகு திடீரென்று பேசினான்.

''நான் லெனினைப் பார்த்தேன். அவர் நம் கிராமத் துக்கு வந்தார்.''

அங்கே நின்று கொண்டிருந்த சிறுவர்கள் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தார்கள்.

''அவர் வந்தார். அவர் வந்தார்'' என்று எரெம்கா மறுபடியும் வலியுறுத்தினான். ''அவர் நிலத்தை அளப் பதற்காக ஒரு கோலைக் கையிலே வைத்திருந்தார். நான் அவருக்கு உதவியாளனாக இருந்தேன்.''

''ஆமாம். கனவில் அவரைப் பார்த்திருக்கிறான்.''

''இல்லை. அது கனவு அல்ல. நிச்சயமாகக் கனவு அல்ல. அவர் உண்மையாகவே இங்கு வந்தார்.''

அந்த நேரத்தில் புரோஸொரோவ் என்ற பெயருடைய கிழவர் அந்தச் சிறுவர்களை நோக்கி வந்தார். எரெம்கா அவரிடம் சொன்னான்.

''நான் லெனினைப் பார்த்தேன். என் கண்களாலேயே பார்த்தேன். லெனின் நிலத்தைப் பிரித்துக் கொடுத்தார்.''

அந்தச் சிறுவர்கள் மறுபடியும் சிரித்தார்கள். ''பெரிய வரே! இந்த எரெம்கா சொல்வது பொய்தானே?'' என்று கேட்டார்கள்.

அந்தக் கிழவர் சற்று நேரம் தயங்கினார். காலை நகர்த்திக் கொண்டார். அங்கே சத்தம் போட்டுக் கொண்டிருக்கும் சிறுவர்களைக் கோபமாகப் பார்த்தார். அவர் எரெம்கா வுக்கு ஆதரவாகப் பேசினார்.

''என்ன சந்தேகம்? லெனின் அங்கே வந்திருந்தார்.''

சிறுவர்கள் திகைத்துப் போனார்கள்.

''அப்படியானால் எங்களுக்கு மட்டும் தெரியாதது எப் படி?''

''நீங்கள் கவனமாகப் பார்க்கவில்லை. உங்களுக்குப் புரிய வில்லை. அதனால் தான் நீங்கள் அவரைப் பார்க்கவில்லை'' என்று அந்தக் கிழவர் பதிலளித்தார்.

இரண்டு முதலாளிகள்

ஒரு காலத்தில் ஷ்குரின், காப்புரின் என்று இரண்டு நபர்கள் இருந்தார்கள். அவர்கள் ஆளுக்கொரு தொழிற்சாலைக்கு முதலாளியாக இருந்தார்கள். ஷ்குரின் ஆணிகள் தயாரித்தார்; காப்புரின் சோப்புத் தயாரித்தார்.

இருவரும் தங்களை நீண்ட கால நண்பர்களாகக் கருதிக் கொண்டார்கள். இருவரும் பணக்காரர்கள்; பேராசை மிக்கவர்கள். அதோடு நில்லாமல் மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற நன்மைகளைப் பற்றிப் பொறுமை அடைகின்றவர்களாக இருந்தார்கள்.

சோப்புத் தொழிற்சாலையின் மூலமாக காப்புரினுக்குக் கிடைக்கிற லாபம் ஆணி உற்பத்தி மூலமாகத் தனக்குக் கிடைக்கும் லாபத்தைக் காட்டிலும் அதிகமென்று ஷ்குரின் எப்போதும் நினைத்தார். ஆனால் காப்புரினுக்கு இதன் எதிரிடையே உண்மையாகத் தோன்றியது.

''ஷ்குரினுடைய ஆணித் தொழிற்சாலை எனக்குக் கிடைக்குமா!'' என்று பெருமூச்சு விட்டார் காப்புரின்.

''காப்புரினுடைய சோப்புத் தொழிற்சாலை எனக்குக் கிடைத்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்'' என்று கனவு கண்டார் ஷ்குரின்.

அவர்கள் சந்திக்கும்பொழுது அவர்களுக்கிடையே பின்வரும் உரையாடல் நடைபெறும்.

''ஸில் ஸிலிச்! உன்னுடைய சோப்புத் தொழிற்சாலை வானத்திலிருந்து உன்னுடைய தலையில் பணத்தைக் கொட்டுகிறது'' என்பார் ஷ்குரின்.

''டிட் டிடிச்! வீணாகக் கற்பனை செய்யாதீர்கள். உங்களுடைய ஆணித் தொழிற்சாலையிலிருந்துதான் மூட்டை மூட்டையாக உங்களிடம் பணம் சேருகிறது'' என்று பதிலளிப்பார் காப்புரின்.

அவர்கள் இருவரையும் பொறுமை பிடுங்கித் தின்றது. தொழிற்சாலைகளை மாற்றிக் கொள்ளலாமா என்று இருவரும் நினைப்பதுண்டு. அதைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டதும் உண்டு. ஆனால் சொல்வதெல்லாம் நடப்பதில்லையே. அவர்களிடம் அதற்குத் தேவையான துணிச்சல் இல்லை.

ஒரு வேளை தப்புக் கணக்குப் போட்டு விட்டால்?

அவர்கள் கணக்குப் போட்டு ஒரு முடிவுக்கு வருவதற்குள் 1917ம் வருடம் வந்துவிட்டது. நிலம், தொழிற்சாலைகள் மற்றும் எல்லா நிறுவனங்களுமே மக்களின் உடைமைகளாக மாற்றப்படுவது ஆரம்பமாகியிருந்தது.

ஷ்குரின் காப்புரினிடம் ஓடிவந்தார்.

''போச்சே! போச்சே!''

''ஐயோ! ஐயோ!''

தங்கள் தொழிற்சாலைகள் பறிபோகும் காலம் வந்து விட்டதென்று இருவரும் உணர்ந்தார்கள். ஆனால் யாருடைய தொழிற்சாலை முதலில் தேசியமயமாக்கப்படும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. தன்னுடைய சோப்புத் தொழிற்சாலைதான் முதலில் போகும் என்று காப்புரின் நினைத்தார். ஆனால் தன்னுடைய ஆணித் தொழிற்சாலையைத்தான் முதலில் இழக்க வேண்டியிருக்கும் என்று ஷ்குரினுக்குத் தோன்றியது.

அவர்கள் பதறிப் போய் கணக்குப் போட்டுப் பார்த்தார்கள். தொழிற்சாலைகளை மாற்றிக் கொள்ளும் எண்ணம் மறுபடியும் அவர்கள் மனதில் எழுந்தது. மறுபடியும் அந்த எண்ணம் நினைத்தாலே ஆபத்தாக, பயமுறுத்துவதாக இருந்தது.

''ஓ! அந்தக் காப்புரின் மோசடி செய்துவிடுவான். என்னை ஏமாற்றி விடுவான்.''

''அந்த ஷ்குரின் என்னை ஏமாற்றி விடுவான். நான் ஒட்டாண்டியாகிவிடுவேன்.''

சிறிது காலத்துக்குப் பிறகு, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் மாகாண சோவியத்திலிருந்து ஷ்குரினுக்கு ஒரு கடித உறை வந்தது. அவர் உறையைக் கிழித்துக் கடிதத்தை வெளியே எடுத்தார். அவருடைய கண்கள் மயங்கின. அவருடைய ஆணித் தொழிற்சாலை தேசியமயமாக்கப்படும் என்று அந்தக் கடிதத்தில் சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் எழுதப்பட்டிருந்தது.

''கடவுளே! இந்த ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று ஷ்குரின் பிரார்த்தனை செய்தார். ''இந்த ஆபத்து எனக்கா வர வேண்டும்? காப்புரினுக்கு வந்திருக்கக் கூடாதா?'' அவர் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்தார். தெய்வ வடிவங்களுக்கு முன்பாகக் கெஞ்சி மன்றாடினார். ஆனால் அதே சமயத்தில் அவர் மனதில் வேறு திட்டம் போட்டுக்கொண்டிருந்தார்.

''காப்புரினுக்கு இந்த விஷயம் இன்னும் தெரியாது. நான் ஓடிப் போய் அவரைப் பார்த்துத் தொழிற்சாலைகளை மாற்றிக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்டால்...''

ஆனால் காப்புரினுக்கும் அதே காகித உறை அன்று கிடைத்தது. அவரும் தெய்வ வடிவங்களுக்கு முன்னால் மண்டியிட்டுப் புனிதர்களிடம் முறையிட்டுக் கொண்டிருந்தார். அவர் மண்டியிட்டுப் பிரார்த்திக்கும் பொழுதே ''நான்

ஓடிப்போய் ஷ்குரினைப் பார்த்துப் பேசினால்...'' என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் இருவருமே தங்கள் பிரார்த்தனைகளைப் பாதியோடு கொண்டு ஒருவரையொருவர் பார்ப்பதற்காக ஓடினார்கள். அவர்கள் நடுவழியில் சந்தித்துக் கொண்டார்கள்; எனினும் தங்கள் அவசரத்தில் ஒருவர் மீதொருவர் மோதிக் கொண்டார்கள். அவர்கள் மூச்சுத் திணறிப் போய் நின்றார்கள்.

''எனது அன்புமிக்க ஸில் ஸிலிச்! உங்களைப் பார்ப்பதற்காகத்தான் ஓடி வந்தேன்'' என்று ஷ்குரின் கடைசியில் ஒரு வழியாகச் சொன்னார்.

''நண்பர் டிட் டிடிச்! நானும் உங்களைப் பார்க்க வேண்டுமென்றுதான் புறப்பட்டேன்'' என்றார் காப்புரின்.

''நாம் தொழிற்சாலைகளை மாற்றிக் கொள்ளலாமே.''

''நான் தயார்.''

அவர்கள் வர்த்தக பேரத்தைச் சீக்கிரமாக முடித்தார்கள். நெடுங்கால நண்பர்கள் இருவருக்கும் முழுத் திருப்தி ஏற்பட்டது.

''நான் அவனை ஏமாற்றிவிட்டேன். ஹா-ஹா!'' என்று அகமகிழ்ந்தார் ஷ்குரின்.

''ஹா-ஹா! கிழட்டுப் பயல் என்னிடம் ஏமாந்து விட்டான்'' என்று பூரிப்படைந்தார் காப்புரின்.

அவர்கள் தலையைத் தூக்கிக் கொண்டு உற்சாகமாக நகரத்தைச் சுற்றி வந்தார்கள். அவர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளின் வாயில்களுக்கு வந்த பொழுது அங்கே சட்டபூர்வமான புதிய உடைமையாளர்கள்—தொழிலாளி வர்க்கம்—நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார்கள்.

''வணக்கம், ஷ்குரின்! காப்புரின்! உங்களுக்கும் வணக்கம். இருவரும் வந்துவிட்டீர்களா? தள்ளி நில்லுங்கள். உங்கள் சொத்து பறிமுதலாகிவிட்டது.''

புதிய பள்ளிக்கூடம்

மாபெரும் அக்டோபர் புரட்சிக்கு முன்பு நகரத்திலிருந்த பள்ளிக்கூடம் 'ஜிம்னசியா' என்று பெயரிடப்பட்டிருந்தது.

கிரிலினுடைய தகப்பனர் ஒரு நிலப்பிரபு. பாவெலின் தகப்பனர் ஜாரிஸ்ட் அரசில் முக்கியமான அதிகாரி. நதாலியாவின் அப்பா தளபதி. ரோஸாலியாவின் அப்பா ஒரு தொழிற்சாலை முதலாளி. முட்டாள் என்று பெயரெடுத்திருக்கும் மொடெஸ்டின் தகப்பனர் ஒரு போலீஸ்காரர்.

அங்கே பீட்டர் ஸொரோக்கின் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் சுகமான வாழ்க்கை நடத்தவில்லை. அவன் தாயார் துணிகளை வெளுத்துப் பிழைத்து வந்தாள்.

பணக்காரக் குழந்தைகள் பீட்டரை ஏளனம் செய்தன.

''ஹி-ஹி'' பீட்டரைப் பார்த்தவுடன் நதாலியா இப்படிக் கேலி செய்வாள்.

''ஹி-ஹி'' ரோஸாலியாவும் அவளோடு சேர்ந்து கேலி செய்வாள்.

''ஹோ-ஹோ'' கிரிலும் பாவெலும் அவனைப் பார்த்துக் கோணங்கி செய்வார்கள்.

''வண்ணாத்தி வருகிறாள்'' என்று சொல்லி முட்டாள் மொடெஸ்டும் அட்டகாசமாகச் சிரிப்பான்.

ஒரு சமயத்தில் பீட்டரால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. மொடெஸ்டை நன்றாக உதைத்தான். ஆனால் அதற்குப் பிறகு பீட்டருக்குத்தான் நிலைமை மோசமாயிற்று. மொடெஸ்ட் தன் தகப்பனாரிடம் சொன்னான். அந்தப் போலீஸ்காரர் பீட்டரின் தாயாருக்குத் தொல்லை கொடுத்தார்.

பீட்டர் படிக்க வேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டான். ஆனால் அவன் எங்கே போய்க் கல்வி கற்க முடியும்? அவன் தாயார் கேவலம், ஒரு வண்ணாத்திதானே. பீட்டர் இன்னும் ஏராளமானவர்களைப் போலவே கல்வியறிவு பெறாமலிருந்திருப்பான். ஆனால்—புரட்சி நடைபெற்றது.

தொழிற்சாலை முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் விரட்டப்பட்டார்கள். பணக்காரர்களின் அதிகாரத்துக்கு முடிவு கட்டப்பட்டது. நதாலியா, ரோஸாலியா, கிரில், பாவெல், மொடெஸ்ட் கூட—இப்பொழுது பார்க்க முடியவில்லை. அவர்கள் எங்கே போனார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை.

இப்பொழுது எல்லாம் மாறிவிட்டது. ஜிம்னாசியாக்கள் இப்பொழுது இல்லை. அதற்குப் பதிலாகப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருந்தன. இந்தப் பள்ளிக்கூடங்களில் பலவிதமான குழந்தைகள் படித்தார்கள்.

வசிலி லொட்டாரெவின் தகப்பனார் ஒரு தொழிலாளி. டோல்யாவின் அப்பா ஒரு சோவியத் ஊழியர். ஒல்காவின் தகப்பனார் தச்சுவேலை செய்பவர். போல்யாவின் தகப்பனார் லாரி ஓட்டுபவர். கிரிஷாவின் அப்பா கரி தள்ளுபவர்.

இதோ பீட்டர் ஸொரோக்கின். இந்தப் பள்ளிக்கூடத்தில் அவனும் மற்ற குழந்தைகளோடு கல்வி கற்கிறான்.

இந்தப் புதிய பள்ளிக்கூடத்துக்கு, இலவசப் பள்ளிக்கூடத்துக்கு, சோவியத் பள்ளிக்கூடத்துக்குக் குழந்தைகள் கூட்டம் கூட்டமாக நடந்து வந்தார்கள்.

மீனவர் வாழ்க்கை

ஒஹோட்ஸ்க் கடற்கரை ருஷ்யாவிலேயே மிகவும் அதிக மாக ஒதுங்கியிருக்கும் மூலைகளில் ஒன்று. யாரும் அங்கே சுலபமாகப் போக முடியாது. அந்தக் கடற்கரைக்குச் சற்றுத் தள்ளி பசிபிக் மாகடலில் புயல்கள் வீசும். அந்தக் கடற் கரையில் மீனவர் குடியிருப்பு ஒன்று அமைந்திருக்கிறது. மற்ற எல்லா விதமான வாழ்க்கையிலிருந்தும் அந்தக் குடியிருப்பு குறைந்தது நூறு வெர்ஸ்டா தூரமாவது ஒதுங்கியிருந்தது. இங்கே மக்கள் அபூர்வமாகத்தான் வந்து குடியேறுவார்கள்.

அந்த சமயத்தில் அந்தக் குடியிருப்பில் முப்பது மீனவக் குடும்பங்கள் இருந்தன; மரங்களைக் கொண்டு கட்டப்பட்ட முப்பது வீடுகளில் அவர்கள் வசித்தனர். அலைவாய்க் கரை யில் நான்கு நீளமான படகுகள் கட்டப்பட்டிருக்கும். மீன வர்கள் இந்தப் படகுகளில் ஏறிக் கடலில் வெகு தூரம் செல்வார்கள்; கடலில் வலைகளை வீசி மீன் பிடிப்பார்கள்.

ஒஹோட்ஸ்க் கடல் தன்னுடைய செல்வத்தைப் பதுக்கி வைக்கவில்லை. கடலிலிருந்து மீனவர்கள் திரும்பும் பொழுது அவர்கள் பிடித்துக் கொண்டு வருகின்ற மீன்குவியலின் பாரத்தினல் அந்த நீண்ட படகுகள் மேல் விளிம்பு வரை தண்ணீரில் மூழ்கியிருக்கும்.

பிறகு அந்த மீன்களைக் காயவைத்து பீப்பாய்களில் அடைப்பார்கள்.

அந்த கிராமத்தில் உழைக்கும் மீனவர் சமூகம் ஆர்ட் டெல் (கூட்டுறவுச் சங்கம்) என்று சொல்லப்பட்டது. ஆனல் அங்கேயிருந்த நீண்ட படகுகளும், பீப்பாய்களும், பிடிக்கப் படும் மீன்களும் கூட ஒரே ஒருவருக்குச் சொந்தமாக இருந் தன. ஒரு மீனவன் தன் வீட்டுக்குக் கொண்டு போகும் ஒவ் வொரு கோபெக் காசுக்கும் முதலாளிக்குப் பல ரூபிள்கள் லாபம் கிடைக்கும். அங்கே இரண்டு முதலாளிகள் இருந் தார்கள் என்று சொல்ல வேண்டும். ஒருவர் ஃபியோதர் புரொவோரொவ் என்ற வியாபாரி. இன்னொருவர் அந்த கிராமத்தின் மிதகுருவான மெஃபோடி. இவர்களிருவருமே லாபம் முழுவதையும் பிரித்துக் கொண்டார்கள்.

இதுதான் ஆர்ட்டெல்—கூட்டுறவுச் சங்கம். அங்கே பலர் பாடுபட்டார்கள். சிலர் லாபத்தை எடுத்துக் கொண் டார்கள். அங்கேயிருந்த நிலைமை இதுதான். இங்கு மட்டுமல்ல, ருஷ்யா முழுவதிலுமே இப்படித்தான் இருந் தது.

ஃபியோதர் புரொவோரொவ் கெட்டிக்காரர். மீனவர்களுக்குக் கிடைத்த ஊதியம் மிகவும் குறைவாக இருந்த போதிலும் அதிலும் பெரும் பகுதி தனக்கு வந்து சேருவதற்கு அவர் ஒரு வழியைக் கண்டுபிடித்தார். மீனவர்கள் தங்களுக்கு வேண்டுமான பொருள்களை வாங்கிக் கொள்வதற்கு அந்தக் குடியிருப்பில் ஒரு கடையை ஆரம்பித்தார்.

பங்குத் தந்தை மெஃபோடி சூழ்ச்சி மிக்க பெருச்சாளியாக இருந்தார். அவர் கடவுளையே தன்னுடைய உதவிக்கு வருமாறு கூப்பிட்டார். ஞானஸ்நானத்துக்கும் இறந்தவர்களுக்கு நல்லடக்கம் செய்வதற்கும் கட்டணம் வசூலித்தார். மாதாகோவிலைப் பழுது பார்ப்பதற்கும் (அப்படி அவர் சொல்லிக் கொண்டார்) புதிய தெய்வ வடிவங்கள் செய்வதற்கும் பணம் வசூலித்தார்...

அந்தக் குடியிருப்பில் வாழ்க்கை இப்படித் தான் நடைபெற்றது. புரொவோரொவ் தன்னுடைய சரக்குகளை விற்பனை செய்தார். மெஃபோடி தூபக் காலை ஆட்டினுர். மீனவர்கள் புயற்காற்றில் கடலில் படகுகளைச் செலுத்தினுர்கள். லாபம் பணக்காரர்களுக்குப் போய்ச் சேர்ந்தது. ஏழைத் தொழிலாளர்களுக்கு எலும்புத் துண்டுகள் கிடைத்தன. அந்த ஆர்ட்டெல் இதுவே.

ஆனுல் யாரும் போக முடியாத ஒஹோட்ஸ்க் கடற்கரையிலும் சோவியத் அதிகாரம் நிறுவப்பட்டது.

ஃபியோதர் புரொவோரொவ், மதகுரு மெஃபோடி ஆகியோர் நீண்ட படகுகளையும் பீப்பாய்களையும் லாபத்தையும் இழந்தார்கள். ஒஹோட்ஸ்க் கடலில் இப்பொழுது யார் மீன் பிடிக்கப் போகிருர்களோ அவர்களே லாபத்தையும் பகிர்ந்து எடுத்துக் கொள்கிருர்கள்.

பறிமுதல் செய்யப்பட்ட கார்

கோல்காவின் காதுகளில் ''தேசியமயமாக்குதல்'', ''பறிமுதல் செய்தல்'', ''ருஷ்யக் குடியரசின் சொத்து'' என்பன போன்ற புதுமையான சொற்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

அவன் தன்னுடைய நண்பர்களையும் பழக்கமானவர்களையும் ஒன்ருகக் கூட்டி அவர்களிடம் புதிய வாழ்க்கை முறையைப் பற்றி விளக்கிச் சொல்லத் தொடங்கினுன்.

''நிலப்பிரபுக்கள், முதலாளிகளிடமிருந்து சொத்துக்களைப் பிடுங்குவது 'பறிமுதல்' எனப்படும். இந்தச் சொத்துக்

கள் உழைக்கும் மக்களுக்குச் சொந்தமாவதற்கு 'தேசிய மயமாக்குதல்' என்று பெயர். பணக்காரர்கள் காட்டு விலங்குகளைப் போன்றவர்கள்; அவர்கள் கொள்ளையடித்தவற்றை பலாத்காரமாகப் பிடுங்க வேண்டும்'' என்று அவன் விளக்கினன்.

''தொழிற்சாலை முதலாளி ஸாய்க்கினை உங்களுக்குத் தெரியுமா? அந்த நபர் வைத்திருக்கும் ரோல்ஸ்-ராய்ஸ் காரைப் பார்த்திருக்கிறீர்களா? அந்தக் காரைப் பறிமுதல் செய்வோம், வாருங்கள்'' என்று அவர்களிடம் பேசினன்.

குழந்தைகள் ஆச்சரியத்தில் திகைத்து நின்ருர்கள்.

''நாம் கார் ஓட்டக் கற்றுக் கொள்வோம். பிறகு காசு வாங்காமலே எல்லோருக்கும் ஊரைச் சுற்றிக் காட்டுவோம்.''

கோல்கா சொன்னது சரிதான். இதைக் காட்டிலும் சிறந்த யோசனையை யாராவது சொல்ல முடியுமா?

மறுநாள் ஸாய்க்கின் வீட்டைச் சுற்றி குழந்தைகள் மறைந்து உட்கார்ந்து கொண்டு தயாராக இருந்தார்கள். ரோல்ஸ்-ராய்ஸ் கார் வந்தது. அதன் சொந்தக்காரர் காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் போகின்றவரை அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். உடனே அவர்கள் ஓடிப் போய் காரின் எல்லாப் பகுதிகளிலும் தொத்திக் கொண்டார்கள். கோல்கா காருக்குள் உட்கார்ந்தான்; பிரேக்கை எடுத்துவிட்டான். குழந்தைகள் ஆவலோடு எட்டிப் பார்த்தனர். வண்டி நகர ஆரம்பித்தது.

''வேகமாகத் தள்ளுங்கள்! இன்னும் வேகம்'' என்று கோல்கா உத்தரவு கொடுத்தான்.

குழந்தைகள் வண்டியை முனைந்து தள்ளினர்கள். ரோல்ஸ்-ராய்ஸ் மென்மேலும் வேகமாக நகர ஆரம்பித்தது. கோல்கா வண்டிச் சக்கரத்தைத் தன்னுடைய இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு திருப்தியோடு கர்வமாக உட்கார்ந்திருந்தான்.

அந்தச் சாலை ஒரு இடத்தில் செங்குத்தாகக் கீழே இறங்கியது. வண்டிச் சக்கரங்கள் வேகமாகச் சுழலத் தொடங்கின. அவர்களால் சமாளிக்க முடியவில்லை.

''விடாதீர்கள், விடாதீர்கள்'' என்று புலம்பினன் கோல்கா. ஆனல் அதற்கு முன்பே அந்த வண்டி குழந்தைகளைப் புழுதியில் விட்டுவிட்டுக் கிளம்பிவிட்டது. கோல்கா பிரேக் போட முயற்சி செய்தான்; ஆனல் பயத்தில் அவனுக்குத் தடுமாற்றம் ஏற்பட்டபடியால் அது எங்கே இருக்கும் என்பது கூட அவனுக்கு மறந்து போய்விட்டது. அந்தக் கார் சாலையின் இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்துக்கு ஓடியது; நடைபாதையின் மீது ஏறிக் குதித்தது. டம்-ஒரு

மரத்தில் மோதி நின்றது. மோதிய வேகத்தில் கதவு படீ ரென்று திறந்தது. கோல்கா தூக்கி எறியப்பட்டான். அவன் முகம் நடைபாதைக் கற்களின் மீது மோதியது. ஐயோ!

தெருவில் பலத்த கூச்சல் கேட்டது. இது ஆபத்தான காரியம் என்பதைக் குழந்தைகள் புரிந்து கொண்டார்கள். அவர்கள் எல்லாத் திசைகளிலும் சிதறி ஓடினார்கள். கோல்கா துள்ளியெழுந்தான். அந்தக் கார் உடைந்து கிடந்த இடத்திலிருந்து தன்னாலியன்ற அளவுக்கு வேகமாக ஓடி மறைந்தான்.

அவன் வீட்டுக்குத் திரும்பியபொழுது அவன் முகம் புஸ் ஸென்று வீங்கியிருந்தது. ஒரு கண்ணில் அடிபட்டிருந்தது. சட்டை கிழிந்து தொங்கியது.

''அட கடவுளே! '' என்று அவன் தாயார் திகைத்துப் போய் கைகளைப் பிசைந்தாள். ''அந்த கிரிஷ்கா மாரபேட் டொவுடன் மறுபடியும் சண்டை போட்டாயா?''

''மறுபடியும் ஏதோ விஷமம் செய்திருக்கிறாய்'' என்று அவன் தகப்பனார் கோபமாகச் சொன்னார்.

கோல்கா பதில் சொல்லாமல் நின்றான்.

''உனக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்...''

அவன் தகப்பனார் இடைவாரை உருவினார். அதை இரண் டாக மடித்துக் கையிலே பிடித்தார். கோல்கா ஆபத்தைப் புரிந்து கொண்டான். தனக்கு யாரும் இரக்கம் காட்டப் போவதில்லையாதலால் உண்மையைச் சொல்வதென்று முடிவு செய்தான்.

தொழிற்சாலை முதலாளியின் ரோல்ஸ்-ராய்ஸ் காரைப் பறிமுதல் செய்த கதையை அவன் சொல்லி முடித்தான்.

அவன் தகப்பனார் இடைவாரைக் கீழே போட்டுவிட்டு வயிறு வெடிக்கச் சிரித்தார். ''இவன் எல்லாக் காரியங்களி லும் சம்பந்தப்பட வேண்டுமா?'' என்று அவன் தாயார் புகார் செய்தாள். ''மித்ரொபான் அபனாஸியெவிச்! அவனை விடாதீர்கள். நன்றாகக் கண்டித்து வைக்க வேண்டும்.''

''அவனைச் செம்மையாக உதைக்கிறேன்'' என்று அவன் தகப்பனார் கூறினார்.

எனினும் தன் தாயார் குரலையும் தகப்பனார் பதிலையும் கவனித்த பொழுது தனக்கு உடனடியாக அடி விழப் போவ தில்லை என்பதைக் கோல்கா புரிந்து கொண்டான்.

அது சரிதானே. அவனை எதற்காக தண்டிக்க வேண்டும்? அவன் தனக்காகவா அந்த முயற்சியில் ஈடுபட்டான்? உழைக் கும் மக்கள் அனைவருக்காகவும் தானே அந்தக் காரைப் பறிமுதல் செய்தான்.

உல்லாசப் படகு

வோல்கா நதியில் ''மிஸிஸிப்பி'' என்ற பெரிய நீராவிப் படகு மிதந்து போய்க்கொண்டிருந்தது. நதியின் கரையில் நின்று அதைப் பார்த்துக் கொண்டிருப்பதில் குழந்தைகளுக்குப் பிரியம் அதிகம். அந்தப் படகில் இரண்டு சக்கரங்கள் இருந்தன; இரண்டு புகை போக்கிகளும் இரண்டு தளங்களும் இருந்தன. அதன் விசில் சத்தத்தைக் கேட்டால் செத்துப் போனவர்கள் கூட தங்களுடைய மீளாத் தூக்கத்திலிருந்து எழுந்துவிடுவார்கள். அந்தப் படகில் பிரயாணம் செய்வது அவ்வளவு இன்பமாக இருக்கும்!

அந்த உல்லாசப் படகு அந்தக் குழந்தைகளின் தகுதிக்கு அப்பாற்பட்டது. சமூகத்தின் மேல் தட்டைச் சேர்ந்தவர்கள் அதன் மேல் தளத்தில் கூடி நின்ருர்கள். அந்தப் படகு பருமனை உடலும் அகன்ற மார்பும் கொண்ட மித்ரிடாடொவுக்குச் சொந்தமானது. படகுக்கு வருகின்ற பிரயாணிகளை அதன் உரிமையாளரே தன்னுடைய நீண்ட தாடியை அசைத்து வரவேற்பார்.

''அன்புள்ள பிரயாணிகளே! உங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிருேம். உங்களுக்கென்று தனி அறைகள், உணவு விடுதி, குளியல் அறைகள், மதுபானக் கடைகள் வைத்திருக்கிருேம்'' என்று ஒவ்வொரு பிரயாணியிடமும் அவர் ஒப்பிப்பார்.

அந்த நீராவிப் படகில் கரி தள்ளும் தொழிலாளியின் மகனை டிம்கா புஹொவ் ஒரு நாள் அந்தப் படகில் ஏறிப் பார்த்துவிட்டு வந்தான். திரும்பி வந்ததும் அவன் படகைப் பற்றிக் கதை கதையாகச் சொன்னுன்.

''அடேயப்பா! என்ன இயந்திரம்!'' என்று கைகளை ஆட்டிக் கொண்டு பேசினுன். ''நிலக்கரியை அப்படியே சாப்பிடுகிறது.'' கால்விரல்களை நிலத்தின் மீது ஊன்றி எம்பிக் கொண்டு பேசினுன். ''அதன் மேல்தளம் அற்புதமாக இருக்கிறது. அங்கே மரக்கட்டைகளை இழைத்திருக்கிருர்கள். படிகளில் கம்பளங்களை விரித்திருக்கிருர்கள். அதன் பெயர் என்ன தெரியுமா? ''மிஸிஸிப்பி.'' அது அமெரிக்காவிலிருக்கும் நதியின் பெயர்'' என்ருன்.

1917-1918ம் வருடத்திய குளிர் காலத்தின் போது நீராவிப் படகுக்கு வேலையில்லை. வசந்த காலம் வந்த பொழுது நதிப் போக்குவரத்தை தேசியமயமாக்கும் வேலை தொடங்கியது. மித்ரிடாடொவ் தன்னுடைய ''மிஸிஸிப்பியை' விட்டுப் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது.

''இது மித்ரிடாடொவுக்கு முடிவு மாதிரிதான்'' என்று டிம்கா தன்னுடைய நண்பர்களிடம் விளக்கினன். ''அவர் காலம் முடிந்து விட்டது. இனிமேல் அந்தப் படகு உழைக்கும் மக்களுக்குச் சொந்தமாகிவிடும். முடிந்தது!''

அந்தப் படகில் கரிதள்ளும் தொழிலாளியான அவன் தகப்பனரிடம் சொல்லி எல்லாக் குழந்தைகளையும் அந்த நீராவிப் படகில் கூட்டிக் கொண்டு போக ஏற்பாடு செய்யுமாறு குழந்தைகள் அவனை நச்சரிக்கத் தொடங்கினர்கள்.

''ரொம்ப ஆசையாக இருக்கிறதோ'' என்று டிம்கா குழந்தைகளிடம் சிரித்துக் கொண்டே சொன்னன். ஆனல் அப்படி ஒரு உல்லாசப் பிரயாணத்தை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று உள்ளூற அவனுக்கும் ஆசையாக இருந்தது.

இதற்குச் சிறிது காலத்துக்குப் பிறகு ஒரு நாள் அவன் குழந்தைகளிடம் வந்தான். ''எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டன'' என்று அறிவித்தான்.

ஆனல் அன்று இரவில் வோல்கா நதியில் ஒரு பயங்கரமான வெடிச் சத்தம் கேட்டது. பொழுது விடிந்ததும் எல்லாக் குழந்தைகளும் நதியின் செங்குத்தான கரையோரம் போய்ப் பார்த்தார்கள். ''மிஸிஸிப்பி'' படகு எங்கோ போய்விட்டது.

உழைக்கும் மக்களுக்குத் தன்னுடைய நீராவிப் படகைக் கொடுப்பதற்கு மித்ரிடாடொவ் விரும்பவில்லை. எனவே அதற்கு வெடி வைத்துவிட்டார். படகு தண்ணீருக்குள் மூழ்கிவிட்டது.

''நம் உல்லாசப் பிரயாணம் மூழ்கிப் போச்சு'' என்று குழந்தைகள் பேசிக் கொண்டார்கள்.

அந்தப் படகை நதியின் அடியிலிருந்து மேலே கொண்டு வந்து, உடைந்துபோன பகுதிகளைச் செப்பனிட்டு, அதற்கு மறுபடியும் வர்ணம் பூசுவதற்கு அந்தக் கோடைகாலம் முழுவதும் வேண்டியிருந்தது. இலையுதிர்காலம் வந்த பொழுது குழந்தைகள் மறுபடியும் உல்லாசப் பிரயாணத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். டிம்கா மறுபடியும் தன் தகப்பனரிடம் அதைப் பற்றிப் பேசினன். மறுபடியும் குழந்தைகளிடம் சொன்னன்.

''எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன.''

குழந்தைகள் டிம்காவைத் தொந்தரவு செய்தனர்.

''சீக்கிரமாகப் புறப்படுகிறேமா?''

''ஆம். சீக்கிரமாகத்தான்.''

''எவ்வளவு நாள் கழித்து?''

''நாளைக்கே.''

மறு நாள் அதிகாலையிலே குழந்தைகள் வோல்கா நதிக்

கரைக்கு ஓடிவந்தனர், கரையிலிருந்து குனிந்து பார்த்தனர் —''மிஸிஸிப்பியைக்'' காணவில்லை.

அது கொந்தளிப்பான காலம். பணக்காரர்களுடைய நிலங்கள், தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால் அந்த இழப்பை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. அவர்கள் வெண்படையைத் திரட்டி இளம் சோவியத் குடியரசுக்கு எதிராக யுத்தம் செய்யத் தொடங்கினர்கள்.

எனவே ''மிஸிஸிப்பி'' யுத்தத்தில் பங்கெடுக்கப் போய் விட்டது. அதன் மேல் தளத்தில் பீரங்கிகளும் இயந்திரத் துப்பாக்கிகளும் வைக்கப்பட்டிருந்தன. செஞ்சேனையைச் சேர்ந்த வீரர்கள் அதை ஓட்டினர்கள். வெண்படையினரை எதிர்த்துப் போர் புரிய அது புறப்பட்டுவிட்டது.

வோல்கா நதிக் கரையிலிருந்த மண் சரிவில் குழந்தைகள் கூடி உட்கார்ந்து அதைப் பற்றி விவாதித்தனர்.

''அது தான் சரி.''

''நாம் காத்திருப்போம்.''

''நமக்கு அவசரம் இல்லை. செஞ்சேனைத் துருப்புகள் வெண்படையினரை ஒழித்த பிறகு திரும்பட்டும்.''

''அது திரும்பிவரும். நமது ''மிஸிஸிப்பி'' திரும்பி வரும்.''

அருவருப்பான சொல்

இபாட் மாமா ட்வெர்ஸ்காயா தெருவில் அமைந்திருக்கும் உணவு விடுதியில் வாயிற்காவலனக வேலை செய்து வந்தார். அவர் தன்னுடைய மைத்துனன் லோன்காவை அந்த உணவு விடுதியில் தட்டுக் கழுவுகின்ற வேலையில் சேர்த்துவிட விரும்பினர். ஆனல் அதற்கிடையில் அக்டோபர் புரட்சி ஏற்பட்டு விட்ட படியால் அவருடைய திட்டம் நிறைவேற முடியாது போயிற்று. ஏனென்றல் புரட்சி ஏற்பட்டதும் அந்த உணவு விடுதி மூடப்பட்டது; அதன் உரிமையாளரும் எங்கோ ஓடிப் போய்விட்டார். இபாட் .மாமாவுக்கும் வேலை போய் விட்டது.

''அந்தக் காலம் வேறு. இப்பொழுது நாடு இருக்கும் நிலைமையைப் பார்த்தாயா? காலம் மாறிப் போச்சு. அதில் சந்தேகமில்லை'' என்று அவர் அடிக்கடி புலம்புவார்.

ஒரு நாள் இபாட் மாமா பொதுக் குளியலறைக்குப் புறப்பட்ட பொழுது லியோன்காவையும் தன்னேடு கூட்டிக் கொண்டு போக முடிவு செய்தார். அந்தக் குளியலறையிலி

ருந்து வந்த சோப் நுரையின் நறுமணம் அந்தச் சிறுவனின் உடலைச் சூழ்ந்தது; சுவர்களில் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடிகள் அவனை உற்றுப் பார்த்தன. அங்கே தரையில் விரிக்கப்பட்டிருந்த கம்பளங்கள் அவனுடைய உள்ளங்கால்களைக் கூசச் செய்தன.

''எவ்வளவு சுகமாக இருக்கிறது, பார்த்தாயா?'' என்றார் இபாட் மாமா. ''நன்றாகப் பார். இப்படி ஒரு இடத்தை நீ இப்பொழுதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறாய் என்று நினைக்கிறேன்'' என்றார்.

லியோன்கா சுற்று முற்றும் பார்த்தான்.

இபாட் மாமா அமைதியாக, அவசரப்படாமல் தன் உடைகளைக் கழற்றினார். முதலில் சட்டையைக் கழற்றி அதை மிகவும் கவனத்தோடு மடித்து வைத்தார். பிறகு அவர் தாடியை தடவிக் கொடுத்தார். காற்சட்டை மட்டும் அணிந்து கொண்டு வெகு நேரம் அங்கே உட்கார்ந்து சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அன்று அதிகமானவர்கள் குளிப்பதற்கு வந்திருந்தார்கள்.

இபாட் மாமா ஆசை தீரக் குளித்தார். அவர் தண்ணீரில் முங்கினார்; உறுமினார். தன்னுடைய நீண்ட தாடியை நன்றாக சோப்புப் போட்டுக் கழுவினார்; கழுத்தை விடாமல் தேய்த்தார். பிறகு லியோன்காவைக் கூட்டிக் கொண்டு நீராவி அறைக்குப் போனார். அதற்குள் நுழைந்ததும் நீராவிப் புகை அவன் உடல் முழுவதும் சூழ்ந்து கொண்டதால் அவனுக்கு மூச்சுத் திணறியது. அவன் நாலா பக்கங்களிலும் பார்த்தான். எங்கு பார்த்தாலும் பலகைகளின் மீது ஆட்கள் ஓய்வாகப் படுத்திருந்தார்கள்.

''ஓ! ஓ!'' என்று உடல்பருமனான ஒரு கனவான் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருந்தார்.

''இன்னும் நீராவி விடு, அதிகமாக விடு'' என்று ஒரு இளைஞர் உரத்த குரலில் சொன்னார். ஒற்றை மூக்குக் கண்ணாடியணிந்த ஒருவர் தன்னுடைய வற்றிப் போன தொடைகளில் சுறுசுறுப்பாகத் தட்டிக் கொண்டிருந்தார். இதற்கிடையில் இபாட் மாமா மேல் வரிசையிலிருந்த பலகைகள் ஒன்றில் காலை நீட்டிப் படுத்தார். அவர் லியோன்காவிடம் ஒரு பெசோமைக் கொடுத்துத் தன் முதுகில் நன்றாக அடிக்குமாறு சொன்னார். லியோன்கா அவர் முதுகில் அடிக்க ஆரம்பித்தான்; அதிகமான பலத்தைப் பிரயோகிக்காமல் லேசாகவே அடித்தான்.

''உனக்கு என்ன வந்தது? உன் கைகளில் பலமில்லையா?'' என்று இபாட் மாமா கோபித்துக் கொண்டார். பிறகு ''ஆ! அப்படி அடி. இப்பொழுதுதான் சரியாக இருக்கிறது'' என்று

பெசோம் — சிறு குச்சிகளால் செய்யப்பட்டது. நீராவியில் குளித்தபிறகு இதனால் உடம்பில் அடிக்கும்பொழுது சுகமாக இருக்கும்

சொன்னர். முதுகில் விழுந்த அடி கொடுத்த சுகத்தில் அவருடைய உடல் சிலிர்த்தது.

அந்தக் கிழவர் நீராவிப் புகையில் வெகு நேரம் படுத்துக் கிடந்தார். பிறகு திடீரென்று பேசினர்.

''ஜாராட்சியில் எல்லாமே நன்ருக இருந்தது என்றுதான் நான் இன்னும் சொல்லுவேன்.''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவர்களுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த இளைஞன் அவர் பேச்சைக் கூர்மையாக கவனித்தான். மற்றவர்களும் அவனைப் பின் பற்றினர்கள்.

''நிலைமை எவ்வளவோ நன்ருக இருந்தது'' என்று இபாட் மாமா மறுபடியும் சொன்னர்.

''தாடிக்காரர் சொல்வது உண்மை தான்'' என்ருர் பருமனை கனவான்.

''அந்த ஆள் சொல்வது சரி என்று சொன்ன நபர் யார்?'' என்று ஒற்றைக் கண்ணடி அணிந்த நபர் கத்தினர். அவர் மரக்கட்டைகளின் மீது காலைத் தூக்கிவைத்து ஏறத் தொடங்கினர். ''குடிமக்களே! நாம் ருஷ்யாவின் சுதந்திரத்துக்காகப் போராடினேம்.''

''போராடியது யார்? நீ சண்டை போட்டாயா?''

அந்தப் பேச்சாளனை யாரோ இழுத்துக் கீழே தள்ளினர்கள். இபாட் மாமாவின் தாடியை ஒருவர் பிடித்திழுத்தார்.

''அவனை நன்ருக மொத்துங்கள்.''

''அவன் தாடியைப் பிய்த்துப் போடு.''

அந்தக் கிழவர் அலறினர்; கால் நழுவித் தரையில் விழுந்து பேச்சின்றிக் கிடந்தார். அந்த நீராவி அறைக்குள் ஆட்கள் கும்பலாகக் கூடிச் சண்டை போட்டார்கள்; முகம் கழுவும் தண்ணீர் வைத்திருக்கும் பீங்கான் தொட்டிகள் நாலா பக்கங்களிலும் வீசப்பட்டன. அங்கே ஒரே இரைச்சலாக இருந்தது. அந்த ஒல்லியான ஆசாமி மறுபடியும் அடுப்பு மீது வைக்கப்பட்டிருந்த பலகையில் ஏறுவதற்கு முயற்சி செய்தார்.

''குடிமக்களே! நாம் ருஷ்யாவின் சுதந்திரத்துக்காகப் போராடினேம்...''

அங்கே கலவரம் நடைபெறுகின்ற சத்தத்தைக் கேட்டு அந்தக் குளியலறையின் நிர்வாகி ஓடிவந்தார். அவர் கதவுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு கவலை தோய்ந்த குரலில் பேசினர்.

''கனவான்களே!'' என்று தொடங்கி விட்டுப் பிறகு நிறுத்தினர். ''குடிமக்களே!'' என்ருர். கடைசியில் ''தோழர்களே!'' என்று கெஞ்சுவது போலச் சொன்னர்.

அங்கே அமளி கொஞ்சமும் அடங்கவில்லை. யாரோ ஒரு வர் முகம் கழுவும் தொட்டியைத் தூக்கி அந்த நிர்வாகியின் தலையில் தண்ணீரைக் கொட்டினார். அவர் வாய்க்குள் போன தண்ணீரைத் துப்பினார். அங்கே இருப்பவர்களைத் திட்டி விட்டு வேகமாக வெளியே நடந்தார்.

சிறிது நேரத்தில் அந்தக் குளியலறைக்கு முன்னால் ஒரு ரோந்துப் படை வந்து நின்றது. மாலுமியின் உடையணிந்த ஒரு முரட்டு ஆசாமி—அவர் அந்தப் படைப் பிரிவின் அதிகாரியாக இருக்க வேண்டும்—அந்தக் கூச்சலை அமுக்கும் வகையில் அதிகமான சத்தம் போட்டுப் பேச ஆரம்பித்தார். ஆனால் அங்கே யாரும் அவர் பேச்சைக் கேட்கவில்லை. அந்தக் கட்டத்தில் அந்த மாலுமி தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துச் சுட்டார். இப்பொழுது ஒவ்வொருவரும் திரும்பினார்கள்; எல்லோரும் மௌனமாக நின்றார்கள்.

''கிழவரே! எழுந்து நில்'' என்று சொல்லிவிட்டு அந்த மாலுமி இபாட் மாமாவை நோக்கிக் கையை நீட்டினார்.

அந்தக் கிழவர் எழுந்து நின்றார். அந்த மாலுமியையும் அவர் கையில் வைத்திருந்த துப்பாக்கியையும் கலவரத்தோடு பார்த்தார்.

''இங்கே என்ன கலாட்டா?'' என்று மாலுமி கேட்டார்.

ஒற்றைக் கண்ணாடி அணிந்த நபர் வேகமாக ஓடி வந்தார். தன்னுடைய பேச்சில் மறுபடியும் யாராவது குறுக்கிட்டு விடுவார்களோ என்று அஞ்சுவது போல அவசரத்தோடு விளக்கம் சொல்ல ஆரம்பித்தார்.

''தோழர் வீரரே!'' என்று சொல்லிவிட்டு இபாட் மாமாவைச் சுட்டிக் காட்டினார். ''இந்த நபர் நமக்கெதிரான பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்.''

''இது உண்மையா?''

அந்தக் கிழவர் திருதிருவென்று முழித்தார்; அவர் உடல் நடுங்கியது; தன்னுடைய தாடியைப் பிய்த்தார்; பிறகு அதை விட்டு விட்டு மறுபடியும் தாடியைப் பிய்த்துக் கொண்டிருந்தார்.

''இது உண்மையா?''

இபாட் மாமா மௌனமாக நின்றார்.

''நான் பேச அனுமதி கொடுங்கள்'' என்று அந்த ஒல்லியான நபர் மறுபடியும் விடாப்பிடியாகப் பேச ஆரம்பித்தார். ''அவர் அதைத்தான் செய்தார். ஜாராட்சியில் நிலைமை நன்றாக இருந்தது என்று சொன்னார்.''

''ஏ கிழவா! உன்னுடைய துணிகளை எடுத்துக் கொண்டு என்னோடு வா'' என்று அந்த மாலுமி சொல்லிவிட்டுக் கதவைச் சுட்டிக் காட்டினார்.

அவர்கள் தெருவிலே நடந்து போய்க் கொண்டிருந்தார் கள்.

''உன்னுடைய பிரச்சினை என்ன? சோவியத் ஆட்சியில் உனக்கு எதைப் பிடிக்கவில்லை?'' என்று அந்த மாலுமி கேட்டார்.

''ஓ! அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு எல்லாம் சரி யாகத்தான் இருக்கிறது'' என்று இபாட் மாமா பதிலளித்தார். ''ஆமாம். ஜார் இல்லாமல் நாம் எப்படி வாழ முடியும்? அது நடக்கிற காரியமாகத் தோன்றவில்லையே'' என்றார்.

''நடக்கிற காரியமாகத் தோன்றவில்லையா? பொறுத்துப் பார்'' என்று சொல்லிச் சிரித்தார் அந்த மாலுமி.

அவர்கள் ஸுஹறேவ் சந்தைக்குப் பக்கத்தில் போய்க் கொண்டிருந்த பொழுது அந்த மாலுமியை யாரோ கூப்பிட் டார்கள்.

''இங்கே காத்திருங்கள்'' என்று இபாட் மாமாவிடமும் லியோன்காவிடமும் சொல்லிவிட்டு அந்த மாலுமி போனார்.

அந்த மாலுமி அகன்றவுடனே கிழவர் சிறுவனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு கதவுக்குள் நுழைந்து வேகமாக ஓடினார். பிறகு ஒரு வேலியின் மீது தாவிக் குதித்தார். லியோன்காவினால் அவரைத் தொடர்ந்து ஓட முடியவில்லை. எனினும் எப்படியோ சமாளித்துக் கொண் டான்.

அந்த மாலுமியிடமிருந்து தப்பியோடி வந்த நாள் முதல் அந்தக் கிழவர் நிரந்தரமாக பயந்து கொண்டேயிருந்தார். அடுத்த விநாடியில் தன்னைக் கைது செய்வதற்கு வந்து விடு வார்கள் என்ற பயத்திலேயே அவர் காலத்தைக் கழித்தார். கடைசியாக, அந்த சம்பவம் நடை பெற்று ஐந்து நாட் களுக்குப் பிறகு, அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. லியோன்கா அவசரமாகக் கதவைத் திறக்கப் புறப்பட்டான். ஆனால் இபாட் மாமா அவனை அதட்டினார்.

''எங்கே போகிறாய்? நில். அப்படியே இரு.''

கதவைத் தட்டுகின்ற சத்தம் மறுபடியும் கேட்டது. ஆனால் சிறிது நேரத்தில் அந்த நபர் திரும்பிப் போகும் காலடிச் சத்தம் கேட்டது. கிழவர் 'அப்பாடா' என்று நிம் மதியாகப் பெருமூச்சு விட்டார். ஆனால் அவர்களுடைய காலடிச் சத்தம் மறுபடியும் கேட்டது. வெளியில் யாரோ, அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அவர் வீட்டில் இல்லையா? அது எப்படி? அவர் வீட்டில் தான் இருக்கிறார். கதவைத் திறந்து கொண்டு உள்ளே போங்கள்'' என்று மாரியா அத்தை சொல்லிக் கொண்டிருந் தாள்.

இபாட் மாமாவின் முகம் வெளுத்துப் போயிற்று. அவர் லியோன்காவை இழுத்துக் கொண்டு அங்கே தொங்கிய திரைச் சீலைக்குப் பின்னுல் வேகமாக மறைந்து நின்ருர்.

கதவு திறந்தது. இரண்டு பேர் உள்ளே நுழைந்தார்கள். அந்தத் திரையிலிருந்த துவாரத்தின் வழியாக லியோன்கா கண்ணைச் சுருக்கிக் கொண்டு பார்த்தான். அவர்களிருவரும் தென்பட்டார்கள். ஒருவர் உயரமானவர்; கையிலே பெட்டியை வைத்துக் கொண்டு நின்ருர். அடுத்தவர்... அவர்கள் குளியலறையில் சந்தித்த அதே மாலுமிதான். அவர் இடுப்புப் பட்டையில் கைத்துப்பாக்கி சொருகப் பட்டிருந்தது. அவர்கள் அந்த அறையைச் சுற்று முற்றும் பார்த்தார்கள். மாலுமி கூரையில் பார்வையைச் செலுத்திஞர். லியோன்காவும் தலையை உயர்த்திப் பார்த்தான். கூரையில், வலது பக்கத்தில் ஒரு இடத்தில் ஈரம் படிந்திருந்தது. அவர் குனிந்து தன்னுடைய கால்களைப் பார்த்தார். மரப்பலகைகள் உளுத்துப் போயிருந்தன. அவற்றுக்கிடையே ஏற்பட்டிருந்த பெரிய துவாரங்களின் வழியாக ஈரக் காற்று தங்கு தடையில்லாமல் வந்து கொண்டிருந்தது.

''பெயரென்ன? இபாட் இக்னட்டியெவிச் ட்ரேமொவ், சரிதானு?'' என்று பெட்டியை வைத்துக் கொண்டிருந்தவர் சொன்னுர்.

''அவர் பெயர் அது தான்'' என்று பதிலளித்தாள் மார்யா.

''நீங்கள் அவருடைய சொந்தத் தங்கையா?''

''தங்கை.''

''குழந்தை யாருடையது என்று சொல்கிறீர்களா?''

''அவன் பெயர் லியோன்கா. எங்கள் சகோதரி வர்வாராவின் மகன். அவன் ஒரு அனுதை.''

''அப்படியா?'' என்ருர் அந்த உயரமான மனிதர். ''நாங்கள் தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் வட்டார சோவியத்திலிருந்து உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறேம்.''

''முக்கியமான விஷயமாக வந்திருக்கிறேம்'' என்று சேர்த்துக் கொண்டார் மாலுமி.

லியோன்கா தன்னுடைய மாமாவின் முகத்தைப் பார்த்தான். அவர் மூச்சு விடுவதற்குக் கூட பயந்தபடியே நின்று கொண்டிருந்தார்.

திடீரென்று லியோன்கா பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த வாளியைத் தட்டிவிட்டான். அது பலமான சத்தத்தோடு கீழே விழுந்தது. இபாட் மாமாவின் உடல் நடுங்கியது. அந்த மாலுமி கைத்துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டார்.

''யாரங்கே?''

இபாட் மாமா சிலுவைக் குறியிட்டுக் கொண்டு மௌன மாக நின்ருர். மார்யா அத்தை முன்னுல் வந்து திரையைப் பிடித்து இழுத்தாள்.

''இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டாள். ''தாடியைச் சீவுங்கள். உங் களைப் பார்க்க வந்திருக்கிருர்கள்'' என்ருள்.

இபாட் மாமா விருந்தினர்களைப் பார்த்தார். அந்த மாலு மியைப் பார்த்ததும் பின்வாங்கினுர்.

''ஹா! ஹா! முடியாட்சிவாதியா? நம்முடைய பழைய நண்பரல்லவா?'' என்று அந்த மாலுமி சிரித்துக் கொண்டே சொன்னுர்.

இபாட் மாமா மறுபடியும் பின்னுல் ஓரடி வைக்க, அங்கேயிருந்த பெஞ்சின் மீது இடறிக் கீழே பொத்தென்று விழுந்தார். அந்த மாலுமி கடகடவென்று சிரித்தார். கையில் பெட்டி வைத்துக் கொண்டிருந்த நபர் இபாட்டுக்கு உதவி செய்ய ஓடிவந்தார்.

''ஏன் இப்படித் தடுமாறுகிறீர்கள்? நாங்கள் சோவியத் திலிருந்து வந்திருக்கிறோம்'' என்ருர் அவர். ஒரு காகிதத்தை எடுத்துக் கிழவரிடம் நீட்டினுர். ''தளபதி இன்சாரொவின் வீட்டுக்கு உங்களை மாற்றுகிறோம். அது இன்னும் வசதியாக இருக்கும். அதற்கான உத்தரவை வாங்கிக்கொள்ளுங்கள்'' என்ருர்.

இபாட் மாமா எழுந்து நின்ருர். முதலில் அந்த உத்தர வையும் பிறகு மாலுமியையும் கடைசியாக மார்யா அத் தையையும் பார்த்தார். அங்கே என்ன நடக்கிறதென்றே அவருக்குப் புரியவில்லை.

''அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்'' என்று மார்யா அத்தை அந்தக் கிழவரின் விலாப்புறத்தில் இடித்தாள். ''ஏன் இப்படி மோசமாக நடந்து கொள்கிறீர்கள்? ஆனந்தத்தில் மதி மோசம் போய்விட்டதா?''

அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த புதிய அறை இரண் டாவது மாடியில் இருந்தது. அது பிரகாசமான, பெரிய அறை; ஸ்டோலயா தெருவைப் பார்த்தபடி இரண்டு சன்னல் கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த முதல் நாள் மாலைப் பொழுதில் அங்கேயிருந்த மென்மையான, அகன்ற படுக்கை யில் உடலை நீட்டிப் படுத்த இபாட் மாமா எல்லாப் பக்கங் களிலும் திருட்டுத் தனமாகப் பார்த்துக் கொண்டார். பிறகு பேசத் தொடங்கினுர்.

''பார்த்தாயா? ஜார் காலத்தில் இவ்வளவு வசதியாக வாழ்ந்திருந்தார்கள். அதுவல்லவா காலம்!''

''வாயை மூடு! கிழட்டு முட்டாளே!'' என்று மார்யா அத்தை கோபமாகக் கத்தினள்.

இபாட் மாமா எதுவும் பேசவில்லே.

அதற்கடுத்த நாள் இபாட் ட்ரேமொவை வட்டார சோவியத்துக்குக் கூப்பிட்டனுப்பினர்கள். குழந்தைகள் நிலேயத்தில் பண்டங்களேப் பாதுகாக்கும் வேலே அவருக்குக் கொடுக்கப்பட்டது. அவர் தமது வெண்மையான தாடியைத் தடவிக் கொண்டு திருப்தியோடு வீட்டுக்குத் திரும்பினர். ''அப்படியானல் அவர்கள் எனக்கு ஏதாவது செய்ய விரும்புகிறர்கள் என்று தெரிகிறது'' என்று முடிவு செய்தார். ''லியோன்காவுக்கும் அங்கேயே ஏதாவதொரு வேலே கிடைக்கும்.'' திரும்பும் வழியில் அந்த மாலுமியை மறுபடியும் பார்த்தார்.

''ஹஹ்ஹா'' என்று மாலுமி அவரைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார். ''முடியாட்சிவாதி!''

இபாட் மாமா முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

''இந்த மாதிரியான பேச்செல்லாம் என்னிடம் வேண்டாம்'' என்று அந்த மாலுமியைக் கோபித்துக் கொண்டார். வணக்கம் தெரிவிக்காமல் மாலுமியைக் கடந்து போனர். ''எவ்வளவு அருவருப்பான சொல்லே அந்த நபர் கற்பனே செய்திருக்கிறன். முடியாட்சிவாதி'' என்று அவர் அந்த வார்த்தையை மனதில் திரும்பவும் சொல்லிப் பார்த்தார். பிறகு சிரித்துக் கொண்டார். அவர் மனம் அமைதியடைந்தது; வீடு நோக்கித் திரும்பினர்.

மாவுமில்

நிலப்பிரபு கிரியாகொவுக்குச் சொந்தமான செங்கற்களால் கட்டப்பட்ட மாவுமில் தெலேகினே கிராம விவசாயிகளுக்குச் சொந்தமாயிற்று.

அது மிகவும் பழமையானது; இடிந்து போயிருந்தது. அதற்குக் கூரை இல்லே. சுழலும் கரங்களும் இல்லே. அதைக் காப்பாற்றுவது எப்படி? அதைப் புனரமைப்பது எப்படி? இந்தத் திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு செலவாகும் என்பதை விவசாயிகள் எண்ணிப் பார்த்து விட்டுப் பின்வாங்கினர்கள்.

''அதை நினேப்பது கூடப் பயனற்றது. அதை அழித்து விட்டுச் செங்கற்களேச் சமமாகப் பிரித்துக் கொள்வோம். ஒவ்வொருவருக்கும் நியாயமான பங்கு கொடுப்போம்.''

இப்படிச் சொன்னவுடன் அந்தக் காரியம் நடந்துவிட்டது. அந்த மில்லை இடித்துச் செங்கற்களைப் பிரித்துக்கொண்டார்கள்.

''காலம் எப்படி மோசமாக இருக்கிறதென்று பார்த்தாயா?'' என்று பணக்கார விவசாயியான அபனுஸிய் பிளினேவ் பெரு மூச்சு விட்டுக் கொண்டே சொன்னார். ''இந்தப் புதிய ஆட்சி இருப்பதையெல்லாம் அழிக்கப் போகிறதென்றால் அதனால் ஒரு நன்மையும் விளையப் போவதில்லை.''

''நீ தீர்க்கதரிசியல்ல; புதிய அமைப்பைப் பற்றி வறட்டுத்தனமாகக் கத்தாதே'' என்று ஸவேலிய் மஹோரடின் பதில் சொன்னார். அவர் சிறிது காலத்துக்கு முன்பு வரையிலும் படைவீரராக இருந்தவர். ''அவசரக்காரக் காட்டானே! உடம்பு குணமடைய வேண்டுமென்றால் புண்ணிலே ஏற்படும் சீழை முதலில் வெளியேற்ற வேண்டும். நீ பார்த்துக் கொண்டேயிரு. நாங்கள் கட்டப் போகும் புது மில் அதைக் காட்டிலும் பிரமாதமாக இருக்கும்.''

''நன்றாகக் கட்டு. அதற்குச் சாமான்கள் வேண்டாமா?'' என்று ஏளனமாகப் பேசினார் பிளினேவ்.

அது உண்மையாகவே கஷ்டமான நேரம்தான். செங்கற்களுக்குத் தங்கத்தைப் போல விலை சொன்னார்கள். இரும்பு அநேகமாக இல்லையென்றே சொல்லிவிடலாம். இந்தப் பொருள்கள் எங்கே கிடைக்கும் என்று கண்டுபிடிப்பது அதற்கு மேல் முடியாத காரியம்.

சீக்கிரத்தில் தெலேகினேவில் ஒரு கிராம சோவியத் அமைக்கப்பட்டது. மஹோரடின் அதன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு இரண்டு மாதத்துக்குப் பிறகு ஒரு புது மில் கட்ட வேண்டும் என்ற யோசனையை அவர் பரப்ப ஆரம்பித்தார்.

''அது அவசியம் தான். அதில் சந்தேகம் கிடையாது'' என்று விவசாயிகள் ஒத்துக் கொண்டார்கள். ''மில் இல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது. நாம் சிந்திக்காமல் நடந்து கொண்டோம். கிரியாகொவ் மீது நமக்கிருந்த ஆத்திரத்தினால் அவசரப்பட்டு விட்டோம்.''

இந்த வார்த்தைகளைக் கேட்டு கிராம சோவியத் தலைவர் உற்சாகமடைந்தார். உடனே அந்தக் காரியத்தில் ஈடுபட்டார். விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட செங்கற்களைச் சேகரிக்க வேண்டும்; கூரைக்கு இரும்புத் தகடும் ஆணிகளும் தேட வேண்டும்; இவை எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டு காரியத்தைத் தொடங்க வேண்டும்.

விவசாயிகள் தயங்கினார்கள்; கனைத்தார்கள்; நீட்டி இழுத்தார்கள்; கடைசியில் பின்வாங்கினார்கள்.

''நம்மிடம் செங்கற்கள் கிடையாதே. அவற்றை நாங்கள் அடுப்புக் கட்டுவதற்கு உபயோகப்படுத்திவிட்டோம். வீடுகளில் கணப்புக் கட்டியிருக்கிறோம். இவான் ஸினெப்ருகா தான் தன்னுடைய பங்குக்கு வந்த செங்கற்களைக் கொண்டு போய் மொத்தமாக விற்று விட்டான்'' என்றார்கள்.

''இரும்புக்கு எங்கே போவது?''

''நாம் எங்காவது ஆணித் தொழிற்சாலையை ஒளித்து வைத்திருக்கிறோமா?''

மஹோரடின் தன்னுடைய திட்டத்தை அமுலாக்குவதில் சிறிதும் முன்னேற முடியவில்லை.

''நீ என்னை நம்பவில்லையே. இப்பொழுது பார்த்தாயா?'' என்று ஏளனமாகப் பேசினார் பிளினேவ். ''நீ ஒரு படைவீரன். விவசாயி எப்படிப்பட்டவன் என்று உனக்குத் தெரியாது. அவனுக்கு ஏதாவது கிடைத்து விட்டால் அதைத் திருப்பிக் கொடுக்க மாட்டான்.''

வசந்தகாலம் முடிந்து கோடைகாலம் வந்தது. ரை வளர்ந்து அதன் தண்டுகளில் கதிர்கள் முளைத்தன. நிலத்திலிருந்து உயிர்ச்சத்தைப் பெற்றுக் கொண்டு அது வயலில் உயரமாகவும் அழகாகவும் நின்று கொண்டிருந்தது. இனி அது நிலப்பிரபுவுக்குச் சொந்தமான ரை அல்ல; இப்பொழுது அது விவசாயிகளுக்குச் சொந்தம்.

முள்ளெலியின் உடலைப் போல பார்லி கதிர்கள் முளைத்தன; அவற்றின் நீண்ட தோகைகள் மேகங்களை எட்டின. நிலப்பிரபு ஒழிக்கப்பட்டார். அது இப்பொழுது விவசாயிகளின் பார்லி.

ஓட்ஸ் வானத்தை நோக்கி மேலே மேலே வளர்ந்தது. காற்றடிக்கும் பொழுது அது குனிந்து வணங்கித் தரையைத் தொட்டது. இனி அது நிலப்பிரபுவுக்குச் சொந்தமான ஓட்ஸ் அல்ல; இப்பொழுது அது விவசாயிகளுக்குச் சொந்தம்.

இந்த வயல்கள் கண்களுக்கு விருந்தாக இருந்தன. அவற்றைப் பார்க்கும் பொழுது தனி மகிழ்ச்சி ஏற்பட்டது.

கிராமவாசிகள் மத்தியில் ஒரு கருத்து உருவாகத் தொடங்கியது.

''மஹோரடின் சொன்னது சரியான யோசனைதான். தெரியுமா?''

''மாவு மில் இல்லாமல் நாம் என்ன செய்ய முடியும்?''

''அப்புறம் வீட்டுக் கோழி கதை மாதிரி ஆகிவிடும்.''

''நாய்கள் கூட நம்மைப் பார்த்துக் குரைக்கும்.''

''பண்க்காரர்களுக்கும் மேன் மக்களுக்குமா நாம் பாடுபடுகிறோம்? நமக்காக ஒரு காரியத்தைச் செய்வதில் கூடத் தயக்கம் வேண்டுமா?''

''தலைவர் அவர்களே! விவசாயிகள் கூட்டம் ஒன்று போட வேண்டியதுதானே.''

கூட்டம் நடந்தது. ஏராளமான விவசாயிகள் வந்திருந்தார்கள். ஒருவர் பேசுவதை மற்றவர்கள் கேட்க முடியாமல் எல்லோரும் ஒரே சமயத்தில் கூச்சல் போட்டார்கள்.

''குடிமக்களே!'' மஹோாடின் அவர்களை அமைதியாக இருக்குமாறு சொல்லிப் பார்த்தார். ''அமைதி! குடிமக்களே! அமைதியாக இருங்கள். யாரும் பேச விரும்பினல் இங்கே வந்து பேச வேண்டும்.''

டோர்மிடோன்ட் ஸவேலியேவ் என்ற விவசாயி பேசுவதற்கு முன்வந்தார்.

''அதிகமாகப் பேச என்ன இருக்கிறது? நாம் மாவு மில்லைக் கட்ட வேண்டும். அவ்வளவுதான்'' என்ருர்.

''ஆமாம். மாவு மில்லைக் கட்டுவோம். மாவு மில்லைக் கட்டுவோம்'' என்று விவசாயிகள் ஆமோதித்தார்கள்.

''ஒரு புது மாவு மில்.''

''நன்ருக வேலை செய்யக் கூடிய மாவு மில்.''

''நம்முடைய குழந்தைகள், பேரக் குழந்தைகள் காலம் வரை இருக்கும்படி உறுதியான மாவுமில்.''

மஹோாடின் சிரித்தார். பிறகு அவர்களை ஆத்திரமூட்டுகின்ற வகையில் பேசினர்.

''மாவு மில்லை எப்படிக் கட்டுவது? நம்மிடம் செங்கற்கள் இல்லை; இரும்பும் இல்லை. ஆணிகளுக்கு என்ன செய்வது? நாம் ஆணித் தொழிற்சாலை வைத்திருக்கிருேமா, என்ன?''

''செங்கற்கள் தானே வேண்டும். நாங்கள் தருகிருேம்'' என்று அந்தக் கூட்டம் ஒரே குரலில் முழங்கியது. ''கிரியாகொவிடமிருந்து எடுத்தவற்றை நாங்கள் பத்திரமாக வைத்திருக்கிருேம். அவற்றைக் கொடுக்கிருேம். மேலும் வேண்டுமென்ருல் நாங்கள் தேடிக் கண்டுபிடிக்கிருேம். பக்கத்து கிராமங்களில் அல்லது வொலோஷினே விவசாயிகளிடமிருந்து கிடைக்கும். மாவு மில் அவர்களுக்கும் உதவியாக இருக்கும். அவர்களுடைய நிலப்பிரபுவின் குதிரை லாயத்தை அழித்தபொழுது எடுத்த செங்கற்கள் அவர்களிடம் இருக்கின்றன.''

''சரி. செங்கற்கள் இருக்கின்றன. இரும்புக்கு என்ன செய்வது?'' என்று கேட்டார் மஹோாடின்.

''நாங்கள் இரும்பைத் தேடிக் கண்டுபிடிப்போம்'' என்று விவசாயிகள் குறுக்கிட்டுப் பேசினுர்கள். லிஸ்யா நோராவிலிருக்கும் விவசாயிகளிடம் போவோம். அந்த நிலப்பிரபுவின் நாய்ப்பட்டியின் கூரையைப் பிரித்த பொழுது கிடைத்த இரும்பு அவர்களிடம் இருக்கிறது.''

''ஆணிகளுக்கு என்ன செய்வது?''

''நாங்கள் தருகிறோம். வீட்டுக்கு இரண்டு ஆணிகள் வீதம் வசூலிப்போம். அது போதவில்லை யென்றால் அடா மொவோ விவசாயிகளிடம் கேட்போம். அந்த நிலப்பிரபுவுக்குச் சொந்தமான வேலியைப் பிரித்தபொழுது ஒரு கூடை ஆணி அவர்களுக்குக் கிடைத்தது.''

கூட்டம் முடிந்தபிறகு மஹோரடின் பிளினேவைப் பார்த்துக் கேட்டார். ''விவசாயியைப் பற்றி இப்பொழுது என்ன நினைக்கிறீர்கள்? அவன் எப்படிப்பட்டவன் என்று புரிகிறதா?''

''இது ஆச்சரியமாக இருக்கிறது. எனக்குச் சிறிதும் புரியவில்லை'' என்று பிளினேவ் கைகளை ஆட்டிக்கொண்டு கூறினார்.

விவசாயிகள் பாட்டுப் பாடிக்கொண்டும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டும் உற்சாகமாக அந்த மாவுமில்லைக் கட்டினார்கள். வொலோஷினே, அடாமொவோ, லிஸ்யா நோரா கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும் அந்த வேலையில் உதவி செய்தார்கள். மாவு மில்லின் அஸ்திவாரத்தை நன்றாகப் போட்டு உறுதியான கட்டிடமாகக் கட்டினார்கள். அவர்களுடைய குழந்தைகள், பேரக் குழந்தைகள் காலத்துக்கும் அந்த மாவு மில் இருக்கும்.

இன்றும் அந்த மாவு மில்லைப் பார்க்கலாம். மாகாணத் தலைநகரத்திலிருந்து தெலேகினே கிராமத்துக்குச் செல்லும் பாதையில் நீங்கள் போகும் பொழுது அந்தப் பாதையின் வலது பக்கத்தில், குன்றின் மீது அந்த மாவு மில் இருப்பதைப் பார்க்கலாம். சுழலும் கரங்கள் மட்டும் இப்பொழுது கிடையாது. அதில் காற்றுக்குப் பதிலாக நீராவிச் சக்தி பயன்படுத்தப்படுகிறது.

சீமான்களுடைய விளையாட்டு

நிலப்பிரபு வோடொலேயெவும் ஆசிரியர் பினொலொவும் நில அளவையாளர் டியாட்லொவும் மதகுரு கிரேஹொவோடொவும் குரோக்கெட் விளையாட்டில் ஜோடி சேர்ந்து விளையாடுவதை மிகவும் விரும்பினார்கள்.

குரோக்கெட் அமைதியான, நாகரிகமான விளையாட்டு. ஒரு சுத்தியலைக் கொண்டு பந்தைத் தட்டி விளையாட்டு மைதானத்தில் முன்னும் பின்னும் அதைக் கொண்டு போவதுதான் அந்த விளையாட்டு.

பஹோம் அரேபின் அந்த கிராமத்தின் தலைமையான நிலப்பிரபுவின் பண்ணையைச் சுற்றிப் போகும் பொழுதெல்லாம் அங்கே இந்த கனவான்கள் விளையாடிக் கொண்டிருப்பதைச் சற்று நேரம் நின்று பார்த்துவிட்டுப் போவான்.

''சீமான்களுடைய விளையாட்டு. எவ்வளவு அமைதியாக விளையாடுகிறார்கள்'' என்று நினைத்துக் கொள்வான். ''நம்முடைய விளையாட்டுக்களைப் போலவா! முஷ்டிகளால் ஒருவரையொருவர் குத்தி உடம்பிலிருந்து இரத்தம் வழிந்து...''

வோடொலேயெவின் சொத்தை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்த பொழுது அரேபின் அந்த குரோக்கெட் விளையாட்டுச் சாதனங்களைத் தனக்கு எடுத்துக் கொண்டான்.

''அவன் உருப்படவே மாட்டான். கெட்டிக் காரத்தனமே கிடையாது'' என்று அவன் பக்கத்து வீட்டுக்காரர்கள் சொல்லிச் சிரித்தார்கள். ''அவனணிந்திருக்கும் கோட்டு கிழிந்து தொங்குகிறது. இரண்டு வருடகாலமாக ஒரே காலணியை உபயோகித்து வருகிறான். வோடொலேயெவின் காலணிகளில் ஒரு ஜோடியைக் கொடுக்குமாறு கேட்டிருக்கலாம்; அல்லது அவருடைய கஃப்தானைக் கேட்டிருக்கலாம். அதை விட்டுவிட்டு இதை எடுத்துக்கொள்கிறானே. பணக்காரர்கள் விளையாட்டை விளையாடிப் பொழுதுபோக்கப் போகிறானா?'' என்று பேசிக் கொண்டார்கள்.

அரேபினும் அவன் மகன் கிரிஷாவும் குரோக்கெட் விளையாட்டு விளையாடத் தொடங்கினார்கள். அந்த கிராம விவசாயிகள் வேலிக்கு வெளியே நின்று அவர்களுடைய விளையாட்டைப் பார்த்துச் சிரித்தார்கள்.

''அரேபின் வோடொலேயெவ் மாதிரி ஆகிவிட்டானா?''

''கிரிஷா டியாட்லொவ் மாதிரி நடிக்கிறானா? ஆமாம். டியாட்லொவ்தான். சந்தேகமே வேண்டாம்.''

''அந்தப் பிளுலொவ், மதகுரு கிரேஹொவோடொவைப் பின்பற்றுகிறார்கள் போலும்.''

விவசாயிகளுடைய உரையாடல் தன்னுடைய காதில் விழாதது போல அரேபின் நடித்தான். அந்த மைதானத்தில் முன்னும் பின்னும் சரியான திசையில் பந்துகளை அடிக்கும் முயற்சியில் தன் கவனத்தைக் குவித்தான்.

அந்த விளையாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் விவசாயிகளிடம் மெதுவாக அதிகரித்த பொழுது அவர்களுடைய கேலிப் பேச்சும் சிரிப்பும் படிப்படியாகக் குறைந்தது. அந்த விளையாட்டில் கலந்து கொள்ள முதலில் வந்த விவசாயி புரோஹொர் நெமீடொவ்.

''பஹோம்! நான் ஒரு அடி அடிக்கட்டுமா?'' என்று அவன் தயங்கிக் கொண்டே கேட்டான்.

அரேபின் நெமீடொவை விளையாட்டில் சேர்த்துக் கொண்டான். நெமீடொவைத் தொடர்ந்து கொரீடொவும் அவனுக்குப் பிறகு ஸெச்கினும் ஸெச்கினுக்குப் பிறகு கிரெச் கினும் அவனுக்குப் பிறகு இன்னும் பலரும் வந்தனர்.

அந்த விவசாயிகளுக்கு குரோக்கெட் விளையாட்டு பிடித்து விட்டது. அதன் பிறகு ஓய்வு கிடைக்கும் பொழுதெல்லாம் அவர்கள் பஹோம் அரேபினுடைய வீட்டுக்கு வரத் தொடங்கினர்கள்.

அறுவடைத் திருவிழா நெருங்கிக் கொண்டிருந்தது. அதைச் சிறப்பாகக் கொண்டாடுவது அவர்களுடைய வழக் கம்.

விவசாயிகள் அதிகமாகக் குடித்து விட்டுத் தொண்டை கரகரப்படையும் வரை பாட்டுக்களைப் பாடுவார்கள். அதன் பிறகு சண்டைகள் ஆரம்பமாகும். முதலில் ஒருவருக்கெதி ராக மற்ருெருவர். பிறகு ஒரு தெருவுக்கும் மற்ருெரு தெரு வுக்கும் சண்டை நடைபெறும். கடைசியில் கிராமங்களே மொத்தமாக இந்தக் கைகலப்பில் ஈடுபடும்.

இந்த வருடத்தில் திருவிழாவைக் கொண்டாடுவதற்கு வழக்கமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கிராமப்புற மருத்துவர் ஸொரோக்கின் வரப்போகும் விழாவைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட்டார். ''மண்டைகள் உடையும். கட்டுப் போட வேண்டும். கட்டை வைத்துக் கட்ட வேண் டும். ஏராளமான ஐயோடின் மருந்தை வீணுக்க வேண்டுமே'' என்று அவர் நினைத்தார்.

திருவிழா நாளும் வந்தது. ஆனுல் காயமடைந்தவர்கள் யாரும் வரவில்லை.

''என்ன நடக்கிறது?'' என்று ஸொரோக்கின் ஆச்சரியப் பட்டார். கிராமத்துக்குள் போய்ப் பார்ப்போம் என்று புறப் பட்டார். எங்கும் அமைதி, நிசப்தம். பஹோம் அரேபி னுடைய குடிசை இருக்கும் பக்கத்துத் தெருவ்க்குள் நுழைந் தார். அங்கே ஒரு கூட்டம் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். அங்கே ஒரு கிராமத் திருவிழா நடப்பது போலத் தோன்றியது. ஏனென்ருல் அவ்வளவு பேர் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். ஸொரோக்கின் அந்தக் கூட்டத்தில் நுழைந்து இடித்துக் கொண்டு முன்னுல் போனுர். அங்கே ஒரு சிறு மைதானத்தைப் பார்த்தார். அதில் வெவ்வேறு இடங்களில் குச்சிகள் ஊன்றப்பட்டிருந்தன. விவசாயிகள் மரச் சுத்தியல்களைக் கைகளில் வைத்திருந்தார்கள். அந்தப் பகுதி முழுவதும் பந்துகள் சிதறிக் கிடந்தன.

''அட! இது குரோக்கெட் விளையாட்டல்லவா?'' என்று அதைப் பார்த்து நாட்டுப்புற மருத்துவர் ஆச்சரியமடைந்

தார். ''என்ன விசித்திரம். நான் இப்பொழுதுதான் முதல் தடவையாக இதைப் பார்க்கிறேன். சீமான்களுடைய விளையாட்டு. அமைதியான பொழுது போக்கு. விவசாயிகள் விளையாடுகிறார்களே...''

அந்த குரோக்கெட் விளையாட்டு ஒரு தொடக்கம் என்று தான் சொல்ல வேண்டும். வெகு சீக்கிரத்தில் மற்ற நடவடிக்கைகளும் அந்த கிராமத்தில் தொடங்கின.

அங்கே படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டது. பத்திரிகைகள் வரவழைக்கப்பட்டன. செஸ் விளையாட்டுப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு ஒரு புதுப் பள்ளிக்கூடமும் கிராமப் பொழுது போக்கு மன்றமும் ஆரம்பிக்கப்பட்டது. வானொலி வந்தது. மின்சாரம் வீடுகளை ஒளிமயமாக்கியது.

இவை அனைத்தும் ஒரே சமயத்தில் வரவில்லை; ஒரே நாளிலும் வந்துவிடவில்லை. அதற்குச் சிறிது காலம் தேவைப்பட்டது.

புது ஆசிரியர்

மாலியே கோச்கி கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் வேலை செய்வதற்காக ஒரு புது நபர் வந்தார். அவர் பால்டிக் கடற்பகுதியைச் சேர்ந்த மாலுமி; அரோரா என்ற போர்க் கப்பலின் மாலுமிகளில் ஒருவர். அவருக்கு ஆசிரியர் வேலை செய்த அனுபவம் கிடையாது. அந்தப் பள்ளியில் முன்பு வேலை செய்த ஆசிரியர் திடீரென்று எங்கோ போய்விட்டார். எனவே அந்த இடத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர் வருகின்ற வரை அந்த வேலையைச் செய்ய எண்ணினார்.

அவர் வகுப்புக்கு வந்த முதல் நாளன்று குழந்தைகள் அமைதியாக இருந்தார்கள். அவர் அரிச்சுவடி சொல்லிக் கொடுப்பார் என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் திடீரென்று அந்த மாலுமி அரோராவைப் பற்றி அவர்களிடம் சொல்ல ஆரம்பித்தார். பிறகு ஜாரின் மாரிக் கால அரண்மனையை முற்றுகையிட்டதையும் அதைக் கைப்பற்றியதையும் பற்றிச் சொன்னார். போல்ஷிவிக் கட்சி, சோவியத் ஆட்சியதிகாரம், லெனின் என்ற விஷயங்களைப் பற்றி அடுத்தபடியாகப் பாடம் நடத்தினார்.

குழந்தைகள் அவற்றை அதிகமான ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த மாலுமியை உற்றுப் பார்த்துக் கொண்டு அவர் சொல்கின்ற செய்திகளை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இப்படிச் சில நாட்கள் கழிந்த பிறகு, தான் சொன்ன வற்றை அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டார்களா என் பதை அந்த மாலுமி சோதனை செய்யத் தொடங்கினர்.

''அரோரா என்பது என்ன?''

''அரோரா என்பது பால்டிக் கடற்படையைச் சேர்ந்த புரட்சிகரமான மாலுமிகள் இருந்த கப்பலின் பெயர். மாரிக் கால அரண்மனையின் மீது நடை பெற்ற தாக்குதலின் போது 'அரோராவின்' பீரங்கிகள் மாரிக்கால அரண்மனையைக் குறி வைத்துச் சுட்டன.''

''பிரமாதம். சரியான பதில். போல்ஷிவிக் கட்சி என்றல் என்ன வென்று இப்பொழுது சொல்லுங்கள்.''

''சிறந்தவை எல்லாவற்றையும் பிரதிநிதித்துவப்படுத்து வது போல்ஷிவிக் கட்சி. நிலத்தை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதும் தொழிற்சாலைகளைத் தொழிலாளர் களின் உடைமையாக்குவதும் அதன் கொள்கைகள். அது மக் களுக்கிடையே சமாதானம் நிலவுவதற்காகப் பாடுபடுகிறது'' என்று குழந்தைகள் சட்டென்று பதில் கூறினர்கள்.

''சரி'' என்று மாலுமி தலையை அசைத்தார். ''ஆனல் சோவியத் ஆட்சியதிகாரம் என்றல் என்ன?''

''நாட்டை ஜாரோ, முதலாளித்துவ வர்க்கத்தினரோ ஆட்சி செய்வதற்கு மாருக உழைக்கும் மக்கள் ஆட்சி செய் வதற்குப் பெயர்.''

''சரி. லெனினைப் பற்றி யார் சொல்ல முடியும்?''

''நான், நான், நான்'' என்று குழந்தைகள் ஒரே சமயத் தில் கூச்சலிட்டன.

''எரிமேய் டோரொப்பிகின்! நீ சொல்.''

டோரொப்பிகின் குதித்தெழுந்தான்.

''லெனின் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் தலைவர். லெனின் சிறையில் பல ஆண்டுகளைக் கழித்தார்; நாடு கடத்தப் பட்டார். லெனின் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத் துக்குத் தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித் தார்.''

மாலுமி மகிழ்ச்சியடைந்தார். குழந்தைகள் எவ்வளவு விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிருர்கள், பாருங் கள்!

அதற்குப் பிறகு, அ, ஆ எழுதுவது எப்படி, ஒன்றையும் ஒன்றையும் இரண்டையும் இரண்டையும் கூட்டினல் வருவது என்ன என்று மாலுமி குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத் தார். அவர் அதற்கு மேல் சொல்லித்தர முடியவில்லை. ஏனென்றல் இந்தக் கட்டத்தில் அவரை வரச் சொல்லி விட் டார்கள்.

சீக்கிரமாகவே, பயிற்சி பெற்ற ஆசிரியை அந்த கிராமத்துக்கு வந்தாள். அவள் போல்ஷிவிக் கட்சியைச் சேர்ந்தவள். பெயர் ஸோயா.

''சரி. என்னவெல்லாம் படித்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள்.''

''நாங்கள் அ, ஆ எழுதப் படித்திருக்கிறோம்.''

''ஒன்றையும் ஒன்றையும் இரண்டையும் இரண்டையும் கூட்டுவதற்குப் படித்திருக்கிறோம்.''

''அப்புறம்?''

குழந்தைகள் மௌனமாக இருந்தார்கள்.

''அதற்கு மேல் படிக்க முடியவில்லை. அந்த மாலுமியை வரச்சொல்லி விட்டார்கள்.

''இவ்வளவுதானா? இன்னும் அதிகமாகச் சொல்லிக் கொடுத்திருக்கலாமே? நீங்கள் சரியாகப் படிக்கவில்லை என்று நினைக்கிறேன்.''

இந்த வார்த்தைகளைக் கேட்டபொழுது குழந்தைகளுக்கு வேதனையாக இருந்தது.

எரிமேய் டோரொப்பிகின் எழுந்து நின்றான்.

''நாங்கள் லெனினைப் பற்றித் தெரிந்து கொண்டோம்.''

''ஆமாம், ஆமாம்'' என்று குழந்தைகள் ஒரே சமயத்தில் கத்தின.

''சோவியத் ஆட்சியதிகாரத்தைப் பற்றிக் கற்றுக் கொண்டோம்.''

''போல்ஷிவிக் கட்சியைப் பற்றிக் கற்றுக் கொண்டோம்.''

''மாரிக்கால அரண்மனை மீது நடைபெற்ற தாக்குதலையும் அதைக் கைப்பற்றியதையும் பற்றித் தெரிந்து கொண்டோம்.''

ஸோயா சிரித்தாள்.

''இவற்றை யெல்லாம் சொல்லிக் கொடுத்தது யார்?''

''அரோரா கப்பலைச் சேர்ந்த மாலுமிதான் சொல்லிக் கொடுத்தார்.''

''அந்த பால்டிக் மாலுமி சிறந்த திறமைசாலியாகவே இருக்க வேண்டும். அவர் அடிப்படைகளிலிருந்து தொடங்கியிருக்கிறார்'' என்று ஸோயா மனதில் நினைத்தாள். அந்த மாலுமியைச் சந்திக்க முடியாது போய்விட்டதை நினைத்து வருந்தினாள். அந்த மாலுமி போய்விட்டாரே என்று குழந்தைகளும் வருந்தினார்கள். ஆனால் ஒரு மாலுமி ஆசிரியர் அல்லவே; அவருக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கும்.

இராஜ குதிரை

சோவியத் ஆட்சி ஏற்பட்டவுடன் அரண்மனைக் குதிரை லாயத்தை மூடிவிட்டார்கள். ஜார் வைத்திருந்த உயர்ந்த ஜாதிக் குதிரைகள் எல்லாம் ருஷ்யாவில் பல்வேறு இடங்களுக்கும் அனுப்பப்பட்டன.

மார்க்கீஸ் என்ற பெயருள்ள குதிரை ஸகாரொவ்கா கிராமத்துக்கு வந்து சேர்ந்தது. அந்தக் குதிரையை யாருக்குக் கொடுப்பதென்று சீட்டுப் போடுவதற்காகக் குதிரை இல்லாதிருக்கும் விவசாயிகளின் கூட்டத்தை நடத்தினார்கள். குஸ்மா போலொசுகினுக்குச் சீட்டு விழுந்தது.

எதிர்பாராமல் வந்த அதிர்ஷ்டம் அந்த விவசாயியைத் திக்குமுக்காடச் செய்தது. தனக்கேற்பட்ட புதிய மகிழ்ச்சியை அவனால் நம்ப முடியவில்லை. அந்தக் குதிரை உயரமாக, கம்பீரமாக இருந்தது. அதன் பிடரியும் வாலும் நன்கு கத்தரித்து விடப்பட்டிருந்தன. கால்கள் அழகாக இருந்தன; கழுத்து நன்கு வளைந்திருந்தது. இது சாதாரணக் குதிரை அல்ல; ராஜ குதிரை.

போலொசுகின் அந்தக் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து அதைத் தன் வீட்டுக்குக் கொண்டு சென்றான். அவனைத் தொடர்ந்து விவசாயிகள் கும்பலாகப் போனார்கள்.

''அருமையான குதிரை!''

''ஜார் சவாரி செய்த குதிரையாக இருக்கும்.''

''இல்லை. ஜாரின் ராணிதான் சவாரி செய்திருப்பாள்'' என்று சொல்லிச் சிரித்தார்கள் விவசாயிகள்.

''ஒரு சந்தேகம். இந்தக் குதிரையை உழுவதற்குப் பயன்படுத்த முடியுமா? அதை எப்பொழுதாவது ஏர்க்காலில் பூட்டியிருப்பார்களா?''

போலொசுகின் அந்தக் குதிரையைத் தன்னுடைய வீட்டுக்குப் பின்னாலிருந்த கொட்டகைக்குக் கொண்டு சென்றான். அங்கேயிருந்த வண்டியில் குதிரையைக் கட்ட முயன்றான். குதிரை கால்களை உதைத்தது; தன்னுடைய குளம்புகளால் பூமியை ஓங்கி மிதித்துத் தன்னுடைய எதிர்ப்பைக் காட்டியது.

''அட பிசாசே'' என்று போலொசுகின் திட்டினான். ''பொறு! பேசாமல் நில்! ஓ! ஓ!''

என்ன சொல்லியும் பயனில்லை.

விவசாயிகள் சிரித்தார்கள்.

''நீ கொஞ்சம் அன்பாக, இன்னும் சற்று ஆதரவாகப் பேச வேண்டும்'' என்று போதனை செய்தான் ஒருவன்.

''அதற்கு ருஷ்ய மொழி தெரியாதிருக்கலாம். நீ பிரெஞ்சு மொழியில் பேச வேண்டும்'' என்று கேலியாகச் சொன்னான் இன்னொருவன்.

''நீ அந்தக் குதிரையை கௌரவமாகக் கூப்பிட வேண்டும். பட்டங்களைச் சொல்லிக் கூப்பிட்டுப் பார்.''

குஸ்மாவுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. மார்க்கீஸை வைக்கோற் கொல்லைக்குள் விரட்டினான். விவசாயிகள் கலைந்து போனார்கள்.

அந்தக் குதிரைக்குக் கடிவாள இரும்பைக் அடிப்பதற்கும், அதை வண்டியில் பூட்டுவதற்கும் ஒரு வார காலம் குஸ்மா கடுமையான முயற்சிகளைச் செய்தான். ஆனால் பயனில்லை. அந்தக் குதிரையின் கூர்மையான குளம்புகளினால் பல தடவைகள் அடிவாங்கியது தான் மிச்சம்.

''பிசாசே! நீ எப்படியாவது தொலைந்து போ'' என்று கடைசியில் கோபத்தை அடக்க முடியாமல் சொன்னான். ''யாராவது ஒரு ஜிப்சியிடம் உன்னை விற்பனை செய்து விட்டுத்தான் வேறு காரியம் பார்க்க வேண்டும்.''

அவன் அப்படியே செய்தான்.

ஆனால் அதற்குப் பிறகு அந்த கிராம சோவியத்துக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் குதிரை ஸகாரொரவ்காவுக்குத் தவறாக அனுப்பப்பட்டு விட்டதென்றும், அது மிகவும் அபூர்வமான ஜாதிக் குதிரை என்பதால் ஒரேல் என்ற இடத்திலிருக்கும் பொலி குதிரைப் பண்ணையில் அதை உடனடியாக ஒப்படைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விவசாயிகள் குஸ்மாவைக் கோபமாகத் திட்டினார்கள்.

''அதை விற்பனை செய்யுமளவுக்கு உனக்கு தைரியமா?''

''அபூர்வமான ஜாதிக் குதிரையாமே. இப்பொழுது அது எங்கே இருக்கிறதோ? கடவுளுக்குத்தான் தெரியும்.''

''உடனே புறப்படு. போய் மார்க்கீஸைக் கண்டு பிடித்துக் கொண்டு வா.''

அவர்களுடைய கோபத்திலிருந்து தன்னை சமாளித்துக் கொள்வதற்குக் குஸ்மா பெரும்பாடு பட்டான். அந்த ஜிப்சியைத் தேடி உடனே புறப்பட்டான். கிராமம் கிராமமாக, சந்தை சந்தையாகத் தேடிக் கடைசியில் கண்டுபிடித்தான்.

''குதிரையைத் திருப்பிக் கொடு'' என்றான்.

''எதற்காக?''

போலொசுகின் அந்த ஜிப்சியிடம் நிலைமையை விளக்கினான்.

ஜிப்சி சிரித்தான்.

''நீ தாமதமாக வந்திருக்கிறாய். நான் முன்பே குதிரையை விற்றுவிட்டேன்.''

''யாரிடம்?''

''பக்கத்து மாவட்டத்திலுள்ள பணக்கார விவசாயியான நிக்கிபோர் உவாரொவிடம் விற்பனை செய்தேன்.''

போலொசுகின் உடனே அந்த மாவட்டத்துக்கு விரைந்து சென்று நிக்கிபோர் உவாரொவைக் கண்டுபிடித்தான்.

''குதிரையைத் திருப்பிக் கொடுங்கள்.''

''நீ எதைப் பற்றிப் பேசுகிறாய்?''

தனக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைக் குஸ்மா மறுபடியும் விளக்கிக் கூறினன்.

''அப்படியா? நான் அந்தக் குதிரையைக் கொடுத்துவிட்டேனே'' என்றார் அந்தப் பணக்கார விவசாயி.

''யாரிடம் கொடுத்தீர்கள்?''

''என்னுடைய மருமகனிடம் கொடுத்தேன். அவருடைய பண்ணையில் இருக்கிறது.''

போலொசுகின் அந்தப் பண்ணைக்கு ஓடினன். அவருடைய மருமகனைச் சந்தித்தான்.

''குதிரையைக் கொடு'' என்று அதட்டலாகச் சொன்னன்.

''நீ எதைப் பற்றிப் பேசுகிறாய்?''

மூன்றாவது தடவையாக குஸ்மா விளக்கிக் கூறினன்.

''நீ தாமதமாக வந்திருக்கிறாய். நான் அதைக் கொடுத்துவிட்டு வேறொன்று வாங்கிவிட்டேன்.''

''அடகடவுளே!'' என்று சொல்லித் துடித்தான் குஸ்மா.

''ஆனால் குதிரை சமீபத்தில்தான் இருக்கிறது. ஸாக்ரெபேட்னெயே கிராமத்தில் பெரெப்ளுயேவ் என்ற நபரிடம் இருக்கிறது. அந்த ஊரில் அவர் கடை வைத்திருக்கிறார்.''

போலொசுகின் ஸாக்ரெபேட்னெயே கிராமத்துக்கு நடந்தான். அந்த ஊரில் கடைக்காரரான பெரெப்ளுயேவ் முன்னால் போய் நின்றான்.

''என் குதிரையைக் கொடுங்கள்.''

''இது என்ன வேடிக்கை?''

போலொசுகின் கதை முழுவதையும் திரும்பச் சொன்னன்.

''சரி. கொடுக்கிறேன்'' என்று ஒத்துக்கொண்டார் கடைக்காரர். ''ஆனால் அதன் விலை இப்பொழுது அதிகரித்துவிட்டது. சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் இப்பொழுது அதற்கு மூன்று மடங்கு விலை தர வேண்டும்.''

''உனக்குப் பைத்தியமா? அந்தக் குதிரை அரசாங்கத்துக்குத் தேவைப்படுகிறது. இனப் பெருக்கத்துக்காக அதை ஓரேல் பொலி குதிரைப் பண்ணைக்கு அனுப்ப வேண்டும்'' என்று குஸ்மா கத்தினன்.

''விலையைச் சொல்லிவிட்டேன். ஒத்துக்கொள்வதும் ஒத்துக் கொள்ளாதிருப்பதும் உன்னுடைய பிரச்சினை. எனக்கும் அந்தக் குதிரை உபயோகப்படும்'' என்றார் அவர்.

போலொசுகின் ஸகாரொவ்கா கிராமத்துக்குத் திரும்பினான். அந்த வியாபாரி பெரெப்ளுயேவ் சொன்னதை மற்ற விவசாயிகளிடம் தெரிவித்தான்.

விவசாயிகள் மறுபடியும் ஆத்திரமாகப் பேசினார்கள். குதிரையை விற்றதற்காகக் குஸ்மாவை மட்டரகமாகத் திட்டினார்கள். கடைசியில் பின்வரும் முடிவைச் செய்தார்கள்.

''அந்தப் பெரெப்ளுயேவ் எப்படியாவது தொலையட்டும். பணமூட்டைகளான வியாபாரிகள் சமூகத்தின் மொத்தத் தேவைகளைப் புரிந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சோவியத் ஆட்சி வியாபாரிகளை ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை; அது சாதாரண விவசாயியின் நலன்களை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.''

மார்க்கீஸைத் திரும்ப வாங்குவதற்குத் தேவையான பணத்தை விவசாயிகள் திரட்டினார்கள். குஸ்மாவிடம் பணத்தைக் கொடுத்துக் குதிரையைத் திரும்ப வாங்கிக் கொண்டு வா என்று அனுப்பினார்கள்.

''குதிரை என்ன அவ்வளவு முக்கியமா? இதிலிருக்கின்ற பிரச்சினையே வேறு'' என்று விவசாயிகள் பேசிக் கொண்டார்கள். ''எவ்வளவு முக்கியமான பிரச்சினைகள் சோவியத் அதிகாரிகளை எதிர்நோக்கியிருக்கின்றன என்பதை நினைத்துப் பாருங்கள். இந்த நெருக்கடியிலும் கூட அவர்கள் மார்க்கீஸை நினைவு வைத்திருக்கிறார்கள். புதிய ஆட்சியின் தோள்களில் பொறுப்பான தலை இருக்கிறது; செய்யப்பட வேண்டிய காரியங்களைப் பற்றி அதற்குச் சரியான தெளிவு இருக்கிறது.''

வானம்

பழைய குடியிருப்பு என்னும் ஒரு கிராமத்துக்கு சோவியத் ஆட்சி வந்தது. பிரபுக்களுடைய நிலம், சொத்துக்கள், இன்னும் மற்ற பொருள்களைப் பெரியவர்கள் எப்படிப் பிரித்துக்கொண்டார்கள் என்பதை அந்த கிராமத்துக் குழந்தைகள் கவனித்தார்கள்; பிறகு அவர்களும் அப்படிச் செய்ய வேண்டுமென்று கனவு கண்டார்கள்.

''நாமும் எதையாவது பிரித்துக்கொள்வதைப் பற்றி யோசிக்க வேண்டும்.''

அங்கே பிரித்துக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை, எல்லாவற்றையும் முன்பே பிரித்தாகிவிட்டது. கோல்கா ரியாபொவ் திடீரென்று ஒரு யோசனை சொன்னான்.

''நாம் வானத்தைப் பிரித்துக்கொண்டால் என்ன?''

''இது ஒரு யோசனையா? நம்மால் வானத்தைப் பிரிக்க முடியுமா?'' என்று அவனுடைய நண்பர்கள் சிரித்தார்கள்.

''எப்படி என்று சொல்கிறேன்: எல்லோருக்கும் சம பங்கு.''

''அது சரி. பிரித்துக் கொண்டதும் அடுத்தபடியாக என்ன செய்வது? நம்முடைய பங்குக்குக் கிடைத்திருக்கும் வானத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறோம்?''

''இது என்ன கேள்வி? உனக்கு விருப்பமானதைச் செய். அதில் குடிசை கட்டு; உழுது பயிரிடு; குதிரைகளை மேய விடு.''

இந்த யோசனை குழந்தைகளுக்கு ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. அவர்கள் நான்கு பேர்கள்: கோல்கா ரியாபொவ், எரியோம்கா டுடாரொவ், கிரிஷாட்கா கொபீலின், மார்புட்கா டிகாய்.

''உன் யோசனைப்படியே இருக்கட்டும். வானத்தைப் பிரித்துக் கொள்வதென்றால் நாம் அதைச் செய்யலாமே.''

அவர்கள் வானத்தின் குறுக்கும் நெடுக்கும் சில கோடுகளை இழுத்தார்கள். பிறகு ஒவ்வொருவருக்கும் எந்தப் பகுதியைக் கொடுப்பதென்று முடிவு செய்வதற்காகச் சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள்.

கிராமத்துக்கு வெளியே இருந்த புல் வெளியில் குழந்தைகள் கூடினார்கள். அங்கே தரையில் மல்லாந்து படுத்துக் கொண்டு வானத்தை நோக்கிக் கண்களைத் திருப்பினார்கள். இது உனக்குச் சொந்தமானது என்ற உணர்ச்சி நல்லது தான். உனக்குத் தோன்றியதைச் செய். உன் விருப்பம் போல நடந்து கொள்.

எரியோம்கா டுடாரொவ் தனக்குக் கிடைத்த பகுதியில் தானியம் பயிரிட முடிவு செய்தான். அவனுடைய வயலில் ரை தானியத்தின் பொன்னிறக் கதிர்கள் நிறைந்தன. கிரிஷாட்கா கொபீலின் மாலை நேரத்தில் தன்னுடைய குதிரைகளை மேய்ச்சலுக்குக் கூட்டிக் கொண்டு போனான். வானத்தின் தொலைக் கோடியில் ஒரு சிறு நெருப்பு மூட்டினான். மார்புட்கா டிகாய் தன்னுடைய பகுதியில் காமோமைல்லையும் வேறு மலர்ச் செடிகளையும் நட்டாள்.

கோல்கா ரியாபொவும் இதே மாதிரிச் செயலில் ஈடுபட்டிருந்தான். வருடங்கள் உருண்டோடுவதாகக் கற்பனை செய்

தான். அவன் கண்கள் விரிந்தன; வாய் லேசாகத் திறந்திருந்தது. முரசடிக்கும் சத்தம் கேட்ட பொழுது அவனுக்கு ஆச்சரிய மாக இருந்தது. பேரிகை முழக்கம் சுகமாகக் காதில் நுழைந் தது. வானத்தின் குறுக்கே ஒரு பதாகை, சிகப்புப் பதாகை விரிந்து தோன்றியது. ஈட்டியைக் கையில் வைத்துக்கொண்டு ஒரு முரட்டுக் குதிரை மீது அவன் உட்கார்ந்திருக்கும் காட்சி கோல்காவுக்குத் தெரிந்தது.

வானம் வயல்களோடு இணைகின்ற விளிம்பில், சூரியனின் அஸ்தமனத்தை மறைத்துக் கொண்டிருக்கும் மேகங்களி லிருந்து பயங்கரமான இராட்சசர்கள் எண்ணற்ற அளவில் வந்தார்கள்.

''அவர்களை விரட்டுவோம்! ஒழிப்போம்!'' என்று கத்திக் கொண்டு வீரன் கோல்கா எதிரிகளை நோக்கிப் பாய்ந்தான். ''ஹுரே!'' என்று தன் கரங்களைச் சுழற்றினான்.

''என்ன சமாசாரம்?'' என்று எரியோம்கா டுடாரொவ் தன்னுடைய நண்பனின் தோளில் தட்டினான்.

கோல்கா குழப்பமடைந்திருந்தபடியால் பதில் எதுவும் சொல்லவில்லை. குதிரைகளின் குளம்படிச் சத்தம் அவன் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருந்தது. அவன் கைகள் ஈட்டியை இன்னும் இறுக்கமாகப் பிடித்துக் கொண் டிருந்தன.

குழந்தைகள் தங்களுக்குக் கிடைத்திருக்கும் புதிய பொழுது போக்கை வெகுவாக ரசித்தார்கள். இரவு நேரங் களில் வானத்தை நோக்கித் தலையை உயர்த்தி அங்கே தெரி கின்ற நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டே நடந்தார்கள். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நட்சத்திரங்கள் கிடைத்திருக் கும்? அவர்கள் ஒவ்வொரு தடவை எண்ணும் பொழுதும் ஏதாவது தவறு ஏற்படும். அவர்கள் சிரித்துக் கொண்டே வாதாடினார்கள்.

''முதலிலிருந்து ஆரம்பி. மறுபடியும் எண்ணிச் சொல்.''

அந்த வேலை மறுபடியும் முதலிலிருந்து தொடங்கும்.

வசந்த காலத்தில் முதல் தடவை இடியும் புயலும் ஏற் பட்ட பொழுது அந்தக் குழந்தைகள் காலணி கூட இல்லாமல் புல்வெளியில் நதியின் மீதிருக்கும் பாலத்தை நோக்கி ஓடி னார்கள்.

''வானம் எப்படிச் சிவந்திருக்கிறது, பார்!''

''இடியின் முழக்கத்தைக் கேள்!''

மின்னல். இடி. மேகங்கள். நதி கரையில் மோதி நுரை யைக் கக்கியது. காற்று ஒரு கொள்ளைக்காரனைப் போலக் காட்டில் ஊளையிட்டது. மரக்கட்டைகளின் மீது மழை சட சட வென்று நிற்காமல் விழுந்து கொண்டிருந்தது.

''இது விவசாயத்துக்கு நன்மையானது என்று நான் பந்தயம் கட்டத் தயார்.''

''இந்த வருடத்தில் வானம் நமக்கு அமோக விளைச்சலைக் கொடுக்கப் போகிறது.''

''நீ தானே வானத்தைப் பங்கு போட வேண்டாமென்று சொன்னுய்.''

குழந்தைகள் ஒற்றுமையாகப் பழகிக் கொண்டிருந்தார்கள். கோடைகாலம் ஆரம்பமான பொழுது அவர்கள் மறுபடியும் புல்வெளியில் கூடினார்கள். மறுபடியும் தரையில் மல்லாந்து படுத்துக்கொண்டு தங்களுடைய பகுதிகளைப் பற்றிய கற்பனைகளில் மூழ்கினார்கள். வானத்தில் சூரியன் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது; காற்று புல்வெளியில் இரகசியம் பேசியது. எங்கோ தூரத்தில் ஒரு பறவையின் ஒலம் கேட்டது.

திடீரென்று கிரிஷாட்கா கொபீலின் தனக்கிழைக்கப் பட்ட அநீதியை கவனித்தான். வானத்தின் வட திசையில் அவனுக்குத் தரப்பட்ட பகுதியில் சூரிய வெளிச்சம் படவில்லை.

கிரிஷாட்கா முகத்தைச் சுளித்துக் கொண்டு எழுந்து நின்றான்.

''என்னை ஏமாற்றிவிட்டீர்கள்.''

எல்லாக் குழந்தைகளும் குதித்தெழுந்தார்கள். என்னவாக இருக்கும்?

''சூரியன் முழுவதையும் நீங்களே எடுத்துக் கொண்டீர்கள். என்னை இருட்டிலே விட்டு விட்டீர்கள்'' என்று வானத்தைச் சுட்டிக் காட்டி கிரிஷாட்கா கூச்சல் போட்டான்.

குழந்தைகள் வானத்தைப் பார்த்தார்கள். உண்மைதான் என்று ஒத்துக் கொண்டார்கள்.

''ஆனல் சீட்டுக் குலுக்கிப் போட்டுத் தானே நாம் எடுத்தோம்'' என்றான் எரியோம்கா டொரொவ்.

''நியாயமாகத்தான் செய்தோம்'' என்றாள் மார்புட்காடிகாய்.

''எனக்கு வெளிச்சம் படுகின்ற பகுதி கொஞ்சமாவது வேண்டும். நான் தர்ப்பூசணி பயிரிட வேண்டும்'' என்று வாதாடினன் கிரிஷாட்கா.

குழந்தைகள் பலமாகச் சத்தம் போட ஆரம்பித்தார்கள். பேச்சு வாய்ச் சண்டையில் முடிந்தது. அவர்கள் வருத்தமடைந்து தனித்தனியாகப் பிரிந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர்கள்.

வீட்டுக்குப் போனபிறகு தங்களுடைய நிலைமையை மறுபரிசீலனை செய்தார்கள்.

''நாங்கள் சண்டை போட்டுக் கொண்டது சரியல்ல'' என்று முடிவு செய்தான் எரியோம்கா டடாரொவ்.

''என்ன முட்டாள்தனம் செய்து விட்டோம்'' என்று நினைத்தாள் மார்புட்கா டிகாய். அவள் கண்களில் நீர் மல்கியது.

''கிரிஷாட்கா சொல்வது சரிதான். ஒவ்வொருவருக்கும் சூரியன் கொஞ்சம் இருக்க வேண்டும்'' என்று கோல்கா தனக்குள் வாதிட்டான்.

கோல்கா ரியாபொவ் மறுபடியும் குழந்தைகளை ஒன்ருகக் கூட்டினுன்.

''சூரியனை எல்லோருக்கும் பொதுவாகச் செய்துவிடலாமே'' என்ருன்.

குழந்தைகள் கோல்காவை உற்றுப்பார்த்துவிட்டு ஒரே குரலில் பலமாகப் பேசினுர்கள்.

''ஆம், அதுதான் சரி! சூரியன் எல்லோருக்குமே பொதுவாக இருக்கட்டும்!''

''வானத்தில் இருப்பது ஒரே ஒரு சூரியன். அது எல்லோர் மீதும் ஒளி வீசட்டும்'' என்ருன் கோல்கா.

அன்பளிப்பும் ஆச்சரியமும்

துலாவில் தொழிலாளியாக இருந்த அர்டெமி டெப்லோவ் தன்னுடைய கிராமத்துக்கு ஒரு கடிதம் அனுப்பினுன். அது சுருக்கமான கடிதம்; மொத்தம் ஐந்து வார்த்தைகள் தான்: ''விருந்தினர்கள் வருகிருர்கள். மகிழ்ச்சியான ஆச்சரியத்துக்குத் தயாராயிருங்கள்.''

விவசாயிகள் தலையைச் சொரிந்தார்கள். ஒன்றும் புரியாமல் தோளைக் குலுக்கினுர்கள்.

''இந்தக் கடிதம் தெளிவாக இல்லையே. யார் வருகிருர்கள்? எதற்காக? மகிழ்ச்சியான ஆச்சரியம் என்ன என்பது தான் முக்கியமாகத் தெரிய வேண்டும்.''

பத்து நாட்களுக்குப் பிறகு, திடீரென்று துலாவிலிருந்து தொழிலாளர் தூதுக்குழு ஒன்று வந்தது. அவர்கள் வெறுங்கையோடு வரவில்லை. அரிவாள், கருக்கரிவாள், கவர்க்கோல், வண்டிகளுக்கு இரும்பு அச்சுகள், கீல்கள், ஆணிகள், இன்னும் பலவிதமான உலோகப் பொருள்களைக் கொண்டு வந்தார்கள்.

விவசாயிகளுக்கு ஒரே ஆச்சரியம்.

''இதைத்தான் 'மகிழ்ச்சியான ஆச்சரியம்' என்று குறிப்பிட்டிருந்தாஞ?''

உண்மையைச் சொல்வதென்ருல், அப்பொழுது கிராமப் பகுதிகளில் அரிவாள், கருக்கரிவாள், இன்னும் மற்ற இரும்புக் கருவிகள் கிடைக்காமல் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருந்தது. விவசாயிகள் எப்படியோ சமாளிக்க வேண்டியிருந்தது.

விவசாயிகளின் கண்கள் பிரகாசித்தன.

''நீங்கள் இவற்றை விலைக்குக் கொடுப்பீர்களா?''

''விலைக்குக் கொடுக்க மாட்டோம்'' என்று தொழிலாளர்கள் பதிலளித்தார்கள்.

''பரிவர்த்தனைக்குக் கொடுப்பீர்களா?''

''இல்லை.''

அவர்கள் என்ன உத்தேசம் கொண்டிருக்கிருர்கள் என்பது விவசாயிகளுக்குப் புரியவில்லை.

''நாங்கள் இவற்றை நன்கொடையாகத் தருகிருேம். ஆம். உங்களுக்குத் தொழிலாளி வர்க்கம் செய்கின்ற உதவி இது'' என்று அவர்கள் விளக்கிஞர்கள்.

விவசாயிகள் திகைப்படைந்தார்கள்.

''இலவசமாகவா?''

''ஆமாம். எங்களுடைய இதயங்கனிந்த பரிசு. தொழிலாளர்களின் அன்பளிப்பாக இதை ஏற்றுக் கொள்ளுங்கள்.''

இது கட்டுக்கதை மாதிரி இருக்கிறதே. இவ்வளவு விலையுயர்ந்த அன்பளிப்பா?

விவசாயிகள் வேகமாகக் காரியங்களைச் செய்தார்கள். தொழிலாளர்களைத் தங்கள் குடிசைகளுக்குக் கூட்டிச் சென்று விருந்தளித்தார்கள்.

தொழிலாளர்கள் வயிறு புடைக்கச் சாப்பிட்டார்கள்.

''மிக்க நன்றி. போய்வருகிருேம். இப்பொழுதே புறப்பட்டால்தான் தொழிற்சாலைக்கு உரிய நேரத்தில் போய்ச் சேர முடியும்.''

விருந்தினர்கள் வணங்கி விடை பெற்றுக் கொண்டார்கள்.

''இது என்ன ஆச்சரியம்!'' கிராமவாசிகளால் அங்கே நடந்தவைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ''அவர்களுடைய நல்லெண்ணம் மட்டுமா? வேறு நோக்கங்களே இல்லையா? மிகச் சாதாரணமாக வர்ணிப்பதென்ருல் கூட இது ஒரு அதிசயமே'' என்று பேசிக் கொண்டார்கள்.

இதற்குச் சிறிது காலத்துக்குப் பிறகு அர்டெமி டெப்லோவ் அந்த கிராமத்துக்கு வந்தான்.

''அரிவாள்களும் கருக்கரிவாள்களும் உபயோகமாக இருக்கின்றனவா? மகிழ்ச்சியான ஆச்சரியமாக இருந்ததா?''

''நம்ப முடியாத ஆச்சரியம். அரிவாள்கள் மிக உயர்ந்த தரம். கருக்கரிவாள்களும் கவர்க்கோல்களும் கூட அப்படியே. தொழிலாளி வர்க்கம் நம்முடைய நண்பன், நமக்கு இரத்தத்தின் இரத்தமான சகோதரன் என்ற உண்மைதான் மகிழ்ச்சியான ஆச்சரியம்.''

எளிமையான அன்பளிப்பு

பெர்யோஸா கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் முதல் அறுவடை முடிந்ததும் விளதீமிர் இலியீச் லெனினுக்கு ஒரு எளிமையான அன்பளிப்பைக் கொடுத்தனுப்புவதென்று முடிவு செய்தார்கள்.

அவர்கள் ஒரு மூட்டை தானியத்தைச் சேர்த்துக் கொண்டு மாவுமில்லுக்குப் போய் அதை அரைத்துக் கொண்டார்கள். பிறகு ஒரு கடிதத்தைத் தயாரித்தார்கள்.

''அன்புமிக்க தோழர் லெனினுக்கு.

''எங்களுக்கு நிலமும் மேய்ச்சல் நிலமும் காடுகளும் கொடுத்ததற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களுடைய தானிய அறுவடை இப்பொழுது அதிகமாகிவிட்டது. எங்களுக்குப் போதுமான தானியம் இருக்கிறது. உங்களை மறந்து விடக்கூடாதென்று முடிவு செய்தோம்.

''நாங்கள் கோதுமை பயிரிடுவதில்லை. எனவே உங்களுக்கு ரை மாவுதான் அனுப்பியிருக்கிறோம். எனினும் நீங்கள் தயங்க வேண்டியதில்லை. இது நல்ல மாவு. உங்களுக்குப் பிடிக்க வேண்டும் என்பதற்காக இதை மூன்று தடவை அரைத்திருக்கிறோம்.''

கடிதத்தை முடிப்பதற்கு முன்பு சிறிது யோசித்தார்கள்.

''போல்ஷிவிக் கட்சி முழுமைக்கும் எங்களுடைய வணக்கத்தைத் தெரிவியுங்கள். பெர்யோஸா கிராமத்தைச் சேர்ந்த எல்லா விவசாயிகளும். கடிதத்தை எழுதியது எப்பிஃபான்டிரா.''

விவசாயிகள் தங்களுடைய அன்பளிப்பைத் தபால் மூலமாக அனுப்புவதற்கு நினைத்தார்கள். பிறகு அது வேண்டாமென்று முடிவு செய்தார்கள். அதற்கு பதிலாக, புரோகொப் கிமிர்யா என்ற துடிப்பான விவசாயியிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார்கள். அவனையும் அந்த மூடையையும் வண்டியில் ஏற்றி இரயில் நிலையத்துக்குக் கொண்டு வந்தார்கள். அவனோடு மூடையையும் பத்திரமாக இரயிலில் ஏற்றினார்கள்.

''அவரிடமே கொடுக்க வேண்டும்'' என்று பிரிகிற நேரத்தில் பலமாகச் சத்தம் போட்டார்கள். ''அவர் கையிலேயே ஒப்படைக்க வேண்டும். புரிகிறதா?''

''நன்ருகப் புரிகிறது'' என்ருன் கிமிர்யா.

இதற்கு ஒரு வாரத்துக்குப் பிறகு அவன் கிராமத்துக்குத் திரும்பிஞன்.

''என்ன? அவரைப் பார்த்தாயா?''

''அவரிடம் மூடையைக் கொடுத்தாயா?''

''நான் அவரைப் பார்த்தேன். அவரிடம் மூடையைக் கொடுத்தேன்.''

''பிரமாதம்.''

''லெனினிடமே கொடுத்தாயா?''

''லெனின் என்ன சொன்ஞர்? அவருக்குப் பிடித்திருந்ததா? அவர் நமக்கு ஏதேனும் நன்றி சொன்ஞரா?''

''நீ என்ன நினைத்துக் கொண்டாய்? 'நம்முடைய அருமைத் தோழர்களான விவசாயிகளுக்கு எனது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவியுங்கள்' என்று சொன்ஞர். அவர் இரண்டு தடவை நன்றி கூறிஞர். தானியத்துக்காக ஒரு தடவை; போல்ஷிவிக் கட்சிக்குத் தெரிவித்த வணக்கத்துக்காக இன்ஞெரு தடவை சொன்ஞர்.''

''இவ்வளவு பண்போடு நமக்கு நன்றி சொல்லியிருக்கிருரே.''

''அதிலும் அக்கறையோடு சொல்லியிருக்கிருர்.''

''லெனின் வேறு ஏதாவது சொன்ஞரா?''

''நாம் சோவியத் ஆட்சிக்கு உறுதியான ஆதரவு கொடுக்க வேண்டும்; எல்லோருடைய தேவைகளேயும் பற்றி நினைக்க முயற்சிக்க வேண்டும்; தொழிலாளர்களே மறந்துவிடக் கூடாது என்று சொன்ஞர். 'நீங்களும் தொழிலாளி வர்க்கமும் சேர்ந்து ஒரு புதிய வாழ்க்கையை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறீர்கள்' என்று சொன்ஞர்.''

''சபாஷ்'' என்று விவசாயிகள் ஒத்துக் கொண்டார்கள்.

''அப்படியாஞல், கடைசி முடிவைப் பொறுத்தவரை, நமக்கும் தொழிலாளர்களுக்கும் அதிகமான வித்தியாசம் இல்லே.''

சுருக்கமாகச் சொல்வதென்ருல் விவசாயிகள் அதிகமான திருப்தியடைந்தார்கள்.

இதற்கு ஒரு மாதத்துக்குப் பிறகு, பெர்யோஸா விவசாயிகளுக்கு திடீரென்று ஒரு கடிதம் வந்தது. நிஷ்னி நோவ்கொரோட் என்ற நகரத்திலுள்ள கப்பல் பழுது பார்க்கும் தொழிற்சாலேயைச் சேர்ந்த தொழிலாளர்கள் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார்கள்.

விவசாயிகள் ஆச்சரியத்தோடு கடிதத்தைப் படித்து முடித்தார்கள். கடிதத்தில் ஒரு மூடை மாவு அனுப்பியதற்காக நன்றி தெரிவித்ததோடு அந்த வட்டாரத்தைச் சேர்ந்த நோயாளிகளுக்கும் குழந்தைகளுக்கும் மாவு பகிர்ந்தளிக்கப்பட்டதாக எழுதப்பட்டிருந்தது. மாவு உயர்ந்த ரகம்; ரொட்டி அருமையாக இருந்தது என்று குறிப்பிட்டிருந்தார்கள். கடிதத்தின் இறுதியில் பின்வரும் வாக்கியம் இருந்தது:

''உங்கள் மத்தியில் தெளிவும் அறிவும் நிறைந்த ஒருவர் இருக்கிறார் என்று கருதுகிறோம். எங்களுடைய உணவு நிலைமை உண்மையிலேயே மோசமாக இருக்கிறது. உங்களுடைய அன்பளிப்புக்கு விலை நிர்ணயிக்க எங்களால் முடியாது. அந்த முயற்சி கூடப் பொருந்தாது. தொழிலாளர்களாகிய எங்களை நினைத்துக் கொண்டதற்கு மிக்க நன்றி.''

விவசாயிகள் உரத்த குரலில் விவசாதிக்கத் தொடங்கினார்கள்.

''எந்த மூட்டை?''

''எந்த மாவு?''

''நாம் அனுப்பினோமே, அந்த மாவா?''

விவசாயிகள் சீக்கிரத்தில் நிலைமையைப் புரிந்து கொண்டார்கள். தொழிலாளர்கள் அன்போடும் பண்போடும் கடிதம் எழுதியிருந்தார்கள். எனினும் விவசாயிகளுக்கு ஆத்திரமாக இருந்தது. அவர்கள் புரோகொப் கிமிர்யாவின் குடிசையில் கூடினார்கள்.

''நம்முடைய அன்பளிப்பு தோழர் லெனினுக்குத் திருப்தியளிக்கவில்லை என்று தெரிகிறது.''

''அவர் முகத்தைச் சுளித்திருக்க வேண்டும்.''

''அவர் நன்றி சொன்னதெல்லாம் பெயரளவுக்குத் தானே?''

கிமிர்யா வேகமாகவும் தீவிரமாகவும் சிந்தித்தான்.

''அவர் நன்றி சொன்னது பெயரளவுக்குத்தான் என்று நீங்கள் சொல்கிறீர்கள். லெனின் தன்னுடைய சந்தோஷத்தை தியாகம் செய்தார். ஏனென்றால் அவர் தன்னைப் பற்றி மட்டும் நினைக்கவில்லை. அப்பொழுது அவர் தொழிலாளி வர்க்கத்தைக் குறிப்பிட்டது தற்செயலாக அல்ல'' என்றான்.

விவசாயிகள் கிமிர்யாவை உற்றுப் பார்த்தார்கள்.

''ஆமாம். அது உண்மைதான்.''

''அவர் அதை சரியாக எடுத்துச் சொன்னார்.''

''இதைப் பார்த்தீர்களா? இந்தக் கடிதத்தில் லெனினைப் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை. நாம் நேரடியாக அனுப்பிய அன்பளிப்பு மாதிரி எழுதியிருக்கிறார்கள். லெனின் மிகவும் அடக்கமானவர். அப்படித்தானே?''

''நண்பர்களே! எனக்குத் தோன்றுவது இதுதான். நிஷ்னி நோவ்கொரோடுக்குத் தானியம் அனுப்புவதில் நாம் கருமித்தனமாக இருக்கக் கூடாது. ஒரு மூட்டை எந்த மூலைக்கு? இவ்வளவு குறைவான உதவியைக் கொண்டு அவர்கள் என்ன செய்ய முடியும்? அறுவடை நன்ருக இருக்கும் பொழுது நாம் கூடுதலாக உதவி செய்தால் என்ன?'' என்ருன் கிமிர்யா.

''சரியாகச் சொன்ஞய். நாம் கூடுதலாக உதவ வேண்டும்'' என்று விவசாயிகள் உற்சாகத்தோடு பதிலளித்தார்கள். ''நாம் தொழிலாளி வர்க்கத்துக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். நாம் ஒன்று சேர்ந்து புதிய வாழ்க்கையை நிர்மாணிக்கிருேம். லெனின் சொன்னது முற்றிலும் சரி.''

மறு நாள் விவசாயிகள் இரண்டு வண்டி நிறைய தானிய மூட்டைகளை ஏற்றி இரயில் நிலையத்துக்குக் கொண்டு போஞர்கள். மறுபடியும் கிமிர்யாவுக்கே பொறுப்புக் கொடுக்கப்பட்டது. அங்கே ஒரு அதிகாரி மூடைகளை நிறுத்த பிறகு, யாருக்கு அனுப்ப வேண்டும் என்பதைக் குறித்துக் கொண்டார்.

''தொழிலாளர்களுக்கா?'' என்று மறுபடியும் கேட்டார்.

''ஆமாம். அவர்களுக்குத்தான்.''

''அன்பளிப்பா?''

''ஆமாம்.''

''யாருடைய அன்பளிப்பு? யார் பெயரை எழுத வேண்டுமென்று சொல்லுங்கள்?''

கிமிர்யா கண்களைக் குறுக்கிக் கொண்டு அந்த அதிகாரியைக் கவனமாகப் பார்த்தான்.

''நான் சொல்வதைத் தெளிவாக, அழகாக எழுதுங்கள்...''

அந்த அதிகாரி மைக்கூட்டில் பேஞவை முக்கி, அதிகமாக இருந்த மையைக் கூட்டிலேயே உதறிவிட்டு, எழுதுவதற்குத் தயாராஞர்.

''விளதீமிர் இலியீச் லெனினிடமிருந்து என்று எழுதுங்கள்'' என்ருன் கிமிர்யா.

சாட்சிகள்

ஃபோம்கா தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு, அந்தத் திண்ணையிலேயே சிறிது நேரம் புரண்டான். பிறகு எழுந்து தெருவுக்குள் நடந்தான்.

அது பின்னிரவு நேரம். எங்கு பார்த்தாலும் அதிகமான இருட்டு. மூடுபனி காற்றிலே மிதந்து வந்தது. தொழிற்சாலை

யின் குடியிருப்புகள் இருந்த மூலைக்குப் பின்னுல் அவன் உட்கார்ந்தான். காலடிச் சத்தம் அவன் காதில் விழுந்தது.

அவன் அங்கே கல்லைப் போல உட்கார்ந்து கொண்டு சத்தத்தைக் கூர்மையாகக் கேட்டான். காலடிச் சத்தம் வரவர அதிகரித்தது. இப்பொழுது அவனுக்குப் பக்கத்தில் கேட்டது. ஃபோம்கா இப்பொழுது எதற்கும் தயாரான நிலையில் இருந்தான். அந்த இருள், மூடுபனியிலிருந்து மூன்று பேர் வெளிப்படுவதை அவன் பார்த்தான். இரண்டு பேர் ஒரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். ஒருவன் மண்வெட்டியைக் கையில் பிடித்திருந்தான்.

ஃபோம்கா நன்ருக உற்றுப் பார்த்தான். தொழிற்சாலையின் முன்னுள் முதலாளி எலிஸார் எலிஸாரொவிச் மோய்க்கின் வந்து கொண்டிருந்தார். அவரோடு அவருடைய இரண்டு பையன்களும் வந்தார்கள்.

''பெட்டி, மண் வெட்டி. இவற்றைத் தூக்கிக் கொண்டு அவர்கள் எங்கே போகிறுர்கள்?'' என்று ஃபோம்கா ஆச்சரியப்பட்டான். அவர்களுக்குப் பின்னுலேயே அவனும் நடந்தான்.

மோய்க்கினும் அவருடைய இரண்டு மகன்களும் தொழிற்சாலையின் நீரேற்றும் நிலையத்துக்குப் பக்கத்தில் போனுர்கள். அங்கே போனதும் பெட்டியைத் தரையில் வைத்தார்கள். பிறகு எல்லாத் திசைகளிலும் திருட்டுத்தனமாகப் பார்த்தார்கள்; எங்கிருந்தாவது சிறு சத்தம் வருகிறதா என்று உற்றுக் கேட்டார்கள். உடனே அவசரமாகத் தரையில் பள்ளம் தோண்ட ஆரம்பித்தார்கள்.

''அவர்கள் பொக்கிஷத்தைப் புதைக்கிறுர்கள்'' என்று ஃபோம்கா நினைத்தான்.

மோய்க்கினும் அவருடைய மகன்களும் அந்த வேலையை முடிக்கின்ற வரை அவன் அங்கேயே காத்துக் கொண்டிருந்தான். பிறகு அந்த நீரேற்றும் நிலையத்தைச் சுற்றி வந்து அந்த இடத்தில் ஒரு குறி வைத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினுன்.

ஃபோம்கா திண்ணையிலேயே புரண்டு கொண்டிருந்தான். அவனுல் மறுபடியும் தூங்க முடியவில்லை. பொழுது விடிந்ததும் தன்னுடைய நண்பன் காப்கா ஸட்வொர்ஞேவைப் பார்க்க ஓடினுன்.

''காப்கா, காப்கா!'' ஃபோம்கா தன்னுடைய நண்பனை எழுப்பினுன். ''எழுந்திரு, காப்கா!''

காப்கா கண்களைத் திறந்து பார்த்தான்.

''உனக்கு என்ன வந்தது?''

''பொக்கிஷம். பொக்கிஷம்.''

''எந்த பொக்கிஷத்தைச் சொல்கிறுய்?''

''அசல் பொக்கிஷம். உண்மையான பொக்கிஷம்.''

முந்திய இரவில் தான் பார்த்த சம்பவங்களை ஃபோம்கா காப்காவிடம் எடுத்துக் கூறிஞன். அவனுடைய நண்பன் படுக்கையை விட்டுத் துள்ளிக் குதித்துப் புறப்படுவதற்குத் தயாராக நின்ருன்.

அவர்கள் இருவரும் மண்வெட்டிகளைக் கைகளில் எடுத்துக் கொண்டு நீரேற்றும் நிலையத்தை நோக்கி வேக மாக ஓடிஞர்கள்.

''அங்கே பணக் குவியல்கள் இருக்கும்'' என்ருன் ஃபோம்கா.

''பணம் என்று எதைக் குறிப்பிடுகிருய்? பணம் என்பது வெறும் காகிதம்தான். இந்த பொக்கிஷத்தில் தங்கமும் வைரங்களும் இருக்கும்'' என்று காப்கா தன்னுடைய நண் பனைத் திருத்திஞன்.

இத்தகைய அமோகமான செல்வத்தை வைத்துக் கொண்டு எப்படியெல்லாம் அனுபவிக்க முடியும் என்று நினைத்த பொழுது அந்தச் சிறுவர்களின் கற்பனை கரைபுரண் டோடியது.

''சாக்கலேட்டுகள் வாங்கிச் சாப்பிடலாம்'' என்ருன் ஃபோம்கா.

''சாக்கலேட்டுகளா? உண்மையான எக்ளேர்கள், கிரீம் புரூலே—எல்லாவற்றிலும் சிறந்த இனிப்புச் சாக்கலேட்டு களை வாங்குவோம்'' என்ருன் காப்கா.

ஃபோம்கா அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தான். இந்தக் காப்காவுக்கு நன்ருகப் பேசத் தெரிகிறது. எப் போதும் மற்றவர்களைக் காட்டிலும் ஒரு படி மேலே போய் விடுகிருன். இந்த இனிப்புச் சாக்கலேட்டுகளை அவன் சாப் பிட்டதில்லை. ஆஞல் அவை எவ்வளவு இனிப்பாக இருக்கும் என்று தெரிந்தவன் போல நடிக்கிருன்.

சிறுவர்கள் கற்பனையில் மூழ்கிஞர்கள். தங்களுடைய தாயார்களுக்கு விலையுயர்ந்த சால்வைகளும், சகோதரி களுக்கு கலிக்கோ உடைகளும் ரிப்பன்களும், தகப்பஞர் களுக்குப் புதுக் காலணிகளும் வாங்கித் தர வேண்டுமென்று முடிவு செய்தார்கள். பிறகு தங்களுடைய நண்பர்களையும் பக்கத்து வீட்டுக்காரர்களையும் பற்றி நினைத்தார்கள். மலீ னின் குடும்பத்துக்கு பத்து பவுண்ட் தானியம் வாங்கிக் கொடுக்க வேண்டும். ஏனென்ருல் அது அதிகமான குழந்தை களைக் கொண்ட பெரிய குடும்பம். ஹர்லாமொவ் மாமா வுக்கு பெல்ட் துணியில் தைக்கப்பட்ட காலணிகள். நொண்டி சரூபின். அவன் நெடுங் காலமாகக் கனவு கண்டு வருகின்ற

முட்டுக் கம்புகளை வாங்கிக் கொடுக்க வேண்டும். உலோகத் தொழிலாளி வவீலினுக்கு ஒரு தொப்பி.

''அவர் ஒரு போல்ஷிவிக். அதை வாங்கிக் கொள்ள மாட்டார்'' என்ருன் காப்கா.

அவர்களிருவரும் நீரேற்றும் நிலையத்துக்கு வந்தவுடன் பரபரப்பாகத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

''வேகம்! இன்னும் வேகம்!'' என்று காப்கா உத்தர விட்டான்.

அவர்களுடைய வேகத்தில் ஒருவர் மீதொருவர் மோதிக் கொண்டார்கள். மண்வெட்டிகள் இடித்துக் கொண்டு வேலை தடைப்பட்டது. கடைசியில் அந்த மண்வெட்டிகள் புதைக்கப் பட்டிருந்த பெட்டியின் மீது தட்டிச் சத்தமுண்டாக்கின.

''டிக்-டாக், டிக்-டாக்'' என்ற சத்தம் சிறுவர்களுக்குக் கேட்டது.

''கடிகாரம். அநேகமாக சுவர்க் கடிகாரமாக இருக்கும்'' என்ருன் ஃபோம்கா.

''சுவர்க் கடிகாரமா? அது அலாரம் கடிகாரமாக இருக் கும். அல்லது உண்மையான பால் புரேயாக இருக்கும்'' என்ருன் காப்கா.

சிறுவர்கள் இருவரும் வேலையில் மும்முரமாக இருந்த தஞல் தங்களுக்குப் பின்ஞல் யாரோ வந்து கொண்டிருப் பதை கவனிக்கவில்லை. அவர்கள் திரும்பிய பொழுது திடீ ரென்று உலோகத் தொழிலாளி வவீலினைப் பார்த்தார்கள்.

''இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?''

சிறுவர்கள் குழப்பமடைந்து தயங்கினுர்கள்.

''பொக்கிஷத்தைத் தோண்டுகிறேம்'' என்று ஃபோம்கா கடைசியாக பதிலளித்தான். ''இங்கே தங்கம் இருக்கிறது. மணியடிக்கும் பால் புரே இருக்கிறது. அது டிக்-டிக் என்று ஒலிக்கும் சத்தம் கேட்கிறதா?'

''கடிகாரமா?''

வவீலின் உடனே பள்ளத்தில் குனிந்து உற்றுக் கேட்டார்.

'ஹே! தள்ளிப் போங்கள்'' என்று பலமாகச் சத்தம் போட்டார்.

அவர்களிருவரும் பின்ஞல் போனுர்கள்.

வவீலின் குனிந்து கையை நீட்டிப் பெட்டியில் எதையோ சிறிது நேரம் திருகி அந்த கடிகாரத்தின் இயக்கத்தை நிறுத் திஞர். பிறகு எழுந்து நின்று தன்னுடைய நெற்றியில் அரும் பிய வியர்வையைத் துடைத்தார். அங்கே நின்று கொண் டிருந்த சிறுவர்களைப் பார்த்துச் சிரித்தார்.

''பொக்கிஷத்தையா கண்டுபிடித்தீர்கள்? இது தான் டைனமைட்.''

பால் புரே—மேற்கு ஐரோப்பா விலேயே மிகவும் சிறந்த முறை யில் தயாரிக்கப்பட்ட கடிகாரம்

அந்தச் சிறுவர்கள் பேச்சு மூச்சற்றுப் போய்விட்டார் கள்.

''ஆனல் அந்தப் பெட்டியில் கடிகாரம் இருந்ததே.''

''ஆமாம். ஆனல் அது நீங்கள் நினைக்கிற மாதிரி கடி காரம் அல்ல. அது குறிப்பிட்ட நேரத்தில் வெடிப்பதற்காக வைத்திருக்கும் விசேஷ அமைப்பு. போகட்டும். இப்பொழுது கதை முழுவதையும் சொல்லுங்கள்.''

அந்தச் சிறுவர்கள் தங்களுக்குத் தெரிந்த எல்லாவற்றை யும் சொன்னர்கள்.

''அப்படியா! இது டைனமைட். பால் புரே அல்ல.''

''சால்வைகளும் ரிப்பன்களும் போச்சே'' என்று பெரு மூச்சு விட்டான் ஃபோம்கா.

''சால்வைகளும் ரிப்பன்களும் போகட்டுமே. நீரேற்றும் நிலையம் அவற்றைக் காட்டிலும் மிகவும் விலை மதிப்பற்றது'' என்று மறுத்துச் சொன்னன் காப்கா.

வகீலின் படீரென்று சிரித்தார்.

''காப்கா! நீ மிகவும் கெட்டிக்காரன்'' என்ருர்.

மோய்க்கினும் அவருடைய இரண்டு மகன்களும் அன் றைய தினத்திலேயே கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் நீதி மன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டுப் புரட்சிகரமான சட்டத்தின்படி கடுமையாக தண்டிக்கப்பட்டார்கள்.

ஃபோம்காவும் காப்காவும் நீதிமன்றத்துக்கு வந்து தங்கள் கதையை மறுபடியும் சொன்னர்கள். நீதிமன்றப் பதிவேடுகளில் அவர்களிருவரும் சாட்சிகள் என்று எழுதப் பட்டிருந்தது. ஆனல் அது அவ்வளவு பொருத்தமல்ல என்று நீதிபதியும் வழக்கைக் கவனித்த எல்லோருமே கருதினர் கள். அவர்களிருவரும் சாட்சிகள்தானு? இல்லே. அவர்கள் தான் வழக்குத் தொடர்ந்தவர்கள்.

வாழையடி வாழை

மக்களாட்சிக்குத் தாங்கள் எந்த வகையில் உதவி செய்ய லாம் என்று சில குழந்தைகள் ஒன்று சேர்ந்து யோசித்தனர்.

''நான் தானியம் பயிர் செய்ய விரும்புகிறேன்'' என்ருன் கோல்கா ஸபோரொவ்.

''நான் தொழிற்சாலேயில் தொழிலாளியாக வேலே செய்ய விரும்புகிறேன்'' என்ருன் டிம்கா பெட்ரோவ்.

''செஞ்சேனேயில் சேர்ந்து சோவியத் ஆட்சியை அதன் எதிரிகளிடமிருந்து காப்பது என்னுடைய விருப்பம்'' என்ருன் கோஷ்கா இஸ்வேக்கொவ்.

''நான் படிக்க விரும்புகிறேன். படிப்பு. படிப்பு. படிப்பு. பிறகு குழந்தைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பேன்'' என்றாள் லியுபா கொசுலினா.

அந்தக் குழந்தைகள் சரியான பாதையில் சிந்தனை செய்தார்கள். இந்த வேலைகள் ஒவ்வொன்றுமே கௌரவமானவை; நாட்டுக்கு அவசியமானவை. வருடங்கள் உருண்டோடின. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களானார்கள்.

கோல்காவுக்கு இப்பொழுது அந்தப் பெயர் கிடையாது. நிக்கொலாய் மிட்ரொஃபானொவிச் என்று பெயர். அவன் நிலத்தில் வேலை செய்கிறான். நாட்டின் தானியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுகிறான்.

டிம்காவுக்கு இப்பொழுது அந்தப் பெயர் கிடையாது. டிமிட்ரி அந்திரேயெவிச் என்று பெயர். அவன் இப்பொழுது உருக்கு உலையில் வேலை செய்கின்ற தேர்ச்சி பெற்ற தொழிலாளி. நாட்டின் உலோகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுகிறான்.

கோஷ்காவுக்கு இப்பொழுது அந்தப் பெயர் கிடையாது. கிரிகோரி இவானொவிச் என்று பெயர். அவன் சோவியத் யூனியனின் எல்லைகளில் காவல் நிற்கிறான். நாட்டில் சமாதானத்தைப் பாதுகாக்கிறான். லியுபா பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கிறாள். அவள் பெயர் இப்பொழுது லியுபோவ் அன்டோனொவ்னா.

அவர்கள் கனவு கண்டது போலவே எல்லாம் நடந்தது. இது எப்படி? அதிகாரம் சோவியத்துகளிடம் இருப்பதால் சாதாரண மக்களுக்கு எல்லாப் பாதைகளும் திறந்திருக்கின்றன. அவர்கள் நால்வரும் தங்களுடைய சொந்த கிராமத்தில் மீண்டும் சந்திக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் குழந்தைகள் இருப்பதுதான் ஒரே வித்தியாசம்.

முன்பு கோல்கா என்று அழைக்கப்பட்டவருக்கு ஸெம்யோன் என்ற பையன் இருக்கிறான். முன்பு டிம்கா என்று அழைக்கப்பட்டவருக்கு ஸெர்யோஷா என்ற பையன் இருக்கிறான்.

முன்பு கோஷ்கா என்று அழைக்கப்பட்டவருக்கு அந்திரேய் என்ற பையன் இருக்கிறான். முன்பு லியுபா என்று அழைக்கப்பட்ட பெண்ணுக்கு ஸினா என்ற சிறுமி இருக்கிறாள்.

ஸெம்யோன், ஸெர்யோஷா, அந்திரேய், ஸினா எல்லோருமே ஒருவரோடொருவர் பழகுகிறார்கள். ஒரு நாள், மக்களாட்சிக்கு நாம் எந்த வகையில் உதவ முடியும் என்று சந்திக்கிறார்கள்.

''நான் என்னுடைய தகப்பனாரைப் போல இருக்க விரும்புகிறேன். நாட்டின் தானிய விளைச்சலைப் பெருக்குவதற்கு

உதவ விரும்புகிறேன். நான் விவசாய நிபுணனாகப் போகிறேன்'' என்றான் ஸெம்யோன்.

''நான் மிகவும் உறுதியான உருக்கைத் தயாரிக்கப் போகிறேன். என் தகப்பனாரைப் போல தொழிற்சாலையில் வேலை செய்யப் போகிறேன்'' என்று நண்பர்களிடம் சொன்னான் ஸெர்யோஷா.

''நான் அச்சமென்பதே சிறிதும் இல்லாத விமானியாகப் போகிறேன்'' என்று அந்திரேய் தன்னுடைய இரகசியமான ஆசையை வெளியிட்டான்.

''படிப்பு. படிப்பு. நான் நிறையப் படிக்க ஆசைப்படுகிறேன். ஒரு பிரபலமான பேராசிரியையாவது என்னுடைய ஆசை'' என்றாள் ஸினா.

வருடங்கள் கழிந்தன. ஸெம்யோனும் ஸெர்யோஷாவும் அந்திரேயும் ஸினாவும் வளர்ந்து பெரியவர்களானார்கள்.

ஸெம்யோனுக்கு இப்பொழுது ஸெம்யோன் நிக்கொலாயெவிச் என்று பெயர். அவன் ஆசைப்பட்டது போலவே ஒரு விவசாய நிபுணனாகிவிட்டான். வெகு தூரத்துக்கு அப்பால் உள்ள சைபீரியாவில் கன்னிநிலப் பிராந்தியத்தில் உள்ள அரசாங்க விவசாயப் பண்ணையின் இயக்குநராக இருக்கிறான்.

ஸெர்யோஷாவுக்கு இப்பொழுது ஸெர்கேய் டிமிட்ரியெவிச் என்று பெயர். அவன் உருக்குவதில் புதிய முறைகளையும் உருக்கில் புதிய கலவைகளையும் கண்டுபிடித்தான். இப்பொழுது அவன் ஏவுகணைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு மனிதனை விண்வெளிக்கு அனுப்புகின்ற முயற்சிக்கு உதவி செய்கிறான்.

அந்திரேய்க்கு இப்பொழுது அந்திரேய் கிரிகோரியெவிச் என்று பெயர். அவர் இப்பொழுது மிகவும் பிரபலமானவர்; விமானி; அச்சமே இல்லாத தளபதி. நாஜிகளுக்கு எதிராக நடைபெற்ற யுத்தத்தில் வீரத்தோடு சண்டை போட்டார். 'சோவியத் யூனியன் வீரன்' என்ற நட்சத்திரப் பதக்கம் அவர் மார்பை அணி செய்கிறது.

ஸினாவுக்கு இப்பொழுது ஸினாயீடா குஸ்மினிச்னா என்று பெயர். அவள் இப்பொழுது பேராசிரியை. ஆராய்ச்சி நூல்களை எழுதிக் கொண்டிருக்கும் பிரபலமான வரலாற்றாசிரியை. இந்தப் புத்தகத்தை நீங்கள் படித்தால், நம்முடைய கடந்த காலம் எப்படி இருந்தது, நாம் எவ்வளவு பெரிய சக்தியாக வளர்ந்து விட்டோம் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இந்தக் குழந்தைகளின் கனவுகளும் நனவாகிவிட்டன. அவர்கள் நாட்டுக்குச் செய்திருக்கும் சேவைகள் அதிகம்.

1

1. 1917 பிப்ரவரியில் ருஷ்யாவில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடை பெற்றது. ஜாராட்சி ஒழிக்கப்பட்டது. ஏப்ரலில் லெனின் ஸ்விட்ஸர்லாந்திலிருந்து ருஷ்யாவுக்குத் திரும்பினர். ''சோஷலிஸ்ட் புரட்சி ஓங்குக!'' என்று லெனின் முழங்கினர்.

2

3



4



2. ''மாரிக்கால அரண் மனையைத் தாக்குதல்'' (அக்டோபர் 1917). பாவெல் ஸொக்கலோவ் ஸ்கால்யா வரைந்த ஓவியம். 3. புரட்சிக் கப்பல் **அரோரா**. இந்தக் கப்பலின் புரட்சிகர மான மாலுமிகள் பீரங்கியை வெடித்த தும் மாரிக்கால அரண் மனை மீது தாக்குதலைத் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 4.ஸ்மோல்னி மாளிகை. அக்டோபர் புரட்சியின் போது போல்ஷிவிக்கு களின் தலைமையகம். 5. அக்டோபர் புரட்சி யின் போது ஸ்மோல் னியைப் புரட்சிவீரர் கள் காத்து நிற்கின்ற னர்.

6

6. ''அகில ருஷ்ய சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசில் லெனின் உரை நிகழ்த்துகிறார்'' (விள்தீமிர் ஸெரோவ் வரைந்த ஓவியம்). மாபெரும் அக்டோபர் புரட்சி வெற்றியடைந்துவிட்டது. அகில ருஷ்ய சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசில் லெனின் முன்மொழிந்த ''சமாதான ஆணையை'' இளம் சோவியத் அரசு தனது முதல் ஆணையாக வெளியிடுகிறது. ''எல்லா மக்களினங்களுக்கும் சமாதானம்'' என்ற அறிவிப்போடு உலகத்திலேயே முதல் தொழிலாளர்கள், விவசாயிகள் அரசு பிறக்கிறது. உலக யுத்தத்தில் இழுக்கப்பட்டிருந்த எல்லா நாடுகளுக்கும் பிரதேசங்களைச் சேர்த்துக் கொள்ளாமலும் நஷ்டத்தை ஈடு செய்யப் பணம் கோராமலும் உடனடியாக சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள சோவியத் ருஷ்யா பிரேரேபித்தது.

№ 208.
Пятница,
27 октября 1917 г.

ИЗВѢСТІЯ

ЦѢНА:
въ Петроградѣ 15 коп.
на ст. жел. д. 18 коп.

Центральнаго Исполнительнаго Комитета
и Петроградскаго Совѣта
Рабочихъ и Солдатскихъ Депутатовъ.

Адресъ конторы: Лиговка, Саикинъ пер., д. № 6. Телефонъ № 218-41.
Адресъ редакціи: Смольный Институтъ, 2-й этажъ комната № 14. Телефонъ № 38-89.

Декретъ о мирѣ,

принятый единогласно на засѣданіи Всероссійскаго Съѣзда Совѣтовъ Рабочихъ, Солдатскихъ и Крестьянскихъ Депутатовъ 26 октября 1917 г.

Рабочее и крестьянское правительство, созданное революціей 24—25 октября и опирающееся на Советы Рабочихъ, Солдатскихъ и Крестьянскихъ Депутатовъ предлагаетъ всѣхъ воюющимъ народамъ и ихъ правительствамъ начать немедленно переговоры о справедливомъ демократическомъ мирѣ.

Справедливымъ или демократическимъ миромъ котораго жаждетъ подавляющее большинство истощенныхъ, измученныхъ и истерзанныхъ войной рабочихъ и трудящихся классовъ всѣхъ воюющихъ странъ миромъ, котораго самымъ опредѣленнымъ и настойчивымъ образомъ требовали русскіе рабочіе и крестьяне послѣ сверженія царской монархіи.—такимъ миромъ правительство считаетъ немедленный миръ безъ аннексій (т. е. безъ захвата чужихъ земель, безъ насильственнаго присоединенія чужихъ народностей) и безъ контрибуцій.

Такой миръ предлагаетъ Правительство Россіи заключить всѣмъ воюющимъ народамъ немедленно, выражая готовность сдѣлать безъ малѣйшей оттяжки тотчасъ-же всѣ рѣшительные шаги впредь до окончательнаго утвержденія всѣхъ условій такого мира полномочными собраніями народныхъ представителей всѣхъ странъ и всѣхъ націй.

Подъ аннексіей или захватомъ чужихъ земель Правительство понимаетъ сообразно правовому сознанію демократіи вообще, и трудящихся классовъ въ особенности всякое присоединеніе къ большому или сильному государству малой или слабой народности безъ точно, ясно и добровольно выраженнаго согласія и желанія этой народности, независимо отъ того, когда это насильственное присоединеніе совершено, независимо также отъ того насколько развитой или отсталой является насильственно присоединяемая или насильственно удерживаемая въ границахъ даннаго государства нація. Независимо, наконецъ, отъ того, въ Европѣ или въ далекихъ заокеанскихъ странахъ эта нація живетъ.

Если какая бы то ни была нація удерживается въ границахъ даннаго государства насиліемъ, если ей, вопреки выраженному съ ея стороны желанію все равно, выражено ли это желаніе въ печати, въ народныхъ собраніяхъ, въ рѣшеніяхъ партій или возмущеніяхъ и возстаніяхъ противъ національнаго гнета—не предоставляется права свободнымъ голосованіемъ, при полномъ выводѣ войска присоединяющей или вообще болѣе сильной націи рѣшить безъ малѣйшаго принужденія вопросъ о формахъ государственнаго существованія этой націи, то присоединеніе ея является аннексіей, т. е. захватомъ и насиліемъ.

Продолжать эту войну изъ-за того, какъ раздѣлить между сильными и богатыми націями захваченныя ими слабыя народности, Правительство считаетъ величайшимъ преступленіемъ противъ человѣчества и торжественно заявляетъ свою рѣшимость немедленно подписать условія мира, прекращающаго эту войну на указанныхъ равно справедливыхъ для всѣхъ безъ изъятія народностей условіяхъ.

Вмѣстѣ съ тѣмъ Правительство заявляетъ, что оно отнюдь не считаетъ вышеуказанныхъ условій мира ультимативными, т. е. соглашается разсмотрѣть и всякія другія условія мира, настаивая лишь на возможно болѣе быстромъ предложеніи ихъ какой бы то ни было воюющей страной и на полнѣйшей ясности, на безусловномъ исключеніи всякой двусмысленности и всякой тайны при предложеніи условій мира.

Тайную дипломатію Правительство отмѣняетъ со своей стороны выражая твердое намѣреніе вести всѣ переговоры совершенно открыто передъ всѣмъ народомъ, приступая немедленно къ полному опубликованію тайныхъ договоровъ, подтвержденныхъ или заключенныхъ правительствомъ помѣщиковъ и капиталистовъ съ февраля по 25 октября 1917 года. Все содержаніе этихъ тайныхъ договоровъ, поскольку оно направлено, какъ это въ большинствѣ случаевъ бывало къ доставленію выгодъ и привиллегій русскимъ помѣщикамъ и капиталистамъ, къ удержанію или увеличенію аннексій великороссовъ, Правительство объявляетъ безусловно и немедленно отмѣненнымъ.

Обращаясь съ предложеніемъ къ правительствамъ и народамъ всѣхъ странъ начать немедленно открытые переговоры о заключеніи мира Правительство выражаетъ съ своей стороны готовность вести эти переговоры, какъ посредствомъ письменныхъ сношеній, по телеграфу, такъ и путемъ переговоровъ между представителями разныхъ странъ или на конференціи таковыхъ представителей. Для облегченія такихъ переговоровъ Правительство назначаетъ своего полномочнаго представителя въ нейтральныя страны.

Правительство предлагаетъ всѣмъ правительствамъ и народамъ всѣхъ воюющихъ странъ немедленно, заключить перемиріе, причемъ со своей стороны, считаетъ желательнымъ, чтобы это перемиріе было заключено не меньше какъ на три мѣсяца, т. е. на такой срокъ, въ теченіе котораго вполнѣ возможно, какъ завершеніе переговоровъ о мирѣ съ участіемъ представителей всѣхъ безъ изъятія народностей, или націй, втянутыхъ въ войну или вынужденныхъ къ участію въ ней, такъ равно и созывъ полномочныхъ собраній народныхъ представителей всѣхъ странъ для окончательнаго утвержденія условій мира.

Обращаясь съ этимъ предложеніемъ мира къ правительствамъ и народамъ всѣхъ воюющихъ странъ, временное рабочее и крестьянское правительство Россіи обращается также въ особенности къ сознательнымъ рабочимъ трехъ самыхъ передовыхъ націй человѣчества и самыхъ крупныхъ участвующихъ въ настоящей войнѣ государствъ, Англіи, Франціи и Германіи. Рабочіе этихъ странъ оказали наибольшія услуги дѣлу прогресса и соціализма и великіе образцы чартистскаго движенія въ Англіи, рядъ революцій, имѣвшихъ всемірно-историческое значеніе, совершенныхъ французскимъ пролетаріатомъ, наконецъ, въ геройской борьбѣ противъ исключительнаго закона въ Германіи и образцовой для рабочихъ всего мира длительной, упорной дисциплинированной работѣ созданія массовыхъ пролетарскихъ организацій Германіи. Всѣ эти образцы пролетарскаго героизма и историческаго творчества служатъ намъ порукой за то, что рабочіе названныхъ странъ поймутъ лежащія на нихъ теперь задачи освобожденія человѣчества отъ ужасовъ войны и ея послѣдствій, — ибо эти рабочіе всесторонней рѣшительной и беззавѣтно энергичной дѣятельностью своей помогутъ намъ успѣшно довести до конца дѣло мира и вмѣстѣ съ тѣмъ, дѣло освобожденія трудящихся и эксплоатируемыхъ массъ населенія отъ всякаго рабства и всякой эксплоатаціи.

№ 209.
Суббота,
26 октября 1917 г.

ИЗВѢСТІЯ

ЦѢНА:
въ Петроградѣ 15 коп.,
на ст. жел. д. 18 коп.

Центральнаго Исполнительнаго Комитета
и Петроградскаго Совѣта
Рабочихъ и Солдатскихъ Депутатовъ.

Въ виду созыва въ теченіи ближайшихъ дней Второго Всероссійскаго Съѣзда Совѣтовъ Крестьянскихъ Депутатовъ, **крестьянъ-делегатовъ** пріѣхавшихъ на Второй Всероссійскій Съѣздъ Совѣтовъ Рабочихъ и Солдатскихъ Депутатовъ **просятъ остаться** для участія въ работахъ этого съѣзда.

ДЕКРЕТЪ О ЗЕМЛѢ

8

8. ''சமாதான ஆணை'' பிறப்பிக்கப்பட்ட அதே தினத்தில் ''நிலத்தைப் பற்றிய ஆணை'' என்ற மிக முக்கியமான இரண்டாவது ஆணையை சோவியத் அரசாங்கம் வெளியிடுகிறது. நிலப்பிரபுக்களின் நிலவுடைமை அவர்களுக்கு நட்ட ஈடு கொடுக்காமல் ஒழிக்கப்பட்டு, எல்லா நிலமும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது. நிலம், கனி வளங்கள், காடுகள், நீர்க்கால்வாய்கள் மக்களுடைய சொத்தாக அறிவிக்கப்பட்டன. 9. ''சோவியத் அரசின் ஆணைகள் மக்களிடம் வாசித்துக் காட்டப்படுகின்றன'' (விக்தர் இவானோவ் வரைந்த ஓவியம்). 10. 1918ல் முதல் சோவியத் அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாணத்தையும், மனிதனை மனிதன் சுரண்டுகின்ற கொடுமை முழுமையாக ஒழிக்கப்பட்டதையும் அரசியலமைப்புச் சட்டம் அறிவித்தது. ''யார் உழைக்கவில்லையோ அவர் சாப்பிடக் கூடாது'' என்று அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டது.

9

КОНСТИТУЦИЯ
ПРОЛЕТАРИИ ВСЕХ СТРАН СОЕДИНЯЙТЕСЬ!
Р С Ф С Р
III
РОССИЙСКОЙ СОЦИАЛИСТИЧЕСКОЙ
ФЕДЕРАТИВНОЙ СОВЕТСКОЙ
РЕСПУБЛИКИ
1918

11

12

13

14

11. கூட்டு உழைப்பு என்னும் புதுமையின் ஆரம்பம். விவசாயக் கருவிகளைப் பழுது பார்த்தல். மே, *1920*. *12.* ருஷ்யாவை மின்சார மயமாக்குவதற்கு லெனின் திட்டம் தீட்டினார். லெனினைப் போற்றும் வகையில் விவசாயிகள் மின்சார விளக்கை 'இலியீச் விளக்கு' என்று கூறினார்கள். *13.* விவசாயக் குடும்பத்திலே பிறந்த மிஹயீல் கலீனின் சோவியத் யூனியனின் ஜனாதிபதியானார். இந்தப் படத்தில் அவர் (வலது பக்கத்திலிருந்து மூன்றாவது) க்வோலீன்ஸ்க் என்ற இடத்தில் தானியக் கொள்முதல் நிலையத்தில் தானியத்தை நிறுப்பதைப் பார்வையிடுகிறார். *14.* விவசாயிகள் மனமகிழ் மன்றத்தில் வானொலிப் பெட்டி வைக்கப்படல்.

விளதீமிர் இலியீச்
லெனின்

பெரியவர் யார்?

ஒருநாள் கோஸ்ட்ரொமா மாநிலத்தைச் சேர்ந்த விவசாயிகளின் பிரதிநிதிகள் தோழர் லெனினைப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் பெத்ரோகிராடில் இருக்கும் ஸ்மோல்னி மாளிகைக்கு வந்தார்கள்.

கோஸ்ட்ரொமா விவசாயிகள் விளதீமிர் இலியீச் லெனினைத் தேடி முன்னும் பின்னும் திரும்பினார்கள்; எல்லாப் பக்கங்களிலும் பார்த்தார்கள்.

அதே சமயத்தில் சந்தர்ப்பவசமாக லெனின் அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்துக்குப் பக்கம் வந்தார்.

''நண்பரே! இங்கே பெரியவர் யார்?'' என்று விவசாயிகள் அவரிடம் கேட்டார்கள்.

''என்ன கேட்டீர்கள்?'' என்று லெனின் அவர்களிடம் பதிலுக்குக் கேட்டார்.

''பெரியவர்'' என்று விவசாயிகள் மறுபடியும் சொன்னார்கள். ''ருஷ்யாவை இப்பொழுது ஆட்சி செய்பவரைப் பார்க்க வேண்டும்.''

''ஓ! பெரியவரா'' என்று சொல்லி விட்டு லெனின் சிரித்தார். பிறகு அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். ''பெரியவர் அதோ இருக்கிறார்'' என்று அவர்களுடைய முதுகுக்குப் பின்னால் சுட்டிக் காட்டினார். பிறகு அவர்களைப் பார்த்து மறுபடியும் சிரித்துவிட்டுத் தன் வழியில் சென்றார்.

விவசாயிகள் திரும்பிப் பார்த்தார்கள்; நடை பாதையில் அவர்களுக்குப் பின்னால் தொழிலாளர்களடங்கிய ஒரு குழு நின்று கொண்டிருந்தது. அவர்களுக்குப் பின்னால் சில போர் வீரர்கள் சூடாக விவாதம் செய்தபடி நின்று கொண்டிருந்தனர். அரோரா கப்பலைச் சேர்ந்த ஒரு மாலுமி அமைதியாக சிகரெட்டைப் புகைத்தபடி அங்கே நின்று கொண்டிருந்தார். அவர்களுக்குச் சிறிது பின்னால் விவசாயிகள் நெருக்கியடித்துக் கொண்டு நின்றார்கள். அவர்கள் ஆட்டுத்தோல் கோட்டுகளும் காது வைத்த தொப்பிகளும் மரக்கட்டைச் செருப்புகளும் அணிந்திருந்தனர். அவர்களும் மூட்டைகளை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தனர்; அவர்கள் வெகு தூரத்

திலுள்ள ஏதோ ஒரு இடத்திலிருந்து வந்திருக்கும் பிரதி நிதிகள் என்பது சந்தேகமில்லாதபடி தெரிந்தது.

கோஸ்ட்ரோமாவிலிருந்து வந்த விவசாயிகள் முதலில் தொழிலாளர்களைப் பார்த்தார்கள்; பிறகு போர்வீரர்களைப் பார்த்தார்கள்; பிறகு மாலுமியையும் கடைசியில் தங்களைப் போன்ற விவசாயிகளையும் பார்த்தார்கள்.

''இந்தக் கூட்டத்தில் பெரியவர் இருக்க மாட்டாரே'' என்று நம்பிக்கை இல்லாமல் சொல்லிக் கொண்டார்கள். ''அந்த தாடிக்காரன் தெரியாமல்தான் சொல்லியிருக்க வேண்டும்.''

''ஐயா! நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று ஒரு குரல் விவசாயிகளின் காதில் விழுந்தது. அங்கேயிருந்த தொழிலாளர்களின் கூட்டத்திலிருந்து ஒரு இளைஞன் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். ''இங்கே முதல் தடவையாக வந்திருக்கிறீர்கள் போலும்'' என்றான்.

''ஆமாம். நாங்கள் லெனினைப் பார்க்க வேண்டும்.''

''லெனினையா?''

''ஆமாம். விளதீமிர் இயியீச் லெனினைப் பார்க்க வேண்டும்.''

அந்த இளைஞன் அவர்களைக் கேள்வி கேட்பது போலப் பார்த்தான்.

''நீங்கள் லெனினோடுதானே இப்பொழுது பேசிக் கொண்டிருந்தீர்கள்.''

விவசாயிகள் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தார்கள்.

''யார்? தாடி வைத்திருந்தாரே, அவரா?''

''அவர்தான் லெனின்'' என்று இளைஞன் பதிலளித்தான்.

விளதீமிர் இலியீச்சிடம் தாங்கள் கேட்ட கேள்வியையும் அவர் சொன்ன பதிலையும் விவசாயிகள் அந்த இளைஞனிடம் சொன்னபொழுது அவன் பலமாகச் சிரித்தான்.

''அப்படியா! ருஷ்யாவை இப்பொழுது ஆட்சி செய்கின்ற பெரியவரைப் பார்க்க வேண்டுமா?'' அந்த இளைஞன் சற்று நேரம் சிந்தித்தான். ''தோழர் லெனின் உண்மையைத்தான் சொன்னார். சரி. இப்பொழுது லெனினைப் பார்க்க வேண்டுமென்றால் மூன்றாவது மாடிக்குப் போங்கள்'' என்றான்.

விவசாயிகள் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டார்கள்.

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை'' என்றார் ஒரு விவசாயி.

''ஆமாம். எல்லாம் விசித்திரமாகத்தான் இருக்கிறது'' என்று அதை ஆமோதித்தார் அடுத்தவர்.

அவர்களிருவரும் அந்தக் கூட்டத்திலேயே அதிக வயதான ஒருவரைப் பார்த்தார்கள். ஆனால் அவர் மௌனமாக

இருந்தார். அந்தக் கிழவர் சிந்தனையில் மூழ்கியிருக்க வேண்டும். அவருடைய நெற்றியில் ஆழமான சுருக்கங்கள் தென்பட்டன.

''அபனஸி டனீலொவிச்! இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று விவசாயிகள் அவரைக் கேட்டார்கள்.

''என்ன நினைப்பது? எல்லாம் புரிகிற மாதிரிதானே சொன்னார்கள்'' என்றார் அந்தக் கிழவர். அவருடைய முகத்தில் சிரிப்புத் தவழ்ந்தது.

கோஸ்ட்ரொமா விவசாயிகள் மூன்றாவது மாடிக்குச் சென்று லெனினுடைய அலுவலகத்தை நெருங்கினார்கள்.

''யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று அந்த அறைக்குள் நுழைந்தவுடன் செயலாளர் கேட்டார்.

''தோழர் லெனினைப் பார்க்க வேண்டும்.''

''யார் வந்திருப்பதாகச் சொல்ல வேண்டும்?''

அந்த வயோதிகர் தம்முடன் வந்தவர்களைப் பார்த்தார்; தொண்டையைச் செருமிக் கொண்டார்; தன்னுடைய உள்ளங்கையினால் மீசையைத் துடைத்துக் கொண்டார்.

''பெரியவர் வந்திருப்பதாக அவரிடம் சொல்லுங்கள். ருஷ்யாவை இன்று ஆட்சி செய்பவர் வந்திருப்பதாக அவரிடம் சொல்லுங்கள்'' என்றார்.

கருத்து வேறுபாடு

ஸவிடோவ்கா கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் தாங்கள் கொடுக்க வேண்டிய தானியத்தை அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்கள். ஆனால் பிறகு கணக்குப் பார்த்ததில் தங்களிடம் கூடுதலாகவே வசூலிக்கப்பட்டிருக்கிறதென்று முடிவு செய்தார்கள். அது நெருக்கடியான காலம். எங்கும் பசி. உணவு கிடைப்பது அபூர்வம். ரொட்டி தங்கத்தைப் போல விலை மதிப்புள்ளதாக இருந்தது. விவசாயிகள் ஸ்தல அதிகாரிக்குக் கடிதம் எழுதினார்கள். ஆனால் அவரிடமிருந்து பதில் இல்லை.

''நாம் லெனினிடம் போக வேண்டும்; லெனின்தான் உதவி செய்வார்'' என்று இவான் கோமுட்டோவ் பலமாகச் சொன்னான். அதையே திரும்பத் திரும்ப வற்புறுத்தினான்.

மற்ற விவசாயிகள் தன்னுடைய யோசனையை ஒத்துக் கொள்ளுமாறு கோமுட்டோவ் செய்தான். தோழர் லெனினைப் பார்க்கப் போவதற்கு கோமுட்டோவ், பெட்ரோவ்,

ஸிலோவ் ஆகியவர்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

அவர்கள் உடனே மாஸ்கோவுக்குப் புறப்பட்டார்கள்.

''லெனின் என்ன முடிவு செய்தாலும் அது நமக்கு நன்மையாகவே இருக்கும்'' என்று போகும் வழியில் கோமுட்டோவ் நினைத்துக் கொண்டு போனான். ''எனக்கும் அவருக்கும் ஒரே அபிப்பிராயம்தான்.''

விவசாயிகள் லெனினைச் சந்தித்தார்கள், அவர்களுடைய பிரச்சினையைச் சொன்னார்கள். அவர் கவனமாகக் கேட்டார்.

''நாம் மிக நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?'' என்றார்.

இவான் கோமுட்டோவ் கவனமாகக் கேட்டான். ''தோழர் லெனின் காரணமில்லாமல் இப்படிச் சொல்ல மாட்டாரே'' என்று நினைத்தான்.

''மிகவும் நெருக்கடிதான்; ஆனால் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை'' என்று லெனின் தொடர்ந்து பேசினார். ''எல்லா நெருக்கடிகளையும் நாடு சமாளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. நம் தோழர்களான விவசாயிகள் நமக்கு உதவி செய்வீர்கள் என்று எனக்கு முழு நம்பிக்கை உண்டு.''

''விஷயம் சிக்கலாகிவிட்டது; தோழர் லெனின் நமது வேண்டுகோளை மறுக்கப் போகிறார்'' என்று இவான் கோமுட்டோவ் நினைத்தான்.

''இந்த விஷயத்தைப் பொறுத்தவரை உங்கள் கருத்தில் நியாயமிருக்கிறது'' என்று லெனின் திடீரென்று கூறினார். ''உரிய அளவுக்கு மேல் உங்களிடமிருந்து தானியம் வாங்கியிருந்தால் அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.''

லெனின் ஸ்தல சோவியத்துக்கு ஒரு உத்தரவு எழுதி அதைப் பிரதிநிதிகளிடம் கொடுத்தார்.

விவசாயிகள் அவரைக் குனிந்து வணங்கினார்கள். இவான் கோமுட்டோவ் முகத்தில் வெற்றி பிரகாசித்தது.

''பார்த்தீர்களா? என்ன சொன்னார், கேட்டீர்களா? உடனே உத்தரவு போட்டுவிட்டார். அவர் கருத்தில் எனக்கு முழு உடன்பாடு உண்டு.''

அந்தக் காலத்தில் அரசாங்க வேலைகளுக்காகக் கிரெம்ளினுக்கு வருகின்ற தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு மக்கள் கமிஸாரவையின் உணவு விடுதியில் சாப்பிடுமாறு சீட்டுகள் கொடுப்பார்கள். ஸவிடோவ்கா கிராமத்துப் பிரதிநிதிகளுக்கும் அப்படி சீட்டுகள் கொடுக்கப்பட்டன.

விவசாயிகளுக்கு முழுத் திருப்தி. அவர்கள் லெனினைப் பார்த்தப் பேசி விட்டார்கள். இப்பொழுது வயிறார உணவு சாப்பிடப் போகிறார்கள்.

''சாப்பாடு நன்ருக இருக்கும். சுவாரசியமான அனுபவம்'' என்று சொல்லிக் கொண்டு இவான் கோமுட்டோவ் மீசையைத் தடவினுன். ''நாம் சாப்பிடுகிருேமே முட்டகோஸ் சூப் அல்லது கஞ்சி; அதில் தண்ணீர் தான் அதிகமிருக்கும். இங்கே அப்படி இருக்காது. கிராமத்துக்குப் போனதும் எல்லோரிடமும் சொல்லலாம்.''

விவசாயிகள் உணவு விடுதிக்குள் நுழைந்தார்கள். முதலில் சூப் ஊற்றப்பட்டது. அவர்கள் நன்ருகப் பார்த்தார்கள்—அது முட்டகோஸ் சூப்; தண்ணியாக, புளிப்பாக இருந்தது. வழக்கமாக சூப்பில் கறித் துண்டுகள் மிதக்கும். இங்கே ஒரு சின்ன மீன் துண்டு மிதந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்தாலே பசி ஓடிவிடும் போல இருந்தது.

''இங்கே சாப்பாடு இவ்வளவு மோசமா?'' என்று விவசாயிகள் ஆச்சரியப்பட்டார்கள்.

இரண்டாவது உணவுவகை பரிமாறப்பட்டது. அதுவும் தண்ணிக் கஞ்சிதான். அதில் எந்தப் பொருளும் போடப்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. அப்படிப் போடப்பட்டிருந்தாலும் அதைப் பாலில் வேகவைக்கவில்லை; தண்ணீரில்தான் வேகவைத்திருக்க வேண்டும்.

தாங்கள் கொண்டு வந்திருந்த பன்றி இறைச்சியை எடுத்துச் சாப்பிடலாமாவென்று விவசாயிகள் நினைத்தார்கள். ஆனுல் பிறகு அது சரியல்ல என்று அந்த எண்ணத்தைக் கைவிட்டார்கள்.

விவசாயிகள் சாப்பிட்டு முடிந்தவுடன் அந்த உணவு விடுதியை விட்டு வெளியே வந்தார்கள்.

''அது வேறு இடமாகத் தானிருக்கும். மக்கள் கமிஸாரவையின் உறுப்பினர்கள் இந்த உணவையா சாப்பிடப் போகிருர்கள்?'' என்று இவான் கோமுட்டோவ் நினைத்தான்.

அவர்கள் உணவு விடுதியை விட்டு வெளியே வந்தபொழுது எதிரில் விளதீமிர் இலியீச் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். அவர் நடை வேகமாக இருந்தது; கோட்டிலிருந்த பொத்தான்கள் மாட்டப்படவில்லை. அவர்களை நெருங்கியதும் அவர் அன்போடு விசாரித்தார்.

''சாப்பிட்டீர்களா''

''ஆமாம்.''

''இன்றைக்குக் கூழ் பிரமாதம் என்று சொல்கிருர்களே.''

''ரொம்ப ருசிதான்? ஒரு வேளை லெனினுக்கு விசேஷமாகத் தயாரிப்பார்களோ என்னவோ'' என்று இவான் கோமுட்டோவ் நினைத்தான்.

விளதீமிர் இலியீச் உணவருந்தும் அறைக்குள் நுழைந்தார். விவசாயிகள் வெளியே நின்று அங்கே என்ன நடக்கிற

தென்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். லெனினுக்கு என்ன உணவு பரிமாறப்படும் என்பதைப் பார்க்க அவர்கள் விரும்பினர்கள். அங்கே லெனினுக்கும் அதே முட்டகோஸ் சூப், அதே கூழ் ஊற்றப்பட்டது.

''இது என்ன ஆச்சரியம்!'' என்று நினைத்தான் இவான் கோமுட்டோவ்.

விவசாயிகள் ஸவிடோவ்கா கிராமத்துக்குத் திரும்பினர்கள்.

''லெனின் பார்த்தாரா, சொல்லுங்கள்.''

''அவர் பார்த்தார்.''

''உங்களுடைய வேண்டுகோளை ஒத்துக் கொண்டாரா?''

''ஆம். ஒத்துக் கொண்டார்.''

''உத்தரவு எழுதிக் கொடுத்தாரா?''

''ஆம். எழுதிக் கொடுத்திருக்கிறர்.''

விவசாயிகள் அந்த உத்தரவை எல்லோரிடமும் காட்டினர்கள். அதைப் பார்த்ததும் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

''வண்டிகளைப் பூட்டுங்கள். உடனே மாவட்ட அலுவலகத்துக்குப் புறப்படுவோம். தோழர் லெனினுக்கு நம்முடைய நன்றி. அவர் முடிவு எப்பொழுதும் சரியாக இருக்கும்; நியாயமாக இருக்கும்'' என்றார்கள்.

ஆனல் அந்த நேரத்தில் இவான் கோமுட்டோவ் தலையை ஆட்டினன். ''சகோதரர்களே! அப்படி இல்லை, இது நியாயமான முடிவு அல்ல'' என்றன்.

விவசாயிகள் கோமுட்டோவை உற்றுப் பார்த்தார்கள்.

''சிறிதும் நியாயமில்லை'' என்று அவன் மறுபடியும் சொன்னன். ''இந்த விஷயத்தில் லெனின் முடிவை என்னல் ஒத்துக் கொள்ள முடியவில்லை.''

''ஏன்? எதற்காக?'' என்று கூடியிருந்த விவசாயிகள் சரமாரியாகக் கேட்டார்கள். ''இவான் தன்னுடைய மூளையை வரும்பொழுது யாரிடமும் கடன் கொடுத்து விட்டானே? அவன்தானே அன்றைக்கு அதிகமாகக் கூச்சல் போட்டான். இப்பொழுது இந்த முடிவு சரியில்லை என்கிறனே!''

அவன் சொன்னதை மறுத்து அங்கேயிருந்த எல்லோரும் பலமாகச் சத்தம் போட்டார்கள்.

''பொறுங்கள். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்'' என்று இவான் குறுக்கிட்டுப் பேசினன். ''உங்களுக்குப் பன்றி இறைச்சி கிடைக்கிறதல்லவா?''

விவசாயிகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஆமாம்.''

''உங்களுடைய குதிர்களில் தானியம் இருக்கிற தல்லவா?''

''ஆமாம்.''

''இப்போதைக்கு நம்மில் யாரும் பட்டினியால் சாகப் போவதில்லையே.''

''அது சரி'' என்று விவசாயிகள் பதிலளித்தார்கள்.

''அப்படியானல் நான் சொல்லப் போவதைக் கேளுங்கள்.''

மக்கள் கமிஸாரவையின் உணவு விடுதியில் எவ்விதமான உணவு கொடுக்கப்படுகிறது என்பதைக் கோமுட்டோவ் விவரமாக எடுத்துச் சொன்னுன். விவசாயிகள் சங்கடத்தில் மூழ்கிப் போய் மௌனமாக நின்றூர்கள்.

''லெனின் இப்படி உத்தரவு கொடுத்திருக்கக் கூடாது. அவர் செய்ததை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்; ஒத்துக் கொள்ள முடியாது'' என்றுன் கோமுட்டோவ். ''அது நியாயமான முடிவு அல்ல.''

ஒன்று, இரண்டு, மூன்று

லெனின் கவனிக்க வேண்டிய முக்கியமான வேலைகள் எப்பொழுதும் ஏராளமாக இருந்தபடியால் அபூர்வமாகத் தான் அவருக்கு ஓய்வு கிடைக்கும்.

எனினும் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது தம்முடைய காரில் நகரத்துக்கு வெளியே இருந்த காடுகளுக்கு அவர் போவதுண்டு.

அப்படி ஒரு முறை போனபொழுது காட்டில் உலாவி விட்டு வெளியே வயலை நோக்கி வந்தார். அங்கே ஒரு சிறுமி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார்.

அந்தச் சிறுமி தனக்குப் பொருத்தமில்லாத பெரிய கோட்டை அணிந்திருந்தாள். தலையைச் சுற்றிக் கைக் குட்டையைக் கட்டியிருந்தாள்; அதற்குக் கீழும் அவளுடைய சடை தொங்கியது. அவள் கையிலே ஒரு கூடையோடு புர்ச் மரத்தடியில் நின்று அழுது கொண்டிருந்தாள். அந்தக் கூடையில் ஒரே ஒரு காளான் மட்டுமே இருந்தது.

''நீ ஏன் அழுது கொண்டிருக்கிருய்?'' என்று விளதீமிர் இலியீச் அந்தச் சிறுமியிடம் கேட்டார்.

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனல் இன்னும் பலமாக அழுவதற்கு ஆரம்பித்தாள்.

விளதீமிர் இலியீச் தலையை ஆட்டினார். ''நீ பெரிய பெண். இப்படி அழுதுகொண்டிருக்கிறாயே. உனக்கு வெட்கமாக இல்லையா?'' என்றார்.

இதற்குப் பிறகும் அந்தச் சிறுமி அழுகையை நிறுத்தவில்லை. அவள் பிடிவாதமுடையவள் என்பதை லெனின் புரிந்து கொண்டார். அவர் தன்னுடைய பையில் கையை விட்டுத் துழாவினார்; பிறகு அவள் கூடையை நோக்கிக் குனிந்தார்.

''ஒன்று, இரண்டு, மூன்று—உன் கூடையில் ஒரு முந்திரிப் பருப்பு'' என்று சொல்லிவிட்டு லெனின் அந்தக் கூடையை உற்றுப் பார்த்தார்.

அந்தச் சிறுமிக்கு ஆவல் அதிகரித்தது. அவள் அழுகையை நிறுத்திக் கொண்டு கூடையின் அடிப்பகுதியைப் பார்த்தாள். உண்மைதான் அங்கே ஒரு முந்திரிப் பருப்பு இருந்தது.

''இது என்ன ஆச்சரியம்!'' என்றாள் அந்தச் சிறுமி. அவள் தன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தாள். பிறகு ஏதோ அதிசயத்தைப் பார்ப்பது போல லெனினைப் பார்த்தாள்.

''உன் பெயர் என்ன?'' என்று விளதீமிர் இலியீச் கேட்டார்.

''வார்யா'' என்று அந்தச் சிறுமி பதிலளித்தாள்.

''வார்யா! இங்கே பார்! என்ன நடந்தது சொல்.''

''வழி தவறிவிட்டது. நான் வீட்டுக்குப் போக வேண்டும்'' என்று அந்தச் சிறுமி அழுதுகொண்டே சொன்னாள்.

''உன் வீடு எங்கே இருக்கிறது?''

''மிரோனொவ்காவில் இருக்கிறது.''

''கவலைப்படாதே. உன் வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்.''

லெனின் வார்யாவின் கையைப் பிடித்துக் காட்டுப் பாதை வழியாக அவளை அழைத்துக் கொண்டு போனார்.

போகும் வழியில் அவளிடம் கேட்டார்:

''உன்னுடைய காளான்கள் எங்கே?''

அவள் காளான்கள் சேகரிப்பதற்காகத் தான் காட்டுக்கு வந்தாள். ஆனால் அவளுக்கு அதிர்ஷ்டமில்லை. அவள் கூடை காலியாகத்தான் இருந்தது.

''காலிக் கூடையோடு வீட்டுக்குப் போவது சரியில்லையே. இந்தப் பிரச்சினைக்கு ஏதாவது செய்ய வேண்டுமே'' என்றார் விளதீமிர் இலியீச்.

அவர் பாதைக்கு வெளியே இங்குமங்கும் போனார்; ஒரு இடத்தில் குனிந்து பார்த்தார். பிறகு திடீரென்று சொன்னார்:

''ஒன்று, இரண்டு, மூன்று—ஒரு வெள்ளைக் காளான் தோன்றட்டும்!''

வார்யா அந்த இடத்துக்கு ஓடி வந்து பார்த்தாள். ஆம். அங்கே ஒரு காளான் முளைத்திருந்தது. பருமனை அடிப் பகுதி; சதைப் பிடிப்பான குடைப்பகுதி. அந்த ஓக் மரத்தின் கீழ் ஒரு போர்வீரனைப் போல அந்தக் காளான் நின்று கொண் டிருந்தது.

அவள் குனிந்து பார்த்தாள். இரண்டு, மூன்று... அங்கே காளான்கள் நிறைய இருந்தன. வேகமாகக் காளான்களைப் பிடுங்கிக் கூடையில் போட்டாள். இப்பொழுது அந்தக் கூடை நிறையக் காளான்கள். அவள் ஆச்சரியத்தோடு லெனினைப் பார்த்தாள்.

அவர்களிருவரும் காட்டுக்குள் இன்னும் சிறிது தூரம் போனார்கள், லெனின் ஒரு இடத்தில் நின்று கொண்டார். விஷமம் செய்யப் போவது போலக் கண்களைக் குறுக்கிக் கொண்டு பேசினார்:

''ஒன்று, இரண்டு, மூன்று—இங்கே ஒரு கார்வண்டி தோன்றட்டும்!''

வார்யா அந்த இடத்திலிருந்து காட்டுப் புதரையும் பிர் மரத்தையும் தாண்டி அப்பால் பார்த்தாள். என்ன ஆச் சரியம்! அங்கே ஒரு கார்வண்டி நின்று கொண்டிருந்தது.

விளதீமிர் இலியீச் காரின் கதவைத் திறந்தார். ''வார்யா! உள்ளே போய் உட்கார்ந்து கொள்'' என்றார்.

அந்தச் சிறுமி வேகமாக வண்டியில் ஏறி உட்கார்ந் தாள்.

கார் காட்டுப் பாதை வழியே சென்று வயல்களை அடைந் தது; பிறகு குன்றுகளின் மீது ஏறிக் கீழே இறங்கியது. வெகு சீக்கிரத்தில் அவர்கள் மிரோனொவ்கா கிராமத்தை அடைந் தனர்.

ஆனால் அந்த கிராமத்துக்கு வந்து சேர்ந்ததைப் பற்றி வார்யா மகிழ்ச்சி அடையவில்லை. அன்று ஏற்பட்ட சுவா ரசியமான அனுபவங்கள் முடியப் போகின்றன என்பதை நினைக்கும் பொழுது அவளுக்கு வருத்தமாக இருந்தது.

கிராமத்தின் எல்லை வரை லெனின் அவளைக் காரிலே கூட்டிக்கொண்டு வந்தார். அவள் இறங்கியதும் கையை ஆட்டி விடை கொடுத்தார். கார் தூரத்தில் சென்று மறைந் தது.

வார்யா தன்னுடைய வீட்டுக்கு வேகமாக ஓடினாள். காட்டிலே அவள் வழி தவறி அழுது கொண்டு நின்றதையும் ஒரு புது மனிதர் அவளுக்கு முன்னால் தோன்றி அதிசயங் களைச் செய்ததையும் அவள் உடனே போய்ச் சொல்ல

வேண்டும். முந்திரிப் பருப்பு, காளான்கள், கார்வண்டி—எத்தனை அதிசயங்கள்!

''அவர் எதையும் உடனே செய்யக் கூடியவர்; அப்படிப் பட்டவர்'' என்று வார்யா சொன்னாள்.

வார்யாவைக் காட்டிலிருந்து கூட்டிக் கொண்டு வந்தது யாராக இருக்கும் என்று மிரோனெவ்கா கிராமவாசிகள் வெகுகாலம் வரை யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

முகச் சவரமும் எதிர்பாராத திருப்பமும்

மட்வேய் டொரொபீகின் முதல் தடவையாக மாஸ்கோவுக்கு வந்திருந்தான். அவன் சுறுசுறுப்பும் சாதுரியமும் கொண்ட இளைஞன். மாஸ்கோ நகரத் தெருக்களில் வேகமாக நடந்தான். ஒகோட்னி வீதியிலிருந்து ட்வெர்ஸ்காயா தெருவுக்கும் நெக்லின்னயா தெருவுக்கும் போனான். கடைசியில் கிரெம்ளினுக்குப் போய்ப் பார்த்து விட்டுத் திரும்புவதென்று முடிவு செய்தான்.

அந்தக் காலத்தில் கிரெம்ளினில் ஒரு முடி அலங்கரிக்கும் கடை இருந்தது. அது சிறிய கடைதான். டொரொபீகின் அதைப் பார்த்தான். உடனே முகச் சவரம் செய்து கொள்வதென்று முடிவு செய்தான். ஏதோ, கிரெம்ளினைப் பார்க்க வந்ததற்கு ஒரு அடையாளமாக இருக்கட்டும்.

அவன் உள்ளே நுழைந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். சவரத் தொழிலாளி மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தார். சற்று நேரம் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்.

ஐந்து நிமிடங்கள் கழிந்தன. கதவு மறுபடியும் திறந்தது. மட்வேய் தலையை நிமிர்த்திப் பார்த்தான். அங்கே தோழர் லெனின் நின்று கொண்டிருந்தார்.

மட்வேய் டொரொபீகின் தன்னுடைய நாற்காலியிலிருந்து குதித்தெழுந்து ஒரு தூணைப் போல அப்படியே விறைப்பாக நின்றான். போர் வீரனைப் போல கைகளை இடையிலே வைத்திருந்தான்.

''வணக்கம்! ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள்'' என்றார் விளதீமிர் இலியீச்.

நாற்காலியில் உட்காருவதற்கு டொரொபீகினுக்குத் தைரியம் ஏற்படவில்லை.

''உட்காருங்கள், தோழரே!'' என்றார் விளதீமிர் இலியீச்.

கடைசியில் அவன் நாற்காலியில், அதாவது அதன் ஓரத்

தில் உட்கார்ந்தான், லெனின் அந்த இளைஞனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தார். அவனை உற்றுப் பார்த்தார்.

''கிராமப் பகுதியிலிருந்து வந்திருக்கிறீர்களா?''

''ஆமாம்'' என்று வெட்கப்பட்டபடியே பதிலளித்தான்.

''எந்த மாவட்டம் என்று சொல்லுங்கள்.''

''வியாஸ்மா.''

''வியாஸ்மா மாவட்டத்தில் எந்த இடம்?''

''அனீசொவ்கா. அதுதான் என்னுடைய கிராமம்.''

''அப்படியா?'' என்று யோசித்தார் விளதீமிர் இலியீச். ''அனீசொவ்காவில் எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்? புதிய சோவியத் ஆட்சியினால் உங்களுக்குத் தொல்லை ஏற்படவில்லையே? இந்த வருடம் குளிர் காலப் பயிர்கள் எப்படி? உங்கள் கிராமத்தில் பள்ளிக்கூடம் இருக்கிறதா? பத்திரிகைகள் கிடைக்கின்றனவா? எல்லாவற்றுக்கும் விவரமாக பதில் சொல்லுங்கள். நான் அங்கேயுள்ள நிலைமைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆவலோடிருக்கிறேன்.''

மட்வேய்க்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை; எப்படி ஆரம்பிப்பதென்றும் புரியவில்லை. சிறிது நேரம் யோசித்தான். சோவியத் ஆட்சியின் புதிய முறைகளைப் பற்றி ''ஒரு தொல்லையுமில்லை'' என்று பதில் சொன்னான். குளிர்கால விவசாயத்தைப் பற்றி ''இந்த வருடம் பயிர்கள் நன்றாக இருக்கும்'' என்றான். ''அங்கே பள்ளிக்கூடம் இல்லை; ஆனால் அடுத்த வருடம் பள்ளிக்கூடம் திறக்கப் போவது உறுதி'' என்றான்.

இந்த இடத்தில் அவர்களுடைய உரையாடல் தடைப்பட்டது. வரிசையில் அடுத்தபடியாக சவரம் செய்து கொள்ள வேண்டியவருக்கு இடம் காலியாயிற்று.

''போய் உட்காருங்கள்'' என்றார் விளதீமிர் இலியீச் மட்வேயிடம்.

மட்வேய்க்குத் தடுமாற்றம் ஏற்பட்டது.

''இல்லை... இதோ பாருங்கள்... நான் காத்திருக்கிறேன்.''

''இல்லை. இது உங்களுடைய முறை'' என்றார் லெனின்.

''எனக்கு எந்த அவசரமுமில்லை, விளதீமிர் இலியீச்!''

''இதைப் பற்றி நாம் விவாதிக்க வேண்டாம்.''

மட்வேய் சவரத் தொழிலாளியை ஏறிட்டுப் பார்த்தான். அவருக்கு இம்மாதிரியான சம்பவங்கள் சகஜம் போலும். எனவே அவர் புன்சிரிப்போடு நின்று கொண்டிருந்தார். மட்வேய் லெனினை நோக்கித் திரும்பினான்.

விளதீமிர் இலியீச் தன்னுடைய பையிலிருந்து ஒரு பத்திரிகையை வெளியே எடுத்தார். அதைப் பிரித்துப் படிக்கத்

தொடங்கினர். அவனுக்குச் சங்கடத்தைக் கொடுக்கக் கூடாது என்று நினைத்தாரோ என்னவோ, அவனிடமிருந்து விலகி உட்கார்ந்து கொண்டார்.

பாவம் மட்வேய். அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. நாற்காலியில் போய் உட்கார்ந்தான். ஏன் இங்கே வந்தோம் என்று அவனுக்கு வேதனையாக இருந்தது. முள்ளின் மீது உட்கார்ந்திருப்பதைப் போல நிலை கொள்ளாமல் தவித்தான். காரியத்தை முடித்துக் கொண்டு இந்த இடத்தை விட்டுச் சீக்கிரமாகப் போய்விட வேண்டும் என்று நினைத்தான்.

சவரத் தொழிலாளி அவனுக்குச் சவரம் செய்து முடித்தார். மட்வேய் வேகமாகப் போய் தொப்பியை எடுத்துக் கொண்டான்.

''இப்பொழுது என்னுடைய முறை'' என்று வேடிக்கையாகச் சொன்னார் லெனின். ''சவரத்துக்குப் பிறகு நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள். வயதும் குறைந்து விட்டது மாதிரி இருக்கிறது. வியாஸ்மா மக்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்'' என்றார்.

டொரொபீகின் தன்னுடைய கிராமமான அனீசொவ்காவுக்குத் திரும்பினான்.

''நீ லெனினைப் பார்த்தாயா? உண்மையாகவா?'' என்று விவசாயிகள் ஆச்சரியத்தோடு கேட்டார்கள்.

''அவர் எப்படி இருக்கிறார்? என்ன சொன்னார்?''

''நமக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தாரா? பெரிய விஷயமாச்சே.''

''தோழர் லெனினை நீ எங்கே சந்தித்தாய்?''

டொரொபீகின் நடந்த சம்பவத்தைச் சொன்னான்.

''இன்னும் விவரமாகச் சொல்.''

திடீரென்று விவசாயிகள் கோபித்துக் கொண்டார்கள்.

''நீ அவரை முந்திக் கொண்டாயா? உன்னுடைய முறையை அவருக்குக் கொடுத்திருக்கலாமே. என்ன திமிர்? நாய்க் குட்டியே!''

மட்வேய் எவ்வளவோ விளக்கம் சொன்னான். ''இங்கே பாருங்கள். இப்படி நடக்குமென்று நான் நினைக்கவில்லை எனக்கு அது ரொம்பச் சங்கடமாக இருந்தது.''

இதற்கு மேல் அவன் என்ன சொல்ல முடியும்? விவசாயிகளும் எவ்வளவு நேரம் அவனுடைய பதிலைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்!

''நீ எங்களைக் கேவலப்படுத்திவிட்டாய்; எங்கள் பெயரைக் கெடுத்து விட்டாய். உன்னால் அனீசொவ்கா கிராமத்துக்கே கெட்ட பெயர் ஏற்பட்டுவிட்டது. அது மட்டு

மல்ல. இந்த நாட்டு விவசாயிகளெல்லாம் அவமானப்படும் படிச் செய்து விட்டாய்'' என்ருர்கள்.

இதே சமயத்தில் கிராமப்பகுதிகளில் சோவியத்துக்குத் தேர்தல் நடந்து கொண்டிருந்தது. ஆரம்பத்தில் மட்வேய் டொரோபீகினே நிறுத்தலாம் என்று சொன்னபொழுது எல்லோரும் அவனுக்கு ஆதரவு கொடுத்தார்கள். ஆனுல் இப்பொழுது...

விவசாயிகள் கூட்டம் ஆரம்பமானதும் ''மட்வேய் வேண்டாம்'' என்று எல்லா விவசாயிகளும் ஒரே குரலில் சத்தம் போட்டார்கள். அவன் லெனினுக்கு இடம் கொடுக்கவில்லே. நாங்கள் அவனே ஆதரிக்க மாட்டோம்'' என்ருர்கள்.

ஆகவே மட்வேய் சோவியத்துக்குத் தேர்ந்தெடுக்கப் படவில்லே.

தோழர் லெனின் தன்னே இப்படிக் கைவிடுவார் என்று அவன் சிறிதும் எதிர் பார்த்திருக்க முடியாது.

புதிய காலணிகள்

காத்யா ஒரு சோவியத் நிறுவனத்தில் கடிதங்களேக் கொடுக்கும் வேலேயைச் செய்து வந்தாள். அங்கே அவளேத் 'தகவலாளர்' என்று சொல்வார்கள். அவளுடைய வேலேப் பொறுப்பு மிகவும் சாதாரணமானதே.

ஒரு நாள் காட்யாவின் மேலதிகாரி தன்னுடைய அறைக்கு அவளேக் கூப்பிட்டார். ஒரு முக்கியமான ப்ார்சலே அவளிடம் கொடுத்தார். அவள் உடனே கிரெம்ளினுக்குப் போய் தோழர் லெனினிடம் அதை நேரடியாகக் கொடுக்க வேண்டும் என்ருர்.

காத்யா வேகமாகப் புறப்பட்டாள். போகும் வழியில் அவள் தன்னுடைய காலணிகளேப் பார்த்துக் கொண்டாள். அவை பழசு என்று சொன்ஞல் போதாது. மிக மிகப் பழசு என்று சொல்ல வேண்டும். அவற்றில் துவாரங்கள் அதிகம். அவற்றை எப்பொழுதோ தூக்கி எறிந்திருக்க வேண்டும். ஆனுல் காட்யா அவற்றை இன்னும் அணிந்து கொண்டிருந்தாள். அது மட்டுமல்ல. சாமான்களே எடுத்துக்கொண்டு ஒவ்வொரு அலுவலகமாகப் போய் அதை ஓடாகத் தேய்த்திருந்தாள்.

விளதீமிர் இலியீச்சுக்கு முன்பு இந்தக் காலணிகளே அணிந்துகொண்டு போவதற்கு அவள் சங்கடப்பட்டாள். ஆனுல் அவள் என்ன செய்ய முடியும்? அந்தக் காலத்தில் காலணிகள் கிடைப்பது அபூர்வம்.

அவள் கிரெம்ளினுக்கு வந்து சேர்ந்தாள். விளதீமிர் இலியீச்சின் அறைக்குள் நுழைவதற்கு அனுமதி கிடைத்தது. தோழர் லெனினிடம் பார்சலைக் கொடுத்தாள். லெனின் தன்னுடைய காலணிகளைப் பார்த்து விடக் கூடாதென்று தன்னுலியன்ற வரை மறைத்துக்கொண்டு நின்ருள்.

லெனினிடம் பார்சலைக் கொடுத்துவிட்டு உடனே திரும்பி விடலாம் என்று அவள் நினைத்தாள். ஆனுல் அவர் அவளை நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். அவள் எங்கே, எத்தனை வருடங்களாகப் படித்தாள், எவ்வளவு காலமாக வேலை பார்க்கிருள், அவளுக்குப் பெற்ருேர்கள் இருக்கின்றனரா என்று விசாரித்தார்.

விளதீமிர் இலியீச்சின் கேள்விகளுக்குக் காத்யா பதிலளித்தாள். அவர் அவளுக்கு வாழ்த்துக் கூறி விடை கொடுத்த பிறகு அவள் அங்கிருந்து புறப்பட்டாள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அவளுடைய மேலதிகாரி அவளை மறுபடியும் கூப்பிட்டனுப்பினுர். அவள் அறைக்குள் நுழைந்தபொழுது அவளுடைய இரத்தம் உறைந்துவிட்டது: மேலதிகாரியின் கையில் ஒரு ஜோடி புதிய காலணிகள் இருந்தன.

''இவை, உனக்குத்தான். வாங்கிக் கொள்'' என்று அவர் காத்யாவிடம் கூறினுர். காத்யா உணர்ச்சி வசப்பட்டவளாக நின்ருள். அவளால் ஒரு அடி கூட நடக்க முடியவில்லை.

''எடுத்துக் கொள்'' என்று சொல்லிச் சிரித்தார் மேலதிகாரி.

காத்யா அவரிடமிருந்து காலணிகளை வாங்கிக் கொண்டு வேகமாகக் கீழே இறங்கி ஓடினுள். கால்களில் அவற்றைப் போட்டுப் பார்த்தாள். அவை கச்சிதமாகப் பொருந்தின.

பனி விழுந்து உறைந்து போன மாஸ்கோ தெருக்களில் அவள் அந்தப் புதுக் காலணிகளை அணிந்து பனியை மிதித்து நசுக்கியவாறு நடந்து சென்ருள்.

''அந்த மேலதிகாரி எவ்வளவு உயர்வானவர்'' என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள். ''எங்களைப் பற்றி எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்கிருர்.''

உற்சாகமான நாள்

விளதீமிர் இலியீச் ஒருநாள் வேட்டையாடப் புறப்பட்டார்.

வெரெயா என்ற மாவட்டத்தில் மொடேனுேவோ என்ற கிராமத்துக்கு லெனின் வந்து சேர்ந்தார். அவர் காரை

விட்டுக் கீழே இறங்கினர்; கையிலே துப்பாக்கியை எடுத்துக் கொண்டார்; வழிகாட்டியைக் கூட்டிக் கொண்டு காட்டை நோக்கி நடந்தார்.

''லெனின் வந்துவிட்டார்!''

அந்த கிராமத்தில் செய்தி வேகமாகப் பரவியது. சீக்கிரத்தில் பக்கத்து கிராமங்களிலிருந்த விவசாயிகளுக்கும் தகவல் தெரிந்தது.

விளதீமிர் இலியீச்சும் அவருடைய வழிகாட்டியும் கைகளில் துப்பாக்கியோடு அந்தக் குளிர்காலத்தில் காட்டுக்குள் நுழைந்து சென்றுர்கள். அன்று நல்ல நாள்; அதிகமான குளிர் இல்லே. வானத்தில் சூரியன் தெரிந்தது. அதற்கு முந்திய இரவில் லேசான பனி விழுந்திருந்தது. எனவே பனியில் காலடிகள் தென்பட்டால் அது மிருகங்களின் நடமாட்டத்துக்கு அறிகுறியாகும். ஒரு வேட்டைக்காரருக்கு அது மிகச் சிறப்பான உதவியாகும்.

''உங்களுக்காகவே ஏற்பாடு செய்தது மாதிரி இருக்கிறது, விளதீமிர் இலியீச்!'' என்ருர் வழிகாட்டி. ''பொருத்தமான பருவ நிலே. அங்கே, அரை வெர்ஸ்டா தூரத்துக்கு அப்பால் இருக்கும் இடம்தான் வேட்டைக்கு மிகச் சிறந்தது. அந்த வளேவில் நாம் இடது புறம் திரும்ப வேண்டும்...'' வேட்டையாடுவதற்குச் சிறந்த இடம் எங்கே இருக்கிறதென்று வழிகாட்டி கையை நீட்டிக் காட்டினுர்.

அவர்கள் அந்த வளேவை நெருங்கினுர்கள். யாரோ அவர்களுடைய காலடிகளேப் பின்பற்றி ஓடி வருவது போல திடீரென்று சத்தம் கேட்டது. விளதீமிர் இலியீச்சும் வழிகாட்டியும் திரும்பியபொழுது இரண்டு இளேஞர்கள் ஓடிவருவதைப் பார்த்தார்கள். அவர்களுடைய உடல்களில் வியர்வை வழிந்து கொண்டிருந்தது; ஓடி வந்த வேகத்தில் அவர்களுக்கு மூச்சுத் திணறியது. அங்கே வந்தவுடன் அவர்கள் நின்ருர்கள்.

''தோழர் விளதீமிர் இலியீச்! எங்களே மன்னியுங்கள். உங்களேத் தேடி வந்திருக்கிருேம்.''

''தோழர்களே! என்ன விஷயம்? சொல்லுங்கள்.''

''நாங்கள் கிராமத்திலிருந்து வருகிருேம். எங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் உங்களுக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கிருர்கள்'' என்று சொல்லி விட்டு அந்த இளேஞர்கள் லெனினிடம் ஒரு கடிதத்தை நீட்டினுர்கள்.

விளதீமிர் இலியீச் புன்சிரிப்போடு அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்தார். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: ''உலகப் புரட்சியின் தலேவர் தோழர் லெனினுக்கு, மொடேஞெவோ கிராம மக்கள் எழுதுகின்ற கடிதம்.''

அதற்குக் கீழே பின்வரும் சொற்கள் எழுதப்பட்டிருந்தன: ''எங்களைச் சந்தித்துக் கலந்துரையாடுமாறு உங்களை அன் போடு அழைக்கிறோம்.''

விளதீமிர் இலியீச் அந்த இளைஞர்களைப் பார்த்தார்; பிறகு தன்னுடைய வழிகாட்டியைப் பார்த்தார்.

''என்ன ஜனங்கள்'' என்று வழிகாட்டி முணுமுணுத்துக் கொண்டார். ''கொக்கி முள் மாதிரி ஒட்டிக்கொள்கிறார் கள். சிறிது கூட மனச்சாட்சி இல்லை.'' அவர் இளைஞர்களை நோக்கித் திரும்பினார். ''தோழர் லெனினுக்கு ஓய்வு அவசி யம். சில மணி நேரங்கள் ஓய்வெடுப்பதற்காகத்தான் இங்கே வந்திருக்கிறார்.''

அந்த இளைஞர்களுடைய முகங்கள் வாடிவிட்டன. அவர் கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு போகத் தயாரானார் கள்.

''நில்லுங்கள்!'' விளதீமிர் இலியீச் அவர்களை நிறுத் தினார். ''ஒரு நிமிடம் பொறுங்கள். எனக்குத் தானே கடி தம் கொண்டு வந்தீர்கள். ஆனால் நான் இன்னும் பதில் சொல்லவில்லையே'' என்றார்.

''ஆம்! உங்களுக்குத்தான்'' என்று அந்த இளைஞர்கள் புதிய உற்சாகத்தோடு சொன்னார்கள்.

''சரி. இப்பொழுது கிராமத்துக்குப் போங்கள். நான் அழைப்பை ஏற்றுக் கொண்டேன் என்று தெரிவியுங்கள். அழைப்புத் தந்ததற்காக என்னுடைய நன்றியையும் சொல் லுங்கள். சீக்கிரமாக வந்துவிடுகிறேன்'' என்றார் விளதீமிர் இலியீச்.

''மிக்க நன்றி'' என்று சொல்லிவிட்டு அந்த இளைஞர்கள் கிராமத்தை நோக்கி வேகமாக ஓடினார்கள். விளதீமிர் இலியீச் அந்தத் திசையில் திரும்பி நின்றார்.

''இவ்வளவு நல்ல நாள் இனி கிடைக்காது. இதை இழக்கலாமா? முயல்களுக்குக் கொண்டாட்டம்தான்'' என்றார் வழிகாட்டி.

''கொண்டாட்டமா?'' என்று லெனின் சிரித்தபடியே கேட்டார். ''அதனாலென்ன? முயல்குட்டிகள் பிழைத்துப் போகட்டும். எல்லா விஷயங்களைப் பற்றியும் நம் மக்கள் எடுத்துக் கொள்ளும் அக்கறை இருக்கிறதே அது ஒரு முக்கியமான அம்சம். அதை மறுப்பது சரியல்ல.''

இளைஞர்கள் கிராமத்துக்குள் வேகமாக வந்தார் கள்.

''அவர் என்ன சொன்னார்?''

''வருகிறார்! அவர் வருகிறேன் என்றார். இதோ வந்து விடுவார்!''

''பார்த்தாயா? அவர் குண விசேஷம் அப்படிப்பட்டது.''

விவசாயிகள் பிராஸ்கோவியா அபஞஸியெவ்ஞ கோசச் செட்டொவாவின் குடிசையில் கூடினுர்கள். சீக்கிரத்தில் அந்த அறை முழுவதும் ஆட்கள் கூடிவிட்டார்கள். லெனின் பேசுவதைக் கேட்க வேண்டும் என்ற ஆசையோடு பக்கத்து கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும் அங்கே வந்தார்கள். அந்த அறையில் எல்லோரும் நிற்க இடமில்லை. எனவே சிலர் நடைபாதையில் நின்ருர்கள். மற்றவர்கள் வாசற்படியில் நெருக்கிக் கொண்டு நின்ருர்கள்.

லெனின் வந்தார். அவர் யுத்த நிலைமையைப் பற்றிப் பேசினுர்; விராங்கெலையும் எதிர்ப்புரட்சிப் படைகளையும் கடலுக்குள் விரட்டியதை எடுத்துச் சொன்னுர். தானிய வரத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைப் பற்றிச் சொல்லி அது சீக்கிரமாகவே சரியாகிவிடும் என்று உறுதி கூறினுர். போக்குவரத்து முறை சின்னபின்னமாகிவிட்டது; ஆனல் எதிரியை விரட்டியடித்தவுடன் அதை சரி செய்யத் தேவையான ஆள்பலம் கிடைக்கும் என்ருர். பிறகு அவர் ருஷ்யாவின் எல்லா இடங்களையும் மின்சாரமயமாக்குகின்ற மகத்தான திட்டத்தைப் பற்றிச் சொன்னுர்.

விவசாயிகள் கனவுலகத்தில் இருப்பதைப் போல அவர் கூறிய எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டார்கள். அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அவர்களுடைய இதயங்களைத் தொட்டது.

விளதீமிர் இலியீச் தன்னுடைய பேச்சை முடித்த பிறகு விவாதம் தொடங்கியது. கேள்விகள் அடுத்தடுத்து வந்து கொண்டிருந்தன. கலந்துரையாடலில் கலகலப்பு ஏற்பட்டது. விவசாயிகள் ஒவ்வொருவரும் ஏதாவதொரு கருத்தைச் சொன்னுர்கள். அவர்களுடைய உற்சாகத்தில் லெனின் அங்கே இருப்பதைக் கூட மறந்துவிட்டார்கள்.

வெளியே இருட்டிக் கொண்டிருந்தது. அது குளிர் காலம். பகற் பொழுது குறைவாகவே இருக்கும். எனினும் கலந்துரையாடல் முழு உற்சாகத்தோடு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மாஸ்கோவில் நடேஷ்டா கான்ஸ்டான்டீனவ்ஞ லெனினுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

''இவ்வளவு காலத்துக்குப் பிறகாவது அவருக்கு ஓய்வு கிடைத்திருக்கிறது'' என்று மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டிருந்தார். ''திறந்த வயல்களில், அடர்த்தியான காட்டில் நல்ல காற்றை சுவாசித்திருப்பார்; இன்று பருவ நிலையும் நன்ருகவே இருந்தது.''

விளதீமிர் இலியீச் வீட்டுக்குத் திரும்பினுர். அவருடைய

விராங்கெல்— ஜாரிஸ்ட் ராணுவ ஜெனரல்; ருஷ்யாவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் எதிர்ப்புரட்சி சக்திகளின் தலைவர்களில் ஒருவர்

முகம் மலர்ந்திருந்தது. உடலில் புதிய உற்சாகம் தென் பட்டது.

''எவ்வளவு அழகான நாள், வொலோட்யா!'' என்றார் நடேஷ்டா கான்ஸ்டான்டினவ்னு.

''மிகப் பிரமாதமான நாள்'' என்று பதிலளித்தார் லெனின்.

பழைய குடியிருப்பு

பழைய குடியிருப்பு என்ற கிராமம் தீப்பிடித்துக் கொண்டது. அன்றைய பகல் முழுவதும் நெருப்பு கொழுந்து விட்டெரிந்தது. அதை அணைக்க முடியவில்லை. மாலை வந்ததும் அந்த கிராமத்தில் அடுப்புகளும் புகை போக்கிகளுமே மிஞ்சின. குடிசைகள் எரிந்து விட்டன. எல்லாக் களஞ்சியங்களும் பொசுங்கி விட்டன. தோட்டங்களில் இருந்த குளியலறைகளும் எரிந்து விட்டன. மரப்பெட்டிகள், மேசைகள், தரைப் பலகைகள், தெய்வப் படங்கள், சறுக்கு வண்டிகள்—எல்லாமே அழிந்துவிட்டன. இவை எல்லாவற்றையும் காட்டிலும் அந்த வருடம் அறுவடையான தானியச் சேமிப்பும் எரிந்து போய்விட்டதுதான் பரிதாபம்.

இப்படி ஒரு விபத்தைப் பற்றி இது வரை கேள்விப்பட்டது கூட இல்லை. ஆனால் அங்கே அது உண்மையாகவே நடந்துவிட்டது.

நெருப்பில் தப்பியது மனிதர்கள்தான். அவர்கள் அழிந்து போன குடிசைகளுக்கு முன்பாகக் கூடினார்கள். பெண்களின் அழுகை காற்றைக் கிழித்துக் கொண்டு கேட்டது.

இப்படிப்பட்ட நேரத்தில் யார்தான் உதவி செய்ய முடியும்?

அந்த வட்டாரத்தில் காடுகள் குறைவு. எனவே மரக் கட்டைகள் கிடைப்பது அபூர்வம். ஆணிகள் எங்கேயுமே கிடைக்கவில்லை. இரும்பு—மூச்!—நிச்சயமாகக் கிடைக்காது. தானியம் இல்லாமல் அவர்கள் எப்படி சமாளிக்க முடியும்? இருநூறு பேர். இருநூறு வயிறுகள் பசியில் துடிக்கின்றன. இலையுதிர் காலம் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது.

அவர்கள் லெனினைப் பற்றி நினைத்தார்கள். ஏனென்றால் நிவாரண உதவிக்கு அவர்தான் ஒரே நம்பிக்கை.

அங்கிருந்தவர்களில் யாரோ ஒருவர்தான் லெனின் பெயரைச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவரும் அதற்கு மேல் பேச்சை நிறுத்திவிட்டார்.

''ஆனால் லெனின் மரத்தை எங்கேயிருந்து கொண்டு வருவார்?''

''மாஸ்கோவிலிருந்து கிராமப் பகுதிகளுக்கு தானியம் வந்ததாக நாம் எந்தக் காலத்திலாவது கேள்விப்பட்ட துண்டா?''

''நண்பர்களே! போனது போகட்டும்'' என்று யாரோ ஒருவர் பேச ஆரம்பித்தார். ''நாம் அவரைப் போய்ப் பார்ப்போம். நம் நிலைமையைச் சொல்லுவோம். பிறகு நடப்பது நடக்கட்டும்.''

விவசாயிகள் லெனினைச் சந்தித்தார்கள். தங்களுடைய பரிதாபகரமான நிலைமையைச் சொன்னார்கள். அவர் கவலையோடு கேட்டார்.

''குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள்?''

''பக்கத்துக் கிராமங்களுக்கு அனுப்பியிருக்கிறோம். அவர்கள் தான் குழந்தைகளை வளர்க்கிறார்கள்.''

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?''

''விளதீமிர் இலியீச்! குடிசைகள் எரிந்து விட்டன. மரங்கள் இல்லை. நாங்கள் பொந்துகளில் வசிக்க வேண்டியது தான்.''

''மரங்களுக்கு ஏற்பாடு செய்ய முடியும். ஆனால் இவ்வளவு குறுகிய அவகாசத்தில் எல்லாவற்றையுமே திரும்பக் கட்டுவதென்றால் அது ரொம்பக் கஷ்டமாயிற்றே. எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?''

''எங்களுக்கு மரம் கொடுத்தால் போதும். கடவுள் மற்றவற்றை கவனித்துக் கொள்வார்.''

''கடவுள் எங்கே வந்தார்? அவர் ஒரு உதவியும் செய்ய மாட்டார்.'' லெனின் சற்று நேரம் சிந்தித்தார். ''உங்கள் வட்டாரத்தில் இராணுவப் பிரிவுகள் தங்கியிருக்கின்றனவா?

''ஒரு இயந்திர பீரங்கிப் பிரிவு இருக்கிறது. அவர்கள் பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.''

''அப்படியா? இப்பொழுது கொஞ்சம் நம்பிக்கை ஏற்படுகிறது. உங்களுக்கு சிறிதளவு தானியம் கொடுக்குமாறு செய்யலாம்; எல்லோருக்கும் குறைந்த பட்ச அளவு மட்டுமே கிடைக்கும். விதைக்காகத்தான் தானியத்தைக் கொடுக்கிறோம்.''

''மிக்க நன்றி, ஐயா!'' என்று சொல்லிக் கொண்டு விவசாயிகள் அவரை வணங்கினார்கள். ''எங்கள் கிராமத்தின் முழுமனதான நன்றியைத் தெரிவிக்கிறோம்.''

''அதற்குள்ளாகவா?'' என்று விளதீமிர் இலியீச் அவர்களைத் தடுத்தார். மேசை மீதிருந்த தொலைபேசியை எடுத்துப் பேச ஆரம்பித்தார்.

''சில விவசாயிகள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும்'' என்று அவர் மரக் கட்டைகளைக் கொடுப்பது பற்றிப் பேசினார்.

அவர் தொலைபேசியை வைத்து விட்டுப் பிறகு வேறொரு எண்ணைச் சுழற்றினார்.

''சில விவசாயிகள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும்.'' விவசாயிகளுக்கு உதவி செய்வதற்குப் போர்வீரர்களை அனுப்புவது பற்றிப் பேசினார்.

விளதீமிர் இலியீச் மூன்றாவதாக தொலைபேசி எண்ணைச் சுழற்றினார். விவசாயிகளுக்கு தானியம் கொடுத்துதவ ஏற்பாடு செய்தார்.

''சரி. எல்லோருக்கும் தகவல் கொடுத்து விட்டேன். அநேகமாக உங்கள் துன்பம் மறைந்து விடும்'' என்றார்.

விவசாயிகள் மறுபடியும் அவருக்கு நன்றி சொன்னார்கள்.

''இது அனாவசியமானது'' என்று லெனின் அவர்களைத் தடுத்தார். ''அது என்னுடைய பொறுப்பு; உங்களுக்கும் தொழிலாளி, விவசாயி ஆட்சிக்கும் நான் செய்ய வேண்டிய கடமை அது. தோழர்களே! மீண்டும் என்னுடைய நல்வாழ்த்துக்கள்.''

சில நாட்களில் பழைய குடியிருப்புக்கு மரக்கட்டைகள் வந்திறங்கின; தானியம் வந்து சேர்ந்தது. அதற்குச் சிறிது காலத்துக்குப் பிறகு ஒரு படைப் பிரிவு அங்கே முகாமிட்டது. வெகு சீக்கிரத்தில் ரம்பங்களும் கோடரிகளும் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருக்கும் சத்தம் அந்த வட்டாரம் முழுவதும் கேட்டது. எல்லோரும் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

ஒரு மாத இடைவெளிக்குப் பிறகு அந்தச் சாம்பல் மேட்டில் ஒரு புதிய கிராமம் நிர்மாணிக்கப்பட்டது. வரிசை வரிசையாகத் தெருக்கள்; அவற்றில் அழகான சிறிய வீடுகள். கண்ணைக் கவரும் காட்சி.

விவசாயிகள் தங்களுடைய வீடுகளைச் சுற்றிக் கூடினார்கள்.

''பழைய குடியிருப்பு என்ற பெயர் இனி பொருத்தமில்லை; நம்முடைய கிராமம் புதியதாகிவிட்டது. எனவே பெயரும் புதியதாக இருக்க வேண்டும்.''

''ஆமாம்'' என்று விவசாயிகள் ஒத்துக் கொண்டார்கள்.

அங்கேயிருந்தவர்கள் ஆளுக்கொரு பெயரைச் சொன்னார்கள்.

''புதிய குடியிருப்பு.''

''பிரகாசமான குடியிருப்பு.''

''இந்தப் பெயர்கள் பொருத்தமல்ல'' என்றூர்கள் அங்கேயிருந்தவர்கள். ''இந்தப் பெயர்கள் ஒன்றும் மோசமானவை அல்ல. ஆனுல் அவை பொருத்தமாகத் தோன்றவில்லே. இன்னும் பொருத்தமான பெயராகச் சொல்லுங்கள்.''

திடீரென்று ஒரு குரல் கேட்டது.

''லெனின் பெயரை வைக்கலாமே'' என்றூர் ஒருவர்.

''ஆமாம். அதுதான் சரி'' என்று அங்கேயிருந்த விவசாயிகள் உற்சாகமாகச் சொன்னுர்கள்.

பழைய குடியிருப்பு என்ற கிராமம் மறைந்து விட்டது. அந்த இடத்தில் லெனின் பெயரைத் தாங்கியுள்ள கிராமம் ஏற்பட்டிருக்கிறது.

நீச்சல் போட்டி

லியோன்கா பக்ரா நதியில் நீந்திக் கொண்டிருந்த பொழுது லெனின் ஆற்றங்கரைக்கு வந்தார். அவர் கோர்க்கி கிராமத்துக்குச் சென்று ஓய்வெடுக்க வேண்டும் என்று அவருடைய மருத்துவர் கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தார்.

லெனின் லியோன்காவை உற்றுப் பார்த்தார். அவன் சிறுவனுக இருந்தாலும் நல்ல நீச்சல்காரன். தண்ணீரில் மேலேயிருந்து குதிப்பது, குட்டிக்கரணம் போடுவது அவனுக்குக் கைவந்த கலே. மல்லாக்க நீச்சடிப்பதும், நீரோட்டத்தோடு சேர்ந்தும் அதற்கு எதிராக நீச்சடிப்பதும் அவனுக்குப் பிடிக்கும். ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு நீச்சடித்துப் போவதும் உடனே திரும்பிவருவதுமாக அவன் ஆற்றில் விளேயாடிக் கொண்டிருந்தான்.

லியோன்காவும் லெனினேப் பார்த்தான். ஆனுல் அவர் யார் என்பது அவனுக்குத் தெரியாது. அவன் கோர்க்கி கிராமத்துக்குச் சமீபத்தில்தான் வந்திருந்தான். அந்த ஊரைச் சேர்ந்த யாரோ ஒருவர் என்று லெனினே நினேத்துக் கொண்டான்.

அவன் தண்ணீரை விட்டு வெளியே வந்தபொழுது லெனின் அவனேடு பேசினுர்:

''தண்ணீர் எப்படி இருக்கிறது?''

''தண்ணீரா? ஈரமாக இருக்கிறது'' என்று லியோன்கா குறும்பாக பதிலளித்தான்.

''ஈரமாக இருக்கிறதா!'' என்று லெனின் பலமாகச் சிரித்தார். அவருக்கு அவனே மிகவும் பிடித்துவிட்டது.

விளதிமிர் இலியீச் ஆற்றங்கரையில் உட்கார்ந்து முதலில் தண்ணீரையும் பிறகு லியோன்காவையும் பார்த்தார். மறுபடியும் அப்படியே செய்தார். கடைசியில் அவனோடு பேச ஆரம்பித்தார்.

''வேகமாக நீந்துவது யார் என்று பார்ப்போமா?''

''ஓ! தாராளமாக'' என்று லியோன்கா பதிலளித்தான்.

லியோன்கா நன்ருக நீந்தக் கூடியவன். ஆனால் லெனினும் அவனுக்குச் சளைத்தவரல்ல. என்ன இருந்தாலும் அவர் வோல்கா பிராந்தியத்தைச் சேர்ந்தவராயிற்றே. நீச்சலடிக்கும் பொழுது யாராவது லெனினை முந்திவிட்டால் அது அபூர்வமான சாதனையே.

விளதிமிர் இலியீச்சும் லியோன்காவும் போட்டியிட்டு நீந்தினார்கள். ஆனால் லியோன்கா சீக்கிரத்தில் லெனினை முந்திவிட்டான். அவர் சற்று மனத்தாங்கலோடுதான் விடுதிக்குத் திரும்பினார்.

''அவன் என்னைத் தோற்கடித்து விட்டானே! இது நல்ல அறிகுறியல்லவே. எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தில் இருந்த உடல்பலம் போய்விட்டது.''

உண்மையைச் சொல்ல வேண்டுமென்ருல் லியோன்கா அன்று முழுவதும் லெனினுடைய மனநிலையைக் கெடுத்துவிட்டான். ஆனால் லியோன்கோவுக்கு மிகவும் குஷி. அவன் கோர்க்கிக்குத் திரும்பியதும் பக்ராவில் ஒரு பெரிய மனிதரை நீச்சல் போட்டியில் தோற்கடித்ததை எல்லோரிடமும் சொன்னான்.

''அவர் யார்?'' என்று அவனுடைய நண்பர்கள் அவனைக் கேட்டார்கள்.

''அதிகமான உயரமில்லை. நடுத்தரம்.''

''தாடி வைத்திருந்தாரா?

''ஆமாம்.''

''மீசை வைத்திருந்தாரா?''

''ஆமாம். மீசை வைத்திருந்தார்.''

''உயரமான நெற்றியா?''

''ஆமாம்.''

''அந்தப் பெரியவர் லெனின்'' என்று குழந்தைகள் பலமாகக் கத்தின.

லியோன்கா ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தான். அன்று நடைபெற்ற சம்பவங்களை நினைத்தபொழுது அவனுக்குச் சங்கடமாக இருந்தது. அவன் லெனினிடம் குறும்பாகப் பேசியதோடு நீச்சலிலும் அவரைத் தோற்கடித்துவிட்டான். அடுத்த தடவை அவரைப் பார்க்கும் பொழுது அதற்குப் பரிகாரம் செய்வதென்று முடிவு செய்து கொண்டான்.

மறுநாள் அவன் ஆற்றங்கரைக்குப் போனுன். மாலை வரையிலும் அங்கேயே இருந்தான். ஆனுல் லெனின் அங்கே வரவில்லை. இப்படியே ஒரு வாரத்துக்கு மேல் அவன் தினமும் ஆற்றங்கரைக்குப் போனுன். நல்ல வேளையாகப் பத்தாவது நாளன்று லெனினை மறுபடியும் அங்கே பார்த்தான்.

''என்ன, தண்ணீர் எப்படி இருக்கிறது?'' என்று விளதீமிர் இலியீச் கேட்டார்.

''வெதுவெதுப்பாக இருக்கிறது. நல்ல வெதுவெதுப்பு. நீங்கள் நம்பக் கூட மாட்டீர்கள், விளதீமிர் இலியீச்.''

''அப்படியானுல் தண்ணீர் உண்மையிலேயே வெதுவெதுப்பாகத் தான் இருக்க வேண்டும்'' என்ருர் லெனின்.

எப்படியாவது லெனினைத் தண்ணீரில் குதிக்கச் செய்ய வேண்டுமென்று லியோன்கா விரும்பினுன்.

''தண்ணீரில் நீந்துவது சுகமாக இருக்கிறது. இறகு மெத்தையில் படுத்திருப்பது போல இருக்கிறது'' என்ருன் லியோன்கா.

லெனினும் லியோன்காவும் மறுபடியும் நீச்சல் போட்டியில் ஈடுபடுவதென்று முடிவு செய்தார்கள். ஒரு குச்சியைத் தண்ணீரில் தூக்கி எறிந்தார்கள். உடனே இருவரும் தண்ணீரில் குதித்தார்கள். லியோன்கா இந்த சந்தர்ப்பத்துக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தான்.

லியோன்கா நீந்தியது மாதிரித் தோன்றினுலும் அவன் உண்மையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அது மட்டுமல்ல. தன்னுடைய 'தந்திரம் வெளியே தெரியாமல் மறைத்துக் கொண்டான். ரொம்பவும் சிரமப்பட்டு மூச்சு விடுவது போல நடித்தான்.

ஆனுல் லெனின் இதை கவனித்து விட்டார். லியோன்கா பக்கம் திரும்பினுர்.

''என்ன தந்திரம் செய்கிருய்?''

''விளதீமிர் இலியீச்! ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?'' என்று லியோன்கா மறுப்புத் தெரிவித்தான். அவன் லெனினிடம் பொய் சொன்னுன்; அதிலும் சிறிதும் வெட்கப் படாமல் பொய் சொன்னுன். அவன் பொய் சொல்கிருன் என்பதை லெனின் புரிந்து கொண்டார். அவனுக்குச் சவால் விடுவதென்று தீர்மானித்தார்.

விளதீமிர் இலியீச் தன்னுடைய வேகத்தைக் குறைத்தார். அவர் திரும்பிப் பார்த்தார்—லியோன்காவும் வேகத்தைக் குறைத்து விட்டான். லெனின் மேலும் வேகத்தைக் குறைத்தார். ஆனுல் அப்பொழுதும் லியோன்கா அவரை முந்தவில்லை. அவர்கள் அந்தக் குச்சிக்கு அருகில் வர வர அவர்களுடைய நீச்சல் வேகமும் குறைந்தது. இப்பொழுது

அவர்கள் நீச்சலை நிறுத்திவிட்டு மிதந்து கொண்டிருந்தார்கள்.

லெனின் லியோன்கா பக்கம் திரும்பினார்: ''இப்பொழுது என்னிடம் மாட்டிக் கொண்டாய்'' என்றார்.

தன்னுடைய தந்திரம் அம்பலமாகிவிட்டது என்பதைப் புரிந்துகொண்ட லியோன்கா அவமானத்தால் தலையைக் குனிந்தான்.

''லியோன்யா! இது சரியில்லை'' என்றார் லெனின். அப்பொழுது அவர்கள் கரைக்குப் பக்கமாக இருந்தார்கள். ''நாம் மறுபடியும் போட்டியை ஆரம்பிக்க வேண்டியது தான்.''

மறுபடியும் அவர்கள் குச்சியைத் தண்ணீரில் விட்டெறிந்தார்கள்; மறுபடியும் இருவரும் தண்ணீருக்குள் குதித்தார்கள். தன்னுடைய மோசடி பலிக்காதென்று லியோன்காவுக்குப் புரிந்தது. எனவே இப்பொழுது அவன் தன்னுடைய முழு பலத்தோடும் நீந்தினான். அவன் என்ன பாடுபட்டும் லெனினைத் தொட்டு நீந்த முடியவில்லை. அவரை முந்திவிட வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தான். கைகளை மாற்றி மாற்றி வேகமாகப் போட்டான். ஆனால் பலனில்லை. இப்பொழுது அவனுக்கு உண்மையாகவே மூச்சு வாங்கியது. அவனால் லெனினைத் தொடர்ந்து நீந்த முடியவில்லை.

லியோன்கா போட்டியில் தோற்று முகவாட்டத்தோடு வீட்டுக்குத் திரும்பினான்.

ஆனால் விளதீமிர் இலியீச் மகிழ்ச்சி பொங்க விடுதிக்குத் திரும்பினார்.

''நம்முடைய அணி பலமிழந்து விட்டதாக நினைக்க வேண்டியதில்லை என்பதை இது காட்டுகிறது. நம்மிடம் சிறிது பலமிருக்கிறது...''

அவர் போகும் வழியில் சிந்தித்தார்: ''இன்றைக்குப் பெரிய வெற்றியே. இனி மேல் நான் ஓய்வெடுக்க வேண்டியதில்லை என்று தெரிகிறது. பழைய வெடிமருந்துக் கிடங்கு தான். ஆனால் இன்னும் கொஞ்சம் வெடிமருந்து இருக்கிறது.''

பாவம், லியோன்கா. பரிதாபமாக வீட்டுக்குத் திரும்பினான். அவன் லெனினுக்கு முதல் இடம் கொடுப்பதற்குத் தான் விரும்பினான். அவன் விரும்பியபடியே நடந்தது. ஆனால்... போட்டி வளர்ச்சியடைந்த பொழுது இப்படி முடிவு ஏற்படும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

ஸ்—டெப்—பா—ன் மார்க்கேலிச்!

''விளதீமிர் இலியீச்!''

லெனின் பதில் சொல்லவில்லை.

''வி—ள—தீ—மி—ர் இலியீச்!''

பதில் இல்லை. பிர் மரங்களின் கிளைகளினூடே காற்று தான் முணுமுணுத்தது.

லெனின் வேட்டையாடுவதற்காக அந்தக் காட்டுக்கு வந்திருந்தார். அவருக்குத் துணையாக வந்திருந்த ஸ்டெப்பான் மார்க்கேலிச் என்ற வயதான விவசாயிக்கு இப்பொழுது கவலை ஏற்பட்டது.

அவர் பயத்தோடு இங்குமங்கும் பார்த்தார். ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று உற்றுக் கேட்டார்.

அவரும் லெனினும் அந்தப் பழைய எல்ம் மரத்தடியில் சந்திப்பதென்ற முடிவோடு ஒரு மணி நேரத்துக்கு முன்பு பிரிந்து சென்றார்கள். மார்க்கேலிச் இன்னொரு இருபது நிமிடங்கள் காத்திருந்தார். ஆனல் அதற்குப் பிறகும் லெனினைப் பற்றி எந்த அறிகுறியும் இல்லை.

''என்ன நடந்திருக்கும்?'' ஏதாவது பதில் கிடைக்குமா என்று மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தார் ஸ்டெப்பான் மார்க்கேலிச். லெனின் நேரம் தவற மாட்டார் என்பது அவருக்கு நன்ருகத் தெரியும். அவர் வழி தவறியிருக்க வேண்டும். அல்லது வேறு ஏதேனும் ஆபத்தாகவும் இருக்கலாம். உடனே அவரைத் தேட வேண்டும்.

மார்க்கேலிச் அங்கிருந்து போன சில நிமிடங்களுக்குப் பிறகு லெனின் அந்த எல்ம் மரத்தடிக்கு வந்தார். அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். அவர்கள் முடிவு செய்து கொண்டபடி மார்க்கேலிச் அங்கே இருக்க வேண்டும். ஆனல் அவரைக் காணவில்லையே.

''என்ன நடந்திருக்கும்?'' லெனினுக்கு ஆச்சரியமாக இருந்தது. மார்க்கேலிச் காலந்தவருதவர் என்பது லெனினுக்குத் தெரியும். அப்படியானல் அவருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்க வேண்டும். அவருக்குக் கவலையாக இருந்தது. சிறிது நேரம் அந்த மரத்தைச் சுற்றி இங்குமங்கும் நடந்தார். பிறகு அந்த வயோதிகரைத் தேடிப் புறப்பட்டார்.

லெனின் காட்டிற்குள் நடந்து சென்ருர்.

''ஸ்டெப்பான் மார்க்கேலிச்!''

அவர் பதில் வருகிறதா என்று சிறிது நேரம் நின்று பார்த்தார்.

''ஸ்—டெப்—பா—ன் மார்க்கேலிச்!''

இந்த சமயத்தில் மார்க்கேலிச்சும் காட்டுக்குள் சுற்றிக் கொண்டிருந்தார். ஆனல் அது வேறு பகுதி.

''விளதீமிர் இலியீச்!'' அந்த வயோதிகருடைய குரல் காட்டில் எதிரொலித்தது. ''விள—தீ—மிர் இலியீச்!''

மார்க்கேலிச் தேடிப் போனதில் பலன் ஏற்படவில்லை. எனவே அந்த எல்ம் மரத்தடிக்குத் திரும்ப முடிவு செய்தார்.

விளதீமிர் இலியீச்சும் அதே மாதிரி ஏமாற்றத்துக்குள்ளானபடியால், அதே முடிவுக்கு வந்தார்.

அந்த வயதான விவசாயி எல்ம் மரத்துக்கு நேரே வந்த பொழுது லெனினும் வேறு திசையிலிருந்து அங்கே வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

விளதீமிர் இலியீச்சைப் பார்த்ததும் அந்த வயோதிகரின் முகத்தில் தெளிவு ஏற்பட்டது.

மார்க்கேலிச்சுக்கு ஆபத்தேற்படவில்லை என்பதைப் பார்த்தவுடன் லெனின் நிம்மதியாக மூச்சு விட்டார் என்பது உண்மையே. மேலும் தான் இவ்வளவு சுலபமாக பயந்துவிட்டதை நினைக்கும் பொழுது அவருக்குச் சங்கடமாக இருந்தது. தன்னுடைய வழிகாட்டி அந்தக் காட்டில் ஏதாவது சொந்த வேலையாக இருந்திருக்கலாம். மார்க்கேலிச்சைத் தான் தேடிப் போனதைச் சொல்ல வேண்டாமென்று லெனின் முடிவு செய்தார். அந்த வயோதிகரும் தனக்கு முதலில் ஏற்பட்ட கவலையைப் பற்றி சங்கடமடைந்தார். எனவே அந்த எல்ம் மரத் தடியை விட்டு எங்கேயும் போகாதது போல நடிக்க முடிவு செய்தார்.

''மன்னியுங்கள், ஸ்டெப்பான் மார்க்கேலிச்!'' என்றார் விளதீமிர் இலியீச். ''தயவு செய்து கோபமடையாதீர்கள். இந்தக் காட்டின் அழகில் ஈடுபட்டு நேரத்தை மறந்துவிட்டேன்.''

''அதற்கென்ன, விளதீமிர் இலியீச்!'' என்று பதிலளித்தார் அந்த வயோதிகர். ''இங்கே யாரால் நேரத்தை நினைக்க முடியும்? நான் ஒரு அழகான மரங்கொத்திப் பறவையைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டேன்.''

''அப்படியா? மிக்க மகிழ்ச்சி'' என்றார் விளதீமிர் இலியீச்.

தான் கவலைப்பட்டதை மார்க்கேலிச்சிடமிருந்து மறைத்து விட்டதைப் பற்றி லெனினுக்குத் திருப்தி. மார்க்கேலிச்சும் அதே காரணத்துக்காக மகிழ்ச்சி அடைந்தார்.

எனினும் போகும் வழியில் வயோதிகரால் உண்மையை மறைக்க முடியவில்லை.

''நான் உங்களைத் தேடிக் காட்டுக்குள் போனேன்'' என்று மார்க்கேலிச் சொன்னர்.

''என்ன சொல்கிறீர்கள்? என்னைத் தேடிப் போனீர் களா?'' என்று லெனின் ஆச்சரியத்தோடு கேட்டார்.

''உங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று எனக்கு பயமுண்டாகிவிட்டது.''

''ஏன் வீணுகக் கவலைப்பட்டீர்கள்? நல்ல வேடிக்கை!'' லெனின் பலமாகச் சிரித்தார்.

அந்த வயோதிகர் லெனினைக் கூர்ந்து பார்த்தார். ''நான் என்ன அப்படி வேடிக்கையாகச் சொல்லிவிட்டேன். லெனின் எதற்காக இப்படிச் சிரிக்கிறுர்?''

தர்ப்பூசணிப் பழங்கள்

மிஷாட்கா, ரோட்கா ஆகிய இரு சிறுவர்களும் பக்கத்து வீடுகளில் வசித்தார்கள். அந்தக் கோடைகாலம் முழுவதும் அவர்கள் தர்ப்பூசணி விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட் டிருந்தனர்.

தோட்டத்துக்கு வரும் பறவைகளை விரட்டுவது அவர் களுடைய முதல் வேலை. அந்த வருடம் கோடைகாலம் வறட்சியாகவும் வெப்பமாகவும் இருந்தது. எனவே அந்தச் சிறுவர்கள் அடிக்கடி ஆற்றுக்குப் போய் வாளிகளில் தண் ணீர் கொண்டு வந்து காய்ந்து போன மண்ணில் ஊற்றினுர் கள். தங்கள் தோட்டங்களுக்குப் பக்கத்திலிருந்த நாணற்புத ருக்குள் நாள் முழுவதும் மறைந்து கொண்டிருந்து மற்ற சிறுவர்கள் தர்ப்பூசணிப் பழங்களைத் திருடி விடாமல் பாது காத்தார்கள்.

சூரிய வெப்பத்தில் தர்ப்பூசணிகள் நன்கு பழுத்தன. மிஷாட்காவும் ரோட்காவும் அவற்றைத் தோழர் லெனி னுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதென்று இரகசியமாகத் திட்டம் போட்டிருந்தார்கள்.

தர்ப்பூசணிகள் பெரிய பழங்களாயின. ஒவ்வொரு பழமும் சுமார் எட்டு கிலோகிராம் எடை இருக்கும். சிறு வர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. அந்தப் பழங்களை எடுத்துக் கொண்டு மாஸ்கோவுக்குப் போக முடிவு செய்தார்கள்.

மாஸ்கோ எந்தத் திசையில் இருக்கிறதென்பது மிஷாட் காவுக்கு சரியாகத் தெரியவில்லை.

''அதோ, அந்தத் திசையில்தான்'' என்று ரோட்கா விளக்கினுன். ''அந்த வயலுக்குப் பின்னுலிருக்கும் புல்வெளி யையும் காட்டையும் தாண்டிப் போனுல் மாஸ்கோ வந்து விடும். சுமார் இருபது வெர்ஸ்டா தூரமிருக்கும்'' என்ருன்.

உண்மை என்னவென்றால் அவர்களுடைய வீடுகளிலிருந்து மாஸ்கோ சுமார் ஆயிரம் வெர்ஸ்டா தூரம் இருக்கும்.

பிரயாணத்தின் போது கொண்டு போவதற்காகச் சில உணவுப் பண்டங்களையும் சிறுவர்கள் ரகசியமாகச் சேகரித்தார்கள். இருவரும் ரொட்டிகளைச் சேமித்தார்கள். ரோட்கா சமையல் அறையிலிருந்து கொஞ்சம் பன்றி இறைச்சி எடுத்து வைத்துக் கொண்டான். மிஷாட்கா கோழிக் கூட்டிலிருந்து சில முட்டைகளை எடுத்து வைத்துக் கொண்டான்.

அவர்கள் பிரயாணத்துக்குத் தயாராகிவிட்டார்கள்—ஆனால் திடீரென்று சில சம்பவங்கள் நடைபெற்றன.

முட்டைகள் காணமற்போனதை மிஷாட்காவின் தாயார் கண்டுபிடித்துவிட்டாள். சமையலறையிலிருந்த பன்றி இறைச்சி மர்மமான வகையில் குறைந்திருப்பதை ரோட்காவின் தாயார் கண்டுபிடித்தாள். இதைச் செய்தது யார் என்று கண்டுபிடிக்க அவர்களுக்கு அதிக நேரமாகவில்லை.

முதலில் சிறுவர்கள் தங்களுக்கு ஒன்றுமே தெரியாதென்று தான் சொன்னார்கள். தாங்கள் கோழிக் கூண்டின் பக்கமே போகவில்லை; ரோட்கா பன்றி இறைச்சியைத் தொடக்கூட இல்லை, தங்கள் மீது தப்பாகக் குற்றம் சாட்டப்படுவதாகத் தாயார்களிடம் சொன்னார்கள். அவர்களுடைய தகப்பனார்கள் வீட்டுக்கு வந்த பிறகு சிறுவர்களின் வாதங்கள் பலவீனமடைந்தன. கடைசியில் அவர்கள் எல்லாவற்றையும் மறைக்காமல் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆனால் இன்னொரு ஆச்சரியம் நடந்தது.

''அவர்களுடைய யோசனை சரியானதுதான். தோழர் லெனினுக்கு நம்முடைய குபான் தர்ப்பூசணிப் பழங்களைக் கொடுப்பது பொருத்தமான அன்பளிப்பாகவே இருக்கும்'' என்று அவர்களுடைய பெற்றோர்கள் பேசிக் கொண்டார்கள்.

அந்த கஸாக் கிராமத்திலிருந்த எல்லோரும் இந்த யோசனையை வரவேற்றனர். விளதீமிர் இலியீச்சுக்கு தர்ப்பூசணிப் பழங்களை அன்பளிப்பாகக் கொடுப்பதென்று கிராமத்தில் எல்லோரும் முடிவு செய்தார்கள். அந்தப் பழங்களை மாஸ்கோவுக்குக் கொண்டு போவதற்கு ஒரு நபருக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. மிஷாட்காவும் ரோட்காவும் நீரூற்றி வளர்த்த தர்ப்பூசணிப் பழங்களை அவர் மாஸ்கோவுக்குக் கொண்டு போய் தோழர் லெனினுக்கு முன்னால் வைத்தார்.

ஸ்டெப்பி பிரதேசத்திலிருந்து வந்திருக்கும் அழகிய பழங்களை விளதீமிர் இலியீச் கவனமாகப் பார்த்தார்; விரலால் சுண்டினார்; பின்னால் போய் கண்களைச் சுருக்கிக் கொண்டு பார்த்தார். அவருக்கு ஒரே மகிழ்ச்சி.

''பிரமாதம், பிரமாதம்!'' என்றார் லெனின்.

தன்னுடைய இதயம் நிறைந்த நன்றியையும் தனிப்பட்ட வாழ்த்துக்களையும் சிறுவர்களுக்குத் தெரிவிக்குமாறு விள தீமிர் இலியீச் கேட்டுக் கொண்டார்.

இந்தச் செய்தியைக் கேட்ட பொழுது சிறுவர்கள் மிக வும் பெருமையடைந்தனர். அந்த கிராமம் முழுவதுமே இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தது.

இன்னும் ஒரே ஒரு பிரச்சினை சிறுவர்களுக்குத் தொல்லை கொடுத்தது. யாருடைய தர்ப்பூசணிப் பழம் அதிக ருசி யாக இருந்தது என்பதே அந்தப் பிரச்சினை.

தன்னுடைய பழம்தான் மிகவும் ருசியாக இருந்திருக்கும் என்று மிஷாட்கா உறுதியாக நம்பினான்.

ஆனால் ரோட்கா இதை ஒத்துக் கொள்ளவில்லை என்ப தோடு தன்னுடைய அபிப்பிராயத்தை எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருந்தான்.

''சந்தேகமே வேண்டியதில்லை. என்னுடைய தர்ப் பூசணிப் பழம்தான் அதிக ருசியாக இருந்திருக்கும்.''

இதைப் பற்றி தோழர் லெனினுக்கே எழுதிக் கேட் கலாம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

எனினும் அதற்குத் தேவையான துணிவு அவர்களிடம் இல்லை.

அதுவும் நல்லதுதான். ஏனென்றால் அந்தச் சிறுவர் களுக்கு லெனின் என்ன பதில் எழுத முடியும்? அவர் தான் அந்தப் பழங்களைச் சாப்பிடவே இல்லையே. அவர் பழங்களைப் பார்த்துப் பாராட்டிய பிறகு, ஹமோவ்னிக்கி தொழிலாளர் மாவட்டத்தைச் சேர்ந்த அனாதைக் குழந்தைகள் இல்லத் துக்குப் பழங்களை அனுப்பிவிட்டார். எல்லாக் குழந்தை களின் மகிழ்ச்சியும் அவருக்கு முக்கியமாயிற்றே.

கிறுக்கன்

ஒரு நாள் லெனினுக்கு ஒரு கடிதம் வந்தது:

''அன்புள்ள விளதீமிர் இலியீச் அவர்களே! தயவு செய்து எங்களுடைய விவசாய வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுங் கள். அக்டோபர் மாதத்துக்குள்ளாக எங்களுடைய அன் பளிப்பு உங்களுக்கு வந்து சேரும்.''

லெனின் இந்தக் கடிதத்தைப் படித்தார்.

''சே! இன்னொரு அன்பளிப்பா?'' என்று விளதீமிர் இலியீச் அதிருப்தியோடு கடிதத்தை வைத்தார்.

விவசாயிகள் அன்பளிப்பு என்ன என்று குறிப்பிட்டு எழுதவில்லை. அவர்கள் அது இரகசியமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

''நாம் என்ன கொடுக்கப் போகிறோம் என்பது முன் பாகவே தெரியாமலிருந்தால்தான் அது சுவாரசியமாக இருக்கும்'' என்று விவசாயிகள் பேசிக் கொண்டார்கள்.

உண்மையைச் சொல்வதென்றால் அது ஒரு வகையில் சாதாரணமான அன்பளிப்புதான். அக்டோபர் கொண்டாட்டத்துக்கு முந்திய நாள் விளதீமிர் இலியீச்சுக்கு இறைச்சியும் பன்றிக் கொழுப்பும் அனுப்புவதென்று அவர்கள் முடிவு செய்திருந்தார்கள்.

அந்த முடிவில் அவர்களுக்கு முழுத் திருப்தி ஏற்பட்டிருந்தது. ஆனால் எப்பொழுதும் போல இந்த விஷயத்திலும் ஒரு நபர் மறுப்புத் தெரிவித்தார். அவர் முன்பு செங்காவலர் படையில் புத்யோன்னியின் தலைமையில் சேவை செய்தவர். ஸெலிவெர்ஸ்ட் டுப்ஸோவ் என்பது அவருடைய பெயர்.

''அட! மூளையில்லாப் பசங்களா! இதை அன்பளிப்பென்று உண்மையாகவே நினைக்கிறீர்களா?'' என்று அவர் விவசாயிகளிடம் சொன்னார்.

''சும்மா இரு!'' என்று விவசாயிகள் ஆட்சேபித்தார்கள். ''விளதீமிர் இலியீச்சும் மனிதர்தான். அவர் நாம் சாப்பிடும் உணவைச் சாப்பிடுவதில்லை என்று நினைக்கிறாயா? பன்றிக் கொழுப்பு அவருக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும்.''

''பன்றிக் கொழுப்பு'' என்று சொல்லிச் சிரித்தார் டுப்ஸோவ். ''உங்களுக்குக் கற்பனை கிடையாது. கொஞ்சம் கூடக் கிடையாது. உங்களுக்கு மூளை தலையிலே இல்லை; உட்காரும் இடத்தில்தான் இருக்கிறது.''

விவசாயிகளுக்கு ஆத்திரமேற்பட்டது. டுப்ஸோவிடம் கோபமாகச் சொன்னார்கள்.

''அப்படியா! உன்னுடைய யோசனையைத்தான் சொல்லேன்.''

டுப்ஸோவ் தன்னுடைய யோசனையைக் கூறினார். அவ்வளவுதான். அங்கிருந்த எல்லோரும் பலமாகச் சிரித்ததில் அந்தக் குடிசையின் கூரையே பறந்து விடும் போல இருந்தது.

அவர் யோசனை இதுதான். விவசாயிகள் தம்முடைய மண்வெட்டி, கடப்பாறைகளை எடுத்துக் கொண்டு புறப்பட வேண்டும்; தங்களுடைய கிராமத்திலிருந்து ரயில் நிலையத்துக்குச் (சுமார் ஒன்பது வெர்ஸ்டா தூரம்) சாலை அமைக்க வேண்டும். உடனே இதைச் செய்ய வேண்டும்.

''சாலையா!'' என்று விவசாயிகள் அவரைக் கேலி செய்தார்கள்.

''அதனால் லெனினுக்கு என்ன பிரயோசனம்?''

''இது நமக்கல்லவா அன்பளிப்பாக இருக்கும்.''

''கிறுக்கன். புத்யோன்னியின் தலைமையில் யுத்தம் செய்தவன் சொல்கிற யோசனையைப் பார்த்தாயா!''

இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு, இந்த யோசனையைக் கேலி செய்து போதுமான அளவுக்கு விவசாயிகள் சிரித்த பிறகு ஒருவர் அடக்கத்தோடு சொன்னார்:

''சகோதரர்களே! அது நல்ல யோசனையாக இருக்கலாம். அது லெனினுக்குப் பிடித்தமானதாகவும் இருக்கலாம்.''

''ஒரு வேளை அப்படியுமிருக்கலாம்'' என்று விவசாயிகள் தயக்கத்தோடு சொன்னார்கள்.

''சந்தேகமே வேண்டியதில்லை. லெனினுக்கு இதுதான் பிடிக்கும்'' என்று வற்புறுத்தினார் டுப்ஸோவ்.

விவசாயிகள் தம்முடைய யோசனையை ஒத்துக் கொள்ளுமாறு செய்தார்.

விவசாயிகள் பெண்களையும் கூட்டிக் கொண்டு, குளிர் காய்ந்து கொண்டிருந்த கிழவர்களையும் இழுத்துக் கொண்டு வேலை செய்யப் புறப்பட்டார்கள். வேலை மும்முரமாக நடந்தது. அக்டோபருக்குச் சற்று முன்பாகவே சாலை போடும் வேலை முடிந்தது. காமென்கா நதியின் குறுக்கே ஒரு பாலமும் கட்டப்பட்டது.

விவசாயிகள் விளதீமிர் இலியீச்சுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கடிதம் எழுதினார்கள். அதன் கடைசியில் சாலை போட்ட தகவலையும் தெரிவித்தார்கள். அவர் விரும்பினால் விவசாயிகள் தமக்குக் கொடுத்த அன்பளிப்பாக அந்தச் சாலையைக் கருதலாம்;இம்மாதிரியான அன்பளிப்பு பிடிக்கவில்லையென்றால் தயவு செய்து எங்கள் மீது கோபப்பட வேண்டாம்; புத்யோன்னியின் படையில் சேவை செய்த முன்னாள் போர்வீரன் ஸெலிவெர்ஸ்ட் டுப்ஸோவ் தான் அதற்குப் பொறுப்பு என்று எழுதியிருந்தார்கள்.

சில நாட்களிலேயே அவர்களுக்கு பதில் வந்தது.

''நல்ல அன்பளிப்பு; உண்மையைச் சொல்வதென்றால் மிகவும் சிறந்த அன்பளிப்பு'' என்று விளதீமிர் இலியீச் எழுதியிருந்தார். இதைக் காட்டிலும் சிறந்த அன்பளிப்பைத் தன்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை என்று அவர் குறிப்பிட்டிருந்தார். கம்யூனிசத்தை நோக்கி நாட்டின் முன்னேற்றப் பாதையில் இந்த ஒன்பது வெர்ஸ்டா சாலை ஒரு முக்கியமான காலடியாகும் என்று கடிதத்தின் இறுதியில் எழுதப்பட்டிருந்தது.

விவசாயிகள் கடிதத்தைப் படித்தார்கள்.

''எவ்வளவு அருமையான பதில்!''

''லெனின் எவ்வளவு மனப்பூர்வமாக எழுதியிருக்கிறார்!''

''விளதீமிர் இலியீச் மதிக்கக் கூடிய அன்பளிப்பை நாம் கொடுத்தோம்'' என்று விவசாயிகள் முடிவு செய்தார்கள். ''மே தினக் கொண்டாட்டத்துக்கு முன்னால் அவருக்கு இன்னொரு அன்பளிப்புக் கொடுக்க வேண்டும்'' என்று நினைத்தார்கள்.

லெனின் காணி

''லெனினை மறந்துவிடாதீர்கள்! விளதீமிர் இலியீச்சை மறந்துவிடாதீர்கள்'' என்று இவான் பெரெப்ளேட்டொவ் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான். அங்கே முன்னாள் நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமான பண்ணை நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

அவர்களால் எப்படி மறக்க முடியும்? பிரித்துக் கொடுக்கப்படும் நிலங்களில் ஒரு பகுதியை லெனினுக்கென்று தனியாக ஒதுக்குவதாக முந்திய நாள் மாலையில்தானே முடிவு செய்யப்பட்டது.

''அது செய்ய வேண்டியதுதான்.''

''அவரால்தானே எல்லாக் காரியங்களும் நடந்திருக்கின்றன.''

''அவருடைய உபயோகத்துக்கென்று நிலம் ஒதுக்க வேண்டியது தான்.''

அது நல்ல நிலமாக இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பிய படியால் சரியான நிலத்தைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு வெகு நேரமாயிற்று. கிராமத்தில் எந்தப் பக்கத்தில் நல்ல நிலம் இருக்கிறது என்று விவாதித்தார்கள். அந்த நிலம் அதிக ஈரமாகவோ, அதிகம் காய்ந்ததாகவோ இருக்கக் கூடாது; அதில் கறுப்பு மண்ணும் களி மண்ணும் கலந்திருக்க வேண்டும் என்று கவனமாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஒரு டெஸ்யாட்டினாவை அளந்து லெனினுக்கென்று அதை ஒதுக்கி வைத்தார்கள். பிறகு மாஸ்கோவுக்குக் கடிதம் எழுதினார்கள். கிராமத்துக்கு வந்து நிலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு லெனினைக் கேட்டுக் கொண்டார்கள்.

உடனே அவர்களுக்கு பதில் கிடைத்தது.

லெனின் விவசாயிகளின் அன்புக்கு நன்றி தெரிவித்திருந்தார்; மக்கள் கமிஸாரவையில் முக்கியமான அலுவல்களில்

டெஸ்யாட்டினா — ருஷ்ய நில அளவை முறையில் 2.7 ஏக்கர் நிலம்

தான் ஈடுபட்டிருப்பதால் கிராமத்துக்கு வந்து விவசாயத்தில் ஈடுபட முடியாது; அதற்காகத் தன்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். தனக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை விவசாயிகள் தங்களுடைய உசிதம் போலப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அனுமதியோடு கடிதம் முடிவடைந்தது.

''அது உண்மைதான். இந்தக் கட்டத்தில் அவர் விவசாயத்தில் ஈடுபட முடியுமா?'' என்று விவசாயிகள் பேசிக் கொண்டனர்.

''அரசாங்க வேலையிலிருந்து நாம் அவரைப் பிரிக்கக் கூடாது.''

''என்னவோ போங்கள். அவர் வந்தால் நமக்கு ஒரு நல்ல அடுத்த வீட்டுக்காரராக இருந்திருப்பார். போச்சு!''

விவசாயிகள் அவருடைய முடிவை ஏற்றுக் கொண்டார்கள். இன்னும் ஒரு விஷயம் பாக்கியிருந்தது. ''உங்களுடைய உசிதம் போல நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று லெனின் எழுதியிருந்தார். எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் ஒன்றுமே எழுதவில்லை.

இதைப் பற்றி முடிவு செய்வதற்கு விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டார்கள். அவர்கள் சிந்தித்தார்கள்... மேலும் சிந்தித்தார்கள்.

கடைசியில் அந்த டெஸ்யாட்டிஞ நிலத்தை வேறு யாருக்கும் கொடுப்பதில்லை, தங்களுக்கிடையிலும் அதைப் பிரித்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்தார்கள். அதற்குப் பதிலாக அதைப் பொது நிலமாக வைத்துக் கொண்டு, எல்லோரும் சேர்ந்து அதை உழுது பயிரிட்டு அறுவடை செய்வதென்று முடிவு செய்தார்கள். அந்த அறுவடையைத் தனியாக வைத்திருந்து கிராம சமூகத்தின் பொது நன்மைக்குப் பயன்படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அது அப்படியே அமுல் நடத்தப்பட்டது.

அது நல்ல யோசனை. அவசர காலங்களில் விவசாயிகள் உபயோகிப்பதற்கென்று தனியே ஒரு பொதுச் சேமிப்பு ஏற்பட்டது. நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் மற்றவர்களிடம் உதவி கேட்க வேண்டியதில்லை; சொந்தக் காலில் நிற்கலாம்.

பஹோமொவ் குடும்பத்துக்கு விளைச்சல் சரியில்லாத பொழுது அவர்கள் பசியால் வாடவில்லை; அல்லது கடன் வாங்கிப் பிழைக்கவில்லை. லெனின் நிலத்திலிருந்து அவர்களுக்கு உதவி கிடைத்தது.

விவசாயிகளுக்குப் பல தேவைகள் உண்டு. உதாரணமாக, ஒரு சூட்டடிப்பு இயந்திரம் தேவைப்பட்ட பொழுது,

அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் பணம் வசூலிக்க வில்லே. பொது தானியத்தை விற்பனே செய்து அதை வாங்கினர்கள்.

''தொழிலாளர்களுக்கு நாம் ஒரு அன்பளிப்புச் செய்தால் என்ன?'' ஒரு கூட்டத்தில் இதைப் பற்றிப் பேசினர்கள்.

''ஆம், அனுப்ப வேண்டியதுதான். அது அவசியம்.''

அவர்கள் சில சாக்கு மூட்டைகளோடு ஒரு கடிதமும் அனுப்பினர்கள். ''இது சாதாரண ரொட்டி அல்ல; லெனின் நிலத்திலிருந்து வருகிறது''.

பத்து வருடங்கள் கழிந்தன. கிராமங்களில் கூட்டுப் பண்ணைகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. விவசாயிகளிடம் இப்பொழுது அதிகமான நிலம், கால்நடை, கருவிகள் இருந்தன. லெனின் நிலம் கூட்டுப் பண்ணேயோடு சேர்ந்துவிட்டது. அதை யாரும் மறக்கவில்லே, புறக்கணிக்கவுமில்லே. ஏனென்ருல் மக்களின் நினேவுகள் அழிவதில்லே.

இந்த இடத்தைக் கடந்து செல்பவர்கள்—அவர்கள் குதிரை மீது ஏறிப் போனலும் சரி அல்லது நடந்து போனலும் சரி—அங்கே சிறிது நேரம் நின்று லெனினுக்கு அஞ்சலி செலுத்துவார்கள். இந்தக் கூட்டுப் பண்ணேயில் லெனின் வாழ்கிருர்.

இரகசிய வேண்டுகோள்

தொழிலாளர்களும் விவசாயிகளும் லெனினுக்குப் பல அன்பளிப்புகளே அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தானியம், சர்க்கரை, இன்னும் பல உணவுப் பொருள்களே அனுப்புவார்கள் (அப்பொழுது உணவு நிலேமை நெருக்கடியாக இருந்தது). வேறு வகையான அன்பளிப்புகளும் வருவதுண்டு. தோல் பதனிடும் தொழிலாளர்கள் லெனினுக்கு ஒரு ஆட்டுத்தோல் கோட் அனுப்பினர்கள். வோலொக்டாவில் சித்திரப் பின்னல் வேலே செய்யும் தொழிலாளர்கள் சித்திர வேலேப்பாடு செய்யப்பட்ட அழகான படுக்கை விரிப்பை அனுப்பினர்கள். பெத்ரோகிராடைச் சேர்ந்த பஞ்சாலேத் தொழிலாளர்கள் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த மென்மையான கம்பளியை அனுப்பினர்கள்.

இத்தகைய அன்பளிப்புகளேப் பெறுகின்ற பொழுது லெனின் முகத்தைச் சுளிப்பார்.

''விளதீமிர் இலியீச்! ஏன் முகஞ்சுளிக்கிறீர்கள்? இவை நம் மக்களின் இதயங்களிலிருந்து நேரடியாக வருபவை; அவர்களுடைய நன்றியின் அடையாளச் சின்னங்கள்'' என்று

அவருடைய சக தோழர்கள் அன்பளிப்புக்களை ஆதரித்துப் பேசுவார்கள்.

''அது எனக்குப் புரிகிறது'' என்று லெனின் ஒத்துக் கொள்வார். ''எனினும் இது அவ்வளவு சரியல்ல. இது பழைய பழக்க வழக்கங்கள் இன்னும் நீடிப்பதைக் காட்டு கிறது. இது சென்ற காலத்தின் எச்சம். அப்பொழுது தான் பிரபுவுக்கு ஒரு அன்பளிப்பு, மன்னிப்புக் கோரி மத குருவுக்கு ஒரு அன்பளிப்பு... இதற்கு முடிவு கட்ட வேண் டிய நேரம் வந்துவிட்டது. ஆம். முடிவு கட்ட வேண்டியது தான்'' என்று விளதிமிர் இலியீச் கண்டிப்பாகச் சொல்லு வார்.

வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள கோமெல் வட்டாரத் தைச் சேர்ந்த கிளின்ட்சி என்ற நகரத்திலிருந்து லெனி னுக்கு ஒரு கடிதம் வந்தது. அவ்வூரிலிருந்த ஸ்டோடோல் துணித் தொழிற்சாலைத் தொழிலாளிகள் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார்கள்.

அந்தக் கடிதத்தில் அக்டோபர் புரட்சியின் ஐந்தாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு விளதிமிர் இலியீச்சுக்குப் பாராட்டுத் தெரிவித்து அவர் உடல் ஆரோக்கியத்தோடு நெடுங்காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்கள். கடைசியில் ''...புரட்சி தினக் கொண்டாட்டத்துக்கு முன்பு... நாங்களே நெய்த ஒரு எளிய அன்பளிப்பை அனுப்பி வைக்கிறோம்'' என்று எழுதப் பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில் ஒருவரோ, இருவரோ அல்லது மூவரோ கையெழுத்திடவில்லை. நானூறு தொழிலாளர்கள் கையெழுத்திட்டிருந்தார்கள்.

விளதீமிர் இலியீச்சுக்கு அதிகமான கோபம் ஏற்பட்டது; ஆனால் அவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார். பேனா வையும் காகிதத்தையும் எடுத்தார். தொழிலாளர்களுக்கு பதில் எழுதினார்:

''அன்புமிக்க தோழர்களே!

உங்களுடைய வாழ்த்துக்களுக்கும் அன்பளிப்புக்கும் என் னுடைய இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். எனக்கு அன்பளிப்புகள் அனுப்பக் கூடாதென்பதை உங்களிடம் இரகசியமாகத் தெரிவிக்கிறேன். இந்த இரக சிய வேண்டுகோளை இயன்றவரை எல்லாத் தொழிலாளர் களிடமும் தெரிவிக்க வேண்டுகிறேன்...

உங்கள்,
வி. உலியானவ் (லெனின்).''

கிளின்ட்சி தொழிலாளர்கள் லெனின் பதிலைப் படித்தார்கள். அது நன்றி தெரிவித்து அன்போடு எழுதப்பட்ட கடிதம். அது அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

எனினும் அதைப் படித்த பிறகு தொழிலாளர்கள் சிந்தனையில் மூழ்கினார்கள். அன்பளிப்புகள் பெறுவதை லெனின் விரும்பவில்லை என்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். லெனின் தெரிவித்திருந்த இரகசிய வேண்டுகோளையும் தொழிலாளர்கள் புரிந்து கொண்டார்கள். விளதிமிர் இலியீச் வேண்டுகோள் என்று எழுதியிருந்தாலும் அது அவருடைய கண்டிப்பான உத்தரவுதான் என்றே கருதினார்கள். எனவே கிளின்ட்சி நகரத்திலுள்ள மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் அதைத் தெரிவித்தார்கள். உண்மையைச் சொல்வதென்றால் அந்த வட்டாரம் முழுவதுமே வெகு சீக்கிரத்தில் அதைப் பற்றித் தெரிந்து கொண்டது.

ஸ்டெப்பான் ஷெர்ஸ்டொபீடொவ் என்ற தொழிலாளி ஸ்டோடோல் தொழிற்சாலையில் வேலை செய்தார். அவர் மின்ஸ்க் நகரத்துக்குப் பக்கத்தில் தம் சொந்த கிராமத்துக்குப் போன பொழுது லெனினுடைய வேண்டுகோளைப் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் தெரிவித்தார்.

இதைக் கேட்ட விவசாயிகளுக்கு ஏமாற்றமேற்பட்டது. அவர்கள் புது வருடப் பிறப்பை முன்னிட்டு லெனினுக்கு நல்ல தேன் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். எனினும் லெனினுடைய வேண்டுகோளைத் தெரிந்து கொண்டவுடன் விவசாயிகளும் அதன்படி நடப்பதென்று முடிவு செய்தார்கள்.

அந்த கிராமத்தில் அதே சமயத்தில் செஞ்சேனையைச் சேர்ந்த இவான் டொடோனெவ் என்ற போர்வீரர் தம் விடுமுறையைக் கழிக்க வந்திருந்தார். அவர் விளதிமிர் இலியீச்சின் வேண்டுகோளை மனதிலே பதித்துக் கொண்டு தன்னுடைய படைப் பிரிவுக்குத் திரும்பினார். அந்தப் படைப் பிரிவைச் சேர்ந்த போர்வீரர்கள் செஞ்சேனையில் தங்களுடைய பணிக் காலம் முடிந்து தங்களுடைய கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் திரும்பிய பொழுது தாங்கள் சந்தித்த எல்லோரிடமும் லெனினுடைய இரகசிய வேண்டுகோளைத் தெரிவித்தனர்.

ஒவ்வொருவரும் அடுத்தவரிடம் தெரிவித்தார்கள். அருகேயுள்ள இடங்கள், தூரத்திலுள்ள இடங்கள்—எங்கும் செய்தி பரவியது. இன்று நமக்கும் அந்தத் தகவல் கிடைத்தது.

இப்பொழுது நான் உங்களிடம் இந்தத் தகவலைத் தெரிவிக்கிறேன். நீங்கள் எல்லோரிடமும் இதைச் சொல்ல வேண்டும். ஆனால் ஒன்றை மறந்துவிடாதீர்கள்—இது மிகவும் இரகசியமான வேண்டுகோள்.

அன்பளிப்புகளைப் பற்றிப் பேசுவோம். தொழிலாளர்களும் விவசாயிகளும் தோழர் லெனினுக்கு அன்பளிப்புகள் அனுப்புவதை உண்மையிலேயே நிறுத்தினார்களா? இல்லை. அன்பளிப்புகள் நிற்கவில்லை.

அப்படியானால் காரணம் என்ன?

அதை விளக்குவது கடினம். ருஷ்யா மாபெரும் நாடு. ஒரு வேளை எல்லோருக்கும் தகவல் கிடைக்காமல் போயிருக்கலாம். அல்லது வேறு ஏதேனும் காரணம் இருக்கலாம்...

நினைவுச் சின்னம்

சைபீரியாவில் ஒரு சிறு குடியேற்றத்தைச் சேர்ந்த விவசாயிகள் லெனின் உயிரோடிருக்கும் பொழுதே அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதென்று முடிவு செய்தார்கள்.

விளதீமிர் இலியீச்சிடம் அனுமதி பெறுவதற்காகத் தங்கள் பிரதிநிதிகளை மாஸ்கோவுக்கு அனுப்பினார்கள்.

பிரதிநிதிகள் லெனினைச் சந்தித்தார்கள்.

''வணக்கம். உங்கள் பிரயாணம் எப்படி இருந்தது?''

''பிரயாணம் மகிழ்ச்சிகரமாக இருந்தது'' என்று விவசாயிகள் பதிலளித்தார்கள்.

''இந்த வருடம் விவசாயம் எப்படி?''

''நல்ல விளைச்சலாகவே இருக்கும்.''

''உங்கள் பிரதேசத்தில் பொருள்கள் கிடைக்காமல் சிரமம் ஏதேனும் உண்டா?''

''விளதீமிர் இலியீச்! பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கின்றன. காலிக்கோ துணி போதுமான அளவுக்குக் கிடைக்கிறது. ஆணிகள் கிடைக்கின்றன. சோப்புக்குத் தட்டுப்பாடு இல்லை.''

''இதைக் கேட்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகிறது'' என்று புன்சிரிப்போடு சொன்னார் விளதீமிர் இலியீச். ''என்னுடைய கேள்விகள் அவ்வளவுதான். உங்களுக்கு என்ன வேண்டும்?''

பிரதிநிதிகள் தங்களுடைய திட்டத்தை அவரிடம் சொன்னார்கள்.

''நினைவுச் சின்னமா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டார் லெனின்.

''ஆமாம். நினைவுச் சின்னம்'' என்று விவசாயிகள் பதிலளித்தார்கள்.

''அதற்கு அடிப்படைக்கல் தயாராக இருக்கிறது.'' இந்தத் தகவலை விவசாயிகள் பெருமையோடுதான் சொன்னார்கள். ''நாங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் இடம் மிகப் பிரமாதமான இடம். உயரமான இடமாகப் பொறுக்கியெடுத்திருக்கிறோம். அதற்குப் பக்கத்தில் உயரமான பிர்ச் மரங்கள். பக்கத்தில் ஒரு நீரோடை ஓடிக் கொண்டிருக்கிறது. அழகான காட்சி. உங்களுடைய மதிப்புக்குச் சிறிதும் குறைவில்லாத இடம், விளதீமிர் இலியீச்!''

இதைக் கேட்டுக் கொண்டிருந்த லெனின் முகத்தில் சிரிப்பு மறைந்தது.

''என்னை மிகவும் அவமதிக்கும் இடம். ஆம். அவமதிக்கும் இடம்'' என்றார்.

விவசாயிகள் இதைக் கேட்டுத் திகைத்தார்கள். உரையாடல் இப்படி மாறும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

''நீங்கள் வர்ணிப்பதைக் கேட்டால் அது மிகவும் நல்ல இடம் எனத் தோன்றுகிறது'' என்று லெனின் தொடர்ந்து பேசினார். ''ஆனால் நினைவுச் சின்ன யோசனையை நான் எதிர்க்கிறேன். திட்டவட்டமாக எதிர்க்கிறேன்'' என்று லெனின் கைகளை ஆட்டிக் கொண்டு சொன்னார். ''சைபீரியாவிலுள்ள உங்களுடைய தோழர்களிடம் இதைச் சொல்லுங்கள். நான் சொல்வது புரிகிறதா? சந்தேகமில்லையே. நீங்கள் வந்ததற்காக நன்றி. உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்'' என்று சொல்லி லெனின் அவர்களுக்கு விடை கொடுத்தார்.

பிரதிநிதிகள் ஊருக்குத் திரும்பினார்கள். லெனினோடு தங்களுடைய உரையாடலை எடுத்துக் கூறினார்கள். அதையொட்டி அங்கே ஆர்வமிக்க விவாதம் நடைபெற்றது.

''அப்படியானால் இந்தத் திட்டத்தை லெனின் ஒத்துக் கொள்ளவில்லை.''

''ஒருவேளை நாம் தேர்ந்தெடுத்த இடம் அவருக்குப் பிடிக்கவில்லையோ?''

''நீங்கள் எல்லாவற்றையும் அவரிடம் விளக்கிச் சொன்னீர்கள் அல்லவா? அடிப்படைக்கல் தயாராக இருக்கிறது என்று சொன்னீர்களா?''

''சொன்னோம். எல்லாவற்றையும் சொன்னோம்'' என்று பிரதிநிதிகள் பதிலளித்தார்கள். ''இடம் அவருக்குப் பிடித்திருக்கிறது. சகோதரர்களே! பிரச்சினை அதுவல்ல. லெனின் மிகவும் அடக்கமானவர்.''

அடிப்படைக் கல்லை என்ன செய்வதென்று விவசாயிகள் சிந்திக்கத் தொடங்கினார்கள். மேலும் அந்த இடத்தை எதற்குப் பயன்படுத்தலாம்? அவ்வளவு நல்ல இடத்தை வீணாகப் போட்டு வைப்பது சரியல்ல.

விவாதங்களும் எதிர் விவாதங்களும் வெகு நேரம் நடைபெற்றன. அதன் பிறகு அவர்கள் திடீரென்று ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்கள். அந்தப் பழமையான பிர்ச் மரங்களுக்குப் பக்கத்தில் ஒரு பள்ளிக்கூடம் கட்ட முடிவு செய்யப்பட்டது. அந்த வட்டாரம் முழுவதுமே அந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்த்துப் பொறுமைப்படுகிற முறையில் அதைக் கட்ட வேண்டும்.

வெகு சீக்கிரத்தில் அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள்.

அந்த உயரமான இடத்தில் அந்தப் பள்ளிக்கூடம் இன்றும் இருக்கிறது. சைபீரிய வானத்தோடு முழுமையாக இணைந்து விளங்குகிறது. ஒவ்வொரு வசந்த காலத்தின் போதும் பிர்ச் மரங்களில் புதிய இலைகள் துளிர்க்கின்றன; அங்கே நீரோடை சலசலக்கிறது.

குழந்தைகளின் சிரிப்புச் சத்தம் காற்றிலே நிறைந்திருக்கிறது.

வருடங்கள் உருண்டோடுகின்றன, சம்பவங்கள் தேய்ந்து கடந்த காலத்துக்குள் மறைகின்றன.

ஆனால் அந்தப் பள்ளிக்கூடம் இன்றும் இருக்கிறது.

அது சைபீரியாவில் ஒரு சிறிய குடியேற்றத்தில் லெனினுக்கு எழுப்பப்பட்ட நினைவுச் சின்னம்; என்றைக்கும் அழியாத சின்னம்.

தோழர் லெனின் எங்கே பிறந்தார்?

ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று சந்தையில் சில விவசாயிகள் தோழர் லெனின் பிறந்த ஊர் எது என்று விவாதம் செய்து கொண்டிருந்தார்கள்.

''அது உரால் மலைகளுக்கு அப்பால் வெகு தூரத்திலே இருக்கிறது'' என்றார் ஒருவர்.

''நீ சொல்வது தப்பு'' என்று இரண்டாவது நபர் குறுக்கிட்டார். ''அவர் இந்த வட்டாரத்தில்தான் பிறந்தார். அவர் நம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் தான்.''

''நம் மாவட்டக்காரரா?'' மூன்றாவது நபரால் இதைக் கேட்டுக் கொண்டு பேசாமலிருக்க முடியவில்லை. ''விளதீமிர்

இலியீச் சைபீரியாவைச் சேர்ந்தவர்; எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவர் லேனு நதிப் பிரதேசத்தில் பிறந்தவர்.''

''அவர் சைபீரியாவைச் சேர்ந்தவர் அல்ல'' என்று நான்காவது நபர் குறுக்கிட்டுப் பேசினார். ''விளதிமிர் இலியீச் பெத்ரோகிராடில்தான் பிறந்தார். அந்தக் காலத்தில் அதற்கு செயின்ட் பீட்டர்ஸ்பர்க் என்று பெயர்.''

''மாஸ்கோ'' என்று ஐந்தாவது நபர் சொன்னார்.

''துலா'' என்றார் ஆறாவதாக ஒருவர்.

''ஸ்மொலேன்ஸ்க்.''

''அவர் குர்ஸ்க் பிரதேசத்திலிருக்கும் குலுகொவ் நகரத்தைச் சேர்ந்தவர்.''

''தம்போவில் பிறந்தார் என்று நினைக்கிறேன்.''

''ரியாஸான்.''

''த்வெர்!''

லெனின் எங்கே பிறந்தார்? விவசாயிகளின் விவாதம் முடிவடையவில்லை.

''ஒரேல் என்பது நிச்சயம்.''

''பென்ஸா.''

''எல்னியா.''

''ஒரு கிராமத்தில் பிறந்தார்.''

''இல்லை. அவர் ஒரு நகரத்தில் தான் பிறந்தார்.''

அந்த இடத்துக்கு வந்தவர்களும் அந்த விவாதத்தில் கலந்து கொண்டார்கள். பதில் சொல்லக் கூடியவர்கள் என்று தாங்கள் நினைத்தவர்களிடமெல்லாம் விவசாயிகள் கேட்டார்கள்.

''நண்பரே! தோழர் லெனின் எங்கே பிறந்தார்?'' என்று கேட்டார்கள்.

அந்த நபர் சற்று நேரம் சிந்திப்பார்.

''எனக்கு சரியாகத் தெரியாது. ஆனால் அவர் மலைப் பிரதேசத்தில் பிறந்தவர் என்பது மட்டும் நன்றாகத் தெரியும். அவருடைய கூர்மையான பார்வை அங்கேதான் ஏற்பட்டிருக்கும். அவருடைய கண்கள் கழுகுக் கண்கள்.''

விவசாயிகள் இரண்டாவது நபரிடம் போனார்கள்:

''நண்பரே! தோழர் லெனின் எங்கே பிறந்தார்?''

இவரும் சிறிது நேரம் சிந்தித்தார்.

''லெனின் ஸ்டெப்பி பிரதேசத்தில் தான் வளர்ந்தார்'' என்று அவர் நிச்சயமாகச் சொன்னார். ''இதைப் பற்றி விவாதமே அவசியமில்லை. அதனால் தான் அவர் அவ்வளவு பரந்த உள்ளம் கொண்டவராக இருந்தார். லெனினிஸ்ட் என்றாலே மிகப் பெரிய என்று அர்த்தம்.''

விவசாயிகள் மூன்றுவதாக ஒரு நபரிடம் போஞர்கள். மற்றவர்களைப் போலவே அவரும் சிறிது நேரம் யோசித்து விட்டு பதில் சொன்ஞர்.

''விளதீமிர் இலியீச் காடுகள் நிறைந்த பிரதேசத்தில் தான் பிறந்து வளர்ந்திருக்க வேண்டும். அதில் எனக்குச் சந்தேகமே இல்லை. இல்லையென்றுல் அவ்வளவு வலுவான உடல் அவருக்கு ஏற்பட்டிருக்காது. அவருடைய மன உறுதி வேறு எங்கேயிருந்து கிடைக்கும்?''

விவசாயிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

லெனின் எங்கே பிறந்தார்?

இந்தக் கேள்விக்குச் சுலபமாகப் பதில் கிடைக்கவில்லை.

அவர்களுடைய விவாதம் எப்படி முடிந்திருக்கும் என்று சொல்வது கடினம். நல்ல வேளையாக புத்திசாலியான ஒரு நபர் பேசிஞர்.

''நாம் மாவட்ட சோவியத்துக்குப் போய்க் கேட்போம். தலைவரிடமே கேட்போம்.''

அவருடைய ஆலோசனையைப் பின்பற்றி விவசாயிகள் மாவட்ட சோவியத்தின் தலைவரைச் சந்தித்தார்கள். அவரிடம் தங்களுடைய பிரச்சினையை எடுத்துச் சொன்ஞர்கள். தலைவர் எல்லாவற்றையும் கேட்ட பிறகு விவசாயிகளைப் பார்த்துச் சிரித்தபடியே பதிலளித்தார்:

''தோழர் லெனின் ஸிம்பீர்ஸ்க்கில் பிறந்தார். அகலமான, கட்டுக்கடங்காத நதியான வோல்காவின் கரையில் அந்த நகரம் இருக்கிறது.''

அவர் விவசாயிகளை சிறிது நேரம் உற்றுப் பார்த்தார். பிறகு மறுபடியும் பேசிஞர்:

''தோழர்களே! இதைப் பற்றி உங்களுக்கிடையே மறுபடியும் விவாதம் ஏற்படக் கூடாது. லெனின் இங்கே, ருஷ்யாவில் பிறந்தார்.''



1. விளதீமிர் இலியீச் லெனின். 2. ''விவசாயிகள் பிரதிநிதிகள் லெனினேடு விவாதித்தல்'' (விளதீமிர் ஸெரோவ் வரைந்த ஓவியம்). 3. 1920ல் வோலோகொலாம்ஸ்க் அருகிலுள்ள காஷினே வைச் சேர்ந்த விவசாயிகள் தாமே மின்சார உற்பத்தி நிலையத்தை நிர்மாணித்தார்கள். தொடக்க விழாவில் லெனினும் க்ருப்ஸ்கயாவும். 4. குதிரையிலிருந்து —டிராக்டருக்கு!

3



4



5

5. கிரெம்ளினில் தன்னுடைய அலுவலகத்தில் லெனின் அமர்ந்திருக்கிறார். அக்டோபர், 1918. 6. கிரெம்ளினிலுள்ள இந்தக் கட்டிடத்தில் மக்கள் கமிஸ்ஸார்கள் சபையும் தொழிலாளர்கள் சோவியத்தின் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியும் இயங்கி வந்தன. 7. கிரெம்ளினில் லெனினுடைய படிப்பறை. 8. லெனினுடைய 50வது பிறந்த நாளின் போது ஓம்ஸ்க்கிலிருந்து தொழிலாளர்கள் அனுப்பிய அன்பளிப்பு. ஒரு ரயில் வண்டியில் உணவுப் பொருள்களை ஏற்றி மாஸ்கோ நகர மக்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். ஏப்ரல் 22, 1920.

6

7

8



9

9. 1918 மே முதல் நாளன்று செஞ்சேனையின் அணிவகுப்பு முடிந்ததும் லெனின், க்ருப்ஸ்கயா, லெனினுடைய சகோதரி மரியா உலியானொவா மோட்டார் வண்டியில் புறப்படுதல். 10. அகில ருஷ்ய இளம் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் மூன்றுவது காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு ரொட்டிச் சீட்டுகள் வழங்கப்படுதல். 11. லெனினுடைய கூட்டுப் பண்ணைத் திட்டம் அமுலாக்கப்படுதல்—கூட்டுப் பண்ணையில் சேருவதற்கு விவசாயிகள் கையொப்பமிடுதல். 12. வி. இ. லெனின் மற்றும் என். கே. க்ரூப்ஸ்கயா, லெனினுடைய சகோதரி அன்ன எலிஸாரொவா, மருமகன் விக்தர், ஒரு தொழிலாளியின் மகள் வேரா ஆகியோரோடு அமர்ந்திருந்தல் (மாஸ்கோவுக்கு அருகில் கோர்க்கி, 1922).

10

11

12

13

13. வி. இ. லெனின் உலாவச் செல்கிறூர் (கோர்க்கி, ஆகஸ்ட் ஆரம்பத்தில், 1922).

மாபெரும் தேசபக்தப் போர்

மாஸ்கோ
ஸ்தாலின்கிராட்
பெர்லின்

இணையற்ற வீரம்

நவம்பர் 1941. இரண்டாவது உலகப் போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாஜிகள் மாஸ்கோவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஜெனரல் பன்ஃபிலொவ் தலைமையிலிருந்த படைப்பிரிவை எதிரிகளின் டாங்கிப் படை தீவிரமாகத் தாக்கிக் கொண்டிருந்தது.

மாஸ்கோவிலிருந்து 118 கிலோமீட்டர்கள் தூரத்தில் உள்ள டுபொஸேக்கொவோ. நீண்ட வயல்கள், புதர்க் காடுகள். அருகில் அமைதியாகப் பாய்ந்தோடும் லாமா நதி. இங்கே ஒரு குன்றின் மீதிருந்த திறந்த வயலில் பன்ஃபிலொவின் படையைச் சேர்ந்த வீரர்கள் நாஜிகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நின்றார்கள்.

அவர்கள் மொத்தம் இருபத்தெட்டு நபர்கள்தான். குளொச்கோவ் என்ற அரசியல் போதகர் அவர்களுக்குத் தலைமை தாங்கினார். படைவீரர்கள் பூமியின் கீழ், அகழியின் ஓரங்களில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

டாங்கிகள் முன்னேறி வந்து கொண்டிருந்தன. அவற்றின் இயந்திரங்கள் கடகடவென்று சத்தமிட்டன. அவர்கள் டாங்கிகளை எண்ணினார்கள்.

''அட கடவுளே! மொத்தம் இருபது வருகின்றனவே.''

குளொச்கோவ் புன்முறுவல் பூத்தார்.

''இருபது டாங்கிகள். அப்படியானால் ஆளுக்கு ஒன்று கூட இல்லையே.''

போர்வீரர்கள் சிரித்தார்கள். அவர்களுடைய அரசியல் போதகர் உண்மையாகவே வீரமானவர்தான்.

''ஒன்று கூட இல்லை'' என்றான் எம்ட்ஸோவ் என்ற போர்வீரன்.

''ஆமாம். அது உண்மைதான்'' என்று ஆமோதித்தான் பெட்ரென்கோ.

வீரர்கள் போருக்குப் புறப்பட்டார்கள். நீண்ட வயல்கள். குன்றுகள். புதர்க் காடுகள். பக்கத்தில் அமைதியாகப் பாய்ந்தோடும் லாமா நதி.

''ஹுரே!'' அகழிகளிலிருந்து உற்சாகமான முழக்கம் கேட்டது.

முதல் டாங்கியை நொறுக்கி விட்டார்கள்.

மறுபடியும் முழக்கம் கேட்டது. இரண்டாவது டாங்கி சற்றுத் தயங்கியது; அதன் இயந்திரம் சக்சக்கென்றது; அதன் இரும்புக் கவசம் கடகடத்தது... டாங்கி நின்றுவிட்டது. மறுபடியும் போர் வீரர்களின் முழக்கம். மறுபடியும் முழக்கம். வீரர்கள் இருபது டாங்கிகளில் பதினென்கை நொறுக்கிவிட்டார்கள். எஞ்சியிருந்த ஆறு டாங்கிகளும் பின் வாங்கின.

''கொள்ளைக்காரர்களின் குரல்வளையை நெறித்து விட்டோம் போலிருக்கிறதே!'' என்ருர் ஸார்ஜென்ட் பெட்ரென்கோ.

''நன்ருகச் சொன்ஞய்; அவர்கள் கால்களுக்கிடையே வால்களை நுழைத்துக் கொண்டு ஓடிப் போய்விட்டார்கள்.''

போர்வீரர்கள் ஓய்வு கொண்டார்கள். மறுபடியும் டாங்கிகள் தங்களை நோக்கி அணியணியாக வருவதைப் பார்த்தார்கள். இப்பொழுது நாஜிகளிடம் முப்பது டாங்கிகள் இருந்தன.

குளொச்கோவ் போர்வீரர்களைப் பார்த்தார். அவர்கள் எல்லோரும் பனியில் உறைந்தவர்களைப் போல அமைதியாக நின்று கொண்டிருந்தார்கள். டாங்கிகள் மேலும் மேலும் நெருங்கி வந்து கொண்டிருந்தன.

''நண்பர்களே! ருஷ்யா மாபெரும் நாடு. ஆனல் நாம் பின்வாங்க இடம் கிடையாது. மாஸ்கோ நமக்குப் பின்னல் இருக்கிறது'' என்ருர் குளொச்கோவ்.

''தோழரே! அதை நாங்கள் உணர்கிருேம்'' என்று வீரர்கள் பதிலளித்தார்கள்.

''மாஸ்கோ!''

மறுபடியும் போர்வீரர்கள் தீவிரமாகச் சண்டையிட்டார்கள். அவர்களுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டிருந்தது. எம்ட்ஸோவும் பெட்ரென்கோவும் வீழ்ந்தார்கள். பொன்டாநென்கோ அழிந்தார். டிரொஃபிமோவ் மடிந்தார். நர்சுட்பாய் எஸெபுலாட்டொவ் கொல்லப்பட்டார். அடுத்தபடியாக ஷொபோக்கொவ் பலியாஞர். இப்பொழுது வீரர்கள் மட்டுமல்ல, வெடிகுண்டுகளின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது.

குளொச்கோவும் காயமடைந்தார். எனினும் அவர் மிகுந்த சிரமத்தோடு எழுந்து நின்று ஒரு டாங்கியின் மீது வெடிகுண்டை வீசிஞர். அந்த டாங்கி நொறுங்கியது. அவருடைய முகத்தில் வெற்றியின் பெருமிதம் தவழ்ந்தது. ஆனல் அதே நேரத்தில் ஒரு குண்டு பாய்ந்து கீழே விழுந்தார். அரசியல் போதகர் குளொச்கோவ் மடிந்தார்.

ஜெனரல் பன்ஃபிலொவின் படைவீரர்கள் உக்கிரமாகச் சண்டையிட்டார்கள். அவர்களுடைய வீரத்துக்கு எல்லே இல்லே. அவர்கள் நாஜிகளுக்கு ஒரு அங்குலம் கூட விட்டுக் கொடுக்கவில்லே. இதற்காக ருஷ்யா அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

டுபொஸேக்கொவோ. நீண்ட வயல்கள். குன்றுகள். புதர்க் காடுகள். பக்கத்தில் அமைதியாகப் பாய்ந்தோடும் லாமா நதி. ஒவ்வொரு ருஷ்யக் குடிமகனின் இதயத்திலும் டுபொஸேக்கொவோ ஒரு புனிதமான இடம்.

"ருசி எப்படி?"

அது எந்த அறிவிப்பும் இல்லாமல் தெளிவான நீல வானத்திலிருந்து விழுவது போலத் தோன்றியது; கற்பனைக் கதையில் வருவது போலத் தோன்றியது...

மாஸ்கோவுக்கு வடமேற்கில், லெனின்கிராடுக்குச் செல் லும் பாதையில் தீவிரமாகப் போர் நடைபெற்றுக் கொண் டிருந்தது. நாஜிகள் கிளின் என்ற சிறிய நகரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். சோவியத் படைகள் பின் வாங்கிக் கொண்டிருந்தன. துருப்புகள் ஒரு மேடான இடத் தின் மீது ஏறி நின்றன. அதன் இடது பக்கத்திலிருந்த தாழ் வான பிரதேசத்தில் ஒரு நதி ஓடிக் கொண்டிருந்தது; அதன் மேற்பரப்பைப் பனி மூடியிருந்தது. இங்கே நாஜிகள் தங் கள் படைகளேச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பிரதேசத்தில் அவர்கள் நெருக்கிக் கொண்டு நின்ருர்கள். அவர்கள் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் இருந்தது; ஆயிர மாகக் கூட இருக்கலாம். ஒரு புதிய தாக்குதலே ஆரம்பிப் பதற்கு அவர்கள் அங்கே தயாரிப்புச் செய்து கொண் டிருந்தார்கள்.

போர்வீரர்கள் நாஜிகளேக் குனிந்து பார்த்தார்கள். யா ரோ ஒருவர் பேசினுர்.

''இந்தக் கும்பல் மீது போடுவதற்கு சிதறித் தாக்கும் குண்டுகள் சில இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்'' என்ருர் அவர்.

''ஆமாம். அவைதான் ஏற்ற ஆயுதம்'' என்ருர் இன் னெருவர்.

''ஆமாம். அவைதான் பொருத்தமானவை'' என்று ஒத்துக் கொண்டார் மூன்ருமவர்.

போர்வீரர்கள் தங்களுடைய கற்பனைக் குதிரைகளேப் பறக்க விட்டனர்.

''இங்கே ஒரு பீரங்கி இருந்தால்...'' என்றார் ஒருவர்.

''அதற்கு குண்டுகளும் இருந்தால்...'' என்றார் இரண்டாவது நபர்.

''பீரங்கியை இயக்குவதற்குத் தைரிய சாலியான வீரர்களும் இருந்தால்'' என்று மூன்றாவது நபர் பேசினார்.

போர்வீரர்கள் கனவுகளில் மூழ்கியிருந்தார்கள். அந்த ஆற்றின் மறு கரையில், அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தைப் போலவே செங்குத்தான சரிவின் மீது திடீரென்று ஒரு பீரங்கி வண்டி தோன்றியது.

போர்வீரர்கள் தம்முடைய கண்களைத் தேய்த்துக் கொண்டார்கள். தாங்கள் காண்பது கனவுதானோ என்று அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இல்லை. அத்தனையும் உண்மையே. குதிரைகள். ஒரு பீரங்கி. இரண்டு போர் வீரர்கள். பீரங்கிக்குப் பக்கத்தில் ஒரு அதிகாரி.

பீரங்கி வீரர்களும் கீழேயுள்ள பிரதேசத்தைப் பார்த்தார்கள். அங்கே நாஜிகள் கூடியிருப்பதைக் கண்டதும் நின்று விட்டார்கள்.

போர்வீரர்கள் பீரங்கி வீரர்களை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். எந்த அறிவிப்பும் இல்லாமல், தெளிவான நீல வானத்திலிருந்து வருவதைப் போல, கற்பனைக் கதையில் தோன்றும் அற்புதத்தைப் போல அவர்கள் அங்கே காட்சியளித்தார்கள்.

அந்தச் செங்குத்தான சரிவின் மீது பீரங்கி வீரர்கள் கண நேரம் நின்றார்கள். பிறகு திரும்பி வேகமாக இறங்கினார்கள். இப்பொழுது நாஜிகளும் பீரங்கியைப் பார்த்தார்கள். ஆனால் அது யாருடையது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் ஆச்சரியத்தோடு அதைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது பீரங்கி தன்னுடைய சுடும் எல்லைக்குள் வந்தது. பீரங்கி வீரர்கள் பீரங்கிக் குழாயை நாஜிகளை நோக்கித் திருப்பினார்கள். அந்தக் குழாயில் ஒரு குண்டைத் திணித்தார்கள்.

''இதைக் கொஞ்சம் ருசி பாருங்கள்'' என்றார் அதிகாரி. ''சுடு!''

பீரங்கியிலிருந்து குண்டு வெடித்தது; அதை அடுத்து இன்னொரு குண்டும் வெடித்தது.

''ருசி பாருங்கள்! ருசி பாருங்கள்!'' என்று அதிகாரி பலமாகக் கத்தினார். ''சுடு! சுடு!''

மூன்றாவது வெடிகுண்டு வெடித்தது. பிறகு நான்காவது. ஐந்தாவது குண்டு வெடித்ததும் அங்கே புகை மண்டலம் சூழ்ந்தது.

''ருசி பாருங்கள்!''

''ருசி பாருங்கள்!''

வெகு சீக்கிரத்தில் அந்தத் தாழ்வான பிரதேசம் முழுவதும் நாஜிகளின் பிரேதங்கள் கிடந்தன. இன்னும் உயிரோடிருந்த நாஜிகள் அந்தச் செங்குத்தான சரிவில் ருஷ்யப் போர்வீரர்கள் இருந்த இடத்துக்கு நேராக ஓடிவந்தார்கள். இயந்திரத் துப்பாக்கிகளின் குண்டுகள் அவர்களை வரவேற்றன. சற்று நேரம் அங்கே ஒரே பரபரப்பாக இருந்தது.

போர்வீரர்கள் மறுபடியும் கீழே பார்த்தபொழுது பீரங்கி வண்டியையும் குதிரைகளையும் காணவில்லை. ஒரு பறவையைப் போல, ஒரு பாடலைப் போல அது தோன்றியது; அந்தக் கற்பனைக் கதையின் பக்கங்களுக்குள் மறுபடியும் புகுந்து கொண்டதைப் போல அது மறைந்து விட்டது.

போர்வீரர்கள் அந்தச் சரிவில் வெகு நேரம் நின்று கொண்டிருந்தார்கள்.

அந்த வீரர்கள் யார்? அந்தத் துணிச்சலான பீரங்கி வீரர்கள் யார்? அதைத் தெரிந்து கொள்வதற்குப் போர் வீரர்களுக்கு ஒரு வழியுமில்லை.

''இதை ருசி பாருங்கள்'' என்பது தான் அந்த பீரங்கி வீரர்களைப் பற்றி அவர்களிடம் எஞ்சியிருந்த ஒரே நினைவு.

டாங்கிப் படை

கிரியுகொவோ என்ற ரயில் நிலையத்துக்கும் குடியிருப்புக்கும் அருகில் தீவிரமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாஜிகள் ருஷ்யத் துருப்புகளை உக்கிரமாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். போதுமான போர்வீரர்கள் இல்லை. ருஷ்யத் துருப்புகள் பின்வாங்க வேண்டிய நெருக்கடியான நிலை ஏற்பட்டிருந்தது.

உடனே படைகளை அனுப்பி உதவி செய்ய வேண்டும் என்று தளகர்த்தர்கள் உயர்மட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய உதவிக்காக அனுப்புவதற்கு யாரும் இல்லை. ஏனென்றால் எல்லா சேமப் படைகளும் முன்பே யுத்தம் செய்ய அனுப்பப்பட்டு விட்டன.

கிரியுகொவோவில் ஒவ்வொரு நிமிடமும் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. தளகர்த்தர்கள் மறுபடியும் தலைமை நிலையத்தோடு தொடர்பு கொண்டார்கள்.

''சரி. ஒரு டாங்கிப் படையை அனுப்புகிறேம்'' என்று உயர்மட்ட அதிகாரிகள் கூறினர்கள்.

ஒரு டாங்கி அதிகாரி அந்த தளகர்த்தருக்கு முன்பாக வந்து நின்றுர். அவர் தோல் கோட்டும் இரும்புத் தொப்பியும் அணிந்து இளமையாகவும் முறுக்காகவும் இருந்தார். மே மாத வானத்தின் நீல நிறத்தைப் போல அவருடைய கண்கள் நீல நிறத்தில் இருந்தன.

அந்த டாங்கி அதிகாரி படையின் தளகர்த்தருக்கு முன்பாக வந்து விறைப்பாக நின்று வணக்கத்தைத் தெரிவித்தார்; பிறகு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்:

''தோழர் தளகர்த்தர் அவர்களே! உங்களோடு சேவை செய்ய ஒரு டாங்கிப் படையைக் கொண்டு வந்திருக்கிறேன். என் பெயர் சீனியர் லெப்டினென்ட் லோக்வினென்கோ.''

படையின் தளகர்த்தருக்கு ஆனந்த மிகுதியால் பேச முடியவில்லை. அவர் அந்த டாங்கி அதிகாரியைக் கட்டித் தழுவினர்.

''நன்றி, சகோதரனே! என் இதயம் நிறைந்த நன்றியை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் படையில் எத்தனை டாங்கிகள் இருக்கின்றன?''

''ஒரு டாங்கி'' என்று பதிலளித்தார் அந்த அதிகாரி. அவருடைய நீல நிறக் கண்கள் தளகர்த்தரின் முகத்தை ஊடுருவின.

''எத்தனை டாங்கி என்று சொன்னீர்கள்?'' என்று தளகர்த்தர் கேட்டார். அவரால் தன்னுடைய காதுகளை நம்ப முடியவில்லை.

''ஒரு டாங்கி'' என்று அதிகாரி திரும்பச் சொன்னர். ''ஒன்று மட்டுமே மிஞ்சியது... T-37 ரகம்.''

மாஸ்கோவைச் சுற்றிலும் நடைபெற்ற சண்டைகளில் நாஜிகள் அதிகமான சேதமடைந்தனர்; ஆனல் ருஷ்யத் துருப்புகளும் சேதமடைந்தன... தளகர்த்தரின் முகத்தில் திடீரென்று குளிர்ந்த காற்றுப் பட்டது போல அவருடைய முகத்திலிருந்த மகிழ்ச்சி மறைந்துவிட்டது. ருஷ்யாவிலிருந்த டாங்கிகளிலேயே T-37 தான் மிகவும் பழைய ரகம். அளவும் மிகச் சிறியது. அதில் ஒரு இயந்திரத் துப்பாக்கி மட்டும்தான் உண்டு. அதன் இரும்புக் கவசம் சுண்டுவிரல் பருமன்தான் இருக்கும்.

''உங்கள் உத்தரவுகளை நிறைவேற்றத் தயாராக இருக்கிறேன்'' என்றுர் டாங்கிப் படை அதிகாரி.

''எங்கேயாவது போய்த் தொலை—அது தான் உத்தரவு'' என்று சொல்ல தளகர்த்தர் வாயெடுத்தார். ஆனல் தன்னைக்

கட்டுப்படுத்திக் கொண்டார். அதற்கு பதிலாகப் பின்வரு மாறு உத்தரவிட்டார்:

''முதல் படைக்குப் போய் உதவி செய். நாஜிகள் அங்கே தான் மிகவும் அதிகமாகத் தாக்கிக் கொண்டிருக்கிருர் கள்.''

டாங்கி அதிகாரி முதல் படைக்குப் போய்ச் சேர்ந்த துமே காலாட்படையினரோடு சேர்ந்து சண்டையில் ஈடு பட்டார். அவர் மிகத் திறமையான உபாயங்களைச் செய் தார். ஒரு இடத்திலிருந்து காலாட்படையினருக்கு உதவி செய்து கொண்டிருப்பார். உடனே வேகமாகத் தன்னுடைய இடத்தை மாற்றிக் கொண்டு சண்டையில் ஈடுபடுவார். இப்பொழுது வேறு இடத்தில் இருப்பார். போர்வீரர்கள் டாங்கியைப் பார்த்தனர். உடனே அவர்களுக்கு உற்சாகம் பெருகியது. ஒரு டாங்கிப் படை வந்திருக்கிறதென்ற வதந்தி வேகமாகப் பரவியது.

போர்வீரர்கள் இருந்த இடத்திலேயே உறுதியாக நின்று போர் செய்தார்கள். நாஜிகளுக்கு ஒரு அங்குல இடத்தைக் கூட விட்டுக் கொடுக்கவில்லை.

நாஜிகளின் இரண்டாவது தாக்குதலை முறியடித்தார் கள்; அதன் பிறகு அடுத்தடுத்து ஏற்பட்ட நான்கு தாக்கு தல்களையும் முறியடித்தார்கள். இப்பொழுது அந்த டாங்கி அதிகாரி முதல் பிரிவுக்கு மட்டுமல்லாமல் அந்தப் படை முழுவதுக்குமே உதவி செய்து கொண்டிருந்தார்.

சண்டை முடிந்தது. டாங்கி அதிகாரி இளமையாகவும் முறுக்காகவும் பரபரப்போடும் நின்று கொண்டிருந்தார். அவருடைய கண்கள் மே மாத வானத்தைப் போல நீல நிறத்தைக் கொண்டிருந்தன.

படையின் தளகர்த்தர் அந்த அதிகாரியை நெருங்கினுர். அவரை அன்போடு கட்டித் தழுவினுர்.

''சகோதரனே! என்னுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து உணர்ச்சி மயமான நன்றியைத் தெரிவிக்கிறேன். இங்கே வந்தது ஒரு டாங்கிப் படையே என்பதை நான் இப்பொழுது புரிந்து கொண்டேன்'' என்ருர்.

ஸோயா

அந்தப் பாதை புருவின் நிறத்தைக் கொண்ட நாடாச் சுருளைப் போல மேற்கு நோக்கிச் செல்கிறது. இந்தப் பாதை வழியாகக் கார்கள் வேகமாகப் போகின்றன. மாஸ்கோ விலிருந்து 85 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் இடம்.

இடது பக்கத்தில் திரும்பினால் ஒரு சலவைக்கல் பீடத்தைப் பார்க்கலாம். அந்தப் பீடத்தின் மீது ஒரு பெண்ணின் சிலை இருக்கிறது. அவள் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவள் முகத்தில் துணிவும் பெருமிதமும் பொலிகின்றன.

இது ஸோயாவின் நினைவுச் சின்னம்.

ஸோயா கஸ்மோடெம்யான்ஸ்காயா மாஸ்கோவில் பள்ளிக்கூடத்தில் மாணவியாக இருந்தாள். எதிரிகள் நகரத்தை நெருங்கியதும் அவள் பார்ட்டிஸான் படையில் சேர்ந்தாள். அந்த சமயத்தில் மாஸ்கோ வட்டாரத்தில் வசித்தவர்கள் பலரும் நாஜிகளுக்கு எதிராகக் கொதித்தெழுந்தார்கள்.

அந்தப் படையிலிருந்த எல்லோருக்குமே ஸோயா மீது அதிகமான பிரியமுண்டு. அவர்களுடைய வாழ்க்கை ஆபத்தானது. அதன் சிரமங்களையும் நெருக்கடிகளையும் அவள் வீரத்தோடு ஏற்றுக் கொண்டாள்.

பெட்ரிஷ்செவோ என்ற கிராமத்தில் ஏராளமான நாஜிகள் தங்கியிருந்தனர். ஸோயா இரவு நேரத்தில் கிராமத்துக்குள் நுழைந்தாள். எல்லாத் தொலைபேசி இணைப்புக்களையும் துண்டித்தாள். நாஜிகள் தங்கியிருந்த வீடுகளுக்குத் தீ வைத்தாள். இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்த கிராமத்துக்கு அவள் மறுபடியும் வந்தாள். ஆனால் இந்தத் தடவை நாஜிகள் அந்த இளம் பார்ட்டிஸானைப் பிடித்துக் கொண்டார்கள்.

அங்கேயிருந்த நாஜிப் படையின் தளகர்த்தர், லெப்டினென்ட்-கர்னல் ரூடெரெர் ஸோயாவைக் குறுக்கு விசாரணை செய்தார்.

''உன் பெயர் என்ன?''

''பதில் சொல்ல முடியாது.''

''வீடுகளுக்குத் தீ வைத்தது நீ தானே?''

''ஆமாம்.''

''உன்னுடைய நோக்கம்?''

''உங்களை ஒழிப்பது.''

அவர்கள் ஸோயாவைச் சித்திரவதை செய்தனர். அவள் எங்கேயிருந்து வந்தாள், அவளை இந்த வேலைக்கு அனுப்பியது யார், அவளுடைய தோழர்களைப் பற்றி எல்லாத் தகவல்களையும் சொல்ல வேண்டும் என்று அவர்கள் அவளைக் கொடுமைப்படுத்தினர்.

''இல்லை'', ''பதில் சொல்ல முடியாது'', ''நான் சொல்ல மாட்டேன்''—இவையே ஸோயாவின் பதில்கள்.

அவர்கள் ஸோயாவை மறுபடியும் அடிப்பார்கள்.

இரவு நேரத்தில் ஸோயாவை மேலும் பல சித்திரவதைக் கொடுமைகளுக்கு உட்படுத்தினார்கள். பனி மூடிய தெருக்களில் காலணி இல்லாமல், அநேகமாக உடைகள் இல்லாமல்

நடக்குமாறு அவளைப் பல முறைகள் கொடுமைப்படுத்தினார்கள்.

மறுபடியும் விசாரணை ஆரம்பமாகும்:

''நீ யார் என்று சொல்.''

''உன்னை அனுப்பியது யார்?''

''நீ எங்கேயிருந்து வந்தாய்?''

ஸோயாவிடமிருந்து ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

மறுநாள் காலையில் அந்த கிராமத்தின் மத்தியிலிருந்த சதுக்கத்தில் ஸோயாவைத் தூக்கில் போடுவதற்குக் கொண்டு சென்றார்கள். இந்தக் காட்சியைப் பார்க்குமாறு அந்த கிராம விவசாயிகள் பலவந்தப்படுத்திக் கொண்டு வரப்பட்டார்கள்.

அந்த இளம் பெண்ணைத் தூக்கு மேடைக்கு நடத்திச் சென்றார்கள். ஒரு பெட்டியின் மீது அவள் நின்றாள். அவள் கழுத்தில் சுருக்குக் கயிறு மாட்டப்பட்டது.

அது தான் கடைசி நேரம். ஒரு இளம் வாழ்க்கையின் கடைசி மூச்சு. அவள் இந்தக் கடைசி மூச்சை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? மரணம் நெருங்கும் பொழுது ஒரு போர்வீரன் என்ன செய்கிறான்?

அங்கேயிருந்த அதிகாரி உத்தரவு கொடுக்கத் தயாரானார். அவர் தன்னுடைய கையை உயர்த்தினார்; ஆனால் சற்று நேரம் தாமதித்தார். அங்கேயிருந்த நாஜிகளில் ஒருவன் புகைப்படக் கருவியோடு முன்னே வந்தான். படத்தில் நன்றாகத் தோற்றமளிக்க வேண்டும் என்பதற்காக அதிகாரி உடம்பைச் சரி செய்து கொண்டு நின்றார். அந்த நேரத்தில் ஸோயாவின் வீரமுழக்கம் கேட்டது:

''தோழர்களே! அஞ்சாதீர்கள்! வீரமாக இருங்கள்! போராடுங்கள்! நாஜிகளை ஒழித்துக் கட்டுங்கள்! அவர்களை நசுக்குங்கள்!''

பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு நாஜி ஸோயாவை அடிப்பதற்காக ஓடிவந்தான். ஆனால் ஸோயா அவனைக் காலால் மிதித்துத் தள்ளினாள்.

''தோழர்களே! மரணத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நாட்டுக்காக மடிவதில் நான் பெருமை அடைகிறேன்'' என்று சொல்லிவிட்டு அவள் தன்னைக் கொடுமைப் படுத்திய நாஜிகளை நோக்கித் திரும்பினாள். ''நாங்கள் இருபது கோடி மக்கள் இருக்கிறோம். எங்கள் எல்லோரையும் நீங்கள் தூக்கிலே போட முடியாது. நீங்கள் என்ன செய்த போதிலும் வெற்றி எமதே!''

அங்கேயிருந்த அதிகாரி உடலைக் குலுக்கினார். சைகை செய்தார்...

மின்ஸ்க் நகரத்துக்குச் செல்லும் பாதை. மாஸ்கோ விலிருந்து 85 கிலோமீட்டர் தூரம். வீராங்கனைக்கு நினைவுச் சின்னம். ஸோயாவுக்கு அஞ்சலி செய்ய மக்கள் வருகிறார்கள். நீல வானம். நீண்ட வயல்கள். மலர்க் குவியல்கள்...

துலா கேக்குகள்

துலாவில் தயாரிக்கப்படுகின்ற இனிப்புக் கேக்குகள் மிகவும் சுவையானவை. வெளியே மொறமொறப்பான கூடு; உள்ளே இனிப்பு இருக்கும்...

மேற்குப் பக்கத்தில் சோவியத் துருப்புகளின் உக்கிரமான எதிர்ப்பைத் தாங்க முடியாமல் நாஜிகள் தெற்குத் திசையிலிருந்து மாஸ்கோவுக்குள் நுழைவதற்குத் தீவிரமான முயற்சிகளைச் செய்தார்கள். துலாவை நோக்கிச் செல்கின்ற பாதையில் நாஜி டாங்கிகள் போக ஆரம்பித்தன.

எதிரியைச் சந்திப்பதற்கு நகரம் தயாராயிற்று.

துலாவைப் பாதுகாப்பதில் சோவியத் இராணுவத்துக்கு உதவி செய்வதற்குத் தொழிலாளர் படைகள் அமைக்கப்பட்டன.

நகரத்திலிருந்த ஒரு தொழிற்சாலை டாங்கிகளை உடைக்கும் கண்ணிகளைத் தயாரித்தது. கேக்குகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் முன்னர் வேலை செய்த தொழிலாளர்கள் இந்தக் கண்ணிகளைத் தயாரிப்பதில் உதவி செய்தார்கள். வான்யா கோலொசோவ் என்பவர் ஒரு இளம் சமையல் தொழிலாளி. அவர் கற்பனையும் உற்சாகமும் கொண்ட இளைஞர். ஒரு நாள் கண்ணிகளைத் தயாரிக்கும் பகுதிக்கு அவர் வந்தார். அவர் கையில் ஒரு காகிதப் பொட்டலம் இருந்தது. அதைப் பிரித்து துலா கேக்குகளை வைத்து அனுப்புகின்ற பெட்டிகளின் மீது ஒட்டும் துண்டுக் காகிதங்களை எடுத்தார். அவற்றில் சிலவற்றைக் கண்ணிகளின் மீது ஒட்டினார். அவர் என்ன செய்கிறார் என்று அங்கேயிருந்த மற்ற தொழிலாளர்கள் பார்த்தார்கள். ஒவ்வொரு கண்ணியின் மீதும் 'துலா கேக்' என்ற காகிதம் ஒட்டப்பட்டிருந்தது.

தொழிலாளர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்:

''நாஜிகளுக்கு நல்ல இனிப்புகள் தான்.''

''ஜெர்மானியர்களுக்குத் தகுந்த அன்பளிப்பு.''

அங்கே தயாரிக்கப்பட்ட கண்ணிகள் நகரத்தைப் பாதுகாக்கும் முன்னணிப் படையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. துலாவுக்குள் நுழைகின்ற பாதைகளில் கண்ணிகளைப்

புதைக்கும் வேலையைச் செய்து வரும் போர்வீரர்கள் இவற்றைப் பிரித்தார்கள். 'துலா கேக்குகள்' என்று எழுதப் பட்டிருந்ததைப் படித்தார்கள். அவர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''நாஜிகளுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கப் போகிறது.''

''ஜெர்மானியர்களுக்கு அன்பளிப்பு.''

போர்வீரர்கள் தொழிலாளர்களுக்குக் கடிதம் எழுதினார்கள்:

''உங்களுடைய உதவிகளுக்கும் கண்ணிகளுக்கும் மிக்க நன்றி. 'துலா கேக்குகளை' உபயோகித்து அடுத்த விருந்தைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம்.''

1941 அக்டோபர் 29ந் தேதியன்று எதிரிகள் துலாவை நெருங்கிவிட்டார்கள். புயலைப் போல நகரத்துக்குள் நுழைவதற்கு முயற்சித்தார்கள். ஆனால் அவர்கள் முயற்சி வெற்றியடையவில்லை. சோவியத் துருப்புகளும் தொழிலாளர் படைகளும் அவர்களைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றியடைந்தார்கள். கண்ணிகள் வெடித்து அதிகமான டாங்கிகள் நொறுங்கின. துலாவைக் கைப்பற்றுவதற்கு நடைபெற்ற போரில் நாஜிகள் சுமார் நூறு டாங்கிகளை இழந்திருப்பார்கள்.

சோவியத் போர்வீரர்களுக்கு 'துலா கேக்குகள்' என்ற பெயர் மிகவும் பிடித்திருந்தது. துலாவில் தயாரித்துப் போர்முனைக்கு அனுப்பப்பட்ட தோட்டாக்கள், குண்டுகள், வெடிகுண்டுகள், பீரங்கிக் குண்டுகள் எல்லாமே 'துலா கேக்குகள்' என்று அழைக்கப்பட்டன.

நாஜிகள் வெகு காலம் வரை துலாவைப் பிடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தனர். ஆனால் ஒரு போதும் அவர்களால் நகரத்தைக் கைப்பற்ற முடியவில்லை.

துலா கேக்குகள் மிகவும் சிறப்பானவையாக இருந்திருக்க வேண்டும்!

''மாஸ்கோவிலிருந்து உங்களுக்குக் கடிதம் எழுதுவேன்''

தெற்குத் திசையிலிருந்து மாஸ்கோவுக்குள் நுழைவதற்கு நாஜிகளால் முடியவில்லை. எனவே வடக்கேயிருந்து நுழைவதற்கு முயற்சி செய்தார்கள். எனினும் அவர்களுடைய முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

''நகரத்தைக் கைப்பற்றுங்கள்! எப்படியாவது கைப்பற்றுங்கள், என்ன சேதம் ஏற்பட்டாலும் கவலையில்லை''

என்று நாஜி ஜெனரல்கள் உத்தரவிட்டார்கள்.

ஒரு புதிய தாக்குதல் தொடங்கப் போகும் நேரம். லெப்டினென்ட் ஆல்பெர்ட் நாய்ம்கான் தன்னுடைய அகழிப் பொந்துக்குள் நுழைந்தார். பெர்லினில் இருக்கும் தன்னுடைய மாமாவுக்கு—அவர் ஒரு முன்னுள் ஜெனரல்—கடிதம் எழுத ஆரம்பித்தார்.

''அன்புள்ள மாமாவுக்கு'' என்று நாய்ம்கான் கடிதத்தைத் தொடங்கினுர். ''பத்து நிமிடங்களுக்கு முன்புதான் எங்கள் காலாட்படைப் பிரிவின் தலைமையகத்திலிருந்து திரும்பினேன். மாஸ்கோவைக் கைப்பற்றுவதற்கு இறுதியான தாக்குதலைத் தொடுக்குமாறு எங்கள் படையின் தளகர்த்தருக்கு உத்தரவு வந்திருக்கிறது...'' இதைத் தொடர்ந்து நாய்ம்கான் அவசரமாக எழுதினுர். ''மாஸ்கோ நமதே. ருஷ்யா நமதே. ஐரோப்பா நமதே. தலைமையகத்திலிருந்து என்னைக் கூப்பிட்டனுப்பி இருக்கிருர்கள்; நான் உடனே புறப்பட வேண்டும். காலையில் மாஸ்கோவிலிருந்து உங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன்.''

மேற்குப் போர் முனையில் மாஸ்கோவுக்கு மிகவும் அருகேயுள்ள இடத்திலிருந்து நாஜிகள் மாஸ்கோ மீது தாக்குதலைத் தொடுத்தார்கள். நரோ-ஃபோமின்ஸ்க் என்ற நகரத்துக்கு அருகில் எதிரிப் படைகள் ஊடுருவி வேகமாக முன்னேறின.

''ஹுரே! ஹுரே!'' என்று நாஜி ஜெனரல்கள் இறுமாப்போடு முழங்கினுர்கள். ''மாஸ்கோவுக்குச் செல்லும் பாதை திறந்துவிட்டது.''

உடனே பெர்லினுக்குத் தகவல் அனுப்பப்பட்டது:

''மாஸ்கோவுக்குச் செல்லும் பாதை திறந்துவிட்டது.''

நாஜி டாங்கிகளும் மோட்டார் சைக்கிள் பிரிவுகளும் மாஸ்கோ இருக்கும் திசையில் வேகமாகச் சென்றன. ஐந்து, பத்து, பதினைந்து கிலோமீட்டர்கள் பிரயாணம் செய்து அக்குலொவோ என்ற கிராமத்தை அடைந்தனர். அங்கே ருஷ்யப் படைகள் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். தீவிரமான சண்டை நடைபெற்றது. நாஜிகள் அதற்கு மேல் முன்னேற முடியவில்லை.

நரோ-ஃபோமின்ஸ்க் நகரத்தின் தெற்குத் திசையில் ஊடுருவி நுழைவதற்கு எதிரிகள் முயற்சி செய்தார்கள். அவர்கள் ஐந்து, பத்து, பதினைந்து கிலோமீட்டர்கள் பிரயாணம் செய்து பெட்ரோவ்ஸ்கொயே என்ற கிராமத்தை அடைந்தனர். அந்த இடத்தில் அவர்களுக்கும் ருஷ்யப் படைகளுக்கும் மறுபடியும் தீவிரமான சண்டை நடைபெற்றது. நாஜிகள் அந்த இடத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர்.

நாஜிகள் வடக்குத் திசையை நோக்கித் திரும்பினர்கள். கோலித்சினே ரயில் நிலயத்தை நோக்கி வேகமாகப் புறப் பட்டார்கள். அவர்கள் ஐந்து, பத்து, பதினைந்து கிலோமீட்டர் கள் பிரயாணம் செய்து புர்த்ஸெவோ மற்றும் யுஷ்கோவோ கிராமங்களை அடைந்த பொழுது அங்கே இன்னெரு ருஷ்யப் படை அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. மூன்ருவது தடவையாகத் தீவிரமான சண்டை நடைபெற் றது. மூன்ருவது தடவையாக நாஜிகள் அந்த இடத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்டார்கள். இரு தரப்பிலும் படைகள் அங்கேயே தங்கிவிட்டன.

நாஜிகள் மாஸ்கோ மீது தொடுத்த புதிய தாக்குதலை சோவியத் துருப்புகள் முறியடித்து விட்டன. நாஜி டாங்கி கள் புறப்பட்ட இடத்துக்கே திரும்பின. இத்தனைக்குப் பிறகும் நாஜிகள் சோவியத் துருப்புகளின் பலத்தைக் குறை வாகவே மதிப்பிட்டார்கள்.

''இதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. இது ஒன் றும் முக்கியமான விஷயமல்ல. நாம் சற்று ஓய்வெடுத்துக் கொள்வோம். பிறகு தீவிரமாக முயற்சி செய்தால் மாஸ் கோவைப் பிடித்துவிடலாம்'' என்று நாஜி ஜெனரல்கள் தங் களுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டனர்.

ஜெனரல்கள் மாஸ்கோவின் மீது புதிய தாக்குதலைத் தொடுப்பதற்குத் தேவையான தயாரிப்புகளைச் செய்தனர். அதே சமயத்தில் புதிய சோவியத் துருப்புகள் மாஸ்கோ வுக்கு வடக்கிலும் தெற்கிலும் மேற்கேயும் குவிந்து கொண் டிருந்தன. சைபீரியா மற்றும் உரால் பிரதேசத்திலிருந்து புதிய படைகள் வந்தன; அவர்களோடு புதிய டாங்கிகளும் பீரங்கிகளும் வந்தன. எதிரிகளை நசுக்குவதற்கு சோவியத் இராணுவம் தயாராகிக் கொண்டிருந்தது.

தாக்குதல் தொடங்கலாம் என்னும் சமிக்கையை எதிர் பார்த்துத் துருப்புகள் காத்துக் கொண்டிருந்தன.

சமிக்கை வந்தது.

1941, டிசம்பர் 6ந் தேதியன்று மாஸ்கோவைப் பாது காத்துக் கொண்டிருந்த துருப்புகள் பெரும் அளவில் எதிரி களைத் தாக்கின. சோவியத் இராணுவம் எதிரிகளை நசுக்கி அவர்களை மேற்கே விரட்டியடித்தது.

நாய்ம்கான் உத்தேசித்தபடி கடிதம் எழுதினுரா? அதை எழுதுவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்ததா?

அதை எழுதுவதற்கு அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. லெப்டினென்ட் நாய்ம்கான் யுத்தத்தில் மடிந்தார். மாஸ்கோ வுக்கு வெளியே பனியில் அந்தக் கடிதத்துக்குப் பக்கத் திலேயே அவருடைய உடலும் கிடந்தது.

வீட்டைக் கொடுத்த வீராங்கனை

சோவியத் துருப்புகள் முன்னேறித் தாக்கிக் கொண்டிருந்தன. மேஜர்-ஜெனரல் காட்டுகோவ் தலைமையிலிருந்த டாங்கிப் படை நாஜிகளைத் துரத்திக் கொண்டிருந்தது.

திடீரென்று அவர்கள் ஒரு இடத்தில் நின்றார்கள். அங்கே நதியின் மீதிருந்த பாலம் நொறுங்கிப் போயிருந்தது. நோவொ-பெட்ரோவ்ஸ்கொயே கிராமத்தில் வொலோகோலாம்ஸ்குக்குப் போகும் பாதையில் இந்த சம்பவம் நடைபெற்றது.

டாங்கி ஓட்டிகள் இயந்திரங்களை நிறுத்தினார்கள். அவர்களுடைய கண்களுக்கு முன்பாகவே நாஜிகள் தப்பியோடிக் கொண்டிருந்தார்கள். ஜெர்மானியப் படைகளை நோக்கி யாரோ சுட்டார்கள்; ஆனால் அது குண்டுகளை வீணாக்கும் பயனற்ற வேலையாகவே இருந்தது.

''போய்வருகிறோம்'' என்று நாஜிகள் சத்தம் போட்டார்கள்.

''நாம் நதியைக் கடந்து போகலாமே'' என்று யாரோ மேஜர்-ஜெனரலிடம் யோசனை சொன்னார்கள்.

மக்லுஷா நதியின் செங்குத்தான கரைகளையும் வேகமாகப் பாய்ந்தோடும் தண்ணீரையும் ஜெனரல் காட்டுகோவ் குனிந்து பார்த்தபடி இருந்தார். அவருடைய டாங்கிகள் அந்த செங்குத்தான கரைகளின் மீது ஏறிப் போக முடியாது.

ஜெனரல் சிந்தனையில் மூழ்கினார்.

திடீரென்று அங்கே ஒரு பெண் தன்னுடைய குழந்தையோடு டாங்கிகளுக்கு முன்னால் வந்து நின்றாள்.

''தோழரே! என்னுடைய வீட்டுக்குப் பக்கத்தில் நதியைச் சுலபமாகக் கடக்க முடியும்'' என்று ஜெனரல் காட்டுகோவைப் பார்த்துச் சொன்னாள். ''அங்கே தண்ணீர் கொஞ்சமாகத்தான் ஓடும். செங்குத்தான சரிவுகள் இல்லை.''

டாங்கிகள் அந்தப் பெண்ணைப் பின்தொடர்ந்து சென்றன. அவள் வீடு தெரிந்தது. நதியின் மேல்கரையில் ஒரு குழிவான இடத்தில் அந்த வீடு கட்டப்பட்டிருந்தது. அந்த இடத்தில் நதியைக் கடப்பது சுலபமே. ஆனால்... ஜெனரல் காட்டுகோவும் டாங்கி ஓட்டிகளும் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். அங்கேயும் ஒரு பாலம் இல்லாமல் நதியைக் கடக்க முடியாது.

''இங்கே ஒரு பாலம் கட்ட வேண்டும். அதற்கு மரக் கட்டைகள் வேண்டும்'' என்றார்கள் டாங்கி ஓட்டிகள்.

''மரக் கட்டைகள் இருக்கின்றன'' என்றுள் அந்தப் பெண்.

டாங்கி ஓட்டிகள் சுற்றிலும் பார்த்தார்கள். ஆனல் மரக் கட்டைகள் எங்கேயும் தென்படவில்லை.

''அதோ! அங்கே பாருங்கள்'' என்று அந்தப் பெண் தன்னுடைய வீட்டைச் சுட்டிக் காட்டினுள்.

''அது வீடு அல்லவா?'' என்றுர்கள் டாங்கி ஓட்டிகள்.

அந்தப் பெண் தன்னுடைய வீட்டை ஒரு முறை பார்த்தாள்; பிறகு போர்வீரர்களைப் பார்த்தாள்.

''வீடு என்பது என்ன? மரப் பலகைகள் தானே? நம் மக்கள் எவற்றையெல்லாம் இழந்திருக்கிருர்கள் என்று நினைக்கும் பொழுது இந்த வீடு ஒரு பெரிய விஷயமா? பெட்யா! நான் சொல்வது சரி தானே?'' என்று தன்னுடைய குழந்தையிடம் சொன்னுள். பிறகு போர்வீரர்களைப் பார்த்துப் பேசினுள். ''அந்த வீட்டைப் பிரித்து மரப் பலகைகளை உபயோகியுங்கள்.''

போர்வீரர்களுக்கு அந்த வீட்டைப் பிரிக்க மனம் வரவில்லை. முன்பே கனமான மூடுபனி தொடங்கிவிட்டது. எந்த நேரத்திலும் குளிர்காலம் ஆரம்பமாகிவிடும். வீடு இல்லாமல் இந்தப் பெண்ணும் குழந்தையும் குளிர்காலத்தை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

அவர்கள் என்ன நினைக்கிருர்கள் என்பதை அந்தப் பெண் புரிந்துகொண்டாள்.

''நாங்கள் ஒரு பொந்தில் குளிர் காலத்தைக் கழிப்போம். எங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்று சொல்லிவிட்டுத் தன்னுடைய குழந்தையைப் பார்த்தாள். ''என்ன பெட்யா? சரிதானே?'' என்று கேட்டாள்.

''ஆமாம், அம்மா!'' என்றது அந்தக் குழந்தை.

எனினும் போர்வீரர்கள் தயக்கத்தோடு நின்று கொண்டிருந்தார்கள்.

இதைப் பார்த்த அந்தப் பெண் ஒரு கோடரியைக் கையிலெடுத்தாள்; தன்னுடைய வீட்டை நோக்கி நடந்தாள். அதன் மரப் பலகைகளின் மீது கோடரியைக் கொண்டு முதல் வெட்டு வெட்டினுள்.

''சரி. நாம் என்ன சொல்ல முடியும்?... நன்றி'' என்றுர் ஜெனரல் காட்டுகோவ்.

போர்வீரர்கள் அந்த வீட்டைப் பிரித்தார்கள். அந்த மரங்களைக் கொண்டு ஒரு பாலத்தைக் கட்டினுர்கள். டாங்கிகள் அந்தப் புதிய பாலத்தின் மீது நதியைக் கடந்தன.

டாங்கிகள் நதியைக் கடக்கும் பொழுது அந்தப் பெண்ணும் குழந்தையும் கைகளை ஆட்டிப் போர்வீரர்களுக்கு விடை கொடுத்தார்கள்.

''உங்கள் பெயர்களைச் சொல்லுங்கள். நாங்கள் யாருக்கு நன்றி செலுத்த வேண்டும்?'' என்று போர்வீரர்கள் கேட்டார்கள்.

''அலெக்ஸான்ட்ரா கிரிகோரியெவ்ன குஸ்னெட்ஸோவா, என் மகன் பியோத்தர் இவானெவிச் குஸ்னெட்ஸோவ்.''

''அலெக்ஸான்ட்ரா கிரிகோரியெவ்ன! உங்களுக்கு எம்முடைய ஆழ்ந்த நன்றி! பியோத்தர் இவானெவிச்! நீ பிற்காலத்தில் பெரிய வீரனாக வளர்வாய்'' என்று போர்வீரர்கள் அவர்களை வாழ்த்தினார்கள்.

டாங்கிகள் வேகமாக முன்னேறிச் சென்று எதிரிகளின் படைகளைப் பிடித்தன. நாஜிகளை நசுக்கிய பிறகு மேற்குத் திசையில் முன்னேறிச் சென்றன.

வருடங்கள் உருண்டோடின. யுத்தத்தின் இடியோசை நின்றது. மரணத்தின் ஊழிக் கூத்து முடிவடைந்தது. ஒவ்வொரு வருடமும் யுத்தம் எங்களுடைய நினைவுகளிலிருந்து விலகிப் பின்னே போய்க் கொண்டிருக்கிறது. ஆனல் அப்பொழுது நடைபெற்ற வீரச் செயல்களின் நினைவுகள் மட்டும் பசுமையாக இருக்கின்றன.

மக்லுஷா நதிக் கரையில் அந்தப் பெண் காட்டிய வீரத்தையும் தியாகத்தையும் நாங்கள் மறக்கவில்லை. நோவோ-பெட்ரோவ்ஸ்கொயே ஒரு சிறிய கிராமம். இன்று அங்கே போய்ப் பாருங்கள். அதே இடத்தில் இன்று ஒரு புது வீடு கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். ''மாபெரும் தேசபக்தப் போரின் போது அலெக்ஸான்ட்ரா கிரிகோரியெவ்ன குஸ்னெட்ஸோவா, பியோத்தர் இவானெவிச் குஸ்னெட்ஸோவ் காட்டிய வீரத்துக்காக!'' என்று அந்த வீட்டின் கதவின் மீது பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். யுத்தம் முடிந்ததும் டாங்கி வீரர்கள் அங்கே வந்து இந்த வீட்டைக் கட்டினார்கள்.

மக்லுஷா நதி அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த நதியின் மேல் கரையில் வராந்தாவும் முன்வாசலும் கொண்ட ஒரு வீடு காணப்படுகிறது. அதன் சன்னற் கதவுகள் பிரகாசமான உலகத்தை நோக்கித் திறந்திருக்கின்றன.

வெல்லற்கரிய படைகள்

சோவியத் இராணுவம் முன்னேறிப் போய்க் கொண்டிருந்தது. கிழக்கு, வடக்கு, தெற்கு ஆகிய மூன்று திசைகளிலுமிருந்து நாஜிகளைத் தாக்கியது. எதிரியை மாஸ்கோவுக்கு அப்பால் விரட்டியதோடு தடைகளை நொறுக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

இந்தத் தாக்குதலின்போது மேற்குப் போர்முனையின் தளகர்த்தரான ஜெனரல் ஷுக்கவ் தன்னுடைய உயர் மட்ட அதிகாரிகளோடு போர்முனைக்கு வந்தார். துருப்புகள் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதை ஆர்வத்தோடு கவனித்தார்.

''நம் துருப்புகளின் வீரம் மகத்தானது!'' என்று திரும்பத் திரும்பக் கூறினார்.

அவர் துருப்புகளை நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு திடீரென்று தன்னுடைய அதிகாரிகளை நோக்கித் திரும்பினார்:

''யுத்தம் செய்வது எந்தப் படை?'' என்று கேட்டார்.

அவர் கேள்வி கேட்ட அதே நேரத்தில் ''ஹுரே'' என்ற பலமான முழக்கத்தோடு காலாட்படையினர் முன்னேறிச் சென்றனர்.

''காலாட்படை'' என்று அதிகாரிகள் தளகர்த்தரிடம் தெரிவித்தார்கள். ''போர்க்களத்தின் அரசியான காலாட்படை''.

''ஆமாம்! காலாட்படை நீங்கள் சொல்வது சரியே'' என்றார் ஷுக்கவ்.

அவர் நெடுநேரம் அங்கே நின்று பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு மறுபடியும் கேட்டார்:

''எந்தத் துருப்புகள் இங்கே போர் புரிகின்றன?''

அதிகாரிகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். நாம் பதில் கூறிய பிறகும் ஏன் இப்படிக் கேட்கிறார்?

அவர் கேள்வி கேட்ட அதே நேரத்தில் பீரங்கிப் படை மும்முரமான தாக்குதலைத் தொடுத்தது. பீரங்கிப் படையினர் மிகச் சிறப்பான வகையில் குறி பார்த்துச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய குண்டுகள் நாஜிகளிடம் சிறிதும் இரக்கம் காட்டவில்லை. ''காட்யுஷா'' ஏவுகணைகள் பறந்துபோய் வெடித்தன. நெருப்பும் உலோகமும் தாக்கின. நாஜிகள் சின்னபின்னமானார்கள்.

ஷுக்கவ் தன்னுடைய அதிகாரிகளை நோக்கினார். அவர்களுடைய பதிலை எதிர்பார்ப்பது போலத் தோன்றியது.

''தோழர் தளகர்த்தரே! பீரங்கிப் படை'' என்று அதிகாரிகள் கூறினுர்கள். ''யுத்தக் கடவுளான பீரங்கிப் படை.''

''ஆமாம். ஆமாம். பீரங்கிப் படை'' என்று ஆமோதித்தார் ஷுக்கவ்.

அந்த சண்டையை அவர் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

''எப்படிப்பட்ட வீரர்கள்! எத்தகைய வீரம்!'' என்று பெருமிதத்தோடு பாராட்டினுர். பிறகு அதிகாரிகளை நோக்கித் திரும்பினுர். மூன்ருவது தடவையாக அதே கேள்வியைக் கேட்டார்.

''எந்தத் துருப்புகள் இங்கே போர் புரிகின்றன?''

அங்கேயிருந்த அதிகாரிகள் தங்கள் தோள்களைக் குலுக்கினுர்கள். தளகர்த்தர் என்ன கேட்கிருர் என்று புரியவில்லையே? அவர்கள் சொன்ன பதில் சரியாக இல்லையா? ஜெனரல் தங்களுடைய பதிலுக்காகக் காத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார்கள்.

அந்த நேரத்தில் சோவியத் டாங்கிகள் முன்னேறுகின்ற சத்தம் இடியோசை போலக் கேட்டது. வெள்ளம் போல டாங்கிகள் முன்னேறிச் சென்றன.

''தோழர் தளகர்த்தரே! டாங்கிப் படை'' என்று அதிகாரிகள் பதில் சொன்னுர்கள்.

''ஆம். டாங்கிகள். நம்முடைய டாங்கிகளை ஓட்டுபவர்கள் உண்மையாகவே கழுகுகள் தான்'' என்று மெய்சிலிர்த்துக் கூறினுர் ஷுக்கவ்.

டாங்கிகள் எதிரிப் படைகளை நொறுக்குவதை ஜெனரல் கவனமாகப் பார்த்தார். அவர் அங்கே வெகு நேரம் நின்ருர். பிறகு மறுபடியும் கேட்டார்:

''எந்தத் துருப்புகள் இங்கே போர் புரிகின்றன?''

அதிகாரிகளுக்கு ஒரே குழப்பம். அவர்கள் அமைதியாக நின்றுகொண்டிருந்தார்கள். யாருமே பதில் சொல்லவில்லை.

அதே நேரத்தில் சோவியத் விமானங்கள் எதிரியின் மீது தாக்குதலைத் தொடங்கின. விமானத்திலிருந்து போடப்பட்ட குண்டுகள் வெடித்தன; எங்கும் மண் வாரியிறைக்கப்பட்டது.

''எந்தத் துருப்புகள்?'' என்ருர் ஷுக்கவ். அவர் பதிலை எதிர்பார்க்கிருர் என்பது தெரிந்தது.

''விமானப் படை'' என்று யாரோ மெதுவாகச் சொன்னுர்கள். ''தோழர் தளகர்த்தரே! விமானப் படை! நமது பறக்கும் பருந்துகள்.''

''ஆமாம்'' என்று ஷுக்கவ் ஆமோதித்தார். ''சோவியத் பருந்துகளின் புகழ் ஓங்கட்டும்!'' என்ருர். பிறகு தன்னுடைய அதிகாரிகளை நோக்கி மெதுவாகக் கேட்டார்:

''எந்தத் துருப்புகள் இங்கே போர் செய்கின்றன?''

அதிகாரிகளுக்கு எதுவுமே புரியவில்லை. என்ன பதில் சொல்வதென்றும் தெரியவில்லை.

ஷுக்கவ் கண நேரம் தாமதித்தார். பிறகு எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருக்கும் படைகளைச் சுட்டிக் காட்டினுர்.

''வெல்லற்கரிய படைகள்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னுர்.

சோவியத் துருப்புகள் வெற்றி முழக்கத்தோடு முன்னேறிக் கொண்டிருந்தன. நாஜிகள் பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்தார்கள்.

மாஸ்கோவைச் சுற்றிலும் நடைபெற்ற போரில் சோவியத் இராணுவம் 11,000 குடியிருப்புகளை விடுவித்தது. 38 நாஜி டிவிஷன்களை அழித்தது. ஹிட்லரின் படைகளை முறியடிப்பதற்கு ஐரோப்பாவில் எந்த சக்தியுமே இல்லாதிருந்தது. ஆனுல் இப்பொழுது சோவியத் இராணுவம் அத்தகைய மாபெரும் சக்தியாகத் திகழ்ந்தது. மாஸ்கோவைக் கைப்பற்றுவதற்கு நாஜிகள் நடத்திய மாபெரும் யுத்தம் அவர்களுடைய பரிதாபகரமான தோல்வியில் முடிந்தது.

ஷுக்கவ் முன்னேறிச் செல்லும் துருப்புகளைப் பார்த்துக் கொண்டு நின்ருர். அந்தக் காட்சி அவருடைய கண்களுக்கு விருந்தாக இருந்தது.

''எந்தப் படைகள் இங்கே போர் செய்கின்றன?'' என்று தளகர்த்தர் தம்முடைய அதிகாரிகளிடம் மறுபடியும் கேட்டார்.

''வெல்லற்கரிய படைகள்'' என்று இராணுவ அதிகாரிகள் ஒரே குரலில் பதிலளித்தார்கள்.

1

1. 1941 ஜூன் 22ந் தேதி அதிகாலையில் நாஜி ஜெர்மனி இரு நாடுகளும் ஆக்கிரமிப்புச் செய்வதில்லை என்ற ஒப்பந்தத்தை மீறி, யுத்தப் பிரகடனம் செய்யாமல் துரோகமான முறையில் சோவியத் யூனியன் மீது படையெடுத்தது. நாஜி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சோவியத் மக்களின் மாபெரும் தேசபக்தப் போர் இப்படி ஆரம்பமாயிற்று.

2

3

2. ''அன்னை ருஷ்யா அழைக்கிறது''—ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட யுத்தப் பிரச்சாரப் படங்களில் ஒன்று. (டோயிட்ஸே வரைந்தது).

3. நாஜி இராணுவ அதிகாரிகள் பைனுகுலர்களின் மூலம் மாஸ்கோவைப் பார்க்கிறார்கள். அங்கே செஞ்சதுக்கத்தில் சோவியத் துருப்புகளின் இராணுவ அணிவகுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நவம்பர் 7, 1941.

4

5

6

7

4. மாஸ்கோவுக்கு அருகில் சோவியத் பீரங்கிப் படைகள் சுடுவதற்குத் தயாராக இருக்கின்றன. 5. மேற்குப் போர்முனையின் தளகர்த்தரான ஜெனரல் ஷுக்கவ். 6. டாங்குப் பிரிவின் மேஜர்-ஜெனரலான புகழ்மிக்க காட்டுகோவ் கன்ஸ்தாந்தின் ராகஸ்ஸோவ்ஸ்கியிடம் யுத்த விவரங்களைத் தெரிவிக்கிறார். 7. ''காட்யூஷாக்கள்'' செலுத்தப்படுகின்றன. ருஷ்ய மோட்டார் ராக்கெட்டுக்கு காட்யூஷா என்ற பெண்பாற் பெயரைப் போர்வீரர்கள் தந்தனர். 8. IL-4 என்ற சோவியத் நடுத்தர குண்டு வீச்சு விமானம் பறக்கும் காட்சி. 9. மாஸ்கோ. துருப்புகள் போர்முனைக்குப் புறப்படுதல்.

8

10

10.''காட்யூஷாவின்'' வெடிகுண்டு.

9

12

13

11

11. சோவியத் தானியங்கித் துப்பாக்கி. 12. அரசியல் போதகர் குளொச்கோவ் தன் பெண் குழந்தையோடு நிற்கிறுர். இவர் ஜெனரல் பன்ஃபிலொவின் புகழ் பெற்ற வீரர்களுக்குத் தலைமை தாங்கிஞர். 13. சோவியத் துருப்புகள் வொலோகொலாம்ஸ்கை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்தல். 14. சோவியத் வீராங்கனை ஸோயா கஸ்மோடெம்யான்ஸ்காயா. 15. ஸோயா தூக்குமேடைக்குக் கொண்டு செல்லப்படுதல். போரில் மாண்ட நாஜி அதிகாரியிடமிருந்து இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது. 16. சோவியத் துருப்புகள் கிளின் என்ற நகரத்துக்குள் நுழைகின்றன, 1941.

14

15

16

17

18

19

20

17. மாஸ்கோவுக்குச் செல்லும் சாலையில் ஜெர்மன் தளவாடங்கள் உடைந்து போய்க் கிடக்கின்றன. 18. வீடு திரும்புதல். 19. வெற்றிச் சின்னம்—நாஜி படைகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பீரங்கி. 20. பின்வாங்குதல். மாஸ்கோவிலிருந்து வெளியேறும் நாஜிப் படைகள்.

21

22

21, 22. மாஸ்கோவுக்குள் நுழைய விரும்பிய நாஜிப் படையினர். அவர்கள் விருப்பம் நிறைவேறியது—கைப்பற்றப்பட்ட நாஜிகள் மாஸ்கோ தெருக்களில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

மமாயெவ் குர்கான்

1942ம் வருடத்தின் கோடை காலத்தின் போது நாஜி கள் மற்றொரு தாக்குதலைத் தொடங்கினார்கள். மாஸ்கோ வைச் சுற்றிலும் நடைபெற்ற சண்டைகளில் தோல்வி யடைந்த நாஜிகள் எண்ணெய், தானியங்கள் நிறைந்து விளங் கும் வளமான பிரதேசங்களைப் பிடிக்கும் நோக்கத்தோடு தெற்கே தங்கள் தாக்குதலைத் தொடங்கினார்கள். எதிரிகள் வெகுதூரம் முன்னேறி வந்தனர். ஸ்தாலின்கிராடு மீது தாக்கு தலைத் தொடங்குவதற்காக வோல்கா நதிக் கரையை அடைந்தனர்.

லெப்டினென்ட் செர்னிஷோவ் ஒரு அழகான இளைஞன். அவனுடைய புருவங்கள் பிறை நிலாவைப் போல வளைந் திருக்கும். அவனுடைய தலை முடி கறுப்பு நிறத்தில் சுருள் சுருளாக இருக்கும்.

1942 செப்டெம்பர். ஸ்தாலின்கிராடு. ஏழு நாஜி டிவி ஷன்கள் நகரத்தைப் புயல் போலத் தாக்கின. ஆயிரக் கணக்கான பீரங்கிகள் குண்டுகளைப் பொழிந்தன. ஐந்நூறு நாஜி டாங்கிகள் ஒரே சமயத்தில் நகரத்தை நோக்கி வந் தன.

மமாயெவ் குர்கான் குன்றில் நடைபெற்ற சண்டையை ஒரு வகையில் இரத்தக் களறி என்று சொல்ல வேண்டும். நகரத்திலேயே மிகவும் உயர்ந்த இடம் மமாயெவ் குர் கான். அதன் உச்சியிலிருந்து பார்த்தால் கண்ணுக் கெட்டிய தூரம் வரை பரந்த வயல்வெளிகள் தெரியும், வோல்கா நதியும் ஸ்டெப்பி புல்வெளிகளும் வோல்கா நதியின் இடது கரையும் தென்படும்.

அந்த மலையுச்சி இரு தரப்பினருக்கிடையிலும் பல தடவை கைமாறிவிட்டது. நாஜிகள் நம்முடைய துருப்பு களைத் தாக்கி அந்த இடத்தைப் பிடித்தார்கள். நாம் மறு படியும் அவர்களிடமிருந்து அந்த இடத்தைக் கைப்பற்றி னோம். அந்த மலையுச்சி குறைந்த காலத்துக்கு நம்மிட மிருந்தது. ஆனல் மறுபடியும் நாஜிகள் அதைப் பிடித்துக் கொண்டார்கள். அந்த இடத்தைப் பிடிப்பதற்காக லெப்

டினென்ட் செர்னிஷோவ் ஐந்து முறை தன்னுடைய துருப்பு களோடு போர் புரிந்தார். உயரமான இடத்திலிருந்து பார்த்தால் லெப்டினென்ட் செர்னிஷோவ் பிறை நிலாவைப் போல வளைந்த புருவங்களோடு, சுருள் சுருளான கறுப்பு முடியோடு போரில் ஈடுபட்டிருப்பது தெரியும்.

அவர் இப்பொழுது ஆருவது தாக்குதலில் ஈடுபட் டிருக்கிருர். முதல் தாக்குதல் அவர் மனதில் இன்னும் பசுமை யாக இருக்கிறது. அவருடைய துருப்புகள் மலையுச்சியை நோக்கி வேகமாக ஓடுவார்கள்; எதிரிகள் அவர்களை நோக்கிச் சுடும்பொழுது தரையோடு தரையாகப் படுத்துக் கொள்வார்கள். மறுபடியும் எழுந்து நின்று வேகமாக முன்னே ஓடுவார்கள்.

''முன்னேறுங்கள்! முன்னேறுங்கள்!'' என்று லெப்டி னென்ட் செர்னிஷோவ் வீர முழக்கம் செய்தார். இத்தனைக் கும் அவர் பைத்தியம் பிடிக்கின்ற அளவுக்குக் களைத்துப் போயிருந்தார்; கத்திக் கத்தி அவருடைய தொண்டை வறண்டு போயிருந்தது.

மறுபடியும் போர்வீரர்கள் தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டார்கள். லெப்டினென்ட் சிறிது நேரம் பொறுத்திருந்து விட்டு மறுபடியும் முழங்கிஞர்.

''முன்னேறுங்கள்!''

போர்வீரர்கள் அமைதியாகப் படுத்திருந்தார்கள்; அவர் களில் யாருமே எழுந்து நிற்க முயற்சிக்கவில்லை.

''முன்னேறுங்கள்!'' என்று செர்னிஷோவ் முழங்கிஞர். அவர் தன்னுடைய துப்பாக்கியைக் கையிலெடுத்துக் கொண்டு அதன் முனையினுல் முதலில் ஒரு போர்வீரரையும் பிறகு இன்னொரு போர்வீரரையும் இடித்தார்.

''முன்னேறுங்கள்!'' என்று அவர் முழங்கிஞர்.

போர்வீரர்கள் அசைவில்லாமல் கிடந்தனர்.

திடீரென்று சார்ஜென்ட் குட்ஸென்கோ லெப்டினென்ட் பக்கத்தில் தோன்றிஞர்.

''தோழரே! அவர்கள் இறந்துவிட்டார்கள். உங்க ளுக்குத் தெரியவில்லையா?'' என்று குட்ஸென்கோ அவரிடம் மெதுவாகச் சொன்ஞர்.

லெப்டினென்ட் செர்னிஷோவின் உடல் நடுங்கியது; அவர் அந்தப் புதை மேட்டையும் போர்வீரர்களையும் திரும்பிப் பார்த்தார். அவர்கள் உண்மையிலேயே செத்துப் போய்விட்டனர் என்பதை உணர்ந்தார். அவரும் குட்ஸென் கோவும் தான் அங்கே உயிர் தப்பியவர்கள். அந்த மலையுச்சி யிலிருந்து தங்களுடைய படைகளை நோக்கிப் பின்வாங்கிச் சென்ருர்கள்.

அந்த மலையடிவாரத்தில் ஒரு புதிய கோஷ்டிக்குத் தலைமை தாங்குவதற்கு செர்னிஷோவ் நியமிக்கப்பட்டார். அவர் மறுபடியும் மலையுச்சியின் மீது தாக்குதலைத் தொடங்கினார். மறுபடியும் அந்தத் தாக்குதல் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது முயற்சிகளின்போது அவர்கள் மலையுச்சியை அடைய முடியவில்லை.

பொழுது புலர்ந்ததும் கண்களுக்கு அருவருப்பான காட்சி தென்பட்டது. அந்த மலையின் சரிவுகளைப் பிரேதங்கள் மூடியிருந்தன. வெகுதூரம் நடந்து வந்த போர்வீரர்கள் களைத்துச் சோர்ந்து போய் ஒரு மணி நேரம் ஓய்வெடுப்பதற்காகப் படுத்திருப்பது போலத் தோன்றியது. பேரிகை முழங்கியதும் அவர்கள் எழுந்துவிடுவார்கள்.

இல்லை. அவர்கள் இனி என்றைக்கும் எழுந்திருக்கவே மாட்டார்கள். அவர்கள் மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டார்கள்.

''தாக்குங்கள்!'' மறுபடியும் உத்தரவு கொடுக்கப்பட்டது.

மறுபடியும் செர்னிஷோவ் மலையுச்சிக்குச் சென்ற போர்வீரர்களுக்குத் தலைமை தாங்கிச் சென்றார். ''புதிய படைப் பிரிவுகள் நமக்குக் கிடைத்தால்...'' என்று அவர் நினைத்தார்.

திடீரென்று ''ஹுரே'' என்ற சத்தம் இடி முழக்கம் போல ஒலிப்பதைக் கேட்டார். ''ஏன் இந்தச் சத்தம்?'' அந்தச் சத்தம் தன்னுடைய கற்பனையாகத்தான் இருக்கும் என்று முடிவு செய்தார். அவர் திரும்பிப் பார்த்தபொழுது புதிய படைகள் மலையை நோக்கி வருவதைப் பார்த்தார். அந்தத் துருப்புகள் அணிவகுத்து வந்தன; போர்வீரர்கள் ஒரே அச்சில் வார்க்கப்பட்டது போல ஒரே மாதிரியாக இருந்தனர். ஜெனரல் ரோடிம்ஸெவ் தலைமையில் 13வது துப்பாக்கி டிவிஷன் வோல்காவின் இடது கரையிலிருந்து உதவிக்கு விரைந்து வந்து கொண்டிருந்தது.

''ஹுரே! ஹுரே!''

துருப்புகள் மலையுச்சியை நோக்கிப் பறந்து சென்றன. கடற்கரையில் அலைகள் வருவதைப் போல அடுத்தடுத்து வந்து தாக்கினார்கள். மலையுச்சியை நாம் கைப்பற்றினோம்.

லெப்டினென்ட் செர்னிஷோவ் மலையுச்சியின் மீது நின்று கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் சார்ஜென்ட் குட்ஸென்கோ நின்றார். அவர்கள் வெகு தூரத்துக்கு அப்பால் வோல்கா நதியையும் அதன் இடது கரையையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''இதைப் பிடிக்க என்ன பாடுபட வேண்டியிருந்தது'' என்றார் லெப்டினென்ட் செர்னிஷோவ். இப்படிச் சொல்லி

விட்டு அவர் குழந்தையைப் போல ஆனந்தமாகச் சிரிக்கத் தொடங்கினர். அவர் தன்னுடைய தொப்பியைக் கழற்றி விட்டுப் புருவங்களில் அப்பியிருந்த மண்ணைத் துடைத்தார்.

குட்ஸென்கோ செர்னிஷோவைப் பார்த்தார். அவர் ஏதோ சொல்ல விரும்பினர். ஆனல் வார்த்தைகள் வரவில்லை. அவர் செர்னிஷோவை உற்றுப் பார்த்தார். லெப்டினென்டின் சுருள் சுருளான கறுப்பு முடி எங்கே? அவருடைய தலை நிலாவைப் போல வெள்ளியிலே குளித்திருந்தது. பிறைநிலாவைப் போல வளைந்திருந்த புருவங்கள் மட்டுமே பழைய மாதிரி இருந்தன.

டான்கோ

மாக்சிம் கோர்க்கியின் கதைகளில் ஒன்றில் வருகின்ற வியப்பைத் தரும் பாத்திரம் டான்கோ. ஒரு இருண்ட காட்டில் அகப்பட்டுக் கொண்ட சிலரைக் காப்பாற்றுவதற்காக டான்கோ தன்னுடைய மார்பிலிருந்து இருதயத்தைப் பிய்த்துக் கொடுத்தான். அந்த இருதயம் பிரகாசமான நெருப்பாகக் கொழுந்து விட்டெரிந்து காட்டை விட்டு வெளியே போகின்ற பாதையை அவர்களுக்குக் காட்டியது.

ஸ்தாலின்கிராடு ஒரு அசாதாரணமான நகரம். வோல்கா நதியின் வலது கரையில் வடக்கிலிருந்து தெற்கே அறுபது கிலோமீட்டர் தூரம் வரை ஒரு நீண்ட பிரதேசமாக இருந்தது.

செப்டெம்பர் மாதக் கடைசியில் நகரத்தின் வட பகுதியில் மிகவும் தீவிரமான யுத்தம் நடைபெற்றது. ''சிகப்பு அக்டோபர்'', ''தடையரண்கள்'', பிரபலமான ஸ்தாலின்கிராடு டிராக்டர் தொழிற்சாலை ஆகியவை இந்தப் பிரதேசத்தில்தான் இருந்தன. ஸ்தாலின்கிராடு வாசிகள் தொழிலாளர்களுக்குக் கீர்த்தியளிக்கும் தங்கள் தொழிற்சாலைகளைப் பற்றி மிகவும் பெருமைப்பட்டனர். இந்தத் தொழிற்சாலைப் பிரதேசத்தில்தான் நாஜிகள் நகரத்துக்குள் ஊடுருவுவதற்கு முயற்சி செய்தார்கள். காலையிலிருந்து மாலை வரையிலும் உக்கிரமான யுத்தம் நடைபெற்றது.

மிஹயீல் பானிக்காகா ஒரு மாலுமி; இளம் கம்யூனிஸ்டுகள் கழகத்தைச் சேர்ந்தவன். ஒரு கூட்டத்தில் அவன் நின்ருல் மற்றவர்களுக்கும் அவனுக்கும் வித்தியாசம் தெரியாது. அவன் உயரம் நடுத்தரம்; உடலும் அப்படியே. அவன் சாதாரணமான தோற்றத்தைக் கொண்ட மாலுமிதான்.

ஒரு மாலுமியின் தொப்பியும் கோடுகள் போட்ட சட்டையும் அணிந்திருந்தான். அவனுடைய அகலமான கால்சராயின் நுனிப் பகுதிகளை பூட்சுகளுக்குள் திணித்துக் கொண்டிருந் தான்.

மிஹயீல் பானிக்காகா கடற்படையைச் சேர்ந்தவன். இந்தத் தொழிற்சாலைப் பிரதேசத்தில் அவன் தன்னுடைய படைப்பிரிவோடு சேர்ந்து யுத்தத்தில் ஈடுபட்டிருந்தான்.

நாஜிகள் கடற்படை வீரர்களுக்கு எதிராகத் தங்க ளுடைய டாங்கிகளை அனுப்பினார்கள். பலம் பொருந்திய எதிரிகளுக்கும் கடற்படைவீரர்களுக்கும் யுத்தம் நடை பெற்றது.

டாங்கிகளில் இரும்புக் கவசமும் பீரங்கிகளும் இயந் திரத் துப்பாக்கிகளும் இருந்தன. கடற்படைவீரர்களிடம் கைவெடிகுண்டுகள் மட்டுமே இருந்தன; மேலும் அவை குறைவான எண்ணிக்கையிலே தான் இருந்தன.

மிஹயீல் பானிக்காகா குழிக்குள் மறைந்திருந்து இரும் புக் கவசத்தையும் பீரங்கியையும் இயந்திரத் துப்பாக்கி களையும் எதிர்த்துத் தன் தோழர்களோடு சேர்ந்து சண்டை செய்தான். ஆனால் அவனிடமிருந்த கைவெடிகுண்டுகள் தீர்ந்து போகும் தருணம் வந்தது. அவனிடம் மிச்சமிருந் தது வெடிக்கக் கூடிய திரவம் நிரப்பப்பட்டிருந்த இரண்டு பாட்டில்கள்தான். ஆனால் டாங்கிகள் வருவதும் போவதுமாக இருந்தன. அந்தச் சண்டை முடிவடைவதாகத் தெரியவில்லை.

மிஹயீல் பானிக்காகாவுக்கு நேர் எதிரே ஒரு டாங்கி வந்து கொண்டிருந்தது. அதிலிருந்து தப்புவதற்கு வழியில்லை; மனித உடலை நசுக்கி அழிப்பதற்கு எஃகு முன்னேறிக் கொண் டிருந்தது.

டாங்கி குழிக்குச் சமீபத்தில் வரட்டுமென்று அந்த மாலுமி குழியின் ஓரத்தில் காத்துக் கொண்டிருந்தான். அவன் பாட்டிலைக் கையில் தயாராக வைத்துக் கொண் டான். குறி தவறிவிடக் கூடாது என்பதற்காக மிகவும் கவனமாகக் குறி பார்த்தான். இப்பொழுது அந்த டாங்கி போதிய அளவுக்குச் சமீபத்தில் வந்துவிட்டது. அவன் குழி யில் நன்றாக நின்று கொண்டான். பாட்டிலைத் தலைக்கு மேலே தூக்கி அந்த எஃகு வண்டிக்கு அடியில் எறியத் தயாரானான். அந்த நேரத்தில் பாட்டில் மீது ஒரு குண்டு பட்டு அது நொறுங்கியது. அதிலிருந்த திரவம் தீப்பற்றி பானிக்காகா வின் உடல் மீது கொட்டியது. ஒரு சில விநாடிகளுக்குள் அவன் உடல் எரியும் நெருப்பாக மாறியது.

அவனைச் சுற்றியிருந்தவர்கள் பயத்தில் அப்படியே கல் லானார்கள். வானம் இருந்த நிலையிலேயே உறைந்து

போயிற்று. வானத்திலே பவனிவந்த சூரியன் அப்படியே நிலை குத்தி நின்றது....

''இல்லை, உன்னை விட மாட்டேன்'' என்று அந்த மாலுமி கத்தினான்.

அவன் இரண்டாவது பாட்டிலைக் கையிலே எடுத்தான். தீப்பற்றிய உடலோடு குழியிலிருந்து வெளியே குதித்தான்; நாஜி டாங்கியை நோக்கி ஓடினான். டாங்கி இயந்திரத்தின் மூடியின் மீது பாட்டிலை ஓங்கி உடைத்தான். நாஜி டாங்கி சீறியது; கடகடவென்று சத்தமிட்டது; பிறகு அதற்கு மூச்சுத் திணறியது. உயரமான அனற் பிழம்பு தன் கைகளை நீட்டி வானத்தைத் தொட்டது.

யுத்தம் எப்பொழுதோ முடிந்து விட்டது; போர்வீரர்கள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிவிட்டார்கள். யுத்தத்தைப் பற்றிய நினைவுகளும் மறைந்து வருகின்றன. ஆனால் அச்சமென்பதே இல்லாத இந்த வீரர்களின் சாதனைகள் என்றும் அழியாதவை. மிஹயீல் பானிக்காகாவின் வீரத்தைப் பற்றிய நினைவு இன்னும் வாழ்கிறது. அதற்கு அழிவு கிடையாது.

ஸ்தாலின்கிராடு டான்கோ—அவன் தோழர்கள் அவனை அப்படித்தான் கூப்பிட்டார்கள். அவன் பெயர் வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது.

ஸ்தாலின்கிராடு தற்காப்பு

துருப்புகள் நாஜிகளின் தாக்குதல்களைச் சமாளித்து ஸ்தாலின்கிராடைப் பாதுகாத்து நின்றன.

நகரத்தின் நடுப்பகுதியையும் தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் பகுதியையும் பாதுகாத்த இராணுவத்துக்கு லெப்டினென்ட் ஜெனரல் வஸீலி இவானொவிச் சுய்க்கோவ் தலைமை தாங்கினார். சுய்க்கோவ் துணிவும் உறுதியாக முடிவு செய்கின்ற திறமையும் கொண்ட தளபதி.

நாஜிகள் தொழிற்சாலைப் பகுதிக்குள் நுழைந்து இராணுவத் தலைமையகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். தலைமையகத்துக்கும் அவர்களுக்கும் இடையில் முந்நூறு மீட்டர் தூரம்தான் இருந்தது. அவர்கள் தலைமையகத்தை வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

இராணுவ உயர் அதிகாரிகளும் உதவியாளர்களும் அதிகமான பரபரப்படைந்தனர்.

''தோழரே! எதிரி நம்முடைய வாசலுக்கு வந்து விட்டான்'' என்று சுய்க்கோவிடம் தெரிவித்தார்கள்.

''அதுதான் நல்லது. நமக்கு வேண்டியது அதுதான்'' என்று பதிலளித்தார் சுய்க்கோவ்.

தளபதியின் வீரத்தைக் கண்டு போர்வீரர்கள் உத்வேகம் பெற்றனர். அவர்கள் எதிரிகளோடு வேகமாக மோதி அவர்களை அழித்தனர்.

தலைமையகத்துக்குப் பக்கத்தில் எண்ணெய் சேமித்து வைக்கின்ற இடம் இருந்தது. அங்கே ஒரு பெரிய திறந்த தொட்டியில் எண்ணெய் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. நாஜிகளின் ஆகாய விமானங்கள் அந்த வட்டாரத்தில் குண்டுகளை வீசின; எண்ணெய் தீப்பற்றி எரிந்தது. தலைமையகம் இருந்த திசையில் நெருப்புப் பரவியது. இரண்டு நாட்கள் முழுவதும் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. ஒரு வார காலம் வரை தலைமையகத்தைப் புகையும் தணலும் சூழ்ந்திருந்தது.

மறுபடியும் உதவியாளர்களுக்குக் கவலை ஏற்பட்டது.

''தோழரே! நெருப்பு வாசலுக்கு வந்துவிட்டது. இது மிகவும் ஆபத்து'' என்றார்கள்.

''மிக அற்புதம்'' என்றார் சுய்க்கோவ். அவர் நெருப்பையும் புகையையும் பார்த்தார். ''மிக அற்புதம். எதிரியை ஏமாற்ற எவ்வளவு சிறந்த வழி'' என்றார்.

சுய்க்கோவின் தலைமையகத்துக்குப் பக்கத்திலேயே போர் நடைபெற்றது. தலைமையகத்திற்குள் உணவு கொண்டு போகப்படும் பொழுது வெடிகுண்டுகள், கண்ணிகளின் துணுக்குகள் பானைகளிலும் உணவுப் பொருள்களிலும் உண்மையாகவே கலந்தன. அந்த அளவுக்குப் பக்கத்தில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தலைமையகத்தின் சமையற் பணியாளரான கிளின்கா சுய்க்கோவிடம் ஓடி வந்தார்.

''தோழரே! எந்தக் காலத்திலாவது இப்படி நடப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? தட்டுகளில் வெடிகுண்டுச் சிதறல்கள், காஷாவில் கண்ணிகள், சூப்பில் தோட்டாக்கள்!''

தளபதி அலட்சியமாகச் சிரித்தார்.

''கிளின்கா! இது மிகப் பிரமாதம்! நம் உணவில் போர்க்களத்தின் மசாலா சேர வேண்டாமா? நம்முடைய ஆத்திரத்தை அதிகப்படுத்துகின்ற போர்முனை வைட்டமின்கள் இவை'' என்றார்.

''நல்ல வைட்டமின்கள்'' என்று முணுமுணுத்தார் கிளின்கா. ஆனால் அவருடைய பதில் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. மற்ற போர்வீரர்களிடம் அதைத் தெரிவித்தார். இதைக் கேட்ட போர்வீரர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அவர்களுடைய தளகர்த்தர் அசாத்தியமான துணிவுடையவர்.

ஸ்தாலின்கிராடைத் தற்காக்கும் பொறுப்பைக் கொண்ட இராணுவத்துக்கு சுய்க்கோவ் தலைமை தாங்கினர். ஆனல் முன்னேறித் தாக்குவதுதான் மிகச் சிறந்த தற்காப்பு என்பது அவருடைய கருத்து. சுய்க்கோவ் எதிரியைக் கடுமையாகத் தாக்கினர்; கண நேரம் கூட அவர்கள் நிம்மதியாக இருக்க விடவில்லை.

அவர்களுக்கு உதவியாக ஒரு புதிய டிவிஷன் வந்தது. சுய்க்கோவின் பொறுப்பில் அந்தத் துருப்புகள் இருந்தன. அந்த டிவிஷன் தளகர்த்தர் உத்தரவுகளைப் பெறுவதற்காக தலைமைத் தளகர்த்தரிடம் வந்தார். தனக்கு எங்கே, எத் தகைய தற்காப்புப் பொறுப்பு கொடுக்கப்படலாம் என்று அவர் கற்பனை செய்து பார்த்தார். அவர் தம்முடைய மனதில் இராணுவ நூல் மற்றும் போர்க்கலை பற்றிய புத்தகங்களில் விஞ்ஞான ரீதியாக சிறந்த தற்காப்பு பற்றி எழுதப் பட்டிருப்பதை நினைத்துப் பார்த்தார்.

சுய்க்கோவ் குனிந்து நிலப்படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவற்றை கவனமாகப் பார்த்த பிறகு திரும்பத் திரும்பச் சொன்னர்: ''நீங்கள் தற்காப்புப் பணியைச் செய்வதற்கு எந்த இடம் மிகச் சிறந்தது? இங்கே பாருங்கள். இங்கே ஒரு இடைவெளி இருக்கிறது. இங்கே போர்வீரர்கள் அவசியம். அங்கே போர்வீரர்களை அனுப்பினல் அவர்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.'' இப்படிச் சொல்லிவிட்டு அவர் ஒரு பென்சிலை எடுத்தார். ஒரு வட்டத்தை வரைந்தார்; அதனுள் ஒரு அம்புக் குறி போட்டார்.

''இந்த இடம்தான். இங்கே—உங்களுக்கு வலது பக்கத்திலிருக்கும் வீரர்களோடு சேர்ந்து நீங்கள் தாக்குதலைத் தொடங்க வேண்டும். இந்த இடத்தில் குவிக்கப்பட்டிருக்கும் எதிரித் துருப்புகளை நீங்கள் ஒழிக்க வேண்டும். பிறகு இந்த இடத்துக்கு வர வேண்டும்'' என்ருர்.

புதிய டிவிஷனின் தளபதி ஜெனரலைப் பார்த்தார்:

''தோழரே! இது முழு அளவுத் தாக்குதல் என்பதாக எனக்குத் தோன்றுகிறது. இது தற்காப்பு அல்லவே.''

''இல்லை. இது தற்காப்புதான். இது ஸ்தாலின்கிராடு தற்காப்பு'' என்ருர் சுய்க்கோவ்.

சுய்க்கோவ் போர்க்குணம் மிக்க தளபதி; அவர் எப்பொழுதும் தாக்குதலையே வலியுறுத்தினர். இரண்டாவது உலக யுத்தத்தின் போது அவர் பல சண்டைகளில் பங்கு கொண்டார். 1945ம் வருடத்தில் பெர்லினுக்குள் முதலில் நுழைந்த படைகளில் அவர் தலைமையிலிருந்த துருப்புகளும் இருந்தன.

டிட்டாயெவ்

நவம்பர் மாதம். அதிகமாக விழுகின்ற பனி.

இராணுவ செய்திப் பிரிவைச் சேர்ந்த சமிக்கையாளரின் வாழ்க்கை மற்றவர்கள் பார்த்துப் பொறுமைப்படக் கூடியதல்ல. பனி, மோசமான பருவநிலை, மண், சகதி, வானத்திலிருந்து திடீரென்று வருகின்ற தாக்குதல்கள், தரையில் பள்ளம் பறிக்கும் வெடி குண்டுகள், மரணத்தை வாரியிறைக்கும் தோட்டாக்கள்—எனினும் ஒரு சமிக்கையாளர் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். தகவல் அனுப்புகின்ற கம்பி குண்டினால் பாதிக்கப்பட்டுவிட்டால் அல்லது வெடிகுண்டினால் பிய்த்தெறியப்பட்டால் அல்லது நாஜி வேவுப் படையினரால் சீர்குலைக்கப்பட்டால் அதைக் கண்டுபிடித்து செய்திப் போக்குவரத்தை மறுபடியும் ஏற்படுத்துவது சமிக்கையாளரின் கடமையாகும்.

நவம்பர் மாதத்தில் மமாயெவ் குர்கானில் மறுபடியும் சண்டைகள் தொடங்கின. அவை உச்ச கட்டத்திலிருக்கும் பொழுது டிவிஷன் தலைமைக்குச் செய்தி அனுப்புகின்ற கம்பித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த நேரத்தில் டிவிஷன் தலைமை பீரங்கிப் படை தாக்க வேண்டிய இலக்குகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தது. செய்தித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன; பீரங்கிகள் அமைதியாக இருந்தன.

டிட்டாயெவ் என்ற சமிக்கையாளர் அதைப் பழுது பார்த்துச் சரி செய்வதற்காக அனுப்பப்பட்டார்.

அவர் கம்பிகளைப் பார்த்துக் கொண்டே ஊர்ந்து சென்றார். எங்கே பழுது ஏற்பட்டிருக்கிறதென்று தேடியவாறு சென்றார். அப்பொழுது மேகங்கள் தணிவாக மிதந்து கொண்டிருந்தன; காற்று வேகமாக வீச ஆரம்பித்திருந்தது. அவருடைய இடது பக்கத்தில் எதிரிகள் மறைந்திருக்கும் குழிகள் இருந்தன. பீரங்கி குண்டுகள் தலைக்கு மேலே பறந்தன; இயந்திரத் துப்பாக்கிகள் இடைவிடாமல் சுட்டுக் கொண்டிருந்தன. அவரைப் பாதையிலிருந்து விரட்டுவதைப் போல காற்று வேகமாக வீசியது.

''என்னை விரட்ட உன்னால் முடியாது'' என்று அந்தப் போர்வீரர் பனிப்புயலிடம் சொன்னார்.

''என்னைப் பிடிக்க உன்னால் முடியாது'' என்று அவர் பறந்து வந்த தோட்டாக்களிடம் சொன்னார்.

அவர் ஊர்ந்து சென்றார். அதோ, தெரியும் மலையில் சண்டை தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. நம் துருப்புகளுக்கு பீரங்கிப் படையின் உதவி அவசியம். டிட்டா

யெவ் அதை உணர்ந்து கொண்டு வேகமாக இயங்கினர். அவருக்கு முப்பது மீட்டர்களுக்கு முன்னல் குண்டு வெடித்துப் பள்ளம் பறித்திருப்பதைப் பார்த்தார். அங்குதான் கம்பித் தொடர்பு அறுந்திருக்க வேண்டும். இன்னும் பத்து மீட்டர் தூரம் தான். ஐந்து மீட்டர்தான். அந்தப் பள்ளத்தை நோக்கி அவர் ஊர்ந்து சென்ருர். இப்பொழுது அந்தப் பள்ளத்தின் விளிம்புக்கு வந்துவிட்டார். அங்கே குண்டுச் சிதறல்களினல் அறுந்து போன கம்பி கிடந்தது. டிட்டாயெவ் ஒரு கம்பியைக் கையிலெடுத்தார். உடனே அடுத்த கம்பி முனையையும் தேடி எடுத்தார்...

தலைமையகத்தில் தொலைபேசி நீண்ட நேரமாக இயங்காமல் மௌனமாக இருந்தது. இப்பொழுது அது இயங்க ஆரம்பித்தது. தளகர்த்தர் நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டார்.

''முதல் தரமான நபர்கள்'' என்று சமிக்கையாளர்களைப் பாராட்டினர்.

''டிட்டாயெவை அனுப்பினேம். அவர் ஒரு முதல் தரமான போர்வீரர்'' என்று அங்கே யாரோ சொன்னர்கள்.

அந்த டிவிஷனில் டிட்டாயெவை எல்லோருக்கும் தெரியும்; எல்லோரும் அவர் மீது அதிகமான பிரியம் வைத்திருந்தார்கள். டிட்டாயெவ் திரும்பிவருவார் என்று தலைமையகத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். என்ன காரணமோ அவர் திரும்பிவரவில்லை.

அவரைத் தேடுவதற்காக இரண்டு போர்வீரர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அதே பாதையில் ஊர்ந்து சென்ருர்கள். மேகங்கள் தணிவாக மிதந்து கொண்டிருந்தன. அவர்களுடைய முகத்தில் காற்று பலமாக அடித்தது. இயந்திரத் துப்பாக்கிகள் இடைவிடாமல் சுட்டுக் கொண்டிருந்தன. போர் ஓய்வில்லாது நடைபெற்றுக் கொண்டிருந்தது. சோவியத் பீரங்கிப்படை இப்பொழுது சுட்டுக் கொண்டிருந்தது. பீரங்கி வேட்டுக்கள் போர்க்களத்தின் மற்ற சத்தங்களை மூழ்கடித்தன. போர்வீரர்களின் காதுகளுக்கு அது சங்கீதத்தைப் போல இனிமையாக இருந்தது.

போர்வீரர்கள் தங்களுக்கு முன்னல் உற்றுப் பார்த்துக் கொண்டு ஊர்ந்து சென்ருர்கள். அந்தப் பள்ளத்தைப் பார்த்தார்கள். அதன் விளிம்பில் டிட்டாயெவை அடையாளம் கண்டு கொண்டார்கள். அவர் பூமியின் மீது கிடந்தார்.

''டிட்டாயெவ்!''

''டிட்டாயெவ்!''

டிட்டாயெவ் பதில் பேசவில்லை.

போர்வீரர்கள் இன்னும் அருகே ஊர்ந்து சென்ருர்கள்.

அவர் செத்துப் போய் விறைத்துக் கிடப்பதைப் பார்த்தார்கள்.

யுத்தத்தில் பல விதமான காட்சிகளைப் பார்த்து அனுபவப்பட்டவர்கள் தான் அந்தப் போர்வீரர்கள். ஆனால் இந்தக் காட்சி...

டிட்டாயெவ் அறுந்து போன கம்பிகளை எடுத்து, அந்தக் கம்பி முனைகளை ஒன்று சேர்க்க முயற்சி செய்து கொண்டிருந்த அதே நேரத்தில் ஒரு தோட்டா அவர் மீது பாய்ந்தது. அந்தக் கம்பிகளை ஒன்று சேர்த்துக் கட்டத் தேவையான பலம் அவரிடமில்லை.

அவர் வேகமாகச் சுய உணர்வை இழந்து கொண்டிருந்தார்; உயிர் பிரிந்து கொண்டிருந்தது. அந்தக் கடைசி விநாடியில் அந்தப் போர்வீரர் இரண்டு கம்பிகளின் முனைகளையும் மிகுந்த சிரமத்தோடு தன்னுடைய பற்களுக்கிடையே வைத்தார். கம்பி முனைகளைத் தன்னுடைய பற்களால் ஒரு கிடுக்கியைப் போலக் கடித்துக் கொண்டார். கம்பித் தொடர்புகள் மறுபடியும் ஏற்பட்டன.

''சுடுங்கள்! சுடுங்கள்!'' கம்பிகளின் வழியாக உத்தரவுகள் பறந்தன.

உடனே பதில் கிடைத்தது.

''சுட ஆரம்பித்துவிட்டோம். கம்பித் தொடர்பு நன்றாக இயங்குகிறதா?''

''ஆம்! தொடர்பு சிறப்பாக வேலை செய்கிறது.''

மறுபடியும் உத்தரவுகள்.

''சுடுங்கள்! சுடுங்கள்!''

சோவியத் துருப்புகள் எதிரியை நசுக்கின. ஆனால் அந்தப் பள்ளத்தின் விளிம்பில் ஒரு போர்வீரர் கிடக்கிறார். இல்லை, அவர் தரையில் கிடக்கவில்லை. தன்னுடைய காவலிடத்தில் அவர் நிற்கிறார்.

ஆம், அந்தப் போர்வீரர் தம்முடைய காவலிடத்தில் நின்று கொண்டிருக்கிறார்.

கோட்டை நகரமா?

நாஜிப் படைகளால் ஸ்தாலின்கிராடைப் பிடிக்க முடியவில்லை. அந்த நகரம் அணுக முடியாத கோட்டை என்ற வதந்தியை நாஜிகள் பரப்பினார்கள். நகரத்தைச் சுற்றி கடக்க முடியாத அகழிகளும் அரண்களும் கோட்டை கொத்தளங்களும் இருப்பதாகச் சொல்லப்பட்டது. நாஜிகளின் ஒவ்வொரு முயற்சியும் பலவிதப் பொறிகள், பொறியியல்

தந்திரங்கள் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட பலமான தற்காப்பு அமைப்பினுல் முறியடிக்கப்படுவதாகப் பேசப்பட்டது.

நகரத்தின் ஒவ்வொரு பகுதியுமே கோட்டையரண்களாக பாதுகாக்கப்படும் தனித்தனிப் பகுதிகளாக இருக்கின்றன வென்று நாஜிகள் கடிதங்களில் எழுதினுர்கள். அங்கே இருக்கும் வீடுகள் வீடுகளல்ல; ஒவ்வொரு வீடுமே ஒரு தனிக் கோட்டை என்று எழுதினுர்கள்.

''ஸ்தாலின்கிராடு—அது ஒரு கோட்டை. ஆமாம். ஒரு கோட்டை'' என்று செய்தி பரவியது.

நாஜி ஜெனரல்கள் தம்முடைய அறிக்கைகளில் அப்படியே எழுதினுர்கள். ஒவ்வொரு வரியிலும் அதையே திரும்பத் திரும்பச் சொன்னுர்கள்.

''ஸ்தாலின்கிராடு—அது ஒரு கோட்டை. உள்ளே நுழைய முடியாத கோட்டை. நகரம் முழுவதும் கோட்டைகள் சூழ்ந்த பகுதிகளும் ஏற முடியாத கொத்தளங்களும் இருக்கின்றன.''

நாஜிப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கட்டுரைகளிலும் இந்த ஒரே விஷயம் தான் திரும்பத் திரும்ப எழுதப் பட்டது.

''நம் போர்வீரர்கள் கோட்டையைத் தாக்கிக் கொண்டிருக்கிருர்கள்.''

''ஸ்தாலின்கிராடு—அதுதான் ருஷ்யாவிலேயே மிகவும் பலமான கோட்டை.''

''கோட்டை, கோட்டை'' என்று பத்திரிகைகள் ஓலமிட்டன.

போர்முனையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளும் அதையே வலியுறுத்தின.

ஆனுல் ஸ்தாலின்கிராடு உண்மையில் ஒரு கோட்டை அல்ல; எந்தக் காலத்திலும் அது கோட்டையாகவும் இருக்கவில்லை. அங்கே விசேஷமான அரண்கள் இல்லை. எல்லா நகரங்களையும் போல அதுவும் ஒரு நகரம்தான். வீடுகள், தொழிற்சாலைகள்...

நாஜிகளின் பிரசுரங்களில் ஒன்றை சோவியத் போர் வீரர்கள் படித்தார்கள். அதைப் படித்துவிட்டு நன்ருகச் சிரித்தார்கள். ''இது சுலபமான வேலையாக இல்லாததால் நாஜிகள் இப்படி எழுதுகிருர்கள்'' என்ருர்கள். பிறகு அந்தப் பிரசுரத்தை 62வது இராணுவத்தின் இராணுவக் கவுன்சில் உறுப்பினரும் டிவிஷனல் கமிஸ்ஸாருமான குஸ்மா அக்கிமொவிச் குரொவிடம் காட்டினுர்கள். நாஜிகள் எப்படிப் பட்ட பொய்களை ஜோடிக்கிருர்கள் என்பதைக் கமிஸ்ஸாரிடம் காட்ட அவர்கள் விரும்பினுர்கள்.

கமிஸ்ஸார் அந்தப் பிரசுரத்தை கவனமாகப் படித்தார். பிறகு அவர் கூறியதைக் கேட்ட போர்வீரர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''இந்தப் பிரசுரத்தில் எழுதப்பட்டிருப்பது எல்லாமே உண்மைதான். நாஜிகள் சொல்வது சரியானதுதான். இது ஒரு கோட்டை என்பது உண்மையே'' என்ருர்.

போர்வீரர்கள் குழப்பமடைந்தார்கள். ஒரு வேளை அது உண்மைதானே? எப்பொழுதுமே தங்களைக் காட்டிலும் அதிகாரிகள் எல்லாவற்றையும் நன்கு தெரிந்து வைத்திருப்பார்கள். எனினும் அவர்கள் கமிஸ்ஸாரை சந்தேகத்தோடு பார்த்தார்கள்.

''கோட்டை நகரம்'' என்று குரொவ் திரும்பவும் சொன்ருர். ''உங்களுடைய இதயங்களும் வீரமும்தான் தகர்க்க முடியாத கோட்டை. ஏற முடியாத அரண்களும் வலுவான கொத்தள்ங்களும் அங்கேதான் இருக்கின்றன. மதிற் சுவர்களையும் அரண்களையும் அங்கே நீங்கள் பார்க்கலாம்'' என்ருர்.

போர்வீரர்கள் மகிழ்ச்சியடைந்தனர். கமிஸ்ஸார் சொன்னது அவர்களுக்குப் புரிந்தது; அதைக் கேட்பதற்கு ஆனந்தமாக இருந்தது.

குஸ்மா அக்கிமொவிச் குரொவ் உண்மையைத்தான் சொன்ருர். நாஜிசம் ருஷ்யப் போர்வீரனின் வீரம் என்ற கோட்டைச் சுவரில் மோதி ஸ்தாலின்கிராடில் தன்னுடைய கழுத்தை முறித்துக் கொண்டது.

எந்தப் பெயரையும்...

துருப்புகள் ஸ்தாலின்கிராடைப் பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டிருந்தன. அதற்கிடையில்...

ஸ்தாலின்கிராடை முற்றுகையிட்டிருக்கும் நாஜித் துருப்புகளை அழிப்பதற்கு மத்திய இராணுவத் தலைமை பிரமாண்டமான துணிகரமான திட்டத்தை நீண்ட காலமாகத் தயாரித்துக் கொண்டிருந்தது. ஜெனரல்கள் ஷுக்கவ், வஸிலெவ்ஸ்கி, வோரொனேவ் மற்றும் இதர இராணுவ அதிகாரிகள் எதிர்காலத்தில் நடக்கப் போகின்ற அந்த மாபெரும் சண்டையின் ஒவ்வொரு விவரத்தையும் இரவு பகலாகப் பாடுபட்டு நுணுக்கமாகத் தயாரித்துக்கொண்டிருந்தனர். வடக்கேயிருந்தும் தெற்கேயிருந்தும் முன்னேறி வந்து ஸ்தாலின்கிராடில் உள்ள நாஜிகளைச் சூழ்ந்து ஒரு வட்டத்துக்குள் அவர்

களைச் சிக்கவைத்து அத்தனை பேர்களையும் அழித்துவிட வேண்டும் என்பதுதான் அந்தத் திட்டம்.

1942, நவம்பர் 19ந் தேதியன்று சோவியத் துருப்புக் களின் மாபெரும் எதிர்த்தாக்குதல் தொடங்கிற்று.

சோவியத் படைகள் வேகமாக முன்னேறின. வடக்கே யிருந்து புறப்பட்ட 26வது டாங்கிப் படையின் முன்னணிப் பிரிவு துணிகரமாகத் தாக்கி டோன் நதி மீதிருக்கும் பாலத்தைக் கைப்பற்றியது; பிறகு கலாச் நகரத்தையும் பிடித்தது.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த டோன் பிரதேசத்துக்கு இராணுவப் பத்திரிகைகளின் நிருபர்கள் வந் தார்கள். அவர்கள் தாக்குதலைப் பற்றிய விவரங்களையும் அதில் சிறந்த சேவை புரிந்த போர்வீரர்களுடைய பெயர் களையும் விசாரிக்கத் தொடங்கினார்கள்.

முதல் கேள்வி:

''பாலத்தைப் பிடித்தது யார்?''

''டாங்கிப் படையின் முன்னணிப் பிரிவு'' என்று நிருபர் களுக்குப் பதில் கிடைத்தது.

''அதற்குத் தலைமை தாங்கியது யார்?''

''லெப்டினென்ட்-கர்னல் பிலிப்பொவ்.''

இந்தக் கட்டத்தில் பாலம் எவ்வாறு பிடிக்கப்பட்டது என்ற கதையை நிருபர்கள் தெரிந்து கொண்டார்கள். லெப் டினென்ட்-கர்னல் பிலிப்பொவின் தலைமையிலிருந்த டாங்கி கள் பாலத்தின் மீது வேகமான தாக்குதலைத் தொடுத் தன. நாஜிகள் இதை எதிர்பார்க்கவில்லை. அந்த டாங்கிகள் தங்களைச் சேர்ந்தவை என்று கூட முதலில் நினைத்தார்கள். ஆனால் பிறகு உண்மையைப் புரிந்து கொண்டார்கள். அதற் குள் காரியம் முடிந்துவிட்டது. சோவியத் டாங்கிகள் இப் பொழுது பாலத்தின் மீது இருந்தன.

டாங்கிப் படைகள் அந்தப் பாலத்தைக் கைப்பற்றியதைப் பற்றிக் கட்டுரை எழுதுவதற்கு விவரங்களைக் குறித்துக் கொண்ட நிருபர்கள் அடுத்த படியாக கலாச் நகரத்துக்குச் சென்றார்கள்.

அங்கே டாங்கிப் படையின் வீரர்கள் நிருபர்களைச் சந்தித்தார்கள்.

''கலாச்சைப் பிடித்தது யார்?'' என்று நிருபர்கள் டாங்கி ஓட்டுநர்களைக் கேட்டார்கள்.

''டாங்கிப் படையின் முன்னணிப் பிரிவு.''

நிருபர்கள் சில தகவல்களைக் குறித்துக் கொண்டார்கள்.

''உங்கள் தளகர்த்தர் பெயரைச் சொல்கிறீர்களா? லெப்டினென்ட்-கர்னல்...''

''ஆமாம். லெப்டினென்ட்-கர்னல் பிலிப்பேன்கொ'' என்று போர்வீரர்கள் கூறினார்கள்.

''பிலிப்பேன்கொ என்றா சொல்கிறீர்கள்? நாங்கள் பிலிப்பொவ் என்று நினைத்தோம்'' என்று நிருபர்கள் கூறினார்கள்.

''டாங்கிகளில் ஏறுங்கள்!'' என்று உத்தரவு முழங்கியது.

டாங்கி ஓட்டிகள் கனமான கவசம் போடப்பட்டிருந்த டாங்கிகளுக்குள் பாய்ந்தார்கள்.

அங்கே நிருபர்கள் மட்டும் குறிப்புப் புத்தகங்களோடு தனியே நின்றனர். முன்னணிப் படையின் தளகர்த்தர் பெயர் என்று தாங்கள் எழுதியிருந்ததை அவர்கள் மறுபடியும் பார்த்தார்கள். பிலிப்பொவ் அல்லது பிலிப்பேன்கொ இதில் சரியான பெயர் எது என்று யோசித்தார்கள்.

மறுபடியும் போர்வீரர்களிடம் கேட்பதென்று முடிவு செய்தார்கள். சீக்கிரமே ஒரு போர்வீரரைச் சந்தித்தார்கள்.

''டாங்கிப் படையின் முன்னணிப் பிரிவின் தளகர்த்தரின் பெயர் என்ன?'' என்று அவரிடம் கேட்டார்கள்.

''லெப்டினென்ட்-கர்னல் பிலிப்பொவ்'' என்று அவர் பதிலளித்தார்.

''அப்படியானால் பிலிப்பொவ் என்பதுதான் அவர் பெயர்'' என்று நிருபர்கள் முடிவு செய்தார்கள்.

எனினும் இன்னொருவரிடமும் கேட்கலாம் என்று நினைத்தார்கள்.

''உங்கள் தளகர்த்தரின் பெயர் என்ன?'' என்று அந்த வழியாகச் சென்ற டாங்கிப் படை லெப்டினென்டிடம் கேட்டார்கள்.

''லெப்டினென்ட்-கர்னல் பிலிப்பேன்கொ'' என்று அவர் பதிலளித்தார்.

''அவர்தான் டாங்கிப் படையின் முன்னணிப் பிரிவின் தளகர்த்தரா?''

''சந்தேகமென்ன? அவர்தான்.''

பத்திரிகை நிருபர்களுக்கு இப்பொழுது ஒரே குழப்பம். பிலிப்பொவா அல்லது பிலிப்பேன்கொவா? கட்டுரைகளில் எந்தப் பெயரை எழுதுவது?

அவர்கள் பத்திரிகை அலுவலகங்களுக்குத் திரும்பினார்கள். எந்தப் பெயரை எழுதுவது என்று அங்கே உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் யோசிப்பதால் பயனில்லை.

டாங்கிப் படையின் முன்னணிப் பிரிவில் லெப்டினென்ட்-கர்னல் பிலிப்பொவ், லெப்டினென்ட்-கர்னல் பிலிப்பேன்கொ ஆகிய இரண்டு பேர்கள் இருந்தார்கள். இருவருமே

டாங்கிப் படையின் முன்னணிப் பிரிவுகளுக்குத் தலைமை தாங்கினார்கள். இரண்டு பேருமே 'சோவியத் யூனியன் வெற்றி வீரர்' என்ற விருதைப் பெற்றார்கள். டோன் நதியின் மேலுள்ள பாலத்தைப் பிடித்ததற்காக முதல் நபருக்கு அந்த விருது வழங்கப்பட்டது. கலாச் நகரத்தைக் கைப் பற்றியதற்காக இரண்டாவது நபருக்கு அந்த விருது கிடைத்தது.

ஸ்தாலின்கிராடில் பல வீரர்கள் இருந்தார்கள். அவர் களுடைய பெயர்களும் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருந்தன. அங்கே இவனோவ், இவனேன்கோ, இவன்யான், இவனிட்ஸே, இவாஷ்சென்கோ என்ற பெயர்களைக் கொண்ட வீரர்கள் உண்டு. லிட்வினா, லிட்வினேன்கோ, லிட்வினொவா என்ற பெயர்களைக் கொண்ட தந்தி ஒலிபரப்புத் துறை யினர் உண்டு. கிரிகோரியான், கிரிகொரேன்கோ, கிரிஷ் சென்கோ என்ற டாங்கிப் படை வீரர்களும் பெட்ரோவ், பெட்ரஷ்விலி, பெட்ரோஸியான், பெட்ரொனவிசியஸ் என்ற காலாட்படை வீரர்களும் உண்டு. அங்கே வீரர்கள் பலர். அவர்களுடைய பெயர்களும் பல.

வீரர்களைப் பற்றி நீங்கள் எழுத விரும்புகிறீர்களா?

எந்தப் பெயரை வேண்டுமானாலும் எழுதுங்கள்.... அந்தப் பெயரில் ஒரு வீரர் இருந்திருப்பார். அதில் சந்தேக மில்லை.

முறியடிப்பு

சோவியத் துருப்புகள் ஒரு மாபெரும் வளையத்தின் வடி வத்தில் முன்னேறி நாஜிகளைச் சூழ்ந்து கொண்டன. ஸ்தாலின் கிராடு சண்டையின் இறுதிக் கட்டம் தொடங்கியது.

''உறுதியாக நில்லுங்கள்! இது பியூரர் உங்களுக்குக் கொடுக்கும் ஆணை!'' என்று மாட்டிக் கொண்ட ஜெர்மன் இராணுவத்தின் தளகர்த்தரான கர்னல்-ஜெனரல் பிரீட்ரீஹ் வொன் பௌலுஸ். முழக்கம் செய்தார். ''பியூரர் உங்களை என்றும் நினைப்பார்! உறுதியாக நில்லுங்கள்! பியூரர் உங் களோடிருக்கிறார்! அவர் உங்களைக் கைவிட மாட்டார்!''

நாஜிப் போர்வீரர்கள் பௌலுசை நம்பினார்கள். அவர் கள் பியூரர் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். அவர்கள் உயிர் போகும் வரை போரிட்டார்கள். ஜெர்மன் இரத்தம் ஆறுகளாகப் பெருக்கெடுத்து ஓடியது.

ஜெர்மானியர்கள் விடாப்பிடியாகப் போர் புரிந்தார் கள். ஆனால் அவர்களுடைய நிலைமை மேலும் மேலும்

மோசமாகிக் கொண்டிருந்தது. முற்றுகை வளையம் மென் மேலும் சுருங்கிக் கொண்டிருந்தது; சோவியத் படைகள் நாஜிகளை அழுத்திக் கொண்டிருந்தன. எல்லாப் பக்கங்களிலும் பயங்கரமான காட்சிகள்.

பௌலுஸ் பலவீனமடையவில்லை:

''வீரர்களே! உங்களுடைய இடங்களிலிருந்து விலகிப் போகக் கூடாது! வீரர்களைப் போல மடிவீர்! பியூரர் நம்மைக் கைவிட மாட்டார்!''

போர்வீரர்கள் இன்னும் நம்பிக்கையோடிருந்தார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் முற்றுகையிடப்பட்டிருக்கும் துருப்புகளைக் காப்பாற்றும் முயற்சிகளைக் கைவிடுமாறு ஆணைகள் முன்பே அனுப்பப்பட்டு விட்டன.

இது போர்வீரர்களுக்குத் தெரியாது. அவர்கள் சிங்கங்களைப் போல, மிருகங்களைப் போலப் போராடினார்கள். பியூரர் மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை புனிதமானது.

1943 ஜனவரி 9ந் தேதியன்று சோவியத் தலைமை முற்றுகையிடப்பட்டிருக்கும் துருப்புகள் சரணடைவதற்குத் தன்னுடைய நிபந்தனைகளைத் தெரிவித்தது. அவர்களுடைய உணவுக்கும் இருப்பிடத்துக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது. யுத்தம் நின்றவுடன் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

போர்வீரர்கள் தீவிரமாகச் சண்டை செய்து களைத்துப் போன படியால் இப்பொழுது நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்கள். அவர்களை எதிர்நோக்கிய முடிவிலிருந்து தப்புவதற்கு ஒரு வழி ஏற்பட்டது. போர் முடிவடையப் போகிறதென்று நினைத்துப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் தன்னுடைய போர்வீரர்கள் ஒரு போதும் சரணடையக் கூடாதென்று ஹிட்லர் கடுமையான உத்தரவு அனுப்பியிருப்பதை சீக்கிரமாகத் தெரிந்துகொண்டார்கள். நாஜி ஜெனரல்கள் சோவியத் சலுகைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். மறுபடியும் போர்வீரர்கள் யுத்தத்தில் ஈடுபட்டார்கள்; மறுபடியும் இரத்த ஆறுகள் ஓடின.

சோவியத் வளையம் மேலும் மேலும் இறுகிக்கொண்டு வந்தது. எந்த ஸ்தாலின்கிராடு நகரத்தை நாஜிகள் அழித்தார்களோ அந்த நகரத்துக்குள் நாஜிகளைத் துரத்தி வெளியேற முடியாமல் வைத்தன நம்முடைய துருப்புகள். இடிந்து போன கட்டிடங்களின் நிலவறைகளுக்குள், குழிகளுக்குள், குகைகளுக்குள், கண்ணுக்குத் தென்பட்ட எந்தப் பிளவிலும் நாஜித் துருப்புகள் மறைந்து கொண்டார்கள்.

வளைக்கப்பட்ட ஜெர்மன் இராணுவத்தின் தலைமைத் தளகர்த்தரான பிரீட்ரிஹ் வொன் பௌலுஸ் ஸ்தாலின்

கிராடு நகரத்தில் முன்பு மத்திய பண்டக சாலையாக இருந்த கட்டிடத்தின் நிலவறைக்குள் ஓடி ஒளிந்தார்.

பௌலுஸ் முன்பு வெறும் ஜெனரலாக இருந்தார். பியூரருக்கும் நாஜிசத்துக்கும் காட்டிய விசுவாசத்துக்கு வெகுமதியாக அவர் இப்பொழுது ஜெனரல்-பீல்டுமார்ஷலாகப் பதவி உயர்வு பெற்றிருந்தார்.

''ஊக்கத்தைக் கைவிடாதீர்கள்! உறுதியாக நில்லுங்கள்!'' என்று பௌலுஸ் நிலவறைக்குள்ளேயிருந்து உத்தரவு அனுப்பினார்.

இந்த நிலவறைதான் வளைக்கப்பட்ட இராணுவத்தின், இன்னும் சரியாகச் சொல்வதென்றால், அதில் எஞ்சியிருந்த துருப்புகளின் தலைமையகமாக இருந்தது. சில போர்வீரர்கள் மட்டுமே நகரத்துக்குள் சென்று இன்னும் போர் செய்துகொண்டிருந்தார்கள். மற்றவர்கள் இனிமேல் ஒரு பயனுமில்லை என்று போரை நிறுத்திவிட்டார்கள்.

''உறுதியாக நில்லுங்கள்!'' என்று பௌலுஸ் நிலவறைக்குள்ளேயிருந்து முழங்கினார்.

இப்படியே அவர் எவ்வளவு காலம் சொல்லிக்கொண்டிருந்திருப்பார் என்பதைக் கூறுவது கடினமே. எனினும் இந்தக் கட்டத்தில் சோவியத் டாங்கிகள் நகரத்தின் நடுப்பகுதிக்குள் நுழைந்தன. டாங்கி ஓட்டிகள் பௌலுஸ் ஒளிந்திருந்த நிலவறைக் கட்டிடத்தை அணுகினார்கள். நிலவறைக்குச் செல்கின்ற படிகளில் இறங்கினார்கள்.

''பீல்டுமார்ஷல் பௌலுஸ் உங்கள் கைகளை மேலே உயர்த்துகிறீர்களா?''

பீல்டுமார்ஷல் சரணடைந்தார்.

1943 பிப்ரவரி 2ந் தேதியன்று ஸ்தாலின்கிராடுக்குள் வளைத்துக் கொள்ளப்பட்ட நாஜி துருப்புகள் ஆயுதங்களைக் கீழே போட்டன. 330,000 போர்வீரர்களைக் கொண்ட ஹிட்லரின் பிரம்மாண்டமான இராணுவத்தில் மிஞ்சியிருந்தவர்கள் சோவியத் துருப்புகளிடம் சரணடைந்தார்கள். சோவியத் துருப்புகள் 22 நாஜி டிவிஷன்களை அழித்தன அல்லது முழுமையாக சேதப்படுத்தின; 91,000 நாஜி போர்வீரர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். அவர்களில் 2,500 பேர் இராணுவ அதிகாரிகள். பீல்டுமார்ஷல் வொன் பௌலுஸ் உள்பட ஹிட்லரின் 23 ஜெனரல்களையும் சோவியத் துருப்புகள் கைது செய்தன.

ஸ்தாலின்கிராடில் போர் புரிந்த நாஜி இராணுவம் இப்பொழுது ஒழிந்தது. ஸ்தாலின்கிராடில் கிடைத்த வெற்றி முழுமையானது, மகத்தானது. எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் அதன் புகழ் மங்காது.

1

2

3

4

5

1. ஸ்டாலின்கிராட் மறைகுழிகளில் சோவியத் படைவீரர்கள். 2. ஜெனரல் வஸீலி சுய்க்கோவ். இவர் ஸ்டாலின்கிராடின் மத்திய, வட பகுதிகளை வீரத்தோடு பாதுகாத்த படைக்குத் தலைமை தாங்கினார். 1945ல் பெர்லினுக்குள் முதன்முதலாக நுழைந்த படைகளில் சுய்க்கோவ் தலைமை தாங்கிய படையும் ஒன்றாகும். 3. ஸ்டாலின்கிராட் தெருக்களில் சண்டை நடைபெறுதல். 4. ''சிவப்பு அக்டோபர்'' தொழிற்சாலையில் சண்டை நடைபெறுதல். 5. ''வெற்றி! தொழிற்சாலை நமதே!''

6


СМЕРТЬ НЕМЕЦКИМ ЗАХВАТЧИКАМ!
ПРОЧИТАЙ И ПЕРЕДАЙ ТОВАРИЩУ!

СТАЛИНГРАДЕЦ!
БУДЬ СТОЙКИМ, КАК
МАТВЕЙ ПУТИЛОВ

ОН БЫЛ РЯДОВЫМ СВЯЗИСТОМ И ЧАСТО НАХОДИЛСЯ ТАМ, ГДЕ ВРАЖЕСКИМИ СНАРЯДАМИ И МИНАМИ КАРЕЖИЛИСЬ ПРОВОДА, ГДЕ РАЗРЫВАЮЩИЕСЯ БОМБЫ НЕПРЕРЫВНО ВЫВОДИЛИ ИЗ СТРОЯ СВЯЗЬ – НЕРВ СТАЛИНГРАДСКОЙ ОБОРОНЫ. СЕГОДНЯ НА ЛИНИИ ВРАЖЕСКОЙ МИНОЙ ЕМУ РАЗДРОБИЛО РУКУ. ТЕРЯЯ СОЗНАНИЕ, ОН ПОДНЁС КОНЦЫ ПРОВОДОВ В РОТ И КРЕПКО ЗАЖАЛ ПРОВОД ЗУБАМИ. ВОССТАНОВИВ СВЯЗЬ, ОН УМЕР С ПРОВОЛОКОЙ В ЗУБАХ!
ОТОМСТИМ ЗА МАТВЕЯ!

7

6. எம். எம். புடீலவ், இளம் கம்யூனிஸ்டுகள் கழகத்தைச் சேர்ந்தவர், சமிக்கைப் பிரிவில் படைவீரர். இவருக்குக் காயமேற்பட்டதும் துண்டிக்கப்பட்ட தந்திக்கம்பிகளைப் பற்களில் கடித்துக் கொண்டார். அதன் மூலம் தகவல் தொடர்பு மறுபடியும் ஏற்பட்டது. அவர் பற்களுக்கிடையே தந்திக் கம்பிகளை வைத்தபடியே மரணமடைந்தார்.


8

9

7. புடீலவின் வீரச்செயலை விளக்கும் பிரசுரம். 8. சமிக்கைப் பிரிவைச் சேர்ந்த புடீலவின் தந்திக் கம்பிப்பெட்டி. 9. ஸ்டாலின்கிராட் சண்டையில் பெரும் புகழ் பெற்ற லெப்டினென்ட்-கர்னல் பிலிப்போவ். 10. ஸ்டாலின்கிராடுக்கு அருகே ''காட்யூஷாக்கள்''. 11. சோவியத் சண்டை விமானங்கள். 12, 13. மக்கள் அனைவருமே போருக்கு உதவுகிறார்கள். போர்முனைக்குச் சென்ற ஆண்களுக்குப் பதிலாக அவர்களுடைய மனைவியர், குழந்தைகள் வேலை செய்தல்.



10

11

12

13

14

15

16

14. ஸ்டாலின்கிராடில் வெற்றி. நாஜித் துருப்புகள் சரணடைகின்றன. 15. நாஜி யுத்த தளவாடங்கள் சேதமடைந்து கிடக்கின்றன. 16. நாஜி இராணுவ தளகர்த்தர் ஜெனரல் பீல்டு மார்ஷல் பௌலுஸ் கைது செய்யப்படும் நேரத்தில்.

17

17. ஸ்டாலின்கிராட் வெற்றி!

பெர்லினை நோக்கி

இரண்டாவது உலக யுத்தத்தில் திருப்பு முனையாக இருந்தது ஸ்தாலின்கிராட் சண்டை. இந்த வெற்றிக்குப் பிறகு எல்லாப் போர்முனைகளிலும் சோவியத் இராணுவம் பிரம்மாண்டமான தாக்குதல்களைத் தொடங்கியது. நாஜிப் படைகள் பின்வாங்கிய போதிலும் மூர்க்கத்தனமாகப் போரிட்டன.

இன்னும் பல சண்டைகளும் இராணுவ நடவடிக்கைகளும் நடைபெறப் போகின்றன. பிரபலமான குர்ஸ்க் சண்டை, நீப்பர் நதியையும் கீவ் நகரத்தையும் கைப்பற்றுவதற்காக நடைபெற்ற சண்டை, கோர்சுன்-ஷெவ்சேன்கொவ்ஸ்கி அருகே நாஜிகள் வளைத்துக் கொள்ளப்பட்டது முதலியன அத்தகைய சண்டைகளில் சில. லெனின்கிராடில் நாஜி முற்றுகையை நொறுக்கியது, செவஸ்தோபொல் மற்றும் ஒடெஸ்ஸாவை விடுவித்தல், நாஜிகளின் முறியடிப்பை முழுமையாக்கி அவர்களை பைலோருஷ்யாவிலிருந்து ஒழித்துக் கட்டிய ''பக்ராத்தியோன்'' என்று பெயரிடப்பட்ட தாக்குதலும் இவற்றில் சில.

சோவியத் துருப்புகள் ஆக்கிரமிப்பாளர்களை சோவியத் யூனியனின் எல்லைகளிலிருந்து விரட்டிய பிறகு ஐரோப்பாவில் நாஜிகளிடம் அடிமைப்பட்ட நாடுகளை விடுதலை செய்யும் பணி தொடங்கியது. சோவியத் துருப்புகள் போலந்து, ருமேனியா, பல்கேரியா மற்றும் ஹங்கேரியை விடுதலை செய்தன. செக்கோஸ்லொவாக்கியா மற்றும் யுகோஸ்லாவியாவை விடுதலை செய்வதற்கு அவை போரிட்டன.

1945ம் வருடத்தில் வசந்த காலத்தின் போது சோவியத் துருப்புகள் நாஜி ஜெர்மனியின் தலைநகரமான பெர்லினை அணுகின. ஏப்ரல் மாதம் 16ந் தேதியன்று பெர்லின் சண்டை—இரண்டாவது உலக யுத்தத்தின் கடைசிப் பெரும் சண்டை—தொடங்கியது.

ஏப்ரல் 16ந் தேதி. பின்னிரவுக் காலம். பெர்லின் நேரப்படி மூன்று மணி. பெர்லினைப் பாதுகாத்துக் கொண்டிருந்த நாஜிப் படைகளின் மீது திடீரென்று நீர்வீழ்ச்சியைப் போல நெருப்புப் பந்துகள் விழுந்தன. மார்ஷல் ஷுக்கவ் தலைமை

யில் முதல் பைலோருஷ்ய இராணுவம் பெர்லின் மீது தாக்கு தலைத் தொடங்கியது.

எதிர்ப்பக்கத்தில் உயிரோடிருந்த அனைத்துமே ஒட்டிக் கொண்டு தப்பிப்பதற்காக தரையோடு தரையாகக் கிடந் தன. நாஜிகளின் பீரங்கிப்படை அமைதியாக இருந்தது. அவர்கள் எப்படி பதிலளிக்க முடியும்? தலையைத் தூக்குவது அல்லது கையை நீட்டுவது கூட அப்பொழுது மிகவும் ஆபத் தாக இருந்தது.

அந்தப் படைவீரர்களில் ருஷ்கே என்ற பெயருடைய ஒருவனும் இருந்தான். அவனும் அவர்களோடு தரையில் படுத்துத் தன்னை மறைத்துக் கொண்டான். அந்த நிலைமை யைப் பற்றி அவன் சிந்தித்தான்.

என்ன நடந்து கொண்டிருக்கிறது? இரவுக் காலம். பெர் லின் நேரப்படி மூன்று மணி. திடீரென்று பீரங்கித் தாக்கு தல் நடக்கிறது. அவர்கள் உள்ளே நுழையப் போகிறார் களா? ஆனால் இரவு நேரத்தில் உள்ளே நுழைய முடியுமா? இருளில் எப்படித் தாக்க முடியும்? டாங்கிகள் எப்படிப் போக முடியும்? அவர்களால் இரவில் ஒன்றையும் பார்க்க முடியாதே. பீரங்கிப்படை குண்டு வீசுவதற்குத் தன்னுடைய இலக்குகளை எப்படிக் குறி பார்த்துச் சுட முடியும்? போர் வீரர்கள் எப்படி முன்னேறித் தாக்க முடியும்?

இவை எப்படி முடியும்?

ருஷ்கே திரும்பத் திரும்ப யோசித்தான். ஆனால் அவ னுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு வேளை ருஷ்யர்கள் நம்மை பயமுறுத்தப் பார்க்கிறார்களா? ஒரு வேளை நேரத்தைப் பற்றி ஏதேனும் குழப்பம் ஏற்பட்டிருக்குமோ?

அவனைப் போலவே மற்ற போர்வீரர்களுக்கும் திகைப்பு ஏற்பட்டது. ஜெனரல்கள் குழப்பமான நிலையிலிருந்தனர்.

இதற்கிடையில் பீரங்கிப்படை சுட்டுக் கொண்டிருந்தது.

ருஷ்யர்கள் மர்மமான ஒரு காரியத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

அந்தப் புயல் முப்பது நிமிடங்கள் நீடித்தது. அதன் பாதையில் அகப்பட்டவற்றையெல்லாம் வேரோடு சாய்த் தது. பிறகு எப்படி திடீரென்று தொடங்கியதோ அதே மாதிரி முடிவடைந்தது. பீரங்கிகள் சுடவில்லை. எங்கும் அமைதி. படைகளின் நிலைகளை மௌனம் சூழ்ந்தது.

தாக்குதலில் உயிர் தப்பிய நாஜி போர்வீரர்கள் மறை விடங்களிலிருந்து ஊர்ந்து வெளியே வந்தார்கள். ஜெனரல் களும் அவர்களைப் பின்பற்றி வெளியே வந்தார்கள். ருஷ்கே தன்னுடைய சக வீரர்களோடு வெளியே வந்து சுற்று முற்றும் பார்த்தான்.

மறுபடியும் திடீரென்று...

என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பது ஒருவருக்குமே புரியவில்லை. திடீரென்று டஜன் கணக்கில் பேரொளி விளக்குகள் பிரகாசித்தன. நாஜிகளின் கண்கள் குருடாயின.

அவர்கள் கண்களைச் சுருக்கினார்கள்; எதிர்ச் செயலாகக் கண்களை மூடிக்கொண்டார்கள். இது என்ன புதுமை! அவர்கள் கண்களை மறுபடியும் திறந்த பொழுது எங்கும் பகல் போலப் பிரகாசமாக இருந்தது. பேரொளி விளக்குகள் அவர்களுடைய கண்களை உறுத்தின; கண்கள் எரிந்தன. அவர்களுக்கு முன்னால் பயங்கரமான நிழல்கள் ஒன்றையொன்று துரத்தின.

நாஜிகளுக்கு இப்பொழுதுதான் விஷயம் புரிந்தது. உண்மையில் அவை இருளில் வழி காட்டுகின்ற ஒளிப் பட்டைகளே. போர்முனையில் பல கிலோமீட்டர் தூரத்துக்கு அவை நீண்டு பிரகாசித்தன. ஒரே சமயத்தில் எரிந்தபொழுது அவை இரவைப் பகலாக்கின.

நாஜிகளின் முகத்தில் நேரடியாகப்பட்ட வெளிச்சம் அவர்களால் எதையும் பார்க்க முடியாதபடி செய்தது. மறுபக்கத்தில் அது நம் டாங்கிகள் முன்னேறிச் செல்கின்ற வகையில் பாதையைப் பிரகாசமாகக் காட்டியது; பீரங்கிப் படை, காலாட்படை மற்றும் இதர படைகளுக்கு இருளைப் போக்கி இடங்களைக் காட்டியது. நம் துருப்புகளுக்கு இப்படி உதவி செய்தது.

நாஜிகள் கலவரமடைந்தனர். இப்படி ஒரு காட்சியை அவர்கள் ஒருபோதும் பார்த்ததில்லை.

தனிச் சிறப்புடைய வெற்றிகரமான படை அவர்களைக் கடந்து சென்றது.

இதற்கிடையில் சோவியத் விமானங்களின் உறுமல் காற்றிலே நிறைந்திருந்தது. விமானங்கள் தாக்குதலைத் தொடங்கின. முன் எப்போதும் கண்டிராத சக்தியோடு தாக்கின. முன் எப்போதுமில்லாத துணிவோடு தாக்கின.

"பியூரரின் படை"

மார்ஷல் ஷுக்கவ் தலைமையில் முதல் பைலோருஷ்ய இராணுவத்தைச் சேர்ந்த துருப்புகள் நாஜி அணிகளைக் கிழித்துக் கொண்டு முன்னேறின.

அதே சமயத்தில் மார்ஷல் கோனெவ் தலைமையில் முதல் உக்ரேனிய இராணுவத் துருப்புகள் நாஜி தற்காப்புக்களை உடைத்துக் கொண்டு முன்னேறின.

மார்ஷல் ஷுக்கவின் துருப்புகள் பேரொளி விளக்குகளை உபயோகித்து நாஜி பிரதேசங்களை இரவில் தாக்கின என்றால் இங்கே மார்ஷல் கோனெவின் துருப்புகள் வேறு வழியை—அதற்கு எதிரான வழியைக்—கடைப்பிடித்தன.

இங்கே போர்முனை நீஸே நதிக்கு இணையாகச் சென்றது. ஹிட்லர் படையின் தற்காப்பு அணியை ஊடுருவ வேண்டுமென்றால் அந்த நதியைக் கடக்க வேண்டும். அந்த நதியைக் கடந்துவிடலாம். ஆனால் அது சுலபமான காரியமல்ல. நதியில் பாலங்களைக் கட்ட வேண்டும்; எங்கே கடப்பதென்று திட்டமிட வேண்டும். அது சாதாரண விஷயமல்ல. பட்டப் பகலில் நதியைக் கடக்க முடியாது. ஆகவே மார்ஷல் கோனெவுக்கு இருளின் துணை தேவையாக இருந்தது; பேரொளி விளக்குகளின் பிரகாசம் தேவைப்படவில்லை.

''நாம் இருளை ஏற்படுத்துவோம்'' என்று விமானிகள் மார்ஷலிடம் கூறினார்கள்.

சோவியத் விமானங்கள் வானத்திலே பறந்து நீஸே முழுவதும் புகையால் திரை ஏற்படுத்தின. நீஸே மீதும் இரு கரைகளிலும் புகை மண்டியது.

அமைதியான பருவநிலை; காற்றின் சுவடு கூட இல்லை. நீஸேயைச் சுற்றி மண்டிய புகை விலகாமல் சோவியத் துருப்புகளை மறைத்துக் கொண்டது.

அந்தப் புகை மேகங்கள் பேருதவியளித்தன. நதியில் முக்கியமான பகுதியில் நதியைக் கடந்து அக்கரையில் இறங்குவதற்காக 133 பாலங்கள் கட்டப்பட்டன.

சோவியத் துருப்புகள் நாஜிகளின் மூன்று தற்காப்பு அணிகளை நோக்கி முன்னேறின.

முதல் அணியினால் எதிர்த்து நிற்க முடியவில்லை. அது சீர்குலைந்து விழுந்தது. இரண்டாவது அணியாலும் நிற்க முடியவில்லை. அதுவும் விழுந்தது.

சோவியத் துருப்புகள் மூன்றாவது அணியைத் தாக்கின.

நாஜிகளின் தற்காப்பில் உடைப்புகளை ஏற்படுத்திய பிறகு மார்ஷல் கோனெவின் துருப்புகள் மார்ஷல் ஷுக்கவின் துருப்புகளோடு சேர்ந்து பெர்லினை நோக்கி பிரம்மாண்டமான அளவில் முன்னேறின. அந்தப் படைகளுக்கு முன்னால் டாங்கிகள் சென்றன.

''பெர்லின்—100 கிலோமீட்டர்கள்'' என்ற சாலை அறிவிப்பை சோவியத் டாங்கி ஓட்டிகள் காலையில் படித்தார்கள்.

''இன்னும் 75 கிலோமீட்டர் போக வேண்டும்'' என்று நண்பகலில் சொன்னார்கள்.

பிறகு 60, 55, 50 என்று சாலை அறிவிப்புகள் வந்து கொண்டிருந்தன.

டாங்கிப் படைகள் வேகமாக முன்னேறின. ஆனல் ஸ்பிரெம்பெர்க் நகரத்துக்குப் பக்கத்தில் நாஜித் துருப்புகள் சோவியத் துருப்புகளின் பின்புறத்தில் இருந்தன. கோனெவின் துருப்புகளின் வலது அணிக்கு அவர்களால் தீவிரமான ஆபத்து ஏற்படக் கூடுமென்று தோன்றியது. எதிரியின் துருப்புகளில் 'பியூரரின் படை' என்ற பெயரைக் கொண்ட டாங்கிப்படை டிவிஷனும் இருந்தது. இந்தப் படை ருஷ்யர்களுக்கு அதிகமான சிரமத்தைக் கொடுத்தது.

இந்தத் துருப்புகளைச் சூழ்ந்து கொண்டு அவர்களை ஒழித்துக் கட்டுவது மிக அவசியமாக இருந்தது. சோவியத் துருப்புகள் மீண்டும் சண்டையில் ஈடுபட்டன.

"'பியூரரின் படை' என்ன செய்கிறது?" என்று கேட்டபடியே சோவியத் துருப்புகள் போர் செய்தன.

நம் துருப்புகள் எதிரிகளைச் சூழ்ந்து கொண்டு அந்த எஃகு வளையத்தில் அவர்களை வெற்றிகரமாக நசுக்கின. பிறகு நம் பீரங்கிப்படை அந்தப் பிரதேசம் முழுவதையும் பொசுக்கிச் சாம்பலாக்கியது.

அந்த நாஜித் துருப்புகளை ஒழிக்கும் கடமையை ஜெனரல் லெபெடேன்கோ வெற்றிகரமாக நிறைவேற்றினர்.

"'பியூரரின் படை' இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று சண்டை முடிந்த பிறகு மார்ஷல் கோனெவ் விசாரித்தார்.

"தோழர் மார்ஷலே! அந்தப் படை ஒழிந்து விட்டது" என்று பதிலளித்தார் லெபெடேன்கோ.

"பியூரரின் படையை ஒழித்து விட்டோமென்ருல் இப்பொழுது பியூரரை ஒழிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று தானே அர்த்தம்?" என்று கேட்டார் கோனெவ்.

"ஓ!"

பெர்லினுக்கு அருகாமையிலுள்ள பல சிறு நகரங்களில் டுரின்ஸ்காஃப் என்பதும் ஒன்ருகும். அங்கே ருஷ்யர்கள் வருவதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஏனென்ருல் நம்முடைய படைகள் தலை தெறிக்கும் வேகத்தில் ஊடுருவிப் பாய்வார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

ஆனல் திடீரென்று தெளிவான, நீல வானத்தில் மின்னல் தோன்றுவதைப் போல நகரத்தில் சோவியத் டாங்கிகள் நுழைந்தன. அந்த நகரத்திலிருந்த நாஜிகளோடு சின்னச் சண்டை நடைபெற்றது. நாஜிகள் கொல்லப்பட்

டனர். டாங்கிகள் தெருக்களின் வழியே கடகடத்துக் கொண்டு சென்றன.

டாங்கி ஓட்டிகள் மேல் மூடிகளைத் திறந்து வெளியே பார்த்தனர். அந்த டாங்கி ஓட்டிகளில் ஒருவருடைய பெயர் லெப்டினென்ட் அந்திரேய் மெல்னிக். டாங்கிகள் கடைகளையும் வீடுகளையும் கடந்து போய்க் கொண்டிருந்த பொழுது அவர் கடைகளின் மீதிருந்த பெயர்ப் பலகைகளைப் படித்தார்: ''ரொட்டிக் கடை'', ''மருந்தகம்'', ''பால் விற்பனை நிலையம்''. இன்னொரு பலகையில் ''தொலை பேசி நிலையம்'' என்று எழுதியிருந்தது.

அதைப் படித்தபொழுது லெப்டினென்ட் மெல்னிக் மூளையில் ஒரு யோசனை உதித்தது.

''வண்டியை நிறுத்து'' என்று உத்தரவிட்டார்.

டாங்கியின் வேகம் குறைந்தது. வரிசையாகப் போய்க் கொண்டிருக்கும் மற்ற டாங்கிகளுக்கு வழி விட்டு அந்த டாங்கி பாதையிலிருந்து விலகி நின்றது.

லெப்டினென்ட் மெல்னிக் டாங்கியிலிருந்து கீழே குதித்தார். தொலை பேசி நிலையத்துக்குள் ஓடினார். அவர் ஏதோ வேடிக்கை செய்யப் போகிறார் என்று தெரிந்தது. ஏனென்றால் அவருடைய கண்கள் விஷமமாகச் சிமிட்டிக் கொண்டிருந்தன.

அந்தக் கட்டிடத்துக்குள் அவர் வேகமாக நுழைந்த பொழுது அங்கேயிருந்த இரண்டு பெண்கள் ஒரு சோவியத் அதிகாரியைப் பார்த்துவிட்ட ஆச்சரியத்தில் ஒரே சமயத்தில் ''ஓ!'' என்று அலறினார்கள்.

அவர்களிருவரும் உடனே மயக்கமடைந்து விழுந்தார்கள்.

''பயப்படாதீர்கள்! பயப்பட வேண்டாம்!'' என்று அவர்களிடம் கூறினார் லெப்டினென்ட்.

அவர் அந்தப் பெண்களின் அருகே சென்று அவர்களுக்கு சுய்நினைவை ஏற்படுத்த முயற்சி செய்தார். அவர்கள் கண்களைத் திறந்தார்கள். அந்த சோவியத் அதிகாரியை மிரண்டு போய்ப் பார்த்தார்கள்.

மெல்னிக் அவர்களைப் பார்த்துச் சிரித்தார். பிறகு அவர்களிடம் ஜெர்மன் மொழியில் பேச ஆரம்பித்தார். அவர் ஜெர்மன் மொழியில் நல்ல தேர்ச்சி உடையவர்.

''பெண்களே! பெர்லினுக்கு இணைப்புக் கொடுங்கள்'' என்றார்.

அவர் இதைச் சொன்னதும் அந்தப் பெண்கள் மறுபடியும் ''ஓ!'' என்று அலறினார்கள்.

அவர்கள் மறுபடியும் மயக்கமடைந்தார்கள்.

லெப்டினென்ட் மெல்னிக் மறுபடியும் அவர்களை சுய நினைவுக்குக் கொண்டுவர முயற்சி செய்தார். ஆனால் வெற்றி பெறவில்லை. அந்தப் பெண்கள் மிரண்டு போய் உணர்ச்சி இல்லாமல் கிடந்தனர்.

மெல்னிக் சிறிது நேரம் சிந்தித்தார். பிறகு தானே பெர்லினைக் கூப்பிடுவதென்று முடிவு செய்தார். முதல் முயற்சியிலேயே வெற்றி கிட்டியது. தொலை பேசியில் ஒரு குரல் ஒலித்தது.

''பெர்லினிலிருந்து...''

''தயவு செய்து ஒரு செய்தியை எழுதிக் கொள்கிறீர்களா?''

''தயார்'' என்று பெர்லின் தொலை பேசி ஊழியர் பதிலளித்தார்.

''பெர்லினுக்குப் பொறுப்பு வகிக்கின்ற ஜெனரல் வைட்லிங்குக்கு. கேட்கிறதா?''

''கேட்கிறது. எழுதிவிட்டேன்'' என்று ஊழியர் பதிலளித்தார்.

''பெர்லினில் எங்களை எதிர்பார்க்கவும். சீக்கிரமாக வந்து சேருவோம். தங்குமிடங்களுக்கு ஏற்பாடு செய்யவும். எழுதிவிட்டீர்களா?''

''ஆமாம்.''

''போர்வீரனின் வாழ்த்துக்கள்''. லெப்டினென்ட் தொடர்ந்து பேசினார். ''தந்தி அனுப்புபவர் சோவியத் டாங்கிப் படையில் ஒரு பிரிவின் அதிகாரியான லெப்டினென்ட் மெல்னிக்.''

அவர் இதைச் சொல்லி முடித்ததும் கம்பி வழியாக ''ஓ!'' என்று ஒரு சத்தம் கேட்டது.

அதைத் தொடர்ந்து மௌனம்.

''ஹல்லோ! ஹல்லோ!'' என்றார் மெல்னிக்.

தொலைபேசி மௌனம் சாதித்தது.

பெர்லின் தொலைபேசி நிலையத்தில் பணி புரிகின்ற பெண்ணும் மயக்கமடைந்து விட்டாள் என்று லெப்டினென்டுக்குப் புரிந்தது.

அவர் தன்னுடைய தொப்பியைப் பின்னே தள்ளி விட்டுச் சிரித்தார். சிரித்துக் கொண்டே கதவை நோக்கி ஓடி தம்முடைய போர்வீரர்களோடு சேர்ந்து கொண்டார்.

''உள்ளே என்ன செய்தீர்கள்?'' என்று அவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கேட்டார்கள்.

''ஒன்றுமில்லை. என்னுடைய நண்பர் ஒருவரோடு பேசினேன்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் மெல்னிக்.

போர்முனை எங்கே இருக்கிறது?

மிஹயீல் பன்கிராட்டொவ் சமீபத்தில்தான் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவர் பெற்றோர்கள் அந்த இளைஞனுக்கு விடை கொடுத்தார்கள்.

''போர்வீரன் என்றால் சாதாரணமல்ல; எங்கள் பெயரைக் கெடுத்து விடாதே!'' என்று அவன் தகப்பனார் அவனிடம் சொன்னார்.

''சண்டையின் போது அதைரியப்படக் கூடாது'' என்று அவன் தாயார் அறிவுரை கூறினாள்.

அவன் பெற்றோர்கள் அவ்வளவு சொன்னது அவசியமல்ல. அவன் தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றி உயர்ந்த எண்ணங்களைக் கொண்டிருந்தான். நாஜிகளோடு போர்புரிய வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தான்.

துருப்புகளைக் கொண்ட அந்த இரயில் வண்டி மேற்கு நோக்கிச் சென்றது. சரிவுகளில் மூச்சிறைக்க ஏறியும் சந்திப்புக்களைக் கடந்தும் சென்றது. அந்தப் போர்வீரன் தன்னுடைய படுக்கையில் காலை நீட்டிப் படுத்திருந்தான்; போரில் தான் செய்யப் போகின்ற வீரச் செயல்களைப் பற்றிய கனவுகளில் மூழ்கியிருந்தான். கற்பனையில் அவன் எதிரியைப் பின்தொடர்ந்து ஓடினான்; அவர்களோடு பயங்கரமாகக் கட்டிப் புரண்டான்; அவன் துப்பாக்கி சுட்டுக் கொண்டேயிருந்தது. அவன் மிகவும் துணிகரமான முறையில் எதிரிகளை வேவு பார்த்துவிட்டுத் திரும்பும்பொழுது ஒரு கைதியையும் சிறைப்பிடித்துக் கொண்டு வந்தான். அவன் ஒரு தாக்குதலுக்குத் தலைமை தாங்கினான்; அவன்தான் எதிரியின் கோட்டை நகரத்துக்குள் முதலாவதாக ஊடுருவி நுழைந்தான். அந்த நகரத்தின் மீது தன் துருப்புகளின் கொடியை உயர்த்திய முதல் நபரும் அவன்தான்.

அந்தப் போர்வீரன் வீரச் செயல்களைப் பற்றிக் கனவு கண்டான். அவன் தன்னுடைய மார்பைப் பார்த்தான். பதக்கங்கள் வரிசையாக அவன் மார்பை அலங்கரித்தன.

அவன் காலத்தை விரைவுபடுத்த விரும்பினான்.

''வேகமாகப் போ! வேகமாகப் போ!'' என்று இரயில் வண்டியிடம் பேசினான்.

இரயில் கிலோமீட்டர்களை வேகமாகக் கடந்து கொண்டிருந்தது. வயல்கள், காடுகள், கிராமங்கள் மற்றும் நகரங்கள் சன்னல் வழியே ஓடிக் கொண்டிருந்தன.

பெர்லினில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. என்னை அங்கே அனுப்பினால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்.

அவனுடைய மனமார்ந்த ஆசை அதுதான். அவனுக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டது. இரயில் வண்டி அந்தத் திசையில் சென்றது. பெர்லினை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் துருப்புகளோடு சேர்ந்து கொண்டது.

பன்கிராட்டொவுக்குத் தன்னுடைய அதிர்ஷ்டத்தைப் பற்றி அட்டகாசமான ஆனந்தம் ஏற்பட்டது. தன்னுடைய பெற்றோர்களுக்கு வேகமாகக் கடிதம் எழுதினன். அவன் எங்கே போய்க் கொண்டிருக்கிறன் என்பதைத் துல்லியமாக எழுதவில்லை; யுத்த காலத்தில் அப்படிப்பட்ட நேரடியான தகவல்களை எழுதக் கூடாது. அவன் குறிப்பாகத் தான் தெரிவிக்க வேண்டும். ஆனல் அந்த செய்தியைப் புரிந்து கொள்வது கடினமல்ல. அவன் யுத்தம் நடைபெறுகின்ற இடத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறன். ''பெர்லினிலிருந்து தகவலை எதிர்பாருங்கள்'' என்று கடிதத்தை முடித்தான்.

அவன் கடிதத்தைத் தபாலில் சேர்த்தான். பிறகு மறுபடியும் தன்னுடைய வீரச் செயல்களைப் பற்றிக் கனவு கண்டான். இதோ! பெர்லினுக்குப் போய்க் கொண்டிருக்கிறேம்.

கடைசியில் அந்த மகத்தான நாள் வந்தது. துருப்புகள் தாக்குதலுக்கு அணிவகுத்தன.

ஆனல்... சற்றுப் பொறுங்கள்! துருப்புகள் தாக்குதலுக்குப் புறப்பட்டன. ஆனல் பன்கிராட்டொவின் படைப் பிரிவு நிறுத்தி வைக்கப்பட்டது.

பன்கிராட்டொவும் அவனுடைய சகவீரர்களும் தங்கள் சார்ஜென்டை நோக்கி ஓடினர்கள்.

''குஸ்மா வஸீலியெவிச்! என்ன இப்படிச் செய்கிறீர்கள்?''

''அமைதி!'' என்ருர் சார்ஜென்ட். அவர் தன்னுடைய குரலைத் தாழ்த்தி உதடுகளில் விரலை வைத்துக் கொண்டார். ''நமக்கு விசேஷமான பொறுப்பு ஒதுக்கப்பட்டிருக்கிறது'' என்ருர்.

அவர் கூறியபடியே நடந்தது.ஒரு நாள் இடைவெளிக்குப் பிறகு அவர்கள் இராணுவ லாரிகளில் உட்கார்ந்திருந்தார்கள். இயந்திரங்கள் சீறின. லாரிகள் சாலையில் ஓடின.

போர்வீரர்கள் லாரிகளில் திருப்தியோடு உட்கார்ந்திருந்தனர். நியாயம்தானே. அவர்கள் ஒரு விசேஷமான பொறுப்புக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறர்கள்.

வண்டிகள் வெகு தூரம் சென்றன. பிறகு ஒரு பெரிய வயலுக்குள் போய் சீறிக்கொண்டு நின்றன. அது ஒரு

தரிசு நிலம். வெடிகுண்டுகள் அதில் பள்ளம் தோண்டி யிருந்தன. மேற்பரப்பில் பெரிய வெடிப்புக்கள் தென் பட்டன.

''வெளியே குதியுங்கள்!'' என்று உத்தரவு வந்தது.

போர்வீரர்கள் லாரிகளிலிருந்து கீழே குதித்தனர். தளகர்த்தரின் உத்தரவுப்படி வரிசையாக அணிவகுத்து நின்றனர்.

''தோழர்களே!'' தளகர்த்தரின் கை வயலை நோக்கி நீண்டது.

''இது என்ன? புரியவில்லையே!'' என்று போர்வீரர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ''இந்த வயலில் ஏதேனும் இரகசிய அமைப்பு இயங்கிக் கொண்டிருக்கிறதா? பூமியின் கீழே தொழிற்சாலை அல்லது தலைமை நிலையம் இருக்கிறதா?'' என்று யோசித்தார்கள்.

''வீரத் தோழர்களே! இந்த வயலில் நாம் உழுது விதைக்க வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிறப் பான பொறுப்பு இது'' என்றார் தளகர்த்தர்.

அவர்கள் திகைத்துப் போய் நின்றார்கள்.

''இது சிறப்பான பொறுப்பா? இதற்காகவா நம்மைக் கொண்டு வந்தார்கள்?''

என்ன இருந்தாலும் உத்தரவு உத்தரவுதானே! போர் வீரர்கள் அந்த வேலையில் ஈடுபட்டார்கள். எனினும் முணு முணுப்புகள் நிற்கவில்லை.

மற்ற போர்வீரர்களோடு சேர்ந்து பன்கிராட்டொவும் முணுமுணுத்தான்.

''இது தான் போர்முனையா? வீட்டுக்கு என்ன எழுது வேன்? பெற்றோர்களிடம் எதைச் சொல்வேன்?''

அந்த நேரத்தில் சார்ஜென்ட் பக்கத்திலேதான் நின்று கொண்டிருந்தார். எனவே இந்த முணுமுணுப்பு அவர் காதில் விழுந்தது. அவர் அந்த இளம் போர்வீரனை உற்றுப் பார்த்தார். பிறகு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடி யாமல் கோபமாகச் சொன்னார்:

''நீ ஒரு இளைஞன், அதனால் தான் சரியான முட்டாளாக இருக்கிறாய்'' என்றார். பிறகு பெர்லினைக் கைப்பற்றுவதற் காக நடைபெறுகின்ற போர் முடிவடையப் போகின்ற மேற்குத் திசையைச் சுட்டிக் காட்டி ''போர்முனை அங்கே இல்லை'' என்றார். பிறகு வயலைச் சுட்டிக் காட்டி ''போர்முனை இங்கே இருக்கிறது. யுத்தம் செய்வதற்கும் ஒருவரை ஒருவர் கொல்வதற்குமே மனிதர்கள் பிறக்கவில்லை. மனிதனுக்கு மிகப் புனிதமானவை வாழ்க்கையும் சமாதானமும்'' என்றார்.

பன்கிராட்டொவ் மௌனமாக இருந்தான்; மற்ற போர் வீரர்களும் அவனைப் பின்பற்றினார்கள். வசந்த காலத்தின் ஈரமான தரையை மண்வெட்டிகள் வெட்டின. அந்தப் பருவ காலத்தின் புது எழிலோடு முதிர்ச்சியடைந்த மண்ணின் மணம் வயலில் பாடுபட்டுக் கொண்டிருந்த போர்வீரர் களின் நாசிகளில் நுழைந்தது.

வீரனின் தியாகம்

ஏப்ரல் 25ந் தேதியன்று முதல் பைலோருஷ்ய இரா ணுவம் மற்றும் முதல் உக்ரேனிய இராணுவத் துருப்புகளும் பெர்லினைச் சூழ்ந்து கொண்டு முற்றுகையை முழுமையாக் கின. இப்பொழுது நகரத்தின் நடுப்பகுதியில் போர் நடை பெற்றது.

பெர்லின் ஒரு மாபெரும் நகரம். அந்த சமயத்தில் அங்கே மொத்தம் ஆறு லட்சம் வீடுகள் இருந்தன. ஒவ் வொரு தெருவிலும் சாவு தலை விரித்தாடியது.

நாஜிகள் தெருக்களில் குறுக்குச் சுவர்களும் பலவிதமான தடைகளையும் ஏற்படுத்தினார்கள். குறுக்குச் சுவர்களுக்குச் செல்லும் பாதைகளில் கண்ணிகள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சதுர மீட்டர் பிரதேசத்திலும் சுடக்கூடியவாறு இயந்திரத் துப்பாக்கிகள் வைக்கப்பட்டிருந்தன. பெர்லின் நகரத்தில் ஒவ்வொரு வீடும் ஒரு கோட்டையாக, ஒவ்வொரு தெருவும் ஒரு போர்க்களமாக உண்மையாகவே மாறி யிருந்தது.

பெர்லின் நகரத்தின் தெருக்களின் ஒன்றில் குறுக்குச் சுவர்கள் மிகவும் பலமாக அமைக்கப்பட்டிருந்தன. இரும்பு, எஃகு மற்றும் பாறைக் கற்களைக் கொண்டு நாஜிகள் அவற் றைக் கட்டியிருந்தார்கள். முதலில் காலாட்படை அந்தச் சுவர் மீது மோதியது; ஆனால் பலனில்லை. போர்வீரர்கள் வீணாக உயிரிழந்தார்கள். அடுத்தபடியாக சோவியத் டாங்கி கள் அங்கே வந்து தங்களுடைய கனமான பீரங்கிகளைக் கொண்டு சுட்டன; அங்கிருந்த குறுக்குச் சுவர்களில் எங் காவது ஒரு இடத்தில் பிளவை ஏற்படுத்த முயற்சி செய் தார்கள். ஆனால் டாங்கி பீரங்கிகளின் குண்டுகளால் கூட அந்தச் சுவர்களைத் தகர்க்க முடியவில்லை. இரும்பும் சிமெண் டும் சேர்த்துக் கட்டப்பட்ட கட்டிடத்தைப் போல அந்தச் சுவர் உறுதியாக நின்றது. அந்தச் சுவர் காலாட் படை களையும் டாங்கிகளையும் முன்னேறவிடாமல் தடுத்தது. எல்லாப் போக்குவரத்தும் அந்த இடத்தில் நின்றுவிட்டது.

காலாட் படைவீரர்களும் டாங்கி ஓட்டிகளும் அங்கே இரும்பையும் எஃகையும் பாறைக் கற்களையும் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

''வேட்டு வைக்கும் திறமைசாலிகள், பாதை அமைக்கும் படையினர் சிலராவது நம்மிடமிருந்தால்...'' என்று பேசிக் கொண்டார்கள்.

அவர்கள் விரும்பியது மாதிரியே பாதை அமைக்கும் படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் அந்தக் குறுக்குச் சுவரை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். அவர் தனக்குப் பின்னால் வெடிமருந்துகள், ஒரு பிக்ஃபோர்டு எறியூட்டும் பொறியமைப்பு மற்றும் எரிகின்ற சுருள் ஆகியவற்றை இழுத்துக் கொண்டு வந்தார். அவர் அங்கே நின்று சற்றுத் தாமதித்து விட்டுக் கீழே குனிந்தார். பிறகு ஒவ்வொரு வீடாகத் தாவினார். பிறகு மறுபடியும் தரையில் ஊர்ந்தார்.

போர்வீரர்களின் கண்கள் அவர் மீதே இருந்தன. அடுத்தாற் போல என்ன செய்யப் போகிறார் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர் அந்தக் கற்களில் ஒன்றின் மீது தாவி ஏறி அதன் மீது படுத்துக் கொண்டார். பிறகு வெடிமருந்தை அந்தக் கல்லின் அடியில் கவனமாக வைத்து பிக்ஃபோர்டு எறியூட்டும் பொறியமைப்பை இணைத்தார்.

அவருடைய ஒவ்வொரு செயலையும் போர்வீரர்கள் கவனமாகப் பார்த்தார்கள். இனிமேல் திரியில் நெருப்பைப் பற்ற வைப்பார். அந்த நெருப்புப் பொறி சுருள் வழியாக வெடிமருந்தை நோக்கி வேகமாகப் போகும். அவர் உடனே கல்லிலிருந்து கீழே குதிப்பார்; குறுக்குச் சுவருக்கு அப்பால் ஓடிப் போய் விடுவார். நெருப்புப் பொறி வெடிமருந்தில் பட்டவுடன் ஏற்படும் வேட்டில் சுவர் அசைந்தாடும். அதில் பிளவு ஏற்படும். போர்வீரர்கள் அந்தப் பிளவு வழியாக உள்ளே குதிப்பார்கள்.

அது ஆரம்பமாயிற்று. அந்தப் போர்வீரர் பையிலிருந்து தீக்குச்சியை எடுத்து உரசி நெருப்புப் பற்ற வைத்தார். அதைத் திரியில் காட்டினார். திடீரென்று அவர் தன்னுடைய கைகளை விரித்துக் கொண்டு அந்தக் கல் மீது படுத்துக் கொண்டார். சிறிதும் அசையவில்லை. ''அவரைக் கொன்று விட்டார்கள்'' என்று யாரோ சொன்னார்கள்.

இல்லை. அந்தப் போர்வீரர் நகரத் தொடங்கினார்.

''சகோதரர்களே! அவர் சாகவில்லை. காயமடைந்திருக்கிறார்'' என்றார் ஒருவர்.

அவர் உடலை லேசாக அசைத்தார்; தலையைத் தூக்கினார். கல்லைப் பார்த்தார். திரியைப் பார்த்தார். ஏதோ

கணக்குப் போடுவது போல இருந்தது. அவர் மறுபடியும் தீப்பெட்டியை எடுத்தார். மறுபடியும் அதைக் கையில் பிடித்துத் தீக்குச்சியை உரசினார். அவர் உடல் பலவீன மடைந்து விட்டபடியால் தீக்குச்சி பற்றிக் கொள்ளவில்லை. மறுபடியும் அந்தப் பாறுங்கல் மீதே படுத்து விட்டார்.

அந்தப் பாறை சிகப்பு நிறமாக மாறிக் கொண்டிருப் பதைப் போர்வீரர்கள் பார்த்தார்கள். அவர் உடலிலிருந்து இரத்தம் பெருகிக் கொண்டிருக்கிறது. அவர் பலம் குறைந்து வருகிறது. ஆயினும் அவர் தன்னுடைய முயற்சி யைக் கைவிடவில்லை. மூன்றாவது தடவையாகத் தீப்பெட்டி யைக் கையில் எடுத்தார். மூன்றாவது முறையாகக் குச்சி யை உரசினார். பலே! அது தீப்பற்றிவிட்டது. நெருப்பைத் திரியை நோக்கி நீட்டினார். கடைசியில் அதற்கு நெருப்பு வைத்துவிட்டார். அந்தச் சுருளிலிருந்து புகை, பாம்பைப் போல வெடிமருந்தை நோக்கி ஓடியது.

''குதி! கீழே குதி!'' என்று போர்வீரர்கள் அவரை நோக்கிக் கத்தினார்கள்.

அவர் அசைவில்லாமல் அக்கல்லின் மேலே கிடந்தார்.

''குதி! குதி!''

போர்வீரர்களுக்கு இப்பொழுது தான் உண்மை தெரிந் தது. கீழே குதிப்பதற்கு அந்தப் போர்வீரனுடைய உடலில் சக்தி இல்லை.

அந்த வீரர் கல்லின் மீது அசைவில்லாமல் படுத்திருந் தார்.

சக்தி வாய்ந்த வெடிமருந்து கண்ணைக் கூச வைக்கும் பிரகாசத்தோடு வெடித்தது. பாறுங்கற்கள் உடைந்து பெரும் கற்கள் வானத்திலே பறந்தன. சுவரில் ஒரு துவாரம் வாயைப் பிளந்து கொண்டிருப்பது தெரிந்தது. போர்வீரர்கள் அதன் வழியாக உள்ளே குதித்தார்கள்.

வீரர்களின் புகழ் என்றும் அழியாது! துணிவுடையோர் புகழ் என்றும் மறையாது!

குழந்தைகள் பசியும் குண்டுவீச்சும்

யுத்தத்தின் புகையும் தூசியும் அடங்கத் தொடங்கிய நேரத்தில் பெர்லின் தெருக்களில் ஒன்றில் தற்காலிகமாக சமையலறை அமைக்கப்பட்டிருந்தது. போர்வீரர்கள் தங் களுடைய உணவுப் பங்கை வாங்குவதற்கு ஓடினார்கள். ஒரு சண்டைக்குப் பிறகு காஷா அவர்களுக்குத் தேவையாக

இருந்தது. அவர்கள் கடும்பசியோடு தங்கள் உணவைச் சாப்பிட்டார்கள்.

போர்முனைச் சமையலறையின் தலைமைச் சமையற்காரரான சார்ஜென்ட் யுர்ச்சென்கோ பானை சட்டிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்.

போர்வீரர்கள் காஷாவைப் பாராட்டுவதைக் கேட்டு அவர் மகிழ்ச்சி அடைந்தார்.

''யாருக்கு இரண்டாம் தடவை வேண்டும்? யாருக்கு வேண்டும்?''

''வேண்டாமென்று நான் சொல்ல மாட்டேன்'' என்றார் சார்ஜென்ட் ஸ்யூஸின்.

யுர்ச்சென்கோ ஸ்யூஸின் வைத்திருந்த தட்டு நிறைய மறுபடியும் காஷாவை ஊற்றினார். பிறகு சமையலறைக்குள் போய்விட்டார். அங்கே வேலையில் ஈடுபட்டிருக்கும் பொழுது யாரோ பின்னாலிருந்து தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது போல அவருக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. அவர் சுழன்று திரும்பினார். ஆம். ஒரு சிறு பையன் பக்கத்து வீட்டு வாசலில் ஏக்கம் நிறைந்த கண்களோடு ஸ்யூஸினையும் சமையலறையையும் பார்த்துக் கொண்டு நிற்பதை கவனித்தார்.

சார்ஜென்ட் யுர்ச்சென்கோ அந்தப் பையனுக்கு சமிக்கை காட்டினார்:

''ஏய்! இங்கே வா!'' என்றார்.

அந்தச் சிறுவன் சமையலறைக்கு வந்தான்.

''ஏய்! உனக்கு வெட்கம் அதிகமா, என்ன?'' என்று சார்ஜென்ட் ஸ்யூஸின் கேட்டார்.

யுர்ச்சென்கோ ஒரு தட்டு நிறையக் காஷா ஊற்றினார். அந்தத் தட்டைப் பையனிடம் நீட்டினார்.

''மிகவும் நன்றி'' என்று அவன் சொன்னான். தட்டை வாங்கிக் கொண்டு வாசல் வழியாகப் போய் விட்டான்.

''தட்டையும் சாப்பிட்டுவிடாதே! அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்'' என்று யாரோ சத்தம் போட்டுச் சொன்னார்கள்.

''ம்ம்... ரொம்ப நாளாகப் பட்டினியாக இருந்திருப்பான் போலத் தெரிகிறது'' என்றார் ஸ்யூஸின்.

பத்து நிமிடங்கள் கழிந்த பிறகு அந்தச் சிறுவன் திரும்பினான். அவர்கள் கொடுத்த தட்டோடு இன்னொரு தட்டையும் கொண்டு வந்திருந்தான். அதைக் கொடுத்து விட்டுத் தன்னுடைய தட்டை அர்த்தத்தோடு பார்த்தான்.

''என்ன? இன்னும் வேண்டுமா?''

''ஆமாம்! என் சகோதரிக்காக! தயவு செய்து உதவுங்கள்'' என்றான் சிறுவன்.

''அவனுடைய சகோதரிக்கும் காஷா வேண்டுமாம்'' என்று பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒருவர் விளக்கிச் சொன்னார்.

''அப்படியானால் அவளுக்குக் கொஞ்சம் கொண்டு போ'' என்றார் யுர்ச்சென்கோ.

''மிக்க நன்றி'' என்றான் அந்தச் சிறுவன். மறுபடியும் அந்த வாசல் வழியாக மறைந்தான்.

மறுபடியும் பத்து நிமிடங்களுக்குப் பிறகு கையில் ஒரு தட்டோடு மூன்றாவது தடவையாக அவன் அங்கே வந்தான். தட்டை முன்னால் நீட்டிக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தான்.

''என் தாயாருக்காக. தயவு செய்து உதவுங்கள்'' என்று கேட்டான்.

போர்வீரர்கள் இதைக் கேட்டதும் சிரித்தார்கள்.

''ஏய்! நீ தந்திரசாலிதான்'' என்றார் ஒருவர். அந்தச் சிறுவன் தன்னுடைய தாயாருக்குத் தட்டில் காஷா வாங்கிக் கொண்டு போனான்.

அங்கேயிருந்த சிறுவர்களில் அவன்தான் முதலில் வந்தவன். வெகு சீக்கிரத்தில் சிறுவர்கள் கோஷ்டியே அங்கே வந்துவிட்டது. அவர்கள் சற்றுத் தள்ளி நின்று தட்டுகளையும், சமையலறையையும் காஷாவையும் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

பசியோடு நிற்கின்ற குழந்தைகளைப் பார்த்தவுடன் போர் வீரர்களால் சாப்பிட முடியவில்லை. காஷா அவ்வளவு ருசியாகத் தோன்றவில்லை. அது வயிற்றுக்குள் போக மறுத்தது.

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஸ்யூஸின் யுர்ச்சென்கோவைப் பார்த்தார். யுர்ச்சென்கோ ஸ்யுஸினைப் பார்த்தார்.

''இங்கே வாருங்கள்'' என்று யுர்ச்சென்கோ குழந்தைகளைக் கூப்பிட்டார்.

சிறுவர்கள் சமையலறையை நோக்கி ஓடினார்கள்.

''ஒவ்வொருவராக, ஒவ்வொருவராக'' என்று சொல்லிக் கொண்டு ஸ்யூஸின் அந்தக் குழந்தைகளை வரிசையாக நிறுத்த முயற்சித்தார். ஒவ்வொருவருக்கும் காஷா ஊற்றப் பட்டது.

''மிக நன்றி!''

''மிக நன்றி!''

''மிக நன்றி!''

''மிக நன்றி!'';

அவர்கள் உணவை விழுங்கிய வேகத்தைப் பார்க்கும் பொழுது அவர்கள் ரொம்பக் காலமாகவே பட்டினியாக இருந்திருக்க வேண்டும் என்பது தெரிந்தது.

திடீரென்று மேலே ஒரு விமானம் வட்டமிட்டது. போர்வீரர்கள் மேலே பார்த்தார்கள்... அது நமது விமானமல்ல; ஜெர்மன் விமானம்.

''வீடுகளுக்கு ஓடுங்கள்! ஓடிப்போய் ஒளியுங்கள்!'' என்று ஸ்யூஸின் அந்தக் குழந்தைகளைச் சமையலறையை விட்டு விரட்டினார்.

அவர்கள் போக மறுத்தார்கள். அங்கே காஷா இருந்தது. அதைப் போட்டுவிட்டு ஓடுவதற்கு அவர்களுக்கு மனமில்லை.

''ஓடுங்கள்!'' என்று ஸ்யூஸின் அதட்டினார்.

விமானம் கீழ்நோக்கி இறங்கியது. ஒரு குண்டு பூமியை நோக்கி விழுந்தது.

குழந்தைகள் நாலாதிசைகளிலும் சிதறி ஓடினார்கள். ஸ்யூஸின் மட்டுமே அங்கு நின்றார். குண்டு வெடித்த பிறகு அங்கே சமையலறையில்லை; ஸ்யூஸினும் இல்லை. காஷா மட்டும் உயிருள்ள பொருளைப் போல ஓசை அடங்கிய தெருவில் கற்களின் மீது சிதறி ஓடியது.

வெற்றிக் கொடி

சோவியத் துருப்புகள் அரண்களை உடைத்துக்கொண்டு பெர்லினின் நடுப்பகுதிக்குள் நுழைந்து ரைஹ்ஸ்தாக் கட்டிடத்தின் மீது தாக்குதலைத் தொடங்கின.

''ஸார்ஜென்ட் எகோரொவ்!''

''உள்ளேன்.''

''போர்வீரர் கன்தாரியா!''

''உள்ளேன்.''

ஒரு கௌரவமான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைப்பதற்காக தளகர்த்தர் அவர்களைக் கூப்பிட்டார். போர்க் கொடி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதை ரைஹ்ஸ்தாக் கட்டிடத்தின் மீது பறக்கவிட வேண்டும் என்று அவர்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.

போர்வீரர்கள் வணக்கம் செலுத்தி விட்டுப் புறப்பட்டனர். அவர்கள் போவதைப் பொறாமையோடு பார்த்தவர்கள் ஏராளம். அவர்களுடைய இடத்தைப் பெறுவதற்கு யார்தான் விரும்ப மாட்டார்கள்?

அந்த சமயத்தில் ரைஹ்ஸ்தாக் கட்டிடத்தைப் பிடிப்பதற்கு முழு மூச்சாகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

எகோரொவும் கன்தாரியாவும் குனிந்தபடியே அந்த சதுக்கத்துக்குக் குறுக்கே ஓடினார்கள். அவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் சோவியத் போர்வீரர்கள் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று நாஜிகள் குண்டு மாரி பொழிந்தனர். கொடியைத் தூக்கிச் சென்ற போர்வீரர்கள் இருவரும் உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பதுங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிறகு நம் துருப்புகள் மறுபடியும் தாக்குதலைத் தொடங்கின. எகோரொவும் கன்தாரியாவும் மறுபடியும் முன்னே சென்றார்கள்.

இப்பொழுது அவர்கள் அந்தக் கட்டிடத்தின் வாசற்படியை அடைந்து விட்டார்கள். அந்தக் கட்டிட வாசலைத் தாங்கி நிற்கும் தூண்களுக்குப் பக்கத்தில் நின்றார்கள். கட்டிடத்தின் முகப்பில் கொடியைக் கட்டுவதற்கு எகோரொவ் முயற்சி செய்தபொழுது கன்தாரியா அவரைத் தூக்கிப் பிடித்துக் கொண்டார்.

''ஏய்! கட்டிடத்தின் உச்சியில் கொடியைப் பறக்கவிட வேண்டும்!'' என்று அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த போர்வீரர்கள் பெருமூச்சோடு சொன்னார்கள். அவர்களுடைய தோழர்களின் விருப்பத்துக்குப் பணிவதைப் போல எகோரொவும் கன்தாரியாவும் கொடியை எடுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்கள். அவர்கள் ரைஹ்ஸ்தாக் கட்டிடத்தின் கதவுகளுக்கிடையே பாய்ந்து உள்ளே சென்று மறைந்தார்கள்.

அப்பொழுது இரண்டாவது மாடியில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு, மத்திய வாசலுக்குச் சற்று மேலே அமைந்திருந்த சன்னல்கள் ஒன்றில் ஒரு செங்கொடி தென்பட்டது. சிறிது நேரம் பறந்த பிறகு அந்தக் கொடி மறுபடியும் மறைந்துவிட்டது.

போர்வீரர்கள் மத்தியில் ஒரே பரபரப்பு. அவர்களுடைய தோழர்கள் என்ன ஆனார்கள்? அவர்களைக் கொன்று விட்டார்களா?

ஒன்று, இரண்டு... பத்து நிமிடங்கள் கழிந்தன. போர்வீரர்கள் மத்தியில் அதிகமான கவலை ஏற்பட்டது. இன்னொரு முப்பது நிமிடங்கள் கழிந்தன. எகோரொவையோ கன்தாரியாவையோ கொடியையோ காணவில்லை.

அங்கேயிருந்த நூற்றுக் கணக்கான போர்வீரர்களிடமிருந்து திடீரென்று ஒரு ஆனந்தக் கூச்சல் வெளிப்பட்டது. கொடி பத்திரமாக இருக்கிறது. அவர்களுடைய நண்பர்கள் உயிரோடிருக்கிறார்கள். அவர்கள் கட்டிடத்தின் கூரை மீது குனிந்து கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள்; அதன்

உச்சியை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அதோ! அவர்கள் நன்றாக நிமிர்ந்து நிற்கிறார்கள். தங்கள் கைகளில் கொடியை வைத்துக் கொண்டு தங்கள் தோழர்களை நோக்கிக் கையை அசைத்து வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள். பிறகு அந்த ரைஹ்ஸ்தாக் கட்டிடத்தின் கூரையில் நீட்டிக் கொண்டிருந்த கண்ணாடி உருண்டையை நோக்கி ஓடுகிறார்கள். மிக கவனமாக இன்னும் உயரத்தில் ஏறுகிறார்கள்.

அந்தச் சதுக்கத்திலும் அந்தக் கட்டிடத்திற்கு உள்ளேயும் இன்னும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது... ஆனால் அந்த ரைஹ்ஸ்தாக் கட்டிடத்தின் கூரையில், அதன் உச்சி முனையில் வெற்றிக் கொடி பறந்தது. தோல்வியடைந்த பெர்லினின் வசந்த கால வானத்தில் நம்பிக்கையோடு அசைந்தாடியது. இரண்டு சோவியத் போர்வீரர்கள்—மிஹயீல் எகோரொவ் என்ற ருஷ்யத் தொழிலாளியும் மெலிதோன் கன்தாரியா என்ற ஜியார்ஜிய இளைஞனும்—அவர்களோடு மற்ற தேசிய இனங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான போர்வீரர்கள் பனிப் புயல்களையும் பாதகமான பருவநிலைமைகளையும் மீறி இந்த வெற்றிக் கொடியை இங்கே நாஜிகளின் குகைக்குக் கொண்டு வந்தார்கள். பயந்து போன எதிரியின் தலைக்கு மேல் சோவியத் பலத்தைத் தகர்க்க முடியாது என்று காட்டுகின்ற குறியீட்டைப் போல அந்த வெற்றிக் கொடியைப் பறக்க விட்டார்கள்.

முழுமையான தோல்வியடைந்து விட்டோம் என்று நாஜி ஜெனரல்கள் ஒத்துக் கொள்வதற்கு இன்னும் சில நாட்களாயின. ஹிட்லர் ஜெர்மனி நொறுக்கப்பட்டுவிட்டது. நாஜிசத்துக்கு எதிராக சோவியத் மக்கள் நடத்திய மாபெரும் விடுதலைப் போர் நம்முடைய முழு வெற்றியில் முடிவடைந்தது.

1945 மே மாதம். வசந்த காலத்தின் குதூகலம் காற்றிலே நிறைந்திருந்தது. பூமியில் எங்கும் ஆனந்தம். மனிதர்கள் எல்லோரும் ஆனந்தக் கூத்தாடினர். மாஸ்கோ வானத்தில் வேட்டுகள் முழங்கின. வாண வேடிக்கைகள் வெற்றியைக் கொண்டாடின. பூமியில் பொங்கிய ஆனந்தத்தால் வானம் பிரகாசமாக ஒளிர்ந்தது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இரத்த வெறி கொண்ட நாஜிகள் குரூரமான யுத்தம் நடத்திய நம்முடைய நாட்டின் எல்லைப் பகுதிகளுக்குச் செல்லும் சாலை இன்னும் சேதமடைந்தே இருக்கிறது. ஆனால் இந்த எல்லைகளுக்கு அப்பால் மற்ற ஐரோப்பிய நாடுகள் நாஜி அடக்கு முறை என்னும் நுகத்தடியில் துன்பமடைந்து கொண்டிருந்தன. இந்த மக்கள் நம்முடைய உதவியை எதிர்பார்த்தார்கள். உலகத்தின் முதல் தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் அரசின் படைகள் அவர்களுக்கு உதவி செய்ய மறுக்க முடியுமா? நாஜிகளிடமிருந்து ஐரோப்பாவின் விடுதலை இப்படி ஆரம்பமாயிற்று...

1

2

3

1. போலந்து. *2*. ஹங்கேரி. *3*. ரொமானியா.

4

4. பல்கேரியா.
5. செக்கோஸ்லோவாகியா.

5

6

6. ஆஸ்திரியா. 7. பெர்லினின் ரைஹ்ஸ்தாக் கட்டிடத்தின் மீது சோவியத் கொடி பறக்கிறது.

8

9

8. நாஜிகளின் தலைநகரத்தின் மீது சோவியத் கொடியேற்றிய போர்வீரர்கள். 9. ஜெர்மன் போர்வீரன் தன்னுடைய எதிர் காலத்தைப் பற்றியும் எதிர் கால ஜெர்மனியைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

10

11

10. ஜெர்மனி நிபந்தனையில்லாமல் சரணடைய ஒத்துக்கொள்கிறது. **11.** சோவியத் துருப்புகள் பெர்லின் நகரவாசிகளுக்குச் சுடச்சுட உணவு வழங்குகிறார்கள். **12.** வெற்றி அணிவகுப்பு. சோவியத் தலை நகரத்தில், லெனின் சமாதிக்கு முன்பு நாஜிப் படைகளின் கொடிகள் வீசியெறியப்படுகின்றன.

Adolf Hitler

1941
ОТЕЧЕСТВЕННАЯ ВОЙНА
1945
СЛАВА
ВОИНУ-ПОБЕДИТЕЛЮ!

13. ''வெற்றி பெற்ற போர்வீரன் புகழ் ஓங்குக!'' (வி. கிலிமாஷின் வரைந்த சுவரொட்டி).
14. வீர வணக்கம்! ஜெர்மனியின் நாஜிசத்தை ஒழிப்பதில் வெற்றியடைந்த மக்களுக்கு, மனிதகுலத்தின் வரலாற்றிலேயே அதிகக் குரூரமான போரில் இரண்டு கோடி மக்களை இழந்த சோவியத் மக்களுக்கு வீர வணக்கம்! சோவியத் மக்களின் புகழ் ஓங்கட்டும்! போரில் உயர் நீத்தவர்களின் புகழ் வளரட்டும்!

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை
திருநெல்வேலி ஜங்ஷன்
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்

ஸெர்கேய் அலெக்ஸேயெவின் ருஷ்ய வரலாற்றுக் கதைகள் ருஷ்ய மக்களை முக்கியமான கதாபாத்திரமாகக் கொண்டிருக்கின்றன. பல நூற்றுண்டுக் காலமாக விடுதலையை நோக்கி அவர்கள் செய்திருக்கும் நீண்ட பயணத்தை வர்ணிக்கிறது. உள்நாட்டில் தங்களை ஒடுக்கிக்கொண்டிருந்தவர்களுக்கு எதிரான போராட்டங்கள், அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உக்கிரமான யுத்தங்கள் ஆகியவற்றின் மூலம் அந்தப் பாதை இன்றைய தினத்தில் நாம் காணும் வளர்ச்சியை எட்டியிருக்கிறது. ஒவ்வொரு வரலாற்றுக் கட்டமும் அதற்குரிய வீரர்களைப் படைத்தது.

இளைஞர்களுக்காக எழுதப்படும் புத்தகங்களின் ஹான்ஸ் கிறிஸ்தியன்

ஆன்டெர்ஸென் பரிசுக்கான நீதிபதிகள் ஸெர்கேய் அலெக்ஸேயெவின் ருஷ்ய வரலாற்றுக் கதைகள் என்ற தலைப்புடைய இந்நூலுக்கு 1978ம் வருடத்தில் நன்மதிப்புச் சான்றிதழ் வழங்கினுர்கள்; ''சர்வதேச முக்கியத்துவம் கொண்ட நூலுக்கு மிகச் சிறந்த உதாரணம்'' என்று இந்நூலைப் பாராட்டினுர்கள்.